வெளியீடு : 30-12-2020 Issued: 30-12-2020

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

திங்கட்கிழமை, மார்ச் 16, 2020—தொகுதி 74—எண் 2

Monday the 16th March 2020—Volume 74—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

16–3–2020

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்—விடைகள்—	483-533
உடுக்குறியிட்ட வினாக்கள்	483-533
2. தகவல் கோரல்—	534-548, 553,757
(அ) குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 14-3-2020 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து	534-540, 553
திரு. மு.க. ஸ்டாலின்	534-535
மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	535-540
*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்	553
(ஆ) தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து	540-546,757
*திரு. துரைமுருகன்	540-542,757
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	542-546
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	757
(இ) திருவாரூர், தொற்று நோய்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பு	547-548
திரு. பூண்டி கி. கலைவாணன்	547-548
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	548

பக்கங்கள்

3. சிறப்புக் கவன ஈர்ப்பு— 549-553

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் நகர், தண்டி யாத்திரை நினைவுப் பேரணியில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து 549-553

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 549-551

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 551-553

4. அறிவிப்புகள்— 554

(அ) கொரோனா வைரஸ், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சட்டமன்றத்தில் பார்வையாளர்களுக்கு தற்காலிகமாக அனுமதி மறுப்பு 554

(ஆ) 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் நிலையினை எய்திட நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள நான்கு அறிவிக்கைகளின் மென்பொருள் நகல் மின்னஞ்சல்மூலம் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறுதல் 554

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— 555-557

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020 555-556

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 555

திரு. கு. பிச்சாண்டி 556

(ஆ) தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 556-557

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 556-557

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34– நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
(இ) கோரிக்கை எண் 53 –சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை — 557-664, 672-756, 758-822

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 558,585,610, 625,630-635, 637-643, 647-649, 651-653, 672-675, 699-700, 709-711, 735-736, 738,745-756, 758-816, 819-820

*திரு. அர. சக்கரபாணி — 577,602,626-630, 635-637, 639-642, 645-646, 649-652, 655-660, 817-818

*திரு. துரைமுருகன் — 643-644,740, 748,785-786, 816-817

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — 644-645, 660-664, 733-735,737, 739-741,786

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 654-655

திரு. மு.க. ஸ்டாலின் 662-663

திரு. கே.எஸ். தென்னரசு 675-684

திரு. சி. சந்திரசேகரன் 685-694

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 576,602,613, 694-699, 703-708, 818-819

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 700-702

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன் 703

டாக்டர் V.P.B. பரமசிவம் 711-731

திரு. நா. கார்த்திக் 561,588,613, 731-735,737-739, 741-745, 749-750, 752-756,819

7. உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்களை 16–3–2020 அன்று அவையிலிருந்து வெளியேற்ற பேரவைத் தலைவர் ஆணை—நிறுத்தி வைப்பு 664-671

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 664-665,670

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 665-668

*திரு. துரைமுருகன் 669

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 823-825

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 3, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 16, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

செய்வதற்கு முடியாத கடினமான செயல்களையும், செய்யும் முறை அறிந்து திறம்படச் செய்து முடிக்கின்ற திறமை உள்ளவரே பெருமை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

96—

உடற்பயிற்சிக் கூடம்

***16404—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், முடசல் ஓடை கிராமத்தில் அம்மா உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், முடசல் ஓடை கிராமத்தில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக ஓர் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" மூலம் அங்கே மூன்று பணிகள் முடிக்கப்பெற்று, தற்போது விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்மை கொண்ட தமிழகத்தின் தலைமகளாய், 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்றுரைத்த மாசற்ற மக்கள் தலைவியாய், மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்தை அம்மாவின் வழியில் வழி நடத்தும் கொங்குத் தமிழே, டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய முதல்வரே, எதிரிகளை கலங்கடித்து வீரநடை போட்டு ஆயிரம் தடைகளைக் கடந்து வந்த வெற்றித் திருமகனே, சாமானிய மக்களின் சகாப்தமே, டெல்டா நாயகர், காவேரி காப்பாளர், குடிமராமத்து நாயகர் (மேசையைத் தட்டும் ஒலி) 21 ஆம் நூற்றாண்டின் கரிகால் சோழனாய் விளங்கும் புன்னகைப் போராளி, எங்களுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வருக்கு உற்ற

2020 மார்ச் 16]

துணையாய் விளங்கும் தென்பாண்டிச் சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகர், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர், வணக்கத்திற்குரிய மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அறம்சார்ந்த வழியில் சபையை நடத்தும் நடுநிலை நாயகர், பாதை மாறாமல் பயணிக்கும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களையும் பணிவன்போடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மீனவ சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி முடசல் ஓடை கிராமமாகும். அந்தக் கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். முடசல் ஓடை கிராமத்தினைச் சுற்றியுள்ள பத்துக்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களில் அதிகமான அளவில் மக்கள் வசிக்கின்றனர். இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள பள்ளிகளில் 1,500–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடசல் ஓடை கிராமத்தில் அம்மா உடற்பயிற்சிக் கூடம் அமைத்திட கருணை உள்ளத்தோடு மறுபரிசீலனை செய்து, அங்கே ஓர் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர முன்வர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள், இதுவரையிலும் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு, “அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்” என்ற திட்டத்தினை, ஒரு வரலாறு படைக்கின்ற திட்டமாக தமிழகத்திலே நிறைவேற்றிக் காட்டினார்கள்.(மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில்தான், 12,524 ஊராட்சிகளிலும், 528 பேரூராட்சிகளிலும் இந்தப் பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு மாத காலத்தில் நிறைவாக இந்தப் பணிகள் முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள், “அங்கு இருக்கின்ற இளைஞர்களும், மீனவ மக்களும் உடற்பயிற்சி செய்வதற்கு ஏதுவாக, உடற்பயிற்சிக் கூடங்கள் அங்கே அமைக்கப்படுமா?” என்று மற்றொரு கேள்வியையும் கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு கவனத்திலே கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் தொகுதி, கிள்ளை பேரூராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. அந்தப் பள்ளியில் சுமார் 827 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். மாணவ, மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பறைக் கட்டடங்கள் இல்லை. எனவே, மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும், மாணவ, மாணவிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் ஓர் உடற்பயிற்சிக் கூடமும் அந்தப் பள்ளியில் அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பள்ளியில் நபார்டு திட்டத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கும், அறிவியல் கூடம் கட்டுவதற்கும், இந்த ஆண்டு அரசு பரிந்துரை செய்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த ஆண்டிலே நபார்டு திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 மார்ச் 16]

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு தமிழகத்தில் நல்லாட்சி தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள், ஏற்கெனவே இந்த அவையில் பொள்ளாச்சி நகரத்திற்கு உடனடியாக உள் விளையாட்டு அரங்கம், திறந்தவெளி விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் இவை மூன்றும் அமைத்துத் தரப்படும் என்று சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டே வாக்குறுதி கொடுத்தார். சென்ற ஆண்டும் நான் இதுகுறித்து நினைவூட்டினேன்.

பொள்ளாச்சி, ஏராளமான Volleyball விளையாட்டு வீரர்களை அகில இந்திய அளவில் பெற்றிருக்கிறது. தேசிய அளவில் சிறந்த நீச்சல் வீரர்கள், வீராங்கனைகளைக் கொண்ட பகுதி பொள்ளாச்சி நகரம். பொதுவாக, விளையாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி முன்னேறுகின்ற ஓர் இடமாக பொள்ளாச்சி சுற்று வட்டாரம் இருக்கின்றது. எனவே, இந்த ஆண்டாவது நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் சிறப்பு ஆணையைப் பெற்று, உள் விளையாட்டு அரங்கம், திறந்தவெளி விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் ஆகியவற்றை பொள்ளாச்சி நகர மக்களுடைய பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல், சுற்று வட்டார மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்கும் சுமார் 25 கோடி ரூபாய் அளவிலே நிதியினைப் பெற்று ஏற்படுத்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், தங்களது கோரிக்கை குறித்து தெரிவித்தார்கள். தற்போது நிதிநிலைக்கேற்ப மாவட்ட அளவில் அந்தப் பணிகள் முடிவு பெற்றிருக்கின்றன. எந்தெந்த மாவட்டங்களில் விளையாட்டு

அரங்கங்கள் மாவட்ட அளவில் தேவையோ, அதற்கான பணிகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன. அதோடு, விளையாட்டு அரங்கங்கள் மட்டுமல்லாமல், மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றபோது, அவர்கள் அங்கேயே தங்கி பயிற்சிபெற விடுதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

மாவட்ட அளவில் அந்தப் பணிகளைச் செய்த பிறகுதான், அவர் குறிப்பிடுகிற பகுதியில் அதைச் செய்வது குறித்து சென்ற ஆண்டு குறிப்பிட்டோம். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரிய நிறுவனத்தை நாம் அணுகி, அவர்களோடு கூட்டு சேர்ந்து, அங்கே என்னென்ன விளையாட்டு அரங்கங்களை அமைக்க முடியுமோ, அதை ஆய்வு செய்து, அரசும் அதற்கான நிதியினை ஒதுக்குவதற்கு இந்த ஆண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

97—

மின்மாற்றி

***23414—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், அரிச்சந்திராபுரம் தீன் நகரில் தனியாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிச்சந்திராபுரம் தீன் நகருக்கு தனியாக மின்மாற்றி அமைத்திட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து ஏற்கெனவே அமைக்கப் பெற்றுள்ள 100 கே.வி.ஏ. மற்றும் 63 கே.வி.ஏ. திறனுடைய இரண்டு மின்மாற்றிகளிலிருந்து

2020 மார்ச் 16]

மின் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில், 17–8–2019 அன்று இந்த இரு பகுதிகளுக்கும் சேர்த்து, மேலும் ஒரு புதிய 63 கே.வி.ஏ. மின்மாற்றி தீன் நகரில் நிறுவப்பெற்று, தற்போது சீரான மின் விநியோகம்செய்யப்பட்டுவருகிறதுஎன்பதைமாண்புமிகுஉறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாலங்காடு சர்க்கரை ஆலைப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து 2 ஆண்டுகள் ஆயிற்று. இதைப்பற்றி ஏற்கெனவே நான் இந்த அவையில் கேள்வி எழுப்பியிருக்கிறேன். 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் கேட்டு, சர்க்கரை ஆலை ஆணையர் 7–2–2019 அன்று S.E., செங்கல்பட்டுமூலம் கடிதம் அனுப்பியிருக்கிறார். ஆனால், இதுவரையில் எந்த பதிலும் இல்லை. இதை விரைந்து செயல்படுத்தக்கூடிய நிலையில் அரசு முன்வர வேண்டும்.

அதேபோன்று, திருவாலங்காடு ஒன்றியம், சின்னமாப்பேட்டை மற்றும் பூஞ்சோலை நகர், முத்துகொண்டாபுரம் ஊராட்சியைச் சார்ந்த எட்டியந்தாங்கல் மற்றும் பொன்னாங்குளம் கிராமங்களில் இதேபோல, மின்மாற்றிகள் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் ஏற்கெனவே இங்கே முன்வைத்திருக்கிறேன். மேலும், கடம்பத்தூர் ஒன்றியம், ஏகாட்டூர் கிராமம், அன்னை இந்திரா நகர் பகுதியிலும், திருபந்தியூர் ஊராட்சி, கன்னிமாநகர் பகுதியிலும் 100 கே.வி.ஏ. மின்மாற்றிகள் அமைக்கப்பட வேண்டும். அதேபோன்று, பூண்டி ஒன்றியம், கனகவல்லிபுரத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அரசு ஏற்கெனவே அறிவித்தது. அதற்கான Gazette notification வரப்பெற்று, 13–3–2020 அன்றைக்கு திருவள்ளூரிலிருந்து மாவட்ட ஆட்சியர் மூலமாக தலைமைச் செயலகத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அது என்னவாயிற்று என்று அரசைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

அதேபோல, பாப்பரம்பாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசால்

அறிவிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. இப்போது நிதி இல்லாமல் நிலுவையில் இருப்பதால், அங்கு வேலை நடக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இப்போது திருவள்ளூர் பகுதியினுடைய முக்கியமான பிரச்சினை இது. அதையும் விரைந்து முடித்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள திருவாலங்காடு பகுதியில் துணை மின் நிலையம் அமைத்திட ஏற்கெனவே அந்த சர்க்கரை ஆலை நிருவாகத்திடம் இடம் கேட்டிருந்தோம். சர்க்கரை ஆலையில் இடம் கொடுக்க முடியாது என்றும், lease–க்குத் தருவதாகவும் சொல்லியிருந்தார்கள். அதற்கான மாத வாடகை ரூ.65,000/– என்று சொன்னதால், அரசால் அவ்வளவு தொகை செலுத்த முடியாது என்று சொல்லப்பட்டது. இப்போது, அதற்கு மாற்று இடமாக, பழையனூர் கிராமத்தில் 1.66 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அந்த இடம் வகைப்பாடு செய்யப்பட்ட பின்னர், அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, பாப்பரம்பாக்கம் துணை மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது கூடுதலாக 16 MVA மின்மாற்றி ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். பணம் இல்லாமல் பணிகள் நிறுத்தப்பட வாய்ப்பே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விஷயத்தில், என்ன காரணம் என்று ஆய்வு செய்து, உடனடியாக அந்த துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல, பேரம்பாக்கம் பகுதியில் கூடுதலாக மின்மாற்றி வேண்டுமென்று கேட்டிருக்கிறார் என்று நினைக்கின்றேன். இரண்டு, மூன்று இடங்களில் கேட்டிருக்கின்றார். மின்மாற்றிகளைப் பொறுத்தவரை, ஏற்கெனவே இருக்கின்ற மின்மாற்றியில் எவ்வளவு மின் பளு இருக்கிறது என்பதை நாங்கள் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அந்தப் பகுதியில் மின்னழுத்தம் அதிகமாக இருந்து, கூடுதல் மின்மாற்றி தேவையாக

2020 மார்ச் 16]

இருப்பின், கூடுதலாக ஒரு மின்மாற்றியை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று, திருவள்ளூர் நகரப் பகுதி இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய சூழ்நிலையில், ஏற்கெனவே குளக்கரை பகுதியில் அமைந்திருக்கக்கூடிய துணை மின் நிலையத்தில் உள்ள 8 MVA மின்மாற்றியை அதிக திறனுடையதாக மாற்றிட அரசு முன்வர வேண்டும். அதேபோன்று, திருவள்ளூர், மணவாள நகர் 110, 33/11 கே.வி. என்ற துணை மின் நிலையத்திற்கு இரண்டு 110 மற்றும் 11 KVA, 16 MVA ஆகிய திறன் கொண்ட மின்மாற்றிகளை வழங்க அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒரே ஒரு கோரிக்கை. கடம்பத்தூரில், கொன்னஞ்சேரி பகுதியில், கொல்லக்காலனி என்ற கிராமம் இருக்கிறது. அது கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகளைக் கொண்ட பகுதி. கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக அந்தப் பகுதியில் மின்சார வசதியே இல்லை. ஏற்கெனவே இதுகுறித்த கேள்வியை இந்த அவையில் நான் கொடுத்திருக்கிறேன். மின் இணைப்பு வழங்கக் கோரியபோது அந்த வீடுகளுக்கு பட்டா இல்லை என்று சொல்கிறார்கள். மின் வசதியின்மையால் அந்தப் பகுதியில் படிக்கக்கூடிய மாணவர்கள் அனைவரும் படிக்க வசதி இல்லாமல் இருக்கிறார்கள். இப்போதுதான் தெரு விளக்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மின் மோட்டார்களைக்கூட உபயோகப்படுத்த முடியாத நிலையில், அடிப்பம்பு மூலமாகத்தான் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை அந்த கொல்லக்காலனியில் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் மின்சார வசதியை ஏற்படுத்தித் தர அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், மணவாள நகரில் கூடுதலாக மின்மாற்றி வேண்டுமென்று

[2020 மார்ச் 16

கேட்டிருக்கின்றார். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் மின்னழுத்தம் அதிகமாக இருந்தால், அங்கு ஒரு மின்மாற்றி அமைப்பதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. அங்குள்ள மின்னழுத்தத்திற்கேற்ப, கூடுதலாக மின்மாற்றி அமைக்கத் தேவையிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி அந்தப் பகுதியில் கூடுதல் மின்மாற்றி அமைக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொல்லக்காலனி கிராமத்திலுள்ள குடிசைப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்க்கின்றபோது, அந்த குடிசைப் பகுதி ஆட்சேபகரமான புறம்போக்கு; அதாவது, ஓடைப் புறம்போக்கு போன்ற புறம்போக்கு இடமாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். அவ்வாறு இருக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியின் தாசில்தார் அவர்கள் NOC கொடுத்துவிட்டால், அங்கு மின் இணைப்பு கொடுப்பதில் எங்களுக்கு எந்தவித கஷ்டமும் கிடையாது. ஆகவே, அவர்கள் குடியிருக்கின்ற குடிசைப் பகுதி, ஓடைப் புறம்போக்கு அல்லது வேறு ஏதாவது வகைப்பாடுள்ள புறம்போக்காக இருக்கும். அந்தக் காரணத்தால்தான், இதுபோன்ற சூழ்நிலை அங்கு இருக்கும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் மின் இணைப்பு கொடுக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, ஒரு undertaking வாங்கிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

98—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***40025—திரு. கோ. லோகநாதன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2020 மார்ச் 16]

கீழ்வைத்தினான்குப்பம் தொகுதி, கீழ்வைத்தினான்குப்பத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழ்வைத்தினான்குப்பம் தொகுதி, கீழ்வைத்தினான்குப்பத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. கோ. லோகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். அம்மாவின் வழியிலே சிறப்பான முறையில் தமிழகத்தை ஆட்சி செய்து வருகின்ற குடிமராமத்து நாயகர், கொங்கு நாட்டுத் தங்கம், காவேரிக் காப்பாளர், கலியுகக் கரிகாலன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய அரசுக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகர் ஐயா திரு. ஓ.பி.எஸ் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் சட்டமன்றத் தொகுதி இருக்கக்கூடிய வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த

மாவட்டமாக இருந்தபோது, அங்கே 4 அரசுக் கல்லூரிகளும், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக இருந்து அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட 2 கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாக அவற்றிலே, 2019–2020 ஆம் கல்வி ஆண்டிலே, ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 594 இடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், அந்த ஒருங்கிணைந்த மாவட்டத்தில் 7 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே 569 இடங்கள் இன்றைக்கு காலியாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், சுயநிதிக் கல்லூரிகளாக 25 கல்லூரிகள் அந்த ஒருங்கிணைந்த மாவட்டத்தில் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒப்பளிக்கப்பட்ட 7,232 இடங்களிலே, ஏற்கெனவே நான் குறிப்பிட்ட அளவிற்கு இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவேதான், அவர் சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்றத் தொகுதியிலே, பெண்களுக்காக கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், எதிர்வரும் காலக்கட்டங்களிலே மாணாக்கர்களுடைய சேர்க்கை கூடுதலாக இருக்கின்றபொழுது, அரசானது இதுகுறித்து பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.

திரு. கோ. லோகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்திணான்குப்பம் சட்டமன்றத் தொகுதி 2011–லே உருவாக்கப்பட்ட புதிய தொகுதி. இந்தத் தொகுதி முழுக்க, முழுக்க கிராம ஊராட்சிகளை மட்டுமே உள்ளடக்கிய தொகுதியாகும். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் ஐயா அவர்கள், வேலூர் மாவட்டத்தை இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் என்று 3 மாவட்டங்களாகப் பிரித்து, வேலூர் மாவட்ட மக்களுடைய வயிற்றிலே பாலை வார்த்துள்ளார். நான் குறிப்பிடுவது, கே.வி. குப்பம் சட்டமன்றத் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். அங்கே அரசு திருமகள் ஆலைக் கல்லூரி ஒன்று இயங்கி வருகின்றது. இந்த அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம் நகரத்தை ஒட்டி அமைந்திருக்கின்றது. அதிலே பெரும்பான்மையான மாணவர்கள் குடியாத்தம் நகரத்திலே இருந்து உயர் கல்வி பயின்று வருகிறார்கள். எனவே, கே.வி. குப்பம் கிராம ஊராட்சியில் இருக்கின்ற அந்த மாணவர்கள், அங்கே உள்ள

2020 மார்ச் 16]

கல்லூரியில் admission கிடைக்காமல், தனியார் கல்லூரிகளை நாட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஓர் ஆண்டிற்கு சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் திருமகள் ஆலைக் கல்லூரியிலே விண்ணப்பிக்கின்றார்கள். ஆனால், 700–லிருந்து 800 மாணவர்களுக்கு மட்டுமே அங்கே இடம் கிடைக்கின்றது. ஆகையால், மீதமுள்ள மாணவர்கள், தூரத்திலுள்ள தனியார் கல்லூரிகளுக்குச் சென்று படிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகின்றது. என்னுடைய தொகுதியிலே ஏழையெளிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகமான அளவில் இருக்கின்றார்கள். குறிப்பாக, கிராமப்புற பகுதியாக இருப்பதால், அங்கிருக்கின்ற மகளிர் நீண்ட தூரம் பயணித்து கல்லூரிக்குச் சென்று படிப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. எனவே, அங்குள்ள மக்கள் ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அங்கு அமைத்துத் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றார்கள். இந்தக் கல்லூரியைக் கட்டுவதற்கு போதிய இடமும் கீழ்வைத்தினான்குப்பம் தொகுதியின் மையப் பகுதியிலே இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லோகநாதன், கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் விளக்கமாகப் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள்; கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோ. லோகநாதன்: ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், குடியாத்தம் தொகுதிக்கு அருகில், குடியாத்தத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டுவரும் அரசு திருமகள் ஆலைக் கல்லூரியில் மாணாக்கர்கள் சேருவதற்கு இடம் போதுமானதாக இல்லை என்று சுட்டிக்காட்டினார்கள். குடியாத்தம் திருமகள் ஆலைக் கல்லூரியைப்

பொறுத்தவரையில், 2011 ஆம் ஆண்டிற்கு முன்பாக, ஐந்தே இளநிலைப் பாடப் பிரிவுகளுடன் அந்தக் கல்லூரி இயங்கி வந்தது. 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், அந்தக் கல்லூரிக்குக் கூடுதலாக 8 பாடப் பிரிவுகளை வழங்கி, அங்கே மாணாக்கர்கள் கூடுதலாகப் பயிலுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதோடுமட்டுமல்ல; முதுநிலைப் பாடப் பிரிவுகளே இல்லாமலிருந்த நிலையில், 10 முதுநிலைப் பாடப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டன. அதேநேரத்தில், 10 M.Phil., பாடப் பிரிவுகளும், 9 Ph.D., பாடப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஆகவே, குடியாத்தத்தைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மாணாக்கர்கள் சேருகின்ற வகையிலேதான், ஓராண்டிற்கு 968 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதும் உண்மைதான். இந்தக் கல்வியாண்டிலே 966 பேர் அந்தக் கல்லூரியிலே சேர்ந்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், 2 இடங்கள் மட்டும்தான் தற்போது காலியாக இருக்கின்றன. ஆனால், வேலூர் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, மாணாக்கர்கள் சேர்க்கைக்காக ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் இன்றைக்கு மிகையாக இருக்கின்றன. அவர் குறிப்பிட்ட பகுதியில், வரக்கூடிய கல்வியாண்டிலே மாணாக்கர்கள் சேர்க்கைக்காக மனுக்கள் பெறப்படுவது குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் வழியிலே நடைபெறுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்தினான்குப்பம் என்னுடைய பழைய தொகுதி. நான் காட்பாடி தொகுதி M.L.A. ஆக இருந்தபோது, கீழ்வைத்தினான்குப்பம் பகுதி அதில் இருந்தது. குடியாத்தத்தில் ஒரு High School, காட்பாடியில் ஒரு High School உள்ளது. இவையிரண்டிற்குமிடையேயான தூரம் 30 கி.மீ. ஆகும். ஆனால், கீழ்வைத்தினான்குப்பத்தைப் பொறுத்தவரையில், நான் அப்போது 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படிப்பதற்கு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்டுவந்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்

2020 மார்ச் 16]

அவர்கள் சொன்னதைப்போல், மாணவர்கள் கல்லூரிக் கல்விக்காக குடியாத்தத்திற்கோ அல்லது வேலூருக்கோ போக வேண்டிய நிலையிருக்கிறது. இதுபோன்ற நிலைமைதான் தற்போது அங்கு உள்ளது. ஆகவே, கீழ்வைத்திணான்குப்பம் பகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கிட வேண்டுமென்பது எங்களது மையக் கருத்து. சுற்றுவட்டாரத்தில், ஆந்திராவை ஒட்டியுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து கல்லூரிப் படிப்பிற்காக ஒரு பெண் குடியாத்தம் சென்று வருவது என்பது சாதாரணமான விஷயமல்ல. அப்படி நீண்டதூரம் படிப்பிற்காக சென்று வருவது சரியல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையே நானும் வலியுறுத்துகிறேன்.

கீழ்வைத்திணான்குப்பம் என்னுடைய சொந்த ஊர், சொந்த ஒன்றியம். அங்கே கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு மிகையான ஆசை உண்டு. ஆகையினால், இதிலேயுள்ள நியாயத்தைக் கருத்திலே கொண்டு, 30 கி.மீ. தொலைவிற்கு மாணவர்கள் பயணித்து, கல்வி கற்கும் நிலைமையைத் தடுக்க வேண்டும். யாரோ தனிப்பட்ட ஒரு நபர் நடத்தும் கல்லூரியில் அந்த course கொடுத்திருக்கிறோம்; இந்த course கொடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் பெரிய இலாபகரமான ஆட்கள். அங்கே சாதாரணமான, குடியானவர் வீட்டுப் பெண்கள் சேர்ந்து படிக்க வாய்ப்பு குறைவு. அவர்கள் பெரிய ஆட்கள்; குறிப்பிட்ட சிலரை அதிலே சேர்த்துக்கொள்வார்கள். ஆகவே, ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் definite ஆக அங்கே ஒரு கல்லூரியைத் தந்தாக வேண்டும். நான் அங்கு M.L.A. ஆக இருந்த காலத்திலிருந்தே கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்தால் இப்போதே நான் இதற்கு அனுமதி வாங்கிவிடுவேன். (சிரிப்பு) ஆகவே, அருள்கூர்ந்து இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கீழ்வைத்திணான்குப்பத்தில் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், புதிய பாடப் பிரிவுகளை அங்கே தோற்றுவித்தது பற்றி இங்கே சாதாரணமாக எடுத்துக் கூறினார்கள். உண்மை நிலை

என்னவென்றால், புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கும்போது, மாணவர்களின் சேர்க்கையானது கூடுதலாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இடம் கிடைக்காத மாணாக்கர்கள், அதே கல்லூரியிலேயே உடனடியாக சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பு கிடைக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒப்பளிக்கப்பட்ட இடங்களுக்கும் மேலாக விண்ணப்பங்கள் இருக்கின்றபட்சத்திலே, அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகிதம் மாணவர்களை கூடுதலாக சேர்ப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில், அனைவரும் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிடுவது போன்று கீழ்வைத்திணான்குப்பமானது அதிக தூரத்தில் இல்லை. கீழ்வைத்திணான்குப்பத்திலிருந்து வாலாஜாப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு மகளிர் கல்லூரியானது 13கி.மீ. தூரத்தில்தான் இருக்கிறது. கீழ்வைத்திணான்குப்பத்திலிருந்து 26 கி.மீ. தூரத்தில்தான் வேலூர் கல்லூரி இருக்கிறது. ஆகவே, தற்போது கீழ்வைத்திணான்குப்பத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் முழுமையாகப் படிக்கக்கூடிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது உருவாக்கித் தந்திருக்கிறது.

முற்பகல் 10–25

நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருமகள் ஆலைக் கல்லூரியிலே சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில், 2 இடங்கள்தான் காலியாக இருக்கின்றன என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதேபோல, வேலூரில் இருக்கக்கூடிய, குடியாத்தத்தில் இருக்கக்கூடிய அந்தக் கல்லூரிகளில் 2 இடங்கள் மட்டும்தான் காலியாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், வாலாஜாப்பேட்டை கல்லூரியிலே 7 இடங்கள் மட்டும்தான் காலியாக இருக்கின்றன. அதேபோல, வேலூரிலே இன்றைக்குப் பார்க்கின்றபோது அங்கே இரண்டு இடங்கள்தான் காலியாக இருக்கின்றன. எனவே, மாணவர்களுடைய சேர்க்கை என்பது, அங்கு கூடுதலாக இருக்கிறது. ஆகவே, வரக்கூடிய கல்வியாண்டிலே, மாணவர்களை கூடுதலாக சேர்ப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத்தான் கே.வி. குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன். ஆகவே, அங்கு வரக்கூடிய விண்ணப்பங்களை முழுமையாக ஆய்வு செய்து, மாணவர்களின் சேர்க்கைக்கான இடவசதிகள் போதுமானதாக இல்லையென்கின்றபட்சத்திலே, கண்டிப்பாக மாண்புமிகு அம்மா

2020 மார்ச் 16]

அவர்களுடைய அரசானது அதைப் பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பத்திலிருந்து வாலாஜா கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர். (குறுக்கீடு) 50 கிலோ மீட்டர் இருக்கும். நீங்கள் 13 கிலோ மீட்டரென்று சொல்கிறீர்கள். இது wrong statement. That is one thing. போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்; இடம் காலியாக இல்லையென்றால் கஷ்டப்பட்டு கொண்டுவரச் சொல்கிறார். ஆந்திரா border–ல் மாங்குப்பம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கிருந்து குடியாத்தம் போவதற்கு 20 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டும். 2 பஸ் ஏற வேண்டும்; பஸ் எல்லாம் இப்போது முன்புமாதிரி கிடையாது. 3 மைல் நடந்து வந்து, கே.வி. குப்பத்தில் பஸ் பிடித்து, அங்கே போக வேண்டும். இல்லையென்றால், 3 மைல் நடந்துவந்து இங்கு போக வேண்டும். ஆக, நீங்கள் positive–ஆகச் சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சரைக் கலந்து கொண்டு செய்கிறேன் என்று சொல்லுங்கள். முடியவே முடியாது என்று சொன்னால், எப்படி சார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கென்று ஒரு மரபு இருக்கிறது; Rule இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவ்வப்போது rules பேசுவார்; சட்டம் பேசுவார். அவருக்கு மட்டும் விதிவிலக்கா? அதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவர் துணைக் கேள்வியாகக் கேட்டதால் அனுமதித்தேன். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: துணைக் கேள்வி கேட்கும் ஒருவரை இரண்டாவது துணைக் கேள்வி கேட்பதற்கு எப்போதுமே நாம் allow செய்வதில்லை. கேள்வி நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்தான் பதில் சொல்கிற வழக்கம். அவருக்கு மட்டும் விதிவிலக்கு என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

[2020 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அந்தத் தொகுதியினுடைய மையப் பகுதியை வைத்து கணக்குப் போடக் கூடாது. தொகுதியில் பரவலாக இருக்கக்கூடிய பகுதிகளைக் கொண்டும், தொகுதியினுடைய எல்லைப் பகுதிகளைக் கொண்டும் கணக்குப் போட வேண்டும். அப்படி எல்லைப் பகுதியைக் கொண்டு கணக்குப் போடுகின்றபோது, நான் குறிப்பிட்டதுபோல, குறைந்த அளவிலேயே கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால், அவர் எல்லைப் பகுதியை விட்டுவிட்டு, மையப் பகுதியை மட்டும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றார். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை, அம்மா வழியிலே நடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மாதனூரில் ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்திருக்கிறார். அங்கே மாணாக்கர்களுடைய சேர்க்கையைக் கருதித்தான், நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள், வேலூர் மாவட்டத்திலே, மாதனூரிலே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்திருக்கிறார். ஆக, எதிர்வரும் காலக்கட்டங்களிலே தேவைக்கேற்ப அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்றுதான் சொன்னேனே தவிர, 'முடியாது' என்ற வார்த்தையைச் சொல்லவில்லை. நான் negative–ஆக சொன்னதாக அவர் சொல்லியிருக்கிறார். அது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையிலே, உயர் கல்வி பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை இன்றைக்குத் தமிழகத்திலே உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அளவிலே இன்றைக்கு உயர் கல்வியில் மாணாக்கர்களின் சேர்க்கை 26.3% என்று இருந்தாலும், தமிழகத்தில் அது 49 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்து, முதன்மை இடத்தை தமிழகம் பெற்றிருக்கிறது. அனைவருக்கும் அப்படிப்பட்ட வாய்ப்பை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். இது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இருந்தாலும், ஒரு துணைக் கேள்வியைக் கேட்டுவிட்டு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, இரண்டாவது முறையாகவும்

2020 மார்ச் 16]

அதைக் கேட்கிறார். அதற்காகத்தான் நான் இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, அனைத்து மாணாக்கர்களும் உயர் கல்வியில் சேர்வதற்கு, அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு நான் மேலே குறிப்பிட்டதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அது ஒன்றுமில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கிலோ மீட்டர் கணக்கைச் சொன்னார். கிலோ மீட்டரைச் சொல்கிறேன் என்று சொன்னதால்தான் allow செய்தேன். வேறு ஒன்றுமில்லை.

வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

99—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***24487—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு வட்டம், பரங்கிவெட்டிகாடு கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, பரங்கிவெட்டிகாடு கிராமத்தில் தகுதியான நிலம் தெரிவுசெய்யப்பட்டு, நிரந்தர நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நெல் கொள்முதல் நிலையம் என்பது கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டது. இலவச மின்சாரம் கொடுக்கப்பட்ட காலத்திலேயே விவசாயிகள் பயன்பெறுகின்றவகையிலே நெல் கொள்முதல் கழகம் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வியாபாரிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்வார்கள் என்பதற்காக இது துவக்கப்பட்டது. இது ஒரு பரீட்சார்த்தமான கேள்விதான்.

முற்பகல் 10–30

பல்வேறு கிராமங்களில், பல்வேறு பஞ்சாயத்துகளிலே கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் வெற்றிடங்களிலே, அதாவது, வெயில் காய்ந்து கொண்டிருக்கிற நிலையிலே,வெளியிலேநெற்களெல்லாம்கொட்டப்பட்டிருக்கின்றன. நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு அதிகமான செலவு ஏற்படப்போவதில்லை. நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கான செலவு குறைவுதான். எனவே, இதுபோன்று இருக்கிற பல்வேறு இடங்களில், நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கட்டடங்களைக் கட்டி கொள்முதல் செய்வதன்மூலம் நெல் பாழாவதையும், இழப்புகள் ஏற்படுவதையும் தடுப்பதோடு, விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கும் வழிவகை ஏற்படும். ஆகையினால் பல்வேறு இடங்களில் இருக்கிற கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி, நெல்லை கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு வரை 273 ஆக இருந்த நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள், கடந்த 9 வருடங்களில் மட்டும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

2020 மார்ச் 16]

அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதாவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேயும், அம்மா அவர்களுடைய வழியில் ஆட்சி செய்துகொண்டிருக்கிற அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களது ஆட்சியிலேயும் 533 ஆக உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்பொழுது 80 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைத் தவிர, 125 கட்டடங்களை 56 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிகிறபொழுது, தமிழகத்தில் மொத்தம் 658 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், கடந்த 9 வருடங்களில் 74 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு 22 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 8 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில், 13 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இத்துடன் 30 இடங்களில் 14 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, அவருடைய ஒரத்தநாடு பகுதியைப் பொறுத்தவரையில், 17 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 4 இடங்களில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்லாமல், 14 இடங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்குரிய பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் புறம்போக்கு நிலங்களிலும் மற்றும் அரசுக்குச் சொந்தமான பல்வேறு வகைப்பாடு

[2020 மார்ச் 16

உடைய இடங்களிலும், நீர்நிலைப் புறம்போக்காக இருந்து தரிசாக மாற்றப்பட்ட இடங்களிலும் கட்டப்பட்டு இப்பொழுது இயங்கி வருகின்றன. அதுபோன்று, அரசு நிலங்களைக் கையகப்படுத்தி, கொள்முதல் நிலையங்களைக் கட்டித் தருவதன்மூலம், விவசாயிகள், அவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்க வேண்டும் அல்லது தங்களது பட்டா நிலங்களை இதற்காகத் தர வேண்டும் என்கிற சூழ்நிலை மாறும். ஆகையினால், புறம்போக்கு நிலங்கள் அல்லது தரிசு நிலங்களை அரசாங்கம் TNCSC மூலமாகப் பெற்று, நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைக் கட்டித்தர ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு புறம்போக்கு நிலங்கள்தான் தெரிவு செய்யப்படுகின்றன. புறம்போக்கு நிலங்களில், வகைப்படுத்தப்பட்ட புறம்போக்கு நிலத்தில் எங்கெல்லாம் கொள்முதல் நிலையக் கட்டடத்தைக் கட்ட முடியுமோ, அந்த இடங்களில் கட்டடங்களைக் கட்ட முடிகிறது. அதாவது, நீர்நிலைப் புறம்போக்கு மற்றும் பயன்படுத்த முடியாத இதர புறம்போக்கு நிலங்களைத் தவிர, பயன்படுத்தக்கூடிய புறம்போக்கு நிலங்கள் எந்த இடத்தில் இருந்தாலும், அதற்குத்தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அவை கிடைக்காதபட்சத்தில்தான், விவசாயிகளிடமிருந்து தானமாகப் பெற்றோ அல்லது TNCSC–மூலம் வாங்குகிற நிலங்களிலோ, இன்றைக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட 33 சென்ட் நிலம் இருந்தால் போதுமானது. 40 சென்ட் நிலம் கொடுத்தால் அல்லது புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டால், அங்கு களத்தோடு நெல் கொள்முதல் நிலையத்தைக் கட்டிக்கொடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 16]

100—

குடிநீர் வசதி

***5329—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் குடிநீர் மற்றும் பொது சுகாதார வளாக வசதியை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இரண்டு முறை ஆய்வு செய்யப்பட்டு, தாமிரபரணி ஆற்றிலிருந்து தனியாக, அதாவது, dedicated line–ன்மூலம் குடிநீர் வழங்கிட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூபாய் 6.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, மிகச் சிறப்பாக தாமிரபரணி தண்ணீர், அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, விடுதிக்கு முழுமையாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மேலும், கழிவறை வசதியைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கழிவறை மட்டும் பழுதாகி இருக்கிற காரணத்தினால், அதனை மராமத்து செய்வதற்காக இப்போது உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

[2020 மார்ச் 16

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து நேரடியாக தண்ணீர் வழங்கப்படுவது உண்மைதான். அந்தத் தண்ணீரை நோயாளிகள் குடிப்பதற்கு பயன்படுத்துகிற காரணத்தினால், இயந்திரம் மூலமாக சுத்திகரிப்பு செய்து அதனை வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அதேநேரத்தில், கழிப்பிட வசதியைப் பொறுத்தவரையில், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அது கட்டப்பட்டது. அதனை சரிசெய்யும் பணி இப்போது கிட்டத்தட்ட 8 மாதங்களாக நடைபெற்றுவரும் நிலையில், இன்னும் நிறைவடையவில்லை. அதுமட்டுமல்லாமல், விதிமுறைகளைமீறி அந்தக் கழிப்பிடத்தை தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுத்து, அவர்கள் கூடுதல் கட்டணம் வசூல் செய்தார்கள். இப்போது ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு, 8 மாதங்களாக அதைச் சீரமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை உடனடியாக முடித்துத் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், அந்த மருத்துவமனையைப் பொறுத்தளவில், இன்னும் கூடுதலாக கழிப்பிட வசதியையும், மகப்பேறு பிரிவுப் பகுதியிலே உறவினர்கள் தங்குவதற்கான Sheds–ஐயும் அமைத்துத் தர வேண்டும். இந்தப் பொது மருத்துவமனையில் 2,000 உள்நோயாளிகள் இருந்துவரும் நிலையில், தினசரி 4,000 வெளி நோயாளிகளும் வந்து செல்கின்றனர். இவர்களில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் பேர் இந்த மருத்துவமனையிலிருந்து பக்கத்தில் இருக்கிற பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். அந்த மருத்துவமனை கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் அமைந்திருக்கிற காரணத்தினால், அவர்கள் வாடகை ஆட்டோமூலம்தான் அங்கு செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்கு வாகன வசதியை அரசே செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

இன்னொன்று; மேலப்பாளையத்தில் இருக்கின்ற மாவட்ட அரசு மருத்துவமனை தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. இப்போது தென்காசி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், மேலப்பாளையத்தில் இருக்கிற அந்த மருத்துவமனையை, திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அங்கே இடநெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அதைப் போக்குகின்ற வகையில்,

2020 மார்ச் 16]

கூடுதலாக சாய்வுதள வசதியோடு ஒரு மாடியை அமைத்துத் தருவதோடு, அறுவை சிகிச்சை அரங்கங்கள் உள்ளிட்ட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், ஒரு கேள்வியைக் கேளுங்கள். இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: முக்கியமான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டிருக்கக்கூடிய அந்தக் கழிவறையைச் சீரமைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலைக் கொண்டு, அதை விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு உத்தரவு பிறப்பித்து, அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிற கோரிக்கைகளை அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

திருநெல்வேலி மருத்துவமனையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; இரண்டு, மூன்று ஆண்டுகளில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மிகப் பெரிய வசதிகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். மூன்று CT Scan வசதி ஏற்படுத்தப்பட்டு, மிகச் சிறப்பாக அவை செயல்பட்டு வருகின்றன. அதோடு, ஒரு MRI Scan–ம் கொடுத்திருக்கிறோம்; Angiogram செய்து, Angioplasty செய்து, Stent வைப்பதற்கு, Cath Lab வசதியை ஏற்படுத்திருக்கிறோம். இத்தனை வசதிகளோடு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. TAEI Ward மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படுகிறது. இதைவிட முக்கியமாக, 150 மாணவர் சேர்க்கையோடு செயல்பட்டு வந்த திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இப்போது ஆண்டுக்கு கிட்டத்தட்ட 250 மாணவ, மாணவிகள் சேரக்கூடிய அளவிற்கு MCI–யினுடைய ஒப்புதலை வாங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அங்கே ஒரு கிலோ

மீட்டர் distance–ல் இருக்கின்ற Super Speciality மருத்துவமனைக்கு நோயாளிகள் செல்வதற்குண்டான அந்தச் சூழ்நிலை இருக்கிறது. அதை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நெல்லை மாவட்டத்திலே மிகப் பெரிய ஒரு மருத்துவமனையாக அது இருப்பதோடு, பக்கத்தில் இருக்கிற இரண்டு, மூன்று மாவட்ட மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலும் அந்த மருத்துவமனை இருக்கிறது. எவ்வளவு வசதிகளை ஏற்படுத்தினாலும் அங்கே தேவை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்த மருத்துவமனையில் ஒரு சில இடங்களில் மட்டும்தான் வெந்நீர் கிடைக்கிறது. ஆகவே, அங்குள்ள எல்லா முக்கியமான பகுதிகளிலும் வெந்நீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மேலும், தனியாரால் கொடுக்கப்பட்ட Battery car ஒன்று அங்கே இயக்கப்பட்டு வருகிறது. அதையும் கூடுதலாக இயக்க வேண்டும். பொதுவாக, இந்த மருத்துவமனை, மிக நல்ல முறையில் எல்லோரும் பயன்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு மருத்துவமனையாகும். அது சிறப்பாகச் செயல்பட வேண்டும். ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கு கழிவறை கட்டப்பட்டது மட்டுமல்லாமல், அந்த மருத்துவமனையில் பல்வேறு பணிகளுக்காக எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் வரை கொடுத்திருக்கிறேன் என்ற தகவலையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எனது கோரிக்கைகளைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல entire south–க்கும் ஒட்டுமொத்தமாக, தென்

2020 மார்ச் 16]

தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய மருத்துவமனையாக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை நாம் உயர்த்தியிருக்கிறோம். இப்பொழுது கொரோனா வைரஸ்–ஐ diagnosis செய்வதற்கான centre–ஐ திருநெல்வேலி மருத்துவமனையில் அமைத்திட sanction செய்து, அதற்கான பணி நடந்துகொண்டிருக்கிறது. தென் தமிழகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படக்கூடிய மருத்துவமனை திருநெல்வேலி மருத்துவமனை. எனவே, திருநெல்வேலி மருத்துவமனைக்கு இன்னும் தேவையான வசதிகளை அரசு கனிவுடன் செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களையும் வணங்குகிறேன். அந்தியூர் சட்டமன்றத் தொகுதி கிராமப்புற மக்களைக் கொண்ட தொகுதி மட்டுமல்லாமல், அதிக நிலப் பரப்பு கொண்ட ஒரு தொகுதியாகும். இந்தச் சூழ்நிலையில் அந்தியூர் மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக அறிவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், பர்கூர் மலைப் பகுதியின் கடைக்கோடியிலிருந்து மக்கள் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அந்தியூருக்கு வரவேண்டியுள்ளது. மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்தியூர் மருத்துவமனையை நேரில் வந்து ஆய்வு செய்யும்பொழுது, அந்த மருத்துவமனை சிறப்பாகச் செயல்படுகிறது என்ற பாராட்டையும் தெரிவித்துவிட்டு, அதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவேன் என்றும் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதை செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. எனவே, நடப்பாண்டில் அந்த தாலுகா மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என்னென்ன தேவை என்ற பட்டியலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கொடுத்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்த மருத்துவமனையின் வளர்ச்சியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அதை நேரடியாக ஆய்வு செய்தபோது கண்டேன். அவர் அந்த மருத்துவமனைக்கு அடிக்கடி சென்று, தான் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் நிறைவாக செய்திருக்கிறார். அதையும் தாண்டி, துறை செய்ய வேண்டிய பணிகளை பட்டியலிட்டு, கருத்துருவாக வழங்கியிருக்கிறார். தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு ஏற்கெனவே அரசுக்கு வரப்பெற்று, அரசின் சாதகமான பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது நிறைவேறும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

101—

பதப்படுத்தும் ஆய்வகம்

***44724—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூரில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூரில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், மைலம் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகள், தங்கள் மானாவாரி புஞ்சை நிலங்களில் குறைந்த அளவு நீர் ஆதாரம் மற்றும் செலவினங்களைக் கொண்டு, அவுரி பயிரிட்டு வருகிறார்கள். எனவே, அங்குள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை உயர்த்தவும் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் மேல்மலையனூரில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் அதே வினாவைக் கேட்டிருக்கிறார். அவுரி எனப்படும் நீலப் பயிர் ஒரு சாயப் பயிராகும். இது ஊதா நிறச் சாயம் தயாரிக்கப் பயன்படுகிறது. இது புதர் வகையான செடி. ஏறத்தாழ 2 அடி முதல் 3 அடி உயரம் வளரக்கூடியது. இப்பயிர் நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் பயிரிடப்படுகிறது. நடவு செய்த நாளிலிருந்து 90 நாட்கள் கழித்து முதல் அறுவடையும், அதற்கு அடுத்து தலா 60 நாட்கள் இடைவெளியில் மூன்று அறுவடைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தற்பொழுது செயற்கையாக வேதியியல் பொருட்கள்மூலம் பெருமளவு நீல நிறச் சாயம் தயாரிக்கப்பட்டாலும், அவுரி பயிர் இலையிலிருந்து இயற்கையாக பெறப்படும் நீல நிறச் சாயத்தின் பயன்பாடு சமீப காலங்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த ஊதா சாயத்தின் பெயர் இண்டிகோடின் ஆகும். இப்பயிரிலிருந்து கிடைக்கும் தழைகளை உலர்ந்த இலைகளாகவும், தழைகளை புளிக்கச் செய்து சாயத்தை நீல நிறக் கட்டிகளாக மதிப்பு கூட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும், இப்பயிர் ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் தயாரிக்கவும், மண்ணை வளமாக்க பசுந்தாள் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

முற்பகல் 10–45

அவுரி பயிர் விழுப்புரம் மாவட்டம், வல்லம், மைலம் மற்றும் செஞ்சி வட்டாரங்களில் ஏறத்தாழ 2,660 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. மேல்மலையனூர் வட்டாரத்தில் மட்டும் அவுரி குறிப்பிடத்தக்க அளவில் பயிரிடப்படவில்லை. இப்பயிரிலிருந்து ஏக்கருக்கு 1,300 கிலோ உலர்ந்த இலைகளைப் பெறலாம். ஒரு கிலோ உலர்ந்த இலை 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் அவுரி பயிர் இலைகளை உலர வைத்து பதப்படுத்துவதற்கு தற்சமயம் வேளாண் பொறியியல் துறைமூலம் செயல்படுத்தப்படும் சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கும் திட்டத்தில், ஆதி திராவிடர் பழங்குடியினர் பெண் விவசாயிகள் 60% மானியத்திலும், இதர விவசாயிகள் 50% மானியத்திலும் சூரிய கூடார உலர்த்திகளை அமைத்து, இலைகளைத் தரமாகப் பதப்படுத்தி, விற்பனை செய்துகொள்ளலாம். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் துறையில் 1 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் மருந்துப் பயிர்கள் ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. அவுரி பயிரிடும் விவசாயிகள் தங்கள் பயிர் மாதிரிகளை ஆய்வுக்குக் கொடுத்து தரப் பரிசோதனை செய்து கொள்ளலாம். அவுரிப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், பயிர் சாகுபடி தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளவும், சாகுபடி செய்யும் அவுரிப் பயிருக்கு தரச் சான்று பெறுவதற்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வசதிகளை தேவைப்படின் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் பகுதியில் அவுரிப் பயிருக்கென தனியாக பதப்படுத்தும் ஆய்வகம் அமைக்க வேண்டிய சூழ்நிலை தற்போது எழவில்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி, மேல்மலையனூர் மற்றும் வல்லம் ஆகிய பகுதிகளில் சுமார் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் அவுரி பயிரிடப்படுகிறது. மருத்துவ குணம் கொண்ட இந்தச் செடிகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி

2020 மார்ச் 16]

செய்யப்பட்டு, மருந்துகளும், சாயங்களும் தயாரிக்கப்படுகின்றன. இதுபோன்று, அவுரி பயிரிட்டு, அறுவடை செய்த மகசூலை வெளிமாநில வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. செஞ்சி மட்டுமின்றி, அதனைச் சுற்றியுள்ள சுமார் 100 கி.மீ. தொலைவிலுள்ள அனைத்துப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்காகவும் அவுரி தழை ஆய்வகம் அமைத்தால், தற்போது கிடைக்கும் இலாபத்தைவிட, கூடுதல் இலாபம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே, விவசாயிகள் முழுமையான பலனை அடைய வேண்டுமெனில், தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி, அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகத்தை அமைத்துத் தர வேண்டும். இந்த ஆய்வகம் தமிழ்நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மேல்மலையனூர் பகுதியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவுரி தழை பதப்படுத்தும் ஆய்வகம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று அரசை தங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. எனினும், எங்கேயும் அதுபோன்ற ஆய்வகத்தை அமைத்தது கிடையாது. அதாவது, கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மட்டும்தான் அந்த ஆய்வகம் அமைக்கப்பட்டிருக்கிறது. செஞ்சி சட்டமன்றத் தொகுதி, குறினசிப்பை பகுதியில் 410 சதுர அடியில் சூரிய கூடார உலர்த்தி 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு 60% மானியமாக ரூ.1,95,000/– தொடர்புடைய மகளிர் விவசாயிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியில், சூரிய கூடார உலர்த்தி ஒன்றை அமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

[2020 மார்ச் 16

102—

படகுக் குழாம்

***49271—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கந்தகுமாரன் ஊராட்சி, வீராணம் ஏரியில் சுற்றுலாத் துறையின்மூலம் படகுக் குழாம் அமைத்து, சுற்றுலாத்தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) “காட்டுமன்னார்கோவில் தொகுதி, கந்தகுமாரன் ஊராட்சி, வீராணம் ஏரியில் சுற்றுலாத் துறையின்மூலம் படகுக் குழாம் அமைத்து, சுற்றுலாத்தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?” என்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்களது வினாவிற்கான பதிலை நான் வழங்குகின்றேன்.

சென்னை–கும்பகோணம் மற்றும் சேத்தியாதோப்பு–காட்டுமன்னார்கோவில் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வீராணம் ஏரி ஒரு முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. வீராணம் ஏரியின் நீர், பாசனத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வீராணம் ஏரியை பொதுப் பணித் துறையின் நீர் வள ஆதாரத் துறை பராமரித்து வருகிறது. எனவே, சுற்றுலாத் துறையின்மூலம் வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் ஆளாக்கி அழகு பார்த்த அன்பு

2020 மார்ச் 16]

தெய்வம், நம்முடைய ஊனில், உயிரில், உதிரத்தில் இரண்டறக் கலந்திருக்கின்ற ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'முத்திரை பதித்த மூன்றாண்டு, முதலிடமே அதற்குச் சான்று' என (மேசையைத் தட்டும் ஒலி) நாளும் நன்மைபயக்கும் திட்டங்களை தமிழக மக்களுக்குத் தந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்ற ஒப்பற்ற முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கின்ற அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் அன்போடு தெரிவித்துக்கொண்டு, நடுநிலை தவறாமல் பேரவையை நடத்தி வருகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–50

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அமையப்பெற்றிருக்கின்ற வீராணம் ஏரி 17 கீ.மீ. பரப்பளவிலுள்ள ஒரு பாரம்பரியமான ஏரியாகும். நீர்ப்பிடிப்பு கொள்ளளவு முழுமையாக இன்றைக்கு நிறைந்து காணப்படுகிறது. பரந்து விரிந்துள்ள பாரம்பரியமான அந்த ஏரியின் மையப் பகுதியின் அருகில் இருக்கக்கூடிய கந்தகுமாரன் ஊராட்சியிலே, ஒரு படகுக் குழாம் அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் விரும்புகின்றார்கள். குறிப்பாக, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலே, பொழுதுபோக்கு அம்சம் என்பது எதுவுமில்லை. நாள்தோறும், தில்லை மாநகருக்கு நடராஜர் பெருமானை வணங்குவதற்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள், அந்த வழியாகக் கடந்து, கங்கைகொண்ட சோழபுரத்தில் இருக்கக்கூடிய ஆலயத்திற்கும் வருகின்றார்கள். எனவே, வீராணம் ஏரியைப் பார்க்க வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையிலும், அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதியும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, இதை நிறைவேற்றித் தரவேண்டும். அங்கே கழிவுப் பொருட்கள் ஏதும் கலப்பதற்கு வாய்ப்பில்லை. படகு சவாரிக்கு மட்டும்தான் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் உங்களிடத்திலே கேட்டிருக்கின்றேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, படகுக் குழாம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வீராணம் ஏரிப் பகுதியிலே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட மிகச் சிறப்பான ஒரு பூங்கா இருந்தது. இன்றைக்கு அந்தப் பூங்கா சீரழிந்துவிட்டது. அங்கே இடம் இருக்கின்றது. முன்னாள் சுற்றுலாத் துறை அமைச்சராக அருமை அண்ணன் திரு. எஸ்.பி. சண்முகநாதன் அவர்கள் இருந்தபோது, சுற்றுலாத் துறையின்மூலம் ஒரு கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டது. அங்கே பூங்கா அமைப்பதற்கு ஏதுவான இடம் இருக்கிறது. எனவே, அங்கே ஒரு நவீன பூங்காவையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலிருந்து சுமார் 65 கிலோ மீட்டர் தொலைவில் வீராணம் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி, ஒரு முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது. இந்த ஏரிக்கு மழைக்காலங்களில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான பெரம்பலூர், அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய பகுதிகளில் பெய்யும் மழை நீர் வந்து சேருகின்றது. வீராணம் ஏரியின் நீர் அருகிலுள்ள நிலங்களில் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சென்னை–கும்பகோணம் நெடுஞ்சாலை மற்றும் சேத்தியாதோப்பு–காட்டுமன்னார்கோவில் செல்லும் சாலையின் அருகில் அமைந்துள்ள வீராணம் ஏரியைக் கண்டு களிக்க நாளொன்றுக்கு மிகக்குறைந்த அளவே சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றார்கள். குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருவதால், வீராணம் ஏரியில் சுற்றுலாத் துறையின்மூலம் படகுக் குழாம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 16]

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகிலுள்ள வீராணம் ஏரியைக் கண்டு களிக்க வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களின் வசதிக்காக பொழுதுபோக்குப் பூங்கா அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பின், துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, மாவட்ட ஆட்சியரின் கருத்துரு பெற்று, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் இருக்கக்கூடிய ஸ்ரீமுஷ்ணம் இப்போது புதிய வட்டமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமுஷ்ணத்திலே அருள்மிகு பூவராகவ சுவாமி குடிகொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். அவரைப் பார்ப்பதற்காக, தரிசனம் செய்வதற்காக, நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கே வந்துசெல்கிறார்கள். அவர்களுடைய நலனைக் காக்கின்ற வகையிலே, அங்கே சுற்றுலாத் துறையின் மூலமாக தங்கும் விடுதியும், கழிவறை வசதியும் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், கடலூரிலிருந்து 45 கிலோ மீட்டர், விருத்தாசலத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஸ்ரீமுஷ்ணத்தில், அருள்மிகு பூவராகவ சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. 108 வைணவ திவ்யதேசங்களில் ஒன்றான இத்திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் யாத்ரிகர்கள் மற்றும் சுற்றுலாப்

பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது தொடர்பாக துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துரு பெற்று, சுற்றுலாத் துறையின் நிதியினை ஒதுக்கீடு செய்ய பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிறப்பு இருக்கிறது. திருவாரூர் தேர் அழகு; திருவிடைமருதூர் தெரு அழகு; கும்பகோணம் கோயில் அழகு; மன்னார்குடி மதில் அழகு; வேதாரண்யம் விளக்கு அழகு என்று ஒவ்வொரு ஊருக்கும் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. இப்படி தனிச் சிறப்பு பெற்றிருக்கக்கூடிய இந்தத் தமிழகத்தில் எண்ணிறைந்த கலைச் செல்வங்கள் பல்வேறு கோயில்களிலே நிறைந்திருக்கின்றன. திருவலஞ்சுழி பலகணி; திருவீழிமிழலை, வௌவால்நத்தி மண்டபம்; நனிபள்ளி, விமானம்; கடாரங்கொண்டான் மதில்; ஆவுடையார்கோயில் கொடுங்கை என்று இத்தகைய சிறப்பு வாய்ந்த சிற்பங்களையெல்லாம் அந்தக் காலத்திலே ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள், இந்தச் சிற்பங்களை விலக்கி வேறு சிற்பங்களுக்குத்தான் நாங்கள் செய்வோம் என்று புறநடை செய்த வழக்கம்கூட இருந்தது. ஆக, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட கலைச் செல்வங்கள்; தாரமங்கலம் சிற்பங்கள், தாடிக்கொம்பு சிற்பங்கள், பேரூர் சிற்பங்கள், திருக்குருங்குடி சிற்பங்கள், கிருஷ்ணாபுரம் சிற்பங்கள் என்று மிக அற்புதமான சிற்பங்கள் அமைந்திருக்கக்கூடிய இந்தத் திருக்கோயில்களுக்கெல்லாம்—எப்படி சுற்றுலாத் துறையிலே இப்போது நவக்கிரகத் தலங்களுக்கு ஒரு Circuit போட்டிருக்கிறீர்களோ அல்லது Jain Tourism Circuit என்று ஒரு Tourism Circuit வைத்திருக்கிறீர்களோ, திருப்பதி சுற்றுலா என்று வைத்திருக்கிறீர்களோ அதேபோல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கலைச் செல்வங்கள் நிறைந்திருக்கக்கூடிய இந்தப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கு சென்றுவர ஒரு தனியான சுற்றுலாவை ஏற்பாடு செய்திட வேண்டும்.

2020 மார்ச் 16]

இதற்காக நம்முடைய மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு கலை, பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்துபேசி, இத்தகைய கலைச் சிற்பங்களை நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் கண்டுகளிப்பதற்காகவும், வெளிநாட்டிலிருந்து வரக்கூடியவர்கள் பார்ப்பதற்காகவும் தனியாக சுற்றுலா Circuit ஒன்றை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத்தலமாக அரசு அறிவிப்பதில்லை. இருப்பினும், அங்கு வருகை தருகின்ற மக்களின் நோக்கமறிந்து, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அந்தச் சுற்றுலா மையத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை குறிப்பாக, அணுகுசாலை, குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, கழிப்பிட வசதி, ஓய்வுக்கூடம் கட்டுதல், தங்கும் விடுதி, உணவகங்கள் கட்டுதல் மற்றும் வழிகாட்டுப் பலகைகள் அமைத்தல் முதலிய வசதிகளைச் செய்வதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரின்மூலம் கருத்துரு பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அந்த நிலையிலே, கலைச் சிற்பங்கள் நிறைந்துள்ள தமிழகத்தில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

103—

சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***47178—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப் பேரவை விதி எண் 110—ன்கீழ், தலைவாசல் சார்—பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அறிவிக்கப்பட்டு, ரூபாய் 1 கோடியே 72 ஆயிரத்து 658 ஒதுக்கீடு செய்து, இப்பணி விரைவில் துவங்கிட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து மறைந்து, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, அச்சம் தவிர்த்த நிருவாகத் திறமை, (மேசையைத் தட்டும் ஒலி) அதர்மத்தை அழித்திடும் சொல்லாற்றல், காவேரி மீட்பு நாயகர், குடிமராமத்து மன்னர், வீரத்தின் விளைநிலமாம் சேலம் மாவட்ட மண்ணுக்குச்

2020 மார்ச் 16]

சொந்தக்காரர், கொங்கு நாட்டு கொடை கொடுத்த தங்கம், சிலுவம்பாளையத்து சிங்கம், கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழிவந்த கொடை வள்ளல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்துவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெற்காசிய கண்டமே வியந்து பார்க்கும் வகையில் எனது கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தலைவாசல் வி. கூட்ரோடு அருகில் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்கா, கால்நடை ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கு உத்தரவிட்டு, கடந்த 9–2–2020 அன்று அதற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா எடப்பாடியார் அவர்களுக்கும், கால்நடைப் பூங்கா அமைவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகைபுரிந்த அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வீரகனூர் பேரூராட்சியைச் சுற்றி பல கிராமங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் பத்திரப் பதிவுக்குச் செல்ல வேண்டுமென்றால், 30 கிலோ மீட்டர் தூரமுள்ள கெங்கவல்லி சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. அதனால் காலவிரயமும், பொருள் விரயமும் ஏற்படுகிறது. பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். மேற்படி வீரகனூர் பேரூராட்சியில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்குப் போதுமான இட வசதி உள்ளது. எனவே, வீரகனூர் பேரூராட்சியில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய சார்–பதிவாளர் அலுவலகம் தொடங்க வேண்டுமென்றால், தற்சமயம் அதுகுறித்து ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, தற்சமயம் புதியதாக சார்–பதிவாளர் அலுவலகம் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, அந்தக் கொள்கை முடிவை நாம் மாற்றியமைக்கும்பட்சத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, புதிய சார்–பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, புதிய சார்–பதிவாளர் அலுவலகம் தொடங்குவதற்கு முயற்சி எடுப்பதாகக் கூறியதற்கு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டேவிசன் சாலையில் ஒரு சார்—பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகின்றது. கடந்த ஆண்டு, இதுசம்பந்தமாக துணைக் கேள்வியும் கேட்டிருக்கின்றேன். அந்தச் சார்—பதிவாளர் அலுவலகம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். அந்தக் கட்டடம் முழுவதுமாக சிதிலமடைந்து, எப்போது வேண்டுமானாலும் விபத்து ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதுவும் புதியதாக இடங்கள் வாங்கி அதைப் பதிவு செய்ய வருகின்றபோது, அந்த அலுவலகம் உள்ள இடம் மங்கலகரமாக இல்லை; அமங்கலமாக இருக்கிறது. ஆகவே, கடந்த ஆண்டு நான் இந்த வினாவைத் தொடுத்தபோது, உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார். தேவைப்பட்டால், சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினரேகூட அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்றுகூட எடுத்துக் கூறினோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சிகளை ஏதேனும் எடுத்திருக்கிறார்களா என்பதை மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறைமுகம் சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் ஆன நிலையில், அது பழமை வாய்ந்த ஒரு கட்டடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருந்தார்கள். கிட்டத்தட்ட 2011 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை, இன்றுவரை 234 புதிய கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கட்டுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு, பெருமளவில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துறைமுகம் பகுதியில் சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டித் தருமாறு

கேட்டிருக்கின்றீர்கள். இந்த வருடத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்டுவதற்கான திட்டங்களைத் தீட்டி, அதற்கு வேண்டிய அறிவிப்புகளை அறிவிக்க இருக்கின்றார்கள். அந்த நேரத்தில், அந்தக் கட்டடத்தை அகற்றக்கூடிய சூழ்நிலை இருந்தால், அது முழுமையாகப் பழுதடைந்திருந்தால், கண்டிப்பாக அகற்றிவிட்டு, அங்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா அவர்களிடம் எடுத்துச்சொல்லி, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

கோவை மாநகரில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமைவாய்ந்த கட்டடமாகும். அதன் அருகில் விண்ணைத் தொடுமளவிற்கு அனைத்துக் கட்டடங்களும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ளன. ஆனால், இந்தச் சார்–பதிவாளர் அலுவலகம் மட்டும் பழமைவாய்ந்த கட்டடமாக உள்ளது. எனவே, அந்தக் கட்டடத்தை புதியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு ஒருங்கிணைந்த புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு

2020 மார்ச் 16]

உறுப்பினர் அவர்கள் பொறுமை காக்க வேண்டும். என்னுடைய துறை மானியக் கோரிக்கை, வரும் 30 ஆம் தேதி நடைபெறவிருக்கின்றது. அதுவரை பொறுமை காத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதுகுறித்து எடுத்துச் சொல்லி, இதற்கு ஒரு நல்ல பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

104—

குளிர்சாதனப் பேருந்து

***51984—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சலிலிருந்து திருப்பதிக்கு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களைப் பொறுத்தவரையில் அண்டை மாநிலங்களிடையே இதுவரை நடைபெற்ற ஒப்பந்தங்கள் (Inter–State Agreement) மூலமாக குளச்சலிலிருந்து திருப்பதிக்குப் பேருந்துகளை இயக்க அனுமதி பெறப்படவில்லை. எனவே, குளச்சலிலிருந்து திருப்பதிக்கு பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறு இல்லையென்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியிலிருந்து திருப்பதிக்கு படுக்கை வசதியுடன்கூடிய புதிய பேருந்து இயக்க வேண்டுமென்றும், அனைத்து ஜாதி மக்களும் ஐக்கியமாக வாழ்கின்ற குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலே, இந்து மக்கள் திருப்பதிக்கும், கிறிஸ்துவ மக்கள் வேளாங்கண்ணி மற்றும் கேரளாவில் உள்ள இடத்துவா, எர்ணாகுளம், சாலக்குடி பகுதிகளுக்கும், இஸ்லாமிய மக்கள் நாகூர் தர்காவிற்கும் சென்று வருவதற்குப் புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நான் கேள்வி கேட்டிருந்தேன். நிச்சயமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தருவார் என்று நினைத்தேன். ஆனால், சாத்தியக்கூறுகள் இல்லையென்று மறுத்துவிட்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் என்பது, நாகர்கோவில் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி. அது வளர்ந்து வரக்கூடிய நகரம். அந்தப் பகுதி வாழ் மக்கள் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு அடிக்கடி சென்று தரிசிப்பது வழக்கம். அந்த மக்களுக்கு வசதியாகத்தான் இந்த கேள்வியை நான் தொடுத்தேன். ஆகவே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, அதை செய்துதர வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்குச் சென்று மீன்பிடிக்கக்கூடிய மக்கள் எர்ணாகுளம் பகுதிக்குச் செல்கிறார்கள்; முனியம் பகுதிக்குச் செல்கிறார்கள்; கொச்சிக்குச் செல்கிறார்கள். இங்கு அவர்களுக்குத் தகுந்த வேலையில்லை. அவர்களுக்குத் தேவையான பணி கேரளாவில் இருக்கிறது. எனவே, அவர்கள் கேரளாவிற்குச் செல்வதற்கு நீங்கள் புதிய பேருந்தை இயக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, திருப்பதிக்குச் செல்வதற்கு படுக்கை வசதியுடன்கூடிய புதிய குளிர்சாதனப் பேருந்தை இயக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக நாகர்கோவிலிலிருந்து திருப்பதிக்கு இருமுனைகளிலிருந்தும் தலா ஒரு பேருந்து வீதம் 2 பேருந்துகள் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், கன்னியாகுமரியிலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதன வசதியில்லாத, இருக்கை மற்றும் படுக்கை வசதிகளுடன்கூடிய இரண்டு பேருந்துகள் இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. எனவே, குளச்சலிலிருந்து திருப்பதி செல்லும் பயணிகள் சுமார் 19 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாகர்கோவிலுக்கு புறநகர் பேருந்து வசதியினைப் பயன்படுத்திச் சென்று, மேற்கூறிய பேருந்துகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இயக்கக்கூடிய இரண்டு பேருந்துகளில் பயணிகளின் அடர்வும் மிகக் குறைவாக இருக்கிறது. சுமார் 70 சதவிகித பயணிகள் மட்டுமே பயணிக்கிறார்கள். இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அதாவது, அண்டை மாநில–Inter–State Agreement–ன்படி பேருந்துகளை இயக்குவதற்கு வழிவகை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, திருப்பதிக்குப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் குளச்சல் மற்றும் திங்கள் நகரில் 2 பணிமனைகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து 120–க்கும் அதிகமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அவை பல்வேறு பகுதிகளுக்குச் செல்கின்றன. ஆனால், இயக்கப்பட்டு வந்த 120 பேருந்துகளிலே இப்போது 22 பேருந்துகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தை தங்கள்முன் வைக்க விரும்புகிறேன். திங்கள் நகர், மேலகட்டிமாங்கோடு கிராமத்திற்குப் பேருந்து வசதியில்லை. அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்காக புதிய பேருந்து வசதி திங்கள் நகரிலிருந்தோ அல்லது குளச்சலிலிருந்தோ

[2020 மார்ச் 16

நாகர்கோவிலுக்கு இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது சொந்த ஊரான சிராயன்குழி பகுதியிலிருந்து, குளச்சல் தொகுதியில் உள்ள முக்கியமான பகுதிகளுக்குச் செல்வதற்காக ஒரு பேருந்தை முன்னாள் அமைச்சர் அவர்கள் எங்களுக்குத் தந்தார். அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்து தடம் எண் 386; அதை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மார்த்தாண்டம், பள்ளியாடி, கஞ்சிகுழி வழியாக ஆசாரிபள்ளத்திற்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 11L பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தக்கலை, கஞ்சிக்குழி, கருங்கல் வழியாகச் சென்று கொண்டிருந்த தடம் எண் 46B பேருந்து இயக்கப்படவில்லை. அதேபோன்று, முக்கியமான பகுதியான குளச்சலிலிருந்து கோணங்காடு பகுதிக்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 5 சரியாக இயக்கப்படவில்லை. அதையும் சரிவர இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திங்கள் நகர், பட்டரவிளை, வெள்ளிமலை பகுதிகளுக்குச் செல்கின்ற பேருந்தை முறையாக இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

எனது தொகுதியில் இயக்கப்பட்டு வந்த மிக முக்கியமான தடம் TSS 46–தக்கலை–மார்த்தாண்டம் பேருந்தினை இயக்க வேண்டுகிறேன். திங்கள் நகரிலிருந்து நாகர்கோவில் செல்லக்கூடிய தடம் 12–H பேருந்தினை இயக்க வேண்டுகிறேன். அடுத்து, Bus fare–ஐ நீங்கள் மறைமுகமாக உயர்த்தியிருக்கின்றீர்கள். புதிய பஸ்களைத் தந்திருக்கின்றீர்கள்; அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் தெரியாமல் பஸ்ஸில் ஏறிவிட்டு, அடுத்த stopping–ல் இறங்கினால் 11 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. நீங்கள் பஸ் கட்டணத்தை மறைமுகமாக உயர்த்தியிருக்கின்றீர்கள். அதனால், கிராமத்து மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நீங்கள் மறைமுகமாக உயர்த்தியுள்ள பேருந்துக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதியில் நிறுத்தி வைத்திருக்கின்ற முக்கியமான அனைத்துப் பேருந்துகளையும் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் மீண்டும் இயக்க நீங்கள் முன்வர வேண்டும். ஏனென்றால், உங்களது கோரிக்கையினை

2020 மார்ச் 16]

ஏற்று, இரண்டு bus depots–க்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் நிதியினைக் கொடுத்திருக்கின்றேன். எனவே, என்னுடைய கோரிக்கையினை தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார். மறைமுகமாக பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றோம் என்று சொல்கின்றார். எந்த வழித்தடத்தில் அதுபோன்று உயர்த்தப்பட்டுள்ளது என்று எழுத்துப்பூர்வமாக, ஆதாரப்பூர்வமாகக் கொடுத்தால், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று ஒரு list–ஐ அவர் என்னிடத்தில் கொடுத்திருக்கின்றார். தேவை இருக்கின்ற வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்ற உறுதியினை அவரிடம் நான் தந்திருக்கின்றேன். எனவே, முக்கியமான வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

105—

மாணவர் விடுதி

***35573—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2020 மார்ச் 16

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, பரளி அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றென்றும் வணங்கும் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பாக ஆட்சியை நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினை உரித்தாக்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, பரளி அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல், நம் அனைவருடைய இதயங்களிலும் இதயக் கோயிலாக வீற்றிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவர் வழியில் நல்லாட்சி செய்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரை வணங்கி, தங்களையும் வணங்குகின்றேன். எனது மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கின்ற ஒரு பகுதி. அந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில்தான் பில்லூர் நீர் மின் திட்டத்திற்கான அணைக்கட்டு உள்ளது. அந்தப் பகுதியைச் சுற்றி கிட்டத்தட்ட 29 குக்கிராமங்களில் சேர்ந்த ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். சுமார் 5,000 மக்கள் வாழ்ந்து வருகின்ற அந்தப் பகுதியில்தான் பரளி

2020 மார்ச் 16]

உயர்நிலைப் பள்ளி அமைந்திருக்கின்றது. அந்தப் பள்ளியில் தற்சமயம் 70 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றார்கள். அந்தப் பகுதிகளில் உள்ள அத்தனை குக்கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் அந்தப் பள்ளிக்கு வனப் பகுதியைக் கடந்துதான் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அந்தக் குக்கிராமங்களிலிருந்து ஏறக்குறைய 8–9 கிலோ மீட்டர் தூரம் பயணித்து அவர்கள் அந்தப் பள்ளிக்குச் செல்லவேண்டியுள்ளது. அப்படி அவர்கள் செல்லும்போது, அந்த அடர்ந்த வனப் பகுதியின் வழியாகத்தான் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இன்றைய சூழ்நிலையில், வன விலங்குகளின் அச்சுறுத்தல் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலுள்ள மாணவ, மாணவியர் அந்தப் பள்ளிக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. இந்த நிலையில், ஒருசில மாணவர்கள் மட்டும், புஜங்கனூர், சீலையூர் போன்ற நிலப்பரப்பில் இருக்கின்ற பள்ளிகளுக்குச் சென்று, அங்கே இருக்கின்ற தங்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கின்றார்கள். மற்ற மாணவர்கள் கல்வி கற்க இயலாத ஒரு சூழ்நிலை இன்றுவரை இருந்து வருகிறது. ஆகவே, அந்தக் குக்கிராமங்களில் இருக்கின்ற மாணவ, மாணவியர்களும் விடுதிகளில் தங்கிப் படித்தால் மட்டுமே, அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துகிற வாய்ப்பு இருக்கும். எனவே, அவர்களுடைய நலனைக் கருதி, அந்த உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி ஒன்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். இந்தக் கோரிக்கையைக் கடந்த காலத்திலிருந்து அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் வைத்து வருகின்றார்கள். எனவே, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என்பதனைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 29 விடுதிகளில், 18 பள்ளி மாணவர், மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இந்த விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 985. அவற்றில் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 640 ஆகும். இந்தக் கல்வியாண்டில்

பரளி அரசு உயர்நிலைப் பள்ளியில் மொத்தம் 35 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். அவர்களில் 20 மாணவர்கள் மட்டுமே இந்தப் பள்ளியில் கல்வி பயின்று வருகின்றார்கள். குறிப்பாக, பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த 18 மாணவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே இந்தப் பள்ளியில் கல்வி பயின்று வருவதால், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதியதாக அமைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கிற, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. கடந்த முறை மறைந்த முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அவையிலே இருந்த காலத்தில், மலைப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய வாழ்வாதாரம் பெருகுவதற்காகவும், மலைவாழ் மக்கள் உயர் கல்வி படிப்பதற்கு ஏதுவாகவும், அங்கு அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை அன்றைக்கு நான் வைத்தேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, மறுதினமே விதி 110–ன்கீழ், "மேட்டுப்பாளையம் தொகுதியில் வாழ்கிற மலைவாழ் மக்கள், ஆதி திராவிடர் மக்கள், சிறுபான்மையின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று பொருளாதாரத்தில் நசிவுற்றிருக்கிற அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்காக, அந்தப் பகுதியில் இந்தக் கல்வியாண்டிலேயே ஒரு கலைக் கல்லூரியை அமைத்துத் தருவோம்" என்று சொல்லி, மறுதினமே முதல் பருவ தேர்வுகூட நடைபெறாத ஒரு சூழ்நிலையில், ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்து, பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே, ஏறத்தாழ 3 பாடப்

பிரிவுகளோடு துவக்கப்பட்ட அந்தக் கல்லூரி, இன்றையதினத்தில் 8 பாடப் பிரிவுகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஏறத்தாழ ஆயிரம் மாணவ, மாணவியர் இன்றைக்கு அதில் பயின்று வருகின்றார்கள். குறிப்பாக, 8 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டடம் கட்டப்பட்டு, அதுவும் போதாது என்று சொன்ன நேரத்தில், இன்றைக்குக் கூடுதலாக 2 கோடி ரூபாய் நிதியை நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கி, அந்தக் கட்டுமான பணிகளும் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், அந்தக் கல்லூரி மாணவ, மாணவியரின் கோரிக்கையை இன்றைக்கு முழுமையாக நிறைவேற்றத்தக்க வகையிலே விடுதி வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும். மலைப் பகுதியில் வாழ்கிற அந்த மாணவ, மாணவியர் அந்தக் கல்லூரிக்கு வந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தொலைதூரத்திலிருந்து வந்து செல்கிற ஒரு சூழ்நிலை தற்போது இருந்து வருகிறது. ஆகவே, நீண்ட தூரத்திலிருந்து வருகிற அந்த மலைவாழ் மக்களின், ஆதி திராவிடர் மக்களின் பிள்ளைகள் தங்கிப் படிக்கின்ற வகையில், அந்தக் கல்லூரியிலாவது ஒரு மாணவர் அல்லது மாணவியர் விடுதியை இந்த ஆண்டிலேயே ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து, சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் மற்றும் துறை இயக்குநர் ஆகியோரிடம் அறிக்கை பெறப்படும். பின்னர், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்களின் மேலான அனுமதியைப் பெற்று, தேவையின் அடிப்படையில், நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11–20

2. தகவல் கோரல்

(அ) குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 14–3–2020 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பாக இஸ்லாமிய சமுதாயத்தில் இருக்கக்கூடிய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து, கடந்த 14 ஆம் தேதி, நம்முடைய தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அதில் கலந்துகொண்டிருக்கக்கூடிய அந்த அமைப்புகளினுடைய நிருவாகிகள் எடுத்து வைத்திருக்கக்கூடிய ஐயப்பாடுகள் மற்றும் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அம்சங்கள் என்ன என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள விரும்புகிறது. அதற்கு தலைமைச் செயலாளர் அவர்கள் என்ன விளக்கம் தந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிப்பது அரசின் கடமை என நான் கருதுகிறேன். எனவே, இஸ்லாமிய பெருமக்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய அந்தக் கருத்துகளை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். அதற்கான விளக்கம் என்ன என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்வது இந்த அரசினுடைய கடமை. அதே நேரத்தில் இன்னொரு வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் இஸ்லாமிய பிரதிநிதிகளை மட்டும் அழைத்துப் பேசியிருப்பது ஏன் என்ற ஒரு கேள்வியும் எழுந்திருக்கிறது. ஏனென்றால், பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்கள் இஸ்லாமிய பெருமக்கள் மட்டுமல்ல; ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் மட்டுமல்ல; இந்தியா முழுமையிலும் இருக்கக்கூடிய

2020 மார்ச் 16] [திரு. மு.க. ஸ்டாலின்]

அனைத்துத் தரப்பு மக்களும் இந்தச் சட்டத்தால் பல்வேறு வகைகளில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மக்கள் பலவித அச்ச உணர்வுகளோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இதனையும் கருத்தில்கொண்டு தலைமைச் செயலாளர் அவர்கள் கூட்டிய கூட்டத்தைப்போல தனிப்பட்ட முறையில் ஏதோ ஓர் அமைப்பைச் சார்ந்தவர்களை மட்டும் அழைத்து கூட்டத்தைக் கூட்டாமல்—இதுகுறித்து, முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், தமிழகத்திலிருக்கக்கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டி, இதுகுறித்து விவாதித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்தாக இந்த அவைக்குத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலே போராட்டம் நடத்தி வருகிற கூட்டமைப்புகளைச் சார்ந்த, ஏறத்தாழ 49 அமைப்புகளின் பிரதிநிதிகளுடன், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையிலே பேச்சுவார்த்தை 14–3–2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள் துறை, அரசு முதன்மைச் செயலாளர், பொதுத் துறை, காவல் துறைத் தலைவர், காவல் துறை ஆணையாளர், சென்னைப் பெருநகரம் உள்ளிட்ட உயரதிகாரிகளும் பங்கேற்றனர். இந்தப் பேச்சுவார்த்தையின்போது, தமிழ்நாடு இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள், தேசிய மக்கள் தொகைப் பதிவேடு–N.P.R., தேசிய குடிமக்கள் பதிவேடு–N.R.C. மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் Citizenship Amendment Act–C.A.A. ஆகியன குறித்த தங்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். சட்டமன்றத்திலே குடியுரிமைத் திருத்தச் சட்டம் குறித்து நடைபெற்றிருக்கிற விவாதத்தையொட்டியும் அவர்கள் பல கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2020 மார்ச் 16

தலைமைச் செயலாளர் அவர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு (census), தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (N.P.R.), தேசிய குடிமக்கள் பதிவேடு (N.R.C.) மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் (C.A.A.) ஆகியவற்றின் நிலை குறித்தும், மாநில அரசு அதன் அதிகார வரம்புக்குட்பட்டு எடுத்து வருகின்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அனைத்து இயக்கத் தலைவர்கள், இஸ்லாமியத் தலைவர்கள் சந்தித்தபோது தெரிவிக்கப்பட்ட கருத்துகள்– நேற்றுமுன்தினம்கூடதிண்டுக்கல்லுக்குச்செல்கிறபோது,மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலுள்ள இஸ்லாமியத் தலைவர்களைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்பின்போது அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துகளையும், சட்டமன்றத்திலே இதுகுறித்து விவாதித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துகளையும், மாநில அரசினுடைய நிலைப்பாட்டையும், அப்பொழுது தெளிவுபடுத்தினார்கள். அதுகுறித்த விவரங்களையும் அவர்களிடத்திலே எடுத்துரைத்திருக்கிறார்கள். அவர்களும் அந்தக் கருத்துகளைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார்கள்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்பது வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறியவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வழிவகுக்கும் சட்டத் திருத்தமாகும் என்பதையும், இந்தியக் குடிமக்கள் எவருக்கும் இந்தச் சட்டத் திருத்தத்தால் பாதிப்பு ஏதும் இல்லை என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது என்பதையும், நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, இதுகுறித்து அப்போது எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கெல்லாம் தலைமைச் செயலாளர் அவர்கள் தெளிவாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். குடியுரிமை விதிகள், 2003–ன்கீழ், 2010 ஆம் ஆண்டு முதன்முதலாக தேசிய மக்கள் தொகைப் பதிவேடு தயாரிப்பதற்கான கணக்கெடுப்பு, இந்தியா முழுவதும் நடைபெற்றது. இது புதிதாக நடைபெறவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். 2010 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் 2015 ஆம் ஆண்டில் இதனை மேம்படுத்துவதற்கு–மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விதியின் அடிப்படையிலேதான் தேவையானவற்றைச் சேர்க்கலாம், தேவையானவற்றை நீக்கலாம் என்பதன் அடிப்படையில்தான்–இந்த மூன்று புதிய அம்சங்கள்

2020 மார்ச் 16] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

சேர்க்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த மூன்று புதிய அம்சங்கள் எவையென்று அவையிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள். இந்த நாடும் நன்றாக அறியும்.

முற்பகல் 11–25

இந்த நிலையிலேதான், தமிழக அரசு எழுப்பியுள்ள சந்தேகங்கள், நாம் ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல இதனை நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த மூன்று புதிய அம்சங்களைக் குறிப்பிட்டு, மத்திய அரசிடம் விளக்கம் கேட்டிருக்கிறோம். அதை ஒட்டியே 12–3–2020 அன்று பாராளுமன்ற மேலவையில் எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. கபில் சிபில் உட்பட பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு இந்தத் துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் "தேசிய மக்கள் தொகைப் பதிவேடு சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் கேட்கப்படுவதில்லை" என்றும், "பொது மக்களிடம் கேட்கப்படும் விவரங்கள் இல்லையெனில், அதற்கான பதிலை அளிக்கத் தேவையில்லை" என்றும், " 'D' doubtful என்ற பிரிவு N.P.R–ல் இடம் பெறாது" என்றும், "எனவே தேசிய மக்கள் தொகைப் பதிவேடு குறித்து அச்சம் தேவையில்லை" என்றும் பாராளுமன்றத்தில் பதிலளித்துள்ளார்கள். பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, திரு. கபில் சிபில் அவர்கள் கேட்ட கேள்விக்கும், மூத்த எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும், நம்முடைய மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள், தெளிவாக பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் கேள்விகள் கேட்டபோது, "கபில் சிபில் அவர்கள் கட்சியைச் சார்ந்த எத்தனையோ தலைவர்கள் உரையை மேற்கோள் காட்ட இயலும்" என்று மாண்புமிகு அமித் ஷா அவர்கள் சொல்லி, அதற்கு விளக்கம் சொல்கின்றார்கள்.

தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டில் ஆவணங்களைக் கேட்பார்கள் என்று சிலபேர் குறிப்பிட்டிருக்கிறார்கள். "என்னால் வெளியிடப்பட்ட (மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட) செய்திக்குறிப்பில், தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டில் ஆவணங்கள் கேட்கப்பட மாட்டாது" என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. "இதற்கு முந்தைய தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டிலும், ஆவணங்கள் கேட்கப்படவில்லை,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2020 மார்ச் 16

இதிலும் தேவையில்லை." "தகவல் இல்லையென்றால் என்ன செய்வது?" என்று கேட்டீர்கள். மேற்சொன்ன செய்திக் குறிப்பில், இதைப்பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "தகவல் அளிப்பது உங்கள் விருப்பம்" என்று மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பிறகு, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள் சொல்கிறார், "அப்படியென்றால் யாதொரு பிரச்சினையும் எங்களுக்கு இல்லை, ஆனால் மக்களிடம் நீங்கள் இதைத் தெளிவுபடுத்தவில்லை" என்று மறுபடியும் ஒரு கேள்வியைக் கேட்கின்றார்கள். அதற்கு மறுபடியும் மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார், "அய்யா, நீங்கள் என் பேச்சை இதுவரை கேட்கவில்லையென்றால், இப்போது தெளிவாகக் கூறுகிறேன், கேளுங்கள். தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டில் யாதொரு ஆவணமும் கேட்கப்படுவதில்லை; இரண்டாவது, உங்களிடம் கேட்கப்படும் விவரங்கள் இல்லையெனில், நீங்கள் அளிக்க வேண்டாம். மூன்றாவது, 'D' பிரிவு இடம் பெறாது. நாட்டில் தேசிய மக்கள் தொகைப் பதிவேடு குறித்து யாரும் அச்சப்படத் தேவையில்லை" என்று மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தி, "D பிரிவில் எதையும் சேர்க்க மாட்டோம், என்பதையும் அவையில் தெளிவாகக் கூறிவிடுங்கள்" என்பதையும் சொல்லியிருக்கிறார்கள், மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறபோது, "நான்தான் அவையில் கூறிவிட்டேனே!" என்று மறுபடியும் அவையில் இந்த விவாதம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

ஆகவே, இதுகுறித்து, சிறுபான்மையின மக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற அந்த அச்சத்தைக் குறைக்கின்ற வகையிலும், பதற்றத்தைத் தணிக்கின்ற வகையிலும், சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்றுகின்றவகையிலும், Delhi–யில் நடைபெற்றது போன்ற சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெறாவண்ணம், அமைதிப் பூங்காவான தாய்த் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மக்களையும் காப்பாற்றுகின்ற நோக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையோடு, தலைமைச் செயலாளர் அவர்கள் இந்தக் கூட்டத்தை நடத்தினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்; நடந்த விவரத்தை நான் தற்போது சொல்லியிருக்கின்றேன். இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தியிருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்கு இருப்பது அனைவரும் அறிந்த

2020 மார்ச் 16] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

ஒன்று. இந்த வழக்கில் இதுவரை தீர்வு காணப்படவில்லை. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இங்கிருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் இது தொடர்பாக சட்டமன்றத்திலே தொடர்ந்து பல்வேறு ஐயங்களை எழுப்பியபோதும், பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தபோதும், அச்சத்தைத் தெரிவித்தபோதும், "இதுவரையில் இல்லாதவகையில், சிறுபான்மையின மக்களுக்கு நாங்கள் பாதுகாப்பு அரணாக இருப்போம்" என்று தெளிவான கருத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணித்தரமாக, உறுதியாகத் தெரிவித்ததோடு, "30 ஆண்டுகளாக எப்படி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பாதுகாப்பாக இருந்ததோ, அதே நிலைதான் தொடரும்; அச்சப்படத் தேவையில்லை" என்று இந்தச் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் போன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கேட்டபோதும் தெளிவுபடுத்தியும் இருக்கிறார். இதுகுறித்த விவாதங்கள் இங்கே நடந்திருக்கின்றன; இங்கே நடைபெற்ற தொடர் விவாதங்களிலே பல்வேறு கருத்துகளை பலர் முன்வைத்திருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இங்கே விவாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பொருள் குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் என்பது தேவையா என்பதை நாம் இப்போது கருத்தில்கொள்ள வேண்டும்.

முற்பகல் 11–30

ஆகவே, நான் மீண்டும் சொல்கிறேன்; இது ஒரு உணர்வுபூர்வமான பிரச்சினை; இதுகுறித்து மக்கள் அச்சத்தில் இருக்கக் கூடாது என்கிற அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். நேற்றைய முன்தினம்கூட திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களையும் நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். 1 மணி நேரம் அவர்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டது. தேனி மாவட்டத்திலே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அனைத்து இஸ்லாமிய சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசியுள்ளார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையிலே அனைத்து இஸ்லாமிய சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசியுள்ளார்கள். இதனுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2020 மார்ச் 16

நாடாளுமன்றத்திலே இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு உள் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மீண்டும் சொல்கிறோம்; சிறுபான்மையின மக்கள் எங்கள் உறவு; எங்கள் இரத்தம்; இது அவர்கள் தேசம்; அவர்கள் இந்த நாட்டினுடைய மக்கள்; இந்த நாட்டினுடைய பிள்ளைகள்: எனவே, அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. அம்மாவினுடைய அரசில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக, அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? இதுவா அல்லது வேறு பிரச்சினையா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் பாதிப்பு விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் இது பரவியிருக்கிறது. அதனால் மக்கள் மத்தியிலே பொதுவாக பெரிய அளவில் அச்சம் ஏற்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் இதே பேச்சாகத்தான் இருக்கிறது. கேரளத்திலும், ஒடிசாவிலும் சட்ட மன்றக் கூட்டத் தொடரையே தள்ளி வைத்திருக்கிறார்கள். ஆந்திராவில் உள்ளாட்சி மன்றத் தேர்தலையே 6 வாரம் தள்ளிவைத்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது நம்முடைய மாநிலத்திலும் சில திட்டங்களை அமல்படுத்த வேண்டும். பள்ளிக்கூடங்களுக்கு leave விடுவதே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதாவது L.K.G. முதல் 5 ஆம் வகுப்புவரை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதனைக் கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் சரியாக இருக்கும். இரண்டாவது, இவற்றையெல்லாம் மூடி வைத்தால் கொஞ்ச நாளைக்கு நன்றாக இருக்கும். மூன்றாவதாக, ஒன்று சொல்கிறேன், இங்கே சட்டசபையிலேயே உள்ளவர்களையும் பாருங்கள். முதலில் வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு எல்லாம் சரியான பரிசோதனை இல்லை. இப்படி, அப்படி என்று பார்த்துவிட்டு அனுப்பி விட்டுவிடுகிறார்கள்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாக ஓர் அறிவிப்பு தரவிருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களையெல்லாம் சரியாக பரிசோதனை செய்யாமல் உடனே பார்த்துவிட்டு அனுப்பிவிடுகிறார்கள். அப்படி வருபவர்களை hospital–லில் தனியாக வைத்து, 14 நாட்கள் பொறுத்துதான் அவர்களை அனுப்ப வேண்டும். அதுமட்டுமல்ல; சென்னையிலே மட்டும்தான் ஜுரம் இருக்கிறதா என்றுபரிசோதித்துப்பார்க்கிறார்கள். எனவே, எல்லாகிராமங்களிலும், ஒன்றியங்கள் அளவிலும் இதுபோன்று பரிசோதிக்கின்ற வசதி பரவலாக வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, நம் அரசியல் கட்சிகளே, கூட்டங்களைக் கூட்டுவது, கும்பல் சேர்ப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டுமென்றும், மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக, முன்னோடியாக நாம் இருக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். SAARC மாநாட்டிலே எப்படி தலைவர்களெல்லாம் பேசிக்கொண்டார்களோ, அதேபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பக்கத்தில் இருக்கின்ற மாநில முதலமைச்சர்களுடன் பேசி, என்ன செய்யலாம் என்று கேட்கலாம்.

அடுத்ததாக, எங்களுடைய வேலூர் மாவட்டம் மிகவும் danger–ல் உள்ளது. ஏனென்று கேட்டால், அங்குள்ள hospital–க்கு வடமாநிலங்களிலிருந்து ஒரு நாளைக்கு 300 பேர் வந்து செல்கிறார்கள். அதேமாதிரி கேரளாவிற்கும் இங்கிருந்து போய் வருகிறார்கள். கேரளாவிற்கு direct connection வேலூர்தான். நீங்கள்போய்ப் பார்த்தால் தெரியும். CMC மருத்துவமனையில் இருக்கின்ற நர்ஸ்களில் 100–க்கு 90 பேர் கேரள மாநிலத்துக்காரர்கள். ஆகையினால், கேரளாவிலிருந்து வருகிறார்கள் என்றால் எங்களுக்கு பயமாகத்தான் இருக்கிறது. அண்டை மாநிலத்தைச் சார்ந்த சித்தூர் பகுதி எங்கள் மாவட்டத்திற்கு அருகில் உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, இதுபற்றியெல்லாம் பேசுவதற்கு, சர்வகட்சிக் கூட்டம் கூட்டுங்கள் என்றால், கூட்ட மாட்டீர்கள். ஆகையினால், atleast உங்கள் தலைமையிலே இந்தச் சட்டமன்றத்தில் இங்கிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களையாவது அழைத்துப் பேசுங்கள்; அதையும் செய்ய மாட்டேன் என்றால், atleast B.A.C–Business Advisory Committee–யையாவது கூட்டி, மறுபடியும் கலந்துபேசி, ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. துரைமுருகன்] [2020 மார்ச் 16

ஆனால் ஒன்று; எல்லோரும் உயிரை கையில் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) ஆமாம்; உள்ளபடியே சொல்கிறேன். அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘60 வயதிற்குமேல் இருப்பவர்களுக்குத்தான் danger’ என்று கூறினார். இன்றைக்கு அதைத்தான் செய்தியாகப் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) (சிரிப்பு) ஆமாம்; நமக்கென்ன போச்சு; எனக்கு வயது 45. (சிரிப்பு) இரயிலில் போர்வையே கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். படிக்கட்டு கைப்பிடியைப் பிடித்து ஏறக் கூடாது என்கிறார்கள். இதுமாதிரியெல்லாம் நிலைமை இருக்கிறது. சோப்பால் அடிக்கடி கையைக் கழுவ வேண்டும் என்கிறார்கள். எத்தனை முறைதான் கழுவுவது? மூக்கில் கையை வைக்கக் கூடாது என்கிறார்கள். பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஒன்று உயிரை விடவேண்டும் அல்லது காப்பாற்றிக்கொள்ள வேண்டும். (சிரிப்பு) இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்; நாம்தான், அரசாங்கம்தான் மக்களைக் காப்பாற்ற வேண்டும். இந்த அரசுதான் காப்பாற்ற வேண்டும். ஆகையினால், அறிக்கை படிப்பதோடு விட்டுவிடாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. துரைமுருகன்: மக்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எவ்வளவு பெரிய serious ஆன விஷயமாக இருந்தாலும்கூட, தனக்கே உரிய நகைச்சுவை உணர்வோடு அதனைத் தெரிவிப்பார்; சட்டமன்றப் பேரவையில் பல்வேறு சந்தேகங்களை தனக்கே உரிய பாணியில் இன்றைக்குச் சொல்லியிருக்கிறார். நல்ல விஷயம்தான். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, “60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு danger” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக இப்பேரவையில் பதிய வைத்திருக்கிறார்கள். உலக சுகாதார நிறுவனமும், Union

2020 மார்ச் 16] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

Health Ministry; அதாவது, மத்திய சுகாதாரத் துறையும் நமக்கு அறிவுறுத்தியதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது, 70 வயதுக்கு மேற்பட்டவர்கள், வெளியில் போகும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென்று அவை அறிவுறுத்தியிருக்கின்றன. சீனாவில், Wuhan பகுதியில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 80,000–க்குமேல் இருந்தது. அதில் 20–தான் Paediatric cases. அதாவது, 20 என்ற எண்ணிக்கை அளவிற்குத்தான் சிறு குழந்தைகள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். எஞ்சிய நபர்களில் அதிகமானோர் 70 வயதிற்குமேல் உள்ளவர்கள். அவர்களுக்குத்தான் அந்தப் பாதிப்பு இருந்தது. அந்தக் காரணத்தினால்தான், 70 வயதிற்குமேல் இருப்பவர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும்; வெளியில் போவதைத் தவிர்க்க வேண்டும்; பொது இடங்களுக்குப் போகும்போது கைகளைக் கழுவ வேண்டும்; நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், immunity குறைவாகவுள்ள நபர்கள் mask அணிய வேண்டுமென்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருந்தது. அந்தக் கருத்தைத்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, 'பயம், அச்சம் இருக்கிறது; அரசுதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்' என்றார். அரசின்மீது தாங்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு, நிச்சயமாக, முழுமையாகக் காப்பாற்றும். எந்தவிதமான அச்சமும், பயமும் தேவையில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்காக, இதுவரை அரசு (குறுக்கீடு) மேடம், நான் பேசி முடித்தபிறகு, நீங்கள் உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்து அரசுத் துறையின் செயலாளர்களையும் அழைத்து, ஒரு மணி நேரம் நீண்ட ஆய்வினை நடத்தினார். உலக சுகாதார நிறுவனம் மற்றும் மத்திய அரசிடமிருந்து நமக்கு என்னென்ன guidelines வந்திருக்கின்றன என்பதையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 60 கோடி ரூபாய், மாநிலப் பேரிடர் நிவாரண

நிதியிலிருந்து ஒதுக்கி, அதில் சுகாதாரத் துறைக்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த 60 கோடி ரூபாயையும் உடனடியாக release செய்து விட்டார்கள். அந்தத் தொகையைக்கொண்டு, நாம் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க இயலும். அதாவது, மருத்துவமனைகளில் கூடுதலாக Isolation ward அமைப்பதற்கும், disinfection–ஐ effective ஆக செய்வதற்கும், போக்குவரத்துக் கழகம் என்றால், பஸ்சை sterile ஆக wash செய்வதற்கும், 60 கோடி ரூபாய் fund–ஐ release செய்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, வேலூர் மாவட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அவர் சொல்வது உண்மைதான். வேலூர் மாவட்டத்தை ஒட்டி கேரளா மற்றும் ஆந்திரா border இருக்கின்ற காரணத்தினால்தான், 16 மாவட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். பொது மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களான shopping mall, கல்யாண மண்டபம், தியேட்டர் ஆகியவற்றை 16 மாவட்டங்களில் மூடச் சொல்லியிருக்கிறோம். அதில், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களும் இருக்கின்றன. அதில், வேலூர் மாவட்டமும் இருக்கின்றபடியால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு பயம் வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, C.M.C. மருத்துவமனையைப்பற்றியும் தெரிவித்தார். மருத்துவமனை முழுமையாகச் செயல்பட வேண்டுமென்பதற்காக, essential, non–essential services என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும். சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரையிலும், கிட்டத்தட்ட 40,000 நபர்கள் வருகின்றார்கள். அதில் ஒரு நாளைக்கு 15,000 நோயாளிகளே வருகின்றார்கள். அரசு செயல்பட வேண்டும்; தலைமைச் செயலகம் செயல்பட வேண்டும்; அரசின் நிருவாகம் மிகச் சீராக இயங்க வேண்டும். ஆகவே, இவையெல்லாம் essential. அதே நேரத்தில் தேவையற்ற இடங்கள், அதாவது, shopping mall–ல் over crowd இருக்கக் கூடாது என்பதற்காக, அந்த இடங்களை Non–essential என வைத்து, நாம் தவிர்க்க வேண்டுமென்று சொல்கிறோம். எனவே, மக்கள் பதட்டமோ அல்லது பீதியோ அடையத் தேவையில்லை. இருந்தாலும், அவர்கள் மிகவும் கவனத்தோடு, கண்ணும் கருத்துமாக, எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அரசு ஊடகத் துறையின்

2020 மார்ச் 16] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மூலமாகவும் தொடர்ந்து சொல்லி வருகிறது. ஊடகத் துறையினரும் இதனை வலியுறுத்தி செய்திகளை வெளியிடுகின்றார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்குப் பிறகு, நேற்று International Airport–ல், கிட்டத்தட்ட 2½ hours, நானும், Commissioner of Revenue Administration மற்றும் அரசுச் செயலாளர் ஆய்வு செய்தோம். மத்திய அரசு அதிகாரியும் நேரில் வந்து பார்த்து, தமிழகத்தில் proper ஆக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிவித்தார்கள். எல்லோருடனும் interact செய்தோம். சரியாகச் செயல்பட்டு வருகிறோம். Union Ministry மற்றும் உலக சுகாதார நிறுவனத்திலிருந்து நமக்கு advice, protocol கொடுக்கின்றார்கள். எந்த country–யிலிருந்து வருகின்றார்களோ, அவர்களை நாம் எப்படி screen செய்ய வேண்டுமென்றும், யாரை quarantine செய்ய வேண்டுமென்றும் சொல்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னர் நம்முடைய list–ல் மலேசியா மற்றும் சிங்கப்பூர் இருந்தது. இப்போது மலேசியா மற்றும் சிங்கப்பூரை விட்டுவிடுங்கள் என்கிறார்கள். இப்போது list–ல் அந்த நாடுகள் இல்லை. எனவே, அவர்கள் எதைச் சொல்கிறார்களோ அதனை proper–ஆக, effective–ஆக, continuous monitoring என்ற முறையில் நாங்கள் தொடர்ந்து செய்துவருகிறோம்.

இரண்டு மாநிலங்களில் சட்டமன்றம் நடைபெறவில்லை என்று சொன்னீர்கள். இப்போது பாராளுமன்றமே நடந்து கொண்டிருக்கின்றது. டெல்லியில் பாதிப்பு இருக்கிறது. அங்கு ஒரு death ஏற்பட்டது. கர்நாடகா மாநிலத்தில் ஒரு death ஏற்பட்டது. இருப்பினும், பாராளுமன்றம் நடந்து கொண்டிருக்கின்றது. அதுகுறித்து முடிவு செய்ய இன்று மாலை அவர்கள் ஒரு கூட்டம் நடத்த இருக்கிறார்கள். ஆகவே, உலக சுகாதார நிறுவனம் மற்றும் மத்திய அரசு நமக்கு minute to minute அறிவுரை வழங்குகிறார்கள். ஒவ்வொரு நாளும், அவர்கள் என்ன அறிவுரை வழங்குகிறார்களோ, அதன்படி நாங்கள் செயல்படுகின்றோம். இருந்தாலும்கூட, தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 5 ஆம் வகுப்பு வரை மூடப்பட்டிருக்கின்றன. 16 மாவட்டங்களில் முழுமையான கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று, காவல் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அதன்படி, check posts அமைக்கப்பட்டுள்ளன. காவல் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் வருவாய்த்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 மார்ச் 16

துறையினர் இணைந்து குறிப்பாக, கேரளா போன்ற அண்டை மாநிலங்களின் அருகில் உள்ள இடங்களில் check posts–ஐ அமைத்து, round the clock, 24 x 7 என்ற முறையில் monitor செய்து வருகிறோம். நிலைமை கட்டுக்குள் இருக்கின்றது. தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு சிறப்பாக எடுத்து வருகின்றது. எனவே, தயவு செய்து பொது மக்கள் பதட்டமோ, பயமோ மற்றும் பீதியோ அடைய வேண்டிய தேவையில்லை. அதேபோன்று, அடிக்கடி கைகளைச் சுத்தம் செய்ய வேண்டியது குறித்தும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அது மிக மிக அவசியமானது மட்டுமல்ல; மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

முற்பகல் 11–40

மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோரியதற்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒவ்வொரு நாளும் காலையில், பொது சுகாதாரத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி மூலமாக total–ஆக disinfection செய்கிறோம். அதோடு, அனைவரையும் monitor செய்கிறோம்; screen செய்கிறோம்; Restrict செய்துதான் allow செய்கிறோம். எனவே, அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்த காரணத்தால்தான், தமிழகத்தில் இதுவரை ஒரே ஒரு imported case, ஒரே ஒரு positive case வந்திருக்கிறது. மஸ்கட் நாட்டிலிருந்து வந்த ஒருவருக்கு மட்டும் நோய்த் தொற்று இருந்தது. அவரும், இன்று மாலை discharge செய்யப்படுகிறார் என்ற நல்ல தகவலினை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுதவிர, இந்த நிமிடம் வரை புதியதாக யாருக்கும் இந்த வைரஸ் தாக்குதல் இல்லை என்கிற நிலையை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்கின்றபோது, இதே நிலை தொடரும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 16]

(இ) திருவாரூர், தொற்று நோய்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், சொல்வதைக் கேளுங்கள். சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தெரிவித்துவிட்டார். மீண்டும் அதே பொருள் குறித்துப் பேச முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு வேறு அலுவல்கள் நிறைய இருக்கின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய, திருவாரூர் நகரப் பகுதியில் 9 ஆம் தேதி முதல் இன்றுவரை, வாந்தி மற்றும் பேதி போன்ற தொற்று நோய்களால் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது, ஒட்டுமொத்த திருவாரூர் நகரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதுதவிர திருவாரூர் நகரத்திற்கு வேலைவாய்ப்பு தேடிவரும் மக்கள், குடிநீர் பருகியவர்கள் மற்றும் உணவுக் கூடங்களில் உணவு அருந்தியவர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

[2020 மார்ச் 16

திரு. பூண்டி கி. கலைவாணன்: அங்கே நோய்த் தொற்று தொடர்ந்து பரவிக் கொண்டிருக்கிறது. இதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில், A.D.D.–Acute Diarrhoeal Disease; அதாவது, வயிற்றுப் பிரச்சினை குறித்த ஒரு சின்ன outbreak. அதற்கு பிறகு பொதுச் சுகாதாரத் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், அம்மையார்பட்டி என்ற பகுதியில் உள்ள குடிநீர் குழாயில் leakage ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்து, அந்த leakage–ம் உடனடியாகச் சரி செய்யப்பட்டுவிட்டது. மொத்தம் 33 நபர்களுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. அதில், 10 நபர்கள் திருவாரூர் அரசு மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், 5 நபர்கள் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று, நலமுடன் இருக்கிறார்கள். மேற்கொண்டு நோய்த் தொற்று எதுவும் பரவவில்லை. Static ஆக மருத்துவர்கள் மற்றும் செவிலியர் அடங்கிய team ஏற்கெனவே அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கோரிக்கையை வைத்தவுடன், கூடுதல் கவனத்துடன், அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. வேறு எந்தவிதமான நோய்த் தொற்றும் அங்கே ஏற்படவில்லை. தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு அங்கே எடுத்திருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் நலமோடு இருக்கிறார்கள். நோய்த் தொற்று உருவான அந்த இடம் முற்றிலுமாகச் சரிசெய்யப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் நகர், தண்டி யாத்திரை நினைவுப் பேரணியில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: “12–3–2020 அன்று கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் நகரில், தண்டி யாத்திரை நினைவுப் பேரணியில் நடைபெற்ற நிகழ்வு குறித்து” இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் ஆகியோர் விதி 55 மற்றும் விதி 56–ன்கீழ், கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை நான், சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.

இதுகுறித்து, அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களில் ஒருவர் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கவனத்திற்கு குளச்சல் நகரில் நடைபெற்ற நிகழ்வை நான் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்தில் எத்தனையோ நிகழ்வுகள், போராட்டங்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் நடந்தபோது இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை. எங்களுடைய மாவட்டத்திலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை. நான் கலந்துகொண்ட கூட்டங்கள் உட்பட, எந்தக் கூட்டங்களிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை. இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் உப்பு சத்தியாகிரகத்திற்காக தண்டி யாத்திரை நடத்திய நாளை, நினைவுகூர்கின்ற வகையில், 12–3–2020 அன்று குளச்சல் நகரிலிருந்து இரணியல் வரை சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாத யாத்திரை செல்ல காங்கிரஸ் கட்சி, சம்பந்தப்பட்ட குளச்சல் காவல் நிலையத்தில் அனுமதி கோரியது. அதற்கு அனுமதி தாருங்கள்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2020 மார்ச் 16

என்றும் கேட்டோம். முதலில், 18 ஆம் தேதி அனுமதி தரப்படும் என்று காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

முற்பகல் 11–45

இந்த நிலையில், 12 ஆம் தேதி குளச்சல் நகராட்சிப் பகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இளைஞர் காங்கிரஸ் மற்றும் முக்கிய அமைப்பினர் அனைவரும் ஊர்வலமாகச் செல்வதற்கு சேர்ந்து நின்று கொண்டிருந்தனர். பாதயாத்திரை என்பதால் கோஷம்கூட போடக் கூடாது.அமைதியாகபதாகைகளைஏந்திக்கொண்டுநடக்கவேண்டும். அந்த இடத்தில் அவர்கள் எல்லாம் கூடியிருக்கின்றபோது, திடீரென்று அங்கு போலீஸ் follow செய்து வந்து நிற்கின்றார்கள். பின்னர், பாத யாத்திரைக்கு அனுமதி இல்லை என்று சொல்கின்றார்கள். அப்போது இளைஞர் காங்கிரஸ் அன்பர்கள், "எங்களது பாத யாத்திரைக்கு ஏன் அனுமதி தரக் கூடாது? மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையைத்தான் நாங்கள் நினைவுகூருகிறோம்; ஆகவே, எங்களுக்கு அனுமதி தாருங்கள்" என்று அவர்களிடத்தில் கெஞ்சிக் கேட்டார்கள். அவர்கள் அப்படிக் கேட்ட பிறகும் அவர்களுக்கு காவல் துறையினர் அனுமதி வழங்கவில்லை. அங்கு கூடியிருந்த சுமார் 21 இளைஞர் காங்கிரஸ் அன்பர்களை, மிருகத்தினைக் கட்டுவது போல கயறுகளால் சுற்றி வளைத்து, மிருகத்தனமாக லத்தியால் அடித்தார்கள். இதுபோன்று, ஒரு சம்பவம்—போராட்டம் நடக்கின்றபோது, அதில் கலந்துகொள்பவர்களை அழைத்துக் கொண்டுபோய் ஏதேனும் ஒரு மண்டபத்தில் வைப்பார்கள். பிறகு ஏதேனும் ஒரு petty case போட்டு அன்று மாலையே விடுவித்துவிடுவார்கள். ஆனால், இதற்கு நேர்மாறாக அவர்களை காவல் துறையினர் வேனில் ஏற்றி, மிருகத்தனமாக கம்புகளால் தாக்கியிருக்கிறார்கள். "வாழக் கூடாது தொலைந்து போ" என்றும், "என்ன காங்கிரஸ்காரர்கள்?" என்றும் மிக மோசமாகப் பேசியுள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ரொம்ப deep ஆகப் போகாதீர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்திற்கு உள்ளே கொண்டுசென்றும் அடித்திருக்கிறார்கள். எந்தக் குற்றமும் செய்யாத அவர்களை, பாத யாத்திரைக்கு அனுமதி கொடுக்காத சூழ்நிலையில், காவல் உதவியாளர் திரு. சுதீத் ஆனந்த் அவர்களும், திரு. வேணு என்ற

2020 மார்ச் 16] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

தலைமைக் காவலரும் மற்ற காவலர்களும் இதனைச் சொல்லி சொல்லி காயப்படுத்தியிருக்கிறார்கள். இதில் உள்நோக்கம் இருக்கின்றது. எனவே, அவர்களை காயப்படுத்திய அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள்மீது புனையப்பட்ட குளச்சல் காவல் நிலையக் குற்ற எண் 85, 86 வழக்குகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் கேட்டு, இதனை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் காந்தியடிகள் தண்டி யாத்திரை சென்றதன் நினைவாக இளைஞர் காங்கிரஸ் சார்பில் 12–3–2020 அன்று கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் காமராஜர் சிலை சந்திப்பிலிருந்து இரணியல் சந்திப்பு வரை அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் திரு. லாரன்ஸ் என்பவர் பாத யாத்திரை செல்ல அனுமதி கோரி கடந்த 10–3–2020 அன்று குளச்சல் காவல் நிலையத்தில் மனு அளித்திருந்தார். பாத யாத்திரை செல்லவுள்ள சாலை போக்குவரத்துக்கு நெருக்கடியான சாலை என்பதாலும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதாலும், பாத யாத்திரைக்கு அனுமதி மறுத்து அதற்கான குறிப்பாணையை காவல் துறையினர் அவரிடம் வழங்கியுள்ளார்கள். அதனையும் மீறி 12–3–2020 அன்று பாத யாத்திரை செல்வதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டு வந்ததால், அப்பகுதியில் காவல் துறையினர் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தனர். இந்நிலையில், அன்றையதினம் குளச்சல் அண்ணா சிலை சந்திப்பு அருகே காங்கிரஸ் கட்சி கிழக்கு மாவட்டத் தலைவர் திரு. ராதாகிருஷ்ணன் தலைமையில் இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த சுமார் 25 பேர் கூடியுள்ளனர். அப்போது அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினர் அனுமதி இல்லாமல் பாத யாத்திரை மேற்கொள்ளக் கூடாது என மீண்டும் கூறியதையடுத்து, அவர்கள் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட அனுமதி கோரினர். அதனை ஏற்றுக்கொண்ட காவல் துறையினர் அதற்கு மட்டும் அனுமதி அளித்தனர்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 16

இதற்கிடையே அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் திரு. லாரன்ஸ் தலைமையில் 21 இளைஞர் காங்கிரசை சேர்ந்தவர்கள் காமராஜர் சிலையிலிருந்து சற்று தொலைவில் அமைந்துள்ள அண்ணா சிலை சந்திப்பு அருகே அனுமதியின்றி கூடி பாத யாத்திரை செல்ல முற்பட்டனர். அப்போது, காவல் துறையினர் அவர்களிடம், “அனுமதியின்றி பாத யாத்திரை செல்லக் கூடாது என்று கூறி, அவர்களை கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர். ஆனால், அவர்கள் காவல் துறையினரின் அறிவுரையினை ஏற்க மறுத்து, பாத யாத்திரை செல்ல முற்பட்டபோது, அவர்களை காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். அப்போது அவர்கள் காவல் துறையினரை அவதூறாகப் பேசியதோடு மட்டுமல்லாமல், போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். சாலை மறியல் போராட்டத்தினைக் கைவிட்டு கலைந்துசெல்லுமாறு அவர்களை காவல் துறையினர் பலமுறை கேட்டுக்கொண்டும், அவர்கள் கலைந்து செல்லாததால், காவல் துறையினர் அவர்களை அப்புறப்படுத்த முற்பட்டனர். இதற்கும் அவர்கள் ஒத்துழைக்காமல் காவல் துறையினரோடு வாய்த் தகராறில் ஈடுபட்டும், பணி செய்யவிடாமல் தடுத்தும், தாக்கியும் உள்ளனர். இச்சம்பவத்தில் 4 காவல் ஆளினர்கள் காயமடைந்தனர். ஒரு காவல் வாகனத்தின் கண்ணாடியும் சேதமடைந்தது. இதனையடுத்து காவல் துறையினர் அவர்களைக் கைது செய்தனர். இச்சம்பவத்தில் காயமடைந்த காவல் ஆளினர்கள் ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முற்பகல் 11–50

கைது செய்யப்பட்ட 21 பேர்களில், லாரன்ஸ் உள்ளிட்ட 6 பேர் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 15 பேர் காவல் நிலையப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அனுமதியின்றி கூடி, பாத யாத்திரை செல்ல முயன்று சாலை மறியலில் ஈடுபட்டது தொடர்பாகவும், காவல் துறையினரைப் பணி செய்ய விடாமல் தடுத்து தாக்கியது தொடர்பாகவும் போராட்டக்காரர்கள்மீது 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் திரு. லாரன்ஸ்மீது 2 அடிதடி வழக்குகளும், 2 எரிசாராயக் கடத்தல் வழக்குகளும் ஏற்கெனவே நிலுவையிலிருந்து வருவதுடன், அவர்மீது போக்கிரி சரித்திரப் பதிவேடும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 16] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள் என்று சொன்னார். காவல் துறையினருக்கும், அவர்களுக்கும் எந்த ஒரு கருத்து வேறுபாடும், எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, போக்குவரத்து நெரிசல்மிக்க சாலையாக அது இருக்கின்ற காரணத்தினால், அங்கு பேரணிக்கு அனுமதி கொடுக்க மறுத்திருக்கின்றார்கள். அவர்கள் ஒத்துழைப்பு நல்கியிருந்தால், இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. எனவே, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் தடியடி எதுவும் போலீசாரால் நடத்தப்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 14–3–2020 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு அதில் கேள்வி எதுவுமில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடு) என்ன, திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் நானும் பங்கேற்றேன். எனக்கு ஒரு வாய்ப்பு தருவீர்கள் என்று நினைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) zero hour முடிந்துவிட்டது.

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)

4. அறிவிப்புகள்

(அ) கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சட்டமன்றத்தில் பார்வையாளர்களுக்கு தற்காலிகமாக அனுமதி மறுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக சட்டமன்றத்தில் பார்வையாளர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த உத்தரவிட்டிருந்தேன். இன்று பிற்பகல் முதல் மறு உத்தரவு வரும் வரை பேரவை நிகழ்ச்சிகளைக் காண தற்காலிகமாக பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) 'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் நிலையினை எய்திட நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள நான்கு அறிவிக்கைகளின் மென்பொருள் நகல் மின்னஞ்சல்மூலம் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 'காகிதமில்லா சட்டமன்றம்' என்னும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள அவைமுன் வைக்கப்படும் ஏடுகளில் உள்ள 4 அறிவிக்கைகளின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிவிக்கைகளில் தலா 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

[2020 மார்ச் 16

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சட்டமுன்வடிவை voting விடுவதற்கு முன்பே raise செய்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, கை தூக்கியிருந்தால் நான் allow செய்திருப்பேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், சொல்லுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் 'உடல் ஊனமுற்ற நபர்களுக்காக' என்று போட்டிருக்கிறார்கள். 'மாற்றுத் திறனாளி' என்று அது மாற்றப்பட வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவில் உடல் ஊனமுற்றவர்கள் என்று வருவதை மாற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

(ஆ) தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(இ) கோரிக்கை எண் 53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.555,41,89,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 34, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 304, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 358, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 419, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 549, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1219, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1465, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1642, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1715, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2349, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2668, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3239, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3475, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3794, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3802, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3880, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4111, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4608, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5427, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5585, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6107, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6598, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7605, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7821, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7872, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8248, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8584, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 710, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 764, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1165, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1376, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 811, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம்.

திரு. கு.க. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஆயிரம் விளக்கு தொகுதி, மண்டலம் 9–ல் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலில் இருபாலரும் உபயோகிக்கும் வகையில் தனித்தனியாக கழிப்பிட வசதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 983, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சியில் செயல்பாட்டிலுள்ள மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை கிராமப்புறங்களுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1421, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1802, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் நகராட்சிப் பகுதியில் புதிய LED மின் விளக்குகளை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2060, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கூத்தாநல்லூர் நகராட்சி, பாய்காரத் தெரு பாலம் மற்றும் பெரிய கடைத் தெரு ஆகிய பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3564, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3594, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3638, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சி 'B' ஏரியில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4016, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பரமத்தி-வேலூர் தொகுதி, பாண்டமங்கலம், போத்தனூர், வெங்கரை, வேலூர் பரமத்தி ஆகிய பேரூராட்சிகளுக்கு போதிய துப்புரவுத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4035, மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன்.

திரு. L. இதயவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருப்போரூர் பேரூராட்சியில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டத்தை திருப்போரூர் பேரூராட்சியிலுள்ள 15 வார்டுகளிலும் முழுமையாகச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4256, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதிக்குட்பட்ட இடைக்கழிநாடு பேரூராட்சியில் உள்ள அனைத்து உட்புறச் சாலைகளில் நடைபெறும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4450, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குலசேகரம் பேரூராட்சிக்குட்பட்ட புலியிறங்கி முதல் தெற்றியோடு வரையிலான சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4508, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி தொகுதி, பூதப்பாண்டி பேரூராட்சி, சாட்டுபுதூர் சாலையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4555, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட இராஜாக்கமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4706, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சி, நரிக்குறவர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு புதிய வீடுகள் கட்டி, சிமென்ட் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4752, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, கச்சமங்கலம் ஆதி திராவிட குடியிருப்புக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5072, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதி, நெல்லை டவுன், தெற்கு புதுத் தெருவில் கழிவு நீர் ஓடை சீரமைக்கும் பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5229, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, வேளாங்கண்ணி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5433, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை நகராட்சியில் சுற்றித் திரியும் நாய் மற்றும் குரங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5797, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரணியல்–காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6026, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சியில் 3 இலட்சம் மற்றும் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6231, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சின்னசேலம் பேரூராட்சி மக்களுக்கு தினசரி சுந்தரேசபுரம் கூட்டுக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6304, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் நகராட்சியைச் சுற்றியுள்ள பெருங்களத்தூர், சிட்லபாக்கம், மாடம்பாக்கம், செம்பாக்கம் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6463, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6566, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் நகராட்சிப் பகுதிகளில் தமிழக அரசு, சொத்து வரி சீராய்வு மற்றும் 2017–2018 ஆம் ஆண்டுகளில் மறு அளவீடு செய்யப்பட்ட சொத்து வரி விதிப்பின்படி சொத்து வரி விதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6706, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “செங்கல்பட்டு தொகுதியில் பாலாற்று குடிநீர் மக்களுக்கு தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6726, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியம், கழுதூர் ஊராட்சி, ஆதி திராவிடர் புதிய காலனி, (பொன்னிக்காட்டு பகுதியில்) குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6737, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி தொகுதி, புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியம், லால்குடி ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில் இயங்கிவரும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விடுபட்டுள்ள ஊராட்சிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7098, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதி, குழித்துறை நகராட்சியில் பழுதடைந்துள்ள குடிநீர் வழங்கும் குழாய்களை மாற்றி புதிய PVC குழாய்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7147, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளித்தலை தொகுதி, குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7178, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7431, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7601, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட தூத்துக்குடி மாநகராட்சி வார்டுகளான 1, 2, 5, 13, 14, 55, 56, 57, 58, 59 ஆகிய பகுதிகளில் சாலைகளைச் சீரமைத்து, கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7603, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போளூர் பேரூராட்சி மற்றும் ஒன்றியங்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7644, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் கழிவுநீர் வடிகால் வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7680, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கோட்டை நகராட்சியில் உள்ள காமராஜர் மண்டபத்தை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8106, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தவிர புதிய பணிகள்மூலம் குடிநீர் வழங்கல் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8176, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரில் அமைந்துள்ள இராஜாங்குளத்தைச் சுற்றி நடைபாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8224, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8543, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8672, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா.

திரு. S.A. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓசூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் சென்றடைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8727, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சிப் பேருந்து நிலையத்தை நவீன பேருந்து நிலையமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8761, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மன்னார்குடி தொகுதியில் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.555,41,89,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.15,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 42, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 312, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 366, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 427, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 557, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1227, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1475, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1643, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1719, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2350, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2610, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3295, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3474, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3639, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3790, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3803, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3885, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4581, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4629, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5421, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6108, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6602, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7649, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7795, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8251, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8583, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 711, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 765, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1173, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1384, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 952, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், சின்னராம்பட்டி ஊராட்சி, சின்னராம்பட்டி கிராமத்தில் உள்ள பழுதடைந்த தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியினை அகற்றி, புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1422, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1788, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், வெங்கிடங்கால் ஊராட்சியில் தெரு விளக்குகளை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3562, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராம ஊராட்சிகளில் போதிய துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3593, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியிலுள்ள கிராம சாலைகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4042, மாண்புமிகு உறுப்பினர் திரு. L. இதயவர்மன்.

திரு. L. இதயவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் ஒன்றியம், கோவளம் ஊராட்சி, செம்மஞ்சேரி குப்பம் பகுதியில் புதியதாக நான்கு குடிநீர்க் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4283, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் கழிவறை வசதிகள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4374, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதியில் பெரும்பாலான ஊராட்சிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க திறந்தவெளிக் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4519, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி தொகுதி, பள்ளம் மீனவ கிராமத்தில் மழைக் காலங்களில் தெருக்களில் தேங்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கு திட்டம் வகுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4561, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள தெரு விளக்குகளுக்கான மின் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4701, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாச்சிக்கோட்டை ஊராட்சி, பாப்பான்விடுதி ஆதி திராவிடர் காலனி, கொத்தமங்கலம் ஊராட்சி கடைவீதி பகுதியில் வடகாடு ஊராட்சி, வடகாடு வடக்கு பரமரகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4750, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, பழமாநேரி கிராமத்தில் புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4868, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், 34-கோவிலூர் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4955, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டைமான் ஊரணி, ஊராட்சி வடக்கு தொண்டைமான் ஊரணியிலுள்ள 40 குடும்பங்களின் குடிநீர் வசதிக்காக ஆழ்குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5073, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, பிரிக்கப்படும் பகுதிகளை திருநெல்வேலி தொகுதியிலே சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5100, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலம் தொகுதியிலுள்ள மயிலம், வல்லம், ஒலக்கூர் ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில் அங்கன்வாடி மையங்களும், நியாய விலைக் கடை கட்டடமும் ஊரக வளர்ச்சித் துறைமூலம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5192, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டக்குடி தொகுதி–வடகரை ஊராட்சியில் மயானப் பாதைக்கு புதிய சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5743, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “விளாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் முட்டம் வரை செல்லும் பைப் லைனில் தண்ணீர் வீணாவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6016, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழகம் முழுவதும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை செய்பவர்களுக்கு நிலுவையிலுள்ள ஊதியத்தை விரைவில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6119, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு பேருந்து நிலையம் முதல் திருவாலங்காடு இரயில் நிலையம் மற்றும் ஒரத்தூர் கூட்டுச்

சாலை வரை மின் விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6226, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் ஒன்றியம், விரியூர் ஊராட்சி, நாயுடு தெருவில் வடிகால் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6322, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6493, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், திருநல்லூர் ஊராட்சி, அக்ரஹாரம் தெருவில் விடுபட்டுள்ள பகுதிக்கு 500 மீட்டர் தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6586, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தாமிரபரணி தண்ணீருக்கென தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6732, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புன்னம்பாடி ஊராட்சி ஒன்றியம், கீழரசூர்–ஆமரசூர்–மால்வாய் சாலை, தென்னரசூர்–ஆமரசூர்–மேலரசூர் சாலை, கல்லகம்–சாத்தாபாடி–ஒரத்தூர் சாலை, கீழரசூர்–ஆங்கீனூர் சாலை மற்றும் NH227 கீழரசூரில் இருந்து கல்லகம்–மால்வாய் நெடுஞ்சாலைத் துறை சாலையில் இணையும் சாலை, சரடமங்கலம்–அணைப்பாடி சாலை, மால்வாய்– அழுந்தலையூர் சாலை, ஆலம்பாடி தங்க சாலையிலிருந்து–பழிங்காந்தம் சாலை ஆகிய சாலைகளைச்

செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7103, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நிதி தணிக்கை கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7146, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளித்தலை தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் சாலைகளை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7247, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இளவங்கார்குடி ஊராட்சி, மனக்கால் ஊராட்சி, வடகண்டம் ஊராட்சி, ஊர்குடி ஊராட்சி, பத்தூர் ஊராட்சி, பனங்கரையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7433, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட வேப்பனஹள்ளி, சூளகிரி, ராயக்கோட்டை ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7454, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஹள்ளி ஊராட்சி, உப்பலாபுரம் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7632, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7633, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள 123 ஊராட்சிகளிலும் மற்றும் 3 பேரூராட்சிகளிலும் தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7647, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், வாலசமுத்திரம் ஊராட்சியில் வாலசமுத்திரம் கிராமத்திலிருந்து வெங்கடேஸ்வரபுரம் செல்லும் சாலையில் தாம்போகியில் பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8107, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் துறையின்மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் பசுமை வீடு, பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (PYAYG) ஆகிய திட்டங்கள்மூலம் கட்டப்படும் வீட்டின் மதிப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8182, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதியிலுள்ள ஒலக்கூர், மரக்காணம் ஆகிய ஊராட்சி ஒன்றிய ஏரிகளை ஆழப்படுத்தி கரையைப் பலப்படுத்தவும், பழுதடைந்த மதகு, கலிங்கல் பழுது நீக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8220, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்திலுள்ள பந்தலூர் வட்டத்தில் உள்ள சேரங்கோடு, அதிலாக்கோட்டை ஆகிய ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்தும், கூடலூர் தொகுதிக்கு உட்பட்ட நெலாக்கோட்டை ஊராட்சியில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8730, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சி, அண்ணா நகர் ஆதி திராவிடர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8773, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, வடுவூர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 53, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 323, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 377, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 438, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 568, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1238, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1490, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1644, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1721, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2351, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5728, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி மற்றும் ஸ்கூட்டர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2443, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்,

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3369, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3473, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3640, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3788, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3804, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3895, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4018, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4158, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4380, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4537, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4585, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4639, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4780, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5074, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5132, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5217, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5418, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5491, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6190, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6344, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6608, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7152, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7428, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7479, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7675, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8108, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8250, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8512, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8582, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 712, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 766, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1184, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1395, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7689, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4445, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7101, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேட்டரி சைக்கிள் வடிவமைத்து தயாரித்து அரசு சார்பில் விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8219, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ இப்பேரவையிலே நான் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 3 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 3 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

@ 827 முதல் 1372 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

*திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழர்கள் அனைவரும் உயர வேண்டும்; தமிழகம் அனைத்து நிலைகளிலும் உயர வேண்டும்' என உழைத்த செம்மொழிச் சூரியன், தமது 75 ஆண்டு கால பொது வாழ்வில், 5 முறை தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து, நின்ற தேர்தல்களிலெல்லாம் வென்ற எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் மூதறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துயில்கொண்டுள்ள திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் பொதுச் செயலாளராய் 43 ஆண்டு காலம் பணியாற்றி, எங்களுடைய தலைவருக்கு உற்ற நண்பராய் விளங்கிய மரியாதைக்குரிய இனமானப் பேராசிரியர் அவர்களையும் இந்த நேரத்திலே வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பேரவையிலே மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த, இரவு, பகலாய் தமிழ் வாழ, தமிழர் வாழ, இமை மூடி தூங்காத எங்கள் மின்னல் சக்தி; உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம்; (மேசையைத் தட்டும் ஒலி) 2021-ல் தமிழகத்தின் முதலமைச்சர் அரியணையில் ஏறவிருக்கின்ற எங்களுடைய கழகத்தின் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு முன்பாக என் தொகுதி சம்பந்தப்பட்ட இரண்டு பிரச்சினைகள் குறித்து பேச நான் முற்படுகின்றேன். திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தால் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களும், நானும் பலமுறை கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து, குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக சட்டமன்றத்திலே பேசியிருக்கிறோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பாகவே திண்டுக்கல் மாவட்டத்திற்கு வந்து ஆய்வு செய்வதாகவும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிதி ஒதுக்க இசைவளித்திருப்பதாகவும் சொன்னார்கள்.

தற்போது கோடைக்காலம் ஆரம்பித்துவிட்டது. எனவே, எங்கள் மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஒட்டன்சத்திரத்திலிருந்து திருப்பூர்–அவினாசி செல்கின்ற சாலையில், உலக வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ், TNRSP மூலமாக 4 வழிச்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் கள்ளிமந்தையம் என்கிற என்னுடைய ஊரிலேயும் புறவழிச் சாலை வருகிறது. இதில் தாழையூத்து–கள்ளிமந்தையம் மாநில நெடுஞ்சாலை, மஞ்சநாயக்கன்பட்டி–கள்ளிமந்தையம் மாவட்ட முக்கியச் சாலை, வேலம்பட்டி–கூத்தம்பூண்டி மாவட்ட முக்கியச் சாலைகளில் சாலைப் பணிகள் இன்னும் முடிவடையவில்லை. அதனால், இங்கு அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு, இதுவரை 10 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற அதிகாரி மரியாதைக்குரிய திரு. அருண் தம்புராஜ், I.A.S. அவர்களிடத்திலேயும் இதுகுறித்து நாங்கள் கோரிக்கை வைத்தோம். இப்பணி உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்ற காரணத்தால், எங்களால் நிதி ஒதுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை மூலமாக அந்த 3 இடங்களிலும் மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–05

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தளவிலே, ஒரு மனிதனுக்கு எப்படி இதயம் முக்கியமோ, அதேபோன்று, இந்த உள்ளாட்சித் துறையும் மக்களுக்கு, இந்த நாட்டுக்கு முக்கியமான ஒரு துறையாகும். மக்களுடைய அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி, சுகாதாரம், கல்வி, பேருந்து நிலையம், இருக்க இருப்பிடம் போன்ற அன்றாடத் தேவைகளுக்கான பணிகளைச் செய்து கொடுப்பது இந்தத் துறையினுடைய முக்கிய நோக்கமாகும். எனவேதான் அண்ணல் காந்தியடிகள் "கிராமங்கள்தான் ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு" என்று சொன்னார். அதேபோல, "இந்தியாவினுடைய ஆன்மா கிராமங்களிலே இருக்கிறது" என்றும் சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்கள், "அன்புள்ள தம்பி! மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களிடமிருந்து கற்றுக்கொள்; அவர்களை நேசி; அவர்களுக்குச் சேவை செய்; அவர்களுடன் திட்டமிடு; அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து

தொடங்கு; அவர்களிடம் இருப்பதை வைத்து கட்டமைப்பு செய்" என்று நமக்கெல்லாம் கட்டளையிட்டார்.

அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் எங்களுடைய கழகத்தின் தலைவர் "மக்களிடம் செல்வோம்; மக்களிடம் சொல்வோம்; மக்களின் மனங்களை வெல்வோம்" என்ற (மேசையைத் தட்டும் ஒலி) தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதி, தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்திலே, புலிவலம் என்ற ஊராட்சியிலே, ஊராட்சி சபைக் கூட்டத்தை முதன்முதலாக நடத்தினார். இந்தியாவில் எத்தனையோ அரசியல் கட்சித் தலைவர்கள் இருக்கலாம்; எத்தனையோ முதலமைச்சர்கள் இருக்கலாம்; ஆனால், அவர்கள் யாருடைய சிந்தனையிலும் உதிக்காத இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய தலைவர், எங்களுடைய தலைவர் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கின்ற 12,524 ஊராட்சிகளிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரையும் அழைத்து "நீங்கள் ஊராட்சி சபைக் கூட்டங்களை நடத்த வேண்டும்; மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளான குடிநீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி; மக்கள் என்னென்ன கோரிக்கையை வைக்கிறார்களோ, அதையெல்லாம் தெரிந்துகொண்டு, அவர்களிடத்திலே அதற்கான மனுக்களைப் பெற்று, அந்தந்தத் துறையினுடைய அதிகாரிகளிடத்திலே கொண்டுபோய்க் கொடுங்கள்" என்று உத்தரவு வழங்கி, அதனடிப்படையில் 12,524 ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டத்தை நடத்திக் காட்டியவர், கழகத் தலைவர் அண்ணன் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் துறையைப் பொறுத்தளவிலே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குறித்து ஓரிரு கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். மக்களின் அன்றாடத் தேவையான குடிநீரை வழங்குகின்ற பணியைச் செய்வதில், பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கக்கூடிய பணியில் இந்த வாரியம் முக்கியப் பங்கு வகிக்கிறது. 1971 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது இந்த வாரியம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாரியத்தின் மூலமாக, 1971–லிருந்து 2011 வரை, சுமார் 40 ஆண்டுகளில் பல்வேறு பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், சிறிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 40 ஆண்டு

காலத்திலே, மக்கள் பிரதிநிதிகள் யார் வேண்டுமானாலும் அந்த வாரிய அலுவலகத்திற்குச் சென்று தங்கள் ஊருக்கு சிறிய குடிநீர்த் திட்டங்கள் வேண்டுமென்று கேட்டால், உடனே அங்கிருந்த மேலாண்மை இயக்குநர்கள் அனுமதி தந்தார்கள். மேல்நிலைத் தொட்டி வேண்டுமென்று கேட்டால், உடனே அனுமதி தந்தார்கள். அந்த வகையில், 40 ஆண்டுகாலம் நல்ல முறையில் அந்த வாரியம் இயங்கி வந்தது. 12,000 பேர் அன்றைக்கு அந்த வாரியத்தில் வேலை பார்த்தார்கள். இன்றைக்கு வெறும் 3,200 பேர்தான் அங்கு வேலையில் இருக்கிறார்கள். 25 சதவிகித பணியாளர்கள்தான் வேலையில் இருக்கிறார்கள்.

அடுத்து, இந்த வாரியத்தின் மூலமாகப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், 2006–2011–லே, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், கழகத் தலைவர் அண்ணன் அவர்கள் துணை முதலமைச்சராகவும் இருந்த சமயத்திலே, வறட்சி மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திற்கு சுமார் 616 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தந்தார்கள். அந்த வறட்சியான மாவட்டத்திற்கு குடிநீரைக் கொண்டு சென்று சேர்ப்பதற்காக, பலமுறை அந்த மாவட்டத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே அந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிய பெருமை கழகத் தலைவர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, Fluoride பாதிப்புள்ள கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை சுமார் 1,330 கோடி ரூபாயிலே, ஜப்பான் நாட்டு நிதியுதவியோடு நிறைவேற்றிட திட்டமிட்டு, அதற்கான நிதியைப் பெற்று, திட்டத்தைத் தொடங்கி, சுமார் 90 சதவிகித பணிகளை நாங்கள் முடித்து வைத்தோம். அதற்குப் பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்து, எஞ்சிய பணிகளை நிறைவேற்றினீர்கள். எனினும், முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களும், துணை முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதியார் அவர்களும்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வாரியத்தினுடைய முக்கிய நோக்கம் என்னவென்றால், திட்டம் எதுவாக இருந்தாலும் சரி, அந்தத் திட்டத்தை முறையாக திட்டமிடுதல், செயல்படுத்துதல், பராமரித்தல் ஆகியனவாகும். ஆனால், கடந்த 10 ஆண்டுகாலமாக திட்டங்கள் பல (குறுக்கீடு) தொய்வடைந்து, இந்த வாரியம் மூடக்கூடிய நிலைமையிலே இருக்கிறது. இந்த நிலையில், இந்த வாரியத்தை தனியாருக்கு தாரைவார்க்கப் போகிறீர்களா என்ற ஓர் அச்சம்கூட எங்களிடத்தில் இருக்கிறது. ஏனென்றால், அங்கே சுமார் 25 சதவிகிதம் அளவிற்குத்தான் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்துகொண்டிருப்பவர். அவருக்கு நன்றாகத் தெரியும். அவருடைய கட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே பல்வேறு சாதனைகளைப் புரிந்ததாகப் பேசிக் கொண்டிருந்தார். எதிர்க்கட்சி கொறடா பேசும்போது குறுக்கிட்டுப் பேசக் கூடாது என்று நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். சிறிதுநேரம் அவர் பேசி முடித்தபிறகு, பதில் சொல்லலாம் என்று காத்துக் கொண்டிருந்தேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது செய்த சாதனைகளைவிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் மட்டும் மூன்று மடங்கு சாதனைகளைக் கூடுதலாகச் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில், அதேபோன்று பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறோம்.

குறிப்பாக, இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றி, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசினார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தளவில், எண்ணற்ற சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்திருக்கிறது. அதேபோல், அந்த வாரியத்தில் 25 சதவிகிதம்தான் இன்றைக்குப் பணியாளர்கள்

இருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார். அது தவறான கருத்து. இன்றைக்கு அங்கு போதுமான அளவிற்குப் பணியாளர்கள் இருக்கிறார்கள். அதாவது, நிரந்தரப் பணியாளர்களும் இருக்கின்றனர்; outsourcing முறையிலும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தேவைக்கும் கூடுதலாகப் பணியாளர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு திட்டத்தை ஆரம்பிக்கும்போதும், அந்தத் திட்டம் முடியும்போதும், அதற்குப்பிறகும், O&R, தொடர்ந்து அந்தப் பராமரிப்புப் பணியிலும் இருப்பார்கள். அதற்குப்பின்னர், அந்த Scheme முடிவடைந்துவிடும். இது agreement–ல் இருப்பதுதான். அதற்குப்பிறகு அடுத்த பணி ஆரம்பிக்கும்போதும் செயல்படுத்தப்படும். இந்திய அளவில் பார்த்தீர்களென்றால், குடிநீர் வழங்குவதில், மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் செய்த சாதனைகள்போன்று வேறு எந்த மாநிலத்திலுமே செய்யப்படவில்லை. எந்த மாநிலத்திலும் அப்படிப்பட்ட சாதனைகள் கிடையாது. குடிநீருக்காக மட்டும் கிட்டத்தட்ட 4.58 இலட்சம் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தி.மு.க. ஆட்சியிலிருந்த அந்த 5 ஆண்டுக் காலத்தில், மொத்தமாகவே குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூபாய் 7,000 கோடிதான் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருந்தபோது, குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு ரூ.21,958 கோடி நிதியை ஒதுக்கினார்கள். அதற்குப்பிறகு, தொடர்ந்து அவருடைய வழியிலே வந்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் இன்றைக்கு அற்புதமாக அம்மா அவர்களின் வழியில் அரசை நடத்திக்கொண்டிருக்கிறார். என்னென்ன திட்டம் எந்தெந்த துறைக்குத் தேவை என ஆய்வு செய்து, அதைச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, குடிநீருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிற முதலமைச்சர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு மொத்தமாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசும் சேர்ந்து ரூ.39,849 கோடி நிதியை ஒதுக்கி, 4.58 இலட்சம் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) குடிநீர் வடிகால் வாரியம் மட்டுமல்ல; பேரூராட்சிகள், நகராட்சிகள், கிராம ஊராட்சிகள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தோமென்றால், இவ்வளவு பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

அதேபோல, வறட்சி மாவட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அவர்களுடைய தலைவர் சென்று பார்த்திருப்பார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், 142 வருடங்களில் இல்லாத அளவிற்கு கடுமையான வறட்சி ஏற்பட்டது. நாம் அப்படிப்பட்ட வறட்சியைப் பார்த்ததே இல்லை. இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முன்பு வந்த வறட்சி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வந்தது. வறட்சியை சமாளிக்க பல ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூத்த I.A.S., அதிகாரிகளை அனுப்பி, monitor செய்து, எங்கெங்கு எவ்வளவு நிதி தேவை என்பதை அறிந்து, ஊரக வளர்ச்சித் துறையில் மட்டும் அதற்காக 930 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். அதேபோல, இன்றைக்குப் பல்வேறு திட்டங்கள் மூலமாக நிதி ஒதுக்கப்பட்டு, உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல, சென்னையைப் பொறுத்தவரையில் மழையே பெய்யவில்லை. சென்னையில் மழை பெய்யாத நிலையிலும், 142 வருடங்களில் இல்லாத வறட்சி ஏற்பட்டபோதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையினால், 450 M.L.D. அளவிற்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருந்தோம். அதற்குப்பிறகு, 525 M.L.D. அளவிற்குத் தண்ணீர் கொடுத்தோம். சென்னையில் அதிகமான பிரச்சினை இருப்பதுபோன்று நிறைய trending எல்லாம் ஆனது. இருந்தாலும், சென்னையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பல்வேறு பணிகளைச் செய்தார்கள். அதற்குப்பிறகு, தமிழ்நாடு முழுவதும் மழை பெய்தது. ஆனால், சென்னையில் மழை பெய்யவில்லை. அந்த நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்னையும், மாண்புமிகு மூத்த அமைச்சர் அண்ணன் திரு. டி. ஜெயக்குமார் அவர்களையும் உடனடியாக அனுப்பினார்கள். நாங்கள் ஆந்திர முதலமைச்சர் அவர்களை நேரடியாகச் சந்தித்து, கிருஷ்ணா நதிநீர் கேட்டு கடிதம் கொடுத்தோம். இதுவரை 7 ஆண்டுகளில் கிருஷ்ணா நதிநீர் இந்த அளவிற்கு வழங்கியதே இல்லை. ஆனால், இன்றைக்கு 6.4 T.M.C. கிருஷ்ணா நதிநீர் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு திறந்துவிடும் தண்ணீரின் அளவை அவர்கள் கொஞ்சம் குறைத்தபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உடனடியாக மீண்டும் எங்களை அனுப்பி, தண்ணீரைத் தொடர்ந்து வழங்குமாறு திரும்பக் கேட்டோம். அதன்பிறகு உடனடியாக தண்ணீரின் அளவை அதிகரித்து

விட்டார்கள். அதன் காரணமாக இன்றைக்கு 650 MLD–க்கு மேலே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12–15

தமிழகத்தில் இன்றைக்கு அதிகமான குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், அம்மா அவர்களும் எடுத்த நடவடிக்கைபோன்று இதுவரை யாரும், எங்கும் எடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், கிராமங்களை எடுத்துக்கொண்டால், இந்தியாவிலேயே 99 சதவீதம் கிராமங்களில் குழாய்கள்மூலம் குடிதண்ணீர் கொடுப்பது நம்முடைய தமிழகத்தில்தான். தமிழ்நாடுதான் No.1. ஆகவே, இப்படி பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றியும் நமது எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசினார்கள். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், முழுமையாக அவருக்கும் தெரியும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முதன்முதலாகக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் M.G.R. அவர்கள்தான். 1986 ஆம் ஆண்டு, 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. அதற்குப் பின்னால், 1991–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்து, 1994 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீட்டை ரூ.350 கோடியாக உயர்த்தி, நடவடிக்கை மேற்கொண்டார்கள். அதற்குப் பின்னால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பின்னால், டிசம்பர் 2001–ல், இத்திட்டத்திற்குப் பன்னாட்டு நிதியைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டதோடு, 2001–2006 வரை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதற்குப்பிறகு, நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். உங்களுடைய தலைவர் நிதியுதவி பெறுவதற்காக ஜப்பான் நாட்டிற்குப் போய் வந்ததாகச் சொன்னீர்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அத்திட்டத்திற்கான எல்லா வேலைகளையும் முடித்துவிட்டார்கள். ஆனால், நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 90 சதவீதம் வேலைகளை முடித்ததாகச் சொன்னீர்கள். 18 சதவிகித வேலைகளைத்தான் முடித்திருந்தீர்கள். இந்த நிலையில், மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், 29–5–2013 அன்று இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ஆகவே,

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், முழுமையாக முடித்து, இத்திட்டத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்கு குடிநீர்த் திட்டங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தி வருகிறது.

சென்னையில் தண்ணீர்ப் பிரச்சினை வந்தபோது, ஆந்திராவிற்கு மட்டும் போய் கிருஷ்ணா நதிநீரைக் கேட்கவில்லை. அப்போது, கல் குவாரிகளிலிருந்தும்தண்ணீர்எடுத்துவழங்கப்பட்டது.அதேபோன்று, நமக்கு வீராணத்திலிருந்து மொத்தம் 180 MLD தண்ணீர்தான் வரும். வீராணம் குழாயின் மொத்த அளவு அவ்வளவுதான். 90 MLD நீர் வீராணத்திலிருந்தும், 90 MLD நீர் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்தும் கொண்டு வர வழிவகை செய்யப்பட்டுள்ளது. வீராணம் ஏரியில் தண்ணீர் தீர்ந்தாலும்கூட, 180 MLD தண்ணீரினை முழுமையாக, நிரந்தரமாக நெய்வேலி சுரங்கத்திலிருந்து பைப் லைன் அமைத்து எப்போதும் வரும் அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல; சென்னையில் குடிநீர்ப் பிரச்சினை தொடர்ந்து வரக் கூடாது என்பதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 150 MLD, 400 MLD அளவிலான கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். அதில் 150 MLD திட்டத்தினைச் செயல்படுத்த அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. இன்றைக்கு 400 MLD திட்டத்திற்கு அதிகமான தொகை தேவைப்படுவதால், தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி, அதையும் priority list–ல் சேர்த்து, கூடியவிரைவில் டெண்டர் கோரும் வேலைகளைச் செய்யப்போகிறோம். ஆகவே, சென்னையில் தொடர்ந்து மழையே பெய்யாவிட்டாலும்கூட, 870 MLD அளவிற்குத் தண்ணீர் கிடைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு திட்டத்தை தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அதேபோல, 25 சதவீதம் பணியாளர்களை வைத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இயங்குவதாகவும், அதை மூடப் போவதாகவும் அவர் சொன்னார்.

முதலில் குடிநீர்த் திட்டங்கள் குறித்து பதில் சொன்னேன். இரண்டாவது, வாரியத்தை மூடுவது போன்ற ஒரு சூழ்நிலை அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கிடையவே கிடையாது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இன்றைக்குச் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்குச் செயல்படுத்தப்படுகின்ற எல்லா திட்டங்களும் அற்புதமான திட்டங்கள். இன்னும் நிறைய பதில் சொல்லலாம். அதற்கு நிறைய நேரம் எடுத்துக் கொண்டோம் என்று சொல்வீர்கள். எனவே, என்னுடைய பதிலுரையில் குடிநீர் வடிகால் வாரியம் குறித்துச் சொல்கிறேன். அம்மா அவர்களுடைய அரசில், அதுபோன்று எந்த வாரியமும் மூடப்படாது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களும் இன்றைக்குப் போதுமான நிதியை ஒதுக்கி இருக்கிறார். எனவே, அதுபோன்ற சூழ்நிலைக்கு வாய்ப்பே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் நிறைய விஷயங்களைச் சொல்லலாம். நாங்கள் பேசுவதற்கு கொஞ்சம் time தான் கொடுக்கப் போகிறீர்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே இதற்கெல்லாம் விளக்கம் தெரிவிக்கலாம். முதலில் எங்கள் கருத்தைக் கேட்டு, பின்னர் அவர் பதிலுரையில் சொல்லட்டும்.

அடுத்து, மாநில உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வினைப் பொறுத்தவரையில், கழகத் தலைவர், அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்த காலத்திலே, உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பு வகித்த நேரத்திலே, மாநில நிதி வருவாயில் உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வு 8 சதவிகிதமாக இருந்ததை, 2006–2011–ல் 9 சதவீதமாக்கி, பிறகு 9.5 சதவீதமாக்கி, 10 சதவீதமாக அதை உயர்த்திக் கொடுத்தார். ஆனால், நீங்கள் ஆட்சிக்கு வந்து இந்தப் பத்தாண்டு காலத்திலே, சல்லி பைசாகூட மாநில நிதி வருவாயில் உள்ளாட்சிகளுக்கு கூடுதலாகப் பகிர்ந்தளிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மத்திய அரசிடமிருந்து உள்ளாட்சிகளுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.2,029.22 கோடி; 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.4,355.57 கோடி

என, ஆக மொத்தம் ரூ.6,384.79 கோடி இன்னும் பெறப்படவில்லை என்றும், அதற்காக மத்திய அரசிடம் நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோமென்று சொன்னீர்கள். தற்போது, 27 மாவட்டங்களிலே உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்று மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எனவே, மத்திய அரசிடமிருந்து அந்த நிதியையெல்லாம் பெற்றுத் தந்து, அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கி, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

அடுத்து, தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1973 ஆம் ஆண்டு, இந்தியாவிலேயே முதன்முதலாக ஆதி திராவிட மக்களுக்கென தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தைத் தொடங்கினார். 1975 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் என்ற கிராமத்தில் இந்தியாவின் முதுபெரும் தலைவர் பாபு ஜெகஜீவன் ராம் அவர்கள் இந்தத் தொகுப்பு வீடுகளைத் திறந்து வைத்துப் பேசுகையில், “இந்தியாவில் மக்கள் நல அரசை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறோம்; ஆனால், உண்மையான மக்கள் நல அரசை நடத்துபவர் கலைஞர் அவர்கள்தான்” என்று பாராட்டி, தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பெருமை சேர்த்தார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்னால்தான், அந்தத் திட்டம் ‘இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்’ என்று இந்திய அளவிலே கொண்டுவரப்பட்டது.

அந்தத் திட்டம் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, தற்போது வீடுகள் கட்டுவதற்கு 1,70,000 ரூபாய் கொடுக்கிறீர்கள். 276 சதுர அடியில் வீடு கட்டுவதற்கான அந்தத் திட்டத்தை மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்துகிறீர்கள். வீடு கட்டுவதற்கு தற்போது வழங்கப்படும் அந்த நிதி போதாது. எனவே, நீங்கள் அந்தத் திட்டத்திற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கவேண்டும். அதேபோன்று, 25 ஆண்டு காலம் முடிவடைந்த 50,000 தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கலாம் என்று சென்ற ஆண்டு அனுமதி கொடுத்தீர்கள். அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைக் கொண்டு, 10 ஆண்டு காலம் ஆன தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கலாம் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இதில் முரண்பாடு இருக்கிறது. எனவே, அந்த முரண்பாட்டை களைந்து, கட்டி முடித்து 10 ஆண்டுகளுக்கும் மேலான அத்தனை தொகுப்பு

வீடுகளையும் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வகையில், தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் கட்டியிருக்கின்ற அனைத்துத் தொகுப்பு வீடுகளையும் பழுதுபார்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 2011 ஆம் ஆண்டில் நீங்கள் கொண்டுவந்த பசுமை வீடு திட்டத்தின்கீழ், வீடு கட்டுவதற்கு தற்போது 2,10,000 ரூபாய் கொடுக்கிறீர்கள். அதில் 30,000 ரூபாய் சூரிய ஒளி மின்சாரத்திற்கும், 1,80,000 ரூபாய் 300 சதுர அடியில் வீடு கட்டுவதற்கும் வழங்கப்படுகிறது. அதுபோன்று வீடு கட்டியவர்களுக்கு மூன்று வருடங்களாகியும் Solar Panel–ம், battery–ம் கொடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல; பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வீட்டு வசதித் துறைகளிலெல்லாம் Schedule of Rates என்ற முறையில் விலைவாசிக்கேற்றவாறு விலைப் பட்டியலை ஆண்டுதோறும் மாற்றியமைக்கிறீர்கள். ஆனால், 10 ஆண்டுகளாக பசுமை வீடு கட்டுவதற்கு பயனாளிக்கு 2,10,000 ரூபாய்தான் கொடுக்கிறீர்கள். அதன் காரணமாக, வீடு கட்டுபவர்கள் எல்லாம் இன்றைக்கு கடனாளியாகிறார்கள். (குறுக்கீடு) அந்த வீட்டைக் கட்டுகின்ற பயனாளிகளிடம் 'ஏன் இன்னும் வீட்டைக் கட்டி முடிக்கவில்லை' என்று அதிகாரிகள் போய் மிரட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடைசியாகத்தான் பேசலாம் என்று நினைத்தேன். ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு சல்லிக் காசுகூட ஒதுக்கவில்லையென்று அவர் சொன்னார். அதற்குப்பின்னர், வீடு கட்டும் பயனாளிகள் எல்லாம் கடனாளியாகிவிட்டார்கள் என்றும் சொன்னார். பயனாளிகள் கடனாளிகளானது உண்மை, அது எப்பொழுது என்றால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில். (மேசையைத் தட்டும் ஒலி) வீடு கட்டும் திட்டத்தின்கீழ் பயனாளிக்கு வெறும் 75,000 ரூபாய் மட்டும் பணம் கொடுத்து, கட்டவைத்து, கடனாளியாக ஆக்கிவிட்டு, தற்போது 2,10,000 ரூபாய் கொடுக்கும் எங்களைப் பார்த்து பயனாளிகளை கடனாளியாக்கிவிட்டதாகச் சொல்கிறார். 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், இவர்கள் ஆட்சியில் ஆரம்பித்த அந்த வீடுகளுக்கும் சேர்த்து

400 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்த வீடுகள் அனைத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பின்னர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் solar Panel குறித்தும் பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே Solar Panel அமைப்பது குறித்து தனியாக கூட்டம் நடத்தி, அதையும் வீடு கட்டும் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம் என்றும், அதன்மூலம் மின்சாரம் கொடுத்துவிடலாம் என்றும் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு பிரச்சினை வருவதற்கு முன்னதாகவே அதைத் தெரிந்து நடவடிக்கை எடுப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே இதுவரையிலும் அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுத்திருப்பது நம்முடைய அம்மாவின் அரசுதான். பசுமை வீடுகள் திட்டம், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் என்று அனைத்துத் திட்டங்களின்மூலம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசால் கிட்டத்தட்ட 16.36 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய நிதியைப் பெறுவது குறித்தும் பேசினார். பல்வேறு நேரங்களில் தேர்தலைப் பற்றியும் பேசினார். இவர்கள்தான் தேர்தலை நிறுத்தினார்கள் என்று சொன்னால் கோபப்படுவார்கள். அதுபோன்று, தேர்தல் நின்றுபோன சூழ்நிலையிலும்கூட, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், தொடர்ந்து நிதியைப் பெற்றிருக்கிறோம். அந்தவகையில், இன்றைக்குக் கிட்டத்தட்ட 11,000 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை மத்திய அரசிடமிருந்து நாங்கள் பெற்றிருக்கிறோம். உள்ளாட்சி அமைப்புகளுக்கு சல்லிக் காசுகூட ஒதுக்கவில்லை என்று எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசினார். எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இப்படிப் பேசுவார் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால், அவருக்கு ஓரளவு புள்ளிவிவரங்கள் எல்லாம் தெரியும். ஆனாலும் சல்லிக் காசுகூட பகிர்ந்தளிக்கவில்லை என்று சொல்லிவிட்டார். அவ்வாறெல்லாம் கிடையாது. மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய நிதியைப் பெற்றிருக்கிறோம். 2006–2011 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மொத்தமாக 9,266.24 கோடி ரூபாய்தான் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12–25

ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை ரூ.19,891.63 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, தற்போது அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான அரசு, 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டு காலத்தில் 17,012.18 கோடி ரூபாயை ஊரக வளர்ச்சித் துறைக்காக விடுவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகித அளவிற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, பகிர்ந்தளிக்கப்படக்கூடிய 10 சதவிகித நிதி, 56:44 என்ற விகிதாச்சார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது, அதாவது, ஊரக உள்ளாட்சித் துறைக்கு 56%, நகராட்சிக்கு 44% என்ற விகிதத்தில் நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது. அவ்வாறு, பகிர்ந்தளிக்கப்படும் நிதிகூட 8:37:55 என்ற அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்தில், மாநில நிதி வருவாயில் 10 சதவிகிதத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுத்தோம். நீங்கள் அந்த சதவிகிதத்தை இன்னும் ஒரு சல்லி பைசா அளவிற்குக்கூட உயர்த்திக் கொடுக்கவில்லை என்றுதான் நான் சொன்னேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல; மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டியவர்கள் கடனாளிகளாக ஆகிவிட்டார்கள் என்று சொன்னார். நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவெனில், 300 சதுர அடியில் பசுமை வீடு ஒன்றினை தற்போது 1,80,000/– ரூபாயில் கட்ட முடியும் என்று அரசு நினைக்கிறது. வாஸ்தவம்; சந்தோஷம். அதை அரசாங்கமே கட்டிக் கொடுத்துவிடட்டும். பயனாளிகளே வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொல்லாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து, அதை அரசாங்கமே கட்டிக் கொடுக்கட்டும். ரூ.1,80,000/–ல் 300 சதுர அடியில் வீடு கட்ட முடியும் என்று

நீங்கள் நினைக்கிறீர்கள். கட்டுமானப் பொருள்களின் அன்றைய விலை என்ன? சிமென்ட், கம்பி, மணல், செங்கல் ஆகியவற்றின் அன்றைய விலை என்ன? இன்றைய விலை என்ன? விலை எந்த அளவிற்கு மாறியுள்ளது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கூலி எவ்வளவு உயர்ந்துவிட்டது? கொத்தனார் கூலி எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதுபற்றி உங்களுக்கும் தெரியும். எனவே, அரசாங்கமே அந்த பசுமை வீடுகளைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உள்ளாட்சித் தேர்தல் முடிந்து, மக்கள் பிரதிநிதிகளெல்லாம் இன்றைக்கு பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடர்ந்து வீடுகள் கட்டும் திட்டம் பற்றிக் கூறுகிறார்கள். “நீங்கள் உங்கள் ஆட்சியில் ரூ.75,000/–ல் எப்படி வீடுகளைக் கட்டினீர்கள்?” என்று கேட்டேன். அதற்கு பதில் சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி, அதை விட்டுவிடுங்கள். மத்திய அரசு கொடுக்கக்கூடிய நிதியைவிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதிலிருந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு அதிகமான நிதியைக் கொடுத்து வருகிறது. மத்திய அரசு மொத்தமாகவே ரூ.72,000/–தான் கொடுக்கிறது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தற்போது ரூ.98,000/– கொடுக்கிறது. Dividend–ன்படி, மாநில அரசு ரூ.48,000/–தான் கொடுக்க வேண்டும். மற்ற மாநிலங்களைவிட கூடுதலாக, கூரை போடுவதற்கு ரூ.50,000/– கொடுக்கிறோம். ஆக மொத்தம் ரூ.98,000/– கொடுக்கிறோம்.

அதுமட்டுமல்ல; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சோலார் பேனல் அமைப்பதற்கான நிதியை கூடுதலாக இதில் சேர்த்திருக்கிறார்கள். பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் மொத்தமாக ரூ.1,70,000/– வருகிறது. அதற்குப்பிறகு, மேலும், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.20,000/–ஐ கொடுக்கிறோம்; கழிப்பறைகள் கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.12,000/–ஐ கொடுக்கிறோம். இவ்வாறு, கிட்டத்தட்ட ரூ.2,02,000/– வரை ஒரு வீட்டிற்கு கொடுக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், 2006 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தற்போதைய கழகத் தலைவர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது, உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பு வகித்தபோது அத்திட்டம் முதலில் தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, பின்னர் படிப்படியாக தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ரூ.98/– என வழங்கப்பட்டு வந்த தனி நபர் கூலி தற்போது ரூ.229/– ஆக வழங்கப்படுகிறது. நீங்கள் இதுகுறித்து என்ன சொல்லியிருக்கிறீர்கள்? கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், "2019–2020 ஆம் நிதியாண்டில், 99.64 சதவிகிதம் ஊதியத் தொகை 15 நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், கிராமப்புறங்களில் சம்பளம் மூன்று மாதங்களுக்கொரு முறை, நான்கு மாதங்களுக்கொரு முறைதான் வழங்கப்பட்டு வருகின்றது. இதுகுறித்து எங்கள் கழகத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே ஓர் அறிக்கையும்கூட வெளியிட்டிருக்கிறார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணி செய்கின்ற பணியாளர்களுக்கு, எங்களுடைய ஆட்சிக் காலத்தில், 2006–2011 வரையிலான காலக்கட்டத்தில், வாரத்திற்கு ஒருமுறை கூலியினை பஞ்சாயத்து ஆபீஸ்மூலம் கொடுத்தோம். ஆனால், இன்றைக்கு 3 மாதத்திற்கொருமுறை, 4 மாதத்திற்கொருமுறைதான் பணத்தைக் கொடுக்கிறீர்கள். அதுவும், பணத்தினை வங்கியில் போடுகிறீர்கள். அந்தப் பணம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் சேர்ந்துவிட்டதா, இல்லையா என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஒருநாள், இரண்டு நாட்கள் என அவர்கள் வேலையை விட்டுவிட்டு வங்கிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. படிக்காத பாமர மக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். எனவே, இந்த அரசு பயனாளிகளுக்கு 15 நாட்களில் பணம் தருவதாக தவறான தகவலைக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை 20,79,000

தெரு விளக்குகள் LED விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பது மத்திய அரசாங்கத்தின் திட்டம். நாம் அந்தத் திட்டத்தை implement செய்கிறோம். இதற்கு முன்னால் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதும் சரி; இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தபிறகும் சரி; நம்முடைய நிதித் துறைக்கு வந்து, பிறகு பயனாளிகளுக்கு சம்பளம் போகும். இப்போது பயனாளிகளுடைய சம்பளம் நேரடியாக பயனாளியின் Bank account–க்குப் போகிறது. அதுமட்டுமல்லாமல், e–FMS முறையை நாம் கொண்டு வந்துவிட்டோம். நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது, சம்பளத்தை வாங்கி பயனாளிகளின் கையில் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். அப்போது பல்வேறு தவறான வழிமுறைகள் எல்லாம் நடந்துகொண்டிருந்தன. இன்றைக்கு யார் வேலை செய்கிறார்களோ, அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு சம்பளம் நேரடியாகப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சில நேரங்களில் சம்பளம் வராதபோது, அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, சம்பளத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அப்போது சம்பளம் குறைவாக இருந்தபோதுகூட, மத்திய அரசாங்கத்திடம் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். அதிகபட்சமாக 45 நாட்கள் அல்லது 2 மாத சம்பளம் நின்றாலும்கூட, தொடர்ந்து அவர்களுடைய account–க்கு சம்பளம் வந்துவிடும். தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், சம்பள விஷயத்தில் நமக்கு அதிகாரம் கிடையாது. நேரடியாக பயனாளிகளுடைய account–க்கு மத்திய அரசாங்கம் சம்பளத்தை அனுப்பிவிடுகிறது.

அதேபோல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை அவர்களுடைய ஆட்சியில் சிறப்பாகச் செய்ததாகச் சொன்னார். தி.மு.க. ஆட்சியில், கிட்டத்தட்ட 2006 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் வந்துவிட்டது. அதற்குப்பிறகு அவர்களுடைய ஆட்சியில் திட்டம் முழுமையாக வந்துவிட்டது. தி.மு.க. ஆட்சியில்,

2006–2011–ல் பார்த்தீர்களென்றால், மொத்தமாகவே, 71.07 கோடி மனித சக்தி நாட்களை உருவாக்கினார்கள். மொத்தம் அவர்கள் ரூ.5,760 கோடிதான் செலவு செய்தார்கள். அன்றைக்கு அந்தத் துறைக்கு இன்றைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு வகித்து வந்தார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், கிட்டத்தட்ட 173.81 கோடி மனித சக்தி நாட்களை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். அதேபோல் அதற்கு செலவு செய்த தொகை 20 ஆயிரத்து 597 கோடி ரூபாய். அதற்குப் பின்னால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 2016–2017 முதல் 29–2–2020 வரையில், கிட்டத்தட்ட 110 கோடி மனித சக்தி நாட்களை உருவாக்கியிருக்கிறோம். இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக எண்ணற்ற தேசிய விருதுகளை ஆரம்பத்திலிருந்தே நாங்கள் வாங்கியிருக்கிறோம். தேசிய விருதுகளைப் பொறுத்தவரையில், உள்ளாட்சித் துறையில் மட்டும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதும் சரி, அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி செயல்படும் இப்போதும் சரி, 123 தேசிய விருதுகளை வாங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதிருக்கிற மத்திய அரசில் மட்டுமல்ல; மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோதும் விருதுகளை வாங்கியிருக்கிறோம். இன்றைக்கு பல்வேறு சாதனைகளைப் புரிந்து, 123 விருதுகளை வாங்கியிருக்கிறோம். இந்தத் திட்டத்திலும் தொடர்ந்து சாதனைகள் புரிந்து, தொடர்ந்து விருதுகளை நாங்கள் வாங்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயனாளிகளுக்கு சம்பளம் அவர்களுடைய Bank account–ல் நேரடியாகப் போய்விடுகிறது என்று சொல்கிறார். இதைச் சொல்லும்போது, கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால், அந்த வேலைக்குச் செல்பவர்கள் பாவம். ஏழைகள்; வயதான கிழவிகள்; அவர்களுக்குக் கண் தெரியாது. அவர்கள் பாவம்; ஏதோ ஒரு வேலையைச் செய்துவிட்டு, சம்பளம்

வாங்கிக் கொண்டு போவார்கள். அவர்களுக்கு bank–ல் சம்பளம் போட்டால், வங்கிகளுக்கு அவர்கள் செல்கிறபோது, “பெரிய account holder; போ” என்று சொல்கிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள். Bank–க்குப் போய் slip போட்டு பணம் எடுக்க வேண்டும். அவர்களுக்கு அது தெரியுமா? அவர்கள் கிராமத்துக்காரர்கள்; கூலி வேலை செய்கிறவர்கள். ஏதோ கையில் வருகிறதென்றால், அதை வாங்கிக் கொண்டு, அன்றைக்கு அரிசி வாங்கிச் சமைத்துச் சாப்பிடுவார்கள். அவர்கள் bank–க்குப் போய் பணத்தை வாங்குவதென்றால், என்றைக்கு நடப்பது அது? நீங்களும் கிராமத்துக்காரர்; அவரும் கிராமத்துக்காரர்; நானும் கிராமத்துக்காரன். இதை நாமெல்லாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் பாவம், அன்றாடங்காய்ச்சிகள். அவர்களுடைய சம்பளம் bank account–க்கு போய்விடுகிறது என்று சொன்னால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார். இதை நாடாளுமன்றத்திலே அவருடைய கட்சி உறுப்பினர்கள் பேச வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், உங்களுடைய கட்சியைச் சேர்ந்த 38 உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய மக்களுடைய பிரச்சினையை நாடாளுமன்றத்திலே பேசினால், பயனாளிகளுக்கு நேரடியாகப் பணம் போய்ச் சேர்ந்துவிடும். இது மத்திய அரசினுடைய திட்டமாக இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசு சில வழிமுறைகளை வகுத்து, பயனாளிகளுக்குச் சம்பளம் எந்த முறையில் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதின் அடிப்படையிலேதான், அவர்களுடைய சம்பளம் bank–க்குப் போகிறது. ஆகவே, வங்கிகளின்மூலம் அவர்களுடைய சம்பளம் போக வேண்டாம்; மக்களுக்கு நேராகப் போக வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்திச் சொல்லுங்கள். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் உத்தரவு போட்டு, அந்தப் பணத்தை அனுப்பி வைக்கின்றபோது, நீங்கள் கேட்பதுபோன்று மாநில அரசு உரிய முறையிலே அந்தச் சம்பளத்தை நேரடியாக பயனாளிகளுக்குக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுசம்பந்தமாக பாராளுமன்றத்திலே பல முறை பேசியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்து, LED விளக்குகள் அமைப்பதைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தபோதும் இப்படித்தான் பேசினீர்கள். “கிட்டத்தட்ட 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்துகொண்டு, என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? என்ன செய்துகொண்டிருந்தீர்கள்” என்று கேட்டீர்கள். அதைத்தான் மக்கள் இப்போது கேட்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்கள் சொன்ன கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் நாங்களும் கேட்கிறோம். உங்கள் கட்சியைச் சார்ந்த 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இங்கே வங்கிகள்மூலம் சம்பளம் பெறும் முறையில் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கின்றார். எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உரிய முறையிலே எடுத்துச் சொல்லி, அதை வாதாடிப் பெற்றுத் தரவேண்டியது உங்களுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம். இதுகுறித்து எத்தனை முறை பேசினார்கள் என்று தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரைக்கும், எந்தப் பத்திரிகையிலும் நான் பார்க்கவில்லை. அப்படி இருந்தால் கொடுங்கள்; நாங்கள் பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

பிற்பகல் 12–35

திரு. அர. சக்கரபாணி: கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் 33–ல், ஊராட்சிகளில் உள்ள குழல் விளக்குகளுக்கு மாற்றாக, 5 ஆண்டுக்கால உத்தரவாதத்துடன்கூடிய LED விளக்குகள் வாங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே LED விளக்குகள் எந்த நிதியிலிருந்து

வாங்கப்பட்டன என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை. LED விளக்குகள் வாங்குவதற்கு அரசு எந்த நிதியையும் ஒதுக்காமல், 14–வது நிதிக் குழு மானியத்திலிருந்து ஊராட்சிக்கு வழங்க வேண்டிய நிதியைப் பிடித்தம் செய்து வாங்கியுள்ளது.

கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் பக்க எண் 33–ல் தமிழகத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 20 இலட்சத்து 79 ஆயிரம் தெரு விளக்குகள், LED விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். **

ஐந்து ஆண்டு காலம் உத்தரவாதம் என்று கொள்முதல் செய்யப்பட்ட LED விளக்குகளில், பல்வேறு LED விளக்குகள் பழுதடைந்திருக்கின்றன. நாங்கள் கிராமங்களுக்குச் செல்கின்றோம். கிராமங்களுக்குச் செல்லும்போது, அந்த lights–ஐ எல்லாம் பார்க்கின்றபோது, 'மினிச், மினிச்' என்று எரிகிறது. ** ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஒப்பந்ததாரருக்குக் கொடுத்து விடுகிறீர்கள். அந்த ஒப்பந்ததாரர், அந்த லைட்டை 3 வருடங்களாகப் பழுதுபார்த்து மாற்றுகிறார்கள். எங்கு பார்த்தாலும், ஊராட்சி மன்ற அலுவலகமாக இருந்தாலும் சரி, ஒன்றிய அலுவலகத்திலும் சரி, அங்கு அந்த லைட் எல்லாம் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு உள்ளாட்சி மன்றங்களிலே மக்கள் பிரதிநிதிகள் வந்துவிட்டார்கள். 1996–2016 வரை 20 வருடங்கள் உள்ளாட்சி மன்றங்களில் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருந்திருக்கின்றார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் உள்ளாட்சி மன்றத் தலைவர்களாக இருந்திருக்கின்றார்கள். அப்பொழுதெல்லாம் என்ன நடந்தது? உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊர்களுக்குச் சென்று, தெரு விளக்குகள் ஏதேனும் எரியவில்லையென்றால், உடனே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடைகளுக்குச் சென்று, தேவையான விளக்குகளை வாங்கி, உடனே அந்த மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும்வண்ணமாக பொருத்திக் கொடுத்தார்கள். இன்றைக்குப் போய்விட்டு வந்தால் அடுத்த நாளே அங்கு light எரியும். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்தவுடன்தான் பதில் சொல்ல வேண்டுமென்று நான் நினைத்தேன். ஆனால், அவர் தொடர்ந்து குற்றச்சாட்டாகச் சொல்லிக் கொண்டிருப்பதால், பதில் சொல்கிறேன். LED விளக்குகளைப் பொறுத்தவரையில், நிறைய பேர் இதுபோன்று சொல்கிறார்கள். இதுகுறித்து சில பேர் பத்திரிகைகளிலும் தவறாக செய்திகளைக் கொடுத்துவருவது போன்ற சூழ்நிலையும் இருக்கிறது. இதற்கு நான் விளக்கமாக பதில் சொல்கிறேன்.

LED விளக்குகளைப் பொறுத்தவரையில், 2014–2015 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்துத் தெரு விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்ற வேண்டுமென்று விதி 110–ன்கீழ் அறிவித்தார்கள். அது எதற்காக என்றால், அந்த நேரத்திலே தமிழகத்தில் இருந்த தெரு விளக்குகளினால் அதிகமான மின்சாரம் செலவானது. கடுமையாக இருந்த மின்பற்றாக்குறையை மாற்றுவதற்கு அப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மின்சாரத் துறை மூலமாக எடுத்தார்கள். முழுமையாக மின் வெட்டு இல்லாத மாநிலமாக ஆக்குவதற்கு இதையும் அறிவித்தார்கள். இதற்கு முன்பு உங்களுடைய தி.மு.க. ஆட்சியிலே இருந்த நிலையை நீங்கள் சொன்னீர்கள். 2 மாவட்டங்களில் தி.மு.க. ஆட்சியிலே, 2 பேரூராட்சிகள், 1 நகராட்சியிலே இதைவிட அதிகமான விலையில் கிட்டத்தட்ட 6,300 ரூபாய்க்கு நீங்கள் கொள்முதல் செய்திருக்கிறீர்கள். என்னிடம் அதற்கான விவரங்கள் இருக்கின்றன. நீங்கள் அப்போது அந்தக் காலத்திலே இருந்த நிலைமையைச் சொன்னீர்களல்லவா! இதைவிட அதிகமான விலையில் நீங்கள் வாங்கிய விவரம் என்னிடம் இருக்கிறது. அதற்குப்பிறகு விலைவாசி உயர்வெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. இதில் நாங்கள் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரியிருக்கிறோம். அனைத்தும் வெளிப்படையான tender–தான். ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்கள்; யார் விலை குறைவாகக் கேட்கின்றார்களோ, அவர்களிடம் வேலையைக் கொடுத்துவிடுகிறார்கள். அது ஒன்று.

அதேபோல, பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தளவில், 2 இலட்சத்து 85 ஆயிரத்து 828 விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2014–2015 முதல் திறந்தமுறை மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள்மூலம் தரம் வாய்ந்த மின் சேமிப்பு வகை LED விளக்குகள் கொள்முதல் செய்யப்பட்டன. மேலும், இவை அனைத்தும் திரும்பப்பெறும் வங்கி உத்தரவாதத்துடன் வாங்கப்பட்டுள்ளன. சென்னையில் ஏழு வருட warranty, guarantee ஏற்படுத்தப்பட்டுள்ளது. LED விளக்குகள் குறித்த பிரச்சினைகளை ஒப்பந்ததாரரே சரிசெய்ய வேண்டும்.

அதேபோல, நீங்கள் சொன்னீர்களல்லவா! ஆரம்பத்தில் கிராமங்களில் LED விளக்குகள் போடும்போது earth wire இருந்தது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே Earth wire–ஐ மாற்றுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, யார் குறைவாக கோருகிறார்களோ, அவர்களே அந்தந்த மாவட்டங்களில் செய்கிறார்கள். LED விளக்குகளைப் பொறுத்தவரையில், அதை மாற்றிக்கொள்வதற்கு 5 வருடங்கள் guarantee கொடுக்கப்படுகிறது. இதற்குக்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தனி meeting போட்டு, earth wire–ஐ எல்லாம் உடனடியாகச் சரி செய்வதற்கு உத்தரவிட்டார்.

அதேபோல, எந்த ஊராட்சிக்குச் சென்றாலும் சரி, நீங்கள் ஆட்சியில் இருக்கும்போதும் சரி, நாங்கள் இருக்கும்போதும் சரி, எவ்வளவு விளக்குகள் எரியாமல் போகின்றன என்றால், குறிப்பிட்ட காலத்திற்குள் 7 சதவிகிதம், 10 சதவிகிதம் அளவிலான விளக்குகள் பழுதாகிவிடும். இது எல்லா காலங்களிலும் இருந்திருக்கிறது. மின்னழுத்தம் அதிகமாக வந்தாலும் விளக்கு எரியாமல் போய்விடும். அவ்வளவுதான்; இந்த நிலைமை எங்கள் காலத்திலும் இருந்திருக்கிறது; உங்கள் காலத்திலும் இருந்திருக்கிறது.

பிற்பகல் 12–40

அதேபோல, இன்றைக்கு சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்புச் செலவு நிறைய ஏற்படாது. ஏற்கெனவே அமைக்கப்பட்ட விளக்குகள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோல, நம்முடைய நகராட்சி நிருவாகத் துறையைப் பொறுத்தவரையில், 121 நகராட்சிகள் மற்றும் 14 மாநகராட்சிகளில், 7 இலட்சத்து 63 ஆயிரத்து 644 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. LED விளக்குகள் அமைப்பதை எல்லாத்

திட்டங்களிலும் எடுத்திருக்கிறோம். கிராமங்களுக்கு வழங்குகின்ற நிதிகளில் மட்டுமல்ல; IUDM உள்ளிட்ட எல்லா திட்டங்களிலும் அது எடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பேரூராட்சிகளில் குறைவாகத்தான் மாற்றியிருக்கிறோம். பேரூராட்சிகளில் கொஞ்சம் குறைவாகத்தான் LED விளக்குகளை மாற்ற வேண்டியிருக்கிறது.

இதற்கு முன்புகூட நீதிமன்றத்தில் LED விளக்குகள் சம்பந்தமாக ஒரு வழக்கு போட்டார்கள். LED டெண்டர் சம்பந்தமான அந்த வழக்கில், நீதியரசர் "இது சரியாகத்தான் நடந்திருக்கிறது" என்று சொல்லி, நீதிமன்ற உத்தரவை எங்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோன்று, எல்லா கிராமங்களிலும், இன்றைக்குத் தெரு விளக்குகளெல்லாம் LED விளக்குகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக, இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் மொத்தமாக கிட்டத்தட்ட 610 கோடி ரூபாய் அளவிற்கு மின் சேமிப்பு கிடைத்திருக்கிறது. LED விளக்குகளை மாற்றியதில், மின் சேமிப்பாக 610 கோடி ரூபாய் சேமிக்கப்படுகிறது என்பது ஒரு மிகப் பெரிய தொகையாகும். இதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சிறந்த நடவடிக்கைக்கு உதாரணம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசும்போது ** என்று சொன்னார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது வெளிப்படையான ஒப்பந்தம். இதில் எந்தவிதமான ஒளிவு, மறைவும் கிடையாது. யார் குறைவாக ஒப்பந்தம் கேட்டார்களோ, அவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட, 5 வருடங்களுக்குமேல் warranty, guarantee இருக்கிறது. அவர்களுடைய செலவிலேதான் பழுதுகளை சரிசெய்ய வேண்டும். இதுபோன்று சரியான முறையில் இந்தத் துறை போய்க் கொண்டிருக்கிறது. கிராமங்கள்தோறும் LED விளக்குகள் மாற்றப்பட்டதற்குப்பிறகு 610 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு மின் சேமிப்பு கிடைத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்களைத்தான் நான் பேச அழைத்திருக்கிறேன். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் கேட்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசினீர்களென்றால், அதற்கு ஏன் நான் இங்கே உட்கார்ந்து கொண்டு சபையை நடத்த வேண்டும்? (குறுக்கீடுகள்) என்ன பிரயோஜனம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. பலமுறை நான் எச்சரித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) மூத்த உறுப்பினர்களும் அதேபோன்றுதான் செய்கிறீர்கள், புதிதாக வந்த உறுப்பினர்களும் அதேபோன்றுதான் செய்கிறீர்கள். இது தவறு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, இந்த LED lights–ஐ இனி ஒப்பந்ததாரர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ** (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

திரு. அர. சக்கரபாணி: நான் ** என்று சொல்லவில்லை. ** என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், ** என்று குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல, இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மொத்தமாக, எல்லோரும் எழுந்து நின்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் விவாதம் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) பேசிய உறுப்பினர் இங்கே இருக்கின்றார். அவர் பேசியதிலே இருக்கின்ற குறைகளை நான் சுட்டிக்காட்டுகிறேன். (குறுக்கீடுகள்) அவர் ** என்று சொல்கிறார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ** என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) அப்படியென்றால், அதற்குரிய ஆதாரங்களை என்னிடத்திலே கொண்டுவந்து, முறையாகக் காட்டி, பிறகு அதைச் சொல்லியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) ஆகவே, அவர் கூறியது தவறு. அவர் அப்படிப் பேச வேண்டுமென்றால், என்னிடத்திலே அதற்கான ஆதாரங்களைக் கொண்டுவந்து கொடுங்கள். அதை நான் பார்த்துவிட்டு, பின்னர் பேசுவதற்கு அனுமதி தருகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** சம்பந்தமாக சொன்ன விவரங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நான் சொன்னது உட்பட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய உத்தரவை நான் ஏற்றுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு ** என்பதைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். பின்னர் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். உங்களைப் பொறுத்தவரைக்கும், நாங்கள் எந்தத் திட்டம் கொண்டுவந்தாலும் நீங்கள் குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டேதான் இருப்பீர்கள். நீங்கள் என்ன சொன்னாலும் நாங்கள் கைகளைக் கட்டிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா? நீங்கள் எந்தத் திட்டத்தை எங்களை செய்ய விடுகிறீர்கள்? எல்லாத் துறைகளும் எல்லாத் திட்டங்களிலும் இன்றைக்கு மத்திய அரசின் விருதுகளை வாங்கி சாதனை படைத்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல திட்டங்களைச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செயல்படுத்தி வருகிறது. எந்தத் திட்டத்தை எடுத்தாலும், அதை எதிர்த்து இங்கே பேசுகிறீர்கள்; இல்லையென்றால், அறிக்கை விடுகிறீர்கள். நீங்கள் பேசுவதைக் கேட்டு, பேசாமல் கைகளைக் கட்டிக் கொண்டிருப்பதற்காகவா நாங்கள் அமைச்சராக இருக்கிறோம். ஆகவே, எந்தத் திட்டத்தையும் நாங்கள் செயல்படுத்துவதற்கு நீங்கள் விடப்போவதில்லை. அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை.

இதைப் பொறுத்தவரையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒருவர் LED விளக்குகள் தொடர்பாக வழக்கு போட்டிருந்தார். ஒப்பந்தப்புள்ளி கோரியது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு W.P. No. 7749/2017 தொடரப்பட்டது. பின்னர், சென்னை உயர் நீதிமன்றம் 9–8–2017 நாளிட்ட தனது தீர்ப்புரையில், LED விளக்குகள் கொள்முதல் செய்யப்பட்டதில் பின்பற்றப்பட்ட நடைமுறை சரி என்று சொல்லியிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், நாங்கள் open tenderதான் கோரியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள். (குறுக்கீடு) அதை நீக்கிவிட்டேன், விட்டுவிடுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிக்கு வழங்க வேண்டிய 14–வது நிதிக் குழு நிதியிலிருந்து மாவட்ட அளவில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்கிறார். இவை அனைத்திற்குமே மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரின் தலைமையில்தான் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி கோருவதில் contractor என்ன quote செய்கிறார்களோ, அந்த விலையில்தான் purchase செய்கிறார்கள். ஆதாரமில்லாத குற்றச்சாட்டைத் திரும்பவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் அதை அனுமதிக்கக் கூடாது. அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னர், விதி 110–ன்கீழ் அறிவித்ததற்கேற்ப, இன்றைக்கு கிராமங்கள்தோறும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு எல்லாப் பக்கங்களிலும் நவீன குப்பைத் தொட்டி மட்டுமல்ல; முன்பு கிராமங்களில் வண்டிகள் கிடையாது. ஏதாவது ஒருசில பஞ்சாயத்துகளில் மட்டும் tractor வைத்திருப்பார்கள். இப்பொழுது எல்லாப் பக்கங்களிலும் வண்டி, வாகனங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் மட்டும் ஒரு நாளைக்கு 19,000 டன் குப்பை சேகரிக்கப்படுகிறது. திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் என்பது, மிகப் பெரிய சவால். அதிலே எந்தத் தவறும் நடைபெறவில்லை. நீங்கள் ஆதாரமில்லாமல் சொல்கிறீர்கள். சிலர் நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். ஆதாரமில்லாமல் சொல்வதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகவே, சரியான முறையில்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. ஒப்பந்த விதிமுறைப்படி எந்த ஒப்பந்ததாரர் குறைவாக quote செய்திருக்கிறாரோ, அவருக்குத்தான் கொடுக்கிறோம். அதுமட்டுமல்ல; திடக் கழிவு மேலாண்மைத் திட்டம், மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. அதை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களுடைய அரசு அனைத்துப் பகுதிகளிலும் இன்றைக்கு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. நகரத்தில் மட்டும்தான், மாநகராட்சியில் மட்டும்தான் அதிகமாக குப்பைத் தொட்டிகள், tractor, scooter, auto போன்ற எல்லா வாகனங்களும் இருக்கும். இன்றைக்கு கிராமங்களிலும் அவற்றையெல்லாம் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு கிராமங்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய நிதியை, ஊராட்சிகளுக்கு ஒதுக்கக்கூடிய நிதியை, ஒன்றியங்களுக்கு ஒதுக்கக்கூடிய நிதியை நாம் எடுத்துக்கொள்வதில்லை. அந்தந்த ஊராட்சிகளுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக இந்த நிதியைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். எங்களிடம் ஆதாரமிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மாவட்ட ஆட்சியர் மூலமாக, அந்த ஊராட்சி மற்றும் ஒன்றியத்திற்குத்தான் அந்த நிதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது என்ன வழிமுறையைப் பின்பற்றினீர்களோ, அதையேதான் நாங்களும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, இப்போது நேரம் 12–48. நீங்கள் 12–00 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். 48 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நேரமில்லை; சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, இருங்கள். (குறுக்கீடு) திரு. வேலு, உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் 12–00 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள். குறுக்கீடு இருந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், என்னுடைய அறைக்கு காலையிலே வந்தபோது, உங்களுக்குப் பேசுவதற்கு 30 நிமிடங்கள் தருவதாகச் சொன்னேன். இப்பொழுது 18 நிமிடங்கள் கூடுதலாக உங்களுக்குத் தந்துவிட்டேன். இடையிலே அமைச்சர் அவர்களின் குறுக்கீடு இருந்த காரணத்தினால், உங்களுக்கு அனுமதியளித்தேன். நீங்கள் தொடர்ந்து பேசும்போது சுமுகமாகப் பேசியிருந்தால் அமைச்சர் அவர்களின் குறுக்கீடு இருந்திருக்காது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) நீங்கள் ஆதாரமில்லாமல் சில விவரங்களைச் சொல்கிறீர்கள். அதை நான் நீக்க வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுவெல்லாம் காரணமல்ல. நீங்கள் இன்னும் 2 நிமிடங்களில் உரையை முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–50

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசுகின்றபோது, உள்ளாட்சித் துறையிலே பல்வேறு பொருட்களை வாங்குவதில் ** என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கின்றார்கள். தமிழக அரசால் Transparency in Tenders Act–ன்படிதான் அனைத்துப் பொருட்களும் வாங்கப்படுகின்றன. அதிலே குறைந்த விலையை மட்டும் பார்ப்பதில்லை; அதில் quality–ஐயும் பார்க்கின்றோம். விலையை மட்டும் பார்ப்பது இல்லை; தரமான பொருளாக வாங்க வேண்டும். அந்தப் பொருள் துறையின் மூலமாக வாங்கப்படுகிறது. அதில் ஏதாவது முறைகேடு நடந்திருந்தால், அதனை விசாரிப்பதற்கு DVAC, Lok Ayukta போன்ற தனி அமைப்புகள் இருக்கின்றன. நீங்கள் எதற்கெடுத்தாலும் நீதிமன்றங்களுக்குச் செல்கின்றீர்கள். உள்ளாட்சித் துறையில் பொருட்கள் வாங்குவது தொடர்பாக வழக்குகளைப் போட்டிருக்கின்றீர்கள். வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்போது நீங்கள் சொல்லியிருக்கின்ற அந்த LED light கொள்முதல் செய்வதாக இருக்கட்டும்; குப்பைத் தொட்டி வாங்குவதாக இருக்கட்டும்; எங்காவது முறைகேடு நடந்திருக்கின்றது; இந்த இடத்தில் இப்படி முறைகேடு நடந்திருக்கின்றது என்று புகார் கொடுத்திருக்கின்றீர்களா? எங்காவது விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றதா? எதுவும் இல்லாமல், பொத்தாம் பொதுவாக இங்கே இது நடந்திருக்கின்றது; அங்கே அதில் தவறு நடந்திருக்கின்றது என்று சொல்வது சரியல்ல. நீங்கள் இந்தச் சட்டமன்றத்தைப் பயன்படுத்தி, அரசியல் இலாபத்திற்காக, தலைப்புச் செய்தியாக வர வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட குற்றச்சாட்டை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக் கூடாது. ஆதாரம் இருந்தால், ஆதாரத்தோடு பேச வேண்டும். "இந்த ஒப்பந்தத்தில், இந்தந்த இடங்களில், இந்த முறைகேடு நடைபெற்றிருக்கின்றது; அதற்கான ஆதாரம் எங்களிடம் இருக்கின்றது" என்று சொல்லி, ஆதாரத்தை தங்களிடம் கொடுத்துவிட்டுதான் அவர் பேசி இருக்க வேண்டும். எந்த ஆதாரமும் இல்லாமல், பொத்தாம் பொதுவாகப் பேசுகின்ற இவை அத்தனையையும் நீக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், இல்லை; அப்படி இல்லை. (குறுக்கீடு) இல்லை; அதில்லை. (குறுக்கீடு) திரு. ஆஸ்டின் உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அதற்கான ஆதாரங்களைத் தந்துவிட்டு பேச வேண்டும் என்பது விதி. அது எல்லோருக்கும் தெரியும். இது கொறடா அவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே, அதுபோன்ற விவரங்கள் இருந்தால், அதை என்னிடம் கொடுங்கள். அதை நான் பார்த்துவிட்டு, விளக்கங்கள் இருந்தால் நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். மேற்கொண்டு நீங்கள் இதுபோன்று ஆதாரம் இல்லாமல் பேசினால், அது அவைக் குறிப்பில் ஏறாது என்று கூறி, உங்களது உரையினை இன்னும் ஒரு நிமிடத்தில் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் எப்படிப் பேச முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி, நீங்கள் இரண்டாவதாகப் பேசியதையும் நான் பார்க்க வேண்டியுள்ளது.

திரு. அர. சக்கரபாணி: நான் ** என்றுதான் பேசி இருக்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. அர. சக்கரபாணி: ** என்றுதான் சொல்லியிருக்கின்றேன். ** என்று சொல்லவில்லை. அரசாங்கத்திற்கு இழப்பு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அவைக் குறிப்பினை நான் கொண்டுவரச் சொல்லியிருக்கின்றேன். அதை நான் பார்க்கின்றேன். பார்த்ததற்குப் பின்னால், அது அவைக் குறிப்பில் இருக்கலாமா, வேண்டாமா என்பதைப் பற்றி இன்னும் சற்று நேரத்தில் சொல்கின்றேன். மேற்கொண்டு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அரசாங்கத்தின்மீது குற்றம் சொல்கிறபோது, முறையாக அதற்கான ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசினால் நான் அனுமதி அளிப்பேன். எந்த ஆதாரமும் இல்லாமல், குற்றச்சாட்டு என்று வருகின்றபோது, அதனை நீக்குவதைத் தவிர, எனக்கு வேறு வழியில்லை. ஆகவே, குற்றச்சாட்டுகளை நீங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு முறையாக எப்படிக் கொண்டு வரவேண்டுமோ, அப்படிக் கொண்டு வாருங்கள். ஆனால், அதை விடுத்து, ஆதாரம் இல்லாமல், குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 141–ல், 2019–2020 ஆம் ஆண்டு குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றினைத் தூர் வாரும் பணிகளை மேற்கொள்ள ரூ.1,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை குடிமராமத்துப் பணிகளுக்கு இந்த அரசு எந்தவித நிதியையும் ஒதுக்கீடு செய்யவில்லை. மாறாக, உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அவசர அவசரமாக பல மாவட்டங்களில் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, மாவட்ட ஊராட்சிப் பொது நிதி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து குடிமராமத்துப் பணிகளுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. இதனால் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொது மக்களுக்குத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தேவையான அத்தியாவசியப் பணிகளைச் செய்ய முடியாமல் இன்றைக்குப் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல; உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், "நீங்கள் தேர்தலைக் கண்டு பயப்படுகின்றீர்கள்; அஞ்சுகின்றீர்கள்" என்று எங்களைப் பார்த்து இங்கே இருக்கின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலமுறை சொன்னார்கள். எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு உரிய இட ஒதுக்கீடு வழங்கி, அதனடிப்படையில்தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சொன்னார். பின்னர், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, 27 மாவட்டங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. டிசம்பர் 27 மற்றும் 29 தேதிகளில் அந்தத் தேர்தல் நடைபெற்றது. ஜனவரி 2 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இது தேய் பிறை என்றெல்லாம் சில பேர் சொன்னார்கள். ஆனால், நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் மாவட்டக் கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் 243 இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. ஆனால், அ.தி.மு.க. 214 இடங்களில்தான் வெற்றி பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றியக் கவுன்சிலர் தேர்தலைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக 2,100 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், அ.தி.மு.க. 1,781 இடங்களில்தான் வெற்றி பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) "இது தேய் பிறையா? வளர் பிறையா?" என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–55

அதுமட்டுமல்ல; ஆளுங்கட்சியாக நீங்கள் என்னென்ன அதிகாரங்களைப் பயன்படுத்தினீர்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். 1986–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த நேரத்தில், உள்ளாட்சித் தேர்தலில், அன்றைக்கு தி.மு.க. ஒன்றியப் பெருந்தலைவர் மற்றும் நகராட்சித் தேர்தல்களில் அதிகமான இடங்களில் வெற்றி பெற்றது. 34 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கின்ற நேரத்தில், எங்கள் கழகத் தலைவர் தலைமையில் பல சட்டப் போராட்டங்களை நடத்தி, எதிர்க்கட்சிகள் இந்தத் தேர்தலை எதிர்கொண்டன. இந்தத் தேர்தலில் மக்கள் எங்களுக்கு நல்லமுறையில் வாய்ப்பளித்து, எங்களை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு இந்த உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், தங்கள் பகுதிகளில்

வளர்ச்சிப் பணிகளைச் செய்ய நீங்கள் போதுமான நிதியினை வழங்க வேண்டும். அதோடு எங்கள் தளபதி அவர்கள், கடந்த ஜனவரி 31 ஆம் தேதி, கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளையெல்லாம் திருச்சியில் அழைத்து, அவர்களையெல்லாம் கௌரவித்து, அவர்களுக்கு பல்வேறு அறிவுரைகளைக் கூறினார்கள். 2006–2011 ஆட்சிக் காலத்தில், அவர் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த சமயத்தில், அன்றைக்கு உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்களையெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு எதையும் சொல்லவில்லை. வெற்றி பெற்றவர்களையெல்லாம் அழைத்து, நான்கு மண்டலமாகப் பிரித்து கூட்டங்கள் நடத்தி, அவர்களுக்கெல்லாம் ஆலோசனை வழங்கியதோடு, அவர்களும் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு வைத்தார்கள். பின்னர், அதற்கென உயர்மட்டக் குழுவினை அமைத்து, அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றியவர், உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திய எங்கள் கழகத் தலைவர் அவர்கள். அதுமட்டுமல்ல; இன்றைக்கும் தேர்தலில் வெற்றி பெற்ற கழக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கெல்லாம் அறிவுரையாக, ஆலோசனையாக, அவர்களிடத்தில் என்ன சொன்னார் தெரியுமா? “நீங்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும்; வாக்களித்தவர்கள் சந்தோஷப்படுவதைவிட வாக்களிக்காதவர்கள் உங்களுடைய பணியைப் பார்த்து, உங்களுடைய செயலைப் பார்த்து பாராட்ட வேண்டும்; வாக்களிக்காதவர்கள் தவறு செய்துவிட்டோமோ என்று வருந்த வேண்டும்” என்று எங்கள் தலைவர் அவர்கள், அவர்களுக்கு அறிவுரை கூறினார். மேலும், அந்த உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கெல்லாம் ஒரு கேடயத்தையும், ‘உள்ளாட்சியின் உயிராட்சி உங்கள் கையில்’ என்ற தனது எழுச்சியுரை அடங்கிய கையேட்டினையும் அவர்களுக்கு வழங்கி கௌரவித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில், நாங்கள் மொத்தமாகத்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொன்னோம். ஆனால், இன்றைக்கு 9 மாவட்டங்களைத் தவிர்த்து, 27 மாவட்டங்களுக்கு மட்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்று தேர்தல் கமிஷன் முடிவு செய்திருந்தாலும், அரசு நினைத்திருந்தால்,

அன்றைக்குத் தலைமைச் செயலாளரை தேர்தல் கமிஷன் அலுவலர் வந்து பார்க்கிறபோது, இதனைத் தெரிவித்திருக்கலாம். அரசாங்கத்தினுடைய ஓர் அங்கம்தான் தலைமைச் செயலாளர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 1 மணி நேரம் ஆகிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: எனவே, நாங்கள் கேட்டது பேரூராட்சிகளாக இருந்தாலும் சரி, நகராட்சிகளாக இருந்தாலும் சரி, மாநகராட்சிகளாக இருந்தாலும்; ஒட்டுமொத்தமாக ஒரே கட்டத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொன்னோம். தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்திருக்கிறது; பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்திருக்கிறார்; தலைவர் கலைஞர் அவர்கள் இருந்திருக்கிறார்; புரட்சித் தலைவர் அவர்கள் இருந்திருக்கிறார்; உங்கள் அம்மையார்கூட ஆட்சியில் இருக்கும்போது இரண்டு முறை உள்ளாட்சித் தேர்தலை நடத்தினார்கள்; இப்படி பல்வேறு கட்டங்களாகத் தேர்தலை எங்கேயும், எப்போதும் நடத்தவில்லை. ஆனால், நீங்கள் இப்படி பிரித்து, பிரித்து தேர்தலை நடத்துகிறீர்கள். எனவே, இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, 2021–ல் . . . (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உரையை முடித்து விடுகிறாராம். மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எங்கள் அரசிடம் என்ன குறை இருக்கிறது; 2021–ல் நாங்கள்தான் ஆட்சிக்கு வரப்போகிறோம்" என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லாம் சொல்கிறார்கள். கனவு காண்கிறீர்கள். அது உங்கள் எண்ணம்; நம்பிக்கை. அதில் நான் தலையிட விரும்பவில்லை. எங்களுடைய எண்ணம், நம்பிக்கையெல்லாம் வேறு. இன்றைக்கு மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். இந்த அரசின்மீது எவ்வளவு கோபத்தில் இருக்கிறார்கள் என்பது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்மூலம் நமக்குத் தெரியும். அதோடு, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நடப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாக, இவற்றிற்கெல்லாம் நேரடித் தேர்தல் என்று சொன்னார்கள். 10 நாட்கள் கழித்து, மந்திரி சபை கூட்டத்தைக்கூட்டி, இவற்றிற்கெல்லாம் மறைமுகத் தேர்தல்

நடத்தப்படும் என்று சொல்கிறார். ஏன் அதற்குள் மன மாற்றம்? 2006–ல் நாங்களும் மறைமுகத் தேர்தல் நடத்தினோம்; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நீங்கள் நேரடித் தேர்தல் நடத்துவோம் என்று சொல்லிவிட்டு, 10 நாட்கள் கழித்து அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி மறைமுகத் தேர்தலை நடத்துவதற்கு ஏன் முடிவு செய்தீர்கள்? ஏன் தேர்தலைச் சந்திப்பதற்கு அச்சமா? (குறுக்கீடு) நான் சொல்கிறேன்;. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் நிலைமை அப்படித்தான் இருந்தது; அப்படித்தான் சொல்ல முடியும். அது மாறியபிறகுதான் சொல்லமுடியுமேயொழிய, அன்றைய நிலையிலே தேர்தல் முறை எப்படி இருந்ததோ அதைத்தான் நான் குறிப்பிட்டேன். அன்றையதினம் அப்படித்தான் இருந்தது. நிருபர்களிடம் அப்படித்தான் சொல்ல முடியும். அதைத்தான் நான் குறிப்பிட்டேன். பயத்தின் காரணமாக நாங்கள் செய்யவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றோம் என்று இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், ஏன் நீங்கள் இடைத் தேர்தலில் தோல்வியடைந்தீர்கள்? விக்கிரவாண்டியிலும், நாங்குநேரியிலும் எவ்வளவு வாக்குகள் வித்தியாசம்? அவை உங்களிடமிருந்த தொகுதிகள். மக்களுக்கு உண்மை நிலை புரிந்துவிட்டது. நான் ஏற்கெனவே பல முறை இதுகுறித்து சட்டமன்றத்திலும் பேசியிருக்கிறேன்; வெளியிலும் பேசியிருக்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலின்போது என்னென்ன வாக்குறுதிகள் இவர்கள் கொடுத்தார்கள் என்பது நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். நாங்குநேரி மற்றும் விக்கிரவாண்டி தொகுதிகளுக்கான சட்டமன்ற இடைத் தேர்தலின்போது மக்கள் உண்மையைப் புரிந்து கொண்டார்கள். உண்மையைப் புரிந்து கொண்ட காரணத்தினாலே, மிகப் பெரிய வெற்றியை எங்களுக்குத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, வேலூர் நாடாளுமன்றத் தேர்தலும் நடந்தது. அப்போது நீங்கள் பிரச்சாரம் செய்யும்போது, “ஏற்கெனவே வாங்கிய வாக்குகளைவிட கூடுதலான வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெறுவோம்” என்று சொன்னீர்கள். “இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெறுவோம்” என்று சொன்னீர்கள். ஆனால், வெறும் 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். 0.6 சதவிகித வாக்குகள்

வித்தியாசத்தில்தான் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். அப்போதுகூட வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் 6 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கியிருக்கின்றன. அந்த 6 தொகுதிகளில், 3 தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. மூன்று தொகுதிகள்தான் உங்கள் வசம் இருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–00

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். குடியாத்தத்தில் நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலில் உங்களுடைய வேட்பாளர் 28,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். அண்மையில் நடைபெற்ற வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டை இலைச் சின்னத்தில் 12,000 வாக்குகளைக் கூடுதலாக அந்த தொகுதியில் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அணைக்கட்டு தொகுதியில், 2016 ஆம் ஆண்டு தேர்தலின்போது, அதிக வாக்குகளைப் பெற்று உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் வெற்றி பெற்றார். ஆனால், அண்மையில் நடைபெற்ற வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில், 9,500 என்ற அளவில், குறைவான வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்களுடைய செல்வாக்கு கூடியிருக்கிறதேயொழிய, என்றுமே குறையவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்றுதான், உங்கள் வசமிருந்த விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியை, மக்கள் இப்போது எங்களிடத்தில் வழங்கியிருக்கிறார்கள். நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியையும் காங்கிரஸ் கட்சியிடமிருந்து எங்களிடத்தில் வழங்கியிருக்கிறார்கள். எனவே, மக்களிடத்தில் எங்களுடைய செல்வாக்கு எப்பொழுதும் சரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் நிறைவேற்ற முடியாத கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்த காரணத்தால்தான், அந்த அளவிற்கு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றீர்கள்.

இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், என்னுடைய சொந்த பஞ்சாயத்தில், எங்களுக்கு வாக்குகள் குறையவேயில்லை. அங்கு நாடாளுமன்றத் தேர்தலில் 142 வாக்குகள் குறைவாகப் பெற்றோம். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், எங்கள் பகுதி முழுவதும், விவசாயம் நிறைந்த பகுதி;

வேளாண் பெருமக்கள் நிறைந்த பகுதி. நீங்கள் என்ன அறிவிப்பு கொடுத்தீர்கள்? தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள். அதேபோல, கூட்டுறவுச் சங்கங்களில் பெற்ற கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவித்தீர்கள். 5 சவரனுக்குக் கீழே பெறப்பட்ட கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தீர்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மட்டுமல்லாமல், தனியார் வங்கிகளில் வாங்கப்பட்ட கடன்களும் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவித்து தேர்தல் பிரச்சாரம் செய்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஆகவே, இந்த வாக்குறுதிகளையெல்லாம் மக்கள் நம்பி உங்களுக்கு வாக்களித்தார்கள். தற்போது அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில், என்னுடைய சொந்த கிராமத்தில் ஒன்றியக் கவுன்சிலர் தேர்தலில் 2,220 votes leading–ல் நாங்கள் வெற்றிபெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட கவுன்சிலர் தேர்தலில் 1,809 வாக்குகள் அதிகம். இப்போது மக்களுக்கு உண்மை தெரிந்துவிட்டது. மக்கள் உண்மையைத் தெரிந்துகொண்ட காரணத்தினால், எங்களை ஆதரித்து இவ்வளவு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் காலத்திலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சரிவில்லை; என்றைக்கும் வெற்றிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், “கவர்ச்சிகரமான திட்டங்களை, வாக்குறுதிகளைச் சொல்லி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றீர்கள்; வெற்றி பெற்றீர்கள்” என்று இந்த அவையிலே தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) எனவே, அதற்கு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் விரைவில்,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது, இரு பக்கங்களிலும் உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் 2021 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு, (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களையெல்லாம், எங்களது ஆட்சியின் மூலமாகவும், மத்திய அரசின் மூலமாகவும் நிச்சயமாக நிறைவேற்றுவோம். அதில் எந்தவித சந்தேகமும் படவேண்டிய அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலின்போது அறிவிக்க வேண்டியதை இப்போது எதற்கு அறிவித்தீர்கள்? இடைத் தேர்தலின்போது அந்த அறிவிப்புகளை நீங்கள் ஏன் செய்தீர்கள்? அதுமட்டுமல்ல; அந்தத் திட்டங்களை உங்களால் நிறைவேற்ற முடியாது. நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லை. நீங்கள் ஆட்சியில் இல்லாதபோது, கவர்ச்சிகரமான திட்டங்களை, மக்களை ஏமாற்றுவதற்காகத்தானே அறிவித்திருக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 2021 ஆம் ஆண்டு நடக்கவிருப்பது பொதுத் தேர்தல். அப்பொழுது நீங்கள் வாக்குறுதி கொடுக்கலாம். அதில் ஒரு நியாயம் இருக்கிறது. தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு நீங்கள் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றலாம் என்று சொல்லலாம். ஆனால், இப்பொழுது, ஆட்சிப் பொறுப்பில் இருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால், நாங்கள் எந்த அறிவிப்பையும் கொடுக்கவில்லை. ஏனென்றால், நீங்கள் நிறைவேற்ற முடியாத கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து, (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் எழுந்து குறுக்கிட்டுப் பேச முயன்றார்.)

நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் குறுக்கிட்டுப் பேசினால் என்ன அர்த்தம்? எப்பொழுது பார்த்தாலும் நீங்கள் எழுந்து என்னுடைய பேச்சில் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இதெல்லாம் தவறு.

(ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்துநின்று ஒருவரை நோக்கி ஒருவர் கையை நீட்டிப் பேசிக் கொண்டிருந்தனர்.)

இதில் என்ன அர்த்தம் இருக்கிறது? நீங்கள் எப்பொழுது பார்த்தாலும் குறுக்கிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எப்பொழுது பார்த்தாலும், யார் பேசினாலும், நீங்கள் குறுக்கிட்டுப் பேசுகிறீர்கள்.

7. உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்களை 16–3–2020 அன்று அவையிலிருந்து வெளியேற்ற பேரவைத் தலைவர் ஆணை—நிறுத்தி வைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர், சற்று பொறுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம்; சற்று பொறுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் அவையில் பல முறை உட்கார்ந்துகொண்டே பேசுவது முறையல்ல. அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அனைத்து உறுப்பினர்களும் பொறுமையாகக் கேட்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அவையிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் அமைதி காப்பதுதான் மரபு. அந்த மரபை மீறி, திரு. ஆஸ்டின், நீங்கள் தொடர்ந்து இந்தத் தவறைச் செய்கிறீர்கள். உங்களுக்கு இறுதியாக நான் எச்சரிக்கை செய்கிறேன். மீண்டும் இதுபோல் நடந்தால் நான் உங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, நீங்கள் அடிக்கடி இதுபோன்ற தவறை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறீர்கள். இறுதியாக நான் உங்களை எச்சரிக்கிறேன். அனைவரும் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உங்களை இறுதியாக எச்சரிக்கிறேன், இதற்குமேல் நீங்கள் பேசுவது முறையல்ல; (குறுக்கீடுகள்) நான் கடுமையாக எச்சரிக்கிறேன். இதற்குமேல் உங்களை எச்சரிப்பதற்கு என்னிடம்

வார்த்தை இல்லை. (குறுக்கீடுகள்) இதற்குமேல் இப்படி நடந்துகொண்டால் நிச்சயமாக நடவடிக்கைதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களுக்கு இறுதியான எச்சரிக்கையைத் தாங்கள் இதற்கு முன்னரே இரண்டு, மூன்று முறை அளித்துவிட்டீர்கள். இந்த முறை நீங்கள் அவர்மீது நடவடிக்கை எடுத்தால்தான், மாண்புமிகு உறுப்பினருடைய இந்த அணுகுமுறை மாறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆஸ்டின் அவர்களை இன்றைக்கு ஒரு நாள் அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களை இன்றைக்கு ஒரு நாள் அவையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களை மட்டும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசியபோது, எங்கள் தரப்பிலிருந்து எந்தவிதப் பேச்சும் எழவில்லை. எந்தவொரு உறுப்பினரும் அவர் பேசுகின்றபோது இடைமறிக்கவில்லை. அவர்கள் சொல்வதைக் கேட்கிறோம். ஆகவே அவர் பேசிவிட்டார். அதற்குப் பிறகு நான் பேசுகின்றேன். அவர் தரப்பிலிருந்து அவருடைய கருத்தை அவர் தெரிவித்தார். அதற்குப் பிறகு என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கின்றேன். அதற்குள் இடையில் இவர் எதற்கு தேவையில்லாமல் பிரச்சினையை உருவாக்க வேண்டும்? அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் அவருக்கு விலாசம் கொடுத்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், தலைமைக்குக் கட்டுப்பட்டு, இரவு பகல் பாராமல் இவருக்காக

உழைத்து, அதன்மூலம் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆகவே, அப்படியெல்லாம் அடையாளம் கொடுத்த காரணத்தினால்தான், இன்றைக்கு இவர் இங்கே அமர்ந்திருக்கின்றார். இல்லாவிட்டால் அவர் எங்கே அமர்ந்திருப்பாரென்று ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஆகவே, இதையெல்லாம் எண்ணிப் பார்த்து அவர் பேச வேண்டும். அவ்வளவு உறுப்பினர்கள் இங்கே இருக்கின்றார்கள், நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை, ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு இதுதான் இடம். அதை யாரும் மறுக்கவில்லை. ஆகவே, கருத்தைச் சொல்கின்றபோது, அமைதியாகக் கேட்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவரானாலும் சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவரானாலும் சரி, அவர்கள் சொல்கின்ற கருத்தை நாங்கள் அமைதியாகக் கேட்கின்றோம். அதற்குண்டான பதிலைத் தருகின்றோம். அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் அமைதியாக இருக்கின்றார்கள். ஆனால், திரு. ஆஸ்டின் அவர்கள்தான் எழுந்து குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றார். அவர்கள் கட்டுப்படுத்தினாலும், இவர் கட்டுப்பட மறுக்கிறார் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார். “2021 ஆம் ஆண்டு தேர்தலின்போது சொல்லவேண்டியதை ஏன் முன்பே சொன்னீர்கள்?” என்று நான் கேட்டு, அதைத்தான் தெளிவுபடுத்தினேன். நாடாளுமன்றத் தேர்தல் என்பது வேறு; சட்டமன்றத் தேர்தல் என்பது வேறு. நாடாளுமன்றத் தேர்தலின்போது, நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி என்னென்ன திட்டங்களைக் கொண்டு வருவோம் என்று பிரச்சாரம் செய்யலாம். நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி, மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று, நம் மாநிலத்திற்கு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வருவோம் என்று சொன்னால், அது தவறில்லை. ஆனால், மாநில அரசிற்குட்பட்ட அறிவிப்புகளை, கூட்டுறவுச் சங்க (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், கூட்டுறவுச் சங்கங்களில், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன? (குறுக்கீடுகள்) கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன்களை. . . (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்தவாறே ஏதோ பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் செயலை என்னவென்று சொல்வதென்றே தெரியவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார், நீங்கள் அனைவரும் ஒரே சமயத்தில் உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களை வெளியேறும்படிக் கேட்டுக்கொண்டேன். தொடர்ந்து அனைவரும் பேசிக்கொண்டிருந்தால், நான் என்ன செய்ய முடியும்? எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத் தேர்தலின்போது, தேர்தல் அறிக்கையில் அவர்கள் சொன்ன அறிவிப்பைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) புதிதாக எதையும் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது, கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்ததைத்தான் சொல்கிறேன். என்னென்ன திட்டங்கள் என்றால், நான் ஏற்கெனவே சொன்னதுபோல், விவசாயிகளால் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வாங்கப்பட்ட கடன் முழுவதும் தள்ளுபடி; அதேபோன்று, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடன் முழுவதும் தள்ளுபடி. இதைக்கூடச் சொல்லலாம்; மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு, தள்ளுபடி செய்வதைச் சொன்னோம் என்று சொல்லலாம். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய கடன்களை எவ்வாறு தள்ளுபடி செய்ய முடியும்? மாநில அரசாங்கம்தான் தள்ளுபடி செய்ய முடியும். அதேபோன்று, 5 சவரனுக்குக் குறைவாக அடமானம் வைத்திருக்கின்ற அனைவருக்கும் தள்ளுபடி; எங்கே பணம் இருக்கிறது? எவ்வளவு நிதி இருக்கிறது? நிதி நிலைமை என்னவென்று எப்படி உங்களுக்குத் தெரியும்? அதையும் நீங்கள் சொன்னீர்கள். அதுமட்டுமல்லாமல், தேர்தல் பிரச்சாரத்தின்போது, தனியார் வங்கிகளில் பெற்ற கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்வதாகச் சொன்னீர்கள்.

ஆக, இப்படி கவர்ச்சிகரமான திட்டங்களையெல்லாம் மக்களிடத்தில் நீங்கள் அறிவித்ததன் விளைவு, மக்கள் அவற்றையெல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்தார்களேயொழிய, வேறு ஒன்றும் இல்லை, ஆனால், அதற்குப் பிறகு உண்மை நிலை மக்களுக்குத் தெரிந்த காரணத்தினால்தான், விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி சட்டமன்ற இடைத் தேர்தல்களில் அதிகமான வாக்குகள்

வித்தியாசத்தில் நாங்கள் வெற்றியைப் பெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இரண்டு தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வசம் ஒரு தொகுதியும், காங்கிரஸ் கட்சியின் வசம் ஒரு தொகுதியும் இருந்தது. விக்கிரவாண்டி தொகுதி, திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருந்தது. (குறுக்கீடுகள்) அதிக அளவில் வாக்குறுதிகளைச் சொன்னார்கள்; அதிக அளவில் தேர்தல் அறிக்கையிலும் சொன்னார்கள்; அவற்றையெல்லாம் இப்போது சொன்னால் கோபப்படுவார்கள். ஆகவே, 2021–ல் தேர்தலின்போது நீங்கள் அறிவித்திருந்தால், நீங்கள் சொல்வது சரியாக இருக்கும். "மக்கள் எங்களைத் தேர்ந்தெடுப்பார்கள்; நாங்கள் ஆட்சிக்கு வருவோம்; எனவே இதையெல்லாம் சொல்கிறோம்" என்று சொன்னால் எற்றுக்கொள்ளலாம்.

பிற்பகல் 1–10

ஆனால், மாநில அரசாங்கம் நிறைவேற்றக்கூடிய திட்டத்தை நாடாளுமன்றத் தேர்தலின்போது சொன்ன காரணத்தினால்தான், மக்கள் அதை நம்பி, ஏமாந்து, இவ்வளவு வாக்குகளைப் போட்டு உங்களுக்கு வெற்றியைக் கொடுத்திருக்கிறார்களேயொழிய, வேறொன்றுமில்லை. அப்படி வெற்றியைக் கொடுத்திருந்தால், வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் ஏன் இவ்வளவு குறைவான வாக்குகளை வாங்கினீர்கள்? 0.6 சதவிகிதம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அதுவும், 6 சட்டமன்றத் தொகுதிகளில், மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் இரட்டை இலை சின்னம் அதிக வாக்குகளைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்கிறீர்கள்; நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்கிறோம். மக்கள் வெளியிலிருந்து யாரை 2021 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு கொண்டுவரவேண்டுமென்பதை முடிவு செய்வார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இல்லை, இல்லை, (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நான் முதலிலேயே திரு. ஆஸ்டின் அவர்களை வெளியேறும்படி கேட்டுக்கொண்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அவர் பல முறை, பலமுறை, பலமுறை (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்)

(அவைக் காவலர்கள் திரு. எஸ். ஆஸ்டின் அவர்களை வெளியேற்றுவதற்காக அவர் இருக்கையின் அருகில் வந்தனர்.)

இல்லை, இல்லை. உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். முதலிலே பேரவைத் தலைவருடைய உத்தரவு நிறைவேறட்டும். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் பேசியதற்கு பதிலோ, என்ன பேச வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன வேண்டுகோள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அவையில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளைச் சார்ந்த எந்த உறுப்பினராக இருந்தாலும், உட்கார்ந்துகொண்டே பேசுவதை அனுமதிக்க முடியாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். தாங்கள் அதுகுறித்து, 2, 3 முறை எச்சரித்தீர்கள் என்பதையும் நான் மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று மட்டுமல்ல; பல நாட்கள் இதுபோன்று எச்சரித்திருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நாட்கள் அதுபோன்று இருக்கலாம். ஆனாலும், தாங்கள் பல நேரங்களில் பெருந்தன்மையோடுதான் நடந்துகொள்கிறீர்கள்; தாயன்போடுதான் மன்னித்துவிடுகிறீர்கள். எனவே, இன்று நடந்த நிகழ்வுக்கு நீங்கள் இறுதி எச்சரிக்கை விடுத்ததாகக் கருதி, உங்களது தீர்ப்பினை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், இந்த தீர்ப்பிற்கு குறுக்கே நிற்காமல் 'இறுதி எச்சரிக்கை; இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ளக்கூடாது' என்று சொன்ன அந்தத் தீர்ப்போடு இந்தப் பிரச்சினையை விட்டுவிட வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் பேசுகிறபோது, குறுக்கிடுவது நல்லதல்லதான். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது தவறுதான். ஆனால், யாராக இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோதும், நாங்கள் பேசுகிறபோதும் உட்கார்ந்துகொண்டே குறுக்கிடக் கூடாதுதான். எனவே, இதை ஒரு இறுதி நிகழ்வாகக் கருதி, தாங்கள் இறுதி எச்சரிக்கை என்ற அளவோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு முன்னவர் அவர்களும் அதற்கு குறுக்கே நிற்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இன்றைக்கு (குறுக்கீடு). . . மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பலமுறை எச்சரிக்கை செய்திருக்கிறீர்கள். அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அமைதியாக இருக்க வேண்டுமென்பதுதான் அவையின் நடைமுறை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பேசுகின்றபோது நாங்கள் யாரும் பேசுவதும் கிடையாது; குறுக்கிடுவதே கிடையாது. அவர்கள் பேசுவதை அமைதியாக கேட்கிறோம். நீங்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், சொல்வதில் ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால், நாங்கள், எங்களின் விளக்கத்தைப் பிறகு பதியவைக்கிறோம். அதுதான் மரபு. ஆனால், இங்கே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற மாண்புமிகு அமைச்சர்களும் எழுந்து பதில் சொல்ல ஆரம்பித்தவுடனே, அவர்களது பதிலை இடைமறிக்கும் வகையில், அந்தப் பதில் சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு கேட்காத அளவிற்கு, கூச்சலிடுகிற ஒரு சூழ்நிலை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனால்தான் திரு. ஆஸ்டின் அவர்களுக்கு, இன்றைக்கு கடுமையான, ஒரு சிறிய தண்டனையைக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் 'இனிமேல் இதுபோன்ற நிகழ்வு எங்கள் தரப்பிலேயிருந்து நடைபெறாது' என்று உத்தரவாதம் கொடுக்கிறார்களென்றால், நீங்கள் அளித்த தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் 'இனிமேல் இவ்வாறு நடக்காமல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்' என்று சொன்ன காரணத்தினாலே நான் திரு. ஆஸ்டின் அவர்களுக்கு அளித்த அந்த உத்தரவை நிறுத்தி வைக்கிறேன். அவையிலே எந்த பதற்றமும் இல்லாமல், மேற்கொண்டு அவையை நடத்த ஒத்துழைக்கும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்கிறேன், மணி இப்போது

2020 மார்ச் 16] [பேரவைத் தலைவர்]

1–13. (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். இன்றைக்கு, ‘நான் பேசவில்லை’ என்று திரு. சக்கரபாணி அவர்கள் சொன்னால், அவைக்குறிப்பு என்னிடம் இருக்கிறது. நான் அவைக்குறிப்பை கையில் வைத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் பேசிய அவைக்குறிப்பையெல்லாம் நான் வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன். அதில் சில மாற்றங்களை நான் அறிவிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நீங்கள் பேசவில்லையென்று சொல்லாதீர்கள். எவ்வளவு ஜனநாயக முறைப்படி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் இந்தப் பக்கம் உள்ள உறுப்பினர்கள் பேசுகிறபோதும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மாறி, மாறி நான் வாய்ப்புத் தருகிறேன். விவாதங்களை, கருத்துகளை பரிமாற வேண்டுமென்பதற்காக நான் மாறி, மாறி அனைவருக்கும் பேச அனுமதி அளித்துக்கொண்டிருக்கிறேன். அவையை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம். யார்மீதும் தனிப்பட்ட முறையிலே நடவடிக்கை எடுப்பதை நான் விரும்பாதவன்; அதை நான் விரும்பவில்லை. ஆனால், நிர்பந்தம் என்னை நடவடிக்கை எடுக்கச் சொல்கிறது. திரு. ஆஸ்டின் போன்றவர்களின் நடவடிக்கையால் எனக்கு அதுபோன்ற நிர்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. என்னால் மறுக்க முடியாமல் நடவடிக்கைக்கு உத்தரவிட வேண்டியிருக்கிறது. அதுவும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அமைதி காக்க வேண்டுமென்பதுதான் இரண்டு பக்கமும் கடைபிடிக்க வேண்டிய மரபு. அதுதான் நியாயம். எப்படி எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபோது, இங்கே ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் அமைதியாகக் கேட்கிறார்களோ, அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் பேசுகிறபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

இப்படிப்பட்ட ஒரு சம்பவம் இந்த அவையில் இனிமேல் நடக்கக் கூடாது என்று நான் உங்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொண்டு, அவை அமைதியாக நடப்பதற்கு அத்தனை பேரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
(இ) கோரிக்கை எண் 53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை
—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதேபோல் இப்போது முடிவாக, மாண்புமிகு உறுப்பினர், திரு. அர. சக்கரபாணி அவர்கள் பேசும்போது ** முறையாக என்னிடம் காட்டியிருந்தால், அரசாங்கம் ** செய்திருக்கிறது என்பதை நான் விளக்கமாக உணர்ந்துகொண்டு, அதுகுறித்து அவர் பேசுவதற்கு நான் அனுமதி அளித்திருப்பேன். அவர் என்னிடம் ஆதாரத்தைக் காண்பிக்காத காரணத்தினால், குற்றச்சாட்டு என்கிற வகையில் அது வருகிற காரணத்தினால், அவர் பேசிய அந்தக் குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி உத்தரவிடுகிறேன். அதோடு குப்பைத் தொட்டி சம்பந்தமாகவும், ** என்று சொன்ன அந்த வார்த்தைகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். ஏற்கெனவே இதனை பத்திரிகைகள் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியிருந்தாலும், அதை பிரசுரிக்கக் கூடாது என்று உத்தரவிடுகிறேன். இத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணியின் உரை நிறைவடைகிறது. (குறுக்கீடு) அவர் சார்பாக நானே நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்ல விரும்பினால், சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசும்போது, உள்ளாட்சித் தேர்தலைப் பற்றிப் பேசினார்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது மாநிலத் தேர்தல் ஆணையம். அது ஒரு தனி Body. அவர்கள் தனியாக, சுதந்திரமாகச் செயல்படுகின்றார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் தேர்தல்களை பல கட்டங்களாகப் பிரித்து நடத்தவில்லை; மூன்று கட்டங்களாக நடத்தவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். பல மாநிலங்களில் பிரித்து பல கட்டங்களாக election–ஐ நடத்துகிறார்கள். சில

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாநிலங்களில் மூன்றாண்டுகள் கழித்து தேர்தல் நடத்திய உதாரணங்கள் இருக்கின்றன. உள்ளாட்சித் தேர்தல் நடக்காமல் போனதற்குக் காரணமே நீங்கள்தான். தேர்தல் நடத்தக் கூடாது என்று நீங்கள் நீதிமன்றம் செல்லாமல் இருந்திருந்தால், தேர்தல் நடந்திருக்கும். நீங்கள்தான் நீதிமன்றம் சென்றீர்கள். நீங்கள், அன்றைக்கு நீதிமன்றம் போகாமல் இருந்திருந்தால், தேர்தல் நடந்திருக்குமா, இல்லையா? இந்தப் பிரச்சினையே அதனால்தான் வந்தது.

அடுத்து, குடிமராமத்து திட்டத்தைப் பற்றியும் பேசினீர்கள். குடிமராமத்து திட்டம் என்பது ஓர் அற்புதமான திட்டம். பொதுப் பணித் துறை மூலமாக குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இன்றைக்கு இந்தியாவில் மட்டுமல்ல; உலகளவில் அனைவரும் பாராட்டக்கூடிய ஓர் அற்புதமான திட்டம் அது. அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக ‘குடிமராமத்து நாயகன்’ என்ற பட்டத்தை இன்றைக்கு விவசாயப் பெருமக்கள் அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடிமராமத்து திட்டம் கொண்டு வந்ததன் காரணமாக, நிலத்தடி நீர் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பது தெரியுமா? அதுமட்டுமல்ல; நீர் நிலைகளைத் தூர்வாரவும், கரைகளை பலப்படுத்தவும் அரசு பெருந்தன்மையோடு 500 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கித் தந்திருக்கிறது. உள்ளாட்சித் துறையின் நிதியைப் பயன்படுத்தி அந்தந்த இடங்களில் சொத்துக்களை உருவாக்கி வருகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அந்தந்த ஊராட்சிகளில்தான் உருவாக்குகிறோம்; அனைவரும் பாராட்டுகிறார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? வேறு ஏதாவது சொல்ல வருகிறீர்களா? யாருமே அந்தத் திட்டத்தைப் பற்றிக் குறை சொல்ல முடியாது. அத்தனை விவசாயிகளும் பாராட்டுகிறார்கள். இது ஓர் அற்புதமான திட்டம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, காமராஜரைப் போல் எப்படி இந்த எண்ணம் உதித்தது என்று கேட்கிறார்கள். காமராஜர் அணைகளைக் கட்டினார். இன்றைக்கு காமராஜரைப் போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டம்; புரட்சித் தலைவர் அவர்களின் திட்டம்; இன்றைக்கு காமராஜரைப் போல், மாண்புமிகு முதலமைச்சரின் பெருமையைப் பேசக்கூடிய ஓர் அற்புதமான திட்டம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும்போது, பல்வேறு உதாரணங்களைக் குறிப்பிட்டுப் பேசினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லிவிட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றியெல்லாம் பேசினார்கள்.

எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிவிட்டார்கள். தேர்தல் பற்றியெல்லாம் சொல்லிவிட்டு, உரையின் இறுதியில் 2021 ஆம் ஆண்டு, நாங்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவோம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உங்கள் தலைவரைப் பற்றிப் பேசக் கூடாது என்றல்ல; ஆனால், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஒரு விவசாயி, ஒரு சாமானியர், அற்புதமாக நாட்டை ஆளலாம் என்பதை இப்போது நிரூபித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதாரணமான விஷயம் அல்ல; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலை 6–00 மணிக்கு தன் வேலையை ஆரம்பித்தார் என்றால், இரவு, 1 மணி, 2 மணிக்குத்தான் தன் பணிகளை முடிக்கிறார். யார் வேண்டுமானாலும் சென்று சந்திக்கக்கூடிய ஒருவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிமராமத்து திட்டம் மட்டுமல்ல; இன்றைக்கு காவேரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திருக்கிறார்; பொங்கல் பரிசுத் தொகையாக 1,000 ரூபாய் வழங்கினார்; Plastic மீதான தடையை துணிச்சலாகக் கொண்டு வந்தார். அப்படிப்பட்ட ஒரு துணிச்சலான முதலமைச்சர் இவர். காலை 6–00 மணியிலிருந்து இரவு 1 மணி வரை அனைவரையும் சந்திக்கக்கூடிய முதலமைச்சர். அற்புதமான முதலமைச்சர் இவர். ஒரு விவசாயியாக இருந்து சிறப்பாக இப்படி நாட்டை ஆள முடியுமா என்று எல்லாத் தரப்பு மக்களும் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு நடுத்தர மக்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள ஏழைகள், பெண்கள் என அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களைப் பாராட்டுகிறார்கள். இவை வரலாற்றில் இடம்பெற வேண்டிய திட்டங்கள்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களை நேரில் சென்று சந்தித்தார். திருவனந்தபுரத்திற்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் என்னுடன் வந்தார். கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டுமென்பதற்காகவும், கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்திற்காகவும் என்னையும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் திரு. டி. ஜெயக்குமார் அவர்களையும் உடனடியாக தெலங்கானாவுக்கும், அனுப்பி வைத்தார்கள். ஆந்திர மாநிலத்திற்கும் எங்களை அனுப்பி வைத்தார். சென்னை மாநகரின் குடிநீருக்காக எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இப்படி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றால், மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரடியாகச் சந்தித்து, கோரிக்கை கடிதங்களைக் கொடுப்பார்கள்.

அதுபோன்று, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர்களைச் சந்திக்க, ஒவ்வொரு துறையின் அமைச்சர்களையும் அழைத்துச் சென்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அற்புதமான முதலமைச்சர் எங்களுடைய முதலமைச்சர். எங்களுடைய முதலமைச்சர், அற்புதமான ஒரு முதலமைச்சர்; விவசாயிகளின் முதலமைச்சர். தொடர்ந்து 2021–லும் அவர்தான் முதலமைச்சராக வருவார்; அவர்தான் தமிழ்நாட்டை ஆள்வார்; (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள்தான் தமிழ்நாட்டை ஆள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போயஸ் தோட்டத்து பொன் மாதாவே; அன்னை தெரசாவின் மறுவடிவே; வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் நீங்கள்தான் அம்மா! தாயில்லாமல் நான் இல்லை; தானே எவரும் பிறந்தது இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கொரு தாய் இருக்கின்றார்; என்றும் என்னைக் காக்கும் எங்கள் அன்புத் தாயின் திருவடிகள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

2020–2021 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரிக் காப்பாளன், காவேரியை மீட்டெடுத்த கரிகால் சோழன்; மாடு கட்டி போர் அடித்தால் மாளாது என்று, யானை கட்டி போர் அடித்த சோழநாடு; தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினத்தை உள்ளடக்கிய சோழ மண்டலத்தைப் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவித்த விவசாயிகளின் விடிவெள்ளியே; டாக்டர் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நாயகனே; குடிமராமத்து நாயகனே; மழைராசி நாயகனே; மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிவாளர் தந்தை பெரியாரைப்போல் சிந்தனையும், பேரறிஞர் அண்ணாவைப்போல் சொல்லாற்றலையும், டாக்டர் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களைப்போல் கருணை உள்ளத்தையும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப்போல் அறிவாற்றலையும் ஒருங்கேபெற்ற ஒப்பற்ற முதல்வரே; உங்கள் பாதம் பணிந்து பைந்தமிழால் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிந்தனை தேனூற்றே; செந்தமிழின் பூங்காற்றே; இமயமலைத் தென்றலே; ஏழைகளின் இதயமாய், விவசாயிகளின் வேந்தராய், தொழிலாளர்களின் தோழராய், சிறுபான்மையின மக்களின் அரனாய், உலக முதலீட்டாளர்களின் ஒப்பற்ற முதல்வராய், மாணவர் சமுதாயத்தின் மனிதநேயப் பண்பாளராய் விளங்கும் தமிழகத்தின் மாவீரன் நெப்போலியன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தென்பாண்டிச் சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன், மனிதநேயப் பண்பாளர், "குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே, நாங்கள் தெருவோரம் குடியேறத் தேவையில்லை" என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வைர வரிகளுக்கேற்ப, அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், பல இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சரித்திரம் வாய்ந்த சட்டமன்றத்தின் மரபுகளை நடுநிலையோடு காக்கும் மாமனிதர்; சட்டமன்றத்தில் இரண்டாவது முறையாக பேரவைத் தலைவராக சரித்திரம் படைக்கும், சமூகநீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசிபெற்ற அண்ணன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பள்ளிக் கல்வித் துறையில் இந்தியாவே உற்றுநோக்கிப் பார்க்கும் அளவிற்கு, தமிழக பள்ளிக் கல்வித் துறையில் சரித்திரம் பல படைக்கும் சாதனைச் செம்மல், சுறுசுறுப்புக்குச் சொந்தக்காரர், வாழும் காமராஜர், எனது அரசியல் வழிகாட்டி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். "சம்சாரம் இல்லாமல்கூட வாழ்ந்துவிடலாம். ஆனால், மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற இன்றைய நிலையில், மின் பற்றாக்குறையால் தமிழகம் இருண்ட நிலையில் இருந்த சூழ்நிலையை மாற்றி, மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசனையைப் பெற்று, தமிழகத்தில் 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் மற்றும் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்கிவரும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை

அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சரும், ஈரோடு மாவட்டக் கழகச் செயலாளருமான, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் இளைய தளபதி, சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. கே.வி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறுகின்ற, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் நல்லாட்சியிலும் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணியாற்றுகின்ற, சிங்கம் தந்த தங்கமாக, கோவை தந்த சிங்கமாக, கொள்கையில் இரும்பு மனிதராக, உள்ளாட்சித் துறையின் ஒப்பற்ற நாயகனாக விளங்குகின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஈரோடு மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று Super Speciality மருத்துவமனையை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதங்களில் நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். ஈரோடு மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, ரூபாய் 485 கோடியில் ஊராட்சி கோட்ட குடிநீர்த் திட்டத்தினை அடிக்கல் நாட்டி விரைவில் தன்னுடைய திருக்கரங்களால் துவக்கிவைக்க இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, ஈரோடு பஸ் நிலையத்தை Smart City திட்டத்தில் நவீனமயமாக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு மக்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, மாநகராட்சி சார்பில் கனி மார்க்கெட்டில் மிகச் சிறந்த வணிக வளாகம் அமைத்துக்கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு மாநகராட்சியில் Smart City திட்டத்தின்கீழ் பெரும்பள்ள ஓடையை அழகுபடுத்தி மேம்பாடு செய்து, 24 தடுப்பணைகள் அமைத்து, மழைநீர் சேகரிப்பு செய்து இருபுறமும் நடைபாதைகள் அமைத்து ரூ.200 கோடியில்

திட்டத்தினை வாரி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு-பெருந்துறை ரோட்டில் காளிங்கராயன் இல்லத்திலிருந்து திண்டல் வரை உள்ள 5 கி.மீ. தூரத்திற்கு மேம்பாலம் அமைத்திட, விரைவில் கால்கோள் விழாவினை நடத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன். ஈரோடு கிழக்குத் தொகுதியில், பெண் உரிமை காத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணில், ஒரு மகளிர் கலைக் கல்லூரியை அமைத்துக்கொடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன். அதோடு, ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை விரைவில் அரசுக் கல்லூரியாக அறிவிக்க வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் ஈமச்சடங்கிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ரூ.250/– வழங்கப்பட்டு வந்தது. பின்னர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அது ரூ.2,500/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய விலைவாசி சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அதை ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க 2017–2018 ஆம் ஆண்டு ரூ.15 இலட்சமும், 2019–2020 ஆம் ஆண்டு ரூ.20 இலட்சமும் என மொத்தம் ரூ.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. R.O. Water அமைப்பதை தற்போது அரசு இரத்து செய்துள்ளது. எனவே, இந்த நிதியை வேறு பணிக்கு ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரை அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வகுப்பறைகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாணை வழங்கப்பட்டது. தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வகுப்பறை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய மீண்டும் அனுமதி வழங்க

வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், “ஒரு நூலகத்தினைத் திறந்தால், 10 சிறைச்சாலைகளைச் மூடுவதற்குச் சமம்” என்று நூலகங்கள் கட்டுவது குறித்துச் சொன்னார்கள். அந்தவகையில், நூலகங்கள் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டு வந்தது. தற்போது அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் அமைக்க மீண்டும் ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளில் பணிபுரியும் ஆணையாளர் மற்றும் பொறியாளர் பணியிடங்களில் இருப்பவர்களை மட்டுமே மாறுதல் செய்ய சட்டத்தில் வழிவகை இருக்கிறது. ஆனால், உதவி ஆணையர்கள், இளநிலைப் பொறியாளர்கள் போன்ற பொறுப்பில் உள்ளவர்கள், அவர்கள் ஓய்வு பெறும் வயது வரை ஒரே மாநகராட்சியில் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையை மாற்றி, வேறு மாநகராட்சிக்கு அவர்களை மாறுதல் செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஈரோடு மாநகராட்சிமூலம் தினசரி 220 டன் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், காவேரிக் கரையில் நீண்டகாலமாக கொட்டி வைக்கப்பட்டு, காவேரி ஆற்றை மாசுபடுத்தி வந்த குப்பைகள் எல்லாம், organic முறையில் உரமாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு 15 டன் அளவிற்கு விலையில்லாமல் வழங்கப்படுகிறது. அதற்காகவும், காவேரி ஆறு மாசுபடுவதைத் தடுத்து நிறுத்தி காப்பாற்றியமைக்காகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகம், 20–6–2000–ல் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டி

முடிக்கப்பட்டு, சுமார் 20 ஆண்டு காலமாகிறது. இந்த 20 ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் இதுவரை எந்த பராமரிப்புப் பணிகளும் நடைபெறவில்லை. இப்பொழுதுதான் நான் அவைக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றபிறகு, எங்கள் குழுவின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கு 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில், 8 புதிய மின்தூக்கிகள் (Lift) பொருத்தும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 240 எம்.எல்.ஏ.–க்கள் குடியிருப்புகளுக்கும் 2 கோடியே 73 இலட்சத்து 40 ஆயிரத்து 370 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 32” LED தொலைக்காட்சிப் பெட்டிகளும், 2 டன் (A.C.) குளிர்சாதன இயந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் தீயணைப்புக் கருவிகளை மாற்றி, புதிய தீயணைப்புக் கருவிகள் பொருத்தும் பணி 3 கோடியே 79 இலட்சத்து 5,535 ரூபாய் மதிப்பீட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1 கோடி ரூபாய் செலவில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்புக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூபாய் 1 கோடியே 4 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் தரைதளம், பேவர் பிளாக் கல் அமைக்கும் பணியும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 4 கோடியே 27 இலட்சம் ரூபாயில் பழைய, புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பூங்கா மற்றும் சாலைகள் அமைத்திடவும், இறகுப் பந்து, கூடைப்பந்து மைதானங்களை அமைப்பதற்காகவும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் இரண்டு நவீன கூட்ட அரங்குகள் மற்றும் நிருவாக அலுவலகங்கள் அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் 3 படுக்கைகள் கொண்ட 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில், 5 கோடி ரூபாய் செலவில் வர்ணம் பூசும் பணியை மேற்கொள்ள அவைக் குழு பரிந்துரை செய்துள்ளது. தமிழகத்தில் உள்ள 174 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களில், 11 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பார்வையாளர்கள் அமரும் வசதி ஏற்படுத்திட அவைக் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆக மொத்தம் 21 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் விரைவாக நிறைவு பெற உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் அவைக் குழுத் தலைவர் என்ற முறையில் பதிவு செய்ய விரும்புகிறேன். இப்பணிகளை செய்து கொடுக்க ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பாதங்களில் என் நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பாதங்களுக்கும் நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இதற்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவைக் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் அவர்களுக்கும், சட்டமன்ற கூடுதல் செயலாளர் திரு. பா. சுப்பிரமணியன் அவர்களுக்கும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் பணியாற்றி வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதோடு, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சென்னையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "ஊருக்கெல்லாம் வெளிச்சம் போட கொடுத்த பணத்தில், தாங்கள் வெளிச்சம் போட்டு வாழ்ந்துவிட்டார் நகரசபையில்" என்றிருந்த நிலையை மாற்றி, உள்ளாட்சித் துறையின் மூலமாக கடந்த 9 ஆண்டு காலத்தில், 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் மற்றும் 12,525 ஊராட்சிகளில் 39,849 கோடி ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 36,670 கோடி ரூபாய் செலவில், 1.2 இலட்சம் கிலோ மீட்டர் அளவிற்கு தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகள்

நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதேபோல, 4,613 கோடி ரூபாய் செலவில் 6,924 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடிகால்கள் அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2,088 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,049 பாலங்கள் அமைக்கும் பணிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. 2,908 கோடி ரூபாய் செலவில் LED விளக்குகள் உட்பட, பல்வேறு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 3,857 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதோடு, நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் இதுவரை 16 இலட்சத்து 28 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்படாமல் விட்டுச் சென்ற, 3.05 இலட்சம் வீடுகளையும் கட்டிக் கொடுத்துள்ளதோடு, ஊரகப் பகுதிகளில் இதுவரை 50 இலட்சம் தனிநபர் கழிப்பறைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. Smart city திட்டத்தின்கீழ். . .

பிற்பகல் 1–35

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): மாண்புமிகு உறுப்பினர், இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: முடித்துவிடுகிறேன். Smart City திட்டத்தின்கீழ் 11 மாநகராட்சிகளில் ரூ.10,430 கோடியில் 440 பணிகள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. இன்றைய தேதியில் 79 திட்டங்கள் ரூ.380 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன. இதில், இந்திய அளவில் 28 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்களில், தமிழக ஊரக வளர்ச்சித் துறை 150.43 புள்ளிகளுடன் 9–வது இடத்தைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

AMRUT திட்டத்தின்கீழ் 28 நகரங்களில் 45 பணிகள் ரூ.11,441 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில், பெரிய குடிநீர்த் திட்டங்களின்கீழ் 18 பணிகள் ரூ.6,496 கோடி செலவிலும், பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் 18 பணிகள் ரூ.4,713 கோடி செலவிலும், பூங்கா மேம்பாட்டின்கீழ் 409 பணிகள் ரூ.232 கோடி செலவிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, இன்னும் சில பெரிய திட்டங்கள் ரூ.1,933 கோடி செலவில் மேற்கொள்ளப்பட ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற திட்டப் பணிகளைச் செய்ததன் காரணமாக, 2011 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, தமிழக அரசு, மத்திய அரசால் வழங்கப்படும்

ஊராட்சிகளுக்கான 104 விருதுகளையும், நகராட்சிகளுக்கான 19 விருதுகளையும் பெற்று சாதனை படைத்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே உள்ளாட்சித் துறையில் தமிழகம் 123 விருதுகளைப் பெறுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கடுமையான உழைப்புதான் காரணம். இத்தகைய சாதனையை உள்ளாட்சித் துறை நாயகன் தனது உழைப்பால் பெற்றிருக்கிறார் என்பதை அன்போடு தெரிவித்து, அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஆம் ஆண்டு இந்தியாவில் சீர்மிகு நகரங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றமைக்காக 24–1–2020 அன்று சீர்மிகு நகரத்தின் சிறந்த செயல்பாடுகளுக்காக கோவை, ஈரோடு, வேலூர் மாநகராட்சிகள் தேசிய அளவில் விருதுகள் பெற்றுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, சூரிய மின்சக்தி திட்டத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தியமைக்காக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கும், சீர்மிகு திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக ஈரோடு மாநகராட்சிக்கும் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் Smart City ஆக அறிவிக்கப்பட்ட 100 மாநகராட்சிகளில், ஈரோடு மாநகராட்சி கடைசியாக அறிவிக்கப்பட்ட நிலையிலும், முதல் தேசிய விருதைப் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக செயல்பட்டு, 123 விருதுகளைப் பெற்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் இந்த மாமன்றத்தின் சார்பாக நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட, அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின்மூலம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. வேலைக்குச் செல்கின்ற 40 வயது வரை உள்ள பெண்களுக்கு, அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின்மூலம் இரு சக்கர வாகனம் வழங்குவதற்காக 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.252.50 கோடியும், 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.252.50 கோடியும் ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் ரூ.25,000/– மானிய விலையில் இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு,

2,07,823 பயனாளிகள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை மீண்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, 2020–2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.252.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், அதன்மூலம் இந்த ஆண்டில் வேலைக்குச் செல்லும் 1 இலட்சம் பெண்களுக்கு அம்மா இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் இரு சக்கர வாகனங்கள் 40 வயது வரை உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில், வயது வரம்பை 45 ஆக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருப்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020–2021 ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்காக ரூ.21,585.633 கோடி ஒதுக்கியுள்ளதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களை உளமார பாராட்டுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசு அறிவித்துள்ள மூன்றாண்டு சாதனைப் பட்டியலில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.3,034.13 கோடி செலவில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சாதனையை படைத்த இந்த வாரியத்தில் பணியாற்றி, ஓய்வுபெற்ற சுமார் 1,000 ஓய்வூதியதாரர்களுக்கு 7–வது ஊதியக் குழு நிலுவைத் தொகை மற்றும் ஓய்வூதியப் பணப் பயன்கள் சுமார் ரூ.278 கோடி 18 மாதங்களாக வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது என்றும், அதனை உடனடியாக வழங்கிட வேண்டுமென்ற கோரிக்கையை அன்போடு வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு உறுதுணையாகவுள்ள அனைவருக்கும் நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதைவிட்டு மறையாத இதய தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம் அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். இந்த இருபெரும் தெய்வங்களின் அருளாசியோடு, அம்மா அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்களைத் தந்தார்களோ, அத்தனை திட்டங்களையும் தமிழக மக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற வகையில் தினந்தோறும் ஆயிரம் நலத் திட்ட கோப்புகளில் கையொப்பமிட்டு, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற, சாமானிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாயிகளின் கஷ்டங்களைத் தெரிந்து, ஏரி, குளங்களில் நீர் நிரப்பி, நிலத்தடி நீர் உயர 'குடிமராமத்து' என்கின்ற சிறப்பான திட்டம் தந்த குடிமராமத்து நாயகர், விவசாயிகளால் 'காவேரி காப்பாளர்' என்ற பட்டத்தைப் பெற்று, தமிழக மக்களை மாண்புமிகு அம்மா வழியில் தன் கண் இமைகள்போல காத்துவரும் மக்கள் விரும்பும் முதல்வர், நம் முதல்வர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குத் துணையாக நின்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஜல்லிக்கட்டு நாயகர், துணை முதலமைச்சர் மாண்புமிகு திரு. ஓ.பி.எஸ். அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். தமிழ்நாட்டில் 9 ஆண்டுகளுக்கு முன்னர், தி.மு.க. ஆட்சியில் 10 மணி நேரம் மின்வெட்டு என்றிருந்த நிலையை மாற்றி, மின்வெட்டே இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி, உழைத்துக் கொண்டிருக்கின்ற எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சியில் நல்லாட்சி வழங்கிக் கொண்டிருப்பவரும், மத்திய அரசால் பல விருதுகளைப் பெற்றவருமான, எங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அண்ணன் அவர்களுக்கும், ஊரக, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத்

துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு மாநிலத்தினுடைய அடிப்படை வளர்ச்சியில் ஊரக, உள்ளாட்சித் துறை பெரும்பங்கு வகிக்கின்றது. அதனடிப்படையில், மாண்புமிகு அம்மாவின் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, கிராம சாலைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியிருக்கிறார். கிராமப்புறங்களில் கான்கிரீட் சாலை வசதி, குறுகலான தெருக்களில் பேவர் பிளாக் கல் சாலை வசதி, MGNREGS திட்டத்தில் ஜல்லி கப்பிச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், TNRRIS திட்டம், SCPAR திட்டம், நபார்டு திட்டம், PMGSY திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் மூலமாக இன்றைக்குத் தமிழகத்தில் 80 சதவிகிதத்திற்கும் மேலான மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. கிராமப்புற மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு நல்ல சாலை வசதிகள் செய்து தந்ததன் காரணமாக, வேளாண் பெருங்குடி மக்கள், தாங்கள் விளைவிக்கக்கூடிய வேளாண் விளைப் பொருட்கள் மற்றும் தோட்டக்கலைத் துறை பொருட்களை, கனரக வாகனங்களில் கொண்டுசென்று, விற்பனை செய்து, நல்ல ஒரு பொருளாதார நிலையை இன்றைக்கு அடைந்திருக்கின்றார்கள். இதனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து விவசாயப் பெருங்குடிமக்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

தமிழகத்தில் 100 ஆண்டுக்காலம் இல்லாத கடுமையான வறட்சி ஏற்பட்ட நிலையில், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதிக நிதி ஒதுக்கீடுகள் செய்து, சென்னை உட்பட தமிழகம் முழுவதும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஊரக, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், அரசியல் நோக்கர்களும், பொது மக்களும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், ஊரக, உள்ளாட்சித் துறை மூலமாக பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 2011 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியாண்டு வரை

3.80 இலட்சம் பசுமை வீடுகள் 7,620 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இப்படி ஏழைக் குடும்பங்களுக்கு இருக்க இருப்பிடம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு ஊரக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், ஏழை எளிய மக்கள் இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–45

அடுத்து, அம்மா ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற ஆதி திராவிடர் குடியிருப்புக்கு 2018–2019 ஆம் நிதியாண்டில் 100 கோடி ரூபாயும், 2019–2020 ஆம் நிதியாண்டில் 100 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து, கான்கிரீட் சாலைகள், குடிநீர் பைப்லைன், தெரு விளக்குகள், சமுதாய கழிவறைகள், மயான வசதி, மயானத்தில் காத்திருப்போர் கூடம், நடைபாதை, ஆதி திராவிட இளைஞர்கள் விளையாடக்கூடிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டு சாதனங்களை வழங்கி, ஆதி திராவிடர் மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் ஆதி திராவிட மக்கள் மற்றும் இளைஞர்கள் இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மூலமாக வேலையில்லா கிராமப்புற பெண்களுக்கு 100 நாட்கள் வேலை வழங்கும் திட்டம் நம்முடைய தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுகின்ற காரணத்தினால், ஏழைத் தாய்மார்கள் இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசை வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

“இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக இன்றைக்குத் தமிழகம் விளங்கவும், பெண்களுக்கு பல நல்ல திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள். மேலும், ஏழை, எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்ற பிரிவினர் ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்குக் கைகொடுத்து அவர்களை உயர்த்த வேண்டுமென்பதில் நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்” என்று சொன்னவர் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதை நிறைவேற்றுகின்ற வகையில்தான், தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதோடு, உழைக்கும்

மகளிருக்கு, அவர்களின் பணியிடத்திற்குச் சென்றுவர ஏதுவாக 50 சதவிகிதம் மானியத்தில் விலையில்லா இரு சக்கர வாகனம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம். இது தமிழகம் முழுவதும் வழங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அம்மாவின் அரசை மகளிர்கள் இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மகளிர் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைய, மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆரம்பிக்கச் செய்து, கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள மகளிர் பயனடையும் வகையில், 2011 முதல் 2020 வரை 65,930 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து திட்டத்தைச் செயல்படுத்திய காரணத்தினால், இன்றைக்கு மகளிர் பொருளாதார நிலையில் உயர்ந்துள்ளார்கள். அதற்காக மகளிர் அம்மாவினுடைய அரசை இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 5,000–த்திற்கும் மேற்பட்ட ஏரிகள், குளங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, ஊராட்சிகளில் இன்றைக்கு 25,000 குளங்கள் மற்றும் குட்டைகளில் குடிமராமத்து செய்திட 2019–2020 ஆம் நிதியாண்டில் 1,250 கோடி நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை மேற்கொண்ட காரணத்தினால், ஏரி, குளங்களில் நீர் நிரம்பி, நிலத்தடி நீராதாரம் பெருகியிருக்கிறது. அந்த வகையில் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தது அம்மாவின் அரசு. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கொல்லிமலைப் பகுதியில் நிலம் வைத்திருப்பவர்கள் சாலை வசதி, தார்ச் சாலை வசதி இல்லாமல் பயிர்ச் சாகுபடி செய்யாமல் இருந்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசின்மூலமாக சாலை வசதிகள் செய்யப்பட்ட காரணத்தினால் தற்போது நல்ல நிலையில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தெரிவிக்க அரசு அலுவலகங்களுக்குச் செல்லாமல், அரசு அதிகாரிகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குச் சென்று, மனுக்களைப் பெற்று, அவற்றைப் பரிசீலனை செய்து, விரைந்து நலத் திட்டங்களை வழங்குகின்ற சிறப்புமிக்க திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த மண்ணில் யாரும் பட்டினியாக இருக்கக் கூடாது என்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்

இன்றைக்குத் தந்த விலையில்லா அரிசி திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். திருமண நிதி உதவித் திட்டம், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், பள்ளி மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம், மடிக்கணினி வழங்கும் திட்டம் போன்ற 14 வகையான உபகரணங்களை வழங்கி கல்வியில் ஒரு புரட்சியை உருவாக்கித் தந்தது அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு காலத்தில், 9 ஆண்டுகளுக்கு முன்பு, தி.மு.க. ஆட்சியில் 8 மணி நேரம், 10 மணி நேரம் மின்வெட்டு இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்தில், "நான் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்குவேன்; மக்களுக்கு நன்மைகள் செய்வேன்" என்று சொன்னார். பின்னர், அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபிறகு மின்வெட்டே இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்கி, இன்றைக்கு 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும் இன்றைக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிட இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் நாடுகளுக்குச் சென்று தொழில்முனைவோர்களைச் சந்தித்து, அவர்களை ஊக்குவித்து தமிழகத்தில் புதிய தொழில்களைத் துவங்குவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதோடு, அதன்மூலமாக இன்றைக்கு இலட்சக்கணக்கான படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருப்பவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்கள்.

பிற்பகல் 1–50

அடுத்து, கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைப் பெண்களுக்கு ஆடுகள், மாடுகள், கோழிகள் வழங்குகின்ற சிறப்பான திட்டத்தினை உருவாக்கி, ஏழைப் பெண்களின் குடும்பத்தில் ஒளியேற்றி வைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள். தமிழகத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், சிறப்பாகப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு

கிலோ சர்க்கரை, உலர் திராட்சை, முந்திரி இவற்றோடு 1,000 ரூபாய் கொடுத்து அழகு பார்த்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அனைத்துத் திட்டங்களும் தமிழ்நாடு முழுவதுமுள்ள மக்களுக்குச் சென்றடைந்திருக்கிற, இந்த நல்ல நேரத்தில், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைந்து வருகிறார்கள்.

குறிப்பாக, கொல்லிமலையில் 100–க்கு 99 சதவிகித மக்கள் மலைவாழ் மக்கள் ஆவர். இவர்கள் அரசின் அனைத்துத் திட்டங்களையும் பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு அதிகளவில் ஆதரவளித்த காரணத்தினாலும், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் (மணியடிக்கப் பெற்றது) அங்குள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று அரசின் இந்தத் திட்டங்கள் குறித்தெல்லாம் மக்களிடம் எடுத்துச் சொன்ன காரணத்தினாலும், நடைபெற்று முடிந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில், அங்கே ஒன்றியக் குழு உறுப்பினர்களாக 7 பேரும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராக ஒருவரும் என இன்றைக்கு அந்த 8 பேரும் வெற்றிபெற்று, அங்கு 100–க்கு 100 சதவிகிதம் வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு சாதகமாக 2021–ல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர் வேகமாகப் பேசினார். ஆனால், குளங்கள் எல்லாம் தூர்வாரப்பட்டு இன்றைக்குச் சிறப்பாக இருக்கின்றன; மக்கள் சந்தோஷமாக இருக்கின்றனர். எங்கே சென்றாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் என்னவோ தெரியவில்லை; அவர் அவ்வளவு வேகமாகப் பேசினார்; அவ்வளவு வேகமாக, ஆதாரமில்லாமல் பேசினாலும், அதையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். ஆனால், மக்கள் வாழ்த்துகிற அளவுக்கு இன்றைக்கு நம்முடைய ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: எனது தொகுதியிலுள்ள குடிநீர்ப் பிரச்சினை தொடர்பான ஒரு கோரிக்கையை மட்டும் பேசி முடித்துவிடுகிறேன். சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 14 ஊராட்சிகளை உள்ளடக்கிய கிராமங்கள்,

சேந்தமங்கலம் பேரூராட்சி, காளப்பநாய்க்கன்பட்டி பேரூராட்சிப் பகுதிகள் மற்றும் எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், 24 ஊராட்சிகளை உள்ளடக்கிய கிராமங்கள், மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தில், வளையப்பட்டி ஊராட்சி, என்.புதுப்பட்டி ஊராட்சி மற்றும் நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்தில், வசந்தபுரம் ஊராட்சிப் பகுதிகளில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த இன்றைக்கு புதிதாக திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ள பச்சுடையாம்பட்டி, தொப்பப்பட்டி ஜேடர்பாளையம், பெருமாகவுண்டம்பாளையம் பகுதிகளில் மட்டுமின்றி, சீராப்பள்ளி பேரூராட்சி, நாமகிரிப்பேட்டை பேரூராட்சி உட்பட நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த நிதியாண்டில் இதற்கு நிதியினை வழங்கி, திட்டத்தினைச் செயல்படுத்தி, குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள செவிந்திப்பட்டி கிராமம், திருச்சி மாவட்டத்தில் தனித் தீவு போல 4 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு உள்ளது. எனவே, தொட்டியம் பகுதியில் அமைந்துள்ள காவேரி ஆற்றிலிருந்து புதிய காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், 40 ஆண்டுகளுக்குப் பின், 2018–2019 ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டபோது, நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், குண்டூர்நாடு ஊராட்சி, சுண்டகாட்டுப்பட்டி, ஊர்மலைகஸ்பா, மருதான்குளம், தாம்பபாடி, சீங்கநாடிப்பட்டி போன்ற கிராமங்களிலும், வளப்பூர்நாடு ஊராட்சி, பிளான்டூர்பட்டி, செல்லிபட்டி கிராமங்களிலும் பைல்நாடு ஊராட்சியில் அமைந்துள்ள மேல்கலூர், கீழ்கலூர் கிராமங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு, இன்றுவரை குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது. எனவே, நத்துக்குழிப்பட்டி ஆற்றின் குறுக்கே திறந்தவெளிக் கிணறு பைப்லைன் அமைத்து, தாம்பபட்டி, சீங்கநாடிப்பட்டி, சுண்டகாட்டுப்பட்டி, ஊர்மலைகஸ்பா, மருதான்குளம் பகுதிகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கிட திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, இந்த நிதியாண்டில் இந்தத்

திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், வளப்பூர் நாடு ஊராட்சி, அசக்காட்டுப்பட்டி சாலைப் பிரிவு புத்தக்கல்–கொளத்துக்குழி இணைப்புச் சாலையில் புத்தக்கல் காட்டாற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், செம்மேட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் இயங்கி வருகின்றது. ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் பணியாளர்கள் தங்குவதற்கு சுமார் 45 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட குடியிருப்புகள் பழுதடைந்துள்ளன. அவற்றை இடித்துவிட்டு, இந்த நிதியாண்டில் புதிய குடியிருப்புகள் கட்டித்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கு வழங்கிய Jeep வாகனம் தற்போது condemned list–ல் உள்ளது. எனவே, மலைப்பகுதியாக உள்ளதால், அதற்கு மாற்றாக புதிய Jeep வாகனம் வாங்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி மற்றும் சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு, கொல்லிமலை அடிவாரப் பகுதியில் திறந்தவெளிக் கிணறு அமைத்து, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பைப் லைன் பழுதாகிவிட்ட நிலையில், குடிநீர் விநியோகத்தில் பிரச்சினை உள்ளது. எனவே, புதிய பைப்லைன் அமைத்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியம், முத்துகாபட்டி ஊராட்சி மற்றும் சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அக்கியம்பட்டி, கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி பகுதிகளுக்கு கொல்லிமலை அடிவாரப் பகுதியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அங்குள்ள பைப் லைன் பழுதடைந்த நிலையில் உள்ளதால், குடிநீர் வழங்க முடியாமல் உள்ளது. எனவே, இந்த நிதியாண்டில் குடிநீர் பைப் லைன் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு உட்பட்ட ஜங்கலாபுரம் 14–வது வார்டில் சமுதாயக் கூடம் மற்றும் வணிக வளாகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை அடிவாரப் பகுதிகளான வாழவந்தி கோம்பை ஊராட்சி, நடுக்கோம்பை ஊராட்சி, போடிநாயக்கன்பட்டி ஊராட்சி, வரகூர் ஊராட்சி போன்ற பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் மாம்பழம் உற்பத்தியாகிறது. அந்தப் பகுதி விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, வேளாண்மைத் துறை

மூலமாக குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

மேலும், கொல்லிமலை பகுதி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் மாசு இல்லா சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் சிறப்பாக வந்து செல்கிறார்கள். எனவே, சுற்றுலாத் துறை மூலமாக அங்கு தமிழ்நாடு ஹோட்டல் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேந்தமங்கலம் தொகுதிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 5–3–2020 ஆம் நாள் வருகை தந்து உயர் கல்வித் துறை மூலமாக 8 கோடி ரூபாயில் கட்டப்பட்ட அரசு கலைக் கல்லூரி கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அங்கே கல்வி பயில வருபவர்கள், கொல்லிமலையில் இருக்கின்ற மாணவ, மாணவிகள், 30 கிலோ மீட்டர் 40 கிலோ மீட்டர் தூரம் பயணித்து கல்வி பயின்று வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக இந்த நிதியாண்டில் மாணவர் விடுதி மற்றும் மாணவியர் விடுதி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பவர்காடு பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வாழவந்திநாடு பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மூலமாக நேரடியாக ரேஷன் பொருட்கள் மலைப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், 1977–1980–களில் கட்டப்பட்ட அந்தக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. அந்தக் காலத்தில் பொருட்கள் குறைவு; குடும்ப அட்டைகள் குறைவு. ஆனால் இன்றைக்கு குடும்ப அட்டைகள் அதிகமாகியுள்ள காரணத்தினால், பொருட்கள் வைக்க இடமில்லாமல் உள்ளது. எனவே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் துறை மூலமாக அசக்காட்டுப்பட்டி, பள்ளக்குழிப்பட்டி, அடுக்கம்பட்டி, ஆலவடிப்பட்டி, பவர்காடு, நரியங்காடு ஆகிய 6 இடங்களில் உள்ள கடைகளுக்கும் இந்த நிதியாண்டிலேயே புதிய கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆலத்தூர் நாடு அரசு நடுநிலைப் பள்ளி, நரியங்காடு அரசு நடுநிலைப் பள்ளி; இந்த இரண்டு பள்ளிகளிலும் 100–க்கு 100 சதவிகிதம் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். அங்கே இந்த நிதியாண்டிலேயே உயர்நிலைப் பள்ளி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சேந்தமங்கலம் பேரூராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் உருவாக்கித் தருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, சாமானிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தினந்தோறும் அம்மா வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கின்ற எல்லா இடங்களிலும் நல்ல தார்ச் சாலைகள், பாலங்கள் அமைப்பது உள்ளிட்ட எல்லா திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த கொறடா அவர்களுக்கு இதுவெல்லாம் தெரியும். என்னவென்று தெரியவில்லை, இவ்வளவு திட்டங்களை எல்லாம் செயல்படுத்தியும் பாராட்டமாட்டேன் என்கிறார். ஆட்சிக்கு நல்ல பெயர் இருக்கிறது. நல்ல திட்டங்களை எல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, வருகின்ற 2021 ஆம் ஆண்டிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியே மலர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சராக ஆவார்கள் என்று தெரிவித்து, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், 10 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு கிடைத்த வாய்ப்புக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். என்னுடைய கோரிக்கையை ஏற்று, என்னுடைய தொகுதியிலுள்ள திங்கள்நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிதியொதுக்கீடு செய்தீர்கள். அந்தப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. ஏற்கெனவே அந்தப் பேருந்து நிலையத்திற்கு காமராஜர் பெயர் சூட்டப்பட்டிருந்தது. அந்தப் பெயரே தொடர்ந்து சூட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, வியாபாரப் பெருமக்கள் அதிகமாக இருக்கும் பகுதியாக இருப்பதாலும், மக்கள் நெருக்கடி உள்ள பகுதியாக இருப்பதாலும், திங்கள்நகர் பேருந்து நிலையத்தில் மேல்மாடி கட்டுவதற்கு நிதியொதுக்கி, மேல்மாடி கட்டித் தந்தால் சிறப்பாக இருக்கும்.

அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தப் பேரூராட்சியில் ஏற்கெனவே ஒரு request வைத்திருக்கிறார்கள். திங்கள்நகரில் திங்கள்சந்தை என்ற ஒரு சந்தை உள்ளது. அது திங்கள்கிழமை மட்டுமன்றி, வாரத்தில் அனைத்து நாட்களிலும் நடக்கிறது. அதை நவீன சந்தையாக மாற்றியமைக்க வேண்டும்; அதை நவீனப்படுத்த வேண்டும். அங்கு மீன் விற்பனைக்கு தனி விற்பனைக்கூடம் அமைக்க வேண்டும். பொது மக்களுக்கு, பாதசாரிகளுக்கு இடையூறு ஏதுமின்றி, எல்லாப் பொருட்களின் விற்பனைக்கும் தனித் தனியாக இடம் ஒதுக்கி, சந்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு வகையான பொருளுக்கும் தனி விற்பனைக் கூடத்தை சிறப்பான முறையில் அமைத்துக் கொடுத்தால் அந்தச் சந்தை இன்னும் வளரும். அதற்கு அரசு நிதியொதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் நகராட்சி, மிகப் பெரும் பழமைவாய்ந்த நகராட்சி. திருவிதாங்கூர்–கொச்சி சமஸ்தான ஆட்சியின்போது நிறுவப்பட்ட அந்த நகராட்சியில் 24 வார்டுகள் உள்ளன. அங்குள்ள bus stand பழுதடைந்த நிலையில் இருக்கிறது. ஏற்கெனவே குளச்சல் நகராட்சியில் இருக்கும் பேருந்து நிலையம் பழுதடைந்திருக்கிறது. மேலே உள்ள concrete இடிந்து விழுந்துகொண்டிருக்கிறது. அதை நவீன முறையில் நீங்கள் கட்டித் தரவேண்டும். அதற்கு நிதியொதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: குளச்சல் நகராட்சியில் பாம்பூரி வாய்க்கால் என்ற மிகவும் செழுமையான வாய்க்கால் செல்கின்றது. அதில், எல்லா நேரங்களிலும் தண்ணீர் செல்கின்றது. ஆனால், அங்கு தண்ணீர் வீணாகப் போவதால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, அங்கு ஒரு குடிநீர்த் திட்டத்தை நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பாம்பூரி வாய்க்காலில் ஒரு தடுப்பணை கட்டினால், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க முடியும். அந்தப் பகுதியில் ஒரு dam அமைக்கக்கூடிய அளவில் போதிய இடம் இருக்கிறது. அதற்கு நீங்கள் நிதி ஒதுக்க வேண்டும். அங்கு

நீங்கள் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தினால், சைமன் காலனி, ரீத்தாபுரம் பேரூராட்சிகள் உள்ளிட்ட பக்கத்திலுள்ள அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். குளச்சல் நகராட்சிக்கும் தண்ணீர் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்; நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, AVM channel, அதனுடன் சேர்ந்து கடற்கரைப் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதி அதிகமான மக்கள் இருக்கக்கூடிய பகுதி. ஏற்கெனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி. அந்தப் பகுதி வளர்ச்சியடையாமலேயே இருக்கிறது. அந்தப் பகுதிக்கு செல்லவே முடியாது, அந்தளவிற்கு துர்நாற்றம் அடிக்கும். அந்தப் பகுதியே துர்நாற்றம் அடிக்கக்கூடிய பகுதியாக உள்ளது. அதை சரி செய்ய வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்த AVM channel—ஐ தூர்வாரி சரி செய்ய வேண்டும். இல்லையெனில், பல தொற்று நோய்கள், பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, நீங்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளை நிச்சயமாக செய்து தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இரணியல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்பட்டது. ரூ.185 கோடி மதிப்பீட்டில் அந்த குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை துரிதமாகச் செய்திட வேண்டும். அந்தப் பணிகளை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, முட்டம், கடியப்பட்டினம், வெள்ளிச்சந்தை, ஆளூர், வெள்ளிமலை, கப்பியறை, வில்லுக்குறி, கட்டிமாங்கோடு போன்ற பஞ்சாயத்துகளுக்குக்கூட தண்ணீர் கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும்.

நுள்ளிவிளை ஊராட்சி ஒரு பெரிய ஊராட்சி. அந்த ஊராட்சியில் உண்மையிலேயே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. அங்கு 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தால்தான், அனைவருக்கும் தண்ணீர் கொடுக்க முடியும். அந்தப் பஞ்சாயத்து பெரிய பஞ்சாயத்து. அங்குள்ள எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கக்கூடிய வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துகளில் ஏராளமான குளங்கள் இருக்கின்றன. நீங்கள்,

சிறப்புத் திட்டத்தின்மூலமாக பல குளங்களைத் தூர்வாருகிறீர்கள். அதேபோன்று, பஞ்சாயத்துக்களிலுள்ள குளங்களையும் நீங்கள்தான் தூர்வார வேண்டும். பஞ்சாயத்துக்களிலுள்ள குளங்களைத் தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, கழிவுநீர் வாய்க்கால்களில் வராத அளவிற்கு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன்.

முளகுமூடு பேரூராட்சியில் அமராவதி குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. கப்பியறை பேரூராட்சியில் செம்மண் குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது, (குறுக்கீடு) Town panchayat–ன்கீழ் வரும். இவற்றில் கழிவுநீர் வந்து சேருவதால், பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதை சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளியாற்றில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். ஏனென்றால், குளச்சல் பகுதி மக்களுக்கு வள்ளியாறு நீராதாரமாக இருக்கிறது, அது குளச்சல் தொகுதி மக்களுக்கு மிகவும் முக்கியம். அதனை தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூய்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வள்ளியாற்றில் ஒரு பாலாற்றங்கரையில் மிகப் பெரிய பழமையான பாலம் இருக்கிறது. நாங்கள் அந்தப் பாலத்தில் காரில் சென்றால்கூட shake ஆகிறது. அங்குள்ள மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில், அந்த பாலத்தை துரிதமாக மாற்ற வேண்டும். ஏனெனில், அந்தப் பாலத்தில் ஏதாவது விபத்து ஏற்பட்டுவிடுமோ என்று பயம் ஏற்படுகின்ற நிலைமையில், அந்தப் பாலம் இருக்கிறது. எனவே, அதை சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திங்கள்நகர்–இரணியல் சாலை குறுகிய சாலையாக இருப்பதால், அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன. அந்தச் சாலையைச் செப்பனிட வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்தும், இன்னும் சரி செய்யவில்லை. அது மிகவும் முக்கியமான, மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி; அதிகமான வாகனங்கள் பயணிக்கக்கூடிய பகுதி. எனவே, அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளியாடி பகுதியில் சார்–பதிவாளர் அலுவலகம் இருக்கிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லுக்கூட்டம் பேரூராட்சியில் கீழ்க்கல்லுக்கூட்டம் செல்லும் சாலையில் இன்னுமொரு பழுதான மோசமான ஒரு பாலம் இருக்கிறது. அந்தப்

பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாணியக்குடி கடற்கரைப் பகுதியில் 15 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து கேள்வி கேட்டிருந்தேன்; அவர்களும் பதில் சொல்லியிருந்தார்கள். நிச்சயமாக நீங்கள் அங்கே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு மக்கள் அடர்த்தி அதிகமாக இருக்கிறது. அதனால்தான், நான் மீண்டும், மீண்டும் கேட்கிறேன். குளச்சலில் harbour இருக்கிறது. நீங்கள் harbour அமைத்துக் கொடுத்தீர்கள். நீங்கள் அதை விரிவுபடுத்தி ஒருங்கிணைந்த harbour ஆக அமைத்துத் தர வேண்டும். அனைத்து வசதிகளுடன்கூடிய harbour ஆக அது இருக்க வேண்டும். அதிகமான படகுகளை நிறுத்தக்கூடிய வகையில் அந்தப் பகுதியை மேம்படுத்திட வேண்டும். அதேபோன்று, வாணியக்குடியிலும் அதிகமான படகுகளை நிறுத்தக்கூடிய வகையில், atleast ஒரு துறைமுகத்தையாவது நீங்கள் அமைத்துத் தரவேண்டும். கடியப்பட்டினத்திலும் அதே பிரச்சினைதான் இருக்கிறது. அங்கு Groynes இருக்கிறது. அந்த Groynes மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அது அலைக்காற்று அதிகமாகவுள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் Groynes–ஐ கொஞ்சம் விரிவுபடுத்தி, மக்களுக்கு இன்னும் பயன்படக்கூடிய வகையில், அதிகமான படகுகள் வந்து செல்லக்கூடிய வகையில், அதிகமான மீனவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்கு பல யுக்திகளைக் கடைப்பிடிக்கிறீர்கள். அதற்கு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருகிறீர்கள். நான் வாழ்த்துகிறேன். அதேநேரத்தில், உடனடியாக அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக மென்பொருள் (software) பயன்படுத்தினால் நன்றாக இருக்கும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பெண்கள் விவசாய மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களது துறையின்கீழ் வரக்கூடிய திட்டமாகும். குளச்சல் பகுதியில் அதற்கான ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும். பெண்கள் விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை 3 மாவட்டங்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதை எங்களுடைய தொகுதிக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Smart city திட்டத்தை, மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எங்கள் மாவட்டத்திலும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, எங்கள் மாவட்டத்திற்கு சட்டக் கல்லூரி வேண்டும்; வேளாண்மைக் கல்லூரி வேண்டும். அவை மிகவும் தேவை. எனவே, அவற்றைத் தர வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

என் தொகுதியிலுள்ள முட்டம் கடற்கரை ஓர் அழகான இடமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பார்த்திருப்பார்கள். அது ஒரு சிறப்பான சுற்றுலா மையமாக இருந்தது. அந்த சுற்றுலா மையம் தற்போது இல்லை; இது வருந்தத்தக்க ஒன்று. தயவுகூர்ந்து அந்த முட்டம் கடற்கரைப் பகுதியை மீண்டும் அழகுபடுத்தி, சுற்றுலா மையமாக மேம்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பேருந்து நிலையத்தைக் கொடுத்ததற்கு, அம்மா அவர்களுடைய அரசுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, எங்கள் உள்ளாட்சித் துறைக்கு நன்றி தெரிவித்துள்ளார். அவர் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். குறிப்பாக இரணியல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது தந்த திட்டம். அந்தத் திட்டத்திற்காக 174 கோடி ரூபாய்க்கு நிதியாதாரம் திரட்டப்பட்டு, இப்போது 62 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. இதில் கூடுதலாக சில ஊர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று அவர் சொன்னார். ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒரு குறிப்பிட்ட ஊர்கள், ஊராட்சிகள், பேரூராட்சிகளிலுள்ள குறிப்பிட்ட மக்களைக் கணக்கிட்டு, அதற்கேற்ப design செய்து, பெரிய pipeline போட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீரை நாம் எடுத்துக்கொண்டு போகிறோம். அதற்கு முன்னால் அங்கு

இருக்கிற திட்டங்கள் அப்படியே அங்கே பயன்பாட்டில் உள்ளன. விடுபட்ட பகுதிகளுக்குத்தான் நாம் அதை எடுத்துக்கொண்டு போகிறோம். அப்படி கொண்டுபோகும்போது, அந்தத் திட்டத்தில் மக்கள் தொகையை கணக்கிட்டு, இவ்வளவு பேருக்கு என்று design செய்திருப்போம். இந்த நிலையில், அந்தத் திட்டத்தில் புதிதாக ஒரு ஊரைச் சேர்ப்பது சிரமம். இருந்தாலும்கூட, இப்போது நாம் போடுகிற திட்டங்களையெல்லாம் பார்த்தீர்களென்றால், இன்னும் 25 ஆண்டுகளுக்குப் பின்னால் இருக்கக்கூடிய மக்கள் தொகையைக் கணக்கிட்டுத்தான் அந்த திட்டங்களைப் போடுகிறோம். ஆகவே, நம்முடைய TWAD அதிகாரிகளிடம் கலந்து பேசி, அதற்கு ஏதாவது வாய்ப்பிருந்தால் ஆய்வு செய்து, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இது ஒன்று.

அதேபோல், பெண்கள் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் அவருடைய தொகுதியைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னார். கண்டிப்பாக அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, Smart city திட்டம் என்பது மத்திய அரசாங்கம் கொண்டுவந்த திட்டம். அந்தத் திட்டத்தினை 100 நகரங்களில் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 12 மாநகராட்சிகளுக்கும் வேண்டுமென்று கேட்டுப் போராடி, அவற்றில் 11 மாநகராட்சிகளுக்கு வாங்கினார்கள். திண்டுக்கல் மாநகராட்சி மட்டும் விடுபட்டுவிட்டது. Smart city திட்டத்தைப் பொறுத்தவரையில், அது மத்திய அரசாங்கத்தின் திட்டம். மத்திய அரசாங்கம் பாதி நிதி, மாநில அரசாங்கம் பாதி நிதி செலவு செய்கிறது. எனவே, குமரி மாவட்டத்தை அதிலே சேர்க்கக்கூடிய வாய்ப்புகள் குறைவு. அதோடு, இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்துள்ளார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குளச்சல் மீன்பிடித் துறைமுகம் குறித்துப் பேசினார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் ஜிப்பா போன்று போட்டிருப்பதைப் பார்க்கும்போது, பழைய நடிகர் கல்யாண்குமார் இருக்கிறாரல்லவா, அப்படியே அவரை உரித்தது மாதிரியே இருக்கிறீர்கள். (சிரிப்பு) அந்த பண்ணையார் style–ல் இருக்கிறீர்கள். உங்களைப் பார்க்கும்போதெல்லாம் பழைய நடிகர் கல்யாண்குமாரைப் பார்ப்பதுபோல் எனக்கு ஞாபகம் வரும். நல்ல அழகாக இருக்கிறீர்கள். ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.

குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரையில், அங்கே இட நெருக்கடி இருக்கின்றது என்பதை அரசு அறிந்திருக்கின்றது. எனவே, அந்த அணையும் தளத்தை இன்னும் நீட்டி, பல வசதிகள் அம்மா அவர்களுடைய ஆட்சியில் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் என்னென்ன வசதிகள் செய்யப்பட வேண்டுமென்பது குறித்தெல்லாம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. எனவே, தகுந்த நேரத்திலே அதுகுறித்த அறிவிப்புகளெல்லாம் வரும்; கவலைப்படாதீர்கள்.

இரண்டாவது, கடியப்பட்டணத்தில் Groynes போட வேண்டுமென்று சொன்னீர்கள். Groynes போடுவது குறித்து detailed study செய்துதான் நாம் போட முடியும். அதை எங்கு வேண்டுமானாலும் போட முடியாது. ஏனென்றால், அதைப் போடுவதால் இன்னோர் இடத்தில் அரிப்பு ஏற்பட்டு, அதனால் பிரச்சினைகள் வரக் கூடாது. அதையும் அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது.

மூன்றாவது, communication. இப்போது எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, குறிப்பாக, ஒகி புயல் ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக அந்தப் பகுதிகளை visit செய்து, அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, ஆழ்கடல் பகுதியில் இருந்தாலும் communication எந்த நிலையிலும் அவர்களை சென்றடைய வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிப்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர்கள்தான் very very expert fishermen. அதாவது, 40 நாட்கள், 50 நாட்கள், கிட்டத்தட்ட 4,000 nautical miles, 5,000 nautical miles தூரத்திற்கு கடலில் சென்று தைரியமாகத் தொழில் செய்யக்கூடிய மீனவர்களென்று சொன்னால்,

நம்முடைய கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள்தான். எனவே அவர்களுக்கு ஒரு communication வேண்டும். இப்போதிருக்கிற அந்த satellite phone மூலம் மட்டும்தான் நேரடியாக அவர்களை reach செய்ய முடியும். வேறு வகையில் தொலைபேசி, NavIC, NAVTEX, Transponders போன்றவற்றையெல்லாம் வைத்து, அவர்கள் இருக்கும் இடத்தை அறிந்துவிடலாம். ஆனால், ஆபத்துக் காலங்களில் அவர்களுக்கு, "இந்தமாதிரி ஓர் ஆபத்து இருக்கிறது; நீங்கள் கரை திரும்ப வேண்டும்" என்று உடனடியாகச் சொல்ல வேண்டுமென்றால், அவர்களுக்கு இந்த satellite phone முக்கியம். இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கெனவே எல்லோரையும் நாம் group செய்திருக்கிறோம். அதாவது, 40, 50 boat–ல் 2 boat–க்கு satellite phone கொடுத்து, இந்தமாதிரி ஆபத்துக் காலத்தில், அந்த இரண்டு boats–ல் உள்ளவர்களுக்கு இங்கிருந்து தகவல் satellite phone மூலமாகக் கொடுத்து, அவர்கள் internal ஆக அங்கிருக்கிற boats–க்கு தகவல் கொடுக்கிறார்கள். அதனடிப்படையில் நிறையபேர் கரை திரும்பியிருக்கிறார்கள். இந்த வகையில் கடலில் இருக்கிற கிட்டத்தட்ட 4,000–க்கும் மேற்பட்ட boats–ஐ ஆபத்து காலத்தில் பத்திரமாகக் கரை சேர்த்த பெருமை நம்முடைய அம்மா அவர்களுடைய அரசுக்கு உண்டு. இதற்காக MPEDA நிதி தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மீனவர்களுக்கு Satellite phone–ஐ கண்டிப்பாகத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

பிற்பகல் 2–10

அதுமட்டுமல்லாமல், ஹெலிகாப்டர் தளத்திற்கு நாம் தூத்துக்குடியைத்தான் depend செய்கிறோம். எனவே, உடனடியாக அங்கு ஹெலிகாப்டர் தளம் வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தியிருக்கின்றார்கள். இப்போது மத்திய நிதி அமைச்சராக இருக்கின்ற, அப்போது இராணுவத் துறை அமைச்சராக இருந்த திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களிடத்தில்கூட நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களாகிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரும் represent செய்திருக்கிறோம். அதுவும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பேசுகின்றபோது முட்டம் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறார். முட்டம் கடற்கரை, கன்னியாகுமரியிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் 1875 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கலங்கரை விளக்கமும், தனியார் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும் அமைந்துள்ளன. முட்டம் கடற்கரைப் பகுதியில் இயற்கை எழிலை கண்டுகளிக்க நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். முட்டம் கடற்கரைப் பகுதி, பாறைகள் நிறைந்துள்ள பகுதியாக உள்ளதாலும், படகு சவாரி செய்வதற்கு உகந்த நீர்நிலைப் பகுதியாக இல்லாததாலும், முட்டத்தில் படகுக் குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. சுற்றுலாப் பணிகளை மேம்படுத்துகின்ற வகையிலே சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் கருத்துரு பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நன்றி சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இது நியாயமா என்று சொல்லுங்கள். எங்களுக்கு மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பைக் குறைத்துவிட்டீர்கள். தயவுசெய்து பேசுவதற்கு நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, பேசுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், குழித்துறை ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தினக்கூலியாகப் பணியாற்றியவர்கள் 18 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு பணி வழங்கி, நிரந்தரம் செய்ய வேண்டுமென்று தொழிலாளர் நீதிமன்றம் மூலமாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் வரை வழக்கு தொடுத்து, அவர்களை பணியமர்த்த வேண்டுமென்று உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். தயவுகூர்ந்து இன்னும் நீங்கள் cause of

bill போகாமல், அந்தப் பணியாளர்களுக்கு நீங்கள் பணி வழங்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முள்ளங்கினாவிளை ஊராட்சியில் கொற்றியார், முகிலவிளை, பாலவிளை ஆதி திராவிடர் நல காலனியில் 1996–1997 ஆம் ஆண்டு 22 இந்திரா குடியிருப்பு தொகுப்பு வீடுகள், ரூ.27,000/– மதிப்பீட்டில் கான்கிரீட் வீடுகளாக அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டன. அந்த வீடுகள் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளன. மக்கள் குடியிருப்பதற்கு தகுதியற்ற நிலையில் இருக்கின்றன. எனவே, தயவுசெய்து புதிய வீடுகள் வழங்க வேண்டும். நண்பர், சகோதரர் திரு. ராஜேஷ் குமார் அவர்களுடைய கோரிக்கை இது. அதையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதன்பிறகு, முக்கியமான ஒரு பிரச்சினை; சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்மூலம் முதியோர் pension வழங்குகிறீர்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலிலே உண்மையிலேயே பணக்காரர்களெல்லாம் இருக்கிறார்கள். தயவுகூர்ந்து அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், சொல்கிறேன். அதன்பிறகு கறவை மாடுகள் வழங்குகிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். நேரத்தைப்பாருங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அடுத்து, கல்லூரி மாணவர்களுக்கு laptop, smart phone எல்லாம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பள்ளி மாணவர்களுக்கு நீங்கள் வழங்குகிறீர்கள், அதனால் கல்லூரி மாணவர்களுக்கும் நிச்சயமாக வழங்க வேண்டும். அந்தத் திட்டத்தையும் நீங்கள் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். என்னுடைய தொகுதியில் ஒரு மென்பொருள் தொழிற்சாலையை நீங்கள் நிச்சயமாகக் கொண்டு வர முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கு தற்போது நீங்கள் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள்.

இதில் 40 ஆயிரம் ரூபாய்தான் உங்களுடைய பங்களிப்பு. பயனாளிகளின் விருப்பப்படி அந்தக் கட்டடங்களை, வீடுகளைக் கட்ட முடியாத மிகவும் சிரமமான சூழ்நிலை இருக்கிறது. அதற்குமேல் செலவாகும் தொகையை அவர்களே போட்டு, கட்டடம் கட்ட வேண்டியுள்ளது. அப்போதுதான் யூனியனில் அந்தத் தொகையைக் கொடுப்பார்கள். தயவுசெய்து, அந்தத் தொகையை சிறிது உயர்த்திக் கொடுக்க வேண்டும். பயனாளிகளின் விருப்பப்படி அந்தப் பணிகளைச் செய்ய நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூய்மைக் காவலர்கள், துப்புரவுப் பணி செய்யக்கூடியவர்கள் என்று இந்தத் துறையில் இருக்கிறார்கள். அதாவது Village Panchayat–ல் தூய்மைப் பணியைச் செய்யக்கூடியவர்களுக்கு ரூ.2,800/– சம்பளம் வழங்கிடும் நேர்வில், அதே பணியை Town Panchayat–ல் செய்பவர்களுக்கு ரூ.9,000/– சம்பளம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக ஊதியத்தில் வித்தியாசம் இருக்கிறது. எனவே, அந்த வித்தியாசத்தைக் களைந்து, நிச்சயமாக அவர்களுக்கும் அந்தப் பணிகளிலே முன்னுரிமை கொடுத்து, ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே குப்பைகளையெல்லாம் சரிவர வாராமல் இருக்கிறார்கள்; பணியாளர்கள் சரியாக வேலை செய்வதில்லை. எனவே, நீங்கள் team போட்டு, தனிக் கவனம் செலுத்தி இந்தப் பணிகளைச் செய்தால்தான் சுகாதாரம் மேம்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். British காலத்தில் Health Inspectors என்ற பெயரில் இருந்தவர்கள்தான் இப்போதும் பணி செய்கிறார்கள். ஆனால், அவர்களது பணிகள் மோசமாக இருக்கின்றன. உங்களைக் குறை சொல்லவில்லை. அவர்களிடமிருந்து சரியாக பணிகளை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடைக் காலம் வரவிருக்கின்றது; தண்ணீர்ப் பிரச்சினை வரப் போகிறது. எனவே, பழுதடைந்துள்ள pipes–ஐ எல்லாம் மாற்றி, பழுதையெல்லாம் சரி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். கோடைக் காலத்தை எதிர்கொள்வதற்குத் தயாராக, பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Leakage–ஐ கண்டறிந்து, அவற்றை எல்லாம் உடனடியாகச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 17 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இன்னும் நான் பேசவேயில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் பேசவில்லையா? நீங்கள் 17 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) இன்னும் உங்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும்?

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: என்னுடைய தொகுதி சம்பந்தமான பிரச்சினைகளைத்தான் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? ஒரு நிமிடம் பேசுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. நான் என்ன செய்வது? (குறுக்கீடு)

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நீங்கள் இப்படிச் சொன்னால், நான் என்ன செய்வது? இல்லையென்றால், நான் பேசாமல் நிற்கட்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் 10 நிமிடங்களில் பேசினார். ஆனால், நீங்கள் 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: எங்களுடைய மாவட்டத்தில் செங்கல் சூளையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அதிகளவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு போதிய வேலைவாய்ப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால் மண் கிடைக்கவில்லை. அவர்களுக்குத் தேவையான மண் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதாவது, குடிமராமத்து திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் மண்ணை அவர்களுக்கு free ஆகக் கொடுக்க வேண்டும்; விலையில்லாமல் கொடுக்க வேண்டும். அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால், மானியமாவது கொடுங்கள். மண்பாண்டத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். உங்களுடைய ஆட்சியில் இப்படிப்பட்ட கஷ்டம் அவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். ஏற்கெனவே, LED bulb பிரச்சினையைப் பற்றி இங்கே

பேசப்பட்டது. தயவுசெய்து முன்பு இருந்ததைப்போல tube light–ஐ போடுங்கள். மக்களுக்கு பழைய காலத்து பல்பு பயனாக இருக்கட்டும். Tube light–ஐ போடுங்கள். அது நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், tube light–ஐ போட்டீர்களென்றால், மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில், நல்ல வெளிச்சம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டம்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு சுனாமி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வந்தது. அந்தத் திட்டத்தின் மூலமாகப் பொருத்தப்பட்ட அத்தனை பைப்புகளும் இன்றைக்கு உடைந்த நிலையில் இருக்கின்றன. அந்த பழைய பைப்புகளை மாற்றாததன் காரணமாக, தகுந்த நேரத்தில் பயனாளிகளுக்குத் தண்ணீர் போய்ச் சேருவதில்லை. எனவே, அதை நீங்கள் ஆய்வு செய்து, மறுசீரமைப்பு செய்து தர வேண்டும், வேண்டும்.

இப்போது எங்களுடைய மாவட்டத்தில் நான்கு வழிச் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, போக்குவரத்து நெருக்கடியாக இருக்கின்றது. இந்த நிலையில், நான்கு வழிச் சாலைப் பணிக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நில உரிமையாளர்களுக்கு பாரபட்சமாக நஷ்டஈடு வழங்கப்பட்டிருக்கிறது. நிறைய பேருக்கு இன்னும் கொடுக்கவில்லை. தயவுகூர்ந்து அனைவருக்கும் equal ஆக நஷ்ட ஈட்டினைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். Area–விற்கு தகுந்தபடி, நீங்கள் நிலத்தின் விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பல இடங்களில் அந்தப் பணிகள் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, நீங்கள் மத்திய அரசை வலியுறுத்தி, அந்தப் பணிகளை சீக்கிரமாகச் செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லமாட்டீர்களா? (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இன்னும் ஆகவில்லை. என்னுடைய தொகுதியில் முக்கியமான சாலைப் பணிகள் அப்படியே முடங்கியிருக்கின்றன. இரணியல் பஞ்சாயத்து மற்றும் கிள்ளுக்கரையில் சாலைகளே சரியாக இல்லை. அந்தச் சாலைகளெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை என்னிடத்திலே கொடுத்துவிடுங்கள். அவற்றை நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். நீங்கள் பேச ஆரம்பித்து, சரியாக 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அன்புக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் படித்தவர்களுக்கு வேலை இல்லை. படித்தவர்கள் எல்லாம் வேலை தேடி வெளிநாட்டுக்குப் போக வேண்டிய நிலை உள்ளது. உள்நாட்டில் வேலைவாய்ப்பில்லை. அதனால், தயவுகூர்ந்து ஏதாவது ஒரு I.T. கம்பெனியை எங்களுடைய மாவட்டத்திற்குக் கொண்டுவர அரசு முன்வர வேண்டும். அதை நான் ஏற்கெனவே இங்கே வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன். நிச்சயமாக, ஒரு I.T. கம்பெனியை எங்களுடைய மாவட்டத்திற்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில், குளச்சல் தொகுதியில் கடற்கரையையொட்டி நினைவுத் தூண் ஒன்று இருக்கின்றது. வெற்றித் தூண். ஏற்கெனவே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து முடியுங்கள். (குறுக்கீடு) (குறுக்கீடு) உரையை முடியுங்கள் அண்ணா. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் முடித்துவிட்டார். (குறுக்கீடு) அவர் முடிக்கவே மாட்டேன் என்கிறார். அவர் இப்போதுதான் குளச்சல் நினைவுத் தூண் என்று ஆரம்பித்திருக்கிறார். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு)

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: சரி. உள்ளாட்சித் தேர்தல் நடத்தினீர்கள். உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்

துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் 22 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் நன்றாகத்தான் பேசிக் கொண்டிருந்தார். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் பற்றிப் பேசினார்; இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளைப் பற்றிப் பேசினார். எந்தத் திட்டமாக இருந்தாலும் ஒரு நபருக்கு ஒரு வீடுதான் அரசாங்கத்தின் சார்பாக கட்டிக் கொடுக்க முடியும். இப்போதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். அதிலேகூட, இடம் அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, அவருடைய மனைவி பெயரிலோ அல்லது மகன் பெயரிலோ பட்டா மாறுதல் செய்து கட்டிக் கொடுக்கலாம். இல்லையென்றால், பக்கத்து இடத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு, அந்தக் குடும்பத்திலே உள்ள இன்னொருவருக்கு இன்னொரு வீடு allot செய்யலாம் என்று சொன்னார்கள்.

பிற்பகல் 2–20

அதேபோல, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தை மத்திய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், 2016–ல் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டமாக மாற்றியிருக்கிறது. அதேபோல, பசுமை வீடுகள் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நான் காலையில் பேசும்போது சொன்னேன். சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தி, சூரிய மின்சக்தி விளக்குகள் அமைக்க ஒதுக்கப்படும் 30,000/– ரூபாயையும் இப்போது கட்டுமானத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியமான ரூ.20,610/–ஐப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று இன்னொரு வாய்ப்பை ஏற்படுத்தினார்கள்.

அதேபோல, தனி நபர் இல்லக் கழிப்பறைக் கட்டும் பணிக்கு கிட்டத்தட்ட ரூ.12,000/– ஆகும். ஆக மொத்தம் 2,42,610 ரூபாய் அந்த

வீட்டிற்குக் கிடைக்கும். வீடு கட்ட வேண்டும் என்று நினைப்பவர்கள் அந்தத் திட்டத்திற்காக கொஞ்சம் தொகையை ஒதுக்க வேண்டும். அதில் கொஞ்சமாவது அவர்களின் பங்கு இருக்க வேண்டும். கண்டிப்பாக, இந்தத் தொகையினைக் கொண்டு ஓரளவிற்கு நல்ல வீடுகளைக் கட்டிவிடலாம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூய்மைக் காவலரைப் பற்றிப் பேசினீர்கள். தூய்மைக் காவலர் திட்டம் கிராமங்களில் அற்புதமான திட்டமாக விளங்குகிறது. இந்தத் திட்டத்தில் 65,000 பேர் பணியில் இருக்கிறார்கள். 65,000 பேரைக் கொண்டு இந்தத் திட்டத்தைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறோம். காலையில் எதிர்க்கட்சி கொறடா அவர்கள்கூட இதைப்பற்றிப் பேசினார்கள். அவர்களுக்குத்தான் நவீன குப்பைத் தொட்டிகள், வண்டிகளெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அதனால், கிராமங்களில், பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளைப்போல மிகவும் அற்புதமாக சுத்தம் செய்து, தூய்மைக் காவலர்கள் மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய equipments எல்லாம் கொடுத்திருக்கிறோம். தமிழகத்தை மத்திய அரசு பாராட்டி, நம்முடைய தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களிலும் செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டார்கள். அதனால் மத்திய அரசு தூய்மைக் காவலருக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தை நிறுத்தி விட்டார்கள். மத்திய அரசு நிறுத்திய பிறகும், "இந்தத் திட்டம் அற்புதமான திட்டம்; கிராமங்களை சுத்தப்படுத்தக்கூடிய திட்டம். எனவே, இந்தத் திட்டத்தை நிறுத்தக் கூடாது" என்பதற்காக இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அந்தத் திட்டத்தை தமிழ்நாடு அரசு நிதியினைக் கொண்டு செயல்படுத்தி வருகிறார். கிட்டத்தட்ட ரூ.200 கோடிக்குமேல் வருகிறது. இருப்பினும், அதைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார். அதோடு, அவர்களுக்குக் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தீர்கள். அந்தக் கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக கூடிய விரைவில் நல்லது நடக்கும்.

அதேபோல, சுனாமி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் போடப்பட்ட pipe line–ஐ மாற்ற வேண்டுமென்று சொன்னார். இந்த pipe line மாற்றுவது குறித்து வெட்டுத் தீர்மானத்திலும் நீங்கள் கொடுத்திருந்தீர்கள். விளாந்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டம்; முட்டம்

வரை செல்லும் pipe line இரண்டும் ஒன்றுதானா? (குறுக்கீடு) சரி, இந்தத் திட்டத்தில் D.I. குழாய்கள் மாற்றுவதற்காக 69 இலட்சம் ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய அந்தத் திட்டத்திலுள்ள pipe lines–களும் கண்டிப்பாக மாற்றியமைக்கப்படும்.

அதேபோல, ஊராட்சி மற்றும் உள்ளாட்சிகளுக்குத் தேவையான நிதியும்வழங்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சிப்பிரதிநிதிகள், கிராமங்கள் மற்றும் ஒன்றியங்களில் எந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினாலும், அவற்றிற்குப் போதுமான நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒன்றும் வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். டாக்டர் பரமசிவம், பேசுங்கள். (குறுக்கீடு) நன்றி வேண்டாம். நானே உங்கள் சார்பாக நன்றி சொல்லிவிட்டேன். டாக்டர் பரமசிவம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நன்றி, உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம், நேரம் முடிந்துவிட்டது.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் நினைக்கும் நேரம் வரைக்கும் பேச முடியாது, உட்காருங்கள். டாக்டர் V.P.B. பரமசிவம், நீங்கள் பேசுங்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த புன்னகை மன்னன், பூவிழிக் கண்ணன், மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: இலையிலும், இரட்டை இலையிலும் அதைத் தாங்கியிருக்கின்ற எம் தொண்டனின் இதயத்திலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) உழவினம் காத்த உழவர்; உலகத் தமிழினம் போற்றும் முதல்வர், உழவன் சிரிக்க உலகம் செழிக்கும் என்பதை முக்கடல் சூழ்ந்த பாரதத்திற்கு முன்மொழிந்த தன்னிகரில்லா தலைவர்; ஏரோட்டும் உழவினத்தின் கண்ணீர் நீரோட்டம் தடுக்க எடப்பாடி தந்த எங்கள் அண்ணன், குடிமராமத்துப் பணிகளால், (மேசையைத் தட்டும் ஒலி) கரிகாலன் காலத்தை கண்முன்னே நிறுத்திய பூந்தமிழ் பூமியின் புதல்வர்; போர்க்களம் யாவையும் பூக்களங்களாக்கிடும் புன்னகைப் போராளி; பூவுலகு போற்றும் புரட்சியின் மைந்தர்; மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் வீரம் திக்கெட்டும் பறைசாற்றிட வைத்த ஜல்லிக்கட்டு நாயகர்; அன்புக்கும், பண்புக்கும் அரிச்சுவடியாய் விளங்குகின்ற தேனி தந்த தங்கம், ஆற்றல் மிகுந்த எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் இந்த நல்ல நேரத்திலே வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2–25

இந்த நல்வாய்ப்பினை எங்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கின்ற எங்கள் மாவட்டத்தினுடைய வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி புரிவதோடு மட்டுமல்லாமல், என்னைப் போன்ற இளைஞர்களுக்கு, “பதவி என்பது நாம் அனுபவிப்பதற்காக மட்டுமல்ல; இந்தப் பதவியைக்கொண்டு மக்களோடு மக்களாக நாம் பயணிக்க வேண்டும்; அவர்கள் உள்ளங்களில் இடம் பெற வேண்டும்; நாம் பணியாற்றுகின்ற களமான, கிராமப்புறங்களுக்கு சென்று, அங்கு இருக்கின்ற மக்கள் பயன்பெற நல்ல பணியாற்ற வேண்டும்; அரசினுடைய அனைத்துத் திட்டங்களையும் அவர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்” என்று அறிவுரை வழங்கி, இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற அத்தனை மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளி, தமிழ்நாட்டை உள்ளாட்சித் துறையில் முதன்மை மாநிலமாக ஆக்கியிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். நிறைய கருத்துக்கள் இங்கே பேசப்பட்டன. நேரம் குறைவாக இருப்பதனால், ஒருசில கருத்துகளை மட்டும் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக ஒருதுறையைப்பற்றிப் பேசும்போது, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் கொஞ்சம் * உண்மைக்கு மாறாகச் சொல்வார்கள். பொதுவாக பழமொழி என்னவென்றால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ** என்ற அந்த வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது, "உண்மைக்கு மாறாக" என்று சொல்ல வேண்டும்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * உண்மைக்கு மாறாக அல்ல; பழமொழி. 'முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல்' என்று சொல்வார்கள். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதைப் பார்த்தால், முழு பூசணிக்காயை அல்ல; பூசணிக்காய் தோப்பையே சோற்றில் மறைத்துவிட்டார்கள் என்று தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவ்வளவு இலட்சக்கணக்கான திட்டங்களை இந்த உள்ளாட்சித் துறையில், இவர்கள் உள்ளாட்சித் தேர்தலைத் தடுத்தபோதிலும், (குறுக்கீடுகள்) இவர்கள் உள்ளாட்சித் தேர்தலை வரவிடாமல் தடுத்து, நீதிமன்றத்திற்குச் சென்று (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தனை திட்டங்களையும் மறைத்து விட்டார்கள். உள்ளாட்சி மன்றங்கள் இல்லாத நேரத்திலும், சிறப்பாகச் செயல்பட்டு, பொது மக்களுக்கு, உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத குறையே தெரியாதவண்ணம், அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு எதிர்க்கட்சிகளாக இருந்தால், விருதுகளை 1, 2, 3 என்று எண்ணுவார்கள். இப்படி விருதுகளை எண்ணுபவர்களுக்கு மத்தியில், நாங்கள் வாங்கிய விருதுகளே ஒன்று, இரண்டு, மூன்று. அதாவது 123 விருதுகளை ஒட்டுமொத்தமாக ஒரே ஒரு துறை, உள்ளாட்சித் துறையில் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒட்டுமொத்த இந்தியாவும் திரும்பிப் பார்க்கின்ற துறையாக இந்தத் துறை விளங்கிக்கொண்டிருக்கின்றது. இதனை நீங்கள் நன்றாக உற்றுப் பார்க்க வேண்டும். சாதாரணமாக இந்த விருதினைக் கொடுத்துவிடமாட்டார்கள். இன்றைக்கு overall performance–ல் தமிழ்நாடு No.1. ஆகவேதான் கொடுத்திருக்கின்றார்கள்.

இன்றைக்கு உள்ளாட்சித் துறைக்கு இத்தனை விருதுகள் கொடுத்ததில், முக்கியமாக அவர்கள் பார்த்தது infrastructure. மத்திய அரசாங்கமோ அல்லது உதாரணத்திற்கு India Today பத்திரிகையோ survey செய்து பார்க்கும்போது, infrastructure–ஐத்தான் முக்கிய விஷயமாக எடுத்துக்கொள்கிறார்கள். Infrastructure–ல் என்னென்ன வருகின்றன? முதலில் road. ஒரு பெரிய நகரம் இருக்கின்றது என்று சொன்னால், அந்த நகரத்தினுடைய area–விற்குத் தகுந்தபடி proportionate ஆக சாலை வசதி இருக்கின்றதா என்று பார்ப்பார்கள். அப்படியானால், சாலைகளினுடைய எண்ணிக்கை எவ்வளவு? அவை கப்பிச் சாலைகளாக, தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்பட்ட சாலைகளாக அவை இருக்கின்றனவா என்று பார்ப்பார்கள். இரண்டாவதாக வீடு; தரமான வீடுகளை அரசாங்கம் கட்டிக் கொடுக்கின்றதா? அந்த வீட்டில் முக்கியமாக மின்சார வசதி செய்யப்பட்டிருக்கின்றதா? அந்த வீடுகளுக்கு pipe மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றதா? அங்குள்ள மருத்துவமனைகளுக்கு, கோயில்களுக்கு மற்றும் மக்கள் அதிகமாகக் கூடுகின்ற இடங்களுக்குச் சென்று வர சரியான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா? பெண்களுக்கு கல்வியறிவை ஏற்படுத்திட ஆரம்ப நிலைக் கல்விக் கூடங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று பல criteria–வை அடிப்படையாக வைத்துதான் விருதினைக் கொடுப்பார்கள். அத்தனை criteria–வையும் இன்றைக்கு நிறைவேற்றிய காரணத்தினால்தான், நம்முடைய தமிழக அரசு இதில் முதலிடம் பெற்றிருக்கின்றது.

இரண்டாவதாக இந்த grants–ஐப் பற்றிச் சொன்னார்கள். 'உள்ளாட்சித் தேர்தல் நடத்தவில்லை; அதனால் எந்தப் பணமும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவில்லை என்று சொன்னார். எந்தப் பணமும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவில்லை என்று சொல்கின்றீர்கள். நீங்கள் தயவுசெய்து குறித்துக்கொள்ள வேண்டும். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று எங்களுடைய மாண்புமிகு

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று 11,545 கோடி ரூபாயை பெற்று வந்து கொடுத்திருக்கிறார். அவர் சொன்னது உண்மை. ஒரு மாநிலத்தினுடைய வருவாயில், Tax Revenue–ல் 10 சதவிகிதம்தான் உள்ளாட்சிக்கு வழங்கப்படுகிறது, அதனை 'நீங்கள் அதிகரிக்கவில்லை' என்று எதிர்க்கட்சி உறுப்பினர் சொல்கின்றார். ஆனால், முறையாக மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று அந்த 10 சதவிகிதத்தை இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கி, அதில் 55 சதவிகிதத்தை ஊராட்சிகளுக்கும், 45 சதவிகிதத்தை நகராட்சிகளுக்கும் இன்றைக்கு வழங்கியிருக்கின்றார்கள். அதில் நீங்கள் ஒரு சிறிய மாற்றம் வேண்டுமென்றால் கேளுங்கள்; கிராமப்புறங்களுக்கு நிதி போதுமானதாக இல்லை என்று சொல்லுங்கள். அதனை நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு கோரிக்கையாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வைக்கலாம். நம்முடைய State Revenue–ல் 55 சதவிகிதத்திற்கு பதிலாக 60 சதவிகிதத்தை நம்முடைய கிராமப்புறங்களுக்குத் தந்து, மீதமுள்ள 40 சதவிகிதத்தை urban bodies–க்குக் கொடுக்கலாம். என்ன காரணம் என்றால், Centrally Sponsored Schemes நகராட்சிகளுக்கு நிறைய இருக்கின்றது. அம்ரூத் திட்டம், Smart City போன்ற திட்டங்கள் இருக்கின்றன. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு வருவாய் அதிகமாக இருக்கின்றது. அந்தமாதிரி வருவாயைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு சற்று குறைத்து, கிராமப்புறங்களுக்கு நீங்கள் அதிகமாக நிதி ஒதுக்கிக் கொடுக்கலாம் என்று கேட்டால், அது நியாயம். ஆக, அவற்றையெல்லாம் விடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர் மாறாகப் பேசியிருக்கின்றார், அது பரவாயில்லை.

அடுத்து, இன்றைக்கு கிராமப்புறங்களில் சாலைகளை எடுத்துக்கொள்ளுங்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பெரிய அச்சம் என்னவென்றால், கிராமப்புறங்களுக்கு போகும்போது, "என்ன செய்தீர்கள்?" என்று மக்கள் கேட்பார்கள். அப்படிப்பட்ட ஒரு கேள்வி எப்போதுமே வரும் என்று தயாராக இருப்பார்கள். ஆனால், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற வித்தியாசமே இல்லாமல், இன்றைக்கு நாம் கிராமங்களுக்குள்ளே போகும்போதே நமக்கு ஒரு positive note; அதாவது மக்களிடத்தில் போனாலே, முதலில் நம்மை positive ஆக அவர்கள் பார்ப்பதற்குக் காரணமே இந்தச் சாலைகள்தான். இன்றைக்குக் கிராமப்புறங்களில் போடுவதற்குச் சாலைகளே இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கே சிவப்பாக இருந்தாலும்,

அடுத்த ஒரு வாரத்திற்குள் Office–லிருந்து கூப்பிட்டுவிடுகிறார்கள். "ஐயா, சாலைப் பணிகளுக்கு பணம் வந்திருக்கின்றது; வேகமாக road list கொடுங்கள்" என்று கேட்கிறார்கள். இணைப்புச் சாலைகள், கிராமச் சாலைகள், மயானச் சாலைகள் என எதுவாக இருந்தாலும் எடுக்கின்றார்கள். புதியதாகத் திட்டங்களைத் தீட்டுகின்றார்கள். டீ கடையில் உட்கார்ந்துகொண்டு பேசுகின்றான்; "இப்படியே போட்டுக்கொண்டே இருக்கின்றார்களே; அடுத்த முறை இவர்கள் ஜெயிப்பார்கள்; அப்படி ஜெயித்தால் எந்த ரோட்டைப் போடுவார்கள்" என்று டீ கடையில் பேசுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது உண்மை. ஏனென்றால், அவர்களுடைய மனதில் வெள்ளந்தியாக பதிந்திருக்கின்றது.

பிற்பகல் 2–30

இன்றைக்கு Logistics இல்லாமல், ஒரு நாட்டினுடைய வளர்ச்சி இல்லை. எதிர்க்கட்சிக் கொறடா சிரிக்கின்றார். அதிகமான சாலைகள் அவர்களுடைய தொகுதியில்தான் வந்திருக்கின்றன. அது எப்படி என்பது எனக்குத் தெரியவில்லை. அதிகமான சாலைகளை அவருடைய தொகுதிக்காக வாங்கிக்கொண்டு, முதல் ஆளாக எழுந்து குறை கூறியிருக்கிறார்கள்; உண்மையிலேயே எனக்கு வருத்தமாக இருக்கிறது. நன்றாக note செய்துகொள்ளுங்கள். ஏனென்றால், இன்றைக்கு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு கிலோ மீட்டருக்குக் கீழே உள்ள சாலைகளையெல்லாம் முதலில் போட முடியாது. ஆனால், இன்றைக்கு less than 1 k.m. உள்ள சாலைகளைப் போட்டிருக்கிறோம். நெடுஞ்சாலைத் துறை மூலமாக கிட்டத்தட்ட 4,800 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் போட்டிருக்கிறோம்; Intermediate lane ஆக அவை இருக்கின்றன. இன்றைக்கு எந்த ஊருக்குள் வேண்டுமானாலும் சென்று பாருங்கள்; இரண்டு buses இடித்துக்கொண்டு போகிற மாதிரி இருந்த நிலை மாறி, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: இன்றைக்கு intermediate lane வைத்து அற்புதமாக சாலைகளெல்லாம் போடப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) NABARD திட்டத்தின் மூலமாக பல்வேறு திட்டங்கள் இங்கே செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை

இந்த நேரத்தில் நான் அன்போடு உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒட்டுமொத்தமாக 1½ இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. இதில் என்ன சுவாரசியமான விஷயமென்றால், 48,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சாலைகளாகும். 1½ இலட்சம் கிலோ மீட்டரில், 48,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகள் புதிதாக உருவாகியிருக்கின்றன என்றால், எத்தனை உட்கிடை கிராமங்களுக்கு புதிதாக சாலை வசதி கிடைத்திருக்கும் என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரண்டாவது, "Housing for all" குறித்துச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருமையான விளக்கம் கொடுத்தார். "75,000 ரூபாயில் கட்டும்போது, விலைவாசி உயரவில்லையா? சிமெண்ட் கிடைக்காமல் போகவில்லையா? நாங்கள் இவ்வளவு கொடுக்கிறோமே?" என்று அண்ணன் அவர்கள் அருமையாக விளக்கம் கொடுத்தார்கள். உண்மையிலேயே அது சரியான கருத்து. ஏனென்றால், இன்றைக்கு மாநில அரசும், மத்திய அரசும் இணைந்து நிதியுதவி செய்து பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். அதன்மூலம் 16,36,000 வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். 16,36,000 வீடுகள் இன்றைக்கு கட்டப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கம் கொடுப்பது வெறும் 72,000 ரூபாய்; மாநில அரசு 48,000 ரூபாய்; ஆக 1.20 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. ஆனால் இது போதாது என்பதால்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50,000 ரூபாயினை கூடுதலாக மாநில அரசினுடைய நிதியாகக் கொடுக்கிறார்கள். மேலும், 12,000 ரூபாயினை toilet கட்டுவதற்காகக் கொடுக்கிறார்கள்; அதோடு, man–days 90 நாட்கள் என்று எடுத்துக்கொண்டு, 20,000 ரூபாய் கொடுத்து, கிட்டத்தட்ட 2 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான நிதியினைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பசுமை வீடுகள் திட்டத்தை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், ஒவ்வொரு வருடமும் 420 கோடி ரூபாயில் 20 ஆயிரம் வீடுகள் இங்கே கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் கட்டுமானப் பொருட்களை வாங்க முடியவில்லை என்று அண்ணன் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தில் சிமெண்ட்–ஐ மானிய விலையில்தான் கொடுக்கிறோம்; கம்பியை மானிய விலையில்தான் கொடுக்கிறோம்; ஜன்னல் கதவு வாங்க வேண்டுமா? மானிய விலையில்தான் கொடுக்கிறோம். நீங்கள்

ஆலோசனை சொல்லுங்கள். இந்த நேரத்தில் என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை இங்கே முன்வைக்கின்றேன். அதில் முக்கியமாக மணல் வாங்குவதில் விலைவாசி பிரச்சினை இருக்கிறது. இன்றைக்கு மணல் கிடைக்காமல், எந்த மணலை வாங்குவது என்று தெரியாமல், நிறைய பேர் m–sand–க்குச் செல்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் மற்றும் பசுமை வீடு திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு மட்டும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் dedicated sand quarry வைத்து, மணலை வழங்கலாம். அவர்கள்மட்டும்தான் அதனைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லி, அந்த மணலை சற்று விலை குறைவாகப் பெற்றுத் தருவார்களேயானால், நிச்சயமாக இந்தத் திட்டம் வெற்றியடையும் என்பதில் ஐயப்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் செய்யலாம்; என்னுடைய தாழ்மையான கருத்து. இந்த green house திட்டத்திற்கு 420 கோடி ரூபாய் நாம் ஒதுக்குகிறோம். தற்போது 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகிறது. இந்த green house–க்கு நாம் ஒதுக்கிடும் 420 கோடி ரூபாயை, அப்படியே transfer செய்து, 1 இலட்சம் வீடுகள் கட்டுவதாக வைத்துகொண்டோம் என்று சொன்னால், இந்த green house திட்டத்தையும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தையும் merge செய்து, நம்முடைய பங்களிப்பு அதிகம் இருப்பதால், நாம் அந்த 420 கோடி ரூபாயை அதில் சேர்த்து 1 இலட்சம் வீடுகளுக்கும் 42,000 ரூபாயை கூடுதலாகக் கொடுத்து கிட்டத்தட்ட 2½ இலட்சம் ரூபாய்க்கு மேல் இந்தப் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்காக கொடுக்க முடியும். அதை merge செய்து, contribution–ஐ நாம் அதிகமாகக் கொடுப்பதால், we will be the owner of the asset. அதற்குண்டான வாய்ப்புகள் இருக்குமேயானால், அதனையும் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கையாக வைக்க பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

BPL list என்பதெல்லாம் ஓர் அற்புதமான விஷயம்; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை சரி செய்தார்கள். நானும் ஓர் எளிய தொண்டன்; நாம் கிராமப்புறங்களிலிருந்து இங்கே வந்திருக்கிறோம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்கள் சொல்லும் கருத்துகளுக்குக்கூட அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள். BPL list 2009–ல் எடுத்திருக்கிறார்கள். PIP list என்கிறார்கள்,

SC/ST list என்கிறார்கள்; பார்த்தால் முழுவதுமே பணக்காரர்களாக இருக்கிறார்கள். அது என்ன கணக்கு என்பது தெரியவில்லை; நிறைய பேர்களுடைய பெயர் அந்த list–ல் இல்லை என்றும், வீடு கிடையாது என்றும் சொல்கிறார்கள். உதாரணத்திற்கு, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை நபர்கள் eligible என்று கேட்டால், 17 நபர்கள் என்று சொல்கிறார்கள். 60,000 நபர்கள் இருக்கிற இடத்தில் 17 நபர்கள்தான் eligible என்று சொல்கிறார்கள். என்னவென்று கேட்டால், list–ல் ஏறவில்லை. உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்துச் சொன்னோம்; மத்திய அமைச்சர் அவர்களிடத்தில் பேசினார்கள். Awaas+ என்ற புதிய website–ஐ open செய்து, கிட்டத்தட்ட 9,11,000 நபர்களை புதிதாக இந்த BPL list–ல் சேர்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அத்தனை பேர்களுக்கும் இன்றைக்கு அந்த பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஓர் அற்புதமான வாய்ப்பை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த Awaas+ approval–க்காக wait செய்துகொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் விரைந்து செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, பாலங்கள் கட்டுவதைப் பொறுத்தவரையில், “நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான் அதிகமான பாலங்கள் கட்டப்பட்டன” என்று பெருமை பேசிக் கொண்டிருந்ததெல்லாம் அந்தக் காலம். ஏனென்றால், இன்றைக்கு கட்டப்பட்டுள்ள பாலங்களின் பட்டியலைப் பார்த்தால் எங்களுக்கு கிறு கிறு என்று வருகிறது. 1,049 பாலங்கள் இந்த ஆட்சியில் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் பாலங்கள் என்று சொன்னால், அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான ஆட்சிதான் ஞாபகத்திற்கு வருமே தவிர, வேறு எந்த ஆட்சியும் ஞாபகத்திற்கு வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவிற்கு சிறு பாலங்கள், குறு பாலங்கள், மேம்பாலங்கள் என்று கட்டித் தந்து இன்றைக்கு ஓர் அற்புதமான infrastructure–ஐ ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

இரண்டாவது முக்கியமான விஷயம், குடிதண்ணீர். யாராக இருந்தாலும் சரி, எதிரியாக இருந்தாலும், குடிதண்ணீர் பஞ்சத்தில் சிக்கித் தவிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு, குடிதண்ணீர்ப் பற்றாக்குறைக்கு மிக அதிகமான கவனத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு, அனைத்துத் துறை அமைச்சர்களுக்கும், குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்

துறை அமைச்சர் அவர்களுக்கு பல நல்ல ஆலோசனைகளை வழங்கி, சிறப்பான முறையில் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2–35

ஏனென்றால், 142 ஆண்டு காலத்தில் இல்லாத வகையில் வறட்சி ஏற்பட்டபோது, ஒவ்வொரு நிலையிலும் இந்த அரசு எடுத்த நடவடிக்கையை எண்ணிப் பாருங்கள். லாரி வைத்து தண்ணீர் கொடுக்க வேண்டுமா? கொடுக்கப்பட்டது. Borewell போட வேண்டுமா? கேட்ட இடங்களிலெல்லாம் borewell போடப்பட்டது. குடிநீர்த் திட்டங்களுக்கு MLA fund வேண்டுமா? MLA fund முழுவதும் water supply–க்கு transfer செய்து கொள்ளுங்கள். வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டுமா? தண்ணீர் கொண்டு வரப்பட்டது. ஜோலார்பேட்டையிலிருந்து train–ல் நீர் கொண்டு வர வேண்டுமா? கொண்டு வாருங்கள். நெய்வேலியிலிருக்கின்ற நமது நிலக்கரி சுரங்கத்திலிருந்து நீர் கொண்டு வர வேண்டுமா? கொண்டு வாருங்கள். புதிதாக நிலத்தடி நீர் அதிகமாக உள்ள பகுதிகளைக் கண்டுபிடியுங்கள். அங்கு borewells போட வேண்டுமா? Borewell போடுங்கள் என்று அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி, வறட்சியைப் போக்கினார்கள். இந்த வறட்சியின்மூலம் பாடம் கற்றுக்கொண்டு, வாழும் கரிகால் சோழனாக விளங்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுதந்திரத்திற்கு முன்பாக தூர்வாரப்பட்ட குளங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு குளம், இரண்டு குளங்கள் என்றல்ல; இன்றைக்குத் தமிழ்நாட்டிலிருக்கக்கூடிய 30,051 குளங்களை 1,750 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகளைச் செய்திருக்கிறார். வெறும் தூர்வாரும் பணி மட்டுமல்ல; அந்தக் குளங்களின் inlet எங்கே? outlet எங்கே? மதகு எங்கே? படித்துறை எங்கே என்று அனைத்தையும் சர்வே செய்து, சரிசெய்து, அவற்றை இனி யாரும் ஆக்கிரமிக்க முடியாத வகையில் கல்லும் ஊன்றியிருக்கிறார்கள். அதுதான் முக்கியமான point.

இரண்டாவது, இன்றைக்கு அனைத்து அரசுக் கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்புத் திட்டம் என்பது சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதேபோன்று, defunct

borewells பற்றி பிரதம மந்திரி அவர்கள் தனது “Mann Ki Baat” நிகழ்ச்சியில்கூடச் சொல்லியிருக்கிறார். தமிழகத்தில் செயல்படாத borewells–ஐ எல்லாம் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் defunct borewell Rehabilitation என்ற ஓர் அற்புதமான திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். பயன்படாத நிலையிலுள்ள borewells மூலம் மழைத் தண்ணீர் பூமிக்குள் போக வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு groundwater level–ஐ உயர்த்த வேண்டுமென்பதற்காக, கண்ணும் கருத்துமாக உழைத்த அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சாதாரணமாக இதனைச் சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; புள்ளிவிவரம் சொல்கிறது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இப்படிச் செய்ததன்மூலம் groundwater level என்ன ஆயிற்று என்று பார்த்தால், குறைந்தபட்சம் 1/2 அடி உயர்ந்திருக்கிறது; அதிகபட்சமாக பெரம்பலூரிலே 17 அடி உயர்ந்திருக்கிறது. இதுதான் இந்த திட்டத்திற்குக் கிடைத்திருக்கிற வெற்றி என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நதிநீர் இணைப்புக்கு என்னென்ன செய்ய முடியுமோ, அதையெல்லாம் நம் அரசு செய்திருக்கிறது. இன்றைக்கு நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்களும், ஆந்திர மாநிலத்திற்குச் சென்று, அங்கு ஆந்திர முதல்வரைப் பார்த்து bouquet கொடுத்து, கோரிக்கையைச் சொல்லிவிட்டு, அற்புதமான அவர்களுடைய புன்சிரிப்பை அளித்துவிட்டுவருகிறார்கள். அவர்கள் இங்கு வருவதற்குள் உடனடியாக அங்கிருந்து தண்ணீரைத் திறந்துவிடுகிறார்கள். 6.6. TMC தண்ணீரைப் பெற, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அருகிலிருக்கின்ற மாநிலங்களுக்குச் சென்று அவர்களிடத்தில் பேசியிருக்கிறார்கள்; காவேரி, கோதாவரி நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு அனுமதியும் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரள முதல்வர் அவர்களை நேரில் சென்று சந்தித்து, முல்லைப் பெரியாறு திட்டத்தின்கீழ், ஒரு புதிய குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அனுமதி பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று, ஆனைமலை நல்லாறு திட்டத்திற்கு நமது அரசு அனுமதியைப் பெற்றிருக்கிறது. இப்படி அண்டை மாநிலங்களோடு ஒரு சுமுகமான உறவை மேம்படுத்தி, நதிநீர் இணைப்புக்கு அதிகமான

முக்கியத்துவத்தை நமது அரசு கொடுத்திருக்கிறது என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது.

இன்றைக்கு இந்தியாவிலேயே pipeline மூலம் குடிநீர் வழங்கி வருவதில் தமிழகம்தான் முன்னோடியாக உள்ளது. கிட்டத்தட்ட 58,82,262 pipeline connections–ஐ நமது அரசு அளித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திலேயே அதிகளவில் pipeline connections–ஐ நமது அரசுதான் கொடுத்திருக்கிறது. TWAD–ஐ எடுத்துக்கொண்டால், இத்தனை ஆண்டுகளில் இல்லாத வகையில், இன்றைக்கு 2,078 MLD தண்ணீரை நாளொன்றுக்கு வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் highest achievement TWAD மூலமாக. ஒட்டுமொத்தமாக மாநிலத்திலிருக்கக்கூடிய overall State resources–ஐ வைத்துக்கொண்டும், குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும் ஒரு நாளைக்கு, மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி, ஊரகம் போன்ற அனைத்துப் பகுதிகளிலும் பார்த்தோமானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 4,945 MLD தண்ணீர் மட்டும் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 7,499 MLD தண்ணீர் நாள்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 2,554 MLD தண்ணீர் அதிகமாக நாள்தோறும் நமது அரசாங்கம் அளித்து வருகிறது என்று சொன்னால், திட்டமிட்டு, வருங்கால வளர்ச்சியை மனதில் கொண்டு, இந்த அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது புரியும். இதை யாரும் மறுத்துப் பேசிவிட முடியாது. இன்றைக்கு மழை இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகள் பொய்த்தாலும்கூட, அதனையும் சமாளித்திட திட்டம் வைத்திருக்கிறார்கள். அதுகுறித்துத்தான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் இன்றைக்குச் சொன்னார்கள், கடல் நீரை நன்னீராக்குவதன்மூலம் 750 MLD தண்ணீர்; வீராணத்திலிருந்து 150 MLD தண்ணீர்; industrial waste water recycle செய்வதன்மூலம் 40 MLD தண்ணீர் என்ற வகையில் 940 MLD தண்ணீரை எந்த நேரத்திலும் இருப்பு வைத்திருக்கின்றவகையில், ஒரு அற்புதமான சூழ்நிலையை இங்கே உருவாக்கியிருக்கிறார்கள்.

அடுத்து, சுகாதாரத் துறையில் பேசும்போது, அனைத்திற்கும் நாம் முன்னோடி மாநிலமாக இருக்க வேண்டும் என்று சொல்வோம், மாண்புமிகு பாரதப் பிரதமர் காப்பீட்டுத் திட்டத்திற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ‘முதலமைச்சரின் விரிவான

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' ஒரு முன்னோடியாக இருந்தது. 'Jal Jeevan' என்ற திட்டத்தை நம்முடைய மத்திய அரசாங்கம் இப்போது கொண்டுவந்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்பாகவே, 'அழைத்தால் இணைப்பு' என்ற ஓர் அற்புதமான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கரங்களால் துவக்கி வைத்திருக்கிறார். மாநகராட்சிப் பகுதிகளில் pipeline connection வேண்டுமென்றால், நீங்கள் அழைத்தவுடன் இணைப்பு உடனடியாக கொடுக்கப்படும். 10 தவணைகளில் நீங்கள் அந்தத் தொகையைக் கட்டினால் போதும். உங்களுக்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர் நிச்சயமாக வழங்கப்படும் என்பதெல்லாம் ஒரு மிகப் பெரிய திட்டம். இத்தகைய திட்டம் கிரீடத்தில் ஒரு மணிமகுடமாக விளங்குகிறது என்பதில், எள்ளளவும் மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வளவையும் நன்றாகச் சொல்லிவிட்டாலும்கூட, எனக்கு மனதின் ஓரத்தில் ஒரு சிறு வருத்தம். அது என்னவென்றால், தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் நன்றாக மழை பெய்தது; அனைத்துப் பகுதிகளிலும் groundwater level refresh ஆயிற்று; நான்கூட ஒரு ஆதாரத்தை வைத்துப் பார்த்தேன். நம்முடைய State groundwater Committee–ன் பிப்ரவரி மாதத்திற்கான report–ஐப் பார்த்தேன். Fall எனும் இடத்தில் எந்த மாவட்டமும் இல்லை. அனைத்து மாவட்டங்களும் rise–லேயே இருக்கின்றன. ஆனால், ஒரேயொரு மாவட்டத்தில் மட்டும் fall; 0.53 மீட்டர் fall. அது எந்த மாவட்டம் என்று பார்த்தால், திண்டுக்கல் மாவட்டம். (குறுக்கீடு) இல்லை; வேலூர் மாவட்டம் இல்லை. தேனி மாவட்டத்தில் சிறிதளவு fall இருக்கிறது. அனைத்துமே உங்களுக்கு வேண்டுமென்று கேட்டால் எப்படி? ஆகையினால், உண்மையிலேயே வருத்தமான ஒரு செய்தி. ஏனெனில், எங்களுடைய திண்டுக்கல் மாவட்டம் என்பது over–exploited block உள்ள பகுதி. நாங்கள் இருப்பதே exploited block பகுதி. நாங்கள் நம்பியிருப்பது surface water–ஐத்தான். எங்காவது ஓரிடத்திலிருந்து காவேரித் தண்ணீர் வர வேண்டும். பூமிக்கடியிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

பிற்பகல் 2–40

ஏனெனில், இன்றைக்குத் தண்ணீர் பூமிக்கடியில், அதளபாதாளத்திற்குப் போய்க்கொண்டே இருக்கிறது. அந்த

வருத்தத்திலும் ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், எங்களுக்கு ஒரு ராசியான முதலமைச்சர். உண்மையிலேயே அவர் ராசியான முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கான தண்ணீரை கரூர், காவேரி ஆற்றுப் படுகையிலிருந்துதான் எடுத்தாக வேண்டும். இவர் முதலமைச்சரான பிறகு 4 முறை மேட்டூர் அணை நிரம்பியது. எப்பொழுதுமே, வேறு யார் இருக்கும்போதும் இப்படி நிரம்பவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மேட்டூர் அணைக்கும், எங்களுக்கும் என்ன சம்பந்தம் என்றால், அங்கே அணை நிரம்பி, கரூர் வரையிலும், திருச்சி வரையிலும் நீர் ஓடினால்தான், 20 நாட்கள் காவேரியில் நீர் ஓடினால்தான், எங்களுக்காக TWAD மூலம் போடப்பட்டிருக்கின்ற borewell எல்லாம் இரண்டு வருடங்களுக்கு தண்ணீர் கொடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட அற்புதமான தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற நல்ல நேரம், 4 முறை மேட்டூர் அணை நிரம்பி, தண்ணீர் எல்லாம் இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஆனாலும், வறட்சியின் பிடியில் இருக்கும் பிள்ளைகள் பாலுக்காக தாயிடம் அழும் அல்லவா; அதுபோல் அழ வேண்டும் என்ற நிலையில் எங்கள் பகுதி மக்கள் இருக்கிறார்கள். ஆனால், அழுவதற்கு எங்கள் தாய் இல்லை. எங்கள் தாய் விட்டுச்சென்ற தலைமகன்கள் இரண்டுபேரும் இங்கே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே நின்று, இவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிச்சயமாகத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு விவசாயப் பெருமக்கள் எல்லாம் இருக்கிறார்கள். குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக எங்களது வேடசந்தூர் தொகுதியிலே 100 குளங்கள், 226 ஊருணிகள் சீரமைக்கப்பட்டு, தண்ணீருக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றன. காவேரியிலே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றபோது, எங்களுடைய விவசாயப் பெருமக்களுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றுகின்ற வகையிலே, மாயனூர் அணையிலிருந்து 1 டி.எம்.சி. surplus water–ஐ DI pipe மூலமாக, வெள்ளியணை, உப்பிடமங்கலம் வழியாக, குஜிலியம்பாறை ஒன்றியம் வழியாகக் கொண்டு வந்து, வேடசந்தூர் தொகுதியிலே இருக்கின்ற நூற்றுக்கணக்கான நீர்நிலைகளை நிரப்ப ஆவன செய்ய வேண்டுமென்ற தாழ்மையான வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் முன்வைக்கிறேன்.

ஏனென்றால், இவர் செய்யவில்லையென்றால், வேறு எவரும் செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உழவுக்கும், வேளாண்

விவசாயிகளுக்கும், குடிமராமத்துக்கும் முக்கியத்துவம் தருகின்ற எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களும், 1 டி.எம்.சி. surplus water–ஐ DI pipe மூலமாக pump செய்து, எங்கள் தொகுதியில் இருக்கின்ற 100 குளங்களுக்கு நிரப்பி, விவசாயிகளுடைய வாழ்க்கையிலே விளக்கேற்றிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, பழனியிலிருந்து பாலாறு, புரத்தலாறு, அமராவதி ஆறுகள் இணைப்பிற்கு ஒரு அரசாணை போட்டு, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி, இப்போது investigation நடந்துகொண்டிருக்கிறது. அதை சற்று ரெட்டியார்சத்திரத்திலிருந்து மாங்கரையாறு வழியாக நீட்டிப்பு செய்து, குடவனாற்றிலே இணைப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், குடவனாற்றில் தண்ணீர் வந்து 10 வருடங்களுக்குமேல் ஆகிறது. அந்த அணை நிரம்பவே இல்லை. அந்த நிலை இன்னும் அப்படியே இருக்கின்றது. ஆனால், இந்த இணைப்புத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வெளியிட்ட அரசாணையின் extension. குடவனாற்றுக்கு மாங்கரையாறு வழியாக வந்துவிட்டால், 12 கிலோ மீட்டரில் சேர்ந்துவிடும். அதை செய்துகொடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) இரண்டே நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

அடுத்து, Waste management–ல் அற்புதமான சாதனையை இன்றைக்குச் செய்திருப்பது உண்மையிலேயே பிரமிக்கத்தக்க ஒன்று. ஏனென்றால், இன்றைக்கு நாம் சுகபோகமாக வாழ வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால், நம்மைச் சுற்றி குப்பையே இருக்கக்கூடாது. நம் வீட்டுக் குப்பையை வேறுபக்கம் வேகமாகப் போட்டுவிட்டு, நம்முடைய வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்கிறோம். ஆனால், குப்பையை manage செய்வதற்கு அரசாங்கத்திற்கு இருக்கிற கஷ்டம் பெரிய கஷ்டம். ஆனால், அந்தச் சுமையையும் இன்றைக்கு சுகமாக ஏற்றுக்கொண்டு, சவால்களை சமாளித்து, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அத்துறை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு நான் சொல்கிறேன்; வர்தா புயல் ஒட்டுமொத்த தமிழகத்தையும் சுழற்றியடித்தது. அப்போது எவ்வளவு குப்பைகள்? அந்தக் குப்பைகளின் அளவு 55,850 மெட்ரிக் டன் ஆகும். 25,800 தொழிலாளர்களைக்கொண்டு, வெறும் 10 நாட்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) வர்தா புயலினால் ஏற்பட்ட

அத்தனை குப்பைகளையும் சேகரித்து, நிலைமையை சரிசெய்தார்கள். அதேபோன்று, ஒக்கி புயலின்போது 1,133 மெட்ரிக் டன் குப்பைகள்; 2,570 பேர் களத்திலே நின்று, வெறும் 10 நாட்களிலே அத்தனைக் குப்பைகளையும் அகற்றியிருக்கிறார்கள். அடுத்து அத்திவரதர் வைபவம். அதைத்தான் சொன்னேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ராசியானவர் என்று. அத்திவரதர் இப்போதுதான் வெளியில் வந்தார். அத்திவரதரைப் பார்க்க ஒட்டுமொத்த இந்தியாவும் காஞ்சிபுரம் வந்திருந்தது. கிட்டத்தட்ட 1,920 மெட்ரிக் டன் குப்பைகள் சேர்ந்தன; 3,817 நபர்களை வைத்து, 48 நாட்களிலே ஒரு குப்பைக்கூட இல்லாமல் அகற்றப்பட்டது. அதேபோன்று, தஞ்சை, பெரியகோயிலிலே நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது 2,000 மெட்ரிக் டன் குப்பைகள், 1,272 தொழிலாளர்களை வைத்து 10 நாட்களிலே அகற்றப்பட்டது. இதிலெல்லாம் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இதுபோன்ற disaster நேரத்தில், நிகழ்வுகளில் தொற்றுநோய் (communicable disease) ஒன்றுகூட ஏற்படவில்லையென்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய துறையினுடைய பணியாளர்களும், அலுவலர்களும் எப்படி உழைத்திருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

இன்னும் வருங்காலத்தில் பல திட்டங்களை இதற்காக வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் சொன்னால், இன்னும் நேரமாகும்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள். Bio–mining, bio–methanation, incinerators, oxygen rotating technology என்று சொல்லி, ஒரு புது incinerator, 1,500 battery operated vehicles இருக்கின்றன. நாங்கள் தைவான் போயிருந்தபோது சொன்னார்கள்; குப்பைகளையெல்லாம் யாரும் வெளியில் போடமுடியாது. வண்டி வரும்; வண்டி வருவதற்கு முன்னால் மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரித்துக் கட்டி வீட்டிலேயே, மடியிலேயேதான் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். எங்கேயாவது தூக்கிப் போட்டால் உடனே fine. அங்கு பெரிய வண்டி siren அடித்துக்கொண்டு வரும். இங்கு சின்ன வண்டியில் bell அடித்துக்கொண்டு வருவார்கள். இங்கும், மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தனித்தனியாகத்தான் டப்பா வைத்திருக்கிறோம். குப்பைத் தொட்டி வைக்கின்ற concept–ஐ கொஞ்சம், கொஞ்சமாக எடுத்துவிட்டோம். வேலூர் சென்றிருந்தபோதுகூட கோபித்துக்கொண்டார்கள். எங்கேயுமே குப்பைத் தொட்டி இல்லை; எல்லாருமே கீழே போடுகிறார்கள்.

குப்பைத் தொட்டி வைப்பதைப் பொறுத்தவரையில், இப்போது ஒரு concept ஆக கொண்டுவந்துள்ளார்கள். அது என்னவென்றால், குப்பைகளைத் தரம் பிரிக்க வேண்டும். ஒவ்வொருவருடைய வீட்டுக் குப்பைகளை, அவர்களே தரம் பிரித்து, வருகின்ற வாகனத்திலே கொடுத்து, அந்தக் குப்பை சேகரிப்பிற்கு ஒத்துழைக்க வேண்டும். ஆனால் அதற்கு வேறு incinerators, நிறைய projects இருக்கின்றன. Door–to–door collection–ஐ concentrate செய்கிறார்கள். இந்த மாதிரி waste management–ல் நல்ல திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். வேடசந்தூர் பகுதியிலே town panchayats–ல் animal waste நிறைய இருக்கிறது. Animal waste incinerators கிடைத்தால் நன்றாக இருக்கும்.

பிற்பகல் 2–45

அதேபோல, அனைத்து town panchayats–யையும் எடுத்துக்கொண்டால், சாக்கடை நீர் எங்கு போய்ச் சேருகிறது என்று பார்த்தால், ஏதோ ஒரு நீர்நிலையில்தான் போய்ச் சேருகிறது. இந்த நிலையில், தான் ஆட்சி செய்கின்ற இந்த நாட்டிலே, நீர்நிலைகளுக்கு எந்தப் பாதிப்பும் இருக்கக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்கள் மூலமாக video conferencing போட்டு, அதிலே குறிப்பாக M.L.A., M.Ps.–யையும் உட்கார வைத்துவிட்டார். அப்படி எங்களை உட்கார வைத்து, “எந்தச் சாக்கடைத் தண்ணீரும் நீர்நிலைகளில் கலக்கக் கூடாது; எங்களுடைய அரசின் கொள்கை அதுவல்ல; அதையெல்லாம் நீங்கள் சரி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது Chief Secretary ஒரு idea சொன்னார்கள். நீர் நிலைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள, எந்த இடத்தில் கழிவு நீர் போய்ச் சேருகிறதோ, அங்கு Anna University அல்லது I.I.T. நிறுவனத்தை வைத்து ஓர் ஆராய்ச்சி செய்து, Mini STPs அமைத்தோமென்றால், அந்தக் கழிவுநீரை சுத்திகரிக்கும்போது, நீர்நிலைகளிலே அது போனால்கூட, பாதிப்பில்லாமல் நிலத்திலே ஊறி, நிலத்தடி நீரும் உயர்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் அன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் சிறப்பாக நன்றியைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அண்ணன் அவர்களும் இணைந்து, அம்மா ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் என்ற ஓர் அற்புதமான திட்டத்தைச் செயல்படுத்திக்

கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த திட்டங்களில் ஒன்றுகூட நிற்கவில்லை. ஆனால், அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பல மடங்கு அளவிற்கு இன்றைக்கு புதிய திட்டங்களை, அம்மா அவர்களுடைய வழியில் தந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒவ்வொரு வருடமும் 100 கோடி ரூபாய்; இப்போது இரண்டாவது வருடமாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 3,901 பணிகள், குறிப்பாக ஆதி திராவிடர் காலனியில் மட்டும் செய்கிறார்கள். அந்தக் காலனியில் சாக்கடை வசதி தேவையா? தெரு விளக்கு வசதி வேண்டுமா? சமுதாயக் கூடம் வேண்டுமா? மயானச் சாலை வேண்டுமா? அந்த நலிந்த பிரிவினர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்வதற்கான ஓர் அற்புதமான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாக, வீட்டினைப் பழுதுபார்க்க வேண்டுமென்பதற்காக 50,000 ரூபாய் கொடுக்கும் திட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, பழுதுபார்த்தல் பணிக்கென்று ஒரு வீட்டிற்கு 19,000 ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், 25 ஆண்டுகள் கழித்து, இதைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த காலனிக்கு எந்தச் சட்டமன்ற உறுப்பினர் சென்றாலும், “என் வீட்டை வந்து பாருங்கள்” என்பார்கள். அந்த வீடுகள் இடிந்துவிழும் நிலையில் இருக்கும். 1980, 1986, 1996 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளாக அவை இருக்கும். ஆனால், முதன்முறையாக அதுபோன்ற வீடுகளைச் சீரமைக்க பராமரிப்புத் தொகையைத் தர வேண்டுமென்று முடிவு எடுத்ததற்கே, நாங்கள் அவருக்குத் தலைவணங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 50,000 ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், தொடர்ந்து தந்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுய உதவிக் குழுக்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு; எந்த மாநிலத்திலும் தராத வகையில் Amma Scooty திட்டம். Amma Scooty–ஐ மானிய விலையில் கொடுத்து வருகிறார்கள். அம்மா உணவகம் என்கிற திட்டம் எல்லாம், உண்மையிலே ஓர் அருமையான திட்டம். இந்த budget அறிவிப்பில் பார்த்தோம். நிறைய மாநகராட்சிகளில் இந்த உணவகத்தை நடத்த இயலவில்லை. ஆனாலும், இந்தத் திட்டத்தை விடாதீர்கள் என்கிறார். ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வாங்கும் முதியவர் ஒருவர், அவர் மகள் வீட்டில்தான்

தங்கியிருப்பார். மகள் வீட்டில் சாப்பிட்டால் சிரமமாக இருக்கும் என்பதால், கடைக்குப்போய் ஒரு ரூபாய்க்கு இட்லி வாங்குவார், காலையில் பத்து ரூபாயில் முடிந்து விடும், மதியம் ஐந்து ரூபாயில் முடிந்துவிடும், இரவு பத்து ரூபாயில் முடிந்து விடும். இப்படி அவர் 30 ரூபாயில் அன்றைய நாள் சாப்பாட்டை முடித்து விடுவார். பத்து நாட்கள் அல்ல; 30 நாட்கள் சாப்பிட்டால்கூட 500 ரூபாய், 700 ரூபாய்தான் செலவாகும்; மீதமுள்ள தொகையில் பேத்திகளுக்கு உணவை வாங்கிக் கொடுத்துவிடுவார். ஆக, இந்த அம்மா உணவகம் திட்டம் நின்றுவிடக் கூடாது என்பதற்காகவும், மாநகராட்சிகளுக்கு burden வேண்டாம், தனியாக நிதியை இந்த budget–ல் ஒதுக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட சிறப்புத் திட்டமான அம்மா உணவகத் திட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தமைக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, எனது தொகுதியின் கோரிக்கைகளையும், சில ஆலோசனைகளையும் கூறி, இரண்டே நிமிடங்களில் எனது உரையை முடித்துவிடுகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேடசந்தூர் தொகுதியில், வடமதுரை, வேடசந்தூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளில் நீண்ட நாட்களாகப் பேருந்து நிலைய வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு இந்த நிதியாண்டில் பேருந்து நிலைய வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும். மிகவும் பின்தங்கிய பகுதியாக வேடசந்தூர் இருக்கின்ற காரணத்தால், என் தந்தையார் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில் சென்று கோரிக்கை வைத்ததன்பேரில் இந்தியாவில் இல்லாத வகையில், முதன்முறையாக ஒரு தாலுகாவை SEZ ஆக அறிவித்தார். தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியான எங்கள் பகுதியில் ஒரு தாலுகா, SEZ ஆக எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அறிவிக்கப்பட்டது. எப்போதும் ஒரு மாவட்டத்தை அறிவிப்போம்; ஒரு தொகுதியை அறிவிப்போம். ஆனால், அன்றைக்கு ஒரு தாலுகாவை SEZ ஆக அறிவித்ததன் காரணமாக, இன்றைக்கு 150 Spinning Mills அங்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைதான் இன்றளவும் அங்குள்ள மக்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. இப்போது அந்த Spinning Mills எல்லாம் நலிந்த நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எங்கள் தொகுதியில், 50,000–க்கும் அதிகமானோர், குறிப்பாகப் பெண்கள், உழைக்கும் திறன் கொண்ட பெண்கள், திறமை வாய்ந்த பெண்கள்,

இளைஞர்கள் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடும்வகையில் ஒரு Special Economic Zone–ஐ 125 ஏக்கரிலோ அல்லது 250 ஏக்கரிலோ நிச்சயமாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பாளையம் மற்றும் வேடசந்தூர் பகுதியில் Gasifier Crematorium தேவைப்படுகிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தூய்மைக் காவலர்களைப் பற்றிச் சொன்னார்கள். உள்ளபடியே அது உண்மைதான். 'Swachh Bharat'–ஐ நிறைய follow செய்து கொண்டிருக்கிறோம். தூய்மைக் காவலர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபாய் வழங்கப்படுவது என்பது உண்மையிலேயே குறைவான தொகையாகும். அவர்களுக்கு 125 ரூபாயோ அல்லது 150 ரூபாயோ தினமும் கொடுத்து, தூய்மைப் பணிகளை அவர்கள் சிறப்பாக மேற்கொள்ள உறுதுணையாக இருக்க வேண்டும். அதேபோன்று, OHT operators–ஐ பொறுத்தவரையில், 2005 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட அவர்களுக்காக கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது பேசி, உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, அவர்களுக்கான ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. இப்போது அதிகளவில் tanks இருக்கின்றன; Unauthorized ஆக நிறைய பேர் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களே முன்வந்து, நாளொன்றுக்கு 50 ரூபாய், 100 ரூபாய் என்று clerk இடம் வாங்கிக் கொண்டு, அந்த tanks–ஐ operate செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீங்கள் நிரந்தரமாக்காவிட்டாலும், outsourcing முறையில் temporary ஆக நியமித்து, 1,000 ரூபாயோ அல்லது 2,000 ரூபாயோ, அவர்களின் petrol செலவுக்கு ஆனால்கூடபோதும்; அதை வழங்கிட அரசு முன்வர வேண்டும். எனவே, OHT operaters–ஐ outsourcing முறையில் புதிதாக நியமித்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, Amma Park, Amma Gym; மிக நல்ல திட்டம். நிறைய ஊராட்சிகளுக்கு இந்த Amma Park, Amma Gym திட்டத்தை நீங்கள் விஸ்தரிப்பு செய்ய வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, பொறுமையாக எனது உரையைக் கேட்ட மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும்,

வாய்ப்பினைத் தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள். நேரம் என்னவென்று பாருங்கள். அதற்குத் தகுந்தமாதிரி பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவருக்கும்தான் சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், உள்ளாட்சியில் நல்லாட்சி கண்ட, சாதனைகளை சரித்திரமாகப் படைத்த எங்கள் அன்புத் தலைவருமான, (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றென்றும் எங்களுடைய இதயங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற, கடற்கரையில் துயில் கொண்டிருக்கின்ற எங்களது செம்மொழிக் காவலர், தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அன்பிற்குரிய அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அன்பிற்குரிய அண்ணன் திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020–2021 ஆம் ஆண்டிற்கான இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு நான் உரையாற்றுவதற்கு முன்பாக, என்னுடைய தொகுதி சார்ந்த சில பிரச்சினைகள் குறித்து தெரிவிப்பதோடு, சில வேண்டுகோள்களையும் இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், எங்களது அன்புத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், SIHS Colony இரயில்வே உயர்மட்ட

மேம்பாலப் பணிகளைத் தொடங்குவதற்கான ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. தற்போது 2020 ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது. 6 மாத காலத்திற்குப் பிறகு, அதாவது 2011 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அதற்கு முன்பாகவே அடிப்படைப் பணிகள், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டன. அப்படி அடிப்படைப் பணிகள் தொடங்கப்பட்டாலும்கூட, அந்த மேம்பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு முன்பாக, மேம்பாலத்திற்கு அருகிலுள்ள அணுகுசாலைகளைக் கையகப்படுத்தி, சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அந்தப் பணிகளில் மாவட்ட நிருவாகத்திற்கும், இட உரிமையாளர்களுக்குமிடையே சரியான உடன்பாடு ஏற்படாத நிலையிலேயே நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் அந்த மேம்பாலப் பணிகள் தொடங்கப்பட்டன. அவ்வாறு பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், இரண்டு, மூன்று வருடங்களில் நிறுத்தப்பட்டுவிட்டன. 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, 22–6–2016 அன்று நான் உரையாற்றினேன். அப்போதும் அந்த மேம்பாலப் பணிகள் குறித்து, அன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்குப்பிறகு, 2018–2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே நான் கலந்துகொண்டு உரையாற்றியபோதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தேன். அதாவது, ஒரு குழுவை அமைத்து, இட உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன்.

மேம்பாலத்தையொட்டி வசிக்கும் கிட்டத்தட்ட 50,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 9½ ஆண்டுகளாக மிகப் பெரிய அளவில் அங்கு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இரவு நேரத்தில் விபத்து ஏற்பட்டாலோ அல்லது உடல்நிலை சரியில்லாத நிலை ஏற்பட்டாலோ, ambulance கூட அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாத ஒரு நிலைதான்

உள்ளது. ஏனென்றால், வேறோர் இடத்தில், நீலிக்கோணம்பாளையம் இரயில்வே கடவுப் பாதையைக் கடந்துதான் செல்ல வேண்டியுள்ளது. அங்கேயும் gate இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையில், நீங்கள் ஒரு குழுவை அமைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, அரசின் சார்பில் விரைவாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் வேண்டுகோள் வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதைச் செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு திட்டத்தை அறிவிக்கின்றபோதும், அந்தத் திட்டத்திற்குண்டான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பிறகு அதை அறிவித்தால்தான் நன்றாக இருக்கும் என்று நான் பலமுறை சட்டமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மேம்பாலம் கட்டப்படும் என்ற அறிவிப்பை மட்டும் வெளியிட்டார்கள். ஆனால், அதற்குண்டான நிலங்களைக் கையகப்படுத்த மறந்துவிட்டார்கள். அதனால்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. பீளமேடு இரயில்வே நிலையம் அருகில் கடவு எண் 6–க்கு மாற்றாக, ரூ.30.5 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் மேல்தளம் அமைக்கும் பணி இரயில்வே துறைமூலம் நடைபெற்று வருகின்ற நிலையில், அணுகுசாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்படவுள்ளது. பாலம் அமைக்கப்படவுள்ள பகுதியில் உள்ள அணுகு சாலை அமைந்துள்ள அந்த நிலத்தினுடைய உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார். நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் நீதிமன்றத்திலே இன்றைக்குத் தீர்ப்பினைப் பெற்றிருக்கிறோம். விரைவாக அரசு நடவடிக்கை எடுத்து, அணுகு சாலை அமைத்து, நீங்கள் சொல்கின்ற அந்தக் குறை போக்கப்படும். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட குறைபாடுகளினால்தான் காலதாமதம் ஏற்பட்டதேயொழிய, எங்களுடைய ஆட்சிக் காலத்தினால் இந்தத் தாமதம் இல்லை. ஆகவே, நில உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால், அதுதொடர்பாக நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பிறகுதான் நாம் அந்தப் பணியை எடுக்க முடியும்.

அதனால்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அதுமட்டுமல்ல; நிலத்தினுடைய உரிமையாளர் அதிகமான விலை கேட்ட காரணத்தினாலும், நம்மால் கொடுக்க இயலவில்லை. அதுதான் இதற்கான காரணம். இதையெல்லாம் முதலிலேயே நிவர்த்தி செய்திருக்க வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், ஒரு பாலப் பணி அல்லது ஒரு சாலைப் பணியை மேற்கொள்ளும்போது, நிலம் எடுக்கின்ற பணிதான் முதற்கட்டப் பணி. அந்தப் பணியை நாம் செய்தபிறகு, மற்ற பணியை ஆரம்பித்தால் இந்தப் பிரச்சினை வராது. அந்த நடைமுறையைத்தான் நாங்கள் இப்பொழுது கடைபிடித்து வருகிறோம் என்பதை நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இது உங்களுடைய ஆட்சியில் ஏற்பட்ட குறைபாடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், நீலிக்கோணம்பாளையம் பகுதி, அதாவது சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலிக்கோணம்பாளையம் பகுதியில் L.C-5 என்ற ஒரு இரயில்வே மேம்பாலப் பணி துவக்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதில் 10 சதவிகிதப் பணிகள்தான் நடந்தன. அதற்குப் பிறகு அந்தப் பணிகள் அப்படியே நடக்காமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து இதுவரையிலும் தெளிவுபடுத்தப்படவில்லை. அதுபோல் L.C–6 என்ற இன்னொரு பாலம். அதாவது, Hope College அருகிலிருந்து தண்ணீர்பந்தல் செல்லக்கூடிய விளாங்குறிச்சி இரயில்வே உயர்மட்ட மேம்பாலம்; அதுபோல் L.C–9 இன்னொரு மேம்பாலம்; கணபதி–ஆவாரம்பாளையம் இரயில்வே உயர்மட்ட மேம்பாலம். அந்தப் பாலம் சிங்காநல்லூர் தொகுதிக்கும், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்கும் அருகில் இருக்கக்கூடிய மேம்பாலம். இந்த மூன்று மேம்பாலங்களுமே கோவையில் மிக முக்கியமான பகுதிகளில் இருக்கக்கூடிய இரயில்வே crossing–ல் அமைந்துள்ளவையாகும். இந்தப்பகுதியில் இருக்கக்கூடிய மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திடக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது எங்களுடைய ஆட்சிக்காலத்தில் நிலத்தைக் கையகப்படுத்தவில்லை என்று ஏற்கெனவே 2018–2019 ஆம் ஆண்டும் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "உங்களுடைய ஆட்சியில் சரியாகச் செய்யாததால் தற்போது காலதாமதம் ஆகின்றது" என்று இப்போதும் சொல்கிறார்கள். நாங்கள் கேட்பதெல்லாம் எங்களது ஆட்சி 2011 ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிந்துவிட்டது. தற்போது தொடர்ந்து கடந்த 9 ஆண்டுகாலமாக உங்களுடைய ஆட்சிதான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எங்களுடைய ஆட்சியில் குறைபாடு ஏற்பட்டிருந்தாலும்கூட, இந்த ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் நீங்கள் ஏன் அந்தப் பணியை முடிக்கவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். நிலம் உரிமையாளருடையது. நிலம் அவருடைய சொந்த நிலம். நாம் சென்றவுடனேயே எடுத்துவிட முடியாது. ஆகவே, நிலத்தினை முதலில் கையகப்படுத்தியபிறகு இந்தப் பாலப் பணியை ஆரம்பித்திருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. அதற்காகத்தான் நாங்கள் ஒரு திட்டத்தினை வகுத்திருக்கிறோம். சாலை அமைக்கின்ற பணியாக இருந்தாலும்சரி, பாலம் அமைக்கின்ற பணியாக இருந்தாலும் சரி, முதற்கட்டமாக நிலத்தினைக் கையகப்படுத்திய பிறகு அந்தப் பணிகளைத் தொடங்கியிருந்தால், இந்தப் பிரச்சினை நடந்திருக்காது. நீலிக்கோணம்பாளையம் SIHS காலனி கடவு எண் 5–க்கு மாற்றாக, ரூ.58.52 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி; அதுவும் நிலம் கையகப்படுத்தும் பணியில்தான் பிரச்சினை. எல்லாமே நிலத்தைக் கையகப்படுத்தும்போதுதான் பிரச்சினையே. ஆகவே, நிலத்தைக் கையகப்படுத்தும்போது, நிலத்தினுடைய உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விடுகிறார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றால், நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதனால்தான் காலதாமதமேயொழிய, அரசால் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆவாரம்பாளையத்தைப் பொறுத்தவரைக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. இங்கே கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பாலப் பணிகள் தொடங்கப்பட்டு வேலை நடந்துகொண்டிருக்கின்றது. நீலிக்கோணம்பாளையத்திலும் அதுபோல் இடம்தான் பிரச்சினை. ஆவாரம்பாளையத்தில் வேலைகள் smooth ஆகப் போய்க்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இதுவரை சரித்திரத்தில் இல்லாத அளவிற்கு, கோயம்புத்தூரில் 50 ஆண்டுகாலத்திலே இல்லாத வளர்ச்சி என்று சொல்லும் அளவிற்கு, பாலங்களாகக் கட்டிக்கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவர் இதனைச் சொல்லவில்லை. அவர் முதலில் அதற்கு ஒரு நன்றி சொல்லியிருக்கலாம். ஏனென்றால், இன்றைக்கு எங்குமே யாரும் signal–லில் நிற்க வேண்டியதில்லை. தற்போது நிறைய பாலப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

பிற்பகல் 3–00

தற்போதுகூட அவினாசி ரோட்டில் பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு பாலம் கட்டுவதற்கு பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார்கள். அதுவும் அவருடைய தொகுதிக்குள்தான் வருகின்றது. அதுமட்டுமல்ல; பொள்ளாச்சி ரோட்டில் மட்டும் பார்த்தீர்களென்று சொன்னால், கிட்டத்தட்ட 6 பாலங்கள். ஈச்சனாரி பாலப் பணி மட்டும் நடந்துகொண்டிருக்கின்றது. நஞ்சுண்டபுரம் பாலம், போத்தனூர் பாலம், பாலக்காடு main road–ல் ஆற்றுப் பாலம், மேட்டுப்பாளையம் சாலையில் எல்லா சிக்னலிலும் பாலம்; இன்றைக்கு உக்கடம் ஆற்றுப் பாலத்தில் வேலை நடக்கிறது. அதேபோன்று, திருச்சி ரோட்டில் 2½ கிலோ மீட்டருக்கு ஒரு பாலம் என இன்றைக்கு எங்கு பார்த்தாலும் பாலங்களாக அமைக்கப்பட்டுள்ளன. 2011–லிருந்து கோவை மாவட்டத்தில் மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்கு முன்பெல்லாம் சென்னையில்தான் பாலங்கள் அதிகமாக இருக்கும். ஆனால், இன்றைக்கு கோவை மாவட்டத்திற்கு அவ்வளவு பாலங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார். கோவை மாவட்டத்தில் 50 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்குக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளாக இந்த பாலப் பணிகள் நடைபெறவில்லை; செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், “உங்கள் ஆட்சியில் நிலம் கையகப்படுத்தவில்லை, அதனால்தான் இந்தக் காலதாமதம்” என்று சொல்கிறார். எந்தப் பாலப் பணிகளுக்கு அரசாணை பிறப்பித்து, அதற்குண்டான அடிப்படைப் பணிகள் துவக்கப்பட்டதற்குப் பிறகுதான், (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் கையகப்படுத்தக்கூடிய பணிகள் துவங்குமே தவிர, அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பாக நிலத்தைக் கையகப்படுத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது தவறு. இந்தப் பணி எதனால் நின்றது? (குறுக்கீடு) நீங்கள் சொல்லும் பாலப் பணி எதனால் நின்றது? சொல்லுங்கள் பார்க்கலாம். நிலத்தைக் கையகப்படுத்தாத காரணத்தினால்தானே நின்றது. நிலத்தைக் கையகப்படுத்தியிருந்தால், இந்த பாலப் பணி குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்று முடிந்திருக்கும். திரும்பத் திரும்ப தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். தாமதம் என்று நீங்களே சொல்கிறீர்கள்; நீதிமன்றத்திற்குச் சென்று, அங்கு வழக்கு முடியாத காரணத்தினால்தான் தாமதம். நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்த பிறகுதான் இந்த அணுகுசாலையை அமைக்கின்றோம். அதனால் மீண்டும், மீண்டும் நீங்கள் தவறான தகவலைச் சொல்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், சென்னையில்கூட, போரூர் பாலம் கட்டுவதற்கு அவசரஅவசரமாக உங்கள் ஆட்சியில் அடிக்கல் நாட்டி விட்டு, நிலத்தை எடுக்கவேயில்லை; tender விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள். 10 சதவிகிதப் பணிகள்தான் முடிந்திருந்தன. அங்கிருந்த நில உரிமையாளர்களெல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள். அதற்குள் 3 ஆண்டு காலம் ஆனது. இப்படி பல பாலப் பணிகள் நிலப் பிரச்சினையின் காரணமாகத்தான் தடைபடுகின்றன. அதற்குத்தான் சொல்கிறேன். எந்த ஆட்சியாக இருந்தாலும், முதற்கட்டப் பணியான நிலத்தைக் கையகப்படுத்தியபிறகு, இந்தப் பணியைத் துவக்கினால், இப்படிப்பட்ட பிரச்சினைக்கே இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SIHS colony பாலப் பணிகளை முடித்திட குழு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய மாநகர் மாவட்டத்திற்குள்தான் அந்த சிங்காநல்லூர் தொகுதி வருகிறது. கோயம்புத்தூர் வடக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்கள், அங்கு வழக்கு தொடுத்த கிட்டத்தட்ட 10–க்கும் மேற்பட்டவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அழைத்துச் சென்று, சந்தித்து, என்னிடமும் அழைத்து வந்து, இதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள் என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இதற்காக பலமுறை பேசியிருக்கிறார். இதற்கென குழு ஒன்றை அமைத்துத்தான் அதற்கான நடவடிக்கையை, கோயம்புத்தூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள், இந்த subject–ஐ விட்டுவிட்டு, வேறு subject பற்றிப் பேசுங்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் விமான நிலைய விரிவாக்கப் பணிகளும் அப்படித்தான். 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில், கோவை மாநகரத்தில் தொழில்வளம் பெருக வேண்டுமென்பதற்காகவும், விமானப் போக்குவரத்து வேண்டுமென்பதற்காகவும், அங்கிருக்கக்கூடிய தொழில் முனைவோர் பலரும் பல வேண்டுகோள்களை விடுத்தார்கள். அதற்குப் பிறகு, தி.மு.க. ஆட்சியில், அன்றைக்கு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் விமான நிலைய விரிவாக்கத்திற்குண்டான அரசாணையைப் பிறப்பித்தார்கள். ஏற்கெனவே, உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற்ற நேரத்தில்தான் கோவை விமான நிலையம் ஓரளவிற்குச் செம்மைப்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு விமான நிலைய விரிவாக்கப் பணி என்பது, கடந்த 10 ஆண்டு காலமாக அப்படியே இருக்கிறது. இதிலே மாநில அரசினுடைய கடமை என்ன? அதாவது, விமான நிலையத்தை ஒட்டியிருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் கையகப்படுத்தி, ஒப்படைத்தால்தான் விமான நிலைய விரிவாக்கப்

பணிகள் நடைபெறும். ஆனால் 10 வருடங்களாக, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நில உரிமையாளர்களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த நில உரிமையாளர்களும் வேறு இடத்திற்குக் குடிபோக முடியாமல் இருக்கிறார்கள். பல ஏழையெளிய மக்கள், அங்கு இருக்க முடியுமா, முடியாதா என்று தவித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இன்றைக்கு வளர்ந்த ஒரு மாநகரமான கோவையில், விமான நிலைய விரிவாக்கம் என்பது, கானல் நீராகத்தான் இந்த ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விமான நிலைய விரிவாக்கத்திற்கு நிலம் தேவை; தனியாரிடத்திலிருந்து நிலத்தைக் கையகப்படுத்த வேண்டும். இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பலமுறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இப்பொழுது இசைவு தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது பல கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவு ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இழப்பீட்டுத் தொகையும் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், மாற்று இடம் கொடுப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, இப்பொழுது அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலமெடுக்கும் பணி வேகமாக, விரைவாக நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான் முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்கள்—இப்பொழுது இருக்கின்ற தலைமைச் செயலாளர் அப்பொழுது நிதித் துறைச் செயலாளராக இருந்தார்—அவரே நேரடியாக அங்கே சென்று, சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவெடுத்து, இப்பொழுது அந்த நிலம் எடுக்கின்ற பணி படிப்படியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்றால், ஒரு திட்டத்தைத் தொடங்க வேண்டுமானால், முதலில் நிலத்தை எடுத்துவிட்டு, பிறகு திட்டத்தைத் தொடங்கினால் அதைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படாது என்கிறார். (குறுக்கீடு) அதற்காகத்தான் கேட்டுக்கொண்டேன். அப்படியென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்கீழ் வரும் இலாகாக்கள் விவாதத்திற்கு வரும்போது நான் இதுகுறித்து கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், விமான நிலைய விரிவாக்கப் பணிகளை இன்னும் ஏன் செய்யவில்லை என்று கேட்டார். அதற்குத்தான் நான் பதில் சொன்னேன். இப்பொழுதும் நாங்கள் சொல்கிறோம். சில நேரங்களில் உலக வங்கித் திட்டத்தின்கீழ் நாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு, 85 சதவீதம் நிலங்களை கையகப்படுத்தியபிறகு நாம் பணிகளைத் தொடங்கினால், அத்திட்டங்கள் நிறைவேறும். இப்பொழுதுகூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவினாசி சாலையில் 10.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படவிருக்கிறது. 85 சதவீதம் நில எடுப்புப் பணிகள் முடிந்துள்ளன. இன்னும் 15 சதவீத அளவிற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். இந்த நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகளைத் தொடங்கி மூன்றாண்டு காலத்தில், அந்த பாலப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே 15 சதவீத நிலத்தை கையகப்படுத்திவிடலாம். ஆனால், நூற்றுக்கு நூறு சதவீதம், நிலத்தையே கையகப்படுத்தாமல் அந்தப் பணிகளைத் தொடங்கினால்தான், இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றது.

Airport விரிவாக்கம் பற்றிச் சொன்னார். அது மிகவும் முக்கியமானது. பலமுறை என்னையும் அந்தப் பகுதியிலிருக்கின்ற தொழிலதிபர்களெல்லாம் சந்தித்துப் பேசினார்கள். தொழில் வளம் அதிகமாகிக்கொண்டிருக்கிறது; விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கான நிதியை இந்த அரசு ஒதுக்கீடு செய்து வைத்திருக்கிறது. படிப்படியாகத்தான் அங்கு நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய

சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், இப்போது நிலத்தின் மதிப்பு அதிகரித்துவிட்டது. கோயம்புத்தூர் நகரத்தில் தற்போதைய நிலத்தின் மதிப்பு உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒருவருமே நிலத்தைக் கொடுக்க முன்வரமாட்டார்கள். அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களை சமாதானப்படுத்தி, பிறகுதான் அந்த நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. அந்தக் காரணத்தினால்தான், இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இன்னும் பல சாலைகள் போடப்பட வேண்டியுள்ளன. பிரமாதமான சாலைகளெல்லாம் வருவதற்கான வாய்ப்புகள் இருந்தன. நிலம் கையகப்படுத்தும் பிரச்சினை காரணமாக அந்தப் பணிகளெல்லாம் தடைபட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டது. அப்பொழுது சென்னையை ஒட்டியிருக்கக்கூடிய 43 உள்ளாட்சி அமைப்புகள் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டன. இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றிக்கொண்டிருந்த குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் உள்ள பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். அதே நேரத்தில், 43 உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றிய ஊழியர்கள் சுமார் 642 பேர் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களை பணி நிரந்தரம் செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு அவைக்கு வரவில்லை; இருந்தாலும் இந்த அவையில் ஒரு வேண்டுகோளை வைக்கச் சொல்லி, அவர் நேற்றைக்கே என்னிடம் ஒரு கோரிக்கையைக் கொடுத்திருந்தார்கள். தூத்துக்குடி நகரத்திற்கு முதன்முதலில் குடிநீர் கொண்டு வந்த கோமான் Rao Bahadur Cruz Fernandez அவர்களுக்கு தூத்துக்குடியில் மணிமண்டபம் கட்டித் தர வேண்டுமென்று அவர் சார்பாக இந்த அரசுக்கு நான் வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன். மேலும், அவருடைய பிறந்த நாளை அரசு

விழாவாகக் கொண்டாட வேண்டுமென்றும் இந்த அரசை தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ளாட்சித் துறையில், அதுவும் நகர்ப்புறங்களில் மத்திய அரசின் நிதியுதவியோடு, மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற பங்களிப்புடன், சீர்மிகு நகரத் திட்டங்கள் மூலமாகப் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

2020–2021 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 36, 37 ஆம் பக்கங்களில் பல்வேறு திட்டங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது, சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் நீர் நிலைகளை மேம்படுத்துவதற்காக, கோவை மாநகரில் 8 குளங்கள் ரூ.320 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாநகராட்சியில் 2 குளங்கள் ரூ.10.25 கோடி மதிப்பீட்டிலும், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியின்கீழ் பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் அரியலூர் ஆகிய நகராட்சிகளில் 42 குளங்களும் மறுசீரமைப்பு செய்யப்படுவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, பல்வேறு பணிகளுக்கான பட்டியல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, மாநகராட்சிகளை எடுத்துக்கொண்டால், சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாநகராட்சிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தின் மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றைப் பற்றியெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சீர்மிகு நகரத் திட்டத்தில் என்னென்ன பணிகளைச் செய்கிறார்கள் என்றால், நடைபாதை, சைக்கிள் பாதை, பூங்கா வசதி, மாதிரி சாலைகள், பூங்காக்கள் மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

பிற்பகல் 3–10

இந்தச் சீர்மிகு நகரத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே, அதைச் செயல்படுத்துவதில் எப்படிப்பட்ட நிலை இன்றைக்கு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 2015 ஆம் ஆண்டு

இந்தத் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்படி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, தமிழகத்திலே 2016 ஆம் ஆண்டு முதல், இன்றுவரை உள்ளாட்சி அமைப்புகள் இல்லை. உள்ளாட்சி அமைப்புகள் இல்லாத இந்தக் காலக்கட்டத்தில், தமிழகம் முழுவதும் பல இடங்களில் இந்தத் திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக ஊடகங்களில் பார்க்கிறோம், செய்தித்தாள்களில் பார்க்கிறோம். நான் 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டதற்குப்பிறகு, எங்களது கோவை மாநகராட்சி ஆணையாளரைச் சந்தித்தேன். இப்போது வேறு ஒருவர் ஆணையாளராக உள்ளார். ஏற்கெனவே மதிப்பிற்குரிய திரு. விஜய் கார்த்திகேயன் அவர்கள் ஆணையாளராக இருந்தார். அவரையும், தற்போது இருக்கக்கூடிய ஆணையாளர் அவர்களையும் பொது மக்களுடைய கோரிக்கைகளுக்காக பலமுறை நான் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அப்படி அவர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில், "கோவை மாநகரத்தில் பல்வேறு பணிகளைச் செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றீர்கள். அதுகுறித்து விவாதிப்பதற்கு கலந்தாய்வுக் கூட்டம் நடத்துங்கள்" என்று எடுத்துச் சொன்னேன். ஏனென்றால் இந்த நேரத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளாக இருந்தாலும், ஊராட்சிகளாக இருந்தாலும், எந்தவொரு பணியை மேற்கொள்வதென்றாலும், உள்ளாட்சி மன்றங்களிலே விவாதித்து, முடிவு செய்துதான், அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதாவது நகரப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, நகராட்சிகளாக இருந்தாலும் சரி, மாநகர் மன்றங்களாக இருந்தாலும் சரி; சில ஆயிரம் ரூபாயில்செய்யக்கூடியபணிகளாகஇருந்தாலும்சரி, பலஇலட்சங்கள், பல கோடிக்கணக்கான ரூபாய், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்யக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி; அந்தந்த மாநகர் மன்றங்களிலே பேசி, இறுதி செய்துதான் அந்தத் திட்டங்களை நாம் செயல்படுத்துகின்றோம். நானே ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்தும்கூட, இந்தத் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகள் குறித்து விவரம் தெரியவில்லை. அவையிலேகூட இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின்போது, எங்களது கட்சி உறுப்பினர், மதுரை மத்தி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசுகிறபொழுது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது, "மதுரை மாநகராட்சிப் பகுதிகளில், சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் பல பணிகள் நடைபெறுவதாக ஊடகங்களில் நான் பார்க்கிறேன். ஆனால் என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன என்று சட்டமன்ற

உறுப்பினராகிய எனக்குக்கூடத் தெரியவில்லை. ஆகவே, அந்தப் பணிகள் சரியாக நடைபெறுவதில்லை" என்று அவர் பேசுகின்ற நேரத்திலேகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, நான் பலமுறை எங்களுடைய மாநகராட்சி ஆணையாளரைச் சந்தித்து, பல கோரிக்கைகளை வைத்தேன். "கோவை மாநகரத்தில் இருக்கக்கூடிய பல துறைகளிலே சிறந்து விளங்கக்கூடியவர்கள், அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பல துறைகளில் சிறந்து விளங்கக்கூடிய பொறியாளர்கள், வல்லுநர்கள்— மருத்துவராக இருக்கலாம் அல்லது பேராசிரியர்களாக இருக்கலாம், யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்—அப்படிப்பட்ட தலைசிறந்த வல்லுநர்களையெல்லாம் அழைத்து ஒரு கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்தி, மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெறுகின்ற அந்தப் பணிகள் குறித்து ஆலோசனைகளைப் பெற்றால், இன்னும் அந்தப் பணிகள் நன்றாக இருக்கும்" என்று அப்போது ஒரு கருத்தை நான் சொன்னேன். நான் சொல்லும்பொழுது, மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், "கண்டிப்பாக உங்களுக்குத் தகவல் சொல்கிறோம்; கூட்டம் நடத்தலாம்" என்பார். ஆனால், அதற்குப்பிறகு அதுபற்றி எதுவுமே தெரிவிப்பது கிடையாது. அதாவது, அரசினால் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள், சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்களுக்கே தெரியவில்லை.

அதுமட்டுமல்ல; இப்போது பார்த்தீர்களென்றால், கோயம்புத்தூரில் 320 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர்நிலைகளை மேம்படுத்துவது தொடர்பாக பல பணிகள் நடைபெறுகின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தமட்டில், நான் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சிங்காநல்லூர் தொகுதியில்தான் வசித்துக் கொண்டிருக்கிறேன். உக்கடம் குளத்தில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதேபோன்று, உக்கடம் புறவழிச் சாலையிலிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு வரக்கூடிய அந்த வழியில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்று ஏராளமான பணிகள் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் பார்த்த அளவில், மத்திய, மாநில அரசு திட்டங்களின்கீழ் கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழகம் முழுவதும் செய்யப்படுகின்ற அந்தப் பணிகள் சரிவர செய்யப்படுவதில்லை. அதுமட்டுமல்ல, ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையிலேயே அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே நான் பதிவு

செய்ய விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல; அந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாக குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். பொதுவாக, Smart City திட்டத்தின்கீழ் உள்ள எல்லாப் பணிகளையும் சொல்லி, அவை சரிவர நடைபெறவில்லை என்று அவர் எந்த ஆதாரத்தை வைத்து சொல்கிறார் என்று தெரியவில்லை. Smart Cities Mission–ஐப் பொறுத்தளவில், 2014–2015–ல் மத்திய அரசு இத்திட்டத்தைக் கொண்டு வந்தது. அத்திட்டத்தின்கீழ் 100 நகரங்களைத் தேர்வு செய்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 12 மாநகராட்சிகளுக்கும் இத்திட்டம் வேண்டுமென்று கேட்டுப் போராடி, இறுதியில் 11 மாநகராட்சிகளுக்கு வாங்கினார்கள். திண்டுக்கல் மட்டும் அதில் இடம் பெறவில்லை. இந்தத் திட்டத்தில், அவர்கள் ABD ஏரியாவில்தான் பணிகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். Area Based Development (ABD) ஏரியாவில்தான் பணிகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இதனால் அந்தப் பணிகள் இங்கே மட்டுமல்ல; மற்ற மாநிலங்களிலும் take over ஆகவில்லை. தாமதமானதற்கு அது ஒரு காரணம். இதற்கு முன்னால் நான் மத்திய அமைச்சரை, மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி சந்தித்துக் கேட்டுக் கொண்டதன்பேரில், Smart City, AMRUT ஆகிய இரண்டு திட்டங்களுமே அப்போது வந்தன. AMRUT திட்டத்தில் பார்த்தீர்களென்றால், பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் வழங்கக்கூடிய திட்டம் போன்ற சிலவற்றை நாங்கள் சொல்லி, எடுத்து செய்திருக்கிறோம். Smart City திட்டத்தில் பார்த்தீர்களென்றால், Area Based Development என்ற வகையில் பாதாள சாக்கடைத் திட்டத்தை கொஞ்சம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதில் அவர்கள் சில வழிமுறைகளை வைத்து, இதைத்தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்.

Smart City திட்டத்தில் இன்றைக்கு குஜராத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் சபர்மதி நதியினை அழகுபடுத்தியிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு

மாநிலங்களில் இதுபோன்று சில பணிகளை எடுத்துச் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்தத் திட்டத்தின்கீழ் குளக்கரை முழுவதும் நடைபாதை அமைத்தல், வாகனப் பயன்பாடு இல்லாத மிதிவண்டி போக்குவரத்துப் பாதை அமைத்தல், பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்காக்கள் அமைத்தல், யோகா மையம், உடற்பயிற்சிக் கூடம், துரித உணவகங்கள், நவீன கழிப்பிட வசதிகள், சிறுவர் விளையாட்டு மைதானம், ஓய்வு இருக்கை ஆகிய வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்கிறோம். மேலும், இதில் முக்கியமான விஷயம், குளங்களுக்கு வரக்கூடிய கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து, குளத்தில் விடச் சொல்கிறார்கள். இது முக்கியமானது; எல்லாவற்றிற்கும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். இதனை எல்லாக் குளங்களிலும் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, அலங்கார விளக்குகள், மிதவை நடைபாதை, இசை நீரூற்று அமைத்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிக் கூடங்கள், திறந்தவெளி அரங்கங்கள் அமைத்தல் போன்ற திட்டங்களைத்தான் Smart City திட்டத்தில் கொண்டுவந்து செய்யச் சொல்கிறார்கள்.

அதேபோல, கோயம்புத்தூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், 100 வார்டுகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட 20 வார்டுகள்தான் வருகின்றன. அந்தத் திட்டம் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குள்ளேயே maximum முடிகிறது. சில குளங்கள் மட்டும்தான் வெளிப் பகுதியில் வருகின்றன. அதேபோல, சென்னையை எடுத்துக்கொண்டால் 200 வார்டுகள் இருக்கின்றன. ஆனால், தி. நகரில்தான் அதிகமாக இந்த திட்டப் பணிகள் வருகின்றன. Area Based Development என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கம் செய்யச் சொல்கிறது. இதனை relax செய்து, பல்வேறு இடங்களில் செய்வதற்கு நாங்கள் போய்க்கேட்டோம். இதைப் பொறுத்தளவுக்கு, மத்திய அரசாங்கத்தினுடைய வழிகாட்டுதலின்படிதான் நாம் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. இருந்தாலும், நாம் பல்வேறு நேரங்களில் இதை வலியுறுத்தியிருக்கிறோம். மதுரையில் Multi Level Car Parking பணியைச் செய்திருக்கிறோம். அது மிகவும் அவசியமானது. எந்த ஏரியாவில் செய்தாலும் இன்றைக்கு விதிமுறைக்குட்பட்டு, Tender Act–படிதான் நடக்கிறது. அதேபோல, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று நேரில் பார்வையிட வேண்டுமென்று Commissioner–ஐப் பார்த்துக் கேட்டால், அதற்கான அனுமதி கொடுப்பார்கள். அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள் பேசும்போது, “பணிகள் குறித்து எனக்குத்

தெரிவதில்லை" என்று சொன்னார். நீங்கள் எவ்லாவற்றிற்கும் நேரில் வரலாம். எல்லா அரசு விழாக்களுக்கும் முறைப்படி, எல்லாப் பத்திரிகைகளிலும் உங்கள் பெயர் போடப்படுகிறது. நீங்கள் வருவதை வேண்டாமென்று நாங்கள் எங்கேயும் சொன்னதில்லை. நீங்கள் வரலாம். நீங்கள் வருவதில்லை. அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?

அதேபோல, நீங்கள் பேசும்போது சொன்னீர்கள்; நான் விமர்சனம் செய்ய வேண்டாமென்றுதான் இருந்தேன். நீங்கள் செம்மொழி மாநாட்டைப் பற்றிப் பேசினீர்கள். Airport விரிவாக்கம் தொடர்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அற்புதமாக விளக்கம் கொடுத்துவிட்டார். Airport–ஐப் பொறுத்தளவுக்கு, 20 ஆண்டுகாலப் பிரச்சினை. 20 ஆண்டுகாலமாக இருந்துவரும் பிரச்சினை அது. உங்கள் ஆட்சிக் காலத்திலும் அந்தப் பிரச்சினை இருந்தது. இதற்காக அங்கே அந்தக் குழு போராடிக் கொண்டே இருந்தது; அங்கிருக்கும் மக்களெல்லாம் போராடிக் கொண்டே இருந்தார்கள். எவ்வளவு பெரிய போராட்டங்கள் நடந்திருக்கின்றன? ஆனால், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்த பின்னர், Airport விவகாரத்திற்கென்று தனி meeting போட்டு Chief Secretary–ஐ கோயம்புத்தூருக்கு அனுப்பினார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல; 627 ஏக்கர் பரப்பளவிற்கு நிலங்களை நாம் எடுக்கிறோம். ஆனால், டெல்லியில் உள்ளவர்கள் ஏர்போர்ட் விரிவாக்கத்திற்கான நிலத்தைக் குறைத்து எடுக்க வேண்டும் என்றார்கள். இதுபோன்று விரிவாக்கத்திற்கு பல்வேறு பிரச்சினைகள் வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி கிட்டத்தட்ட நானே 5 முறைக்குமேல் டெல்லிக்குப்போய் மத்திய அமைச்சரையும், அதிகாரிகளையும் பார்த்துவிட்டு வந்தேன். இப்படி பல்வேறு திட்டங்களின் அடிப்படையில், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, அங்கிருப்பவர்களுக்கு மாற்று இடத்திலே ஏற்பாடு செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, கால்நடை பராமரிப்புத் துறை இடத்தைக் கொடுக்கிறேன் என்றும் அங்கு வீடு கட்டித் தருகிறேன் என்றும் சொல்லியிருக்கிறார். அதேபோல, உங்களுடைய ஆட்சியில் அங்கிருக்கிற மக்களுக்கு, அந்த நிலத்தினுடைய மதிப்பைக்கூட நீங்கள் உயர்த்திக் கொடுக்கவில்லை. அதுதான் பிரச்சினையாக இருந்தது. அதற்காகத்தான் அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். இதற்கு தனி Committee போட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் நிலத்தினுடைய

மதிப்பை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, அவர்கள் எல்லோரையும் அழைத்துப்பேசி, மாற்று ஏற்பாடுகளை அவர்களுக்குச் செய்து, இப்போது சுமுகமாக நிலத்தை எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு AMRUT–திட்டமாக இருந்தாலும்சரி, Smart City திட்டமாக இருந்தாலும்சரி, மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின் பேரில்தான் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட நமக்கு அவசியமான பல திட்டங்களையும் எடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Smart City திட்டத்தைப்பற்றிச் சொன்னார். அதிலே, ABD area என்று ஒன்றைச் சொன்னார். அங்கேதான் எல்லா வேலைகளையும் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். எங்களுடைய வேலூரைப் பொறுத்தவரையில்— நீங்கள் வேலூருக்குப் போகும்போது பார்த்தீர்களென்றால்—முதலில் சத்துவாச்சாரி என்ற well developed area இருக்கும். அது ABD area. அந்தப் பகுதி எல்லாமே ஏற்கெனவே நன்றாக வளர்ந்திருக்கிற பகுதியாகும். இன்னொன்று, அங்கேயே ரோடு போட முடியாது. அங்கேயே park அமைக்க முடியாது; 48 பூங்காக்களை அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கே பூங்காக்களை எங்கே அமைப்பது? Commissioner–யிடம் நாம் எதைக் கேட்டாலும் அது ABD area–ஆக இருக்க வேண்டுமென்று சொல்கிறார். இது CDBD area ஆக இருக்கிறது; ABD area இல்லை என்று சொல்வார். அதனால் இதுகுறித்து நீங்கள் மத்திய சர்க்காரோடு ஏதாவது கலந்தாலோசிக்க வேண்டும். வளர்ந்த இடத்தையே எடுத்து என்ன செய்வது? நல்லதோ, கெட்டதோ எடுத்துவிட்டார்கள். அங்கேதான் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். பிறகு அதிலென்ன பிரயோசனம் இருக்கிறது?

பிற்பகல் 3–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசாங்கத்திடம் பல்வேறு நேரங்களில் இதுகுறித்து வலியுறுத்தப்பட்டது. இதில், இந்த ABD area என்பது கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட meeting–ல் சொல்லியிருக்கிறார்கள். இதில் 50 சதவிகிதம் மத்திய அரசு நிதி; 50 சதவிகிதம் நம்முடைய மாநில அரசு நிதி. ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு அனைத்துப் பகுதிகளிலும் பணிகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பல்வேறு நேரங்களில் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதுகுறித்து, மத்திய அரசாங்கத்திடம் நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆனால், இந்தத் திட்டத்தில் குறிப்பிட்ட அந்த areas–ல்தான் பூங்காவினை மேம்படுத்த வேண்டியிருக்கிறது. அதனால்தான், இன்றைக்கு அம்ரூத் திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடைத் திட்டமும், அதைப்போல, குடிநீர்த் திட்டமும் எடுத்தோம். சென்னையில் எவ்வளவு பெரிய இடங்கள் இருக்கின்றன. ஆனால், தி. நகர் பகுதியைச் சுற்றித்தான் இந்த திட்டத்தில் பணிகளை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. சென்னையில், கிட்டத்தட்ட 200 வார்டுகள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய area–வில் குறிப்பிட்ட area–வில் மட்டும்தான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுகுறித்து, மத்திய அரசாங்கத்திடம் ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் Smart City திட்டம் அறிவிக்கப்பட்டும்கூட, பிற மாநிலங்களில் எங்குமே இத்திட்டம் take over ஆகவில்லை. இந்த திட்டம் அப்படியே slow ஆனது. நாம்கூட பின்னால்தான் இருந்தோம். இப்போது, அப்படித்தான் செய்ய வேண்டுமென்று சொன்னதால், பணிகளை வேகமாகத் தொடங்கி செய்தோம். அதனால்தான் இப்போது நாம் 100–ல் 9–வது இடத்தில் இருக்கிறோம். இப்போதுதான், take over ஆகியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். பல பணிகள் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், பல இடங்களில் நடைபெறும் அந்தப் பணிகளை நானே நேரில் சென்று பார்த்திருக்கிறேன். அந்தப் பணிகள்

நடைபெறும் பல இடங்களில், கட்டுமானப் பொருட்கள் சரியான முறையில் இருப்பதில்லை; தகுதியான கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்துவதில்லை. அதுமட்டுமல்லாமல், பல தெருக்களில், உதாரணத்திற்கு திவான் பகதூர் சாலையில் பார்த்தீர்களென்றால், ஓராண்டு காலமாக அந்தச் சாலை முழுவதையும் குழி தோண்டிப் போட்டிருக்கிறார்கள். இதுபோன்று பல பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகளை விவாதிப்பதற்கு அல்லது பணிகள் குறித்து தெரிந்துகொள்வதற்கு நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து, பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து, அந்த நகரத்தில் இருக்கக்கூடிய சிறந்த பொறியாளர்களை அழைத்து, கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, இந்தப் பணிகளைச் செம்மைப்படுத்திட வேண்டும். அதனை செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்றுதான் நான் கேட்டேன். அதற்கு தகுந்த பதில் இல்லை. அதைவிடுத்து நீங்களே வந்து கலந்துகொள்ளுங்கள் என்று சொன்னால், எப்படி நாங்களே வந்து தானாக கூட்டங்களில் கலந்துகொள்ள முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் Smart City திட்டத்தைப்பற்றி மட்டும் சொல்லவில்லை. பொதுவாகச் சொன்னேன். ஆனால், நீங்கள் car–ல் போகும்போது, அங்கு கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளைப் பார்த்துவிட்டு, அது தகுதியில்லை என்று எப்படி முடிவு செய்கிறீர்கள்? எந்த அடிப்படையில் முடிவு செய்கிறீர்கள்? அதை நீங்கள் check செய்கிறீர்களா? அதாவது, tender விட்டு இறுதி செய்து, தரமான பொருட்களைத்தான் நம்முடைய அதிகாரிகள், மாநகராட்சி Commissioner, பொறியாளர்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பார்வையிலே பார்த்துவிட்டு, அவை தகுதியில்லை என்று எந்த அடிப்படையில், எந்த ஆதாரத்துடன் சொல்கிறீர்கள்? இன்றைக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் தகுதியான, சிறப்பான முறையில்தான் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தளவிற்கு, இன்னும் ஒருபடி சொல்லப்போனால், எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், குறிப்பாக, மாண்புமிகு

அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், இன்றைக்கு 50 ஆண்டுக் காலத்தில் இல்லாத வளர்ச்சியைக் கொடுத்திருக்கிறோம். இந்த Smart City திட்டத்தின்கீழ் இவ்வளவு திட்டப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அவற்றைச் செய்ய வேண்டுமா, வேண்டாமா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? சென்னையில்மட்டும் மெரினா பீச் இருக்கிறது. இன்றைக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கு இதுபோன்று இவ்வளவு செலவு செய்வதாகச் சொன்னீர்கள். நான் விமர்சனத்திற்கு போக வேண்டாம் என்று நினைத்தேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் JnNURM திட்டத்தின்கீழ் 256 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 குளங்களைப் புனரமைப்பு செய்ய, அதாவது குளங்களுக்கு மட்டும், ஜனவரி, 2008–ல், விரிவான திட்ட அறிக்கையை நீங்கள் மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். அப்போது நீங்கள் துணை மேயராக இருந்தீர்கள். அதாவது, ஆதாரமில்லாமல் எதையும் பேசக் கூடாது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், இன்றைக்கு பார்த்தீர்களென்றால், 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வந்ததற்குப் பிறகு, எல்லா சாலைகளும், திருச்சி ரோடு, அவிநாசி ரோடு, பொள்ளாச்சி ரோடு, தொண்டாமுத்தூர் ரோடு, மேட்டுப்பாளையம் ரோடு, சத்தி ரோடு, பாலக்காடு ரோடு ஆகிய எல்லா சாலைகளும் இன்றைக்கு அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன; விபத்துகளைக் குறைத்திருக்கிறோம். பாலங்களை எடுத்துக்கொண்டால், எல்லாப் பாலங்களையும் கட்டியிருக்கிறோம். இன்றைக்கு Airport விரிவாக்கப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தைப் பொறுத்தவரையில், 70 ஆண்டுக்கால பிரச்சினையாகும். அதை, எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, கூட்டுக் குடிநீர்த் திட்டம். எல்லாக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் நாங்கள்தான் கொண்டுவந்தோம். மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் இனிமேல் 50 ஆண்டுக் காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினையே இருக்காது. இதைப்போல, பல்வேறு திட்டங்கள். அதேபோல, இன்றைக்குக் கிட்டத்தட்ட ரூ.90 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனையை அற்புதமாக மேம்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் 250 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும்

ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்றைக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பாராட்டுகின்றனர். நீங்கள் அதைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. குறைசொல்லாமல் பேச வேண்டும். அதேபோல, ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லக் கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், உரையை முடியுங்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2018 ஆம் ஆண்டு சொத்து வரி உயர்வு குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதம், வாடகைக் கட்டடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகையில்லாமல், அதேபோன்று, வீடுகளல்லாத வணிகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களுக்கு 100 சதவிகித சொத்து வரி விதித்து, ஓர் அரசாணையை வெளியிட்டீர்கள். அந்த அரசாணையை வெளியிட்டவுடனேயே எங்களது கழகத் தலைவர், அன்புத் தலைவர், தளபதி அவர்கள் மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தார்கள்.

பிற்பகல் 3–25

அதுமட்டுமல்ல, பல கட்டங்களில் போராட்டங்களை நாங்கள் நடத்தினோம். எங்களுடைய தலைவரின் வழிகாட்டுதலில் மக்களுக்காக பல போராட்டங்களை நடத்தினோம். ஆனால், சொத்து வரி உயர்வை நீங்கள் குறைக்கவில்லை. உள்ளாட்சி மன்றங்கள் இருந்திருந்தால், உள்ளாட்சி மன்றங்களிலே விவாதம் செய்து, சொத்து வரியைக் குறைக்க வேண்டுமென்று உள்ளாட்சிப் பிரதிநிதிகள் எடுத்துவைக்கும் வேண்டுகோளை ஏற்று, எந்த அரசாங்கமாக இருந்தாலும் சொத்து வரியைக் குறைப்பார்கள். ஆனால், அதற்கு மாறாக, 100 சதவிகித சொத்து வரி உயர்வை, பன்மடங்கு உயர்வை நீங்கள் செய்தீர்கள். அதற்குப் பின்னர் தேர்தல் வருவதற்கு முன்னர் 2, 3 மாதத்திற்கு முன்பு, அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், “சொத்து வரி உயர்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது” என்ற ஓர்

அறிவிப்பைச் செய்தார்கள். அதுமட்டுமல்ல; ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவில் சீராய்வு செய்து, சீராய்வு செய்ததற்குப் பிறகு, சொத்து வரி உயர்வு குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று சொன்னார்கள். நாங்கள் சொல்வதெல்லாம், உள்ளாட்சித் தேர்தலை மனதில் வைத்துதான் தற்காலிகமாக இந்த சொத்து வரி உயர்வை நீங்கள் நிறுத்தி வைத்துள்ளீர்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொத்து வரியை இப்போது குறைத்ததை சரி என்கிறீர்களா? சரியில்லை என்கிறீர்களா? இன்றைக்கு சொத்து வரி உயர்வை நிறுத்தி வைத்திருக்கிறோம். இதற்கு முன்னர் சொத்து வரியை உயர்த்தியது யார்? 2008 ஆம் ஆண்டு நீங்கள்தான் முதலில் சொத்து வரியை உயர்த்தினீர்கள். அம்மாவின் ஆட்சியில் சொத்து வரியை உயர்த்தவில்லை. இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதால் மட்டும் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொத்து வரி உயர்வை நிறுத்திவைக்கவில்லை. பல்வேறு தரப்பு மக்களுடைய கோரிக்கைகள் எல்லாம் இருந்தன. அதனால் அதனைச் சீராய்வு செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் உண்மை. தேர்தலை மனதில் வைத்து, சொத்து வரி உயர்வு நிறுத்திவைக்கப்பட்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள். தேர்தலை மனதில் வைத்து அம்மாவின் அரசு எப்பொழுதுமே இயங்காது. மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால், உடனே நேரடியாகச் சந்தித்து, அந்தப் பிரச்சினையை தீர்க்கக்கூடிய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; சொத்து வரி உயர்வுக்கு என்ன காரணம் என்பது உங்களுக்கும் தெரியும். சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போடப்பட்டு, அந்த வழக்கில் சொத்து வரியை உயர்த்த வேண்டுமென்று நீதியரசர் சொல்லியிருந்தார்கள். அதற்குப் பின்னால் சொத்து வரி உயர்த்தப்பட்டது. சொத்து வரியை நிறுத்தி வைத்ததற்குப் பிறகு, "சொத்து வரி உயர்வை ஏன் நிறுத்தி வைத்தீர்கள்? மீண்டும் சொத்து வரியை உயர்த்த வேண்டும்"

என்று நீதிமன்றம் தெரிவித்தது. அதற்கு குழுவை அமைக்கச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரை, மக்களிடம் திரும்பக் கருத்து கேட்கப்படும். இதற்காகக் குழு போட்டிருக்கிறார்கள். பொது மக்களிடம் கருத்து கேட்கப்பட்டு, அதன் பிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மாவின் அரசு, உள்ளாட்சித் துறை முடிவு செய்யும். நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படிதான் அன்றைக்கு சொத்து வரி உயர்வு செய்யப்பட்டது. உங்கள் ஆட்சியில் 2008 ஆம் ஆண்டு சொத்து வரி உயர்வு செய்திருக்கிறீர்கள். சென்னையிலும் நீங்கள்தான் சொத்து வரி உயர்வு செய்தீர்கள். தமிழ்நாடு முழுவதும் நீங்கள்தான் சொத்து வரி உயர்வு செய்தீர்கள். சொத்து வரி உயர்வைப் பொறுத்தவரையில், நாங்கள் இன்னும் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், உரையை முடியுங்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியத்தில் ஒன்றியத் தேர்தல் நடத்துவதற்காக மூன்று முறை இதுவரை தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தண்டராம்பட்டு ஒன்றியத்தில் 28 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 17 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அ.தி.மு.க.–வில் 11 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதுவரை மூன்று முறை தேர்தல் அறிவித்து, தேர்தல் நடத்தவில்லை. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சட்டம்–ஒழுங்கு சரியில்லை என்ற ஒரு காரணத்தை அடிக்கடி சொல்கிறார். ஆகவே, நான் கேட்பதெல்லாம் தண்டராம்பட்டு ஒன்றியத்தில் ஓர் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கே சட்டம்–ஒழுங்கு சரியில்லையென்றால், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சரியில்லாத நிலை இருக்கின்றதா என்பதைக் கேட்டறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில்தான் சட்டம்–ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக பரிசும் வாங்கியிருக்கிறோம். அதற்கான புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. ஒரு பகுதியிலே, ஓர் ஒன்றியத்திலே, ஓர் ஊராட்சியிலே இருக்கிற பிரச்சினை இது. இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு கட்சிகளுக்கிடையேயான பிரச்சினை. அங்கு Quorum இல்லையென்பதால், தேர்தல் ஆணையம், விதிமுறைகளின்படி தேர்தலை நிறுத்திவைத்துள்ளது. (குறுக்கீடு) அவ்வளவுதான். தமிழகத்திலே அற்புதமான ஆட்சி நடத்தக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசை அற்புதமாக நடத்தி, புரட்சித் தலைவி அம்மா இருக்கும்போது எப்படி சட்டம்–ஒழுங்கு இருந்ததோ, அதன் அடிப்படையிலே அற்புதமாக ஆட்சி நடத்தி இன்றைக்கு இந்தியாவிலேயே (குறுக்கீடுகள்) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அவருக்கும் தெரியும். எங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆர்.எஸ். புரம் போலீஸ் நிலையம்தான் நம்பர் 1 போலீஸ் நிலையமாக இந்திய அளவில் வந்திருக்கிறது. அதேபோல, இந்தியாவிலேயே மகளிருக்குப் பாதுகாப்பான சூழ்நிலை சென்னை மாநகராட்சிப் பகுதியில்தான் இருக்கிறது என்கிறார்கள். இப்படிப் பல்வேறு பரிசுகளைத் தொடர்ந்து காவல் துறை வாங்கியிருக்கிறது. இந்தியாவிலே நம்பர் 1 ஆக வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 3–30

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலத்திலுள்ள 23–வது வட்டத்தில் சுகாதார ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம், (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேச ஆரம்பித்து 50 நிமிடங்கள் ஆகிவிட்டன, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கத்தைக் கேட்பதற்காகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். கோவை மாநகராட்சியில் 23–வது வட்டத்தில் மாநகராட்சியினுடைய சுகாதார ஆய்வாளர் அலுவலகம் சுமார் 1.45 (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். பதிலுரை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேரமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை. (குறுக்கீடு) இல்லை, வேண்டாம், வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)இல்லை,இல்லை,அவருக்குகொடுத்தவாய்ப்பைவேறு ஏதோ ஒன்றைப் பேசப் பயன்படுத்தினால், நான் என்ன செய்வது? அவருக்கு 50 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடைசியாக 23–வது வார்டுக்குட்பட்டது பற்றிப் பேசினார். அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு மட்டும் நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பதிலுரை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அந்த 23–வது வார்டுக்குட்பட்ட அந்த (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: கொரோனா நோய்த் தடுப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக அரசுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு 5 ஆம் வகுப்பு வரை தமிழக அரசு விடுமுறை அறிவித்துள்ளது. தமிழக அரசின் இந்த அறிவிப்பு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஊட்டச்சத்து மையங்கள், ICDS–க்குப் பொருந்துமா? ஏனெனில், அந்த மையங்களில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் முன்பருவக் கல்வி, ஊட்டச் சத்து உணவினைப் பெறுகின்றனர். கேரளாவில் அரசு விடுமுறை அளித்திருக்கிறது. எனவே, எளிதில் நோய்த் தொற்று ஏற்படக்கூடிய இந்தச் சூழ்நிலையில், சிறு குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஊட்டச்சத்து மையங்களுக்கும் தமிழக அரசு முழு விடுமுறை அளிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு பற்றி ஏற்கெனவே ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பெற்றது. அந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முடிவுகளின் அடிப்படையில், நாங்கள் விடுமுறை அறிவித்தோம். இன்று மாலை சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி முடிந்தவுடனே, எந்தெந்த வகையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மீண்டும் உயர் அதிகாரிகளோடு, மூத்த அமைச்சர்களோடு கலந்தாலோசிக்கப்படவுள்ளது. இந்தக் கொரோனா வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் அப்போது முடிவு செய்து, நல்ல முடிவு, தாங்கள் எதிர்பார்த்த முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை
—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடைசியாக அம்மா ஐ.ஏ.எஸ். அகாடமி பற்றிக் கேட்டார்கள். Sanitary Inspectors Quarters–ல் (குறுக்கீடு) இல்லை, அது முக்கியமானது. (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு) சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் கதிர்களின் சுடரொளியை தன் அறிவினில் கொண்டவர்; ஆயிரம் நிலவுகளின் குளிர் ஒளியைத் தன் பார்வையில் வைத்தவர்; ஆயிரம் அருவிகளின் நீரோட்டத்தை தன் உரைகளில் பொழிந்தவர்; ஆயிரம் மலர்களின் வண்ணங்களாய், அற்புதத் திட்டங்களைத் தந்தவர்; புதுமைத் தலைவர், புண்ணியத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழித்தோன்றல், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; வெள்ளி நிலவை முகமெனக் கொண்டு, மக்கள் வேதனை தீர்ப்பதை வரமெனத் தந்து, சொல்லி அடிப்பதில் கில்லியென நின்று, பூவுலக சொர்க்கமென தமிழகத்தை மாற்றிட அயராது உழைத்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள்மீது அன்பை மழையாகப் பொழிந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அன்று மண்ணின்று ஆட்சி செய்து புகழ் படைத்து, இன்று விண்ணின்று நம்மை வழி நடத்தும் தரும தேவதை, தாயுருவத் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதற்கண் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாற்று நட்டு, களை பறித்து, நீர் பாய்ச்சி, நெடுவயல் நிறையக் காணும் விவசாயத் தொழிலாளி, நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) கதிர் அறுத்து, களம் சேர்த்து, போரடித்து, நெல்மணிகளை குன்றெனக் குவிக்கும் விவசாயி, நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டரோடு தொண்டராய் தோள் கொடுத்து, தொண்டர்களின் துயர் நீங்க துணை புரியும் கழகத்தின் காவலர், நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களோடு மக்களாய் மனம் இணைந்து, மக்கள் நலத் திட்டங்களைத் தினம் படைத்து, மக்கள் நலம் காக்கப் பாடுபடும் உழைப்பாளி, நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) தாய்க்கொரு மகனாக, தங்கைக்கொரு அண்ணனாக, தமக்கைக்கு ஒரு தம்பியாக எண்ணி, தமிழகத்துப் பெண்கள் பாசம் பொழிந்திடும் தாய்க்குலத்தின் காவலர் நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நதி நீரின் மேலாண்மைக்கு வழிவகுத்து, காவேரிப் படுகையில் வேளாண் தொழிலை மீட்டெடுத்து, காவேரிக்கு ஊறு செய்யும் திட்டங்களை உருத்தெரியாமல் தகர்த்தெறிந்த காவேரிக் காப்பாளன் நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பிலா மூன்றாண்டுகளில், இதுவரை 16,725 கோப்புகளில் ஒப்பமிட்டு, ஒப்பற்ற சாதனை புரிந்தவர் நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி பூமியின் தாகம் தீர, குளம், குட்டை, கண்மாய், ஏரிகளில் புதுப்புனல் காண குடிமராமத்துத் திட்டம் தந்த உழவர் மகன் நம் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட பிளாஸ்டிக் பயன்படுத்திட நிரந்தரத் தடை, உலக முதலீட்டாளர்கள் மாநாடுமூலம் 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் ஈர்ப்பு, 10 இலட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம், வெளிநாட்டுப் பயணத்தில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, 8,835 கோடி ரூபாய் அன்னிய முதலீடு ஈர்ப்பு, 35,520 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம், காவேரி டெல்டா பகுதிகளைப் பாதுகாக்க சிறப்பு வேளாண் மண்டலம், 11 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், நிருவாக வசதிக்காக 5 புதிய மாவட்டங்கள், 2 கோடியே 5 இலட்சம் குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் 1,000 ரூபாய் ரொக்கம், உள்ளாட்சித்

துறையில் மகத்தான சாதனை படைத்து 123 தேசிய விருதுகள் பெற உறுதுணையாக இருந்து, துறைகள்தோறும் சாதனைகள் படைத்து அகில இந்திய அளவில் ஆளுமைத் திறனில் தமிழகத்தைத் தரணியிலே முதலிடம் பெறச் செய்து, "இன்றும் முதலமைச்சர்; இனி என்றும் முதலமைச்சர்" (மேசையைத் தட்டும் ஒலி) என மக்கள் அனைவரும் மனதாரப் பாராட்டும் மக்களின் முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிவின் உருவகம், பாசப் பெட்டகம், நல்லாட்சிக்கு உறுதுணை நிற்கும் நல் உறவுக்கு உதாரணம்; சோதனையில் கை கொடுக்கும் நட்புக்கு இலக்கணம்; இயக்கமே பெரிதென எண்ணுகின்ற கழகத்தின் காவல் முகம்; தொண்டர்கள் நலம் பேண தொய்வின்றி உதவிடும் ஈகை குணம்; மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தமிழகம் வளம் பெற உழைத்திடும் ஓய்வறியா உழைப்பின் திறம்; இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் கழகத்தைக் கட்டுக் கோப்பாய் வழிநடத்தும், கழக ஒருங்கிணைப்பாளர், ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துரைத்த 'கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டின்' வழியே பேரவையைச் சீர்பட நடத்திவரும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக நிற்கும் மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசு கொறடா அவர்களுக்கும் மற்றும் அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சி கொறடா உள்ளிட்ட அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த தொண்டாமுத்தூர் தொகுதி மக்களுக்கும், ஊரக உள்ளாட்சித் தேர்தலில் கழகத்தை மகத்தான வெற்றி பெறச் செய்த கோவை மாவட்ட மக்களுக்கும், கூட்டணிக் கட்சி உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கோவை மாவட்ட மக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, நகராட்சி நிருவாகம் மற்றும்

குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களுக்கு எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து சிறப்பான முறையிலே வழிநடத்துகிறார்கள். இந்தத் துறையின்மேல் பல்வேறு விமர்சனங்கள் வந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு ஊக்கங்களைக் கொடுத்து, வழிநடத்தி வருகிறார். எங்களுடைய துறையைப் பொறுத்தளவிற்கு மிகப் பெரிய துறை. மக்களுக்கு சேவையாற்றக்கூடிய துறை. மக்களுக்கு அடிப்படைத் திட்டங்களைச் சேர்க்கக்கூடிய துறை. இன்றைக்கு எங்களுடைய துறையில் மொத்தப் பணியாளர்கள் 3 இலட்சத்து 89 ஆயிரத்து 575 பேர் இருக்கிறார்கள்; 525 ஊராட்சிகள், 358 யூனியன்கள் இருக்கின்றன. அதேபோல, 528 பேரூராட்சிகளும், 121 நகராட்சிகளும், 12 மாநகராட்சிகளும் இருக்கின்றன. இதில் ஏதாவது ஒரு இடத்தில், ஒரு பிரச்சினை வந்தாலும்கூட, உடனடியாக எங்களுடைய கவனத்திற்கு வந்தவுடன் நடவடிக்கை எடுக்கிறோம். அவ்வளவு பெரிய பரந்த துறை, அதிகமான பணியாளர்கள் இருக்கக்கூடிய துறை. இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, அவருடைய ஒத்துழைப்புடன் சிறப்பான முறையிலே பணியாற்றி வருவதன் காரணமாக, இன்றைக்குப் பல்வேறு விருதுகளை, காங்கிரஸ் ஆட்சியிலிருந்து இன்றைக்கு இருக்கக்கூடிய பாரதிய ஜனதா ஆட்சி வரை எல்லா மத்திய அரசும் எங்களுக்கு 123 விருதுகளை வழங்கியிருக்கின்றன.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு சாலைகள், குடிநீர், தெரு விளக்கு, மின்சார சேமிப்பு, மழைநீர் வடிகால், பாலங்கள், வங்கிக் கடன் இணைப்பு, வீடுகள், தனிநபர் கழிப்பறை இப்படி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இப்போது பார்த்தீர்களென்றால், smart city திட்டத்தின்கீழ்கூட பணி மேற்கொள்ளப்படும் தி. நகருக்குச் சென்று, ஒரு சாலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அற்புதமான சாலை; நியூயார்க்கில் உள்ளது போல

அந்தச் சாலை இருக்கிறது. இப்படி பல திட்டங்களைத் தந்து, இன்றைக்கு இந்தியாவிலேயே பல திட்டங்களுக்கு முதன்மையான துறையாக, நம்முடைய அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடனும் பல்வேறு விருதுகள் பெற்ற துறையாக, உள்ளாட்சித் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈடில்லாத சிந்தனை ஆற்றலாலும், இணையில்லாத செயலாற்றலாலும், தன்னிகரில்லாத் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழகம் நோக்கி, உலகையே உற்று நோக்கச் செய்த, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில், வீறுநடை போட்டு, தமிழகத்தில் மக்கள் நலத் திட்டங்களை மிகச் சிறப்புடன் செயல்படுத்தி, ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக, முன்னுதாரணமாக தமிழகம் செயல்பட்டதை ஒப்பாய்வு செய்து, மத்திய அரசு வழங்கிய அகில இந்திய அளவில் முதன்மை மாநிலம் "Number 1 State" என்னும் விருதை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்குப் பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது துறையின் சார்பாகவும், கோவை மாவட்ட மக்கள் சார்பாகவும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலாகவே, சிறப்பான செயல்பாட்டுக்கான, மத்திய அரசின் விருதுகளைப் பெறுவதை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பெறுவதில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, சிறப்பாகச் செயலாற்றி சாதனை படைத்து வருவதைப் பாராட்டி, மத்திய அரசு, கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 123 தேசிய விருதுகளை தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய அளவில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியமைக்காக, 16 மாநில அளவிலான தேசிய விருதுகள், 19 மாவட்ட அளவிலான தேசிய விருதுகள், 15 ஊராட்சி ஒன்றிய அளவிலான தேசிய விருதுகள், 54 கிராம ஊராட்சிகள் அளவிலான தேசிய விருதுகளையும், தேசிய அளவில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் திட்டங்களைச்

செயல்படுத்தியமைக்காக நகராட்சி நிருவாகத் துறைக்கு 11 தேசிய விருதுகள், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 5 தேசிய விருதுகள், சென்னை குடிநீர் வாரியத்திற்கு 1 தேசிய விருது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 1 தேசிய விருது, பேரூராட்சிகள் துறைக்கு 1 தேசிய விருது என மொத்தம் 123 தேசிய விருதுகளை, மத்திய அரசு தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யாத சரித்திர சாதனைகளைச் செய்து, அகில இந்திய அளவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாகத் திகழச் செய்துள்ளமைக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசுக்கு, மேற்கூறிய தேசிய விருதுகளே சாட்சிகள் ஆகும் என்பதை மிகவும் பெருமிதத்துடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கங்கை யமுனை காவிரி வைகை
ஓடுவது எதற்காக?
நாளும் உழைத்து தாகம் எடுக்கும்
தோழர்கள் நமக்காக"

என்று பாடினார் புரட்சித் தலைவர். தாகம் என்பது, உயிருக்குத் துன்பம் விளைவிக்கின்ற பசி, தீராக் கோபம், பிணி முதலான 12 குணங்களில் ஒன்று என்று நமது முன்னோர்கள் வகைப்படுத்தியுள்ளனர். எனவேதான், தண்ணீர் கொடுத்து தாகம் தீர்க்கின்ற செயல், மிகவும் புண்ணியமாகக் கருதப்படுகிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களின் தாகம் தீர்க்கும் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு, மிகுந்த முன்னுரிமை அளித்து செயல்படுத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, குடிநீர்த் திட்டப் பணிகளையும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் சிறப்புறச் செயல்படுத்தி வருகிறார்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011–2012 முதலான 5 ஆண்டு காலத்தில், நகர்ப்புறம் மற்றும் ஊரகப்

பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக, 21,988 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சரித்திர சாதனை படைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அரசு, கடந்த 4 ஆண்டு காலத்தில், குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக, 17,963 கோடியே 99 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, சாதனை படைத்துள்ளது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011–2012 முதல் 5 ஆண்டுக் காலத்தில், 5,269 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 46 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, கூடுதலாக நாளொன்றுக்கு 726.5 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

பிற்பகல் 3–45

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான நல்லாட்சியில், கடந்த 4 ஆண்டுக் காலத்தில், 3,292 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 38 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, கூடுதலாக நாளொன்றுக்கு 261 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான ஆட்சியில், 8 மாநகராட்சிகள், 23 நகராட்சிகள், 42 பேரூராட்சிகள் மற்றும் 18 மாவட்டங்களில் உள்ள 5,614 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், 7,218 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 58 குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்மூலம் நாளொன்றுக்கு சுமார் 1,157 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, நெம்மேலியில் தற்போது செயல்படும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில், கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திட 1,259 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் 27–6–2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நீரைப் பொது மக்களுக்கு

விநியோகம் செய்யும்பொருட்டு, 49 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் 355 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. அதேபோல, கிழக்கு கடற்கரைச் சாலை, பேரூர் பகுதியில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியுடன் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசால், 6,078 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

சென்னை மாநகரில் தற்போது நாளொன்றுக்கு 650 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில் பருவமழை பொய்த்தாலும்கூட, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களின்மூலம் நாளொன்றுக்கு 750 மில்லியன் லிட்டர் குடிநீரும், எதிர்மறை சவ்வூடு பரவல் முறையிலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்மூலம் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டரும் என, நாளொன்றுக்கு 870 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகருக்குத் தொடர்ந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியைச் சமாளிக்கும்பொருட்டு, 849 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 39,257 குடிநீர்த் திட்டப் பணிகளை மேற்கொண்டு, வறட்சி நிவாரணப் பணிகளைத் திறமையாக கையாண்டது. சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையை சமாளிக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மொத்தம் 233 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நெய்வேலி நீர்ப்படுகையில் 9 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தும், திருவள்ளூர் மாவட்டம், பூண்டி, தாமரைப்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 324 விவசாயக் கிணறுகளில் குடிநீர் பெற்றும், சிக்கராயபுரம் கல் குவாரி மற்றும் எருமையூர் கல் குவாரியிலிருந்த 40 MLD தண்ணீர் பெற்றும், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவை எவ்வித தடங்கலுமின்றி நிறைவேற்றப்பட்டது. மேலும், ஜோலார்பேட்டையிலிருந்து இரயில் மார்க்கமாக 27 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் 12–7–2019

முதல் 8–10–2019 வரை 159 இரயில் நடைகள்மூலம் மொத்தம் 437 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகர மக்களுக்கு வழங்கப்பட்டது என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் நலனுக்கான எந்தவொரு பணியையும் அதுவாகவே நடக்கட்டும் என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விட்டதே கிடையாது. அந்தப் பிரச்சினை குறித்து முன்கூட்டியே சிந்தித்து, முன்னதாகவே அதனைச் சந்தித்து, சீர்செய்திட வேண்டுமென்பதுதான் எங்களுக்கு அவர் கூறுகின்ற அறிவுரை ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைப்படி, நானும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஜெயக்குமார் அவர்களும், கடந்த 9–8–2019 அன்று மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு. ஜெகன்மோகன் ரெட்டி அவர்களை நேரில் சந்தித்து, சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்காக கிருஷ்ணா நதிநீரை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, உடனடியாக, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு 6.60 டி.எம்.சி. நீரை விடுவித்துள்ளார்கள்.

அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2015 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் “நீடித்த நிலையான நீர் பாதுகாப்பு திட்டத்தை” அறிவித்தார்கள். அதனடிப்படையில், சென்னை மாநகராட்சியில் மொத்தமுள்ள 210 குளங்கள் மற்றும் ஏரிகளில் கடந்த 4 ஆண்டுகளில் சீர்மிகு நகரங்கள் திட்டம், மூலதன நிதி, பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் தனியார் நிறுவனங்களின் CSR fund உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக இதுவரை 87 குளங்கள் 12 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 96 குளங்களில் புனரமைக்கும் பணிகள் 152 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்த நீர்நிலைகள் அனைத்தும் புனரமைக்கப்பட்ட பின்னர், சென்னை மாநகரில் சுமார் 1 டி.எம்.சி. அளவு தண்ணீர் சேமித்திட வாய்ப்பாக அமையும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அளவில் நீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளில், சென்னை மாநகராட்சி முன்னோடி மாநகராட்சியாகத் திகழ்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சென்னை நீங்கலான பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பராமரிக்கப்படும் 585 குளங்கள் மற்றும் ஏரிகளில் இதுவரை 214 குளங்கள் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள குளங்களில் சீரமைக்கும் பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் சிறு தூறல் விழுந்தாலும்கூட தண்ணீர் தேங்கி, மக்களுக்கும், போக்குவரத்திற்கும், பெருத்த இடையூறு ஏற்படுத்துவதை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்கள். மேலும், 10 வருடங்கள், 15 வருடங்கள், 20 வருடங்களுக்கு முன்பு மழை பெய்தபோது சென்னை மாநகரம் முழுவதும் பார்த்தீர்களென்றால், ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கும். கிட்டத்தட்ட 20 நாட்கள், 25 நாட்களுக்கு அப்படியே தேங்கியிருக்கும். நாங்கள் train–ல் வரும்போதெல்லாம் பார்ப்போம். அப்படியே தண்ணீர் தேங்கி நின்றிருக்கும். ஆனால், இன்றைக்கு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் எடுத்த நடவடிக்கையால் சென்னையில் அதிகமான மழை பெய்தாலும்கூட, எல்லாமே முழுமையாக drain out ஆகிவிடுகிறது. மக்கள் சிறப்பான முறையில் எந்தவித சிரமங்களுமின்றி வாகனப் போக்குவரத்தில் சென்று வர ஏதுவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–50

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் 5 ஆண்டு காலத்தில் 3,214 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில், 4,370 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு, சாதனை படைக்கப்பட்டன. சென்னை மாநகராட்சியில் மட்டும் 649 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 257 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசால், 2016–2017 ஆம் ஆண்டு முதல் 2,553 கி.மீ. நீளத்திற்கு 1,397 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. சென்னை மாநகராட்சியில் கடந்த 4 ஆண்டு காலத்தில் 1,785 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 750 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு

துரிதமாக திட்டங்களைச் செயல்படுத்தியதால், 18–10–2019 மற்றும் 1–12–2019 ஆகிய நாட்களில் முறையே 104.2 மி.மீ., 132 மி.மீ., மற்றும் 112 மி.மீ. அளவிற்கு மழை பெய்தும்கூட, தண்ணீர் தேங்காமல் இருந்த நிலையை பத்திரிகையாளர்களே அன்றைக்குப் பாராட்டியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முந்தைய திமுக ஆட்சிக் காலத்தில் முடிக்காமல் விட்டுச் சென்ற 19 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளையும் நிறைவேற்ற ஆணையிட்டார்கள். அவற்றில் 14 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 500 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,123 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 5 பணிகள் ஜூன் 2020–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டு கால பொற்கால ஆட்சியில், 715 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 15 இலட்சத்து 24 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், 1 மாநகராட்சி, 16 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு, கடந்த 4 ஆண்டுகளில் 577 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 இலட்சத்து 18 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 மாநகராட்சிகள், 9 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுகின்ற அடிப்படை வசதிகளில் ஒன்றாக சாலைகள் திகழ்கின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள், 12,525 ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளிட்ட பகுதிகளில், மொத்தம் 18,105 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 65,134 கி.மீ. நீள சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மகத்தான சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு, கடந்த 4 ஆண்டு காலத்தில் 18,588 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 56,926 கி.மீ. நீள சாலைப் பணிகளை

மேற்கொண்டு வரலாற்று சாதனை படைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 733 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 1,145 கி.மீ. நீளத்திற்கு 8,213 சாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவை மாநகராட்சியில், போக்குவரத்து நெரிசலை கருத்தில்கொண்டு, சத்தியமங்கலம் சாலையில் கணபதி பேருந்து திருப்பு முனையம், மூர்மார்க்கெட் சாலை சந்திப்பு மேம்பாடு மற்றும் சத்தியமங்கலம் சாலையில் டெக்ஸ்டூல் பாலம் முதல் பழைய சக்தி சாலை பாலம் வரை 2 கி.மீ. நீளத்திற்கு சாலையின் அகலத்தை விரிவுபடுத்திட தொடர்ந்து கோவை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அதேபோல அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அது உடனடியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டுகால பொற்கால ஆட்சியில், நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், 1,734 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 8,45,054 புதிய மின் சேமிப்பு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, மகத்தான சாதனை படைக்கப்பட்டிருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசில், கடந்த 4 ஆண்டு காலத்தில் 1,233 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 14,75,931 தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றி எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசினார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், கடந்த 4 ஆண்டு காலத்தில் 128 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 22,961 தெரு விளக்கு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 2,85,828 விளக்குகள் அனைத்தும் LED விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டு, இந்திய அளவில் பெருநகர சென்னை மாநகராட்சி, ஒரு முன்னோடி மாநகராட்சியாக விளங்குகிறது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான

அம்மா அவர்களின் அரசு, கடந்த 4 ஆண்டு காலத்தில் சென்னை தவிர்த்த பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், 399 கோடியே 72 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3,78,364 தெரு விளக்குகள்–(குறுக்கீடு) சென்னையில் LED விளக்குகளாக நாம் மாற்றியமைத்ததில் இந்தியாவிலேயே நாம் number one. அதைத்தான் சொன்னேன். நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள்–(மேசையைத் தட்டும் ஒலி) பேரூராட்சிப் பகுதிகளில் 42 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 53,573 தெரு விளக்குகள் LED விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சியில் LED விளக்குகள் அமைக்கப்பட்டதன் காரணமாக, 610 கோடியே 38 இலட்சம் ரூபாய் அளவிற்கு இன்றைக்கு மின் சேமிப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் உள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகளை மேம்படுத்த, 1,807 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, கடந்த 4 ஆண்டு காலத்தில், உள்ளாட்சி அமைப்புகளில், 2,049 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 8,664 திடக் கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டு, மகத்தான சாதனை படைத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கின்றீர்கள், இது பெரிய துறை அல்லவா, சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், 19,575 துப்புரவுப் பணியாளர்கள்மூலம், 5,678 மூன்று சக்கர மிதிவண்டிகள், 434 பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள், 409 பெரிய மற்றும் சிறிய காம்பேக்டர் வாகனங்கள், 144 கனரக டிப்பர் லாரிகள் மற்றும் 9,585 காம்பேக்டர் வாகன குப்பைத் தொட்டிகளைக் கொண்டு, நாள் ஒன்றுக்கு 5,100 மெட்ரிக் டன் குப்பை அகற்றப்படுகிறது. சென்னை மாநகரத்தில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை, அந்தந்த பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ள, 161 எண்ணிக்கையிலான குப்பை பதனிடும் நிலையங்களுக்கு எடுத்துச் சென்று, தினமும்

110 மெட்ரிக் டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டு காலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில், 928 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 550 பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அரசு, கடந்த 4 ஆண்டு காலத்தில், 1,370 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,199 பாலப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழை, எளிய மக்களின் பசிப் பிணியைப் போக்க படைத்த திட்டம்தான், உலகின் மிகச் சிறந்த திட்டம் என, சமூகப் பொருளாதார நிபுணர்களால் பாராட்டப்படும் “அம்மா உணவகம்” எனும் திட்டம். தமிழகத்தில், 658 இடங்களில் செயல்பட்டுவரும் அம்மா உணவகங்கள்மூலம், 15–3–2020 வரை, 129 கோடியே 8 இலட்சம் இட்லிகளும், (மேசையைத் தட்டும் ஒலி) 44 கோடியே 50 இலட்சம் பலவகை சாதங்களும், 31 கோடியே 76 இலட்சம் சப்பாத்திகளும், விற்பனை செய்யப்பட்டுள்ளன. அம்மா உணவகங்கள்மூலம், நாள்தோறும் 3.5 இலட்சம் ஏழை மக்கள் பயனடைகின்றனர். மேலும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், பதிவு செய்யப்பட்ட கட்டடத் தொழிலாளர்களுக்கு, அம்மா உணவகத்தில், 3 வேளையும் விலையில்லா உணவு வழங்கும் திட்டம், 4–3–2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் துவக்கப்பட்டு, 15–3–2020 வரை 69,152 கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின், அற்புதத் திட்டமான அம்மா உணவகம் திட்டத்திற்கு, மேலும் புத்துணர்ச்சி அளிப்பதற்கும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மீதான நிதிச் சுமையைக் குறைப்பதற்கும், அம்மா உணவகத்தை தொடர்ந்து சிறப்பாக நடத்துவதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சிறப்புக் கூட்டம் நடத்தி, இலாப நோக்கமற்ற சிறப்பு நோக்கு முகமையை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக, பெரு நிறுவன சமூகப் பொறுப்பு பங்களிப்பு மற்றும் நன்கொடை பங்களிப்புகளை சிறப்பு நோக்க முகமை சேகரிக்கும். மேலும், இத்திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையைச் சரிசெய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்

அவர்களின் தலைமையிலான அரசு, நிதியுதவி அளிக்க முடிவு செய்து, நடப்பாண்டில் முதன்முதலாக 100 கோடி ரூபாயை அம்மா உணவகங்களுக்கு அள்ளித் தந்தவர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களால், பெருநகர சென்னை மாநகராட்சியில், 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 50 இடங்களில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள்மூலம், 13,000 குடும்பங்களுக்கு நாள்தோறும் 20 லிட்டர் குடிநீர் ஸ்மார்ட் கார்டுமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகரின் குடிநீர் மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்பினை உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்த, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்னும் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, 5 ஆண்டு காலத்தில் 2,500 கோடி ரூபாயை முழு மானியமாக வழங்கினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை தவிர்த்த பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் மேம்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஆண்டிற்கு 750 கோடி ரூபாயை வழங்கினார்கள். மேலும் இத்திட்டத்திற்கு, 2016–2017ஆம் ஆண்டில், 886 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகர்ப்புற ஆளுமை, நகர உட்கட்டமைப்பு வளர்ச்சி, நகர்ப் பகுதிகளுக்கான தொழில்நுட்ப உதவி ஆகிய மூன்று பெரும் திட்டங்களை உள்ளடக்கி, தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை, 3,831 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு 2018–2019 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 500 கோடி ரூபாய் நிதி வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த 2018–2019 ஆம் ஆண்டிற்கு 750 கோடி ரூபாயும், நடப்பு நிதியாண்டில் 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம்,

வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 நகரங்கள், மத்திய அரசின் சீர்மிகு நகரம் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ், 2015–2016 ஆம் ஆண்டு முதல், தமிழகத்தில் மேற்கூறிய 11 நகரங்களில், 10,430 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 440 திட்டப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை, 380 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 79 திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 6,303 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 218 திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டிலும் 1,650 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 4–00

தமிழ்நாட்டில், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட, 12 மாநகராட்சிகள், 15 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி என 28 நகரங்கள், மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன்கூடிய, AMRUT திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், தமிழகத்தில் மேற்கூறிய நகரங்களில், 11,441 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 18 குடிநீர்த் திட்டப் பணிகள், 18 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், 409 பூங்கா பணிகள் என, 445 திட்டப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை, 409 பூங்கா மேம்பாட்டுப் பணிகள், 2 குடிநீர்த் திட்டப் பணிகள், 4 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், AMRUT திட்டத்திற்காக, 1,450 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. AMRUT திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக, 2016–2017 முதல் 2018–2019 வரையிலான 3 ஆண்டுகளில், நாட்டிலேயே ஊக்கத் தொகையாக, 404 கோடியே 58 இலட்சம் ரூபாயை, மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஓசூர், நாகர்கோவில் மற்றும் ஆவடி நகராட்சிகளை, மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். அந்த வகையில் தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 15 ஆக உயர்த்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வழியால் நிலம் சிறக்கும், நில வகையால் ஊர் செழிக்கும், ஊர் செழித்தால் உலகம்

சிறக்கும், உலகம் சிறந்தால் உயிர்கள் எல்லாம் சிறக்கும். பூவுலகம் செழிப்பதற்கும், புத்துயிர்கள் வளர்வதற்கும் என்ன வேண்டும்? கிராமங்கள் சிறக்க வேண்டும்; கிராமங்கள் செழிக்க வேண்டும். தமிழகத்தில் நகர்ப்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஊரகப் பகுதிகளில் பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தினார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், குரு வடிவாகி குவலயம் தன்னில், திருவடி வைத்து திறம்பட ஆளும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி, இந்திய அளவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக நிலை உயர்த்தி, மகத்தான சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “முன்னேற்றப் பாதையிலே மனசை வைத்து, முழு மூச்சாய் அதற்காக தினம் உழைத்து, மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ வழங்கும் குணம் உடையோன் விவசாயி!” என்று விவசாயிகளின் பெருமைகளைப் பாடினார் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகுக்கே உணவளிக்கும், உன்னத தொழில் செய்யும் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருந்து, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையில், நீர்வள ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள, விவசாயியாக இருந்து முதலமைச்சரான, “காவேரிக் காப்பாளன்”, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், குடிமராமத்து என்னும் மாபெரும் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன ஏரிகள், குளங்கள், ஊருணிகள் போன்ற நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கடந்த ஆண்டு தமிழ்நாடு நீர்வள ஆதாரப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்–குடிமராமத்து என்ற மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு, 2019–2020 ஆம் ஆண்டில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்

துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 5,000 சிறுபாசன ஏரிகளும், 25,000 குளங்கள் மற்றும் ஊருணிகள் போன்ற நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும்பொருட்டு, 1,250 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, நீர் நிலைகளை இயந்திரங்கள்மூலம் தூர்வாரவும், கரைகளைப் பலப்படுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், மாநில அரசு நிதியாக, 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மேலும், மேற்படியான நீர்நிலைகளில் உள்ள மதகுகள், நீராடும் துறை, சிறு குளம், கழிமுகம் ஆகிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள NREGA திட்ட நிதியில் 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 2016–2017ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் நகரப் பகுதிகளுக்கு இணையாக, அதிக அளவு மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில், சுமார் 15,000 முதல் 20,000 சதுர அடி பரப்பளவில், குழந்தைகள், பெண்கள் மற்றும் பெரியோர்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சி சாதனங்கள் உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய 500 அம்மா பூங்காக்கள், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 2016–2017ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் வாழும் இளைஞர்களின் உடல் திறன் மற்றும் மனவளத்தை மேம்படுத்த, அம்மா பூங்காக்களில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,161 சதுர அடி பரப்பளவில் 500 அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசம் இல்லாத கோயில் இல்லை; தாளம் இல்லாத ராகம் இல்லை; மரம் இல்லாத காடு இல்லை; மீன் இல்லாத கடல் இல்லை; மீசை இல்லாத பாரதி இல்லை; வானம் இல்லாத நிலவு இல்லை; வாசல் இல்லாத வீடு இல்லை; ஆனால், தங்கி வாழ்வதற்கு வீடுகள் இல்லை என்று கவலைப்பட்ட ஏழை, எளிய மக்களின் கண்ணீரைத் துடைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, 2011–2012 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011–2012 ஆம் ஆண்டு முதல்

2015–2016 ஆம் ஆண்டு வரை, 5,940 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அலகுத் தொகையில், 3 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு, மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது. இன்றைக்கும் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய், முழுமையாக கட்டடம் கட்டுவதற்கு, solar panel தவிர்த்து, ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதேபோல, 2016–2017ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 20,000 பசுமை வீடுகள் கட்ட, 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டிலும், 20,000 பசுமை வீடுகள் கட்ட, 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 12–6–2018 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி, ஊரகப் பகுதிகளில் பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ், 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பழுதடைந்த 45,594 வீடுகள், 227 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கைத்தொழில் வேலை செய்யும் ஏழை; கண்ணீரை மாற்றுகின்ற நாளை; நாமெல்லாம் சிந்தித்தால் நாடெல்லாம் முன்னேறும், மண்ணெல்லாம் பொன்னாகும் பொற்காலம் உண்டாகும்” என்று பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த பொற்காலத்தை உருவாக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 2011–2012 ஆம் ஆண்டு முதல், 2015–2016 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில், மொத்தம் 4,41,637 வீடுகள், 4,875 கோடியே 718 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன. இதில் மாநில அரசின் பங்குத் தொகையாக 3,010 கோடியே 65 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்திட்டம் 2016–2017 ஆம் ஆண்டு முதல், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் என சீரமைக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கான பரப்பளவு, 210 சதுர அடியிலிருந்து, 269 சதுர அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அலகுத் தொகையான 1,20,000 ரூபாயில் வீடு ஒன்றுக்கு மத்திய அரசு தனது பங்காக 72,000 ரூபாய் வழங்குகிறது; மாநில அரசு தனது பங்காக 48,000 ரூபாய்

வழங்குகிறது. இதையெல்லாம் முதலிலேயே சொல்லிவிட்டோம். மொத்தம் தமிழ்நாட்டில் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை 1,20,000 ரூபாயாக நிர்ணயம் செய்து, வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2016–2017 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை, 8,968 கோடியே 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில், 5,27,552 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் மாநில அரசின் பங்குத் தொகை மட்டும் 5,170 கோடியே 1 இலட்சம் ரூபாய் ஆகும்.

இத்திட்டம் குறித்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பரமசிவம் அவர்கள் பேசினார்கள். சமூகப் பொருளாதார கணக்கெடுப்புப் பட்டியல் 2011–ன் அடிப்படையில், கிராம சபைமூலம் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர். ஆனால், பல தகுதி வாய்ந்த குடும்பங்கள் மற்றும் பயனாளிகளின் பெயர்கள், இச்சமூகப் பொருளாதார கணக்கெடுப்புப் பட்டியலில் இடம் பெறாததால், அவர்களையும் இப்பட்டியலில் சேர்த்திட அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, 9 இலட்சத்து 11 ஆயிரம் தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், அனைத்துப் பயனாளிகளுக்கும் வீடு வழங்கிட, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“உழைக்கும் கைகளே, உருவாக்கும் கைகளே,
உலகைப் புதுமுறையில் உண்டாக்கும் கைகளே”
(மேசையைத் தட்டும் ஒலி)
என்றும், “நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கைகளே,
இந்த நாடு முழுதும் மலர வேண்டும் புரட்சி மலர்களே”

என்றும் புரட்சித் தலைவர் அவர்கள், உழைப்பின் மேன்மையைப் போற்றிப் பாடினார். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், 2011–2012 ஆம் ஆண்டு முதல், 2015–2016 ஆம் ஆண்டு வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 173.81 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, 20,597 கோடியே 76 இலட்சம் ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டது. அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இத்திட்டத்தை முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தி வருகிறார். இந்தப் புள்ளிவிவரத்தை இதற்கு முன்னர் நான் சொல்லிவிட்டேன். அதேபோன்று தமிழ்நாட்டில், இயற்கை வள மேலாண்மைப் பணிகளின்கீழ், தடுப்பணை

அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், மண்வரப்பு மற்றும் கல் வரப்பு ஏற்படுத்துதல், கிணறு வெட்டுதல், மீள் நிரப்பு தண்டு மற்றும் மீள் நிரப்பு குழி அமைத்தல், தனி நபர் மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழி அமைத்தல், சீரான அகழிகள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, நிலத்தடி நீர் மீள நிரப்பப்பட்டு, மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர் வளம் பாதுகாக்கப்படுகிறது. நீடித்த மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குவதில், தமிழ்நாடு தொடர்ந்து முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இயற்கை வள மேலாண்மைப் பணிகளுடன், அங்கன்வாடி மையங்கள், சுய உதவிக் குழுக் கட்டடங்கள், மாணவ, மாணவியருக்கு பள்ளிக் கழிப்பறைகள், ஊராட்சி மன்றக் கட்டடங்கள், ஊரக இணைப்புச் சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ், 2018–2019 ஆம் ஆண்டில், பணிகளை முடித்ததில் சிறந்த செயல்பாடு, நீர் வள மேலாண்மைப் பணிகளைச் செயற்படுத்துவதில் சிறந்த செயல்பாடு ஆகியவற்றிற்காக, தமிழ்நாட்டிற்கு தேசிய அளவிலான 2 மாநில விருதுகள், 4 மாவட்ட அளவிலான விருதுகள், 1 ஊராட்சி ஒன்றிய விருது, மற்றும் 1 ஊராட்சி விருது என, மொத்தம் 8 தேசிய விருதுகள், மத்திய அரசால் 19–12–2019 அன்று புதுடில்லியில் வழங்கப்பட்டன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கல்விக்குச் சாலையுண்டு
ஊருக்குப் பாதையுண்டு,
நாட்டுக்குத் தேவையெல்லாம் நாம் காணலாம்”

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதற்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஊரகப் பகுதிகளில், கடந்த 9 ஆண்டு காலத்தில், 90 ஆயிரத்து 273 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளின் மேம்பாட்டிற்காக, 20,153 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், ஊரகச் சாலைகளின் மேம்பாட்டிற்காக, ‘தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்’ என்ற புதிய திட்டம், 2015–2016 ஆம் ஆண்டில் முதன்முறையாக அறிவிக்கப்பட்டு, ஆண்டுதோறும் 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, அதிக முக்கியத்துவம் அளித்து, 2018–2019 ஆம் ஆண்டு முதல், இத்திட்டத்திற்கான நிதியுதவியை, 1,200 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 23 ஆயிரத்து 352 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல, நபார்டு வங்கி நிதி உதவியுடன், கடந்த 9 ஆண்டுகளில், 7 ஆயிரத்து 985 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், 2,251 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஊரகப் பகுதிகளில் முதன்முறையாக, 1 கிலோ மீட்டருக்குக் குறைவான நீளம் கொண்ட, சிறிய இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்கு, அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். அதன்படி, 2018–2019 ஆம் ஆண்டு முதல், தற்போது வரை 3 ஆயிரத்து 564 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த, 825 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–10

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ், 2012–2013 ஆம் ஆண்டு முதல் இதுவரை, 4,257 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 ஆயிரத்து 293 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும்பொருட்டு, முதன்முறையாக மாநில அரசு நிதியிலிருந்து, மாண்புமிகு அம்மாவின் அரசு, 1,344 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த ஆட்சியில் இந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். மத்திய அரசில் அவர்கள் கூட்டணியில் இருந்தபோதுகூட, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை; நிறுத்தப்பட்டது. 2012–2013 ஆம் ஆண்டில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அம்மா அவர்கள் திரும்பவும் அந்தத் திட்டத்தைப் பெற்றார்கள். பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்–I மற்றும் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்–II ஆகிய திட்டங்களை, மிகச் சிறப்பாகச் செயல்படுத்திய காரணத்தால், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்–III–க்கு தமிழ்நாடு தகுதி பெற்றுள்ளது. குக்கிராமங்களிலிருந்து, சந்தை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளை இணைக்கும்

பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 7,375 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்த, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக, தொடர்ந்து 3 ஆண்டுகளாக, அதாவது 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய ஆண்டுகளில், 131 கோடியே 4 இலட்சம் ரூபாயை, ஊக்கத் தொகையாக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு, அம்மாவின் அரசு பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, 9 ஆண்டுகளில், 7,025 கோடி ரூபாய் மதிப்பில், 29 ஆயிரத்து 910 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், மிகவும் சேதமடைந்த தார்ச் சாலைகள், பயன்பாட்டுக் காலம் முடிவடையும் நிலையிலுள்ள சாலைகள் மற்றும் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட 42 ஆயிரத்து 254 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த, கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 11,165 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா–ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்; இது மாண்புமிகு முதலமைச்சரின் அற்புதமான திட்டம். ஆதிதிராவிடர் குடியிருப்புகளில், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், அவர்களது சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வதற்காகவும், அம்மா–ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 2018–2019 ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில், 2013 ஆம் ஆண்டு சுகாதார அடிப்படையில் 51.06 இலட்சம் குடும்பங்களில் கழிப்பறை வசதிகளே இல்லை எனக் கண்டறியப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தற்போது அனைத்துக் குடும்பங்களுக்கும், தனிநபர் இல்லக் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 51 இலட்சம் கழிப்பறைகள் கிராமங்களுக்கு மட்டும் கட்டிக்கொடுத்துள்ளோம். இந்த

திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவில் நாம்தான் number one. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் சுகாதாரம் அடைந்த நிலை, 45 விழுக்காட்டிலிருந்து 100 விழுக்காடாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் மொத்தமுள்ள, 12,525 கிராம ஊராட்சிகளும், தாமாகவே முன்வந்து, திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற கிராம ஊராட்சிகளாக, கிராம சபைக் கூட்டத்தில், சுயமாக அறிவிப்பு செய்துள்ளன. அனைத்து ஊரக மாவட்டங்களும், 100 விழுக்காடு சுகாதாரம் அடைந்த நிலையை எட்டியுள்ளன. 2018–2019 ஆம் ஆண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டு சுகாதாரக் கணக்கெடுப்பில் விடுபட்டுப்போன, 6.08 இலட்சம் குடும்பங்களுக்கு, தூய்மை பாரதத் திட்டத்தின்கீழ், கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் பிற குடியிருப்புகளில், கழிப்பறை கட்ட போதிய இடம் இல்லாதிருப்பின், அந்தக் குடியிருப்புகளில் சமூக சுகாதார வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை, மறுசுழற்சி மற்றும் குப்பைக்கூளங்கள் வெளியேற்றும் வசதிகளுடன்கூடிய, திடக் கழிவு அமைப்புகளுடன் செயல்படுத்திட, விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளில் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக, இத்திட்டத்தின்கீழ் 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 7,000 கிராம ஊராட்சிகளிலும், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில்—மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இதுகுறித்துப் பேசினார்கள். 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில்– மீதமுள்ள 3,524 கிராம ஊராட்சிகளிலும், விரிவுபடுத்தப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 12,525 கிராம ஊராட்சிகளிலும், திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்மூலம், வெளி ஆதார முறையில், 66,130 தூய்மைக் காவலர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட, 650 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளான, குப்பைத் தொட்டிகள், மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் தள்ளுவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளின் சிறப்புத் தேவையைப் பூர்த்தி

செய்யும்விதமாக, மின்கலம் பொருத்திய தள்ளுவண்டிகள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பணியாற்றும், 66,130 தூய்மைக் காவலர்களுக்கு ஊதியம் வழங்க 2018–2019 ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் அம்மாவினுடைய அரசை வழிநடத்தக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அண்ணன் அவர்கள் 206 கோடியே 4 இலட்சம் ரூபாய், மாநில அரசு நிதியாக ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

“நதியைப்போல நாமும் நடந்து பயன்தர வேண்டும்;
கடலைப்போல விரிந்த இதயம் இருந்திட வேண்டும்”

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொன்வரிகளுக்கு ஏற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) பரந்த இதயம் கொண்ட, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை, 2 கோடியே 50 இலட்சம் ரூபாயிலிருந்து, 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், 2019–2020 ஆம் ஆண்டு முதல் நிதி உயர்த்தி வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள், இத்திட்டத்தின்கீழ் பணிகளை விரைந்து தேர்வு செய்யும் வகையில், 2019–2020 ஆம் ஆண்டில், நிதி மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள், அரசாணையாக வெளியிடப்பட்டு, நிதி முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 4–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி!
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி”

என்று மாணவ, மாணவியர்களைப் போற்றிப் பாடுவார் புரட்சித் தலைவர் அவர்கள். மாணவர்கள் அனைவரும் வசதியாகவும், முழுமையான ஈடுபாட்டுடனும் கல்வி பயில, பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில், சுகாதார முறையில் இருப்பது அவசியமாகும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள 29,623 ஊராட்சி ஒன்றிய, ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 4,575 அரசுப் பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவியரின் நலனை முன்னிட்டு, தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதை உறுதி செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தக்க நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது. இப்பள்ளிகளின் கழிப்பறைகளைச் சுத்தமாக பராமரிப்பதற்காக, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்பு அல்லது தனியார் நிறுவனங்கள் மூலமாக, வெளி ஆதார முறையில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரப் பணியாளர்களுக்கு, மாத ஊதியம் வழங்குவதற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 2015–2016 ஆம் ஆண்டு முதல், 267 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்
கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாக பல தொழில் பயிலுவோம்
ஊரில் கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப்
போக்குவோம்”

என்று பள்ளிகள் குறித்து புரட்சித் தலைவர் அவர்கள் பாடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், 2011–2012 முதல் 2016–2017 ஆம் ஆண்டு வரை கிராமப்புறங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய, ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 587 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில், 54,015 புதிய பணிகள் மற்றும் பழுது நீக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால், மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, 100 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2024 ஆம் ஆண்டிற்குள் அனைத்துக் கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கும், குழாய் இணைப்புகள்மூலம், போதுமான அளவு தரமான குடிநீர் தொடர்ந்து வழங்குவதற்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர்

அவர்கள், Jal Jeevan Mission திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், அனைத்து கிராமப்புற குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் பொருட்டு, ஒரு செயல் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வடிவமைத்து வருகிறது.

ஊராட்சி நிருவாகம்; புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநில நிதி ஆணைய மானியமாக, 22,278 கோடியே 44 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 'உள்ளாட்சியில் நல்லாட்சி'. இதுவே மாண்புமிகு அம்மாவின் ஆசி பெற்ற, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக்கு சாட்சி என்பதற்கேற்ப, 2016–2017 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை, மாநில நிதி ஆணைய மானியமாக, 22,302 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ளது. 2019–2020 ஆம் ஆண்டில், மாநில நிதி ஆணைய ஒதுக்கீடாக, 6,573 கோடியே 60 இலட்சம் ரூபாய், மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,311 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச மானியத் தொகை, கிராம ஊராட்சிகளுக்கு 5 இலட்சம் ரூபாயிலிருந்து 7 இலட்சம் ரூபாயாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு 30 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்க, 5–வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, 2019–2020 ஆம் ஆண்டு முதல் விடுவிக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவில் செயல்படும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகங்களை ஒருங்கிணைத்து, ஒரே அலுவலகக் கட்டடத்தில் கொண்டு வருவதற்காக, கடந்த 3 ஆண்டுகளில், 14 மாவட்டங்களில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் கட்ட, 91 கோடியே 91 இலட்சம் ரூபாய், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 9 ஆண்டுகளில், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக, 119 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட, 266 கோடியே 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், 3 புதிய மாவட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்ட, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் திட்டங்களின் திறமையான மற்றும் சீரான நிருவாகத்தை

உறுதிப்படுத்திடும் பொருட்டு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முதல் கீழ்நிலை பணியிடங்கள் வரை, 6,914 காலியிடங்கள் நேரடி நியமனம் மூலமும், 7,934 பணியிடங்கள் பதவி உயர்வு மூலமும் நிரப்பப்பட்டுள்ளன. பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 909 நபர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் மற்றும் 986 ஊராட்சி செயலர்களுக்கு, 20 விழுக்காடு ஒதுக்கீட்டின்கீழ், இளநிலை உதவியாளர் பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி செயலர்களுக்கான ஊதியம், ரூ.15,900–50,400 என்ற நிலையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும், மகளிர் ஊராட்சி செயலர்களுக்கு, 180 நாட்களாக இருந்த மகப்பேறு கால விடுப்பு, 270 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் மூன்று ஆண்டுகள் பணிமுடித்து, தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றிய 26,404 துப்புரவுப் பணியாளர்களுக்கு, சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: இந்தத் துறை குறித்து விவாதிக்க நீங்கள் இரண்டு நாட்கள் கேட்டீர்கள். (குறுக்கீடு) எல்லாவற்றையும் பேச வேண்டும், இரண்டு நாட்கள் வேண்டும் என்று நீங்கள்தானே கேட்டீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்களுக்கு பின்னர் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 4–20

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றிக்கொண்டிருக்கு ம்போது, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கினார் என்று இங்கே தெரிவித்தார். அது எங்களுக்கும் தெரியும். அதைப் படித்தார். அதைப் படித்துவிட்டு, பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்வார் என்று நான் எதிர்பார்த்தேன்

என்றால், "வரும் ஆண்டிலிருந்து அந்த நிதி 4 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவிப்பார்" என்று எதிர்பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அதையும் சொல்லவில்லை. அது முடியவில்லையென்றாலும்கூட, அப்படி ஒதுக்கப்படுகிற 3 கோடி ரூபாய் நிதியில் எந்தெந்த திட்டப் பணிகளுக்கு எவ்வளவு நிதி வழங்க வேண்டுமென்று restriction போடுகிறீர்களே, அது நீக்கப்படுகிறது என்று அறிவிப்பார் என்று எதிர்பார்த்தேன். இந்த இரண்டையும் விட்டுவிட்டு, "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடியாக உயர்த்தி வழங்கினார்" என்று மட்டும் தெரிவித்துவிட்டு, சினிமா பாடலைப் பாடிவிட்டு உட்கார்ந்துவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் வைத்தார்கள். அதனடிப்படையில் நாங்கள் உயர்த்தி வழங்கியிருக்கிறோம். அதிலே GST எல்லாம் வருகிறது; அதையெல்லாம் கழித்தால் குறைவான நிதிதான் உள்ளது என்றும், அதை உயர்த்தி வழங்க வேண்டுமென்றும் கடந்த முறை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இங்கே கோரிக்கை வைத்தார். அதனால்தான் ஏற்கெனவே வழங்கப்பட்டுவந்த 2½ கோடி ரூபாய் நிதியை நாங்கள் 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 50 இலட்சம் ரூபாயை சேர்த்து வழங்கியுள்ளார். அதுமட்டுமல்லாமல், வரையறைகள் மற்றும் சட்டவிதிமுறைகள் 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில்தான்

இருக்கிறது. வரைமுறைப்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் வரைமுறைப்படுத்தப்படாத பணிகள் என்று அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்தே சட்டவிதிகள் பின்பற்றப்பட்டு, தொடர்ந்து அதே நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் புதிதாக நாங்கள் எதையும் கொண்டுவரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஜீவ நதியாய் வருவாள்;
மக்கள் தாகம் தீர்த்தே மகிழ்வாள்;
தவறினைப் பொறுப்பாள்;
தர்மத்தை வளர்ப்பாள்;
தரணியிலே வளம் சேர்த்திடுவாள்" (மேசையைத் தட்டும் ஒலி)

என்று தாய்க்குலத்தின் சிறப்பை, பெண்ணினத்தின் பெருமையைப் போற்றிப் பாடினார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இறைவனின் படைப்புகளில், மிக உயர்வான படைப்பு பெண்தான். பெண் இனத்தின் பேரரசியான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களின் உறுதியையும், திறமையையும் தட்டி எழுப்பி, அவர்கள் சொந்தக் காலில், நிற்கும் வகையில்,மகளிர்சுயஉதவிக்குழுக்களைஅமைத்துத்தந்து,அவர்களது வாழ்வில் எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தினார். தமிழக மகளிரின் வாழ்வாதார மேம்பாடு, சுயசார்பு, வறுமை ஒழிப்பு, சமூகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாடு ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்துத் தந்த, மகளிர் சுய உதவிக் குழுக்கள், தற்போது ஆல்போல் தழைத்து, 6 இலட்சத்து 96 ஆயிரம் குழுக்களாகப் பெருகி, 1 கோடியே 3 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு, சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள், 8,921 கோடி ரூபாயை மொத்த சேமிப்பாகக் கொண்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் பொற்கால ஆட்சியில், கடந்த 9 ஆண்டுகளில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 65,930 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டு, மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில், கடந்த ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு 12,500 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு, இலக்கையும் தாண்டி, 13,301 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம். “மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்; பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்று புறப்பட்டுவிட்ட பெண்களின் வாழ்வுக்கு ஊன்றுகோலாக, ஊரகப் பகுதிகளில் வாழும், ஏழையெளிய மக்களின் வறுமையை ஒழிப்பதற்கும், மகளிரின் சமூகப் பொருளாதார ஆற்றலை மேம்படுத்துவதற்கும், 2012–2013 ஆம் ஆண்டு முதல், “தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்” என்ற சிறப்புத் திட்டத்தை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, திறம்படச் செயல்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு சமுதாய அமைப்புகளை, ஊரகப் பகுதிகளில் உருவாக்கி, அதன்மூலம், அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தவும், வருமானத்தைப் பெருக்கவும், இத்திட்டம் பெரிதும் உறுதுணையாக உள்ளது. பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமியத் தொழில் முனைவோர் திட்டம், தீன் தயாள் உபாத்தியாய கிராமத் திறன் வளர்ப்புத் திட்டம், தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளடக்கி, செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்கென, மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியாக, 2012–2013 முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை 1,754 கோடியே 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்; ஊரகப் பகுதிகள் மட்டுமின்றி, நகர்ப்புறத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்காக, வலுவான சமுதாய அமைப்புகளை உருவாக்கி, திறன் வளர்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளை வழங்கி, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகுத்திட, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், 2014–2015 ஆம் ஆண்டு முதல், சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 4–25

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், கடந்த 4 ஆண்டுகளில், 45,096 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இதுவரை 44,461 குழுக்களுக்கு, 44 கோடியே 46 இலட்சம் ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 20,712 சுய உதவிக் குழுக்களுக்கு, 615 கோடியே 22 இலட்சம் ரூபாயும், 31,744 தனிநபர்களுக்கு, 184 கோடியே 37 இலட்சம் ரூபாயும் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 22,083 இளைஞர்களுக்கு, 33 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், 30 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில், உலக வங்கியின் நிதியுதவியுடன், 918 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஊரகப் பகுதிகளில், குறிப்பாக, பெண்கள், பழங்குடியினர், ஆதி திராவிடர் மற்றும் மாற்றுத் திறனாளிகளை, தொழில்முனைவோர்களாக ஊக்குவிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான, உழைக்கும் மகளிருக்கான இரு சக்கர வாகனத் திட்டத்தின்கீழ், 2019–2020 ஆம் ஆண்டில், 1 இலட்சம் மகளிருக்கு, அம்மா இரு சக்கர வாகனம் வழங்க, 252 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 2,07,283 மகளிருக்கு, இரு சக்கர வாகனம் வாங்க, மானியமாக, 468 கோடியே 75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை இப்பேரவையில் மிகவும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம். இந்த scheme முடிந்துவிட்டது. கடைசியாக உள்ளதை மட்டும் சொல்கிறேன். 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தமிழ்நாட்டில் உள்ள 12 கடலோர மாவட்டங்களில், 563 கோடியே 18 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில், 238 கடலோர ஊராட்சிகளில் வாழும், 10 இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை இத்திட்டம் மேம்படுத்தியுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை; புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் ஒருங்கிணைந்த சமூகப் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்திடவும், அரசின் முதன்மைத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்திடவும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையை 16–5–2011 அன்று உருவாக்கினார்கள். தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்ட முதன்மைத் திட்டங்களை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முனைப்புடன் கண்காணித்து வருகிறது. கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, கறவைப் பசு, வெள்ளாடு/செம்மறி ஆடுகள் மற்றும் ஊரக புழக்கடை கோழி வளர்ப்புத் திட்டம், மகளிருக்கான திருமண உதவித் திட்டம், கருவுற்ற தாய்மார்களின் நலன் காக்க, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், ஏழைகளின் நல்வாழ்வைப் பாதுகாக்க, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கிராமப்புற மக்களின் வாழ்க்கை மேம்பட, முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம், பணிபுரியும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாட்டை சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சிறப்புடன் கண்காணித்து வருகிறது. விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையால், நேரடியாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம், இல்லத்தரசிகளுக்கு 7,686 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1 கோடியே 75 இலட்சம் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டு, மகத்தான சாதனை படைக்கப்பட்டது. மலைப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு மின்விசிறிக்குப் பதிலாக மின்காந்த அடுப்புகள் வழங்கப்பட்டன. மேலும், மாணவ, மாணவியர்களின் கல்வித்தரம் மேம்பட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டமும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால், நேரடியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அரசின் பொற்கால ஆட்சியில், இதுவரை 7,257 கோடியே 61 இலட்சம்

ரூபாய் மதிப்பில், 51 இலட்சத்து 66 ஆயிரத்து 526 மடிக்கணினிகள் வழங்கப்பட்டு, வரலாற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 2020–2021 ஆம் ஆண்டில், சுமார் 5 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் பொருட்டு, 949 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றி காலத்தின் அருமையால், சுருக்கமாகவே என்னால் சொல்ல முடிந்தது. சாதனைகளை விளக்கமாகச் சொன்னால், நேரம் போதாது. இந்தத் துறை மட்டுமல்ல; மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் அனைத்துத் துறைகளும், மக்கள் நலத் திட்டங்களின், சாதனைக் களஞ்சியமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களது தலைமையிலான, மாண்புமிகு அம்மாவின் செயல்திறன்மிக்க இந்த அரசு, மக்களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி, சாதனை படைப்பதில், மகத்தான சாதனை படைத்து வருகிறது. “நல்ல நல்ல நிலம் பார்த்து, நாமும் விதை விதைக்கணும்” என்ற புரட்சித் தலைவரின் பொன் வரிகளுக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், குடிமராமத்து என்றும், காவேரி சிறப்பு வேளாண் மண்டலம் என்றும், ஏரி குளங்களில் வண்டல் மண் எடுத்து வழங்குவது என்றும், நல்ல பல திட்டங்களை வகுத்து செயல்படுகின்ற காரணங்களால், விவசாய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு இன்றைக்கு மகத்தான சாதனைகளைப் புரிந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாகத்தான், மத்திய அரசு, தமிழ்நாட்டை, அகில இந்திய அளவில் முதன்மை மாநிலமாகத் தேர்வு செய்து, பெருமைப்படுத்தியுள்ளது. இந்தியாவிலேயே ‘Number 1’ மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பெற்றுத் தந்ததன்மூலம், நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி, பெரும் பதவிகள் தந்து அழகு பார்த்த, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருமையும் புகழும் சேர்த்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல்எனும் சொல்”

என்ற வள்ளுவரின் குறளை சற்றே மாற்றி,

“இவன் தாய், எந்நோற்றான் கொல்எனும் சொல்” என்று சொல்லும்படி, நம்மையெல்லாம் வாழவைத்த தெய்வத்தாய் அம்மா அவர்களுக்கு, முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பெருமை சேர்த்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், ஆட்சியைச் சிறப்புற நடத்துவதால்தான், மத்திய அரசும், தேசிய விருதுகளை தமிழகத்திற்கு அள்ளிக் கொடுத்து, நமது அரசை சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு மக்களிடம் பெற்றுவரும் பெரும் செல்வாக்கை (மேசையைத் தட்டும் ஒலி) அழித்துவிடலாம் என்றும், பொய்யான குற்றங்குறைகளை அள்ளித் தெளித்து மக்களை ஏமாற்றி விடலாம் என்றும் இங்குள்ள எதிர்க்கட்சியினர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–30

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு தொடர வேண்டும் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் அனைவரின் விருப்பம்! மக்கள் விருப்பமே மகேசன் விருப்பம்; மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதை எதிர்க்கட்சிகள் மனதில்கொள்ள வேண்டும். தமிழக மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப வரவிருக்கும் 2021 சட்டமன்றப் பொதுத்தேர்தலிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே மகத்தான வெற்றி பெறும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியே மூன்றாவது முறையும் தொடரும், தொடரும், தொடரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

மேலும், இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிருவாக ஆணையர், ஊரக வளர்ச்சி இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் அனைத்துத் துறைத் தலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நல்வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த எங்கள் குலதெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதங்களில் நன்றியினைக் காணிக்கையாக்கி எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைப்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைகளின் சார்பில் 67 புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

1) திருச்சி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.238 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாளசாக்கடைத்திட்டத்தைச்செயல்படுத்தவும்,அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் ஏற்கெனவே செயல்பாட்டிலிருந்து பழுதடைந்துள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தைப் புனரமைப்பு செய்யவும், ரூ.238 கோடி மதிப்பீட்டில் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2) திருச்சி நகர அபிவிருத்தி சார்ந்த பகுதிகளுக்கான குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள் ரூ.53.79 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் சீரான முறையில் தடையின்றி குடிநீர் வழங்குவதற்கும், கடைக்கோடி இணைப்பு வரை சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்வதற்கும், நுகர்வோருக்குத் தேவைப்படும் குடிநீரின் அளவைக்

கணக்கிட்டு வழங்குவதற்கும், குடிநீர் விநியோகப் பணியினைச் சீரமைப்பதற்கும் ரூ.53.79 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

3) மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள 40 குளங்கள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டுவரும் குளங்களில், 40 குளங்களை சீரமைக்கும் பணிகள் மூலதன மானிய நிதி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ கூட்டாண்மை சமூகப் பொறுப்பு ஆகிய திட்டங்களின்கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

4) ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகளில் ரூ.127.75 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர மேலாண்மையில் புதிய மாதிரிகள்/அணுகுமுறைகளை கையாள்வதற்காக, ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகளில் கடந்த 5 ஆண்டுகளாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் ஒரு பகுதியாக, இம்மாநகராட்சிகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நகர்ப்புற வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் TNSUDP–ன்கீழ் ரூ.127.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். அதன் விவரம் பின்வருமாறு:

1. ஈரோடு மாநகராட்சியில் பன்னீர்செல்வம் பூங்கா மற்றும் பெரியார் நகர் பகுதியில் பிரதான சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்துதல், சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல், பேருந்து நிலைய நிறுத்தங்களை நவீனப்படுத்துதல் மற்றும் சாலையோர கடைகளை முறைப்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.33.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2. வேலூர் மாநகராட்சியில் காந்தி நகர் பகுதியில் 10 சாலைகளை மேம்படுத்துதல், கால்வாய் சீரமைப்பு மற்றும் இதர பணிகள் ரூ.65.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

3. ஓசூர் மாநகராட்சியில் ராமநாயக்கன் ஏரி மற்றும் அதன்மேல் பகுதியில் உள்ள 3 ஏரிகளையும், அவற்றின் வாய்க்கால்களையும் தூர்வாருதல் மற்றும் புனரமைப்பு செய்தல் ஆகிய பணிகள் ரூ.28.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

5) 34 நகரங்களுக்கு கழிவுநீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சுத்தம் செய்ய 34 ரோபோட் இயந்திரங்கள் ரூ.35 கோடி செலவில் வாங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழிவுநீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவது மற்றும் சுத்தம் செய்வதற்கு பாதாள சாக்கடைத் திட்டம் முடிவுற்று பயன்பாட்டில் உள்ள 34 நகரங்களில், ஒரு நகரத்திற்கு ஒரு ரோபோட் இயந்திரம் வீதம், 34 இயந்திரங்கள் ரூ.35 கோடி செலவில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் வாங்கப்படும்.

6) கோயம்புத்தூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.175 கோடி மதிப்பீட்டில் 152.95 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடைத் திட்டம் 60 வார்டுகளில் ரூ.469.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக, விடுபட்ட பகுதிகளில் சுமார் 152.95 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின்மூலம் ரூ.175 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

7) மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேங்கி இருக்கும் குப்பைகளை அகற்றி உயிரி அகழ்வு முறையில் (Bio–Mining) நிலங்கள் மீட்டெடுக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 86 நகராட்சிகள் மற்றும் 9 மாநகராட்சிகளில் தேங்கி இருக்கும் குப்பைகளை

உயிரி அகழ்வு முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுத்தல் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக, எஞ்சியுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் வரும் நிதியாண்டில் பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு தேங்கி இருக்கும் குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி, நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8) மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் பல்வேறு பகுதிகளில் சேகரமாகும் குப்பைக் கழிவுகள்/திடக் கழிவுகள் அகற்றுதல் போன்ற அத்தியாவசிய அடிப்படைப் பணிகளில் ஈடுபட்டு வருவதால், அப்பணியாளர்களின் உடல்நலம் மட்டுமின்றி, அவர்களது குடும்பத்தினரின் உடல் ஆரோக்கியத்தையும் கருத்தில்கொண்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

9) மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களின் குடும்ப நலத்தினை கருத்தில்கொண்டு, அவர்களது வாரிசுகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும்பொருட்டு, அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.

10) ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தலா ஒரு கழிவறை வீதம் அனைத்து மாநகராட்சிகளிலும் குளிரூட்டப்பட்ட கழிவறைகள் பரீட்சார்த்த முறையில் (Pilot basis) அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

நவீன வசதிகளுடன்கூடிய குளிரூட்டப்பட்ட கழிவறைகள், ஒரு மாநகராட்சிக்கு ஒரு கழிவறை வீதம், அனைத்து மாநகராட்சிகளிலும் பரீட்சார்த்த முறையில் (Pilot basis) பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

11) பெருநகர சென்னை மாநகராட்சியின் பாதசாரி போக்குவரத்து நெரிசலை எளிதாக்க, 7 இடங்களில் நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடை மேம்பாலம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகராட்சியின் எதிர்கால தேவைகளுக்கு நிலையான போக்குவரத்து மேலாண்மை முறையை வழங்கும் நோக்கில், பொது மக்கள் எளிதாக சாலையை கடக்கும்வண்ணம், பாதசாரி போக்குவரத்து நெரிசலை எளிதாக்க சென்னை மாநகரின் முக்கியமான சாலை சந்திப்புகளான 1. லஸ் சர்ச் சாலை–லஸ் கார்னர், 2. எல்.பி. சாலை–அடையாறு பணிமனை, 3. சர்தார் படேல் சாலை–அண்ணா பல்கலைக்கழகம், 4. ஆற்காடு சாலை–விஜயா ஃபோரம் மால், 5. அண்ணாநகர் 2–வது நிழற்சாலை–ஐயப்பன் கோயில், 6. அண்ணா நகர் 3–வது நிழற்சாலை–கந்தசாமி கல்லூரி, 7. புரசைவாக்கம் நெடுஞ்சாலை–அபிராமி மெகா மால் ஆகிய 7 இடங்களில் படிக்கட்டுகள் மற்றும் நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடைமேம்பாலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து ரூ.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

12) பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி, 200 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 9 முதல் 15 வரை சேகரிக்கப்பட்ட குப்பைகளை உயிரி அகழ்வு தொழில்நுட்பம் முறையில் அகற்றி, 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை மீட்டெடுப்பதற்கு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

13) பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த முன்மாதிரியான நவீன வணிக வளாகங்கள் கட்டுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் உள்ள 153 பழைய வணிக வளாகங்களை இடித்துவிட்டு, அந்த இடங்களில் நவீன முறையில் பல அடுக்கு தள வாகனங்கள் நிறுத்தம், அரசு அலுவலகங்கள், கடைகள், உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்குப் பகுதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய சிறந்த முன்மாதிரியான நவீன வணிக வளாகங்கள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

14) சென்னை மாநகரில் பல்வேறு நிலையில் வெளியேறும் நீரின் மறுசுழற்சி பயன்பாடு பற்றிய கணக்கெடுக்கும் பணி ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகரில் குழாய்கள்மூலம் வழங்கப்படும் குடிநீர் மற்றும் நிலத்தடி நீர்மூலம் இதர பயன்பாடுகளுக்கான தேவைகளை கண்டறிந்து, சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக, சென்னை மாநகரில் உள்ள அனைத்துக் கட்டடங்களிலும் பயன்பாட்டில் உள்ள கிணறுகளின் நிலத்தடி நீர் பயன்பாடு தகவல், மழைநீர் கட்டமைப்புகளின் தற்போதைய நிலை பற்றிய தணிக்கை மற்றும் வணிகக் கட்டடங்கள் சமையலறை/குளியலறையிலிருந்து வெளியேறும் நீர் மறு சுழற்சி பயன்பாடு ஆகியவற்றைக் கணக்கெடுக்கும் பணிகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் வாரிய நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும்.

15) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு அதிநவீன புதுமை தொழில்நுட்ப ஆய்வகம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒரு கட்டடத்தின் நீண்ட ஆயுள் திறனானது, அதில் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்களின் தரத்தைச் சார்ந்துள்ளது. அத்தகைய

கட்டுமானப் பொருட்களான மணல், செங்கல், இரும்பு கம்பி, ஜல்லி, நீர் ஆகியவற்றின் தரத்தை ஆய்வு செய்வதற்கு இந்திய தர நிர்ணய விதிமுறைகளின்படி பல்வேறு அளவுகூறு சோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை உள்ளடக்கிய அதிநவீன புதுமை தொழில்நுட்ப ஆய்வகம் ஒன்று மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

16) வில்லிவாக்கத்தில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் "நீர் கருத்துப் பூங்கா மற்றும் அருங்காட்சியகம்" முதற்கட்டமாக ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலான அனைவருக்கும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாடுகளான நீராதாரங்களைத் திரட்டுதல், குடிநீர் பகிர்மானம் மற்றும் கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு, குடிநீர் மேலாண்மை, நீர் சேகரிப்பு மற்றும் உபயோகம் ஆகிய பல்வேறு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், வில்லிவாக்கத்தில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் "நீர் கருத்துப் பூங்கா மற்றும் அருங்காட்சியகம்" அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, வாரிய நிதியின்கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

17) இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இராணிப்பேட்டை மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்பேடு மற்றும் 88 ஊரகக் குடியிருப்புகளுக்கு 52,000 மக்கள் பயன்பெறும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

18) மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 391 ஊரகக் குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 4 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 391 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் விரைவில் அமையவிருக்கும் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகம் மற்றும் மருத்துவக் கல்லூரிக்கான 5,54,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

19) ஒட்டன்சத்திரம் நகராட்சி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் திண்டுக்கல், திருப்பூர் ஆகிய மாவட்டங்களின் வழியோர ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த 6,19,000 மக்கள் பயன்பெறும் வகையில் திருமூர்த்தி அணையை நீராதாரமாகக் கொண்டு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

20) ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஊராட்சியில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஊராட்சியிலுள்ள 39 ஊரகக் குடியிருப்புகளுக்கான 40,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

21) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்திற்குட்பட்ட 49 ஊரகக் குடியிருப்புகளுக்கான 25,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

22) திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களுக்கான புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.151 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 782 ஊரகக் குடியிருப்புகளுக்கான 2,10,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.151 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

23) திண்டுக்கல் மாநகராட்சி, 6 பேரூராட்சிகள், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.72.65 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சி, 6 பேரூராட்சிகள், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 816 ஊரகக் குடியிருப்புகளுக்கான 7,14,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை மேம்படுத்தி குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.72.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

24) ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.48.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஒன்றியங்களைச் சார்ந்த 6 ஊராட்சிகளிலுள்ள 125 ஊரகக் குடியிருப்புகளுக்கான 49,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.48.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

25) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.275 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 479 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.275 கோடி மதிப்பீட்டில் 1,80,000 மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

26) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி மற்றும் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி மற்றும் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 23 ஊரகக் குடியிருப்புகளுக்கான 20,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

27) திருச்சி மாவட்டம், லால்குடி மற்றும் புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், லால்குடி மற்றும் புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 200 ஊரகக் குடியிருப்புகளுக்கான 1,26,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

28) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்கள், திருவிடைமருதூர் மற்றும் வேப்பத்தூர் பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றியங்களைச் சார்ந்த 124 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர், வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கான 98,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

29) 8 பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து ரூ.131 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட களக்காடு, நாங்குநேரி, ஏர்வாடி, மூலக்கரைப்பட்டி, திருக்குருங்குடி மற்றும் ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட வடக்கு வள்ளியூர், திசையன்விளை மற்றும் பணகுடி ஆகிய 8 பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து, ரூ.131 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

30) 8 பேரூராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தனிக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.25.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 8 பேரூராட்சிகளில் உறைகிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, குடிநீர்க் குழாய்கள் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் போன்ற குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மற்றும் தனிக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.25.60 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

31) ரூ.40.80 கோடி மதிப்பீட்டில் 17 பேரூராட்சிகளில் உள்ள சந்தைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கிலும், அவர்கள் தங்களது பொருட்களை ஒரே இடத்தில் விற்பனை செய்யவும், அதன்மூலம் பேரூராட்சிகளின் வருவாயினைப் பெருக்கிட மூலதன மானிய நிதியின்கீழ்

ரூ.40.80 கோடி மதிப்பீட்டில், 17 பேரூராட்சி சந்தைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

32) 36 மாவட்டங்களில் ஒரு பேரூராட்சிக்கு ஒரு எரியூட்டும் கலன் வீதம், 36 எரியூட்டும் கலன்கள் (Incinerator) ரூ.18 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திடக் கழிவு மேலாண்மைப் பணிகளை மேலும் மேம்படுத்தும் விதமாக பேரூராட்சிகளில் தினசரி சேகரிக்கப்படும் திடக் கழிவுகளில் மக்காத உலர் கழிவுகளை (Dry waste) பாதுகாப்பான முறையில் கழிவு செய்ய 36 மாவட்டங்களில், ஒரு பேரூராட்சிக்கு ஒரு எரியூட்டும் கலன் வீதம், 36 எரியூட்டும் கலன்கள் (Incinerator) தொகுப்பு முறையில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 4–35

33) ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் 8 பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இயற்கை எய்தியவர்களைத் திறந்தவெளியில் எரியூட்டுவதால் கார்பன் டை ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு, டயாக்சின் போன்ற நச்சு வாயுக்கள் வெளியேறி, சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டு வருவதனைத் தவிர்க்கும் பொருட்டு, 8 பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

34) 7 பேரூராட்சிகளில் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 7 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பேருந்து நிறுத்துமிடம், நடைமேடைகள், குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் பாலூட்டும் அறை போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

35) 50 பேரூராட்சிகளில் உரக் கிடங்குகளில் உள்ள பழைய குப்பைக் கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி, ரூ.20.57 கோடி மதிப்பீட்டில் நிலங்கள் மீட்டெடுக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மூன்றாம் கட்டமாக 50 பேரூராட்சிகளில் உள்ள உரக் கிடங்குகளில் தீர்வு செய்யப்படாமல் உள்ள பழைய குப்பைக் கழிவுகளை ரூ.20.57 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்வு முறையில் (Bio–Mining) முழுமையாக அகற்றி, நிலங்களை மீட்டெடுத்து, வள மீட்புப் பூங்காக்களாகத் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

1) ஊரகப் பகுதிகளில் 1 கிலோ மீட்டருக்கும் குறைவான நீளமுள்ள சிறிய ஊரக இணைப்புச் சாலைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் 1 கிலோ மீட்டருக்கும் குறைவான நீளமுள்ள சிறிய ஊரக இணைப்புச் சாலைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

2) தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 850 உறிஞ்சுக் குழிகள் 161 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்திடவும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருக்களில் திரவக் கழிவுகள் தேங்கி, நோய்த் தொற்று ஏற்படாது பாதுகாத்திடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் 1,45,000 தனிநபர் உறிஞ்சுக் குழிகள் மற்றும் 17,850 சமுதாய உறிஞ்சுக் குழிகள், ஆக மொத்தம் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 850 உறிஞ்சுக் குழிகள் 161 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

3) ஊரகப் பகுதிகளில் 72 இலட்சம் பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணிகள் 207 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

ஊரகப் பகுதிகளைப் பசுமைமயமாக்கவும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் காரணிகளைக் கட்டுப்படுத்திடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு நிலங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் 2020–2021 ஆம் நிதியாண்டில் 72 இலட்சம் பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணிகள் 207 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

4) ஊரகப் பகுதிகளில் 180 கிலோ மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் வடிகால் அமைப்பு 78 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்திடவும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருக்களில் திரவக் கழிவுகள் தேங்கி, நோய்த் தொற்று ஏற்படாது பாதுகாத்திடவும், முறையான வடிகால் வசதியை ஏற்படுத்திடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் கிராம ஊராட்சிகளிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் 180 கிலோ மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் வடிகால் அமைப்பு 78 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5) ஊரகப் பகுதிகளில் 100 உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் 14 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களைப் பாதுகாக்க போதிய சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் 100 உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் தலா 14 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 14 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6) ஊரகப் பகுதிகளில் 200 பால் சேகரிக்கும் கூடங்கள் 30 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

கூட்டுறவு பால் சங்கங்களுக்கு பால் சேகரிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் 200 பால் சேகரிக்கும் கூடங்கள் ஒவ்வொன்றும் 15 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 30 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

7) ஊரகப் பகுதிகளில் 100 கிராம சந்தைகள் 41 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டும் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் 100 கிராம சந்தைகள் தலா 41 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 41 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8) ஊரகப் பகுதிகளில் 100 கதிரடிக்கும் களங்கள் 5 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

விவசாய விளைபொருட்களை உலர வைக்கவும், மதிப்பூட்டுவதற்கும், விவசாயிகளின் வருவாயினை இரட்டிப்பாக்கும் நோக்கிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் 100 கதிரடிக்கும் களங்கள் தலா 5 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 5 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

9) பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் 550 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளின் காலமுறை பராமரிப்புப் பணிகள் 66 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் 5 ஆண்டு காலம் தொடர் பராமரிப்பு முடிவுற்ற 550 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளின் காலமுறை பராமரிப்புப் பணிகள் 66 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதில், மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.40.07 கோடி மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.26.71 கோடி ஆகும்.

10) ஊராட்சி ஒன்றியங்களுக்காக 15 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் 15 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

11) சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரக வளர்ச்சித் துறை மேற்கொள்ளும் பணிகளின் தரத்தினை உறுதி செய்யும் வகையில், 2020–2021 ஆம் நிதியாண்டில், சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

12) மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 ஆம் நிதியாண்டிலும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்

மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில், அரசால் 2019–2020 ஆம் ஆண்டு முதல் மீள அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டமானது 2020–2021 ஆம் நிதியாண்டிலும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

13) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்க, 10 மாவட்டங்களில் மாவட்ட பயிற்சி வள மையக் கட்டடங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி அளிக்கும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், 10 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி வள மையங்களுக்கான கட்டடங்கள் தலா 50 இலட்சம் ரூபாய் வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

14) 12 மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்

தமிழகத்தின் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் மேல்நிலை அடுக்காக மாவட்ட ஊராட்சிகள் அமைந்துள்ளன. அத்தகைய மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மக்கள் பணியினைத் திறம்படச் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள 12 மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

15) 388 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும்

தமிழகத்தின் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் இடைநிலை அடுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்துள்ளன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மக்கள் பணியினைத் திறம்படச் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்களும் மற்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட 3 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

16) கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் குடிநீர் விநியோகத்தில் மிக முக்கியப் பங்காற்றுகின்றனர் என்பதுடன், பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் விதமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

17) திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 3,600 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்து, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாகத் தரம் பிரித்து, பாதுகாப்பாக அகற்றும் உன்னதமான பணியினை மேற்கொள்வதாலும், அதன்மூலம் கிராமங்கள் சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரிக்கப்படுவதைக் கருத்தில்கொண்டும், அவர்களை ஊக்குவிக்கும் விதமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 3,600 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

18) ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனங்களில், 7 இடங்களில் மெய்நிகர் வகுப்பறைகள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

பயிற்சியாளர்கள் காணொலி கலந்துரையாடல்மூலம் வல்லுநர்களின் பயிற்சிகளில் கலந்து கொள்ளவும், ஊரகப் பகுதிகளில் தரமான பயிற்சியாளர்கள்/நிபுணர்களின் பற்றாக்குறையைப்

போக்கவும், பயண நேரம் மற்றும் பிற செலவுகளைக் குறைப்பதுடன், வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து அதிக எண்ணிக்கையிலான பயிற்சியாளர்களுக்கு கற்றுக் கொடுக்கும் பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பயிற்சி) ஆணையரகம், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் ஆகிய 7 இடங்களில் மெய்நிகர் வகுப்பறைகள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

19) ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனங்களில், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கற்றவர்களை மையமாகக் கொண்ட பங்கேற்பு முறையிலான பயிற்சி முறை அறிமுகப்படுத்தப்படும்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் 31 மாவட்ட ஊராட்சி வள மையங்களின்மூலம் அளிக்கப்படும் பயிற்சிகளை மேலும் சிறப்புடன் அளிக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1 கோடி ரூபாய் செலவினத்தில் கற்றவர்களை மையமாகக் கொண்ட பங்கேற்பு முறையிலான பயிற்சி முறை (Participatory Training Method) அறிமுகப்படுத்தப்படும்.

20) நீர் மேலாண்மை மற்றும் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு குறித்து அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு திறன் பயிற்சிகள் வழங்கிட, 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர் மேலாண்மை அறிவுசார் மையம் அமைக்கப்படும்

மாநில அரசின் நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் மற்றும் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புத் திட்டங்களின்கீழ் செயல்படும் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்குத் தேவையான திறன் பயிற்சியினை வழங்கிட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர் மேலாண்மை அறிவுசார் மையம் (Key Resource Centre) அமைக்கப்படும்.

21) கிராமப்புற இளைஞர்களுக்கு தன்னார்வ சமூக சேவை குறித்த 3 மாத சான்றிதழ் படிப்பு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிராமப்புற இளைஞர்களுக்கு தலைசிறந்த நிறுவனங்களுடன் இணைந்து தன்னார்வ சமூக சேவை குறித்த 3 மாத சான்றிதழ் படிப்பு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும்.

22) வட்டார மற்றும் ஊராட்சி அளவில் பல்லுயிர் பன்மம் மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் உள்ள வட்டார மற்றும் ஊராட்சி அளவில் பல்லுயிர் பன்மம் மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு இயற்கையைப் பாதுகாக்கும் வகையில், மக்கள் பல்லுயிர் பன்மம் பதிவேட்டை(PBR) தயாரிக்கத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

23) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் செயல்படும் 8,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் 12 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் அமைக்கப்படும் புதிய சுய உதவிக் குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், உள்கடன் வழங்குதலை அதிகப்படுத்தவும், அதிக அளவிலான வங்கிக் கடன் இணைப்பு பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதி ஆண்டில் 8,000 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 12 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

24) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் செயல்படும் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு

50,000 ரூபாய் வீதம் மொத்தம் 75 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், குழு உறுப்பினர்களின் வருமானத்தைப் பெருக்கிடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 75 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

25) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைப்பதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தினை உறுதி செய்யவும், இரத்த சோகை குறைபாட்டினை சரிசெய்யவும், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் கீரை, முருங்கை, பப்பாளி, கறிவேப்பிலை, கொய்யா மற்றும் சப்போட்டா போன்ற சத்து மிகுந்த பலன் தரும் 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்கப்படவுள்ளது. இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் விதமாக 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

26) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், 6 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 100 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்

இயற்கைப் பண்ணையம் என்பது இயற்கை வழியில் கிடைக்கக்கூடிய உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளைக் கொண்டு சாகுபடி செய்வதாகும். இயற்கைப் பண்ணைய உணவுப் பொருட்களுக்கு மக்களிடம் வரவேற்பும், சந்தையில் அதிக விலையும் கிடைப்பதால் இயற்கைப் பண்ணையத்தை ஊக்குவிக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் 6 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 10,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 100 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

27) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் செயல்படும் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் நகர்ப்புற ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், வாழ்வாதார மேம்பாட்டு வாய்ப்புகளுக்கு வங்கிக் கடன் வழங்குவதை அதிகப்படுத்தவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

28) 15,000 நகர்ப்புற இளைஞர்களுக்கு 49 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக நகர்ப்புறத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், 15,000 இளைஞர்களுக்கு 49 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

29) சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவாக 'அம்மா விருதுகள்' வழங்கப்படும்

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பகுதி

அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவாக, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பரிசுத்தொகையுடன்கூடிய 'அம்மா விருதுகள்' வழங்கப்படும்.

30) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறமையை வளர்க்கவும், ஒற்றுமையை வெளிப்படுத்தவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில், மாவட்ட, வட்ட மற்றும் நகர்ப்புற அளவில் கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

31) சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் உறுப்பினர்கள், வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் பட்டறிவுப் பயணம் செல்வதற்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

மகளிர் சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பகுதி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய செயல்பாட்டினை மேலும் மேம்படுத்துவதற்கு ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் சிறப்பாகச் செயல்படும் குழுக்களைப் பார்வையிடவும், பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளவும், 2020–2021 ஆம் நிதியாண்டில், 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அலுவலர்கள்/அலுவலகப் பயன்பாட்டிற்கு ரூ.44,16,312/– செலவில் ஆறு புதிய வாகனங்கள் வாங்கப்படும்

அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா

அவர்களால் 2011 மே மாதம் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை உருவாக்கப்பட்டது. மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல் திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள 2011 ஆம் ஆண்டு இத்துறை தொடங்கப்பட்டபோது அலுவலர்களுக்கும் மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கும் வாகனங்கள் வாங்கப்பட்டன. இவ்வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதால், இத்துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இத்துறைக்கு புதிய வாகனங்கள் வாங்க வேண்டியுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கு ரூ.44,16,312/– (ரூபாய் நாற்பத்து நான்கு இலட்சத்து பதினாறாயிரத்து முன்னூற்றுப் பன்னிரெண்டு மட்டும்) செலவில் ஆறு புதிய வாகனங்கள் வாங்கப்படும்.

பிற்பகல் 4–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள 774 வெட்டுத் தீர்மானங்கள் மற்றும் ஆலோசனைகள், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து, நான் அளித்துள்ள பதிலுரை மற்றும் விளக்கத்தின் அடிப்படையில் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச அனுமதி அளித்ததற்கு மிக்க நன்றி. நான் படித்த காலத்தில் எந்தக் கல்லூரியிலும் Class–ல் 3 hours உட்கார்ந்திருந்ததே கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களுக்குத் தெரியும்; 2 hours உட்கார்ந்திருப்போம்; பிறகு போய்விடுவோம்.

ஆனால், எங்களை 7 மணி நேரம் உட்கார வைத்துவிட்டீர்களே Sir! (குறுக்கீடு) பரவாயில்லை, உங்களுக்காகத்தான் உட்கார்ந்திருந்தோம்.

முதலாவதாக, எங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி கொடுக்கிறீர்கள். அதில், 20 இலட்சம் ரூபாயை R.O. Plant போட்டுக்கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தீர்கள். பின்னர், R.O. Plant–க்கு அந்த நிதியைப் பயன்படுத்த வேண்டாம் என்று சொல்லி நிறுத்திவிட்டீர்கள். R.O. Plant போடவில்லையென்றால், வேறு என்ன செய்யலாம் என்பதற்கான மாற்றுவழியையும் எங்களுக்கு சொல்லவில்லை. எனவே, இதுதொடர்பாக சர்க்காரிடமிருந்து உத்தரவு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். என்னைக் கேட்டீர்களென்றால், எல்லா இடங்களிலும் R.O. Plant போடச் சொல்லுங்கள் என்று சொல்வேன். மக்கள் R.O. water குடிப்பார்கள். வேறு எதற்காக அந்த நிதி? மீண்டும் மீண்டும் அந்த நிதியிலிருந்து வேறு எதையாவது கட்டச் சொல்கிறீர்கள்; அது வீணாகப் போகிறது. R.O. Plant கிராமங்களுக்கும் தேவை. எனவே, அந்த நிதியிலிருந்து R.O. Plant அமைத்துக் கொடுக்க அனுமதி அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி, ஜாக்டோ–ஜியோ வேலைநிறுத்தத்தில் பங்கேற்ற அரசு ஊழியர்களின்மீது பிறப்பிக்கப்பட்ட 17 (b) குற்றச்சாட்டுகளை இரத்து செய்ய வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கணினி உதவியாளர் பணியிடங்களை வரன்முறை செய்ய வேண்டும்.

மூன்றாவதாக, பணி மேற்பார்வையாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். நான்காவதாக, ஊராட்சி செயலாளர்கள் அனைவருக்கும் அரசு ஊழியர்கள் பெறும் சலுகைகளை வழங்க வேண்டும். மேற்காணும் கோரிக்கைகள் குறித்த பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஏற்கெனவே வேலை பார்த்து, சுமார் ஆயிரம் பேர் பணி ஓய்வு பெற்றிருக்கிறார்கள். ஊதிய நிலுவைத் தொகை என்ற வகையில், சுமார் 300 கோடி ரூபாய் அவர்களுக்குச் சேர வேண்டியுள்ளது. அதை வழங்குவதற்கு

அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். காலியாகவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (OHT) இயக்குபவர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஏற்கெனவே பல ஆண்டுகளாக பணிபுரிபவர்களை அரசு ஊழியர்களாக நியமனம் செய்ய வேண்டும். முழு சுகாதாரத் திட்டத்தின் வட்டார, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் தீர்ப்பின்படி, ஊராட்சி செயலாளர் காலிப் பணியிடங்களை தற்போது ஊராட்சி ஒன்றிய தலைவரே நியமனம் செய்துகொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சி மன்ற நியமனக் குழுவினை சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும். மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் நிதியினை அந்தந்த அமைப்புகளே கையாள வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டம், அட்டவணை 11–ல் குறிப்பிடப்பட்டுள்ள 29 வகையான பொறுப்புகளையும், கடமைகளையும் ஊராட்சி அமைப்புகளுக்கே வழங்க வேண்டும். ஊராட்சி அமைப்புகளுக்கு, மாநில வருவாயில் 10 சதவிகிதம் ஏற்கெனவே வழங்கப்படுகிறது. அதை இந்த அரசு உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், இங்கே 3 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கோடி ரூபாயை உயர்த்தி வழங்கினார்கள். அதற்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஆனால், இந்த வருடம் 1 கோடி ரூபாயையாவது நீங்கள் உயர்த்திக் கொடுப்பீர்களா என்று நான் கேட்கிறேன். எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம். . . (குறுக்கீடு) தொகுதி மேம்பாட்டு நிதி 3 கோடி ரூபாய் என்பதை 1 கோடி ரூபாய் உயர்த்தி 4 கோடி ரூபாயாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் 5 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. அங்கு எந்தவிதமான condition–ம் கிடையாது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் 1 கோடி ரூபாயை எந்தப் பணிக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு 1 கோடி ரூபாய் வரை கொடுக்கலாம். 5 கோடி ரூபாய் கேரளாவில் கொடுக்கிறார்கள். நமது

தமிழகம் அதைவிட சிறந்த மாநிலம்தான், உயர்ந்த மாநிலம்தான், வளர்ந்த மாநிலம்தான். எனவே, நீங்கள் நிச்சயமாக அதை உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்த 3 கோடி ரூபாய் என்பதை 5 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுங்கள், இந்த வருடத்தில் 4 கோடி ரூபாய் என்ற அளவிற்காவது உயர்த்திக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

எனது தொகுதியில், குளச்சல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லை. இந்த முறை கண்டிப்பாக பாதாள சாக்கடைத் திட்டத்தை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிப் பகுதிகளில், அதாவது 60–க்கும் மேற்பட்ட இடங்களில், பொது மக்கள் நெருக்கமாக வசிக்கக்கூடிய பகுதிகளில், பொது ஒதுக்கீட்டு இடங்களில், பூங்காக்களில், விளையாட்டு மைதானங்களில் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கக்கூடிய திட்டத்தைத் தொடங்குவதற்கு மாநகராட்சி அதற்குண்டான திட்டங்களைத் தயாரித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தச் செயல்பாடு துவக்கப்பட்டால், மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் மிகப் பெரிய கொடிய நோய்கள் பரவக்கூடிய ஓர் அபாயம் இருக்கிறது. ஏற்கெனவே, நகரத்திலுள்ள குப்பைகள் ஆங்காங்கே குவிந்து கிடக்கின்றன. ஆகவே, அதுபோன்ற செயல்பாட்டை மாநகராட்சி நிருவாகம் செயல்படுத்தக் கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4–45

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பரமசிவம், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: எதிர்க்கட்சிக் கொறடா உள்ளிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் வைத்த பல்வேறு கோரிக்கைகளெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். கோயம்புத்தூர், சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மட்டும் அந்த 60 இடங்களிலே குப்பை சுத்திகரிப்பு நிலையத்தைப்பற்றிச் சொன்னார்கள். நீங்கள் ஊருக்கு வெளியிலே ஒரு குப்பைக் கிடங்கு அமைத்தாலும் போராட்டம் செய்கிறீர்கள். ஊருக்குள் குப்பைக் கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுத்தாலும் போராட்டம் செய்கிறீர்கள். இந்த நிலையில் எங்கேதான் அமைக்க முடியும்? இரண்டுக்கும் நீங்களே போராட்டம் செய்திருக்கிறீர்கள். அதாவது, மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து, வழங்கக்கூடியவகையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வர வேண்டும். பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில்கொண்டு சில இடங்களில் நாம் வேண்டாமென்று நிறுத்திவிடுகிறோம். பாதுகாப்பில்லாமல், மாநகராட்சியின் சில இடங்களில்தான் செய்யப்படுகின்றன. அதற்கு நீங்களும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, அனைத்து உறுப்பினர்களும் சொன்ன கோரிக்கைகளெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,868,35,96,000/–, மூலதனக் கணக்கில் ரூ.8,116,34,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.555,41,89,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 42– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.19,679,25,59,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,906,22,75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.15,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.975,85,82,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17–3–2020), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்திற்குப் புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு மற்றும் கனிம விற்பனையாளர்கள் விதிகளை இயற்றியது குறித்து தொழில் (எம்.எம்.டி1) துறையின் 25–1–2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 19–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதலும் முறைப்படுத்துதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு தலைவரை நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (A1)த் துறையின் 5–7–2019 ஆம் நாளிட்ட அரசாணை (ப) எண் 115–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53. (i) சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்தும் மற்றும் (ii) கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் ஆயமன்றம்) கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (A1)த் துறையின் 8–7–2019 ஆம் நாளிட்ட அரசாணை (ப) எண் 116–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

[2020 மார்ச் 16

54. மதுரையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் ஆயமன்றம்) கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (A1)த் துறையின் 30–8–2019 ஆம் நாளிட்ட அரசாணை (ப) எண் 157–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

121. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ்)

122. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (ஆங்கிலம்)

123. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ்)

124. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (ஆங்கிலம்)

125. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

126. மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

127. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

2020 மார்ச் 16]

128. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

———

இணைப்பு I

(625 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முன்னுரை

நகரமயமாக்கல் என்பது மரபு சார்ந்த ஊரகப் பொருளாதாரத்திலிருந்து நவீன தொழில் சார்ந்து மாறுவது ஆகும். மேலும் மக்களின் உறைவிடங்கள் பரந்து விரிந்த பகுதிகளிலிருந்து மாறி நகரங்களில் ஓரிடங்களில் குவிவதாகும். நகரமயமாக்கல் பல நகர்ப்புறங்கள் மற்றும் பெருநகரங்கள் வளர்ச்சியினால் விளைகிறது. நகரங்களில் ஓரிடத்தில் பொருளாதாரம் மற்றும் மனிதவளம் சேர்வதால், அப்பகுதியில் வணிகம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தொழில் வளர்ச்சி அடைகின்றது. நகரங்கள் அதிக வேலைவாய்ப்புகளை அளிப்பதால் மக்கள் நகரங்களுக்கு நகர்வதற்கான முக்கிய காரணம் ஆகும். கல்வியறிவு, தரமான கல்வி மேம்பட்ட ஆரோக்கிய வாழ்வு, நீண்ட ஆயுட்காலம், சமூக சேவைகள் மற்றும் கலாச்சார மற்றும் அரசியல் பங்கேற்புக்கான மேம்பட்ட வாய்ப்புகள் ஆகியவை கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்களை நகர்த்துவதற்கான முக்கிய காரணிகளாகும்.

1.1. உலகளாவிய நகரமயமாதலின் நிலை

உலக மக்கள் தொகையில் 55 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கிறார்கள். இது 2050 ஆம் ஆண்டில் 68 சதவிகிதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகின் மிகப்பெரிய நகரமான டோக்கியோ 37 மில்லியன் மக்களைக் கொண்டுள்ளது. அதன்பின்னர் புதுதில்லி 29 மில்லியனும், ஷாங்காய் 26 மில்லியனும் மற்றும் மெக்ஸிகோ சிட்டி மற்றும் ஸா-பாலோ ஒவ்வொன்றும் சுமார் 22 மில்லியன் மக்கள் தொகை கொண்டுள்ளது. கெய்ரோ, மும்பை, பெய்ஜிங் மற்றும் டாக்கா ஆகிய நகரங்களில் 20 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். 2020 ஆம் ஆண்டின் இறுதியில், டோக்கியோவின் மக்கள் தொகை குறையத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில், டெல்லி தொடர்ந்து வளர்ந்து

[2020 மார்ச் 16

வருவதாகவும், 2028 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக மாறும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டில் உலகம் 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 43 பெருநகரங்களைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அவர்களில் பெரும்பாலானோர் வளர்ந்துவரும் நாடுகளில் வசிப்பர். பாதிக்கும் மேற்பட்ட நகர்ப்புறவாசிகள் உலகின் 33 பெருநகரங்களில் வசிக்கின்றனர். ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் 1 மில்லியனுக்கும் குறைவான மக்களைக் கொண்ட நகரங்கள் வேகமாக வளர்ந்துவரும் சில நகர்ப்புறப் பகுதிகளாகும். உலக மக்கள் தொகையின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் நகரமயமாக்கலும் இணைந்து 2050-க்குள் 2.5 பில்லியன் மக்களை நகர்ப்புறங்களில் சேர்க்கக்கூடும் என்று கணிப்புகள் காட்டுகின்றன. இந்த அதிகரிப்புகளில் 90 சதவிகிதம் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் நடைபெறுகிறது.

உலகின் நகர்ப்புற மக்கள் தொகையின் அதிகரிப்பு எதிர்காலத்தில் சில நாடுகளில் மட்டும் அதிக அளவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் 2018 மற்றும் 2050-க்கு இடைப்பட்ட காலத்தில் உலகின் நகர்ப்புற மக்கள் தொகையின் திட்டமிடப்பட்ட வளர்ச்சியில் 35 சதவிகிதத்தைக் கொண்டிருக்கும். 2050 ஆம் ஆண்டில், இந்தியா 416 மில்லியன், சீனா 255 மில்லியன் மற்றும் நைஜீரியா 189 மில்லியன் மக்களை நகர்ப்புறவாசிகளாக அதிகரிக்கச் செய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலகின் நகர்ப்புற மக்கள் தொகை 1950-ல் 751 மில்லியனிலிருந்து 2018-ல் 4.2 பில்லியனாக வேகமாக வளர்ந்துள்ளது. மிகவும் நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில் வட அமெரிக்கா (2018 ஆம் ஆண்டில் 82 சதவிகிதம் மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர்), லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் (81 சதவிகிதம்), ஐரோப்பா (74 சதவிகிதம்) மற்றும் ஓசியானியா (68 சதவிகிதம்) மற்றும் ஆசியாவில் நகரமயமாக்கலின் நிலை இப்போது தோராயமாக 50 சதவிகிதம் ஆகும். ஆசியாவில் நகரமயமாக்கல் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு இருந்தபோதிலும், உலகின் நகர்ப்புற மக்கள் தொகையில் 54 சதவிகிதம் பேர் இங்கு வசிக்கின்றனர். ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்காவில் 13 சதவிகிதமாக உள்ளன.

2020 மார்ச் 16]

1.2. இந்தியாவில் நகரமயமாக்கல்

இந்தியாவின் நகர்ப்புற மக்கள் தொகை உலகின் நகர்ப்புற மக்கள் தொகையில் கணிசமான விகிதாச்சாரத்தில் உள்ளது. மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்காக நகரங்களுக்கும், மாநகரங்களுக்கும் குடியேறுகிறார்கள். மேலும் நகர்ப்புறங்களுக்கு மக்களை கவர்ந்து இழுக்கும் காரணிகளாலும், கிராமப்புறங்களில் உள்ள அதிருப்தியான உந்து காரணிகளாலும், மக்கள் ஊரகப் பகுதிகளிலிருந்து வெளியேறுகிறார்கள்.

வளரும் நாடுகளில் உள்ள நகரமயமாக்கலின் சிறப்பியல்பு அம்சங்களையும் மற்றும் நகரமயமாக்கல் செயல்முறையின் அதிவேக வளர்ச்சி நிலையையும் இந்தியா கொண்டுள்ளது. நகர்ப்புறப் பகுதிகள்/ நகரங்களின் எண்ணிக்கையானது 1901-ல் 1,827-லிருந்து 2011-ல் 7,935 ஆக உயர்ந்துள்ளது. மொத்த மக்கள் தொகையின் எண்ணிக்கை 1901-ல் 238.4 மில்லியனிலிருந்து 2011-ல் 1.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் தொகை 1901-ல் 25.8 மில்லியனிலிருந்து 377.1 மில்லியனாக 2011-ல் அதிகரித்துள்ளது.

உலகளவில், தனிநபர் வருமான நிலைகளுக்கும், நகரமயமாக்கல் விகிதங்களுக்கும் இடையில் ஒரு இறுக்கமான நேர்மறையான உறவு உள்ளது. இந்தியாவில், தனிநபர் வருமான நிலைகளுக்கும் நகரமயமாக்கல் விகிதங்களுக்கும் இடையே ஒரு வலுவான உறவு உள்ளது. ஒப்பீட்டளவில் முன்னேறிய மாநிலங்களான மகாராஷ்டிரா, கேரளா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவற்றில் நகரமயமாக்கல் விகிதங்கள் 40 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளன. அதேநேரத்தில், ஒடிசா மற்றும் பீகார் போன்ற வளர்ந்துவரும் மாநிலங்கள் நகரமயமாக்கல் விகிதத்தில் 20 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளன.

1.3. தமிழ்நாடு - நகரமயமாக்கல்

நகரமயமாக்கல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. நகரமயமாக்கல் என்பது தமிழகத்தில் சமீபத்திய ஆண்டுகளில் முக்கியமான யதார்த்தங்களில் ஒன்றாகும். நகர்ப்புற மக்கள் தொகையின் விகிதத்தில் தமிழகம் முதலிடத்திலும், பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய பங்களிப்பாளராகவும், தேசத்தின் பரப்பளவில் பதினொன்றாவது பெரிய மாநிலமாகவும் உள்ளது. தேசிய நகர்ப்புற மக்கள் தொகையில் மாநில நகர்ப்புற மக்கள் தொகை 9.3 சதவீதமாக உள்ளது.

[2020 மார்ச் 16

மாநிலத்தின் பரப்பளவு 1,30,058 சதுர கி.மீ.. இதில் நகர்ப்புறப் பகுதி 12,525 சதுர கி.மீ.. நாட்டில் அதிக எண்ணிக்கையிலான சட்டப்பூர்வமான நகரங்களை தமிழகம் கொண்டுள்ளது. அதனையடுத்து உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா. ஒரு சட்டரீதியான நகரம் என்பது நகராட்சி, மாநகராட்சி, கன்டோன்மென்ட் போர்டு அல்லது அறிவிக்கப்பட்ட நகர்ப்புறப் பகுதிகள் அடங்கிய பகுதிகளாகும்.

2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 27.48 மில்லியனாக இருந்த மக்கள் தொகை, 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் மொத்த நகர்ப்புற மக்கள் தொகை 34.92 மில்லியனாக அதிகரித்துள்ளது. தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நகர்ப்புற பொருளாதார ஒருங்கிணைப்பின் காரணமாக நகரங்கள் வளர்கின்றன. சமீப காலங்களில், தாராளமயமாக்கல், விரைந்து வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பம், உயர் கல்வியுடன் கடின உழைப்பையும் கொண்ட நேர்த்தியான மனிதவளம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவை தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களின் வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன. இதன் விளைவாக, 2001 ஆம் ஆண்டில் நகர்ப்புற மக்கள் தொகை விகிதத்தில் 44 சதவிகிதமாக குறிப்பிடத்தக்க உயர்வு காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் இது மேலும் 48.5 சதவிகிதம் வரை உயர்ந்தது. இது அகில இந்திய நகர்ப்புற மக்கள் தொகையின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட (31.2 சதவிகிதம்) அதிகமாகும். 2031 ஆம் ஆண்டில் தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை அதிகபட்சமாக 76.8 மில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற மக்களின் வளர்ச்சி விகிதம் பல்லாண்டுகளாக தொடர்ந்து அதிகரித்துள்ளது. மாநில பொருளாதாரத்தின் அதிவிரைவான வளர்ச்சியின் காரணமாக, அத்தியாவசியப் பொருட்கள், சேவைகள் மற்றும் உட்கட்டமைப்புகள் ஆகியவற்றின் தேவைக்கும், வழங்கலுக்கும் இடையிலான இடைவெளியை நகரமயமாக்கல் விரிவுபடுத்துகிறது. நகரமயமாக்கல் மற்றும் அதிகரித்து வரும் உட்கட்டமைப்பு தேவைகளை சமன் செய்வதற்காக தமிழக அரசு சீரிய முறையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது.

2020 மார்ச் 16]

தமிழக அரசு அதனுடைய "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023" தொகுப்பில் நகர்ப்புற வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. உள்ளடக்கிய மற்றும் நிலையான நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதும் மற்றும் வசதிகளை வழங்குவதும் இதனுடைய நோக்கமாகும். 2012-2023-க்கு இடைப்பட்ட 11 ஆண்டு காலகட்டத்தில் ரூ.2.75 இலட்சம் கோடி செலவில் நகர்ப்புற உள்கட்டமைப்பை உருவாக்கி மேம்படுத்துவதே தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆகும். பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு மலிவு விலையில் வீடு வழங்குதல், 24x7 குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளுக்கு உலகளாவிய அணுகுமுறையை உறுதி செய்தல், திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநிலமாக ஆக்குதல், நவீனமயமாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை முறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் குப்பைகள் இல்லா சுற்றுச்சூழலை காட்சிப்படுத்துதல், திறமையான நகர்ப்புறப் போக்குவரத்துக்கான பொதுப் போக்குவரத்து அமைப்புகள் ஆகியவற்றின்மூலம் மாநிலம் முழுவதிற்குண்டான அனைத்துப் பகுதிகளிலும் சீரான வளர்ச்சியை உறுதிசெய்கிறது.

1.4. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நீடித்து நிலைக்கத்தக்க நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய நகர்ப்புற வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பணி நகர்ப்புற நிருவாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறை, கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்தல், கட்டமைக்கப்பட்ட நிறுவன மற்றும் நிதி ஏற்பாடுகள் செய்தல், குடிமக்களுக்கு சேவைகளை வழங்குதல், தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் நிலையான வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிருவகித்து வருகிறது.

மேலும், இத்துறை மக்கள் நலம், பொருளாதார வளம் மற்றும் நகர்ப்புறத் துறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற நிலையான வளர்ச்சி இலக்குகளின்மீதும் கவனம் செலுத்துகிறது.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கீழே பட்டியலிட்டுள்ள 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளை ஆளுமை செய்கிறது:

[2020 மார்ச் 16

வ. எண்	மாவட்டம்	மாநகராட்சி	நகராட்சி	பேரூராட்சி
1	அரியலூர்	0	2	2
2	செங்கல்பட்டு	0	8	12
3	சென்னை	1	0	0
4	கோயம்புத்தூர்	1	3	37
5	கடலூர்	0	5	16
6	தருமபுரி	0	1	10
7	திண்டுக்கல்	1	3	23
8	ஈரோடு	1	4	42
9	கள்ளக்குறிச்சி	0	1	7
10	காஞ்சிபுரம்	0	1	5
11	கன்னியாகுமரி	1	3	55
12	கரூர்	0	2	11
13	கிருஷ்ணகிரி	1	1	6
14	மதுரை	1	3	9
15	நாகப்பட்டினம்	0	4	8
16	நாமக்கல்	0	5	19
17	நீலகிரி	0	4	11
18	பெரம்பலூர்	0	1	4
19	புதுக்கோட்டை	0	2	8
20	இராமநாதபுரம்	0	4	7
21	இராணிப்பேட்டை	0	5	9
22	சேலம்	1	4	33
23	சிவகங்கை	0	3	12
24	தஞ்சாவூர்	1	2	22
25	தேனி	0	6	22
26	தென்காசி	0	5	18
27	திருவள்ளூர்	1	4	10
28	திருவண்ணாமலை	0	4	10

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டம்	மாநகராட்சி	நகராட்சி	பேரூராட்சி
29	திருவாரூர்	0	4	7
30	தூத்துக்குடி	1	2	19
31	திருச்சிராப்பள்ளி	1	3	16
32	திருநெல்வேலி	1	2	18
33	திருப்பத்தூர்	0	4	3
34	திருப்பூர்	1	5	16
35	வேலூர்	1	2	4
36	விழுப்புரம்	0	2	8
37	விருதுநகர்	0	7	9
மொத்தம்		15	121	528

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பின்வரும் துறைகளை நிருவகிக்கிறது:

1. நகராட்சி நிருவாக ஆணையரகம்
2. பெருநகர சென்னை மாநகராட்சி
3. பேரூராட்சிகளின் இயக்குநரகம்
4. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம்
5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
6. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்
7. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை
8. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்
9. திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் லிமிடெட்
10. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் லிமிடெட்

[2020 மார்ச் 16

2. நகராட்சி நிருவாக ஆணையரகம்

நகர்ப்புற வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி, மக்கள் சிறப்பாக வாழ தகுதியான சூழ்நிலையை ஏற்படுத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது மாநிலத்தை நீடித்த வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல கொள்கைகளை வகுப்பதுடன், நகர்ப்புறங்களில் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நகராட்சி நிருவாக ஆணையரகம் மாநில அளவில் நகராட்சி நிருவாக ஆணையரை தலைமையாகவும் மற்றும் மாநில அளவில் இணை ஆணையர், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் மண்டல அளவில் ஏழு நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்களையும் (செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களுக்கு தலா ஒருவர் வீதம்) கொண்டுள்ளது.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகர்கோவில், ஓசூர் மற்றும் ஆவடி ஆகிய 14 மாநகராட்சிகளும் (சென்னை நீங்கலாக) மற்றும் 121 நகராட்சிகளும் நகராட்சி நிருவாக ஆணையரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. அரசாணை (நிலை) எண் 113, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(2)) துறை, நாள் 30-8-2019-ன்படி, அனைத்து நகராட்சிகளும் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்	தரம்	ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்)	நகராட்சிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1	சிறப்பு நிலை	15.00-க்கு மேல்	18
2	தேர்வு நிலை	9.00-15.00-க்குள்	27
3	முதல் நிலை	6.00-9.00-க்குள்	32

2020 மார்ச் 16]

வ. எண்	தரம்	ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்)	நகராட்சிகளின் எண்ணிக்கை
4	இரண்டாம் நிலை	6.00-க்குக்கீழ்	44
	மொத்தம்		121

2.1. உட்கட்டமைப்பு மேம்பாடு

உட்கட்டமைப்பினை உருவாக்கி, அனைத்து வசதிகளையும் பராமரிப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பணி ஆகும். தரமான, பயனுள்ள உட்கட்டமைப்புகளை உருவாக்க அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள், உலக வங்கி, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (Kfw), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின்மூலம் பெறப்படும் நிதி உதவிகளைக் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சிகளில் உட்கட்டமைப்புத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.2. திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை மாநிலத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவாலாகும். விரைவான நகரமயமாதல் மற்றும் மக்களின் மாறிவரும் வாழ்க்கை முறைகள் மூலமாக நகர்ப்புறங்களில் கடந்த சில ஆண்டுகளில் ஏராளமான குப்பை மற்றும் கழிவுகள் உருவாகியதால், திடக்கழிவு மேலாண்மை என்பது நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அமைப்புரீதியாகவும், நிதி மற்றும் சுற்றுச்சூழலை பேணுவதற்குரிய சவாலை ஏற்படுத்துகிறது.

2.2.1. திடக்கழிவு மேலாண்மை விதி 2016 மற்றும் கொள்கை

திடக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரம் செய்து, அதனை கொண்டு செல்வதுடன், அறிவியல் முறைப்படி பாதுகாப்பான முறையில் கழித்திட, சுற்றுச்சூழல், வனத் துறை மற்றும் கால நிலை மாற்ற அமைச்சகம், திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 வகுத்துள்ளது. அவ்விதிகளின்படி, திடக்கழிவு தொடர்பாக மாநில கொள்கை மற்றும் ஒவ்வோர் உள்ளாட்சியும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை உருவாக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

தமிழக அரசால் திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக மாநிலக் கொள்கை 24-8-2018 அன்று அறிவிக்கப்பட்டது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ நடைமுறைப்படுத்தும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளாலும் உபவிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவித்துள்ளபடி, பயனாளர் கட்டணம் மற்றும் அபராதத் தொகையை உள்ளடக்கி இந்த உபவிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும், அவற்றிற்குரிய திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்திட்டத்தினையும் தயாரித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அரசிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 14 மாநகராட்சிகள் (சென்னை தவிர) மற்றும் 121 நகராட்சிகளில் தினந்தோறும் சுமார் 6,394 மெட்ரிக் டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. இதில் மக்கும் குப்பை 3,721 மெட்ரிக் டன் மற்றும் மக்காத உலர் கழிவுகள் 2,673 மெட்ரிக் டன் ஆகும். அனைத்து உள்ளாட்சிகளிலும் பேட்டரிமூலம் இயங்கக்கூடிய வாகனங்கள் மற்றும் இலகு ரக வாகனங்கள் மூலமாக திடக்கழிவுகள் வீடுகள்தோறும் சேகரம் செய்து, உருவாகும் இடத்திலேயே பிரித்து பெறப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திறம்பட செய்யப்பட்டு வருகின்றன.

மக்கும் கழிவுகளை, பரவலாக்கப்பட்ட முறையில் சிறிய அளவிலான உரக் கூடங்கள் அமைத்தும், ஒருங்கிணைந்த காற்றாடல் முறையிலும், சிறிய அளவிலான உரக் கூடங்கள் அமைத்தல் முறையிலும், மண் புழு உரக் கூடம் அமைத்தல் முறையிலும் மற்றும் உயிரி எரிவாயு கூடம் அமைத்தல் மூலமும் அறிவியல் முறையில் கழிவுநீக்கம் செய்வதுடன், உரத் தயாரிப்புப் பணிகளும் செயல்பாட்டில் உள்ளன.

மக்காத கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி மற்றும் கழிவுமீட்பு சேகரிப்பு மையங்களில் வைக்கப்பட்ட பின் மறுசுழற்சிக்காக கண்டறியப்பட்ட விற்பனையாளர்களிடம் ஒப்படைப்பு செய்யப்படுகிறது. 175 மறுசுழற்சி மற்றும் கழிவுமீட்பு சேகரிப்பு மையங்கள்மூலம் மக்காத கழிவுகள் சேகரித்து செயலாக்கம் செய்யப்படுகின்றது. மறுசுழற்சி செய்ய இயலாத எரியும் தன்மை கொண்ட உலர் கழிவுகள் அனைத்தும் அருகே உள்ள சிமென்ட்

2020 மார்ச் 16]

தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுவதோடு, விஞ்ஞான முறையில் இன்சினிரேட்டர்ஸ்மூலம் கழிவுநீக்கம் செய்யப்படுகின்றன.

மின்னணுக் கழிவுகள் மாதம் ஒரு முறை சேகரம் செய்யப்பட்டு, அதற்கான மையங்களில் சேமித்து வைக்கப்பட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட செயலாக்குநரிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

கட்டுமான மற்றும் இடிபாடு கழிவுகள் சேகரம் செய்ய சேகரிப்பு மையங்கள் அடையாளம் காணப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக தேக்கி வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுகள் உயிரி அகழ்வு முறையில் அகற்றி, சுற்றுப்புறச் சூழல் மேலும் மாசுபடாமல் தடுக்கப்படுகின்றன. இதில் நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற மதிப்பை தமிழ்நாடு பெற்றுள்ளது

2.2.2. ஈரக்கழிவுகள் செயலாக்க முறைகள்.

(அ) உயிரி எரிவாயுக் கூடங்கள்

11 மாநகராட்சிகள் மற்றும் 27 நகராட்சிகளில் உற்பத்தியாகும் மக்கும் தன்மையுள்ள கழிவுகள், குறிப்பாக, உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், காய்கறி அங்காடிகள், இறைச்சிக் கூடங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டு, 1 முதல் 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட 47 உயிரி எரிவாயு கூடங்கள்மூலம், மொத்தம் 197 மெட்ரிக் டன் திறனுடன் ரூ.37.42 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டுடன் உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இதன்மூலம் உருவாகும் எரிவாயு, தகன மேடையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உயிரி எரிவாயு கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் திறன், நகராட்சி உரக் கிடங்குகளிலுள்ள மின் விளக்குகளை எரிய வைக்கவும், உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களை இயக்குவதற்கும் மற்றும் திரவக் கழிவுகளை சுத்தப்படுத்தும் அலகுகளை இயக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) பரவலாக்கப்பட்ட சிறிய அளவு உர உற்பத்திக் கூடம்

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 4 அல்லது 5 வார்டுகளை உள்ளடக்கி பரவலாக்கப்பட்ட சேவை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் சிறிய அளவு உரக் கூடங்கள் அமைக்கப்பட்டு உரம்

[2020 மார்ச் 16

தயாரிக்கப்படுகிறது. அந்தந்த பகுதியில் உருவாகும் மக்கும் கழிவுகள் அங்கேயே உரமாக செயலாக்கப்படுகின்றன. இம்முறையை பின்பற்றுவதில் போக்குவரத்து செலவுகள் குறைவதுடன், குப்பைத் தொட்டிகள் இல்லாத தெருக்கள் என்ற நிலையை அடைய உதவுகிறது.

தற்போது 811 நுண்ணுர உற்பத்தி மையங்கள் நாளொன்றுக்கு 3,820 மெட்ரிக் டன் மக்கும் தன்மையுள்ள கழிவுகளை செயலாக்கம் செய்ய ஏதுவாக ஒப்புதலளிக்கப்பட்டு, அவற்றுள் 550 எண்ணிக்கை நுண்ணுர உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டு, நாளொன்றுக்கு 2,590 டன் மக்கும் தன்மையுள்ள கழிவுகளை செயலாக்கம் செய்யும்வண்ணம் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தயாராகும் உரம் வீடுகள் மற்றும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

இ) காற்றாடல் முறையில் உரம் தயாரித்தல்

காற்றாடல் முறையில் நாளொன்றுக்கு 258 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகள் 36 உள்ளாட்சி அமைப்புகளில் (5 மாநகராட்சிகள் மற்றும் 31 நகராட்சிகளில்) நடைமுறைப்படுத்தப்பட்டு உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஈ) சிறிய அளவிலான நுண்ணுரக் கூடங்கள்

பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் உருவாகும் தோட்டக் கழிவுகளை, சிறிய அளவிலான 876 நுண்ணுரக் கூடங்கள்மூலம், 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் நாளொன்றுக்கு 416 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை செயலாக்கம் செய்யும்விதமாக அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன.

2.2.3. எரியூட்டும் ஆலை

மக்கவைக்க இயலாத மற்றும் மறுசுழற்சிக்கு உள்ளாக்க இயலாத நெகிழிப் பைகள், (Plastic Bag) துணிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய இதர கழிவுகளை செயலாக்கம் செய்யும் விதமாக சாத்தியக்கூறு உள்ள உள்ளாட்சிகளில் எரியூட்டும் ஆலைகள்மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. எரியூட்டும் ஆலைகள் 10 மெட்ரிக் டன் மற்றும் 25 மெட்ரிக் டன் கொள்ளளவில் ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி மாநகராட்சிகள் மற்றும் எடப்பாடி மற்றும் மேட்டுப்பாளையம் நகராட்சிகளில் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளன.

2020 மார்ச் 16]

2.2.4. உயிரி அகழ்வு மற்றும் உயிரி மீட்டெடுத்தல் அமைத்தல்.

உயிரி அகழ்வு முறையில் பழைய தேக்க திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்படுகின்றன. 9 மாநகராட்சிகள் மற்றும் 86 நகராட்சிகளில் தூய்மை இந்தியா மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களின்கீழ் உயிரி அகழ்வு அமைத்தல் பணிகள்மூலம் 78.25 இலட்சம் கன.மீ. கொள்ளளவு தேக்க திடக்கழிவுகள் நீக்கப்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது கும்பகோணம், பம்மல், செம்பாக்கம், பூந்தமல்லி நகராட்சிகளில், 3,08,376 கன மீட்டர் தேக்க திடக்கழிவுகள் நீக்கம் செய்யப்பட்டு, 22 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. 91 நகர்ப்புற உள்ளாட்சிகளில் பணிகள் துவங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் நடவடிக்கையில் உள்ளது.

இப்பணிக்கான அளவுகளையும், தரத்தினையும் ஆய்வு செய்ய கிண்டியிலுள்ள அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வு மையம் நியமிக்கப்பட்டு, 95 உள்ளாட்சிகளுக்கு அது தொழில்நுட்ப வழிகாட்டியாக உள்ளது.

பழைய தேக்க திடக்கழிவு உயிரி மூடு முறையில் (Bio capping) மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மாநகராட்சிகளில் பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளன. சேலம் மாநகராட்சியில் தற்போது பணி நடைபெற்று வருகிறது.

2.2.5. நெகிழி (பிளாஸ்டிக்) தடை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110 விதியின்கீழ் அறிவித்தபடி, அரசாணை (நிலை) எண் 84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (EC2), நாள் 25-6-2018-ன்மூலம், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986-ன்கீழ் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகள் 1-1-2019 முதல் பயன்படுத்த தடைசெய்யப்பட்டது. நெகிழி பருமனைக் கருத்தில்கொள்ளாது, பிளாஸ்டிக் பைகள், உணவு பொருளை சேகரம் செய்யும் பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தகடுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தேநீர் கோப்பைகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழாய்கள், பிளாஸ்டிக் கொடிகள் போன்றவற்றை சேமித்து வைத்திருப்பது, வழங்குவது, விற்பனை மற்றும் விநியோகம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் அபராதத் தொகை வசூலிக்க நெகிழி தடை உபவிதிகள் வரையறுக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ன்படி அரசிதழில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

நெகிழி ஒழிப்பிற்காக பொது இடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வீடுகளில் தொடர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொது மக்களின் உதவியுடன், கண்காட்சி அரங்குகள்மூலம் நெகிழி மாற்று உபயோகப் பொருள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழுக்கள்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்க மாசற்ற மாற்றுப்பொருள் தயாரிப்பு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

மேலும், முழுவதுமாக நெகிழி பயன்பாட்டை ஒழிக்கும் விதமாக, பிளாஸ்டிக் கோப்பைகளுக்கு பதிலாக எஃகு கொள்கலன்கள், துணிப்பைகள், ஸ்டார்ச் பொருட்களால் செய்யப்பட்ட எளிதில் மக்கும் பைகள், கடைகள் மற்றும் உணவகங்களில் பொருட்களை பெற சொந்த கொள்கலன்களை எடுத்துச்செல்வது, பிளாஸ்டிக்காலான உறிஞ்சு குழாய் தவிர்த்தல் போன்ற பழக்கங்களை மக்கள் பின்பற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்பு நடவடிக்கையாக பழங்கள், காய்கறி கடைகள், பூக்கடைகள், கோழி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி போன்ற இறைச்சிக் கடைகளில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு, தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளாட்சிகளில் கடந்த டிசம்பர் 2019 வரை 81,826 சோதனைகள் நடத்தப்பட்டு, 947 மெட்ரிக் டன் நெகிழி பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.4.18 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

2.3. குடிநீர் விநியோகம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே அரசின் முதன்மையான நோக்கமாகும். சீரான மற்றும் போதுமான அளவு குடிநீர் வழங்குதல் மற்றும் திறம்பட்ட விநியோகம் போன்றவை நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு பெரும் சவாலாக உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்கு அரசு பல்வேறு குடிநீர்த் திட்டங்களை துவக்கியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III (TNUDP III), நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை (UIG), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உட்கட்டமைப்பு

2020 மார்ச் 16]

வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JnNURM), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA), ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD Board) மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB) போன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள்மூலம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவை தவிர, சில மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்களை தாங்களாகவே செயல்படுத்தி வருகின்றன.

பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்க மத்திய பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு (CPHEEO) குறியீடுகளை நிர்ணயம் செய்துள்ளது. இந்த குறியீடுகளை எய்தும் வகையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த உறுதிபூண்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் பின்வருமாறு:

உள்ளாட்சி அமைப்புகள்	அளவீடு (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு லிட்டர்)	உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை
மாநகராட்சி	110 மற்றும் அதற்கும் மேல்	11
	70-109	2
	70-க்கும்கீழ்	1
நகராட்சி	90 மற்றும் அதற்கும் மேல்	71
	40-89 வரை	50
		135

[2020 மார்ச் 16

பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தியதன் மூலமாக, நாளொன்றுக்கு தற்போது 1,904.98 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு, நபர் ஒருவருக்கு சராசரியாக 126 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

குடிநீர்த் திட்டப் பணிகள்

வ. எண்	நிதியின் பெயர்	நகர்ப்புற உள்ளாட்சிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட நகராட்சிகள்	பணி நடைபெற்று வரும் நகராட்சிகள்
1.	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III	16	661.65	திருநெல்வேலி (தச்சநல்லூர்), கோபிசெட்டி பாளையம், பொள்ளாச்சி, போடிநாயக்கனூர், சேலம் நிலை-1 & II, குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம், வடவள்ளி (கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது), திருவண்ணாமலை, சிவகங்கை, துறையூர், கிருஷ்ணகிரி, குழித்துறை	பல்லவபுரம், பம்மல், தேனி அல்லிநகரம்
2.	நகர்ப்புற உட் கட்டமைப்பு மற்றும் ஆளுமை (JnNURM -UIG) திட்டம்	10	613.30	மதுரை(வைகைII) தடுப்பணை 2 பணிகள், கோயம்புத்தூர் (பில்லூர்-II), தாம்பரம், ஆனையூர், திருப்பரங்குன்றம், (மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது), திருமங்கலம், கோயம்புத்தூர் விரிவாக்கப்பகுதி (துடியலூர், வெள்ளக்கிணறு, காளப்பட்டி, சரவணம்பட்டி மற்றும் சின்னவேடம்பட்டி), ஆவடி	அனகாபுத்தூர்

2020 மார்ச் 16]

வ. எண்	நிதியின் பெயர்	நகர்ப்புற உள்ளாட்சிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட நகராட்சிகள்	பணி நடைபெற்று வரும் நகராட்சிகள்
3.	சிறிய மற்றும் நடுத்தர நகரங்-களுக்கான நகர்ப்புற உட் கட்டமைப்பு மேம் பாட்டுத் (UIDSSMT) திட்டம்	40	740.47	தேவக்கோட்டை, கரூர், வால்பாறை, திருப்பத்தூர், இராமநாதபுரம், பரமக்குடி, கீழக்கரை, சிவகங்கை, இராமேஸ்வரம், அரக்கோணம், திருத்தணி, அறந்தாங்கி, மறைமலைநகர், விக்கிரமசிங்கபுரம், நாமக்கல், ஸ்ரீவில்லிபுத்தூர், கூடலூர்(நீலகிரி), ஈரோடு, இராசிபுரம், தஞ்சாவூர், விழுப்புரம், ஒட்டன்சத்திரம், மேட்டூர், ஆத்தூர், வந்தவாசி, திருச்செங்கோடு, காரைக்குடி, பல்லடம், சிதம்பரம், தாராபுரம், பெரியகுளம், திருவத்திபுரம், வெள்ளக்கோவில், காங்கேயம், காயல்பட்டினம், கம்பம், ஆரணி	கோவில்பட்டி, திண்டிவனம் கொடைக் கானல்
4.	ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதி	9	663.68	திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, பழனி, குன்னூர், எடப்பாடி, தேவகோட்டை, மேட்டுப்பாளையம், உடுமலைப்பேட்டை	-

வ. எண்	நிதியின் பெயர்	நகர்ப்புற உள்ளாட்சிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட நகராட்சிகள்	பணி நடைபெற்று வரும் நகராட்சிகள்
5.	ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி	15	869.15	திருநெல்வேலி, கடையநல்லூர். திருவண்ணாமலை, பள்ளிப்பாளையம், கடலூர், கரூர்	தாந்தோணி, இனாம்கரூர் (கரூர் நகராட்சியுடன் இணைக்கப் பட்டுள்ளது), உதகமண்டலம், குன்னூர், பத்மநாபபுரம் மற்றும் போடி நாயக்கனூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் (விரிவாக்கப்பட்ட பகுதி)
6.	அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங் களுக்கான திட்ட (AMRUT) நிதி	14	5500.66	தஞ்சாவூர், ஆம்பூர்	கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, வேலூர், நாகர்கோவில், ஓசூர், இராஜ பாளையம், கும்பகோணம், கோயம்புத்தூர் பில்லூர் -III திருப்பூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் முல்லை பெரியாறு அணையி லிருந்து மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

2020 மார்ச் 16]

வ. எண்	நிதியின் பெயர்	நகர்ப்புற உள்ளாட்சிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட நகராட்சிகள்	பணி நடைபெற்று வரும் நகராட்சிகள்
7.	தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	6	660.37	-	நாமக்கல், குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் சங்கரன்-கோவில், புளியங்குடி, இராஜ-பாளையம், சிவகாசி, திருத்தங்கல்

2.3.1. திறனான குடிநீர் மேலாண்மை அமைப்பு

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் மேலாண்மை அமைப்புக்கு அரசு உயரிய முக்கியத்துவம் அளிக்கிறது. இது தொடர்பாக கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன் மற்றும் குடிநீரின் தரம் மற்றும் வேதியியல் தன்மைகளை அறியவும், குடிநீர்த் திட்டத்தின் தேவையான பகுதிகளை கணினிமூலம் ஒருங்கிணைத்து விவரங்களைச் சேகரித்துக் கண்காணித்து கட்டுப்படுத்தும் (SCADA) உபகரணங்கள் அமைத்தல்.

- பழுதடைந்த மோட்டார் மற்றும் திறனற்ற பம்புகளை மாற்றியமைத்து குடிநீர் விநியோகத் திறனை மேம்படுத்துதல்.

- சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏற்கெனவே உள்ள குடிநீர் அமைப்புகளை புதுப்பித்தல்.

2.3.2. பகுதிவாரியான மண்டல அளவுமுறை (DMA)

குடிநீர் விநியோகத்தினை கண்காணிப்பதற்காகவும், கணக்கில் வராமல் விநியோகிக்கப்படும் குடிநீரைக்

[2020 மார்ச் 16

கட்டுப்படுத்தவும், மண்டலங்கள் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பொதுவாக, ஒரு பகுதிவாரியான மண்டல அளவுமுறையில் 500 முதல் 4,000 குடிநீர் இணைப்புகள் கருத்தில்கொண்டு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிவாரியான மண்டல அளவுமுறை பகுதியும் வரையறுக்கப்பட்ட எல்லையுடன் தனி திருகு குழாயுடன் இலகுவாக பராமரிக்க ஏற்ற வகையில் உள் மற்றும் வெளிப்பகுதிகளில் ஒன்றோடொன்று இணைக்கப்படும். பொதுவாக, இந்த வரையறுக்கப்பட்ட எல்லையிலுள்ள திருகு குழாய் மூடப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டு, அவசர காலத்தில் மட்டும் உபயோகப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிவாரியான மண்டல அளவுமுறை அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பராமரிக்க துணை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிவாரியான மண்டல அளவுமுறையில் துணை மண்டலங்கள்மூலம் பகுதிவாரியான மண்டல அளவுமுறை பகுதிகளில் நீர்க்கசிவு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும்போது, பிற பகுதிகளில் இடையூறு இல்லாத வகையில் குடிநீர் விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.3.3. மழைநீர் சேகரிப்பு

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் மழைநீர் சேகரிப்புத் திட்டம் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2001-2006 ஆம் ஆண்டுகளில் தீவிரமாக செயல்படுத்தப்பட்ட இத்திட்டம், நிலத்தடி நீர் மட்டம் உயர பெரும் பங்கினை ஆற்றியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கட்டட அனுமதி வழங்குவதற்கு அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை கட்டாயமாக அமைக்க வழிவகை செய்யும் வகையில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019-லும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக, நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 16]

அரசின் கொள்கையின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புதுப்பித்தல், மறுசீரமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான செயல் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளிலுள்ள மொத்தமுள்ள 45.98 இலட்சம் கட்டடங்களில் 41.38 இலட்சம் (30,366 அரசுக் கட்டடங்கள், 41.09 இலட்சம் தனியார் கட்டடங்கள்) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நீர்நிலைகளில் மழைநீர் சேகரிப்புப் பணிகளை மேற்கொள்ள முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பராமரிக்கப்படும் 585 குளங்களில், 214 குளங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள குளங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பதற்கு செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கு சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாநகராட்சியில் 8 குளங்கள் ரூ.320 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாநகராட்சியில் 2 குளங்கள் ரூ.10.25 கோடியிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியில், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் அரியலூர் ஆகிய நகராட்சிகளில் 42 குளங்கள் மறுசீரமைப்புப் பணிகள் ரூ.38.00 கோடியிலும், ஈரோடு மாநகராட்சியில் ரூ.5.95 கோடியிலும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ், பல்லவபுரத்தில் 2 குளங்கள் ரூ.14.98 கோடியில் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

2.4. பாதாளச் சாக்கடைத் திட்டம் (UGSS)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை (UGSS) அமல்படுத்துவதற்கான கொள்கையை அரசு வகுத்துள்ளது. 117 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டம், ஜெர்மன் மேம்பாட்டு

[2020 மார்ச் 16

வங்கி நிதியுதவி, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் சீர்மிகு நகரத் திட்டம் ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைக் கொண்டு 58 இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளால் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் செயலாக்க நிலையின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	நிதி ஆதாரம்	உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்	பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளாட்சி அமைப்புகள்
1	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III	22	1025.51	உதகமண்டலம், சின்னமனூர், நாமக்கல், தருமபுரி, பெரம்பலூர், திண்டுக்கல் (பகுதி), திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், தேனி-அல்லிநகரம், வேலூர், நாகப்பட்டினம் (பகுதி), புதுக்கோட்டை, திருவள்ளூர், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் பல்லவபுரம்	சேலம், தூத்துக்குடி, சிவகங்கை

2020 மார்ச் 16]

வ. எண்	நிதி ஆதாரம்	உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்	பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளாட்சி அமைப்புகள்
2	ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்	4	925.49	-	மதுரை, கோயம்புத்தூர், ஆவடி மற்றும் தாம்பரம்
3	சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டம்	10	575.86	அரக்கோணம், மறைமலைநகர், உடுமலைப்பேட்டை, பெரியகுளம் மற்றும் அரியலூர்	சாத்தூர், சிதம்பரம், திருப்பத்தூர், மேட்டூர் மற்றும் நாகர்கோவில்
4	ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவி	5	572.30	விழுப்புரம்	ஈரோடு, காரைக்குடி, பொள்ளாச்சி மற்றும் மேட்டுப் பாளையம்
5	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	5	193.58	அரியலூர் (விடுபட்ட பகுதிகள்), போடிநாயக்கனூர் மற்றும் பெரம்பலூர் (விடுபட்ட பகுதிகள்)	இராசிபுரம் மற்றும் சத்தியமங்கலம்
6	தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	1	283.94	–	ஓசூர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

வ. எண்	நிதி ஆதாரம்	உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)	பணி முடிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்	பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளாட்சி அமைப்புகள்
7	அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி	10	3563.23	பல்லவபுரம்	கும்பகோணம், திருச்சி (கட்டம்-II & III), திருநெல்வேலி (கட்டம்-II & III), வேலூர் (கட்டம்-II & III), கோயம்புத்தூர் (கட்டம்-II), இராமேஸ்வரம், இராஜபாளையம், திருப்பூர் மற்றும் ஆம்பூர்
8	சீர்மிகு நகரத் திட்டம்	3	409.42	-	தஞ்சாவூர், கோயம்புத்தூர் (விடுபட்ட பகுதிகள்), மதுரை (கட்டம்-II),

பாதாள சாக்கடை அமைப்புகள் பராமரிப்பில் பணியாளர்கள் நேரடியாக சாக்கடை குழிகளில் இறங்குவதைத் தவிர்க்கும்பொருட்டு, ஜெட் ராடிங் இயந்திரங்கள், கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள், தூர்வாரும் இயந்திர தானியங்கி வாங்கப்பட்டு பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்ட நகரங்களில் பயன்பாட்டில் உள்ளன.

அனைத்து பொது மக்களுக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் எளிதாக கிடைக்கும் வகையில், நாட்டிலேயே முதன்முதலாக ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு வழங்கவும் மற்றும் அந்தந்த வீடுகளில் உருவாகும் கழிவுநீரினை தெருவில் உள்ள பாதாள கழிவுநீர் குழாயுடன் இணைக்கும் விதமாக,

2020 மார்ச் 16]

குழாய் பதித்தல் மற்றும் ஆய்வுக்குழிகள் கட்டுதல் போன்ற பணிகள் திட்ட மதிப்பீட்டிலேயே சேர்த்து, திட்டச் செயலாக்க காலத்திலேயே ஒருங்கிணைத்து செயல்படுத்த திட்டமிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், வீட்டு இணைப்பு வழங்குவதற்கான முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணங்களை சம்பந்தப்பட்ட வீட்டின் வரிவிதிப்புடன் இணைத்து, 10 தவணை முறையில் வசூலிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நடைமுறை மாற்றம் செய்வதால், திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த இணைப்புகள், திட்டம் முடிவுறும் காலத்திலேயே இணைக்கப்பட்டு, திட்டத்தின் முழுமையான பயன்கள் அனைத்து பொது மக்களையும் சென்றடையும்.

2.4.1. கழிவுநீர் கசடு மேலாண்மை

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட கழிவுநீரே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில் திரவ (Liquid), திட (Sludge), கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் (Scum) ஆகியன மிகையாக காணப்படும். கழிவுநீர்த் தொட்டி வடிவமைப்பு, கழிவுநீர் சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். துரிதமாக நகரமயமாகும் பொருளாதாரச் சூழலில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், கசடு கழிவினை முறையாக அகற்றி, அதனை கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்தல், மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு ஒருங்கிணைந்த திட்டம் மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டில் 15 மாநகராட்சிகள் (சென்னை உள்பட), 121 நகராட்சிகள், 528 நகரப் பஞ்சாயத்துக்கள் மற்றும் 12,525 பஞ்சாயத்துக்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் 9 மாநகராட்சிகள் (சென்னை உள்பட), 29 நகராட்சிகள் மற்றும் 3 நகரப் பஞ்சாயத்துக்களில், பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் வரையில் உருவாகும் கழிவுநீரினை சுகாதார முறையில் கையாள கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டம் அவசியமானதாகிறது.

2.4.2. கழிவுநீர் கசடு மேலாண்மையின் அவசியம்

கழிவுநீர் கசடினை கையாள்வதை ஒழுங்குபடுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் ஒரு முழுமையான வழிகாட்டுதலை, அரசாணை

(நிலை) எண் 106, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1-9-2014 வாயிலாக வெளியிட்டுள்ளது. இவ்வழிமுறை கீழ்க்காணும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்:

I. நச்சுத் தொட்டிகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்

II. உந்துதல் மற்றும் கசடு நீக்குதல்

III. கழிவுநீர் கசடுகளை எடுத்துச் செல்லுதல்

IV. சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல்

V. கழிவுநீர் கசடு சேகரித்தல், இடம் பெயர்த்தல், சுத்திகரிப்புக்கான கட்டணங்கள்

VI. தகவல், கல்வி மற்றும் பரிமாற்றம்

VII. மேலாண்மை தகவல் அமைப்பு மூலமாக ஆவணம் காத்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து 5 முதல் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் சேகரிப்பு இடங்கள் அமைந்துள்ளவாறு 41 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 21 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள், தங்களது உள்ளாட்சி அமைப்புகளில் உருவாகும் கழிவுநீர் கசடுகளை மேற்படி தொகுப்புகளில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வெளியேற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீர் கசடுகளை வெளியேற்ற, தொகுப்புகளை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	கொள்ளளவு (மில்லியன் லிட்டரில்)	தொழில்நுட்பம்
1	சென்னை	727	ASP
2	சின்னமனூர்	4	ASP
3	கோயம்புத்தூர்	110	SBR
4	கடலூர்	12.25	ASP

2020 மார்ச் 16]

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	கொள்ளளவு (மில்லியன் லிட்டரில்)	தொழில்நுட்பம்
5	தருமபுரி	4.86	ASP
6	திண்டுக்கல்	13.65	ASP
7	காஞ்சிபுரம்	14.7	WSP
8	கரூர்	15	EAP
9	கும்பகோணம்	17	ASP
10	கிருஷ்ணகிரி	9	ASP
11	மதுரை	170.7	SBR
12	மறைமலைநகர்	2.02	EAP
13	மயிலாடுதுறை	8.5	WSP
14	மாமல்லபுரம்	2.34	ASP
15	நாமக்கல்	5	ASP
16	நாகப்பட்டினம்	12.59	ASP
17	ஒரத்தநாடு	1.5	ASP
18	பல்லவபுரம்	பெருங்குடி STP	ASP
19	பெரம்பலூர்	4.2	ASP
20	புதுக்கோட்டை	10.62	ASP
21	இராமநாதபுரம்	7	ASP
22	தஞ்சாவூர்	28.05	ASP
23	திருவண்ணாமலை	8.76	ASP
24	தேனி-அல்லிநகரம்	12.05	ASP
25	திருவள்ளூர்	6.2	MBBR
26	திருவாரூர்	6.92	ASP
27	திருநெல்வேலி	24.2	WSP
28	திருப்பூர்	15	EAP
29	திருச்செந்தூர்	3.9	ASP

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	கொள்ளளவு (மில்லியன் லிட்டரில்)	தொழில்நுட்பம்
30	திருச்சிராப்பள்ளி	58	WSP
31	உதகமண்டலம்	5	ASP
32	உடுமலைப்பேட்டை	7.81	ASP
33	வேலூர்	10.28	ASP
34	விருதுநகர்	7.65	ASP
35	விழுப்புரம்	12.5	ASP
36	பெரியகுளம்	5.47	ASP
37	ஆவடி	40	ASP
38	அரியலூர்	4.16	ASP
39	போடிநாயக்கனூர்	12.08	ASP
40	மேட்டூர்	7.2	ASP
41	அரக்கோணம்	11.04	ASP

சுகாதாரமற்ற கழிவறைகளை கண்டறிதல், நச்சுத் தொட்டிகளை கணக்கெடுத்தல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வடிகட்டி படுகை அமைத்தல் முதலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கழிவுநீர் நச்சுத் தொட்டிகளிலிருந்து பதிவு செய்யப்பட்ட லாரிகளில் அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தாத 49 நகராட்சிகளில் (மக்கள் தொகை 50,000-க்கும் குறைவாக உள்ள நகராட்சிகள்) கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதியுதவியுடன் (IUDM) செயல்படுத்தப்பட்டு, பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2.4.3. கழிவுநீர் மறு பயன்பாட்டுக் கொள்கை

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான கொள்கை என்பது அதிகப்படியாக வெளியேற்றப்படும் கழிவுநீரை சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும்

2020 மார்ச் 16]

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை நிலையான அடிப்படையில் மறுபயன்பாடு செய்தல், நன்னீர் வளங்களை சார்ந்து இருப்பதைக் குறைத்துக்கொள்ளுதல் போன்ற நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கொள்கையானது சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுபயன்பாட்டின்மூலம் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கின்றது.

இது தொடர்பாக, தமிழக அரசால் “கழிவுநீர் மறு பயன்பாட்டுக் கொள்கை” டிசம்பர் 2019-ல் வெளியிடப்பட்டது.

தற்போது உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பயனீட்டாளர் முகமை (User Agency) இடையே இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை (STEW) மறுபயன்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	அளவு (மில்லியன் லிட்டரில்)	பயன்பாடு / நோக்கம்
1	நாகப்பட்டினம்	2.00	M/s. KVK குளிரூட்டும் நோக்கத்திற்கான சக்தி
2	திண்டுக்கல்	5.00	வேளாண் வனத் துறையினருக்கு டேனர்களின் டி.டி.எஸ் அளவைப் பராமரிக்க
3	திருநெல்வேலி	24.00	நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) தொழிற்சாலைகள்
4	பெரம்பலூர்	3.00	MRF தொழிற்சாலை பயன்பாடு
5	இராமநாதபுரம்	3.00	NTC உட்கட்டமைப்பு
6	பொள்ளாச்சி	11.50	விவசாயப் பயன்பாடு
7	சின்னமனூர்	3.00	விவசாயப் பயன்பாடு
8	கரூர்	7.00	விவசாயப் பயன்பாடு

[2020 மார்ச் 16

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	அளவு (மில்லியன் லிட்டரில்)	பயன்பாடு / நோக்கம்
9	அரக்கோணம்	7.00	MRF தொழிற்சாலை பயன்பாடு

2.5. சாலைகள்

நகர்ப்புற உள்ளாட்சிகளில் நகரங்களை இணைக்கவும், போக்குவரத்து மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் சாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MORTH) விவரக் குறிப்புகளின் அடிப்படையில், பாதுகாப்பான வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பான நடமாட்டத்திற்கான சாலைகள் தரமாக வடிவமைக்கப்படுகின்றன.

மொத்தம் 23,465 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 5,505 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும், 15,976 கி.மீ. நீளத்திற்கு தார்சாலைகளும், 592 கி.மீ. நீளத்திற்கு கப்பி சாலைகளும், 1,156 கி.மீ. நீளத்திற்கு மண்சாலைகளும், மீதமுள்ள 236 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக்குகள் பதிக்கப்பட்ட சாலைகளும் அடங்கும்.

கழிவுநீர் குழாய் பதித்தல், குடிநீர் பிரதான குழாய் பதித்தல் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் மேம்படுத்திட தமிழ்நாடு நகர்ப்புறச் சாலை உட்கட்டமைப்பு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டிற்கு 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளுக்கு 1,121 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.692.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் (IUDM)கீழ், 2019-2020 ஆம் ஆண்டிற்கு, 27 உள்ளாட்சிகளில் 304 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள் ரூ.53.91 கோடியில் எடுத்து கொள்ளப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

2.6. தெரு விளக்கு

தெரு விளக்குகள் பராமரிப்பது உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை பணியாகும்.

தற்பொழுது 7.63 இலட்சம் தெரு விளக்குகள் 14 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் 121 நகராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளாட்சிகளின் நிதி வருவாயில் குறிப்பிடத்தக்க தொகை தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு செலவிடப்படுகிறது.

தற்போது பயன்பாட்டில் உள்ள தெரு விளக்குகளை, புதுமையான முயற்சிகளின்கீழ் LED விளக்குகளாக மாற்றி அமைத்தல் மற்றும் இதர மின் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்வதன் தொடர்ச்சியாக, பல்வேறு திட்டப் பணிகள்மூலம் மொத்தம் 3,78,364 எண்ணிக்கையிலான அனைத்து வகையான தெரு விளக்குகள், LED விளக்குகளாக ரூ.399.72 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

2.7. சிறப்பு கட்டமைப்பு திட்டம்

2.7.1. மேற்கூரையில் சூரிய எரிசக்தி தகடுகள் அமைத்தல்

தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012-ன்படி, 3,000 மெகா வாட் சூரிய மின்சக்தி திறன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கையானது மேற்கூரையில் சூரிய எரிசக்தி தகடுகள் அமைத்தல், சூரிய ஒளிமூலம் சுடுநீர் தயாரித்தல் மற்றும் சூரிய ஒளி பூங்காக்கள் போன்றவை ஏற்படுத்துவதாகும். நகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்ய தகடுகள் பொருத்தி அதன்மூலம் அன்றாட அலுவலகப் பயன்பாட்டிற்கு மின்சாரத்தை பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 445 நகராட்சி கட்டடங்களில் சூரிய எரிசக்தி தகடுகள் அமைக்கப்பட்டு, 2,198 KWh மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

திருச்சி, சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளில், 2018-2019 ஆம் ஆண்டில், 640 கட்டடங்களில், 2.94 மெகா வாட் சூரிய மின்சக்தி ஆற்றல் தயாரிக்க சீர்மிகு நகர திட்டத்தின்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 16

2.7.2. தரைதளத்தில் சூரிய மின்தகடுகள் நிறுவுதல் (Ground-Mounted Solar Panel System)

கோயம்புத்தூர், திருச்சி, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகளில், 2018-2019 ஆம் ஆண்டில் தரைதளத்தில் சூரிய மின்தகடுகள் நிறுவுதல் திட்டம் ரூ.116.85 கோடி மதிப்பீட்டில் 21.41 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியில் 2 மெகா வாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

2.7.3. நவீன எரிவாயு தகன மேடை

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கவும், எரியூட்டும் நேரத்தினைக் குறைக்கவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், நவீன எரிவாயு தகன மேடைகள்மூலம் மழைக்காலங்களில்கூட திறன்பட எரியூட்ட முடியும்.

தமிழ்நாட்டிலுள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 98 நகர்ப்புற உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.40.43 கோடி செலவில் 116 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 101 தகன மேடைகள் பொதுநல சங்கங்களின் பராமரிப்பில் செயல்பட்டு வருகின்றன.

2.7.4. நவீன இறைச்சிக் கூடங்கள்

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான முறையில் இறைச்சிக் கூடங்கள் நடத்த, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்திடவும், சுகாதாரமாகவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அவற்றை இயக்கவும், சுகாதார குறைபாடுகளிலிருந்து காக்கவும், கடந்த ஏழு ஆண்டுகளில் பகுதி 2 திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின்கீழ், 8 மாநகராட்சிகள் மற்றும் 27 நகராட்சிகளில் ரூ.11.58 கோடி மதிப்பீட்டில் 39 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2020 மார்ச் 16]

2.8. மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Capital Grant Fund and O&M Gap Filling Fund)

2.8.1. மூலதன மானிய நிதி (Capital Grant Fund)

ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதிக்கு பதிலாக, மூலதன மானிய நிதி உருவாக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு நிதியில் 15% வரை நிலை வாரியாக வழங்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைக்கு ஏற்றவாறு அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான மூலதன பணிகளுக்காக மூன்று பாகங்களாக வழங்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.379 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 15 மாநகராட்சிகளுக்கு ரூ.215 கோடியும் மற்றும் 38 நகராட்சிகளுக்கு ரூ.164 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.8.2. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Operation & Maintenance Gap Filling Fund)

இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியானது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்குதல், பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவிற்கும், நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் மின் கட்டணம் செலுத்தவும் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது உள்ளாட்சிகளுக்குண்டான இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியானது 3 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ரூ.128 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 8 மாநகராட்சிகளுக்கு ரூ.52.58 கோடியும், 29 நகராட்சிகளுக்கு ரூ.75.42 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

2.9. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission)

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018-2019 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு மானியமாக ரூ.750 கோடி மாநில நிதி மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வசதி, பாதாளச் சாக்கடை, துப்புரவு வசதி, சாலைகள், தெரு விளக்குகள், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பூங்கா வசதி மற்றும் நவீன பேருந்து நிலைய மேம்பாடு ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வழங்கப்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டிற்கு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.1,050.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,074 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.10. மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்

2.10.1. சீர்மிகு நகரங்கள்

சீர்மிகு நகர திட்டத்தை மத்திய அரசு 2015 ஆம் ஆண்டு துவக்கியது. இத்திட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்பு 50:50 ஆகும். மக்களுக்கு முக்கிய உட்கட்டமைப்பு, சுத்தமான மற்றும் நீடித்த நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீர்மிகு தீர்வுகள் வழங்குதல் போன்றவற்றின்மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நகரங்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மேலும், இத்திட்டமானது ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்து அதில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணியானது பிற நகரங்களும் பின்பற்றக்கூடிய, அதாவது, வளர்ச்சி அடையக்கூடிய நிலையில் உள்ள பிற நகரங்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும்.

சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் இரண்டு முக்கிய கூறுகள்

1. பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD)

2. நகர முழுமைக்கும் திறன்வாய்ந்த தீர்வுகளை வழங்குதல் (PAN CITY)

பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) என்பது, போதிய குடிநீர் வழங்கல், உறுதியளிக்கப்பட்ட மின்சார விநியோகம், திடக்கழிவு மேலாண்மை,

2020 மார்ச் 16]

சுகாதாரம், நகர்ப்புறப் போக்குவரத்து, மக்களுக்கு அதிலும் குறிப்பாக ஏழை மக்களின் பொருளாதார வசதிக்கு ஏற்ற வகையில் குறைந்த விலையில் வீட்டு வசதி, வலுவான தகவல் தொழில்நுட்ப இணைப்பு வசதி மற்றும் டிஜிட்டல்மயமாக்கல், சிறந்த ஆளுமை குறிப்பாக மின் ஆளுமை (e-governance) மற்றும் மக்கள் பங்கேற்பு, நீடித்த நிலையான சுற்றுச்சூழல், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் கல்வி போன்றவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின்கீழ் அடங்கும்.

நகர முழுமைக்குமான வளர்ச்சியின்கீழ் (Pan City Development) நகரம் முழுவதும் ஏற்கனவே அமைந்துள்ள உட்கட்டமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்தி அனைத்துக் கட்டமைப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்துதல் ஆகும்.

தமிழ்நாட்டில் 2015-2016 ஆம் ஆண்டில் நகரங்களுக்கிடையே போட்டியின் அடிப்படையில் முதல் சுற்றில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் வருடத்தில் இரண்டாம் சுற்றில் மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2017-2018 ஆம் வருடத்தில் மூன்றாம் சுற்றில், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. நான்காம் சுற்றில் 2017-2018 ஆம் வருடத்தில் ஈரோடு மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சீர்மிகு நகரங்களிலும் (சென்னை நீங்கலாக) சிறப்பு தேவைக்கான அமைப்புகள் (SPV) நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மேற்கூறிய 10 மாநகராட்சிகளில் ரூ.9,513.29 கோடி மதிப்பீட்டில் 399 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசிடமிருந்து ரூ.2,106 கோடியும் மற்றும் மாநில அரசிடமிருந்து ரூ.1,754 கோடியும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு பணிகளை செயல்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 16

2019 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் சிறந்த திட்டச் செயலாக்கத்திற்காக கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், 4-வது சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சீர்மிகு நகரங்களில், ஈரோடு மாநகராட்சிக்கு சிறந்த செயல்திறனுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகர திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு, அகில இந்திய அளவில் 9-வது இடத்தில் உள்ளது.

2.10.2. அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

மத்திய அரசால் 2015 ஆம் ஆண்டு அடல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் துவங்கப்பட்டது. ஒரு இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகையுள்ள நகரங்கள் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 10 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்டுள்ள நகரங்களுக்கு மத்திய அரசின் பங்கு 33%, மாநில அரசின் பங்கு 20% மற்றும் உள்ளாட்சியின் பங்களிப்பு 47% ஆகும். பிற நகரங்களுக்கு மத்திய அரசின் பங்கு 50%, மாநில அரசின் பங்கு 20% மற்றும் உள்ளாட்சியின் பங்களிப்பு 30% ஆகவும் உள்ளது.

இத்திட்டம் (1) ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்புகள் வழங்குதலை உறுதி செய்தல், (2) பசுமை பூங்காக்களை உருவாக்குவதன்மூலம் நகரத்தின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் (3) பொதுப் போக்குவரத்திற்கு மாறுவதன்மூலம் அல்லது மோட்டார் பொருத்தப்படாத போக்குவரத்துக்கான வசதிகளை அமைப்பதன்மூலம் மாசுபாட்டைக் குறைத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள 15 மாநகராட்சிகள், 17 நகராட்சிகள் (5 நகராட்சிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளன) மற்றும் 1 பேரூராட்சி ஆகியவை இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

துறை	திட்டங் களின் எண்ணிக் கை	உள்ளாட்சி அமைப்பு களின் எண்ணிக் கை	திட்ட மதிப்பீடு ரூ. கோடியில்	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை
குடிநீர் வழங்கல்	14	11	5500.66	தஞ்சாவூர் மற்றும் ஆம்பூர்	கோயம்புத்தூர் (3 பணிகள்- 8 இணைக்கப்பட்ட பகுதிகள், 24x7 (ம) பில்லூர் 3), திருப்பூர் (2 பணிகள்), மதுரை, வேலூர், ஈரோடு, நாகர்கோவில், இராஜபாளையம், கும்பகோணம் மற்றும் ஓசூர்
பாதாளச் சாக்கடைத் திட்டம்	13	10	3856.36	பல்லவபுரம்	கோயம்புத்தூர், திருப்பூர், வேலூர் (2 பணிகள்), திருச்சிராப்பள்ளி (2 பணிகள்), இராமேஸ்வரம், இராஜபாளையம், கும்பகோணம் மற்றும் ஆம்பூர்
பசுமை பூங்கா மேம்பாடு	358	26	194.26	அனைத்து 26 அம்ரூத் நகரங்கள்	

இதுவரை, மத்திய அரசிடமிருந்து ரூ.1,997.86 கோடியும் மற்றும் மாநில அரசிடமிருந்து ரூ.887.78 கோடியும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு செயல்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

மேலும், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு தேவையான உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு நிதிக்காக, ஆசிய மேம்பாட்டு வங்கி / ஜெர்மன் வங்கி நிதி/தமிழ்நாடு நீடித்த

[2020 மார்ச் 16

உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம்/மூலதன மானிய நிதியின்கீழ் அனுமதி பெறப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்ட செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் பதினொன்றாவது இடத்தில் உள்ளது.

2.10.3. தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (Day-NULM)

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை 2014-2015 ஆம் நிதியாண்டிலிருந்து பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு பதிலாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தைத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு:

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு.
2. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி.
3. திறன் பயிற்சிமூலம் வேலைவாய்ப்பினை வழங்குதல்.
4. சுயவேலைவாய்ப்புத் திட்டம்.
5. நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் நலத் திட்டம்
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம்.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் உள்ள மேற்கூறிய அனைத்து கூறுகளுக்கும், மத்திய மற்றும் மாநில அரசின் 2018-2019, 2019-2020 நிதியிலிருந்து மொத்தம் ரூ.344.39 கோடி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, முதல் நான்கு கூறுகளான 1, 2, 3, 4 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் மூலமாக செயல்படுத்திட மகளிர் மேம்பாட்டு கழக இயக்குனரை நியமித்துள்ளது. மேலும் எஞ்சியுள்ள இரண்டு கூறுகளான “வீடற்றோருக்கு உறைவிடம்’’ மற்றும் “நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் நலத்திட்டம்’’, நகராட்சி நிருவாகம் ஆணையரகம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

“வீடற்றோருக்கு உறைவிடம் அமைத்தல்” திட்டத்தின்கீழ் இந்த காலகட்டத்தில் இதுவரை 32 மாவட்டங்களில், 12,384 நபர்கள்

2020 மார்ச் 16]

குடியிருப்பதற்கு ஏற்ற தங்கும் வசதி கொண்ட 250 உறைவிடங்கள் ரூ.105.41 கோடி மதிப்பீட்டில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, 167 உறைவிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதர பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

"நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் நலத் திட்டம்" தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உட்கூறாகும். இதுவரை 1,03,048 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, 482 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சாலையோர வியாபாரக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1,243 சாலையோர வியாபாரிகளுக்கு மதுரை மாநகராட்சியில் இத்திட்டத்தின்கீழ் ரூ.698.74 இலட்சம் மதிப்பீட்டில் தள்ளு வண்டிகள் வழங்கப்படும்.

2.10.4. தூய்மை இந்தியா இயக்கம்

தூய்மை இந்தியா இயக்கம், இந்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தினால் 2-10-2014 அன்று கீழ்க்கண்ட நோக்கங்களை செயல்படுத்தும்விதமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இயக்கம் 5 ஆண்டு காலத்திற்கு (அக்டோபர் 2014 முதல் அக்டோபர் 2019 வரை) செயல்படுத்தப்பட்டது:

(1) திறந்த வெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்

(2) மனித கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையினை ஒழித்தல்

(3) நவீன மற்றும் அறிவியல் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளுதல்

(4) ஆரோக்கியமான சுகாதார பழக்கங்களை உருவாக்குதல்

(5) சுகாதாரம் மற்றும் மனித ஆரோக்கியத்தின் தொடர்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

(6) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திறன் மேம்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவில் தனியார் துறை பங்களிப்பு ஈர்த்திடும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல்.

இதன்பொருட்டு, இத்திட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த தனிநபர் கழிப்பிடங்கள் அமைத்தல், சமுதாயக் கழிப்பிடங்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்படுத்துதல் மற்றும் நிருவாக மற்றும் அலுவலக செலவினம் போன்ற கூறுகளுக்கு அரசு நிருவாகம் அனுமதியளித்துள்ளது.

[2020 மார்ச் 16

இத்திட்டத்தினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் மற்றும் பணிகளைக் கண்காணிக்கவும் மாநில அளவிலான உயர்மட்ட குழு ஒன்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட முறைப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	கூறுகள்	நிதி பங்கீடு	
		மத்திய நிதி	மாநில நிதி
1	தனி நபர் கழிவறை	ரூ.4000/ எண்ணம்	ரூ.2000/ எண்ணம்
2	சமுதாய கழிப்பிடம்	ரூ.39200/ இருக்கை	ரூ.34300/ இருக்கை
3	திடக்கழிவு மேலாண்மை	35%	55%
4	சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்	75%	25%
5	திறன் மேம்படுத்துதல் மற்றும் நிருவாக மற்றும் அலுவலக செலவினம்	75%	25%

2.10.4.1. தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

திறந்த வெளியில் மலம்/ஜலம் கழிப்பதை அறவே நீக்கும் விதமாக 5,05,282 தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

2.10.4.2. பொதுக் கழிப்பிடம்

தனி நபர் இல்லக் கழிவறை கட்ட போதிய இடம் இல்லாத வீடுகளுக்கு பொதுக் கழிப்பிடங்களில் 21,894 இருக்கைகள் கட்டப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

2.10.4.3. திடக்கழிவு மேலாண்மை

தமிழக அரசினால் உருவாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி ஆகியவற்றின்மூலம் ரூ.1,800 கோடி மதிப்பீட்டில் 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் இதுவரையில் 6,297 திடக்கழிவு மேலாண்மை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2.10.4.4. சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

சுத்தம், சுகாதாரம், தூய்மை, திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில், 2,846 பரப்புரையாளர்கள், 230 மேற்பார்வையாளர்கள் மற்றும் 11 ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக தகவல், கல்வி, தெரிவித்தல்மூலம் மக்களிடையே பழக்கவழக்கங்களில், மாறுதலை ஏற்படுத்தி திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை உருவாக்குதல், தினசரி இருப்பிடங்களில் உருவாகும் திடக்கழிவுகளை உயிரி கழிவு மற்றும் மறுசுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுகளாக பிரித்து வழங்கிட வலியுறுத்தும் பணிகளுக்காக மூன்று ஆண்டுகள் நியமிக்கப்பட்டு, மேலும் இப்பணிகள் இத்திட்டத்தின்கீழ் தொடர நீட்டிக்கப்பட்டுள்ளது.

2.10.4.5. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு

தமிழகம் 2030 ஆம் ஆண்டிற்குள் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை அடைய கீழ்க்கண்டவற்றுக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது:

1. அனைவருக்கும் சமச்சீரான குடிநீர் பாதுகாப்பான முறையில் வழங்குதல்.

2. போதுமான மற்றும் சமச்சீரான அளவில் அனைவருக்கும் சுகாதார வசதிகள் அளித்து, பொது இடங்களில் மலம் கழிக்கும் நிலையை அறவே ஒழித்தல்.

3. நீர் மாசுபடுதலை தவிர்த்து அதன் தரத்தினை மேம்படுத்துதல், அபாயகரமான கழிவுகள் மற்றும் இரசாயனங்கள் வெளியேறுவதை குறைத்தல் மற்றும் கழிவுகளை ஒரே இடத்தில் தேக்கி வைத்தலை ஒழித்தல், சுத்திகரிக்கப்படாத

[2020 மார்ச் 16

கழிவுநீரை பாதியாக குறைத்தல் மற்றும் அதன்மூலம் நீர் மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகத்தினை மேம்படுத்துதல்.

4. குடிநீர் மற்றும் சுகாதாரம் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளித்தல்.

5. தவிர்த்தல், குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறு உபயோகத்தின் மூலமாக பெருமளவில் கழிவுகளைக் குறைத்தல்.

மேற்கண்ட அனைத்து இலக்குகளையும் அடைய பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. தூய்மையான / பாதுகாப்பான குடிநீர் அனைவருக்கும் கிடைக்க அனைத்து விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி, கழிவுநீர் மறு உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

3. பொது சுகாதாரத்தை பொறுத்தவரை, தனிநபர் இல்லக் கழிவறைகள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டு, சுகாதாரமற்ற கழிவறைகளை சுகாதாரமுள்ள கழிவறைகளாக மாற்றி அனைவருக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது.

4. உருவாகும் கழிவுகளின் உட்கூறுகளான ஈரக் கழிவுகள் மற்றும் உலர் கழிவுகளை கழிவுநீக்கம் செய்ய செயலாக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கழிவுகள் குறைப்பு, மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் போன்றவற்றை அடைய தீவிரமான தகவல், கல்வி மற்றும் தெரிவித்தல்மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

2.11. வெளிநாட்டு நிறுவன உதவித்திட்டங்கள்

தமிழக அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2020 மார்ச் 16]

2.11.1. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 9 உள்ளாட்சி அமைப்புகளில் 9 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் ரூ.663.68 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

2.11.2. ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம்

26 உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டம், நீர் நிலைகள் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் திடலுடன்கூடிய பூங்காக்கள் மேம்பாடு போன்ற 35 பணிகள் ரூ.3,047.20 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2.11.3. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ரூ.3,831 கோடி செலவில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டமானது நகர ஆளுமை, நகர்ப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவி கூறு மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு ஆகிய 3 கூறுகளைக் கொண்டதாகும்.

மேற்கூறிய 3 திட்டங்களில் நகர ஆளுமை (மாதிரி நகரம்) மற்றும் நகர்ப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவி ஆகியவை நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு என்ற துணைத் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.11.3.1. நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) திட்டம்

நகர்ப்புற மேலாண்மையில் சிறந்த அம்சங்களை செயல்படுத்துவதே மாதிரி நகரங்கள் திட்டத்தின் முக்கிய

நோக்கமாகும். மாதிரி நகரங்கள் நகர்ப்புற மேலாண்மை மற்றும் ஆளுமையில் பிற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்மாதிரியாக கருதப்படுகிறது.

ஈரோடு மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆகியவை நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) திட்டத்தின்கீழ் மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாதிரி நகரங்களில் நகர்ப்புற மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்திட திட்ட காலமான 7 ஆண்டுகளுக்கும் மொத்தம் ரூ.383.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி நகரங்களில்,

(i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் கட்டமைப்புத் திறன்

(ii) குறிப்பிட்ட பகுதிக்கான வளர்ச்சித் திட்டங்கள்

(iii) நீடித்த நிதி மற்றும்

(iv) மின் ஆளுமை மற்றும் பொது தகவல் அமைப்பு

ஆகிய நான்கு நகர்ப்புற மேலாண்மை அம்சங்களை மேம்படுத்துவதற்கு நகர்ப்புற ஆளுமை கூற்றின் நிதியுதவி பயன்படுத்தப்படுகிறது.

மாதிரி நகரங்களில் 2014-2015 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை கீழ்க்காணும் நகர்ப்புற மேலாண்மை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

2.11.3.1.1 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் கட்டமைப்புத் திறன்

ஆண்டுகள்	நடவடிக்கைகள்
2014-2015	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திட்ட செயலாக்கத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஒவ்வொரு மாதிரி நகரத்திலும் தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2020 மார்ச் 16]

ஆண்டுகள்	நடவடிக்கைகள்
2015-2016	ஒவ்வொரு மாதிரி நகரத்திலும் தொழில்நுட்ப வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டது.
2016-2017	ஒவ்வொரு மாதிரி நகரத்திற்கும் பணியாளர் திறன் மேம்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டது.
2017-2018	மாதிரி நகரத்தில் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கையானது அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 20% அளவிற்கு குறைவாக இருக்கும்படியாக பணியிடங்கள் குறைக்கப்பட்டன.
2018-2019	மாதிரி நகரங்களின் 2017-2018 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் அந்தந்த மாதிரி நகரின் இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

2.11.3.1.2. இடம் சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள்

ஆண்டுகள்	நடவடிக்கைகள்
2016-2017	வேலூர் மாநகராட்சியில் காந்தி நகர் பகுதியும், ஈரோடு மாநகராட்சியில் பன்னீர் செல்வம் பூங்கா பகுதி மற்றும் பெரியார் நகர் பகுதியும், ஓசூர் மாநகராட்சியில் இராமநாயக்கன் ஏரி பகுதியும் நகர் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பதற்கான பகுதிகளாக தேர்வு செய்யப்பட்டன.
2017-2018	ஒவ்வொரு மாதிரி நகருக்கும் பல ஆண்டுகளுக்கான மூலதன வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.
2018-2019	வேலூர் மாநகராட்சியில் காந்திநகர் பகுதிக்கு ரூ.65.75 கோடி அளவிலும், ஈரோடு மாநகராட்சியில் பன்னீர் செல்வம் பூங்கா மற்றும் பெரியார் நகர் பகுதிக்கு ரூ.33.65 கோடி அளவிலும், ஓசூர் மாநகராட்சியில் இராமநாயக்கன் ஏரி பகுதிக்கு ரூ.28.35 கோடி அளவிலும் நகர் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டன.

ஆண்டுகள்	நடவடிக்கைகள்
2019-2020	மேற்குறிப்பிட்ட நகர் வடிவமைப்பு மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த, ஒவ்வொரு மாதிரி நகரின் 2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு திட்டம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

2.11.3.1.3. நீடித்த நிதி

ஆண்டுகள்	நடவடிக்கைகள்
2015-2016	ஒவ்வொரு மாதிரி நகரத்திற்கும் வருவாய் உயர்வு திட்டம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டன.
2016-2017	வருவாய் உயர்வு திட்டம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்த அந்தந்த நகர மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.
2017-2018	2017-2018 ஆம் ஆண்டில் மாதிரி நகரங்களின் சொந்த வருவாயானது முந்தைய ஆண்டைவிட கீழ்க்கண்ட அளவில் உயர்த்தப்பட்டது. ஈரோடு ரூ.7.742 கோடி ஓசூர் ரூ.4.257 கோடி வேலூர் ரூ.8.886 கோடி
2018-2019	2018-2019 ஆம் ஆண்டில் மாதிரி நகரங்களின் சொந்த வருவாய் முந்தைய ஆண்டைவிட கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டது. ஈரோடு ரூ.46.140 கோடி ஓசூர் ரூ.6.985 கோடி வேலூர் ரூ.15.595 கோடி
2019-2020	ஒவ்வொரு மாதிரி நகரிலும் சொந்த வருவாயை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 16]

2.11.3.1.4. மின் ஆளுமை மற்றும் பொது தகவல் வெளியீடு

ஆண்டுகள்	நடவடிக்கைகள்
2015-2016	மாதிரி நகரங்களில் 10 எண்ணிக்கையிலான மின்னணு சேவைகளின் செயலாக்கம் முடிக்கப்பட்டன.
2016-2017	மாதிரி நகரங்களில் நகர் நிருவாகத்திற்கான அனைத்து 29 எண்ணிக்கையிலான மின்னணு சேவைகளின் செயலாக்கம் முடிக்கப்பட்டன. மேலும் மின்னணு சேவைகளை அமல்படுத்துவதற்கான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது.
2017-2018	மாதிரி நகரங்களின் 2017-2018 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டம் மற்றும் 2016-2017 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்படாத கணக்குகள் பகிரங்கமாக வெளியிடப்பட்டன.
2019-2020	மாதிரி நகரங்களின் குடிமக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் பொது மக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்களில் 80% விண்ணப்பங்களை தீர்வு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டில் நகர் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை ஒவ்வொரு மாதிரி நகரத்திலும் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், முக்கிய சேவைகள் குறித்து பொது மக்களுக்கு தகவல் வழங்குவதற்கு மாதிரி நகரங்களில் இணையதளம் உருவாக்கப்படவுள்ளது.

2.11.3.1.5. குறியீடுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை எய்தியமைக்காக வழங்கப்படும் மானியம்

2015-2016 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை நகர் மேலாண்மை குறியீடுகளில் எய்தப்பட்ட சாதனைகளுக்காக மாதிரி நகரங்களுக்கு ரூ.191.55 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

இதேபோன்று, 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரை நகர் மேலாண்மை நடவடிக்கைகளில் எய்தப்பட உள்ள சாதனைகளுக்கு ஒவ்வோர் ஆண்டிற்கும் 3 மாதிரி நகரங்களுக்கும் ரூ.63.85 கோடி என்ற அளவில் மொத்தம் ரூ.191.55 கோடி மானியம் விடுவிக்கப்படும்.

2.11.3.2. நகர்ப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவித் திட்டம்

நகர்ப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவித் திட்டத்தின்மூலம் கீழ்க்காணும் துணைத் திட்டங்கள் நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

வ.எண்	துணைக்கூறு	மொத்த நிதி	உலகவங்கி நிதி
		(மில்லியன் டாலரில்)	
1	நகராட்சி மின் ஆளுமை / பொது நிதி மேலாண்மை மற்றும் புவியியல் தகவல் அமைப்பு	21.50	11.50
2	திறன் மற்றும் நிறுவன மேம்பாடு	7.00	6.00
3	திட்ட தயாரிப்பு நிதி	2.00	0
4	திட்ட மேலாண்மை மற்றும் திட்ட செயல்பாட்டு செலவு	3.50	3.50
	மொத்தம்	34.00	21.00

2.11.3.3. நகர்ப்புற மின் ஆளுமை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளை மின் ஆளுமைமூலம் கையாளுவதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு விரைவாகவும் தரமாகவும் சேவைகளை செய்வதற்கு 29 எண்ணிக்கையிலான

2020 மார்ச் 16]

நகராட்சி மின் ஆளுமை சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு "அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மையப்படுத்தப்பட்ட வலைதள மின் ஆளுமை பயன்பாடு" என்ற சீரிய திட்டம், ரூ.18.31 கோடியில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதியின்மூலம் செயல்படுத்தப்பட்டது. 31-7-2019 தேதி அளவில் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 29 எண்ணிக்கையிலான அனைத்து மின் ஆளுமை சேவைகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுவிட்டன. இந்த மின் ஆளுமை சேவைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் 14,610 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பயன்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2.11.3.4. திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாடு

திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாடு துணைத் திட்டத்தின்கீழ் ரூ.9.28 கோடி செலவில் 37,401 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டில் ரூ.10.422 கோடி மதிப்பீட்டுத் தொகையில் நான்கு பயிற்சித் திட்டங்கள் 29,733 பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பயனடையும் வகையில் நடத்தப்படும்.

2.12. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019

74-வது அரசமைப்பு சட்டத் திருத்தத்தில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளின் பட்டியலில் நகரமைப்பை உள்ளடக்கிய நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் நிலப் பயன்பாடு மற்றும் கட்டடங்கள் ஒழுங்குப்படுத்துதல் ஆகிய பணிகள் உள்ளாட்சிகளின் முக்கிய பணிகளாக குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் அனைத்து மாநகராட்சிகள் / நகராட்சிகள் / பேரூராட்சிகள் மற்றும் கிராமப்புறங்களை உள்ளடக்கிய அனைத்து உள்ளாட்சிகளுக்கும் பொருந்தும் வகையிலான "தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019" வகுக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 18, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-1) துறை, நாள் 4-2-2019 வாயிலாக அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 16

2.13. இணையதள வழி கட்டட அனுமதி மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட வழிமுறைகள்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019-ல் பிரசுரம் செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக, மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலின்படி, தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையிலும், கட்டட அனுமதி பெறும் வழிமுறையினை எளிதாக்கும் வகையில் இணையதளம் வழியாக கட்டட அனுமதிக்கான விண்ணப்பம் செய்தல், ஆவணங்கள் சமர்ப்பித்தல், வரைபடங்கள் சமர்ப்பித்தல், இணையதளம் வழியாக கட்டணங்கள் செலுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இணையதள பிரத்யேக தானியங்கி மென்பொருள் வாயிலாக கட்டட வரைபடங்களை கூர்ந்தாய்வு செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வசதியினால், பொது மக்கள் அலுவலகத்திற்கு செல்லாமல் தாங்கள் இருக்குமிடத்திலிருந்தே கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்கள் செய்து இணையதள வாயிலாக கட்டட அனுமதி மற்றும் உத்தரவு வரைபடங்களை பெற்றுக்கொள்ளலாம்.

இச்செயல்பாட்டின் காரணமாக ஆரம்பம் முதல் இறுதி வரை பொது மக்களின் சிரமத்தை மேலும் குறைக்கும் வகையில் 1,200 ச.அடி பரப்பளவிற்குள் கட்டப்படும் சிறிய குடியிருப்பு கட்டடங்களுக்கு கள ஆய்வின்றி அனுமதி வழங்க வழி செய்து அரசாணை (நிலை) எண் 110, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21-8-2019-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.13.1. அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல்

தமிழக அரசின் சிறப்புத் திட்டமான அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப் பிரிவுகளை முறைப்படுத்த விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் 83,568 மனைகள் முறைப்படுத்தப்பட்டு, அதன் வாயிலாக ரூ.486.87 கோடி அபிவிருத்தி கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இத்தொகை வாயிலாக சம்பந்தப்பட்ட மனைப் பிரிவுகளில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மனைப் பிரிவுகளை முறைப்படுத்திட வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்றாலும், அரசாணையில் குறிப்பிட்ட காலத்திற்குள்

2020 மார்ச் 16]

முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளில் உள்ள மனைகளை, உள்ளாட்சி அமைப்புகள் தொடர்ந்து வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட அரசாணை எண் 21, வீட்டு வசதி துறை, நாள் 5-2-2019 வாயிலாக வழிவகை செய்யப்பட்டு திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

2.14. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. அதன் நோக்கங்கள்:

(1) நகராட்சி நிருவாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களைப் பயன்படுத்துவதன் அவசியத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(2) நகராட்சி நிருவாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வெளியீடுகள் மூலமாக அறிவை பரப்புதல்.

(3) நகர்ப்புற மேம்பாடு, நகராட்சி நிருவாகம் மற்றும் அவை சார்ந்த துறைகளில் ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் (Consultancy Services) மேற்கொள்ளுதல்.

(4) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் அதற்கான உதவிகளை செய்தல்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை இப்பயிற்சி நிறுவனத்தின் இயக்கத்திற்கு முக்கிய நிதியாதாரம் ஆகும்.

இந்நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளின் பணியாளர்களுக்கு பயிற்சிகளை அளிப்பதில் முன்னோடியாகத் திகழ்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான புத்தறிவுப் பயிற்சிகள் (Orientation Training Programmes), நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான விரிவாக்கப் பயிற்சிகள் (Comprehensive Training) மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் (Refresher Training) இந்நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன.

[2020 மார்ச் 16

இப்பயிற்சி நிறுவனத்தால் 2019-2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்களின் விவரங்கள் கீழ்வருமாறு:

2019-2020 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பயிற்சிகள்
(1-4-19 முதல் 24-1-2020 வரை)

வ. எண்	பயிற்சி விவரம்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
1	மாநகராட்சி மற்றும் நகராட்சி இளநிலை உதவியாளர்களுக்கான நான்கு வார விரிவாக்கப் பயிற்சி	44
2	தமிழ்நாடு நிலைத்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்களுக்கான திருத்திய கட்டட விதிகள் தொடர்பான 2 நாள் பயிற்சி	194
3	பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் குறை தீர்ப்பு) சட்டம், 2013 விழிப்புணர்வு குறித்தான ஒரு நாள் பயிற்சி.	292
4	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஓய்வு கால திட்டமிடல் குறித்து மூன்று நாள் சிறப்புப் பயிற்சி	41
5	நகராட்சி மற்றும் மாநகராட்சி பொறியாளர்களுக்கான 'பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்' பற்றிய மூன்று நாள் பயிற்சி	159
6	நகராட்சியில் பணிபுரியும் கணக்காளர்களுக்கான புத்தாக்க பயிற்சி	75
7	நகராட்சிகளில் பணிபுரியும் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்களுக்கான புத்தாக்க பயிற்சி	18

2020 மார்ச் 16]

வ. எண்	பயிற்சி விவரம்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
8	தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கான தேசிய அளவிலான களம்சார் பயிற்சிப் பட்டறை	90
9	புதிதாக பணியமர்த்தப்பட்ட கர்நாடக மாநில நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுகாதார ஆய்வாளர்களுக்கான களப்பயிற்சி	34
10	பணிபுரியும் பெண்கள் குடும்பம் மற்றும் அலுவலகம் என்ற இரட்டை பணித்தளத்தில் ஈடுகொடுத்து முன்னேறுதல் குறித்த மூன்று நாள் பயிற்சி	43
11	தேசிய பேரிடர் மேலாண்மை பயிற்சி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து நகர்புறங்களில் ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிய மூன்று நாள் பயிற்சி	69
	மொத்தம்	1062

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், மண்டல மையங்களை துவங்குவதற்காகவும் அரசாணை எண் 84 நிதி (நிதி குழு-4) துறை, நாள் 31-3-2017-ல் சிறப்பு மானியமாக ரூ.25 கோடி அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

2.15. நிதிக் குழு

2.15.1. 5-வது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் மானியம் ஒதுக்கீடு

73-வது மற்றும் 74-வது அரசமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் அரசமைப்பு சட்டப் பிரிவு 243-I மற்றும் 243-Y மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த மாநில சட்டங்களின் அடிப்படையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு மாநிலமும் மாநில நிதி

[2020 மார்ச் 16

ஆணையத்தை அமைக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து அரசுக்கு உரிய பரிந்துரைகள் செய்வதற்கு மாநில நிதி ஆணையம் தோற்றுவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில், 1-12-2014-ல் தமிழ்நாடு அரசால் ஐந்தாவது மாநில நிதி ஆணையம் தோற்றுவிக்கப்பட்டு, அதன் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை 27-12-2016-ல் மாண்புமிகு தமிழக ஆளுநரிடமும், மாண்புமிகு முதலமைச்சரிடமும் ஆணையம் அளித்தது. அதனை ஏற்றுக்கொண்டு, அரசாணை எண் 84, நாள் 31-3-2017-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது 2017 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 31-3-2022 வரை ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்மானங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரப்படி வழங்கப்படுகின்றன:

மாநில அரசின் மொத்த நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி நிதிப் பகிர்மான விகிதமாக 10 விழுக்காடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு 56:44 என்ற விகிதத்தில் உள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடுக்குகளுக்கிடையே (Vertical) நிதிப் பகிர்மானத்திற்கும், ஒவ்வோர் அடுக்கின் உள்ளே (Horizontal) நிதிப் பகிர்மானத்திற்கும் கீழ்க்காணும் நிதிப் பகிர்மான முறை பின்பற்றப்படுகிறது:

வ. எண்	காரணி	நிறை மதிப்பீடு (சதவிகிதத்தில்)
1	2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி மக்கள் தொகை	65
2	பரப்பளவு	15
3	தனிநபர் நுகர்வு செலவின இடைவெளி	10
4	குடிசைவாழ் மக்கள் தொகை / விகிதம்	10
	மொத்தம்	100

2020 மார்ச் 16]

ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2019-2020 ஆம் ஆண்டில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்ட மானியத்தொகை மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூ. கோடியில்)

வருடம்	மாநகராட்சிகள் (அடிப்படை மானியம்)	மூலதன மானியத் தொகை	இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி பங்களிப்புத் தொகை	மொத்தம்	நகராட்சிகள் (அடிப்படை மானியம்)	மூலதன மானியத் தொகை	இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி பங்களிப்புத் தொகை	மொத்தம்	பெரு மொத்தம்(5+9)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
2019-2020	1568.55	294.10	98.03	1960.68	1137.20	213.23	71.08	1421.51	3382.19
2020-2021	1611.71	302.20	100.73	2014.64	1168.49	219.09	73.03	1460.61	3475.25

2.15.2. 14-வது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் மானிய ஒதுக்கீடு

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் வழங்குவதற்கான 14-வது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் மானிய ஒதுக்கீடு விவரங்கள் பின்வருமாறு:-

1) மாநிலங்களுக்கான மானியம் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 90% மற்றும் பரப்பளவின் அடிப்படையில் 10% பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

[2020 மார்ச் 16

2) மானியம், அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு கிராம பஞ்சாயத்துகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். அவற்றில் கிராம பஞ்சாயத்துகளுக்கு 90% அடிப்படை மானியமாகவும், 10% செயலாக்க மானியமாகவும் வழங்கப்படும். நகராட்சிகளை பொறுத்தமட்டில் இவை 80:20 என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

3) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடிப்படை மானியம் ஆண்டுக்கு இரண்டு தவணைகளாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடுக்குகளுக்கு இடையே அதாவது மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு இடையில் மாநில நிதிக் குழு ஆணையம் அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அரசால் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும்.

14-வது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, மாநகராட்சிகள், நகராட்சிகளுக்கு ஆண்டு வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் பின்வருமாறு: (2015-2016 முதல் 2019-2020 வரை)

(ரூ.கோடியில்)

ஆண்டு	அடிப்படை மானியம்	செயலாக்க மானியம்	மொத்தம்
2015-2016	560.92	---	560.92
2016-2017	776.70	229.24	1,005.94
2017-2018	872.13	259.41	1,131.54
2018-2019	1,008.90	286.29	1,295.19
2019-2020	1,363.24	374.88	1,738.12
மொத்தம்	4,581.89	1,149.82	5,731.71

2020 மார்ச் 16]

2.16. மாநகராட்சிகள்

2.16.1. கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 1-5-1981 அன்று உருவாக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியின் மக்கள் தொகை 16,01,438 ஆகும். 100 வார்டுகளை கொண்டுள்ள மாநகராட்சியின் பரப்பளவு 265.36 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு சராசரி வருமானம் ரூ.714.20 கோடியாகவும் உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.1128.09 கோடியில் 35 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில், அம்ரூத், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.1606.20 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.
- 2018-2019 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.25 கோடி செலவில் 35.86 கி.மீ. நீளத்திற்கு சாலை மேம்பாட்டுப் பணிகள் 15 சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டுள்ள சுமார் 9.4 இலட்சம் கன. மீட்டர் கொள்ளளவிலான தரம் பிரிக்கப்படாத பழைய குப்பைகளை உயிரி அகழ்வு முறையை கையாண்டு குப்பைகளை கழிவு செய்யும் முறையை மேற்கொள்ள சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.60.11 கோடி செலவில் செயல்படுத்த உள்ளது.

[2020 மார்ச் 16

- வெள்ளலூரில் ரூ.168.00 கோடி மதிப்பீட்டில் 61.62 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை அமைக்க திட்டப் பணிகள் தற்போது துவங்கப்பட்டுள்ளன.

2.16.2 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி நகராட்சி, 1-6-1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 9,16,857 ஆகவும், 65 வார்டுகளை உள்ளடக்கிய பரப்பளவு 167.23 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ரூ.485.60 கோடியாகவும் உள்ளது.

செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு

- அம்ரூத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின்கீழ், மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் பகுதி 2-ன்கீழ், ரூ.377.29 கோடி மதிப்பீட்டில் (3 தொகுப்புகள்) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அம்ரூத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின்கீழ், மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் பகுதி 3-ன்கீழ், ரூ.336 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

- மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன், குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.63.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன்கீழ், 20 பணிகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு துவங்கப்பட உள்ளன.

- சீர்மிகு நகர திட்டத்தின்கீழ், 28 பணிகள் ரூ.929.10 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

2020 மார்ச் 16]

- அரியமங்கலம் குப்பைக் கிடங்கில் தேங்கும் திடக்கழிவுகளின் அளவை குறைக்கும் பொருட்டு, 31 இடங்களில் நுண் உரக்கிடங்குகள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு, அந்தந்த பகுதியிலேயே குப்பைகளை உரமாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 2020-2021 ஆம் ஆண்டில் 17 இடங்களில் நுண் உரக்கிடங்குகள் ரூ.8.87 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

2.16.3 மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியானது 1-5-1971 முதல் நகராட்சியிலிருந்து மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. மதுரை மாநகராட்சியின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 15,61,129 ஆகும். மேலும் மதுரை மாநகராட்சி 100 வார்டுகளின் மொத்த பரப்பளவு 147.99 சதுர கிலோ மீட்டராகும். மதுரை மாநகராட்சியின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.438.28 கோடியாகும்.

2019-2020-ல் கீழ்க்கண்ட திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ், 18 பணிகள் ரூ.981.38 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

- மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை பரவலாக்கும் வகையில், அந்தந்த வார்டுப் பகுதிகளில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ரூ.18.99 கோடியில் 23 இடங்களில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பழைய வார்டு பகுதிகளில் ஐந்தாண்டுகளுக்கு மேலாக புதுப்பிக்கப்படாத சாலைகள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.25.56 கோடி மதிப்பீட்டில் 51.85 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

- மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர துப்புரவுப் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் எம்.எம்.சி. காலனி பகுதியில் 54 குடியிருப்புகள் கட்டுவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

- முல்லை-பெரியாறு லோயர் கேம்ப் பகுதியிலிருந்து மதுரை மாநகருக்கு கூடுதலாக குடிநீர் பெறுவதற்கு ரூ.1020 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

2.16.4. திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி நகரம் மாநகராட்சியாக 1-6-1994 அன்று தரம் உயர்த்தப்பட்டது. இம்மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 108.65 சதுர கி.மீ. ஆகும். இம்மாநகராட்சியில் மொத்தம் 55 வார்டுகள் உள்ளன. 2011 ஆம் வருடத்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 4,74,838 ஆகும். சராசரி ஆண்டு வருமானம் ரூ.206.25 கோடி ஆகும்.

2019-2020-ல் கீழ்க்கண்ட திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

- ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.230 கோடி மதிப்பீட்டில் அரியநாயகிபுரம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அனுமதிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் அம்ரூத் திட்ட நிதி (2016-2017) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடனும், 2-வது கட்டமாக ரூ.289.01 கோடி மதிப்பீட்டிலும், மேலும் 3-வது கட்டமாக ரூ.440.19 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சீர்மிகு நகர திட்டத்தின்கீழ், 52 திட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ.990.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 16]

2.16.5 சேலம் மாநகராட்சி

சேலம் நகராட்சி 1-6-1994 அன்று மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,34,792 ஆகவும், பரப்பளவு 91.34 சதுர கிலோ மீட்டர் ஆகவும், 60 வார்டுகளும் மற்றும் ஆண்டு சராசரி வருமானம் ரூ.211.72 கோடியாகவும் உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- 2019-2020 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் (IUDM)கீழ் 42 சாலை பணிகள் 67.332 கி.மீ. நீளத்திற்கு மறுசீரமைப்பு செய்ய மதிப்பீடு தொகை ரூ.35.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2019-2020 ஆம் ஆண்டு 14-வது மத்திய நிதி குழு (14th CFC) நிதியின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டம், தனிக் குடிநீர்த் திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளை மறுசீரமைப்பு செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.21.27 கோடியில் 104 சாலைப் பணிகள் 36.40 கி.மீ. நீளத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
- சேலம் மாநகராட்சி, மத்திய அரசின் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தால் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- சீர்மிகு நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தில் நகரிலுள்ள அனைத்து சோடியம் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றுதல், சூரிய சக்திமூலம் மின்னாக்கி பொருத்துதல், நேரு கலையரங்க மேம்பாட்டுப் பணிகள், அடுக்குமாடி வாகனம் நிறுத்தம் அமைத்தல் மற்றும் பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட 64 எண்ணிக்கையிலான பணிகள் மதிப்பீடு தொகை ரூ.971.57 கோடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகளின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

[2020 மார்ச் 16

2.16.6. ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,98,121 ஆகவும், பரப்பளவு 109.52 சதுர கிலோ மீட்டர் ஆகவும், 60 வார்டுகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மாநகராட்சியின் ஆண்டு சராசரி வருமானம் ரூ.204.37 கோடியாக உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

- சீர்மிகு நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தின்கீழ் ரூ.916.08 கோடி மதிப்பிலான 23 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

- அம்ருத் 2015-2016 திட்டத்தின்கீழ் ஊராட்சிக் கோட்டையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் தனிக் குடிநீர்த் திட்டம் ரூ.484.45 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- IUDM திட்டத்தின்கீழ் 41.94 கி.மீ. நீள சாலைகள் சீரமைக்க, 9 சிப்பப் பணிகள் ரூ.38.84 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

- ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதி ஆதாரத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.209.22 கோடி மதிப்பீட்டில் எடுத்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதி ஆதாரத்தின்கீழ் கனிராவுத்தர் குளம் புனரமைப்பு செய்யும் பணி ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 12.32 கி.மீ. நீள சாலைகள் சீரமைக்க ரூ.10 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2020 மார்ச் 16]

- 14-வது மத்திய நிதிக் குழு ஆணைய மானியத்தின்கீழ், பாதாளச் சாக்கடைத் திட்டம், குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் சேதமடைந்த 34.71 கி.மீ. நீள சாலைகள் சீரமைக்க 14 சிப்பப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.16.7. திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் நகராட்சி 1-1-2008 அன்று மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,77,778 ஆகும். இம்மாநகராட்சியின் பரப்பளவு 159.35 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ரூ.232.42 கோடியாகவும் உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.948.14 கோடி மதிப்பீட்டில் 26 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

- அம்ரூத் 2015-2016 திட்டத்தின்கீழ் ரூ.250 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

- அம்ரூத் 2017-2020 திட்டத்தின்கீழ் புதிய குடிநீர்த் திட்டம் ரூ.1,063.51 கோடி திட்ட மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அம்ரூத் 2017-2020 திட்டத்தின்கீழ் விடுபட்ட பகுதிகளில் ரூ.604.05 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

- அம்ரூத் 2017-2020 திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட புதிய குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியும் பெறப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP) 2019-2020-ன்கீழ் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் 9 சிப்பங்களாக சாலை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.
- ரூ.11.20 கோடி மதிப்பீட்டில் 16 எண்ணிக்கை நுண் உயிர் உரக்கிடங்குகள் அமைக்கும் பணிகள் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.16.8. வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சி 87.915 சதுர கி.மீ. பரப்பில் 60 வார்டுகளை கொண்டுள்ளது. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்த மாநகரின் மக்கள் தொகை 5,04,079 ஆகும். சராசரி ஆண்டு வருமானம் ரூ.99.73 கோடி.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- இரண்டாம் சுற்றில் வேலூர் மாநகராட்சி சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. வேலூர் கோட்டை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள 12 வார்டுகள் அடங்கிய பகுதியினை, அபிவிருத்தி சார்ந்த பகுதியின்கீழ் (ABD) மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ளது.
- சீர்மிகு நகரத் திட்டத்தில் 32 பணிகள் மேற்கொள்ள ரூ.888.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் வெவ்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.
- குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணி ரூ.240.92 கோடியில் அம்ரூத் திட்டம் 2015-2016-ன்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- அம்ரூத் திட்டம் 2016-2017-ன்கீழ் வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதி மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.343.69 கோடியில் இரண்டாம் கட்ட பாதாளச் சாக்கடைப் பணிகள் மற்றும் ரூ.293.77 கோடியில் மூன்றாம் கட்ட பணிகள், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி மூலமும் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- வேலூர் மாநகராட்சி, மத்திய அரசின் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தால் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- நகர்ப்புற வீடற்றவர்களுக்கான 2 உறைவிடங்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.0.83 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.
- துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடம் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

2.16.9. தஞ்சாவூர் மாநகராட்சி

தஞ்சாவூர் சிறப்பு நிலை நகராட்சி, 19-2-2014 முதல் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 128.02 சதுர கிலோ மீட்டர் மற்றும் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகை 3,51,655 மற்றும் ஆண்டு வருவாய் ரூ.60.17 கோடியாகவும் உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் 48 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.951.68 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா, பசுமைவெளி, பொருளாதார மேம்பாடு, போக்குவரத்து, குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலைகள் போன்ற பிரிவுகளின் அபிவிருத்திக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம் (NUHM) 2017-2018-ன்கீழ், 4 நவீன சுகாதார வளாகக் கட்டடங்கள் கட்டும் பணி ரூ.2 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.
- தஞ்சாவூர் மாநகராட்சி திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநகரமாக மத்திய நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டப் பணிகள் 2018-2019-ல் 40 தார்ச் சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ.15.25 கோடி மதிப்பீட்டில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

- மூலதன மானிய நிதி 2017-2018-ன்கீழ் புதிய மாநகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- மூலதன மானிய நிதி 2017-2018-ன்கீழ் மாரிக்குளம் இடுகாட்டில் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

2.16.10. திண்டுக்கல் மாநகராட்சி

திண்டுக்கல் நகராட்சி 19-2-2014 அன்று மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,225 ஆகவும், பரப்பளவு 14.01 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ரூ.56.30 கோடியாகவும் உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- திண்டுக்கல் மாநகராட்சி திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2019-2020-ன்கீழ் 7.761 கி.மீ. நீளமுள்ள சாலைகளை சீரமைக்க ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- 14-வது மத்திய நிதிக் குழு பரிந்துரையின்கீழ் 2019-2020 ஆம் நிதியாண்டிற்கு ரூ.10 கோடியில் 25.846 கி.மீ. நீளத்திற்கு சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூய்மை இந்தியா இயக்கம்-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018-2019-ன்கீழ் உயிரி அகழ்வு முறையில் (Bio-mining) முருகபவனம் பழனி சாலை உரக்கிடங்கில்

உள்ள குப்பைகளை அகற்ற ரூ.13.16 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.16.11. தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி நகராட்சி, 5-8-2008 அன்று மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,72,408 ஆகவும், பரப்பளவு 90.66 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ரூ.116.25 கோடியாகவும் உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 26.07 கி.மீ. சாலைகளை சீரமைக்க தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2019-2020-ன்கீழ் ரூ.15.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 40 சாலைப் பணிகள், 3 சிப்பங்களாக எடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

- குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 14.45 கி.மீ. சாலைகளை சீரமைக்க 14-வது மத்திய நிதிக் குழு மானியம் 2019-2020-ன்கீழ் ரூ.9.93 கோடி மதிப்பீட்டில் 34 சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

- இம்மாநகராட்சிப் பகுதியில் மழைநீர் வடிகால் கட்ட ரூ.96.12 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு, 6 சிப்பங்களாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சீர்மிகு நகர திட்டத்தின்கீழ், ரூ.866.41 கோடி மதிப்பீட்டில் 47 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- தூத்துக்குடி மாநகராட்சியானது திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

2.16.12. ஓசூர் மாநகராட்சி

ஓசூர் நகராட்சி 1-3-2019 முதல் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. மாநகராட்சியின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 2,45,354 மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 72.41 சதுர கி.மீ. மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 45. மாநகராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.100.95 கோடி ஆகும்.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- இம்மாநகராட்சியில் தற்போது உள்ள குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்த அம்ரூத் திட்டம் 2015-2016-ன்கீழ் ரூ.87.91 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

- தூய்மை இந்தியா திட்டம்-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018-2019-ன்கீழ் தாசேப்பள்ளி உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை தரம் வாரியாக பிரித்தெடுக்க ரூ.6.65 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்வு முறையில் பிரித்து நிலத்தினை மீட்டெடுக்கும் பணி (Bio mining) நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாடு திட்டம் 2019-2020-ன்கீழ் ரூ.7 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 14-வது மத்திய நிதிக் குழு மானியம் 2019-2020-ன்கீழ் ரூ.7.48 கோடி மதிப்பீட்டில் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்த பணிகள் எடுத்துகொள்ளப்பட்டுள்ளன.

2.16.13. நாகர்கோவில் மாநகராட்சி

நாகர்கோவில் நகராட்சி 1-3-2019 முதல் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. மாநகராட்சியின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 2,60,315. மேலும், மாநகராட்சி 49.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் 52 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. மாநகராட்சியின் ஆண்டு சராசரி வருமானம் ரூ.59.56 கோடி ஆகும்.

2020 மார்ச் 16]

2019-2020 ஆம் ஆண்டு மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் விவரம் பின்வருமாறு:

- அம்ரூத் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் அபிவிருத்தி பணிகள் ரூ.251.43 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.76.04 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தூய்மை இந்தியா இயக்கம்-திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் வலம்புரிவிளை உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் பிரித்து நிலத்தினை மீட்டெடுக்கும் பணி (Bio-Mining) ரூ.10.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் 2019-2020-ன்கீழ் 2.14 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

- மூலதன மானிய நிதி 2018-2019-ன்கீழ் புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.16.14. ஆவடி மாநகராட்சி

ஆவடி மாநகராட்சி 17-6-2019 முதல் சிறப்பு நிலை நகராட்சியிலிருந்து மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. மாநகராட்சியின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011-ன்படி மக்கள் தொகை 3,44,721 ஆகும். 65 சதுர கி.மீ. பரப்பளவுடன் 48 வார்டுகளை உள்ளடக்கியது. இம்மாநகராட்சியின் ஆண்டு சராசரி வருமானம் ரூ.100.70 கோடி ஆகும்.

2019-2020 ஆம் ஆண்டு மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் விவரம் பின்வருமாறு:

- திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018- 2019-ன்கீழ் ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் சேக்காடு உரக்கிடங்கில் குப்பையினை

[2020 மார்ச் 16

உயிரி அகழ்வு முறையில் பிரித்து நிலத்தினை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

- தூய்மை இந்தியா இயக்கம்-திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018-2019-ன்கீழ் சேக்காடு உரக்கிடங்கில் ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் மக்காத குப்பைகளில் இருந்து மறுசுழற்சி தன்மை கொண்ட பொருட்களை மீட்பு சேகரிக்கும் மையங்களில் சேகரிக்கப்படுகின்றன.
- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019-2020-ன்கீழ் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 7 சிப்பங்கள் கொண்ட சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018-2019-ன்கீழ் ரூ.27.30 கோடி மதிப்பீட்டில் 5 சிப்பங்கள் கொண்ட மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 14-வது மத்திய நிதிக் குழு மானியம் 2019-2020-ன்கீழ் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் 49 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.17. மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி விருது

சிறப்பான முறையில் செயலாற்றும் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தின விழாவின் போது விருது வழங்க, 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து "மாண்புமிகு முதலமைச்சர் விருது" உருவாக்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாகச் செயல்படும் ஒரு மாநகராட்சி மற்றும் மூன்று நகராட்சிகளுக்கு முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த மாநகராட்சிக்கு பரிசுத்தொகை ரூ.25 இலட்சமும், பாராட்டுப் பத்திரமும் மற்றும் சிறந்த நகராட்சிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக முறையே பரிசுத் தொகை ரூ.15 இலட்சம், ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.5 இலட்சம் மற்றும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டிற்கு சேலம் மாநகராட்சி சிறந்த மாநகராட்சியாகவும் மற்றும் நகராட்சிகளில், தருமபுரி, வேதாரண்யம் மற்றும் அறந்தாங்கி நகராட்சிகள் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த நகராட்சிகளாகவும் தேர்வு செய்யப்பட்டன.

2020 மார்ச் 16]

அதன் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2019 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்கள்.

2.18. தேசிய அளவிலான மத்திய அரசின் 2019 ஆம் ஆண்டிற்கான விருது

2019 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் சிறந்த திட்டச் செயலாக்கத்திற்காக கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன.

4-வது சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சீர்மிகு நகரங்களில், ஈரோடு மாநகராட்சிக்கு சிறந்த செயல்திறனுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

3. பெருநகர சென்னை மாநகராட்சி

நாட்டின் மிகப் பழமையானதும் மற்றும் உலகின் இரண்டாவது பழமையான உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சி, 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் அமைக்கப்பட்டது. இம்மாநகராட்சியின் பரப்பளவு 426 சதுர கிலோ மீட்டராகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இதன் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும்.

நிருவாக வசதிக்காக இம்மாநகராட்சி 200 வார்டுகளைக் கொண்ட 15 மண்டலங்கலாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இந்த 15 மண்டலங்கள் 3 வட்டாரங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3.1. சிறப்புத் திட்டங்கள்

3.1.1. சீர்மிகு நகரம் (Smart City)

- சென்னை சீர்மிகு நகர திட்டத்தின்கீழ், இதுவரையில் ரூ.130.94 கோடி மதிப்பீட்டில் 18 பணிகள் நிறைவடைந்துள்ளன. ரூ.589.65 கோடி மதிப்பீட்டில் 20 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை சீர்மிகு நகர திட்டத்தின் முக்கிய பணியான தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13-11-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.
- மேலும், 28 சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மின்னணு வகுப்பறை, 15 கோயில் குளங்களை மேம்படுத்தும் பணி, பெருநகர சென்னை மாநகராட்சிக் கட்டடங்களில் சூரிய மின் உற்பத்தி அமைப்பு நிறுவும் பணி, மிதிவண்டி பகிர்வு முறை, மாற்றுத் திறனாளிகளுக்கான உணர்வுப் பூங்கா அமைக்கும் பணி, போக்குவரத்து குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை விளக்கும் பூங்கா அமைக்கும் பணி மற்றும் கோபதி நாராயணா சாலையில் உள்ள மேம்பாலத் தூண்களை சுற்றி செங்குத்து தோட்டம் அமைத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

3.1.2. சென்னையில் விரிவான ஒருங்கிணைந்த வாகன நிறுத்துமிடம் மேலாண்மைத் திட்டம்

சென்னையில் விரிவான ஒருங்கிணைந்த வாகன நிறுத்துமிடம் மேலாண்மைத் திட்டம்மூலம் நிலத்தடியில் வாகனம் நிறுத்துமிடம் மற்றும் பல அடுக்கு வாகனம் நிறுத்தம்மூலம் இரண்டு இலட்சம் எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனமும் மற்றும் இரண்டு இலட்சம் எண்ணிக்கையிலான இரு சக்கர வாகனமும் நிறுத்துவதற்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்டுள்ளது. சாத்தியமான இடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு கலந்தாலோசகர் நியமனம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

3.1.3. அறிவுசார்ந்த போக்குவரத்து அமைப்பு திட்டம் (ITS) - JICA நிதி

சென்னை பெருநகர பகுதியில் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்பு மேம்படுத்தும் திட்டமானது ரூ.660 கோடியில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிதி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு நிதியின் உதவியுடன் முறையே ரூ.465 கோடி மற்றும் ரூ.195 கோடியில் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தின்மூலம் போக்குவரத்து தகவல் அமைப்பு மேம்பாடு, போக்குவரத்து மேலாண்மை மற்றும் மின்னணு பேருந்து மேம்பாடு ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்தின் நிருவாக ஒப்புதல் தமிழக அரசின் அரசாணை (இருபதாண்டு) எண் 89 ந.நி(ம)கு.வ.து (ந.நி.1) துறைமூலம் 27-11-2018 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, ஒப்பந்தப்புள்ளி ஆவணம் தயாரிக்கும் பணி, திட்ட செயல்பாடு மற்றும் திட்ட மேற்பார்வை ஆகியவற்றை கண்காணிப்பதற்கான கலந்தாலோசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

3.1.4 நிர்பயா நிதி

சென்னை மாநகரில் பொது இடங்களில் "பெண்கள் பாதுகாப்பிற்கான பாதுகாப்பான நகர திட்டம்" மொத்தம் ரூ.425.06 கோடி செலவில், மத்திய அரசின் பங்களிப்பு ரூ.255.04 கோடியிலும் மற்றும் மாநில அரசின் பங்களிப்பு ரூ.170.02 கோடியிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக நிருவாக ஒப்புதல்

அரசாணை (இருபதாண்டு) எண் 86, ந.நி(ம)கு.வ.து (நநி.1) துறை, நாள் 20-11-2018-ல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகர காவல் துறை, மாநகர போக்குவரத்துக் கழகம் மற்றும் சமூக நலத் துறை ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 45 பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பிரத்யேக கண்காணிப்பு ரோந்து வாகனம் வாங்கப்பட்டு, பெருநகர காவல் துறைமூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

3.2. சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM)

சென்னை மாநகரம் உலகத் தரம் வாய்ந்த நகரமாக வளர்ச்சியடைய வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன், அதன் உட்கட்டமைப்பை உலகதரத்திற்கு இணையாக மேம்படுத்திட, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் சிறப்பான சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2011 முதல் 2016 வரை ரூ.1,451.74 கோடி செலவினத்தில் ஒருங்கிணைந்த சாலை, மழைநீர் வடிகால், நடைபாதை மற்றும் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

3.3. சாலைப் பராமரிப்பு திட்டங்கள்

3.3.1. பேருந்து தட சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தட சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேருந்து தட சாலை பணிகள் யாவும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்ட நிதி (CMCDM) ஆகியவைமூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அனைத்துப் பேருந்து தட சாலைப் பணிகளை கண்காணித்தல், செயல்படுத்துதல், தரத்தினை உறுதி செய்தல் மற்றும் பணிக்கான தொகையை வழங்குவதற்கு சான்றளித்தல் ஆகியவற்றிற்காக திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் (Project Management Consultant) நியமிக்கப்பட்டுள்ளார்.

சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்க அனைத்து பேருந்து தட சாலைகளின் மேற்பரப்பு அகழ்ந்தெடுத்து அமைக்கப்படுகிறது.

2020 மார்ச் 16]

அதிநவீன இயந்திரங்களைக் கொண்டு சாலையின் மேற்பரப்பில் வாகனங்கள் இலகுவாக செல்ல, தளம் சரி செய்தல் (CAMBER), சாலைகள் வலுப்படுத்துதல் (Dense Bituminous Macadam) மற்றும் மேல் தளம் அமைத்தல் (Bituminous Concrete) ஆகிய மூன்று அடுக்குகளாக சாலைகள் அமைக்கப்படுகின்றன.

அனைத்துப் பேருந்து தட சாலைகளும் 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட மின்னணு உணரிபேவர் (sensor) இயந்திரம்மூலம் அமைக்கப்படுவதால், சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகனப் போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகிறது. அனைத்துச் சாலைகளும் 5 அடுக்கு தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அனைத்துப் பேருந்து தட சாலைகளில், சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோபிளாஸ்டிக் வண்ணக்கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (Studs) அமைக்கப்படுகின்றன. மேலும், சிறந்த சாலைகளுக்கு இணையாக வாகனம் ஓட்டுவதை மேம்படுத்தும் பொருட்டு, மரங்களைச் சுற்றிலும் மழைநீர் வடியும் வகையில் கான்கிரீட் ஜாலிகள், சாலைகளின் இரு ஓரங்களிலும் மழைநீர் செல்லும் வகையில் நீர்தடம் (Water table) அமைத்தல், வண்டல் வடியும் குழி, வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்தல் போன்ற போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே நடைமுறையைப் பின்பற்றி, தற்போது 2019-2020 ஆம் நிதி ஆண்டில் 51.83 கி.மீ. நீளத்தில் 204 சாலைப் பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

3.3.2. உட்புறச் சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 33,374 உட்புறச்சாலைகள் 5,525 கி.மீ. நீளத்திற்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. உட்புறச்சாலை பணிகள் யாவும் தமிழக அரசின் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) ஆகிய திட்டங்களின் மானியத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

2018-2019 ஆம் நிதி ஆண்டில் 3782 சாலைப் பணிகள் 591.90 கி.மீ. நீளத்தில் ரூ.320.85 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 95% பணிகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள சாலைப் பணிகள் 2020 மார்ச் மாத இறுதியில் முடிக்கப்படும்.

[2020 மார்ச் 16

2019-2020 ஆம் நிதி ஆண்டில் ரூ.153.69 கோடி மதிப்பீட்டில், 1,497 சாலைப் பணிகள் 229.16 கி.மீ. நீளத்தில் நடைபெற்று வருகின்றன. இச்சாலை பணிகள் 2020, மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும்.

3.4 இயந்திர-வாகனம் சாரா போக்குவரத்து திட்டம் மற்றும் சாலை பாதுகாப்பு பணிகள்.

3.4.1 இயந்திர-வாகனம் சாரா போக்குவரத்தை ஊக்குவித்தல்

இந்தியாவிலேயே முதன்முறையாக இயந்திர-வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தை (Non-Motorised Transport) ஏற்றுச் செயல்படுத்தும் முதல் மாநகராட்சியாக பெருநகர சென்னை மாநகராட்சி விளங்குகிறது. பாதசாரி வாகன இடையூறின்மை, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில்கொண்டு, இயந்திர-வாகனம் சாரா போக்குவரத்தினை ஊக்குவிப்பதற்காக நடைபாதைகளை உலகத்தரத்திற்கு இணையாக 5 அடியிலிருந்து 10 அடியாக அகலப்படுத்தும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படுகிறது. பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, குறிப்பாக முதியோர், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவியர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக 107 பேருந்து தட சாலைகளில் நடைபாதை மேம்பாட்டுப் பணிகள் ரூ.118.17 கோடி மதிப்பீட்டில் சுமார் 170 கி.மீ. நீளத்தில் செய்து முடிக்கப்பட்டன.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019-2020-ன்கீழ் 93.86 கி.மீ. நீளமுடைய 60 நடைபாதை பணிகள் ரூ.96.87 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

முதன்முறையாக, பாதசாரிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக அவர்கள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகளும் செல்வதற்கு ஏதுவாக, 101 பாதசாரி நட்பு நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைகளின் சந்திப்புகள் ஒரே அளவில் இருக்கும் வகையில் டேபிள்டாப் (Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு, அவை வேகத்தடைகளாகவும் பயன்படுகின்றன.

அனைத்துக் கட்டடங்களின் முகப்பிலும் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக, பெருநகர சென்னை மாநகராட்சி செலவிலேயே

2020 மார்ச் 16]

சாய்தளங்கள் (Ramp) அமைக்கப்படுகின்றன. நடைபாதைகளில் இடையூறாக அமைந்துள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின் மாற்றிகள் ஆகியவை நடைபாதை ஓரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்கும்பொருட்டு சிமெண்ட் தடுப்பான்கள் நடைபாதையின் குறுக்கே அமைக்கப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அமைக்கப்படும் நடைபாதைகள், பாதசாரிகள் மிகவும் பாதுகாப்பாக செல்லும் வகையில் உள்ளதால், இப்பணிகளுக்கு பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும், இவ்வகையான நடைபாதைகள் மாற்றுத் திறனாளிகள் உரிமை அமைப்பால் (DRA) சரிபார்க்கப்பட்டு, இப்பணிகளை பாராட்டி வரவேற்றுள்ளது.

மேலும், இப்பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேசிய அளவிலான 5 விருதுகளும் மற்றும் ஒரு சர்வதேச விருதும் கிடைத்துள்ளது.

போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கொள்கை நிறுவனம் (ITDP) மாற்றுத் திறனாளிகளுக்கான நட்பு நடைபாதையுடன்கூடிய தெரு வடிவமைப்பினை பல்வேறு சாலைகளுக்கு வடிவமைத்து வழங்கியுள்ளது. அதாவது, சாலைகளில் வாகனம் செல்வதற்கான ஒவ்வொரு வழியின் (Lane) அகலம் 3.75 மீ. என நிர்ணயம் செய்தும், வாகனங்கள் நேராக செல்வதற்காக வழிவகை செய்தும் மற்றும் பாதசாரிகள் செல்வதற்கு நடைபாதையினை அகலப்படுத்தியும், சாலைகளின் அகலம் அதிகமாக உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு வழிவகை செய்தும் வடிவமைத்துள்ளார்கள். இந்த சாலை வடிவமைப்பு பேருந்து சாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்துப் பேருந்து தட சாலைகளிலும் பாதசாரிகளுக்கான இத்தகைய நடைபாதைகள் அமைக்கப்படும்.

3.5. பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள்

3.5.1. பூங்கா

பெருநகர சென்னை மாநகராட்சியில் 669 பூங்காக்கள், 99 சாலை மையத் தடுப்புகள், 99 போக்குவரத்து தீவுத்திட்டு பூங்காக்கள் மற்றும் 163 சாலையோர பூங்காக்கள் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

[2020 மார்ச் 16

செயல்படுத்தப்படும் திட்ட பணிகள்:

- நகர்ப்புற பூங்காக்களில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நீர்த் தெளிப்பு பாசன சாதனங்கள் பொருத்தப்பட்டு, பூங்காக்கள் நல்ல நிலையில் பசுமையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.
- கடந்த 3 நிதி ஆண்டுகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின்கீழ் ரூ.37.32 கோடி மதிப்பீட்டில் 31 பூங்காக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.
- 2019-2020 ஆம் நிதி ஆண்டில் மூலதன நிதியின்கீழ் ரூ.6.56 கோடி மதிப்பீட்டில் 4 புதிய பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, அவற்றில் 2 பூங்காக்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 2 பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.
- மேலும், 2020-2021 ஆம் நிதி ஆண்டில் 55 புதிய பூங்காக்கள் மற்றும் தரமான 2 நவீன விளையாட்டுத் திடல்கள் ரூ.52.23 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இதனால், சென்னை மாநகரில் பசுமை பரப்பளவு பெருமளவு உயரும்.
- 11 பூங்காக்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கப்பட்டு, சுத்திகரிப்பு நீர் பூங்காக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வைப்பு நிதியின்கீழ் 2018-2019 ஆம் நிதி ஆண்டில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அம்மா சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2018-2019ஆம் நிதி ஆண்டில் சென்னை முழுவதும் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் 23,000 நாட்டு வகை மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.
- பசுமை பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, 2019-2020 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியால் 50,000 மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டு, இதுவரை சுமார் 25,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள மரக்கன்றுகள் நடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020 மார்ச் 16]

3.5.2. விளையாட்டுத் திடல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் விளையாட்டு மைதானங்கள், குழந்தைகள் விளையாட்டுத் திடல், உடற்பயிற்சி கூடம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல்குளம், டென்னிஸ், ஸ்கேட்டிங், இறகு/பூப்பந்து, கைப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து, ஹாக்கி, குத்துசண்டை, கபடி, கிரிக்கெட் மற்றும் எறிபந்து போன்ற பல்வேறு வகையான 872 திடல்கள் சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டமைப்பு வசதிகள் திறம்பட பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், சுற்று வட்டாரங்களிலுள்ள விளையாட்டு வீரர்கள் பயன்பெறுகின்றனர்.

- கடந்த 3 நிதி ஆண்டுகளில், ரூ.4.54 கோடி திட்ட மதிப்பீட்டில் 3 விளையாட்டுத் திடல்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 2019-20-ல் TUFIDCO-ன் CSR நிதியின்கீழ் ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சமீபகாலமாக, மாநகராட்சிக்கு சொந்தமான விளையாட்டுத் திடல்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தரத்திற்கேற்ப தரம் உயர்த்தி தினசரி பராமரிக்கும் பணிகளை ஒழுங்குபடுத்தும் வகையில், 38 டென்னிஸ் மைதானங்கள், 19 பூப்பந்து மைதானங்கள் மற்றும் 16 சறுக்கு விளையாட்டுத் திடல்கள் 5 ஆண்டுகளுக்கு மேம்படுத்திப் பராமரிக்க வருவாய் பகிர்வு ஒப்பந்த அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்வித கூடுதல் செலவும் இன்றி விளையாட்டு மைதானங்கள் உயர் தரத்துடன் பராமரிக்க ஏதுவாக இருக்கிறது.

3.5.3. அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

அம்ரூத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது, திறந்தவெளிகளின் பசுமை பரப்பை மேம்படுத்துதல் மற்றும் சிறுவர்கள் முதல் மூத்த குடிமக்கள் வரை பயன்படுத்தக்கூடிய வகையிலான சாதனங்களுடன் சிறப்பு ஏற்பாட்டுடன் பூங்காக்கள் அமைத்தல் ஆகும். இதனால் நகரங்களின் மதிப்பு அதிகரிக்க ஏதுவாகும். அம்ரூத் திட்டத்தின்கீழ் நிதி

ஒதுக்கப்படும் முறை, இத்திட்டம் மத்திய, மாநில அரசின் முறையே 50 மற்றும் 20 சதவிகிதம் பங்கீட்டுடனும் மற்றும் 30 சதவிகிதம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பங்கீட்டுடனும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2015-2016, 2016-2017, 2017-2020 ஆம் நிதியாண்டுகளில் அம்ரூத் திட்டம் மற்றும் ஊக்க நிதியின் (2017-2018) கீழ் ரூ.37.74 கோடி மதிப்பீட்டில் 55 புதிய பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அம்ரூத் ஊக்க திட்டத்தின் ஒரு பகுதியாக, 2018-2019 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3 புதிய பூங்கா பணிகள் விரைவில் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3.6. தெரு விளக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்துப் பேருந்து வழிதடங்களிலும், உட்புற சாலைகளிலும் சீரான வெளிச்சம் தரும் தெரு மின்விளக்குகளை அமைப்பது பெருநகர சென்னை மாநகராட்சி மின் துறையின் முக்கிய நோக்கமாகும்.

சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டபோது, விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், மையப் பகுதிகளில் உள்ளது போன்றே, மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெரு மின்விளக்குகள், புதை மின் வடம் ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய தெரு விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி 2,85,828 தெரு விளக்குகளை பராமரித்து வருகிறது. இவையனைத்தும் மின் சேமிப்பு வகை எல்.இ.டி. விளக்குகளாகும். 100 சதவிகித தெரு விளக்குகளை எல்.இ.டி. மின் விளக்குகளாக மாற்றி அமைத்த வெகு சில மாநகராட்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியும் ஒன்றாகும். இதனால், ஒவ்வொரு மாதமும் பெருநகர சென்னை மாநகராட்சி மின் கட்டணம் செலுத்துவது ரூ.6 கோடியிலிருந்து ரூ.3.50 கோடியாக குறைந்துள்ளது. இதன் காரணமாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதத்திற்கு ரூ.2.50 கோடியும், வருடத்திற்கு ரூ.30 கோடியும் மின் கட்டணம் சேமிப்பாகிறது. இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27-2-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மின் சேமிப்பைக் கருத்தில்கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துக் கட்டடங்களிலும் சூரிய ஒளி மின்

2020 மார்ச் 16]

தகடுகள் பொருத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 14-8-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதன்படி, 662 கட்டடங்களில் 3.064 மெகா வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் தகடுகள் ரூ.24.03 கோடி மதிப்பீட்டில் பொருத்தப்பட்டுள்ளன. இந்த பணி சென்னை சீர்மிகு நகர நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் ஆண்டிற்கு ரூ.3 கோடி மின் கட்டணம் சேமிக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில், புதிதாக வளர்ச்சியடைந்து வரும் இடங்களில் மின் சேமிப்பு வகை எல்.இ.டி. விளக்குகளுடன்கூடிய 2,441 எண்ணிக்கையில் புதிய தெரு மின்விளக்கு கம்பங்கள் அமைக்கும் பணிகள் ரூ.15.20 கோடி மதிப்பீட்டில் CMCDM 2019-2020 ஆம் ஆண்டு நிதியின்மூலம் நடைபெற்று வருகின்றன.

தெரு விளக்கின் வெளிச்சத்தை மேம்படுத்தும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மைய பகுதிகளில் 10,015 எண்ணிக்கையில் துருபிடித்த, சேதமடைந்த தெரு மின் விளக்கு கம்பங்கள் மற்றும் 131.96 கி.மீ. சேதமடைந்த புதை மின் கம்பிகளை மாற்றி அமைக்கும் பணிகள் ரூ.44.31 கோடி மதிப்பீட்டில் O&M (GFF) 2019-2020 ஆம் ஆண்டு நிதியின்மூலம் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 7,077 எண்ணிக்கையிலான தெரு விளக்கு மின் பகிர்மான பெட்டிகளில் தொலைதூரத்திலிருந்து கண்காணிக்கும் முறை (Remote Group Monitoring System) ரூ.41.50 கோடி மதிப்பீட்டில் நிர்பயா மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் தெரு விளக்குகள் 100 சதவிகிதம் ஒளிர்வதை கண்காணித்து, எரியாத மின் விளக்குகளை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யப்படும்.

3.7. திடக் கழிவு மேலாண்மை

பெருநகர சென்னை மாநகராட்சியில் சராசரியாக, தினந்தோறும் 5,100 மெட்ரிக் டன் அளவிற்கு திடக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்படுகின்றன.

தற்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சியில் 12 மண்டலங்களில் மாநகராட்சி மூலமாகவும், 3 மண்டலங்களில் தனியார்

[2020 மார்ச் 16

மூலமாகவும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இனிவரும் காலங்களில், இப்பணிகள் மண்டலம் 4, 5, 6 மற்றும் 8 ஆகிய 4 மண்டலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும், மீதமுள்ள 11 மண்டலங்களில் தனியார் மூலமாகவும் நடைபெற இருக்கின்றன.

3.7.1. முதல்நிலை திடக் கழிவு சேகரம்

திடக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ செயல்படுத்தும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சியால் தற்பொழுது 94% அளவிற்கு வீடுகள்தோறும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையில் 5,388 மூன்று சக்கர மிதிவண்டிகள் மற்றும் 434 பேட்டரிமூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட மெரீனா மற்றும் எலியட்ஸ் கடற்கரை மணற்பரப்புகளில் உள்ள குப்பைகளை அகற்றி சுத்தப்படுத்தும் பொருட்டு, அயல்நாட்டிலிருந்து 8 மணல் சலிக்கும் இயந்திரங்கள், கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

3.7.2. திடக்கழிவு உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியானது திடக்கழிவுகளை தரம் பிரித்து கையாள்வதில் சிறப்பு கவனம் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

3.7.3. இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகரமும், போக்குவரத்தும்

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்பொழுது இரண்டாம் கட்ட திடக்கழிவு அறிவியல் ரீதியாக சேகரிக்கப்படுகிறது. மேலும், கட்டட இடிபாடு கழிவுகள் பல்வேறு வகையான உயர் தொழில்நுட்பமுடைய 660 இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தி அகற்றப்படுகின்றன. திடக்கழிவு அகற்றும் வாகனங்கள், நிர்ணயித்த போக்குவரத்து தட வரைபடத்தின்படி திடக்கழிவுகளை அகற்றி குப்பை மாற்றும் வளாகங்களுக்கும், கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களுக்கும் கொண்டு செல்வதை G.P.S கருவிமூலம் கணினி வழியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 16]

3.7.4. பரவலாக்கப்பட்ட திடக்கழிவு பதனிடுதல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு கொட்டும் வளாகங்களில் சேகரமாகும் குப்பைகளின் அளவினை குறைக்கும்பொருட்டு, மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் கிடங்குகள் மற்றும் உயிரி எரிவாயு கலன்கள் போன்ற பரவலாக்கப்பட்ட திடக்கழிவு பதனிடுதல் அலகுகளை அமைத்துள்ளது.

3.7.4.1. மக்கும் குப்பை

நாள்தோறும் சராசரியாக பெறப்படும் 550 மெட்ரிக் டன் எடை கொண்ட மக்கும் கழிவுகள் கீழ்க்கண்ட குப்பை பதனிடும் நிலையம் / அமைப்புகள்மூலம் பதனிடப்பட்டு வருகின்றன.

- 161 உரம் தயாரிக்கும் கிடங்குகள்.
- 2 மண்புழு உரம் தயாரிக்கும் கிடங்குகள்.
- 38 உயிரி எரிவாயு தயாரிக்கும் கலன்கள்.
- 5 BARC தொழில்நுட்ப அடிப்படையில் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் கலன்கள்.
- 1,378 உர உறைக் கிணறுகள்.
- உரம் பதனிடுதலுக்காக, 202 பயன்படுத்தப்படாத சின்டக்ஸ் தொட்டிகள்
- பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பூங்காக்களிலும் 582 மூங்கில் தொட்டிகள் மற்றும் 31 எண்ணிக்கையிலான மண் குழிகள்மூலம் நாள்தோறும் சுமார் 69 மெட்ரிக் டன் தோட்டக்கழிவுகள் கையாளப்பட்டு வருகின்றன.
- நாளொன்றுக்கு 50 டன் ஈரக்கழிவுகளை கொண்டு உயிரி எரிவாயு உற்பத்தி செய்யும் நிலையம், பழைய மத்திய தார் கலவை மையம் மண்டலம்-8-ல் அமைக்கப்பட்டு வருகிறது.
- மக்கக்கூடிய ஈரக்கழிவுகள், குப்பைக்கொட்டும் வளாகங்களுக்கு செல்வதை குறைக்கும் வகையில் ஒவ்வொன்றும் 100 மெட்ரிக் டன் அளவுள்ள உயிரி எரிவாயு

[2020 மார்ச் 16

(Bio CNG) உற்பத்தி செய்யும் நிலையங்கள் 3 இடங்களில் நிறுவப்பட உள்ளன. மேலும், இதுபோன்ற 3 நிலையங்கள் வெவ்வேறு இடங்களில் அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளன.

- 5 இடங்களில் தாவரக்கழிவுகள் மற்றும் தேங்காய் ஓடுக் கழிவுகளை நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் அளவிற்கு பதனிடும் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மாதவரத்தில், ஒவ்வொன்றும் 50 மெட்ரிக் டன் அளவிற்கு ஈரக்கழிவுகளை காற்றுப்புகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் ஆலைகள் இரண்டு இடங்களில் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

3.7.4.2. மக்காத கழிவுகள்

- சேகரிக்கப்படும் மக்காத கழிவுகள் நேரடியாக அந்தந்த மண்டலங்களில் உள்ள 74 வளங்கள் மீட்பு மையங்கள் மற்றும் 110 பொருள் மீட்பு மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு பிரிக்கப்பட்ட கழிவுகள் மறு சுழற்சியாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

- தற்பொழுது நாளொன்றுக்கு 229 மெட்ரிக் டன் உலர் கழிவுகள் கையாளப்பட்டு வருகின்றன.

- மண்டலம்-2 மணலியில், மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகள் நாளொன்றுக்கு 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட நவீன எரிகலன்மூலம் எரியூட்டும் பணி, செயல்பட்டு வருகிறது.

- மண்டலம்-4 கொடுங்கையூரில் மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகள் நாளொன்றுக்கு 50 டன் திறன் கொண்ட நவீன எரியூட்டும் எரிகலன் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகள் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட நவீன எரியூட்டும் எரிகலன்கள் 6 இடங்களில் அமைக்கும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

- ஒவ்வொன்றும் 400 மெட்ரிக் டன் திறன் கொண்ட அளவிற்கு கட்டட இடிபாடு கழிவுகளை பதப்படுத்தும் நிலையங்கள் கொடுங்கையூர், பெருங்குடி ஆகிய இரண்டு இடங்களில் அமைப்பதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- மறுசுழற்சி செய்ய இயலாத எரியக்கூடிய மக்காத கழிவுகளை சிமென்ட் ஆலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தும் பணிக்காக ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

- வெப்பச்சிதைவு (Pyrolysis method) முறையில் நெகிழி கழிவுகள்மூலம் தலா 20 மெட்ரிக் டன் அளவிற்கு கச்சா எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் மாதவரம், சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் அமைக்கும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

3.7.5. திடக் கழிவுகளை அகழ்ந்தெடுக்கும் பணி

- மண்டலம்-14, பள்ளிக்கரணை, பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு, குவிந்துள்ள 37,510 கன மீட்டர் திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணி ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி ஜூன் 2020-ல் முடிக்கப்படும்.

- மண்டலம்-7, அத்திப்பட்டில் பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு, குவிந்துள்ள 86,122 கன மீட்டர் திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணி ரூ.5.69 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி டிசம்பர் 2020-ல் முடிக்கப்படும்.

- மண்டலம்-1, சாத்தாங்காடில் பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு, குவிந்துள்ள 1,25,635 கன மீட்டர் திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணி ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி டிசம்பர் 2021-ல் முடிக்கப்படும்.

[2020 மார்ச் 16

- இப்பணிகள் முடிவுற்ற பிறகு, மொத்தம் 37.89 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும்.

3.7.6. ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியும் நெகிழிக்குத் தடை

அரசாணை (நிலை) எண் 84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 25-6-2018-ன்படி ஒருமுறை உபயோகித்து தூக்கி எறியும் நெகிழிகளை தடை செய்வது பெருநகர சென்னை மாநகராட்சியில் 1-1-2019 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுநாள் வரை 316.81 மெட்ரிக் டன் நெகிழிகள் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.1.18 கோடி அபராத கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

3.7.7. தூய்மை இந்தியா திட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சி "திறந்தவெளி மலம் கழித்தலற்ற" மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் 1,436 சமுதாய கழிவறை இருக்கைகள் மற்றும் கழிப்பறை வசதி இல்லாதவர்களுக்கு 6,636 தனி நபர் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 23-11-2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாநகராட்சி என மீண்டும் மறு சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்திட தூய்மை இந்தியா திட்டத்தில் 2,305 மூன்று சக்கர மிதிவண்டிகளும், 31,406 மூன்று சக்கர மிதி வண்டிகளுக்கான குப்பைத் தொட்டிகளும், 13,183 காம்பாக்டர் குப்பைத் தொட்டிகளும், 2,775 ரோட்டோ மோல்டு குப்பைத் தொட்டிகளும் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன.

தூய்மை இந்தியா திட்ட நிதியின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக பல்வேறு வகையான 24 கனரக வாகனங்கள் மற்றும் 411 பேட்டரிமூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.8. மழைநீர் வடிகால்

பெருநகர சென்னை மாநகராட்சி 2,071 கி.மீ.. நீளத்திற்கு 8,835 மழைநீர் வடிகால் கட்டமைப்புகளை உருவாக்கி மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காவண்ணம் பராமரித்து வருகிறது.

2020 மார்ச் 16]

விரிவாக்கம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகரின் பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதை தடுக்க, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியை 4 நிலப்பகுதிகளாக (அடையாறு, கூவம், கோவளம் மற்றும் கொசஸ்தலையாறு) பிரித்து, அவ்வடிநிலப்பகுதிகளில் 1,069 கி.மீ. நீளத்திற்கு 4,034 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் அமைக்க மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்டது.

உலக வங்கி நிதி உதவியுடன், அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் வடிநிலத்தில், 406 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,387 கோடி செலவில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர் ஆகிய பகுதிகளில் முடிக்கப்பட்டன. இப்பணி உலக வங்கி குழுவினால் பாராட்டப்பட்டுள்ளது.

மேலும், 2018-2019 ஆம் ஆண்டு சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 359 இடங்களில் ரூ.290 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சீர்மிகு நகர நிதியின்கீழ் 121 இடங்களில் ரூ.150 கோடி மதிப்பீட்டிலும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 95 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திட்டங்கள் துரிதமாக செயல்படுத்தப்பட்டதால், 19-9-2019, 18-10-2019 மற்றும் 1-12-2019 ஆகிய நாட்களில் முறையே 104 மி.மீ., 132 மி.மீ. மற்றும் 112 மி.மீ. அளவிற்கு பெரு மழை பெய்தபோதும், சென்னை மாநகரில் எந்த இடத்திலும் பெரிய அளவில் மழைநீர் தேங்கவில்லை. இதை அனைத்து தரப்பினரும் பாராட்டியுள்ளனர்.

அடுத்தகட்டமாக, கோவளம் வடிநிலப் பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் 360 கி.மீ. நீளத்திற்கு ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த கே.எப்.டபிள்யூ (KfW) என்ற ஜெர்மன் நாட்டு வங்கி நிதி உதவி அளிக்க இந்திய அரசின் அனுமதி பெற்று, 3-3-2020 அன்று தமிழக அரசு மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தம் செய்துள்ளது. பூர்வாங்க பணிகள் ஜூன் மாதம் 2020-க்குள் தொடங்கப்படும். இப்பணிகள் மூன்று ஆண்டுகளில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

[2020 மார்ச் 16

கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் 765 கி.மீ. நீளத்தில் ரூ.2,518 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி அளிக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பூர்வாங்க பணிகள் ஜூன் மாதம் 2020-க்குள் தொடங்கப்படும். இப்பணிகள் மூன்று ஆண்டு காலத்தில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் திருவொற்றியூர், மணலி, மாதவரம், கொளத்தூர், அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 33 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

3.8.1. நீர்நிலைகள் புனரமைத்தல்

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நீர்நிலைகள் மற்றும் கோயில் குளங்களை சீரமைத்தல் மற்றும் புனரமைப்பிற்காக சட்டப் பேரவையில், "நீடித்த நிலையான நீர் பாதுகாப்பு திட்டம்" (Sustainable Water Security Mission) என்ற திட்டத்தினை 2015 ஆம் ஆண்டு அறிவித்தார்கள். அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 210 நீர்நிலைகளில் 86 நீர்நிலைகள் சீரமைக்கும் பணி முடிவடைந்தும், 97 நீர்நிலைகள் சீரமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 27 நீர்நிலைகள் அரசின் நிதி ஆதாரம் பெற்று சீரமைக்கப்படும்.

மேலும், 3.50 இலட்சம் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளனவா என ஆராயப்பட்டு, அவற்றில் கூடுதலாக 45,000 எண்ணிக்கையிலான வீடுகளில் புதிதாக மழைநீர் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2,500 உறைகிணறுகள் சென்னை மாநகராட்சி முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. 200-க்கும் அதிகமான பாழடைந்த சமுதாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

அரசின் இந்த புதிய உத்திகள்மூலம் 2019 ஆம் ஆண்டு பருவமழைக்கு பின்பு, சென்னை மாநகரின் நிலத்தடி நீர் மட்டம் சுமார் 12 முதல் 15 அடி வரை உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது மத்திய அரசின் நீர் பாதுகாப்பு மையம்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சி, ஒரு முன்னோடி மாநகராட்சியாகத் திகழ்கிறது.

3.8.2. நீர்வழிக் கால்வாய்கள் சீரமைத்தல்

பெருநகர சென்னை மாநகராட்சி 48 கி.மீ. நீளமுள்ள 30 நீர்வழிக் கால்வாய்களை பராமரித்து வருகிறது. பெரிய நீர்வழிக்

2020 மார்ச் 16]

கால்வாய்களில் தடையின்றி மழைநீர் செல்வதற்கு கால்வாயில் தேங்கும் ஆகாய தாமரை மற்றும் மிதக்கும் கழிவுகள் நவீன ஆம்பிபியன் இயந்திரம்மூலம் அகற்றப்படுகின்றன. அதேபோல், சிறிய நீர்வழிக் கால்வாய்களில் தேங்கும் ஆகாய தாமரை மற்றும் மிதக்கும் கழிவுகள் 3 ரோபோட்டிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள்மூலம் அகற்றப்படுகின்றன. மேலும், மழைக்காலத்திற்கு முன்பாக இந்த இயந்திரங்கள்மூலம் ஆண்டிற்கு இரண்டு முறை ஆகாய தாமரை மற்றும் மிதக்கும் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

மேலும், நீர்வழிக் கால்வாய்களில் ஆகாய தாமரை அகற்ற கூடுதலாக ஒரு ஆம்பிபியன் இயந்திரம் ரூ.7.50 கோடி செலவிலும், ஒரு ரோபோட்டிக் எஸ்கவேட்டர் ரூ.6.50 கோடி செலவிலும் கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதைப்போன்று மழைநீர் வடிகால்களைத் தூர்வார, 7 எண்ணிக்கையில் Super sucker with Recycler இயந்திரம் ரூ.36.40 கோடி செலவில் கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 3 மினி ஆம்பிபியன் இயந்திரங்கள் ரூ.5.10 கோடி செலவில் கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3.8.3. மழைநீர் வடிகால்களில் மழைநீர் தடுப்பான்கள் அமைத்தல்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை மேற்கொள்ள நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில், மழைநீர் வடிகாலில் மழைநீர் நதிகளை சென்றடையும் இடங்களில், குப்பைகள் மற்றும் மிதக்கும் கழிவுகள் தடுக்க மழைநீர் தடுப்பான்கள் (Trash Arrestors) அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இது வரையில் 75 இடங்களில் Trash Arrestors அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மிதக்கும் கழிவுகள் மற்றும் ஆகாய தாமரை போன்றவை நதிகளில் தடுக்கப்பட்டு, கடலில் சேர்வது தவிர்க்கப்படுகிறது.

3.9. பாலங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையால், 14 மேம்பாலங்கள், 12 இரயில்வே மேம்பாலங்கள், 16 இரயில்வே சுரங்கப்பாதைகள் மற்றும் முக்கிய பேருந்து சாலைகளில் 5 பாதசாரிகள் சுரங்கப்பாதைகள், 4 நடை மேம்பாலங்கள் மற்றும் 232 சிறு பாலங்கள் சேர்த்து, மொத்தம் 283 இடங்களில் பாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 16

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.288.27 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 24 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொளத்தூர்-வில்லிவாக்கம் சந்திக்கடவு எண் 1-ல் ஒரு மேம்பாலம் அமைக்கும் பணி, புழல் ஏரி உபரி நீர் கால்வாயின் குறுக்கே 3 இடங்களில் பாலம் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட 8 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பின்வரும் 14 பணிகள் துவங்கப்பட உள்ளன:

- மாம்பலம் இரயில் நிலையத்திலிருந்து தியாகராயநகர் பேருந்து நிலையம் வரை ஒரு ஆகாய நடைபாதை அமைக்கும் பணி.
- மேம்பாலங்கள் / சுரங்கப்பாதைகளில் மாறும் வண்ண மின்விளக்குகள் அமைக்கும் பணி
- மேம்பாலங்களின் தூண்களை சுற்றி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய செங்குத்து தோட்டம் அமைக்கும் 7 பணிகள்
- அருணாச்சலம் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே கூடுதலாக பாலம் அமைக்கும் பணி
- நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் குறுக்கே இரும்பிலான நடைமேம்பாலம் அமைக்கும் பணி
- பார்த்தசாரதி பாலம், வைத்தியநாதன் பாலம், மீனாம்பாள் சாலை பாலம் ஆகிய 3 பாலங்களில் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்.

ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தினை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி, யானைக்கவுனி பாலச்சாலையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தில் அணுகுசாலை அமைக்கும் பணி ஆகிய 2 பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் ரூ.3.08 கோடி மதிப்பீட்டில் 9 பணிகள் நிறைவடைந்துள்ளன. ரூ.10.08 கோடி மதிப்பீட்டில் 3 பணிகள் நடைபெற்று வருகின்றன.

2017-2018 ஆம் ஆண்டில் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில், 8 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

3.10 கல்வித் துறை

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"
என்றார் திருவள்ளுவர்.

அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே. அக்கல்விச் செல்வத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித் துறை சிறப்பாக அளித்து வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின்கீழ் 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள், 32 மேல்நிலைப் பள்ளிகள் என 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் மாணவர்கள் உயர் கல்வியினைத் தொடர ஒவ்வோர் ஆண்டும் ஊக்கத் தொகையானது படிப்புக் காலம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. 2018-2019 ஆம் கல்வி ஆண்டில் 300 மாணவர்களின் உயர்கல்விக்கு ஊக்கத் தொகையாக ரூ.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லா சீருடைகளும், மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லா சீருடை, நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எவர்சில்வர் குடிநீர்க் குவளைகளும் ரூ.3.21 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தோடு, மழலையர் பள்ளிகளின் கல்வித் தரத்தினை உயர்த்திட மாண்டிசோரி (Montessori) கல்விமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மழலையர் பிரிவில் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள 73 ஆசிரியர்களுக்கு மாண்டிசோரி (Montessori) கல்வி முறையில் பயிற்சி வழங்கப்பட்டு, அதற்கான கற்றல் உபகரணங்கள் 31 பள்ளிகளில் உள்ள 66 வகுப்பறைகளுக்கு ரூ.60.36 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் CITIIS என்னும் திட்டத்தின்கீழ் 46 பள்ளிகளை முன்மாதிரி திறன் பள்ளிகளாக மாற்றி அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அக்ஷயபாத்திரா எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம்மூலம் திருவான்மியூர், வேளச்சேரி மற்றும் அடையாறு பகுதிகளில் உள்ள

[2020 மார்ச் 16

சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு “காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம்” மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களால் சென்னை மேல்நிலைப் பள்ளி, திருவான்மியூரில் 25-2-2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 5,000 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டமானது 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் 25,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் மேலும் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

"Wings To Fly" என்ற திட்டத்தின்மூலம் ஒவ்வொரு வருடமும் 3 கட்டங்களாக மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு இறுதிச் சுற்றில் வெற்றி பெற்ற மாணவர்களைத் தேர்வு செய்து கல்விச் சுற்றுலாவாக வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

சென்னை தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றி வரும் 211 ஆசிரியர்களுக்கு பள்ளிக் குழந்தைகளிடையே உள்ள உளவியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், சென்னை பள்ளிகளில் பணிபுரியும் 281 தலைமையாசிரியர்களின் தலைமைப் பண்புகளை மேம்படுத்திட அண்ணா மேலாண்மை நிறுவனத்தோடு (Anna Institute of Management) இணைந்து பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு, ரூ.95.62 இலட்சம் செலவில் மாலைநேர சிறப்பு வகுப்பின்போது அவர்கள் களைப்பு நீங்கி கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட ஊட்டச்சத்து உணவாக தினமும் "சுண்டல்" வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் தொழில்நுட்பத்துடன்கூடிய கல்வி வழங்குவதற்காக நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 84 வள வகுப்பறைகளும் (Smart Class Rooms), 28 பள்ளிகளில் மேம்படுத்தப்பட்ட வள வகுப்பறைகளும் (Advance Smart Class Rooms) நிறுவப்பட்டு, அவை மாணவர் பயன்பாட்டில் உள்ளன. மேலும், மாணவர்களிடம் பொது அறிவினை வளர்த்திட நாள்தோறும் செய்தித்தாள்கள் அனைத்து 281 பள்ளிகளுக்கும் ரூ.27.48 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் ஒவ்வோர் ஆண்டும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், பெற்ற

2020 மார்ச் 16]

மதிப்பெண்கள் அடிப்படையில் 50 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, தேசிய கல்விச் சுற்றுலாவிற்கு கல்வித் துறைமூலம் ரூ.9.11 இலட்சம் மதிப்பீட்டில் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

2018-2019 ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் 90.49 சதவிகித தேர்ச்சி பெற்றனர். சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 4 பள்ளிகள் 100 சதவிகித தேர்ச்சியை அளித்தன. 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 92.44 சதவிகித மாணவர்கள் வெற்றி பெற்றனர். 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 21 பள்ளிகள் 100 சதவிகித தேர்ச்சியை அளித்தன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்கள் சென்னை பள்ளி மாணவர்களுடன் மேற்கொண்டுவரும் கலந்துரையாடல் "Coffee with Commissioner" எனும் நிகழ்ச்சி ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு வருகிறது. சென்னைப் பள்ளி மாணவர்கள் மகிழ்ச்சியுடன் இக்கலந்துரையாடலில் பங்கேற்று வருகின்றனர்.

3.11. அம்மா குடிநீர்

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டில் "அம்மா குடிநீர்த் திட்டம்'' என்ற திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டம் ஏழை மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விலையில்லாமல் வழங்க வகை செய்ய திட்டமிடப்பட்டு, ரூ.5.30 கோடி செலவில் 50 இடங்களில் அம்மா குடிநீர் மையம் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நாளது தேதி வரை 36.58 கோடி லிட்டர் குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு குடிநீர் மையத்தில் இருந்தும் சராசரியாக 8,000 லிட்டர் அளவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

3.12. அம்மா உணவகம்

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்குவதற்காக, அம்மா உணவகங்களை துவக்கினார்.

[2020 மார்ச் 16

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் 407 அம்மா உணவகங்கள் தொடங்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. அம்மா உணவகங்களில் காலையில் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் (சாம்பார் சாதம், கறிவேப்பிலை சாதம், எலுமிச்சை சாதம்) ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மற்றும் மாலை நேரத்தில் இரண்டு சப்பாத்தி பருப்பு கடைசலுடன் மூன்று ரூபாய்க்கும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நாளது வரை, அம்மா உணவகங்களில் 67.70 கோடி இட்லிகளும், 22.44 கோடி பலவகை சாதங்களும், 31.60 கோடி சப்பாத்திகளும், விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு நாளும் சுமார் 3.5 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டுவரும் இத்திட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு, அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், பதிவு செய்யப்பட்ட கட்டடத் தொழிலாளர்களுக்கு, அம்மா உணவகத்தில், 3 வேளையும் விலையில்லா உணவு வழங்கும் திட்டம், 4-3-2019 முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு, 29-2-2020 வரை 65,712 கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

3.13. தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களும், 16 நகர்ப்புற சமுதாய நல மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் தொற்று நோய்கள், தொற்றா நோய்களுக்கு சிகிச்சை, கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகர்ப்புற சமுதாய நல மையங்களில் துணை மாவட்ட மருத்துவமனைகளில் அளிக்கப்படுவதைப்போல, மருத்துவ சேவைகள் அளிக்கப்படுகின்றன.

2020 மார்ச் 16]

மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ உபகரணங்கள், சிறப்பு மருத்துவ முகாம்கள், நகர்ப்புற சுகாதார ஊட்டச்சத்து நாள், தர உறுதி, அலுவலக நடைமுறை செலவுகள், நோயாளி நலச் சங்கம், மகளிர் ஆரோக்கியா சமிதி மற்றும் உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் 34 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் 28 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 6 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 9 புதிய நகர்ப்புற சமுதாய நல மையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு 5 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 இடங்களில் புதிய கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.8.44 கோடி செலவில் செனாய் நகர் மகப்பேறு மருத்துவமனையில் புதிய கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 3 இரத்த சுத்திகரிப்பு மையங்கள் தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு ரூ.2.52 கோடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் (மண்டலம் 14) பெருங்குடியில் ஒரு இரத்த சுத்திகரிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், திருவொற்றியூர் (மண்டலம் 1) மற்றும் சின்னப்போரூர் (மண்டலம்-11)-ல் இரத்த சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 36 பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் (Polyclinic) 2017-2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு குடிசைப் பகுதி மக்களுக்கு பல்வகை நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இவை திங்கள் முதல் சனிக்கிழமை வரையிலான வார நாட்களில் தினமும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 வரை செயல்படுகின்றன.

3.14. ஆயுஷ் மருத்துவமனைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா / இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) மண்டலம் 4, 10 மற்றும் 13-ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் 2016-மார்ச் முதல் நாள் ஒன்றுக்கு சராசரியாக 200 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதுவரை 7,30,000 புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர்.

3.15. கால்நடை மருத்துவம்

3.15.1. தெரு நாய்கள் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ள பகுதிகளில் உள்ள தெரு நாய்கள் பிடித்து வரப்பட்டு, விலங்குகள் இனக் கட்டுப்பாட்டு விதி 2001-ன்படி நாய் இனக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவற்றிற்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டு, அடையாள குறியிடப்பட்டு, சிகிச்சைக்குப் பிறகு அவை பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் விடப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் சிறப்புத் திட்டமாக, “வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரம்” என்ற இலக்கினை நிறைவேற்ற 68,877 தெருநாய்களுக்கு, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் திட்டம், வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் நிதி ஆண்டில் 13,587 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

3.15.2. இறைச்சிக் கூடங்கள்

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் பெரம்பூர், வில்லிவாக்கம், சைதாப்பேட்டை மற்றும் கள்ளிக்குப்பம் ஆகிய இடங்களில் இறைச்சிக் கூடங்கள் இயங்கி வருகின்றன.

3.16. நகர்ப்புற வீடற்றோருக்கான காப்பகங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 51 காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் 38 வீடற்றோருக்கான காப்பகங்களும், 13 மருத்துவமனை உள்நோயாளிகளின் உடனிருப்பவர்கள் தங்கும் சிறப்பு காப்பகங்களும் அடங்கும். இக்காப்பகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, வீடற்றோர்களுக்கு மற்ற துறைகளுடன் இணைந்து சமூக உரிமைகளை பெற்றுத் தருகிறது. இதுவரை, இந்த காப்பகங்களின்மூலம் பயனடைந்த மொத்த வீடற்றோர்களின் எண்ணிக்கை 10,150 மற்றும் உள்நோயாளிகளுடன் வந்து பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 32,733 ஆகும். மேலும், தற்போது 1,879 பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகிறார்கள்.

2020 மார்ச் 16]

3.17. பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்

பெருநகர சென்னை மாநகராட்சி பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களை பொது மக்கள் இலவசமாக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இச்சேவை தொடங்கப்பட்டதிலிருந்து, நாளதுவரை 2,17,37,415 பிறப்புச் சான்றிதழ்களும் 51,79,875 இறப்புச் சான்றிதழ்களும் சென்னை மாநகராட்சி இணையதளத்திலிருந்து பொது மக்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

3.18. பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொசுக்களின்மூலம் பரவும் நோய்களைத் தடுப்பதற்கு முதிர்கொசு மற்றும் கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கென 3,314 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

வாகனத்தில் எடுத்துச்செல்லும் 44 புகைப்பரப்பும் இயந்திரங்கள், கையினால் எடுத்துச்செல்லும் 247 புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 22 சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் ஆகியவை புகைப்பரப்பும் பணியில் உபயோகப்படுத்தப்பட்டு, முதிர் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனுடன் 395 கைத்தெளிப்பான்கள் மற்றும் 16 அதிவேக திறன் கொண்ட கைத்தெளிப்பான்களைக் கொண்டு மழைநீர் வடிகால்களிலும் திறந்தவெளி கால்வாய்களிலும் கொசுப்புழு அழிக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டு, கொசுப்புழுக்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. இதனுடன் கொசுப்புழுக்களை உண்ணும் கம்பூஃசியா என்னும் மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 16

4. பேரூராட்சிகளின் இயக்குநரகம்

பேரூராட்சிகள் என்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பினை கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இப்பேரூராட்சிகள், இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 243Q (1) (a)-ன்படி ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு இடைநிலையில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பாக அமையப்பெற்றுள்ளது. பேரூராட்சிகள், அருகாமையில் உள்ள ஊரக பகுதிகளுக்கு ஒரு பொருளாதார மையமாக திகழ்வதுடன், ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு தேவையான சேவைகளை வழங்குவதாகவும் அமையப் பெற்றுள்ளது. இப்பேரூராட்சிகளின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு பேரூராட்சிகளுக்கென தனித் துறை 1981 ஆம் ஆண்டு முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழகத்தில் தற்போது மொத்தம் 528 பேரூராட்சிகள் உள்ளன. பேரூராட்சிகளின் தலைமை நிருவாக அலுவலகமாக பேரூராட்சிகளின் இயக்குநரகம் உள்ளது. பேரூராட்சிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன்படி நிருவகிக்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள 528 பேரூராட்சிகளிலும் நிருவாக செயல்பாட்டிற்காக 8,288 வார்டுகள் அமைந்துள்ளன. பேரூராட்சிகளின் மக்கள் தொகை, 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 80,74,608 ஆகும். இதில் ஆண்கள் 40,21,289 எண்ணிக்கையிலும், பெண்கள் 40,53,319 எண்ணிக்கையிலும் உள்ளனர்.

அரசாணை எண் 142, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21-11-2014-ன்படி பேரூராட்சிகள் ஆண்டு வருவாய் அடிப்படையில், 4 நிலைகளாக பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளின் நிலை	ஆண்டு வருவாய்	பேரூராட்சிகளின் எண்ணிக்கை
சிறப்பு நிலை	ரூ.200 இலட்சத்திற்கு மேல்	64
தேர்வு நிலை	ரூ.100 இலட்சத்திற்கு மேல் 200 இலட்சம் வரை	202

2020 மார்ச் 16]

முதல் நிலை	ரூ.50 இலட்சத்திற்கு மேல் ரூ.100 இலட்சம் வரை	200
இரண்டாம் நிலை	ரூ.50 இலட்சத்திற்குகீழ்	62
	மொத்தம்	528

4.1. செயல்பாடுகள் மற்றும் முக்கிய சேவைகள்

குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் சீரமைத்தல், சிறுபாலங்கள், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகள், நவீன எரிவாயு தகன மேடைகள், இறைச்சிக் கூடங்கள் பராமரித்தல் போன்ற நகர்ப்புற கட்டமைப்புகளை உருவாக்கி பராமரித்து சிறப்பான சேவைகளை பொது மக்களுக்கு வழங்கும் மிகப்பெரிய பொறுப்பினை பேரூராட்சிகள் கொண்டுள்ளன. இது தவிர, பேருந்து நிலையங்கள், சமுதாயக் கூடங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், விளையாட்டு மைதானங்கள், வாகன நிறுத்துமிடங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிப் பராமரிக்கும் பணிகளையும் பேரூராட்சிகள் மேற்கொள்கின்றன. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், வணிக உரிமம் வழங்குதல், வரி மற்றும் கட்டணங்கள் விதித்தல் மற்றும் வசூலித்தல், பயனீட்டாளர் கட்டணம் நிர்ணயித்து வசூலித்தல், கட்டட அனுமதி அளித்தல் போன்றவைகள் பேரூராட்சிகளின் பிற செயல்பாடுகளாகும்.

4.2. உட்கட்டமைப்பு மேம்பாடு

மாநில அரசு, பொது மக்களின் நலன் கருதி உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், மேம்பாடு செய்தல் போன்ற பணிகளுக்கென நிதி உதவி வழங்கியும் மற்றும் மத்திய அரசு மற்றும் வெளிப்புற நிதி உதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்றும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டம், நபார்டு, மூலதன மானிய நிதி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி, சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம், அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம், தூய்மை இந்தியா இயக்கம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், அம்ரூத், புராதன நகர மேம்பாட்டு திட்டம், சுற்றுலா வளர்ச்சி திட்டம்

என பல்வேறு திட்டங்கள் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.2.1. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள் அமைத்தல், குடிநீர் வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு, மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையம் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்களின் மேம்பாடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2011 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ், பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மொத்தம் ரூ.1309.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6,992 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2018-2019 மற்றும் 2019-2020 ஆம் நிதியாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் சாலைப் பணிகள், குடிநீர் மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.753.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 953 பணிகள் எடுத்துகொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

4.2.2. மூலதன மானிய நிதி

5-வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, மூலதன மானிய நிதியாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், மாநில நிதிப் பகிர்வில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில், 15% மூலதன மானிய நிதிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மூலதன மானிய நிதியின்கீழ், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாயக் கூடம் அமைத்தல், சந்தை மேம்பாடு, பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர்த் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் போன்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

2020 மார்ச் 16]

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	2011-2012 முதல் 2017-2018	881	506.14
2	2018-2019	116	204.61
3	2019-2020	331	163.40
	மொத்தம்	1328	874.15

4.2.3. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்கல், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கும், மின் வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்துதல் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படும் பேரூராட்சிகளுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 5-வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், தற்போது இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி 3%-லிருந்து 5% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பணிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	2011-2012 முதல் 2017-2018	694	184.63
2	2018-2019	100	68.29
3	2019-2020	44	66.61
	மொத்தம்	838	319.53

[2020 மார்ச் 16

4.3. சாலைகள்

பேரூராட்சிகளில் தார்ச் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், சிமெண்ட் கற்சாலைகள் (Paver block), கருங்கல் ஜல்லி சாலைகள், செம்மண் சாலைகள் மற்றும் மண் சாலைகள் ஆகிய சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2011-2012 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.3,358.19 கோடி ஒதுக்கீட்டில் சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

4.3.1. நபார்டு-தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி - ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD)

சாலைகள், பாலங்கள் மற்றும் சுகாதார வளாகங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளுக்கு நபார்டு வங்கியால் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூ. கோடியில்)	நீளம் (கி.மீ.)
1	2011-2012 முதல் 2016-2017	2,459	761.51	1,922.21
2	2017-2018	167	130.00	268.28
3	2018-2019	258	200.00	416.89
4	2019-2020	216	200.70	373.91
மொத்தம்		3,100	1,292.21	2,981.29

4.3.2. தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் அமைப்புடன் நகர்ப்புற சாலைகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் அரசால் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

2020 மார்ச் 16]

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (ரூ. கோடியில்)	நீளம் (கி.மீ.)
1	2011-2012 முதல் 2017-2018	1,771	469.16	1,767.10
2	2018-2019	276	253.74	458.79
3	2019-2020	206	162.25	302.77
மொத்தம்		2253	885.15	2528.66

4.4. குடிநீர் வழங்கல்

பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு இந்த அரசு முன்னுரிமை வழங்கி வருகிறது. பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் பேரூராட்சியில் வசிக்கும் மக்களுக்கு, நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத இதர பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்குவதை அளவுகோலாக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய அளவுகோலின்படி பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	விவரம்	பேரூராட்சிகளின் எண்ணிக்கை
1	70 LPCD-க்கு குறைவாக வழங்கும் பேரூராட்சிகளின் எண்ணிக்கை	ஏதும் இல்லை
2	70 முதல் 89 LPCD வரை வழங்கும் பேரூராட்சிகளின் எண்ணிக்கை	382
3	90 LPCD-க்கு மேல் வழங்கும் பேரூராட்சிகளின் எண்ணிக்கை	146
மொத்தம்		528

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

பொது மக்களுக்குத் தேவையான குடிநீரினை சீரான முறையில் வழங்குவதற்காக 51 தனி குடிநீர்த் திட்டங்கள் பேரூராட்சிகளாலும், 335 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலும் மற்றும் 142 பேரூராட்சிகளில் உள்ளூர் சொந்த நீராதாரங்கள் மூலமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது, 37 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் வழங்கலை மேம்படுத்திட, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், மூலதன மானிய நிதி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி, சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்மூலம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2011-2012 முதல் 2019-2020 வரை, கைப்பம்புகளுடன் கூடிய புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் மற்றும் சிறு மின்விசைப் பம்புகள் அமைத்தல் பணிகள், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நீர் உறிஞ்சு கிணறுகளை புனரமைப்பு செய்தல், கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளைக் கிணறுகளை சிறு மின்விசைப் பம்புகளாக மாற்றியமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், தெருக்களில் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், பழுதடைந்த மின்மோட்டார்களை மாற்றம் செய்தல் போன்ற 11,367 எண்ணிக்கையிலான குடிநீர் பணிகள் மொத்தம் ரூ.768.06 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்களைச் செயல்படுத்தியதன்மூலம் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலின் அளவு அதிகரித்து இருப்பதோடு, தனிநபருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவும் அதிகரித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	வருடம்	பேரூராட்சி களின் எண்ணிக்கை	குடிநீர்த் தேவை (மில்லியன் லிட்டரில்)	குடிநீர் விநியோகம் (மில்லியன் லிட்டரில்)	கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டரில்)
1	2017-2018	528	611	728	117
2	2018-2019	528	616	745	129
3	2019-2020	528	620	760	140

2020 மார்ச் 16]

இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட சீரிய முயற்சிகளால், பேரூராட்சிப் பகுதிகளில் கடந்த ஆண்டில் கோடைக் காலத்தில் எவ்வித குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்படவில்லை.

4.4.1. நீர்நிலைகள்

பேரூராட்சிகளால் 2,186 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில், 251 நீர்நிலைகள் நல்ல நிலையில் உள்ளன. கடந்த 9 ஆண்டுகளில், 836 நீர்நிலைகள் பல்வேறு திட்டங்களின்கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 1,048 நீர்நிலைகளையும் வரும் ஆண்டுகளில் படிப்படியாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போதைய நிலையில், 51 நீர்நிலைகள் புனரமைப்பதற்கு ரூ.28 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றவுடன், நீர்நிலைகளில் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு சுற்றியுள்ள பகுதிகளின் நிலத்தடி நீர் மட்டம் மேலும் அதிகரிக்கும்.

4.4.2. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும பகுதிக்குட்பட்ட அடையாறு நீர்நிலையில் மாசு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்72, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை, நாள் 12-7-2017-ன்படி குன்றத்தூர், பெருங்களத்தூர் மற்றும் திருநீர்மலை பேரூராட்சிகளுக்கு ரூ.41.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

4.4.3. ஆற்றுப்படுகைகள்

30 பேரூராட்சிகள், ஆற்றுப்படுகைகளில் கலக்கப்படும் கழிவுநீரினைத் தடுத்தல் மற்றும் நீர் தரத்தினை மேம்படுத்தி மறுசீரமைப்பதற்காக கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில், 12 பேரூராட்சிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "நடந்தாய் வாழி காவேரி" திட்டத்தின்கீழும், சரபங்கா, தாமிரபரணி, வசிஷ்டா மற்றும் கன்னேடியன் நீர்பாசன விநியோக கால்வாய் ஆகிய ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள மீதமுள்ள 18 பேரூராட்சிகளில் ஆறுகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தமிழ்நாடு நீர் முதலீட்டுக் கழகம்மூலம் நடைபெற்று வருகிறது.

[2020 மார்ச் 16

4.4.4. மழைநீர் சேகரிப்பு

மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டமானது, நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 215 (a) மற்றும் 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகளில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின்மூலம், அனைத்துப் புதிய கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் பயனை அடைவதற்கு ஏதுவாக புதிதாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகள் மட்டுமல்லாமல், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைக்க வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தி அனைத்துத் தரப்பு மக்களிடையே தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேரூராட்சிகளில், மொத்தமுள்ள 26,58,433 கட்டடங்களில், 21,75,771 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	கட்டடத்தின் வகைப்பாடு	கட்டடங்களின் எண்ணிக்கை	மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு புனரமைக்கப்பட்ட கட்டடங்கள்
1.	அரசுக் கட்டடங்கள்	14,957	14,420
2.	குடியிருப்புக் கட்டடங்கள்	24,11,192	19,77,902
3.	வணிகக் கட்டடங்கள்	2,23,007	1,74,350
4.	தொழிற்சாலைக் கட்டடங்கள்	9,277	9,099
	மொத்தம்	26,58,433	21,75,771

2020 மார்ச் 16]

மீதமுள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு வசதிகளை ஏற்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.4.5. மரம் நடுதல்

பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு தேவையான ஆக்ஸிஜனை வழங்குவதிலும் மற்றும் நீராதாரங்களில் நீரை சேமித்து மழைப்பொழிவு ஏற்படுத்தவும் மரங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்தகைய மரங்களை வளர்ப்பதில் சிறப்பு முயற்சியாக பேரூராட்சிகளில் பெரிய அளவில் “மரக்கன்றுகள் நடுதல்“ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரம் நடுதல் தொடர்பாக துண்டுப் பிரசுரங்கள் வழங்குவது, பிரச்சாரம் நடத்துவது, பள்ளிகளில் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்துவது போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் குடியிருப்பு நலச் சங்கங்கள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன. 1-7-2019 முதல் பேரூராட்சி ஒன்றுக்கு 50,000 மரக்கன்றுகள் வீதம், ஆக மொத்தம் 2 கோடியே 64 இலட்சத்து பத்தாயிரம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாளது வரை 1 கோடியே 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட இலக்கினில் மீதமுள்ள மரக்கன்றுகள் நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகளால் பொது மக்கள் மரக்கன்றுகள் நடுவதின் அவசியத்தை உணர்ந்து மரங்கள் நடுவதில் ஆர்வமுடன் தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4.5. சுகாதாரம்

4.5.1. பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் கசடு கழிவு மேலாண்மைத் திட்டம்

சுகாதாரத்தின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை சிறப்புற செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதாளச் சாக்கடைத் திட்டம் மொத்தம் ரூ.543.36 கோடி மதிப்பீட்டில் 15 பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு 4 பேரூராட்சிகளில் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எஞ்சிய 11 பேரூராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

4.5.1.1. முடிவுற்ற திட்டங்கள்

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	பேரூராட்சியின் பெயர்	மதிப்பீடு (ரூ.கோடியில்)	சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு (மில்லியன் லிட்டர்)	வழங்கப்பட்ட மொத்த வீட்டு இணைப்பு எண்ணிக்கை	கழிவுநீர் வரத்து (மில்லியன் லிட்டர்)	கழிவுநீர் வெளியேற்றம் (மில்லியன் லிட்டர்)
1	காஞ்சிபுரம்	மாமல்லபுரம்	8.72	2.34	368	0.78	0.78
2	தஞ்சாவூர்	ஒரத்தநாடு	18.25	2.30	1108	0.90	0.90
3	தூத்துக்குடி	திருச்செந்தூர்	14.48	3.90	86	1.00	1.00
4	தேனி	பழனிசெட்டிபட்டி	34.67	2.80	இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.		
		மொத்தம்	76.12	11.34	1562	2.68	2.68

4.5.1.1. நடைபெற்று வரும் திட்டங்கள்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	பேரூராட்சியின் பெயர்	மதிப்பீடு (ரூ.கோடியில்)	சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு (மில்லியன் லிட்டர்)
1	திருவள்ளூர்	திருமழிசை	40.60	3.00
2	விழுப்புரம்	உளுந்தூர்பேட்டை	38.67	3.15
3	காஞ்சிபுரம்	ஸ்ரீபெரும்புதூர்	77.11	8.50
4	நாகப்பட்டினம்	வேளாங்கண்ணி	33.51	2.33
5	காஞ்சிபுரம்	திருப்போரூர்	42.00	4.02
6	திருவள்ளூர்	பொன்னேரி	54.78	6.52
7	திருச்சி	மணச்சநல்லூர்	30.11	6.41
8	திருச்சி	ச.கண்ணனூர்	19.45	
9	தஞ்சாவூர்	வல்லம்	34.51	2.35

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	பேரூராட்சியின் பெயர்	மதிப்பீடு (ரூ.கோடி யில்)	சுத்திகாிப்பு நிலையத்தின் கொள்ளளவு (மில்லியன் லிட்டர்)
10	ஈரோடு	பெருந்துறை	54.78	3.14
11	தேனி	மேலசொக்கநாதபுரம்	41.72	2.40
		மொத்தம்	467.24	41.82

4.5.2. அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

இத்திட்டம், மத்திய அரசால் 25-6-2015-ல் துவங்கப்பட்டது. மக்களுக்குத் தேவையான சிறப்பான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சியில் ரூ.33.51 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டு, அனைத்துப் பணிகளும் நிறைவுறும் தருவாயில் உள்ளது.

4.5.3. கசடு கழிவு மேலாண்மைத் திட்டம்

பேரூராட்சிப் பகுதிகளில் உருவாகும் நச்சுத் தொட்டி கசடு கழிவுகளை கண்காணித்து ஒழுங்குபடுத்தும் விதமாகவும், சிறிய மற்றும் நடுத்தர பேரூராட்சிகளுக்கு ஏற்படும் நிதிச்சுமை, பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்திட ஏற்படும் காலதாமதம் ஆகியவற்றை கருத்திற்கொண்டும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக தமிழக அரசால் கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 106, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி3) துறை, நாள் 1-9-2014-ன்படி, வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து ஆணையிடப்பட்டுள்ளது.

முன்னோடித் திட்டமாக, ரூ.5.18 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் கசடு கழிவு மேலாண்மைத் திட்டப் பணி முடிக்கப்பட்டு, தற்போது சிறப்பாகச் செயல்பட்டு

[2020 மார்ச் 16

வருகிறது. இத்திட்டச் செயலாக்கம் குறித்து, இதர மாநிலங்கள் மற்றும் வெளிநாட்டினரால் பார்வையிடப்பட்டு, இத்துறையின் முயற்சிக்கு பாராட்டுகள் அளித்துள்ளனர்.

மேற்படி திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 12, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (ந.நி.2) நாள் 21-1-2019-ன்படி குன்னத்தூர், குரும்பலூர், பெண்ணாடம், ஆலங்காயம், சேத்தூர், முதுகுளத்தூர், ஜலகண்டபுரம், பெண்ணாகரம், காவேரிப்பட்டினம், ஆலம்பாளையம் மற்றும் செங்கம் ஆகிய 11 பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.31.17 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்திட நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பயன்பாட்டினை மேம்படுத்த தொகுப்பு முறையில் (Cluster Basis) செயல்படுத்திட, 2018-2019 ஆம் ஆண்டில் 58 பேரூராட்சிகளை 52 நகராட்சிகளுடன் ஒருங்கிணைத்து கசடு கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர, கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் பவுண்டேசன் (BMGF) என்ற தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

4.5.4. தூய்மை இந்தியா திட்டம்

தமிழகத்தை "திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற மாநிலமாக" அறிவிக்கும் நோக்கிலும், மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத்துடன் 2,29,853 புதிய தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடங்களை மாற்றி சுகாதாரமான கழிப்பிடங்களாக மாற்றியமைத்தல் மற்றும் கழிப்பிடங்கள் கட்ட இடவசதி இல்லாத மக்களுக்காக மொத்தம் 13,114 இருக்கைகள்

2020 மார்ச் 16]

கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவை பேரூராட்சிகளில், திட்ட இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்குகளில் தனிநபர் இல்லக் கழிப்பிடமும், சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டும் பணிகள் 100% முடிக்கப்பட்டுள்ளன. சமுதாயக் கழிப்பிடம் கட்டும் பணிகளில் 98% முடிவுற்று, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

வ. எண்	பணிகளின் விவரம்	மொத்த இலக்கு	முடிவுற்றவை	அடைந்த சதவிகிதம்
1	தனிநபர் குடியிருப்பு கழிப்பிடம் கட்டுதல்	2,29,853	2,29,853	100%
2	சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல்	7,794	7,794	100%
3	சமுதாயக் கழிப்பிடம் (இருக்கைகள்)	13,114	12,798	98%

528 பேரூராட்சிகளில், 521 பேரூராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாக மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின்மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 பேரூராட்சிகளை திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாக அறிவிப்பது தொடர்பான கருத்துரு மத்திய அரசின் தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது.

4.5.5. தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

பேரூராட்சிகளில் பயனுள்ள தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்மூலம் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணுதல் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகரமாக மாற்றிடவும், சேகரமாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகளாக பிரித்து திறம்பட கையாளவும், தூய்மை இந்தியா இயக்கத்தின்மூலம் 1,382 பரப்புரையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவருக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பரப்புரையாளர்கள் தொடர்ந்து விழிப்புணர்வு பணிகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

[2020 மார்ச் 16

4.5.6. திடக் கழிவு மேலாண்மை

தூய்மை மற்றும் பசுமை நகரங்களை உருவாக்குவதே நமது அரசின் உன்னதமான நோக்கமாகும். விரைவான நகரமயமாதல் மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றின் காரணமாக பேரூராட்சிகள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை கழிவுகளை கையாளுவது முக்கிய பிரச்சினையாகவும், மிகப்பெரிய சவாலாகவும் உள்ளது.

இதனை வரன்முறைப்படுத்த, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி, பயனீட்டாளர் கட்டணம் மற்றும் அபராதத் தொகையினை உள்ளடக்கிய உபவிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வீடு வீடாக சென்று கழிவுகள் சேகரித்தல், கழிவுகள் உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து கையாளும் முறையில் அனைத்துப் பேரூராட்சிகளிலும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திடக்கழிவு மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடைமுறையினால் வீடு வீடாகச் சென்று கழிவு சேகரிப்பதில் 95 சதவீதமும், கழிவுகள் உருவாகும் இடத்திலேயே கழிவுகள் பிரித்து எடுத்தல் 88 சதவிகிதமும் இலக்கு எய்தப்பட்டுள்ளது. 100 சதவீத இலக்கினை எய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்துப் பேரூராட்சிகளிலிருந்து 1,032 மெட்ரிக் டன் மக்கும் குப்பையாகவும், 850 மெட்ரிக் டன் மக்காத குப்பையாகவும், 218 மெட்ரிக் டன் வடிகால் மற்றும் இதர மண் கழிவுகளாகவும் மொத்தமாக நாளொன்றுக்கு 2100 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகின்றன.

அனைத்துப் பேரூராட்சிகளையும் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு 12,086 சுயஉதவிக் குழு உறுப்பினர்களும், 7,006 துப்புரவுப் பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தூய்மை இந்தியா திட்டத்துடன், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தையும் சேர்த்து, 2013-2014 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை, 4,828 பணிகள் ரூ.330.02 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து பொது மக்களும் திடக்கழிவு மேலாண்மையில் மறுத்தல், குறைத்தல்,

மீள பயன்படுத்துதல், மறுசுழற்சி மற்றும் மீட்டெடுத்தல் ஆகிய 5R கொள்கையினை (Refuse, Reduce, Reuse, Recycle and Recover) கடைப்பிடிக்க விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.5.7. வீடுகளிலேயே உரம் தயாரித்தல்

வீடுகளிலிருந்து வெளிவரும் திடக்கழிவுகளின் அளவை குறைக்கும் முகமாக, வீடுகளிலேயே உரம் தயாரிக்கும் முறை ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. நாளது நிலையில் 12,583 குடியிருப்புகளில் கழிவுகள் பிரிக்கப்பட்டு, வீடுகளிலேயே உரம் தயாரிக்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இம்முறையினை விரிவுப்படுத்தும் நோக்கில், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஆர்வமுடைய நபர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

4.5.8. உயிரி அகழ்வு முறையில் கழிவுகளை அகற்றுதல்

பேரூராட்சி உரக்கிடங்குகளில் நீண்ட காலமாக தேங்கியுள்ள திடக்கழிவுகளை அகற்றுவதன்மூலம் பயன்படுத்த முடியாமல் இருக்கும் நிலப்பரப்பினை மீட்டெடுக்கும் முகமாக, உயிரி அகழ்வு முறை (Bio Mining Process) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், முதற்கட்டமாக 44 பேரூராட்சிகளில் 5 இலட்சம் கன மீட்டர் தேக்கக்கழிவுகளை ரூ.32.72 கோடி மதிப்பீட்டில் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுக்கூர், மரக்காணம், பெருந்துறை பேரூராட்சிகளில் இப்பணிகள் முடிக்கப்பட்டு, 38,692 கன மீட்டர் திடக்கழிவுகள் அகற்றப்பட்டதுடன், 4.60 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், முழுமையாக முடிவுறும்பொழுது, 44 பேரூராட்சிகளிலும் மொத்தம் 91.63 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும். இத்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்கி, 3 ஆம் நபர் ஆய்வு குழுவாகவும், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு மையம் நியமிக்கப்பட்டுள்ளது.

4.5.9. உயிரி எரிவாயு

உயிரி எரிவாயு என்பது காற்று புகாத கொள்கலன்களில் மக்கும் கழிவுகளையிட்டு நுண்ணுயிரிகளின் செயல்பாடுகளால் பக்குவப் படுத்தப்பட்டு, நிலையான படிமமாக மாற்றப்பட்டு, அதிலிருந்து மீத்தேன் என்ற உயிரி எரிவாயு உருவாகிறது. இந்த உயிரி எரிவாயு

[2020 மார்ச் 16

புதுப்பிக்கத்தக்க சக்தியாக மின்சாரம் தயாரிக்க பயன்படுகிறது. இதில் உருவாகும் திட படிமம் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இப்புதுமை திட்டத்தின்கீழ் 20 பேரூராட்சிகளில் சிறிய அளவிலான உயிரி எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றலானது தெரு விளக்குகள் எரிவதற்கும், அங்கன்வாடி மையங்களின் சமையல் பயன்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

4.5.10. மின்கலம்மூலம் இயங்கும் வாகனங்கள்

பேரூராட்சிப் பகுதிகளில் வீடு வீடாக குப்பைகள் சேகரிக்கும் திறனை மேம்படுத்தவும் மற்றும் மனித சக்தியை குறைக்கவும், 1,005 மின்கலம்மூலம் இயங்கும் வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4.5.11. எரியூட்டிகள் அமைத்தல்

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை மேற்கொள்ள ஈரோடு மாவட்டம், நசியனூர் பேரூராட்சிக்கு போதுமான நிலம் இல்லாததால், கழிவுகளை கையாளுவதற்கு முன்னோடித் திட்டமாக எரியூட்டி கலன் நிறுவப்பட்டது. ஆக்ஸிஜன் சுழலும் தொழில்நுட்பம்மூலம் திடக்கழிவுகளை முழுமையாக சாம்பலாக எரிக்கிறது. இதற்கென தனியே எரிபொருள்கள் ஏதும் தேவையில்லை. உருவாகும் புகையானது ஸ்க்ரப்பர் டிஃப்பியூசர்மூலம் கையாளப்பட்டு மாசு குறைந்த வாயுவாக வெளிப்படுகிறது. இதன் அனைத்து உமிழ்களும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி வெளிப்படுகிறது.

ஒரு புதிய முயற்சியாக, 2019-2020 ஆம் நிதியாண்டில், திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், கழிவுகள் இல்லா பேரூராட்சிகளாக உருவாக்குவதற்கும், நாள் ஒன்றுக்கு 5 டன்களுக்குமேல் குப்பைகள் உருவாகும் 10 பேரூராட்சிகளில் எரியூட்டும் கலன்கள் நிறுவ ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் நிறுவுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், இதர பேரூராட்சிகளில் தொகுப்பு முறையில் (Cluster Basis) எரியூட்டும் கலன்கள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 16]

4.5.12. வெப்பச் சிதைவு கலன் (Pyrolysis Plant)

நெகிழி கழிவுகளை அகற்றுவது சவாலான ஒன்றாகும். இதனை எதிர்கொள்ள, முன்னோடித் திட்டமாக வெப்பச் சிதைவு கலன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வெப்பச் சிதைவு என்பது நெகிழி கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான சிறந்த முறையாகும். இக்கலனில், ஆக்ஸிஜன் இல்லாத நிலையில் நெகிழிகள் அதிக வெப்பநிலைக்கு உட்படுத்தப்படுகிறது. வெப்பச்சிதைவின் போது, சிறுசிறு கூறுகளாக நெகிழிகள் உடைக்கப்பட்டு பைரோலிசிஸ் எண்ணெய் மற்றும் வாயுவாக மாறுகிறது. நெகிழி பைரோலிசிஸ் எண்ணெயை கொதிகலன்கள் போன்றவற்றுக்கு நேரடி எரிபொருளாக பயன்படுத்தலாம்.

2019-2020 ஆம் நிதி ஆண்டில், 10 பேரூராட்சிகளுக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் வெப்பச்சிதைவு கலன்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், எதிர்வரும் ஆண்டுகளில், அதிக அளவிலான பேரூராட்சிகளில் வெப்பச் சிதைவு கலன்கள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.5.13. நெகிழி ஒழிப்பு

நெகிழியற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 5-6-2018 அன்று சட்டமன்றப் பேரவையில் 110 விதியின்கீழ் 1-1-2019 முதல் தடிமன் பாகுபாடின்றி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 14 வகையிலான நெகிழிகளை பயன்படுத்துவதற்கு முற்றிலும் தடைசெய்வதாக அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 25-6-2018-ல் செயலாக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசால், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986, பிரிவு 5-ன்படி தடிமன் பாகுபடின்றி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகளை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. 14 வகையான தடை செய்யப்பட்ட நெகிழிகள் குறித்து அனைத்துப் பேரூராட்சிகளிலும் பல்வேறு வகையான விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

1-1-2019 முதல் 31-12-2019 வரையிலான காலத்திற்கு தடிமன் பாகுபடின்றி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும்

நெகிழிகளை பயன்படுத்தப்பட்ட பேரூராட்சி பகுதிகளில், 83,561 முறை சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 119 மெட்ரிக் டன் நெகிழிகள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.106 இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டது. மேலும், ஜனவரி 2020 முதல், 23,900 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 8.70 மெட்ரிக் டன் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.14.40 இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

4.5.14. சீர்மிகு வார்டு/பேரூராட்சி

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடு, அடிப்படை வசதிகளுக்கான கட்டமைப்புகள் ஏற்படுத்துதல், திட்டச் செயல்பாடுகளில் பொது மக்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் இரு வார்டுகளை ஒவ்வொரு பேரூராட்சியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த வார்டுகள், அப்பேரூராட்சியில் உள்ள இதர வார்டுகளுக்கு, பயிற்சிக் களமாகவும், முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அனைத்து பேரூராட்சிகளிலும் சீர்மிகு வார்டு (Smart Ward) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சீர்மிகு வார்டுகளின் சிறந்த செயல்பாடுகளினால், இதர வார்டுகளில் உள்ள மக்களும் பேரூராட்சியில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கும், அடிப்படை வசதிகளின் கட்டமைப்பிற்கும் தங்களின் பங்களிப்பினை அளிக்க முன்வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்னம்பட்டி, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை பேரூராட்சிகள் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டில், மாதிரி சீர்மிகு பேரூராட்சிகளாக சிறந்து விளங்குகின்றன. மேலும் இதே போன்று, நடப்பாண்டிலும் திடக்கழிவு மேலாண்மையில் சிறப்பான செயல்பாடுடைய சீர்மிகு பேரூராட்சிகளாக மேலும் 100 பேரூராட்சிகள் மாற்றப்படும்.

4.6. தெரு விளக்குகள்

பேரூராட்சிகளில், 1,948 உயர்கோபுர விளக்குகள், 1,064 மெர்க்குரி விளக்குகள், 28,815 சோடியம் விளக்குகள், 2,34,659 குழல் விளக்குகள், 1,10,724 சி.எப்.எல் விளக்குகள், 2,439 சோலார் விளக்குகள் மற்றும் 63,904 ஆற்றல்மிகு தெரு மின்விளக்குகள் (எல்.இ.டி.) உள்ளிட்ட 4,43,553 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. மேலும், பேரூராட்சிகளிலுள்ள அனைத்து

2020 மார்ச் 16]

தெரு விளக்குகளையும் ஆற்றல்மிகு மின்விளக்குகளாக (எல்.இ.டி.) படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.7. பதினான்காவது மத்திய நிதி குழு மானியம்

2015-2016 ஆம் ஆண்டு முதல் பதினான்காவது நிதி ஆணைய மானியம் ஆண்டுதோறும் பேரூராட்சிகளுக்கு மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஒதுக்கீடு, அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு கூறுகளாக வழங்கப்படும். 2018-2019 ஆம் ஆண்டில் அடிப்படை மானியம், ரூ.453.28 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மானியத் தொகை குடிநீர்த் திட்ட பங்குத் தொகை, மின் வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்துதல், குடிநீர்க் கட்டணம் செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள், சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், பூங்கா, விளையாட்டுத்திடல், சுடுகாடு/இடுகாடு பராமரித்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

4.8. பாரத பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (நகர்ப்புறம்) -அனைவருக்கும் வீடு

மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் அம்மா அவர்களால் தொலைநோக்குத் திட்டம் 2023-ன்கீழ் குடிசைப் பகுதிகளிலுள்ள அனைவருக்கும் தரமான பாதுகாப்பான கான்கிரீட் வீடுகள் வழங்குவதன்மூலம் நகர்ப்புறப் பகுதிகளில் குடிசைகள் இல்லாத சூழலை உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தில் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேரூராட்சி பகுதிகளிலுள்ள பொருளாதாரரீதியாக நலிவுற்ற ஏழை எளிய மக்கள் தாங்கள் வாழும் குடிசை/மண் வீடுகளை பசுமை வீடுகளாக மாற்ற பசுமை வீடுகள் திட்டம் 2015 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புறம்) (பயனாளிகள் தாமாக வீடுகளை கட்டுதல்) திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு தலா ரூ.2.10 இலட்சம் நிதியுதவியுடன் (மத்திய அரசு மானியம் ரூ.1.50 இலட்சம் மற்றும் மாநில அரசு மானியம்

[2020 மார்ச் 16

ரூ.0.60 இலட்சம்) வீதம் நாளது தேதி வரை 1,45,291 தகுதி வாய்ந்த பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, மத்திய கண்காணிப்பு மற்றும் ஒப்புதல் அளிக்கும் குழுவினால் ரூ.3,051.11 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினை மாநில அளவிலான திட்ட முகமையாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் நாளது வரை 39,612 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 1,05,679 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திலிருந்து நாளது தேதி வரை விடுவிக்கப்பட்ட ரூ.1,292.71 கோடி, பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

4.9. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM)

தீன் தயாள் அந்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தினை பேரூராட்சிகளில் செயல்படுத்திடும் விதமாக, 2017-2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிட்லப்பாக்கம், பொன்னேரி, நாட்றம்பள்ளி, போளூர், பர்கூர், தேன்கனிக்கோட்டை, ஊத்தங்கரை மற்றும் வீரவநல்லூர் ஆகிய 8 பேரூராட்சிகளில் ரூ.5.31 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2018-2019 ஆம் ஆண்டில், 27 பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளின் உதவியாளர்கள் தங்குவதற்கான 27 சிறப்பு தங்குமிடங்கள் கட்டுவதற்கு ரூ.8.29 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 11 தங்குமிடங்கள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 16 தங்குமிடங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

4.10. சுதேஷ் தர்சன் திட்டம்

மத்திய அரசு, அனைத்து தொழில்புரிவோரும், வளமான சுற்றுலா அனுபவத்தைப் பெறவும், வேலைவாய்ப்பை மேம்படுத்தவும், பொருள் சார்ந்த சுற்றுலாவினை மேம்படுத்தும் நோக்கத்தோடு 'சுதேஷ் தர்ஷன்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

மத்திய அரசு நிதி உதவியுடன் சுற்றுலா மேம்பாட்டு (சுதேஷ் தர்சன்) திட்டத்தின்கீழ், 13 பணிகள் கன்னியாகுமரி மற்றும் கணபதிபுரம் பேரூராட்சியில் ரூ.11.21 கோடி மதிப்பீட்டில்

2020 மார்ச் 16]

மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கன்னியாகுமரி பேரூராட்சிக்கு கூடுதலாக ரூ.3.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 9 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, மேற்படி பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

4.11 துணைகோள் நகரம் (Satellite Town)

சென்னையையொட்டி அமைந்துள்ள, வேகமாக வளர்ச்சியடைந்துவரும் புறநகரமான திருப்பெரும்புதூர் துணைக்கோள் நகரமாக மேம்படுத்தி அமைக்க தெரிவு செய்யப்பட்டு, இப்பேரூராட்சியில் புதிய குடிநீர்த் திட்டம், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய மூன்று திட்டப் பணிகள் ரூ.123.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிதிப் பகிர்வு 80 சதவீதம் மத்திய அரசும், 10 சதவீதம் மாநில அரசும் மற்றும் 10 சதவீதம் பேரூராட்சி பங்குத் தொகையாகும். சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் செயலாக்க முகமையாகவும், டுபிட்கோ நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகின்றன.

வ. எண்	பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்)
1.	திடக் கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள்	4.44
2.	ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம்	42.20
3.	ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம்	77.11
	மொத்தம்	123.75

4.12. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு

2030 ஆம் ஆண்டிற்குள் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை அடைய தமிழக அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை அடைய, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் துறை தலைமை அலுவலர்களைக் கொண்டு, “நீடித்த நிலையான வளர்ச்சிக்கான அலகு" அமைத்து, அரசாணை (நிலை) எண்

15, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27-01-2020-ன் வாயிலாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் தேவையான, சமச்சீரான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், தேவையான மற்றும் சமச்சீரான அளவில் சுகாதார வசதிகளை வழங்குதல், பொது இடங்களில் மலம் கழிக்கும் பழக்கத்தினை அறவே ஒழித்தல், திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தின்மூலம் கழிவு உற்பத்தியாவதை குறைத்தல், கழிவுநீர் நேரடியாக நீர்நிலைகளில் கலப்பதை தடுக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவி கழிவுநீரினை மறுசுழற்சி செய்து மீளப் பயன்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து மேற்படி குறிக்கோள்களை அடைய, முழு முனைப்புடன் இத்துறை செயல்பட்டு வருகிறது.

4.13. பேரூராட்சிகளில் மின் ஆளுமை

நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு துரிதமாகவும் மற்றும் தரமான சேவைகளை வழங்குவதற்கு 27 மின் ஆளுமை சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழ்நாடு நிலையான நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மென்பொருள் மற்றும் வன்பொருளினை ரூ.19.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட, அரசாணை (நிலை) எண் 110, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1-11-2018-ன்படி, நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, தேசிய தகவல் மையத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.14. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019

நகரமைப்பை உள்ளடக்கிய பேரூராட்சிகளில் திட்டமிடல் மற்றும் கட்டடங்கள் கட்டுவது மற்றும் நிலப்பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளை உள்ளாட்சிகள் எளிமையான வகையில் வழங்கிட 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகளில், அரசாணை (நிலை) எண் 18, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 4-2-2019 வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் செயல்முறை எண் 4367/2019 நாள் 24-9-2019-ன்படி, உள்ளூர் அமைப்புகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், அனைத்துப் பேரூராட்சிகளின் செயல்

அலுவலர்களுக்கும் ஒருங்கிணைந்த நடைமுறைகளை பின்பற்றிட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

4.15. பேரிடர் மேலாண்மைத் திட்டம்

பேரிடர் மேலாண்மை வழிகாட்டுதல்படியும், கடந்த கால அனுபவங்களின் வழிகாட்டுதல்களின்படியும், விரிவான பேரிடர் மேலாண்மைத் திட்டம் அனைத்துப் பேரூராட்சிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

50 நிலையான மீட்புக் குழுக்கள், தளவாடப் பொருட்களுடன் பேரிடர் காலத்தில் பயன்படுத்துவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கும் வகையில் பேரூராட்சிகளில் அனைத்து மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள், சிறுபாலங்கள், நீர்நிலைகளுக்குச் செல்லும் வாய்க்கால்கள் ஆகியவை தூர்வாரப்பட்டு, சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கஜா புயலின் போது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகள் மற்றும் 'ஒக்கி' புயலின் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் ஏற்பட்ட பாதிப்புகளை பல்வேறு மாவட்டங்களில் உள்ள மீட்புக் குழுக்கள்மூலம் 3 தினங்களுக்குள் அனைத்து நிவாரண நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்புப் பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு, இயல்பு நிலைக்கு கொண்டு வந்ததை பொது மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

4.16. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த பேரூராட்சிக்கான விருது

பேரூராட்சிகளில் சுகாதாரம், குடிநீர் வழங்கல், தெரு விளக்கு, திடக்கழிவு மேலாண்மை போன்ற அடிப்படை வசதிப் பணிகளை சிறப்புடன் செயல்படுத்தும் பேரூராட்சிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், சிறந்த மூன்று பேரூராட்சிகளுக்கான விருதுகளை வழங்கும் வகையில் முறையே ரூ.10.00 இலட்சம், ரூ.5.00 இலட்சம் மற்றும் ரூ.3.00 இலட்சம் பரிசுத் தொகை கொண்டதாக 2012-2013 ஆம் ஆண்டு முதல் "மாண்புமிகு முதலமைச்சர் விருது" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2019 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது 2018-2019 ஆம் ஆண்டிற்கான முதல் பரிசு மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி பேரூராட்சி, இரண்டாம் பரிசு திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பேரூராட்சி மற்றும் மூன்றாம் பரிசு ஈரோடு மாவட்டம், பவானிசாகர் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டு பத்திரங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

4.17. முக்கிய பிரமுகர் வருகை-மாமல்லபுரம்

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சியானது உலக சுற்றுலா மையங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மற்றும் மாண்புமிகு சீன அதிபர் திரு. ஜி ஜின்பிங் அவர்கள் 11-10-2019 மற்றும் 12-10-2019 ஆகிய தேதிகளில் மாமல்லபுரத்திற்கு வருகை புரிந்ததையொட்டி, குறுகிய காலத்தில், போர்க்கால அடிப்படையில் பல்வேறு கட்டமைப்புகள் புனரமைக்கப்பட்டு, அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பேரூராட்சிகள் நிருவாகம்மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்துத் தரப்பு மக்களாலும் வெகுவாக பாராட்டப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட இந்த சர்வதேச நிகழ்வானது, இத்துறைக்குப் பெருமை சேர்க்கும் தருணமாக அமைந்தது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் பகுதியின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்கேற்ப பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் போன்ற சேவைகளை செய்வதற்காக 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நிறுவப்பட்டது. இவ்வாரியம், தொலைநோக்கு பார்வையோடு சென்னை பெருநகரப் பகுதியின் குடிநீர் கட்டமைப்புகளை திட்டமிட்டு உருவாக்குதல், இயக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்கீழ் இயங்கும் 200 பணிமனைகள் வாயிலாக, சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் 74.56 இலட்சம் மக்களுக்கு (2011 கணக்கெடுப்பின் மக்கள் தொகையான 67.27 இலட்சத்தின் நீட்டிப்பு), பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுநீரை அகற்றுதல் போன்ற சேவைகளையும், அருகாமையிலுள்ள சில உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்த தொழிற்சாலை நுகர்வோருக்கும் குடிநீரை வழங்கி வருகிறது.

5.1. சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை, நிலத்தடி நீர், நில மேற்பரப்பு நீர்த்தேக்கங்கள் மற்றும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் ஆகிய நீர் ஆதாரங்கள்மூலம் சென்னை குடிநீர் வாரியம் பூர்த்தி செய்து வருகிறது.

5.1.1. நிலத்தடி நீர்

தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலத்தடி நீராதாரங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 35 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

[2020 மார்ச் 16

5.1.2. நில மேற்பரப்பு நீர் ஆதாரங்கள்

சென்னைக்கு அருகாமையிலுள்ள பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களும், 2004 ஆம் ஆண்டு முதல் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து வழங்கக்கூடிய கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவை சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் முதன்மையான நில மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும்.

ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான தெலுங்கு கங்கை திட்ட ஒப்பந்தப்படி, சென்னையின் குடிநீர்த் தேவைக்கு ஆந்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதி நீர் ஒவ்வோர் ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கன அடி பெறப்பட வேண்டும். 28-9-2019-லிருந்து 11-3-2020 வரை 6,307 மில்லியன் கன அடி நீர் பெறப்பட்டுள்ளது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள்

வ. எண்	நீர்த்தேக்கங்கள்	மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்)
1	பூண்டி	3,231
2	செங்குன்றம் (புழல்)	3,300
3	செம்பரம்பாக்கம்	3,645
4	சோழவரம்	1,081
5	வீராணம்	1,465
மொத்தம்		12,722

2020 மார்ச் 16]

சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு

வருடம்	மழையின் அளவு (மி.மீ.)		வித்தியாசம் %
	இயல்பான அளவு (30 வருட சராசரி)	பெய்த அளவு	
2012	1,293.42	981.80	-24.09
2013	1,297.50	1,064.87	-17.93
2014	1,286.21	1,025.80	-20.25
2015	1,273.17	2,155.23	+69.28
2016	1,308.05	837.00	-36.03
2017	1,305.82	1,388.00	+6.30
2018	1,313.85	880.00	- 33.01
2019	1,307.75	1,285.33	- 1.71

5.1.3. கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

சென்னைக்கு அருகே வற்றாத ஆறுகள் ஏதும் இல்லை. இதனால் நில மேற்பரப்பு நீர் சேகரிப்பிற்கு, சென்னை மாநகரம் பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை பொய்க்கும்பொழுது நீர்த்தேக்கங்களுக்கு கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்படுவதனால், சென்னை நகர மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு பாதிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, வளர்ந்துவரும் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய, 2003-2004 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்குப் பார்வைகொண்டு, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) அறிவித்தார்கள். அதன்படி, மாநிலத்திலேயே முதன் முறையாக நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை தமிழக அரசு மீஞ்சூரில் நிறுவியது.

[2020 மார்ச் 16

இதன் தொடர்ச்சியாக, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மற்றுமொரு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தினை நெம்மேலியில் நிறுவி, இயக்கி வருவதன்மூலம், சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் இந்நிலையங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

5.1.3.1. கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்-மீஞ்சூர்

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்றை மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) ஜூலை 2010 முதல் இயங்கி வருவதன்மூலம், வட சென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் உள்ள சுமார் 12 இலட்சம் மக்கள் பயன்பெறுகிறார்கள்.

5.1.3.2. கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்-நெம்மேலி

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று நெம்மேலியில், ரூ.805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால், 22-2-2013 அன்று துவக்கி வைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதன்மூலம் தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளிலுள்ள சுமார் 8 இலட்சம் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

2012-2014, 2016-2019 ஆம் ஆண்டுகளில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாத நிலையில் கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை அதிகமாகியதுடன், நகரின் குடிநீர்த் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தன.

2020 மார்ச் 16]

5.1.4. குடிநீர் வழங்கல்-இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியம் கீழ்ப்பாக்கம், செங்குன்றம் (புழல்), செம்பரம்பாக்கம், சூரப்பட்டு மற்றும் வடக்குத்து ஆகிய ஐந்து இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மீஞ்சூர், நெம்மேலியில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களின் மூலம் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கி வருகிறது. தற்பொழுது இருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 1,494 மில்லியன் லிட்டராகும்.

1978-ல் வாரியம் துவங்கப்பட்டபொழுது பயன்பாட்டில் இருந்த குடிநீர் வழங்குதல் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள், தற்பொழுது 5256 கி.மீ. நீளமுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்களை கொண்டதாக பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதன்விளைவாக 1978-ல் இருந்த நுகர்வோரின் எண்ணிக்கையான 1,16,000, தற்பொழுது 7,39,672 ஆக உயர்ந்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டு மட்டும் 7,823 புதிய வீட்டுக் குடிநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டுள்ளன.

5.2. குடிநீர் வழங்கல் - புதிய திட்டங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு குடிநீர் வழங்கிட சென்னைக் குடிநீர் வாரியமானது பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ஆலந்தூர், மீனம்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், நந்தம்பாக்கம், நொளம்பூர், காரம்பாக்கம், உள்ளகரம்-புழுதிவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் முகலிவாக்கம் ஆகிய 19 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், சின்னசேக்காடு, மாதவரம், இராமாபுரம், மணப்பாக்கம், பள்ளிக்கரணை, ஒக்கியம்-துரைப்பாக்கம், மாத்தூர், ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், உத்தண்டி மற்றும் நெற்குன்றம் (எஞ்சிய பணிகள்) ஆகிய இணைந்த 21 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2020 மார்ச் 16

5.2.1. நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மற்றுமொரு கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110-ன்கீழ், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மற்றுமொரு கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் நெம்மேலியில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரூ.1,259.38 கோடி மதிப்பீட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27-6-2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கான நிதியானது அம்ரூட் திட்டத்தின்கீழ் (AMRUT) மானியமாகவும், ஜெர்மானிய நிதி நிறுவனத்திடமிருந்து (KfW) கடனுதவியாகவும் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்பப் பகுதிகளில் உள்ள 10 இலட்சம் மக்கள் பயனடைவர்.

5.2.2. சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி

தென் சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால், விதி எண் 110-ன்கீழ், சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.6,078.40 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ரூ.4,267.70 கோடி நிதியுதவி வழங்க இசைந்துள்ளது. மீதித் தொகை தமிழக அரசின்மூலம் தகுந்த நிதி ஆதாரம் பெற்று செயல்படுத்தப்படும். இந்நிலையத்தை செயல்படுத்த, கடல்சார்

ஒழுங்குமுறை ஆணையத்தின் தடையின்மை சான்றிதழை, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவமாற்றங்களுக்கான அமைச்சகம் அளித்துள்ளது.

இந்த திட்டத்திற்கான, திட்ட மேலாண்மை ஆலோசகராக M/s SMEC (Australia)-TCE-NJS consortium, தேர்வு செய்யப்பட்டு, வடிவமைப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணம் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் குடிநீர், சென்னை மற்றும் சுற்றியுள்ள தாம்பரம், பல்லாவரம், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கன்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்கொளத்தூர் மற்றும் மாங்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 22.97 இலட்சம் மக்கள் பயனடைவர்.

5.2.3. செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதிக்கும் பணி

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு வழங்க ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2,000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, ரூ.43.75 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 75 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் டிசம்பர் 2020-க்குள் முடிவுறும்.

5.2.4. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM) கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால், புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, சிறப்புக் கண்ணோட்டத்துடன் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டு ரூ.56.50 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பதித்தல், புதிதாக

இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் மற்றும் அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர்க் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன.

2012-2013 ஆம் ஆண்டு ரூ.102.56 கோடி திட்ட மதிப்பீட்டில் நொளம்பூர், காரம்பாக்கம், நந்தம்பாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் போன்ற பகுதிகளில் பணிகள் முடிவுற்றன. இராமாபுரம், மணப்பாக்கம் ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் ரூ.89.46 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் 2020 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2013-2014 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்ட பணிகளில், கொட்டிவாக்கம், பெருங்குடி, பாலவாக்கம் மற்றும் முகலிவாக்கம் ஆகிய பகுதிகளில் ரூ.126.39 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. ரூ.225.03 கோடி திட்ட மதிப்பீட்டில், சடையான்குப்பம், இடையான்சாவடி, கடப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல் மற்றும் பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஜூன் 2020-க்குள் முடிக்கப்படும்.

5.2.5. சென்னை மாநகரில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின்கீழ் (I&AF) மாற்றி அமைக்கும் திட்டம்

சென்னை நகரின் பிரதான பகுதிகளில், 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான குடிநீர்க் குழாய்கள் 914 கிலோ மீட்டர் நீளத்திற்கு கண்டறியப்பட்டன. இக்குடிநீர்க் குழாய்கள் பல்வேறு திட்டங்களின்கீழ் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு வந்தன. சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக, பழமையான குழாய்களை மாற்றி, புதிய குழாய்கள் பதிக்கும் பணிகள், குடிநீர் கொண்டு செல்லும் புதிய பிரதான குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய்கள் பதிக்கும் பணிகள் என 310 கி.மீ. நீளத்திற்கு ரூ.116.04 கோடி மதிப்பீட்டில் பணிகள்

2020 மார்ச் 16]

செயல்படுத்தப்படும் என்று மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன.

5.3. கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை மாநகரில் கழிவுநீர் சேகரித்தல், சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் உள்ளிட்ட கழிவுநீரகற்றல் வசதிகளை செய்து வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும்.

சென்னை மாநகரின் கழிவுநீர் கட்டமைப்பு, 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 4,062 கி.மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் கொண்டதாகும். இதன்மூலம் குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு, 273 கழிவுநீரேற்றும் நிலையங்களின்மூலம் 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. அவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது மறு பயன்பாட்டிற்கும், மீதமுள்ள சுத்திகரிக்கப்பட்ட நீர் பாதுகாப்பாகவும் வெளியேற்றப்படுகிறது.

5.3.1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

சென்னை குடிநீர் வாரியம் நெசப்பாக்கம் (3 அலகுகள்), கொடுங்கையூர் (3 அலகுகள்) கோயம்பேடு (3 அலகுகள்) மற்றும் பெருங்குடி (3 அலகுகள்) ஆகிய இடங்களில் மொத்தமாக நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கொண்டுள்ளது.

5.3.2. கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

ரூ.126.01 கோடி திட்ட மதிப்பீட்டில், திருவொற்றியூர் (31 MLD), சோழிங்கநல்லூர்-I (18 MLD) மற்றும் சோழிங்கநல்லூர்-II (54 MLD) ஆகிய இடங்களில் மொத்தமாக நாளொன்றுக்கு 103 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வந்தன. இவற்றில் திருவொற்றியூர்,

சோழிங்கநல்லூர்-I பகுதிகளில் பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டத்தில் உள்ளன. சோழிங்கநல்லூர்-II கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் ஆகஸ்ட் 2020-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

5.3.2.1 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல்/மேம்படுத்துதல் பணிகள்

2017 ஆம் ஆண்டில் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாநிலங்களிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து கழிவுநீரை நீர்நிலைகளில் வெளியிடுவதற்கான தர அளவுகளை மாற்றியமைத்து அரசாணை பிறப்பித்ததற்கு ஏற்ப, கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடியில் அமைந்துள்ள, நடைமுறையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புதுப்பித்தல்/புனரமைத்தல் தொடர்பாக திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு ரூ.636 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய மாநில அரசின் நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் AMRUT, TNIPP (Phase-II) மற்றும் CMCDM ஆகிய திட்டங்களின்கீழ் பின்வரும் நிதி பங்கீட்டு முறையில் இப்பணியை முழுமையாக செயல்படுத்த அனுமதி பெறப்பட்டுள்ளது:

அம்ரூத் திட்ட	-	இந்திய அரசு நிதி	-	ரூ.205.81 கோடி
அம்ரூத் திட்ட	-	தமிழ்நாடு அரசு நிதி	-	ரூ.127.20 கோடி
TNIPP (Phase-II)			-	ரூ.192.10 கோடி
CMCDM (2019-2020)			-	ரூ.110.89 கோடி
மொத்தம்				ரூ.636 கோடி

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டு, மண் பரிசோதனைகள், நில அளவைகள், சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற பூர்வாங்க வேலைகளை அமைக்க வேண்டிய செயல்முறை கணக்கீடுகள் மற்றும் தொழிலாளர்கள் குடியிருப்பு ஆகியவை முடிக்கப்பட்டு, ஜனவரி மாதம் 2020 முதல் அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் முடிவுற்றவுடன் வாரியத்தின் கழிவுநீர்

2020 மார்ச் 16]

சுத்திகரிப்பு திறன் கூடுதலாவதுடன், கழிவுநீரானது நீர்நிலைகளில் விடப்படுவது தவிர்க்கப்படும். இதன்மூலம் சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்படும்.

5.3.3. கழிவுநீரகற்றும் சேவையில் வளர்ந்துவரும் நுகர்வோர்கள்

1978-ல் வாரியம் துவங்கப்பட்டபொழுது பயன்பாட்டில் இருந்த கழிவுநீரகற்றல் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தற்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதன்விளைவாக, 1978-ல் இருந்த நுகர்வோரின் எண்ணிக்கையான 1,14,000 தற்பொழுது 9,96,522 ஆக உயர்ந்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 12,823 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

5.4. கழிவுநீர் அகற்றுதல் - புதிய திட்டங்கள்

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 42 பகுதிவாழ் மக்களின் வாழ்க்கை தரம், சுற்றுசூழல் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றினை பழைய சென்னை மாநகருக்கு இணையாக மேம்படுத்த, பாதாளச் சாக்கடைத் திட்டங்களை, சென்னை குடிநீர் வாரியம், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (CMCDM) மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிதியின்கீழ், மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், மீனம்பாக்கம், மதுரவாயல், நொளம்பூர், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, உள்ளகரம்-புழுதிவாக்கம், போரூர், திருவொற்றியூர், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகிய 15 பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன.

மேலும், அம்பத்தூர், பள்ளிக்கரணை, இராமாபுரம், பெருங்குடி, நெற்குன்றம், முகலிவாக்கம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம் மற்றும் காரம்பாக்கம் ஆகிய 10 பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் அம்பத்தூர், பள்ளிக்கரணை, இராமாபுரம் மற்றும் பெருங்குடி ஆகிய பகுதிகளில் டிசம்பர் 2020-ல் பணிகள் முடிவுறும்.

இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், ஆகிய 3 பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 14 பகுதிகளான புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம்,

[2020 மார்ச் 16

செம்மஞ்சேரி, உத்தண்டி, ஜல்லடம்பேட்டை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முடிவுற்று, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. திட்டத்திற்கான நிதி கிடைக்கப் பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

5.4.1. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM) கீழ் கழிவு நீரகற்றுப் பணிகள்

இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.132.55 கோடி திட்ட மதிப்பீட்டில் சென்னையின் பிரதான பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

2012-2013 ஆம் ஆண்டு ரூ.15.20 கோடி திட்ட மதிப்பீட்டில் கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளன. மேலும், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் ஆகிய பகுதிகளில் ரூ.197.05 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. இராமாபுரம் பகுதியில் ரூ.48.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தாமதப் பணியின் காரணமாக ஒப்பந்ததாரர் நீக்கப்பட்டார். தற்போது மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் 2022 ஆம் ஆண்டு மத்தியில் முடிக்கப்படும்.

2013-2014 ஆம் ஆண்டில் திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்), நொளம்பூர், சூரப்பட்டு, புத்தகரம் மற்றும் கதிர்வேடு ஆகிய பகுதிகளில் ரூ.129.52 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. முகலிவாக்கம் பகுதியில் ரூ.77.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.4.2. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III பணிகள் -(TNUDP-III)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III-ன்கீழ் மாதவரம், அம்பத்தூர் (பகுதி-I) திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் ரூ.183.60

கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

5.4.3. தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டப் பணிகள்

விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகரத்தின் தெற்கு பகுதியிலிருந்து பெறப்படும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு, சோழிங்கநல்லூரில், நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மேலும் ஒரு கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் ரூ.65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையம் நவீன தொழில்நுட்பத்துடன் மின்சாரம் தயாரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஆகஸ்ட் 2020-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

5.4.4. கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரமயமாக்குதல்

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை தவிர்க்க, சென்னை மாநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்பை சுத்தம் செய்யும் பணிகளை இயந்திரமயமாக்குதலுக்குத் தேவையான 119 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 245 தூர் வாரும் இயந்திரங்கள், 29 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 53 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன.

5.4.5. கழிவுநீரகற்ற முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியம், 9,96,522 நுகர்வோரின் பயன்பாட்டிற்காக, 4,062 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் சேகரிக்கும் குழாய்களை பராமரித்து வருகிறது. சென்னை நகரில் சேகரிக்கப்படும் கழிவுநீரை பாதுகாப்பான முறையில் அகற்ற கழிவுநீர் அமைப்புகளில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதை சென்னைக் குடிநீர் வாரியம் நடைமுறைப்படுத்தியுள்ளது. மேலும், நுகர்வோர்களிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் புகார்களின் தன்மை அறிந்து, வகைப்படுத்தி, அதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது.

5.4.6. நீர்வழிப் பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பணிகள்

2012-2013 ஆம் ஆண்டில், சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுக்க ரூ.300 கோடி

[2020 மார்ச் 16

ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்கவும் மற்றும் கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றவும் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக, உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் (I&A FUND) நிதியிலிருந்து, நகர நீர் வழிப் பாதைகளில் மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகளுக்கு ரூ.150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக, சென்னை நகரின் நீர் வழித் தடங்களில் மீதமுள்ள 158 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் 7 சிப்பங்களாக மேற்கொள்ள ரூ.163 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவற்றில் 3 சிப்பங்களில் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 4 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜுன் 2020-ல் முடிவுறும்.

5.4.7. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு மறு பயன்பாட்டிற்கு அளிக்கும் பணிகள்

கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரை, நாளொன்றுக்கு 28.53 மில்லியன் லிட்டர் அளவிற்கு, சென்னை பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட் மற்றும் சென்னை உரத்தொழிற்சாலை லிமிடெட் ஆகிய தொழிற்சாலைகளுக்கு 1989 ஆம் ஆண்டு முதலும், மணலி பெட்ரோ இரசாயன பொருட்கள் தொழிற்சாலைக்கு 2005 ஆம் ஆண்டு முதலும், வாரியம் வழங்கி வருகிறது. இதன்மூலம், வாரியத்திற்கு 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.18.88 கோடி வருமானம் கிடைத்துள்ளது.

5.4.7.1. கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

சென்னை மாநகரம், கழிவுநீர் மறுசுழற்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநகரமாக திகழ்ந்து வருகிறது. மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவையில், தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட

குடிநீருக்கு பதிலாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சிமூலம் பயன்படுத்தும் திட்டத்தினை அறிவித்தார்கள். கழிவுநீர் மறுசுழற்சி என்பது சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை வேளாண்மை இயற்கைப் பாசனம், தொழில் துறை செயல்பாடுகள், கழிப்பறை சுத்திகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டம் போன்ற நன்மை பயக்கும் நோக்கங்களுக்காக பயன்படுத்துதலாகும். கழிவுநீர் மறுசுழற்சி செய்வதால், நிதி சேமிப்பு கூடுவதோடு, நீர் வளமும் பெருகும்.

5.4.7.2. கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) அமைத்தல்

இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வழங்கும்பொருட்டு, கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழக அரசு ரூ.486.21 கோடி மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கியது. இத்தொகையில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு திட்டத்தின்கீழ் (TNIPP) ரூ.231.50 கோடியை கடனாகவும், ரூ.208.82 கோடியை மத்திய மற்றும் மாநில அரசின் அம்ரூத் திட்டத்தின்கீழ் மானியமாகவும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. இந்நிலையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29-11-2019 அன்று திறந்து வைத்தார்கள்.

5.4.7.3. கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை

சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ரூ.348 கோடி மதிப்பீட்டில் அமைக்க முடிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு நீடித்த நகர்புற வளர்ச்சித் திட்ட நிதியின்கீழ் (TNSUDP) ரூ.229.50 கோடியில் 60% கடனாகவும் 30% மானியமாகவும், மேலும் ரூ.118.67 கோடியை அம்ரூத் (AMRUT) திட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்பாகவும் பெறப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிவுற்றன. இந்நிலையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1-10-2019 அன்று திறந்து வைத்தார்கள். இந்நிலையத்திலிருந்து பெறப்படும் மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் மணலி-எண்ணூர் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இவ்விரு நிலையங்கள்மூலம் சென்னை மாநகரில் மொத்தமாக உருவாகும் கழிவுநீரில் 20 சதவீதம் அளவிற்கு மறுசுழற்சி செய்யப்படுகிறது. இதன்மூலம் தமிழகம், நாட்டிலேயே அதிகபட்சமாக கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் மாநிலமாக திகழ்கிறது.

5.5. நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், சென்னை நகருக்கு தொடர்ந்து குடிநீர் கிடைக்க, நீர் மேலாண்மையில் நீடித்த செயல்முறைகளை ஊக்குவிப்பதற்காக, “நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தை” அறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ், பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவி, அதன்மூலம் மழைநீரை சேமித்தல், மழைநீர் வடிகால்களில் இருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்தல் மற்றும் மறுசுழற்சிமூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்துதல், நீர்நிலைகளின் எல்லைகளை வரையறை செய்து, நீர்நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன. இத்திட்டத்தின் நோக்கமானது, நீர் மேலாண்மையில் நல்ல செயல்முறைகளை சோதனை முறையில் செயல்படுத்துவதன் வாயிலாக, பொது மக்களும் தங்களது இருப்பிடங்களில் இவற்றை செயல்படுத்த முன் மாதிரியாக அமையும்.

5.6. மழைநீர் சேகரிப்பு

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக, தொடர்ந்து பருவமழை பொய்த்ததன் காரணமாக வறட்சி ஏற்பட்டது. இதனால் மாநில மக்களின் குடிநீர்த் தேவை, விவசாயம் மற்றும் பிற வீட்டு

2020 மார்ச் 16]

உபயோகத்திற்கான தேவையை பூர்த்தி செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். குறைவான நீராதாரங்களைக் கொண்ட மாநிலத்தில் நீரை சேமித்தல் மிக மிக இன்றியமையாததாகும்,

மழைநீர் சேகரிப்பு என்பது மழைநீர் வீணாதலை தடுத்து சேகரித்து உரிய முறையில் சேமித்தலாகும். அதன்படி கட்டட மேற்கூரைகள் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியிலிருந்து பெறப்படும் மழைநீரை தடுத்து பூமியில் ஆழமான குழி அமைத்தோ அல்லது குழாயை பதித்தோ அல்லது கிணற்றில் ஊடுருவல் செய்தோ அல்லது பனித்துளியிலிருந்து சேகரித்தோ அல்லது வலை மற்றும் பிற உபகரணங்கள் வாயிலாக மூடுபனியிலிருந்தோ சேமித்தலாகும். இவ்வாறு சேமிக்கப்பட்ட நீர் தோட்டங்களுக்கான நீர்ப்பாசனம், உயிர் ஆதாரங்கள், விவசாயத்திற்கான நீர்ப்பாசனம், முறையான சுத்திகரிப்பு முறை வாயிலாக வீட்டு உபயோகத்திற்கும் மற்றும் நிலத்தடி நீர் செறிவிற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பு அமைப்பினை புதிய மற்றும் பழைய கட்டடங்களில் கட்டாயமாக செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மற்றும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் சுய சிந்தனையின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் குடிநீர் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக ஆகஸ்டு 2001 ஆம் ஆண்டில் ஒரு பன்முக உத்தியை கையாண்டார்கள். இதன் நோக்கம், அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் (தனி வீடு, வணிக வளாகங்கள், குடியிருப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்கள்) மழைநீர் சேகரிப்பை செயல்படுத்துவதாகும். மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு மழைநீர் சேகரிப்பு முதன்முதலாக சென்னை மாநகரில் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது சென்னை மாநகரம் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக உள்ளது.

மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை

[2020 மார்ச் 16

உருவாக்கிட நுகர்வோரை ஊக்குவிக்கும் வண்ணம் தகவல் தொடர்பு உத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தால் வடிவமைக்கப்பட்டது. பல்வேறு தகவல் தொடர்பு முறைகள்மூலம் அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் முக்கிய இலக்காகும். சென்னைக் குடிநீர் வாரியத்தால் 2003 ஆம் ஆண்டில் இவ்விழிப்புணர்வு பிரச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் பருவமழைக்காலத்தில் அதிகபட்ச பயன்பாட்டை பெற, சென்னை நகர மக்களிடையே கையேடுகள், குறிப்பேடுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவைமூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை சரியான முறையில் பராமரித்து வருகிறது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் புதிய இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், அனைத்து கட்டடங்களுக்கும் கட்டடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 8,10,200 கட்டடங்களில், மொத்தம் 8,75,672 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் 14,700 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் புதிய குடிநீர்/கழிவுநீர் இணைப்புகள் பெறும்போதும், இணைப்புகளை புதுப்பிக்கும் போதும் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தியதன்மூலம் பெறப்படும் நன்மைகள், நகரின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள தேர்வு செய்யப்பட்ட 145 கண்காணிப்பு கிணறுகளின்மூலம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இதன்மூலம் நிலத்தடி நீர்மட்டமும், தரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழைநீர் சேகரிப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டதனால், நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீர்தன்மை ஒவ்வொரு வருடமும், குறிப்பாக பருவமழைக் காலங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்மூலம் நிலநீர் செறிவூட்டு திறன் 2.85 ஆயிரம் மில்லியன் கனஅடி (TMC) ஆக உள்ளது.

2019 ஆம் ஆண்டில் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மழைநீர் சேகரிப்பை தீவிரப்படுத்தி, ஆகஸ்டு 31, 2019-க்குள் சென்னை மாநகரிலுள்ள 2 இலட்சம் கட்டடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்திட,

2020 மார்ச் 16]

சென்னைக் குடிநீர் வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களை கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இக்குழு குடியிருப்புவாசிகளுக்கு தங்கள் குடியிருப்பிலுள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்பை புனரமைத்து, நிலத்தடி நீர் செறிவூட்டலை மேம்படுத்த உதவும்.

சென்னை நகரில் 3,14,780 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் சரிபார்ப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், 2,42,438 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நல்ல முறையில் இருந்தது உறுதி செய்யப்பட்டது. 24,989 கட்டடங்களில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தன. மேலும் 29,056 கட்டடங்கள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளின்றி இருந்தது. இவற்றுடன் 2019 ஆம் ஆண்டில் 314 சமுதாயக் கிணறுகள் மீட்கப்பட்டு புனரமைக்கப்பட்டன.

26-1-2020 அன்று வானொலிமூலம் ஒலிபரப்பப்பட்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின், மனதின் குரல் (மன் கி பாத்) என்ற உரையில், மழைநீர் சேகரிப்பு, தமிழ்நாட்டில் ஒரு மக்கள் இயக்கமாக செயல்படுத்தப்பட்டுள்ளதை பாராட்டியுள்ளார்கள். ஆழ்துளைக்குழாய்கிணறுகளைமழைநீர்சேகரிப்புகட்டமைப்புகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதன்மூலம், நிலையான குடிநீர் ஆதாரம் உள்ள புதிய இந்தியா உருவாக தமிழ்நாடு வழிகாட்டியாக உள்ளது. ஒவ்வொரு துளி நீரையும் சேமித்தல் மற்றும் மழைநீரை சேமித்தல் ஒவ்வொரு தனி நபரின் கடமை என்பதை வலியுறுத்த முழுக்கவனமும் செலுத்தப்பட்டு, நாடு முழுவதும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5.7. வறட்சி மேலாண்மை

சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்களான ஏரிகளின் குறைவான கொள்ளளவு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்தல் ஆகியவற்றின் விளைவாக சென்னை நகரின் குடிநீர் வழங்கல் வரலாற்றில், குடிநீர் பற்றாக்குறை மற்றும் வறட்சி தொடர்ந்து ஒரு பகுதியாக இருந்து வருகிறது. சென்னை நகரில் வற்றாத ஜீவ நதிகள் ஏதும் இல்லாததால், சென்னை மாநகரம் பருவமழையை சார்ந்தே உள்ளது. வறட்சி நிவாரணப் பணியாக வாரியமானது பின்வரும் மரபு சார்ந்த மற்றும் மரபு சாரா வகையிலான புதிய குடிநீர் ஆதாரங்களை கண்டறியும் பணிகளை மேற்கொண்டது:

[2020 மார்ச் 16

5.7.1. வீராணம் பகுதியில் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்கான திட்டம்

வீராணம் திட்டமானது, சென்னைக்கு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். கடந்த ஆண்டு, வறட்சி காலங்களில் எந்த தடையுமின்றி நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து தொடர்ந்து வழங்கிடுவதற்கு ஏதுவாக, வீராணம் திட்டம் வாயிலாக அனைத்து குடிநீர் ஆதாரங்களும் வடிவமைக்கப்பட்டு முறைப்படி செயல்படுத்தப்பட்டது.

வீராணத்தின் குடிநீர் ஆதார மேம்பாட்டின் ஒரு பகுதியாக கெடிலம் மற்றும் நெய்வேலி நீர்படுகையிலுள்ள பரவனாறு பகுதிகளில் 400 மி.மீ. விட்டமுள்ள 240 மீ. ஆழமான 9 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு குழாய்கள்மூலம் நாளொன்றுக்கு கூடுதலாக 10 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்டது. மேலும், கூடுதலாக 240 குதிரை திறன் கொண்ட உந்து குழாய் அமைப்பு, வடக்குத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நிறுவி கூடுதலாக நாளொன்றுக்கு 15 மில்லியன் லிட்டர் குடிநீர் அனுப்பப்பட்டது. பரவனாறு மற்றும் கெடிலம் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் வரை நீர் எடுக்கப்பட்டது.

5.7.1.1. வாலாஜா ஏரியிலிருந்து தற்காலிகமாக நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் குடிநீர் கொணர்தல்

வீராணம் ஏரியின் நீர் இருப்பு குறைவடைந்ததன் விளைவாக, அதனை ஈடுசெய்யும் வகையில் புதிய குடிநீர் ஆதாரங்களை கண்டறிய வேண்டியது அவசியமானது. அதற்காக, வாலாஜா ஏரியிலிருந்து நேரடியாக நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீர், 400 மி. மீட்டர் விட்டமுள்ள (HDPE) குழாய்மூலம் வடக்குத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுத்திகரிப்பதற்காக அனுப்பப்பட்டது. இப்பணியானது, வெகு குறுகிய காலமாகிய 10 நாட்களில் ரூ.70.14 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டது. 20-8-2019-ல் நீர் எடுக்க ஆரம்பித்து 29-8-2019 வரை 220 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்டு, சென்னை மாநகர மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

2020 மார்ச் 16]

5.7.1.2. தனியார் விவசாய கிணறுகள் வாடகைக்கு அமர்த்துதல்

நீர் மகசூல் அதிகமுள்ள விவசாய ஆழ்துளைக் கிணறுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டு, அவற்றிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 110 மில்லியன் லிட்டர் நீர், சென்னை நகரின் விநியோகத்திற்காக செங்குன்றத்தில் அமைந்துள்ள, நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

5.7.1.3. பயன்பாட்டில் இல்லாத கல்குவாரிகள்மூலம் குடிநீர் ஆதாரம்

சென்னைக் குடிநீர் வாரியம், பயன்பாட்டில் இல்லாத கல்குவாரிகளில் தேங்கியுள்ள நீரை சுத்திகரித்து குடிநீராக பயன்படுத்துவதில் முன்னோடியாக திகழ்கிறது. சிக்கராயபுரம் பகுதியிலுள்ள, பயன்பாட்டில் இல்லாத கல்குவாரிகளில் தேங்கியுள்ள நீரில், நாளொன்றுக்கு சுமார் 30 மில்லியன் லிட்டர் வீதம் மூன்று மாதங்களுக்கு எடுக்கப்பட்டு, செம்பரம்பாக்கத்தில் அமைந்துள்ள, நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் வாயிலாக சென்னை நகரின் குடிநீர் விநியோகத்திற்காக அனுப்பப்பட்டது.

மேலும், சென்னைக் குடிநீர் வாரியம், எருமையூர் கல்குவாரி, இரட்டை ஏரி, பெரும்பாக்கம் ஏரி மற்றும் அயனம்பாக்கம் ஏரிகளிலிருந்து நீர் எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. சிறப்பு உந்து குழாய் அமைப்பின்மூலம் எருமையூர் குவாரியிலிருந்து நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் நீர் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

தலா 10 MLD வீதம், நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீரை பரவலாக்கப்பட்ட நீர் ஆதார முறையில் இரட்டை ஏரி, பெரும்பாக்கம் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய ஏரிகளில் நடமாடும் சுத்திகரிப்பு நிலையங்களைக் கொண்டு அந்தந்த இடத்திலேயே சுத்திகரிப்பு செய்து குடிநீர் வழங்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5.7.1.4. ஜோலார்பேட்டையிலிருந்து இரயில்மூலம் சென்னைக்கு குடிநீர் அனுப்புதல்

ஜோலார்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து ஒவ்வொன்றும் 55 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட 50 வேகன்கள்மூலம் ஒரு நடைக்கு 2.75 மில்லியன் லிட்டர் வீதம், நாளொன்றுக்கு இரண்டு

[2020 மார்ச் 16

நடைகள்மூலம் 5.50 மில்லியன் லிட்டர் குடிநீர் கொண்டுவர திட்டமிடப்பட்டு, 159 நடைகள்மூலம் 438 மில்லியன் லிட்டர் குடிநீர் ஜோலார்பேட்டையிலிருந்து இரயில்மூலம் சென்னைக்கு கொண்டு வரப்பட்டு சென்னை மாநகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

5.8. மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய திட்டங்கள்

5.8.1. அழைத்தால் இணைப்பு மற்றும் இல்லந்தோறும் இணைப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அழைத்தால் இணைப்பு திட்டமானது, சென்னை மாநகரில், தரை தளம் + இரண்டு தளங்கள் அல்லது காலி தளம் + மூன்று தளங்கள் அமையப்பெற்ற கட்டடங்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்குவதாகும். இல்லந்தோறும் இணைப்பு திட்டமானது சென்னை மாநகரில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பிரதான சென்னை மாநகரில் மழைநீர்வடிகால்/நன்னீர் வழித்தடங்களில் கழிவுநீரை முறையின்றி வெளியேற்றும் 1,11,237 வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்குவதாகும்.

இத்திட்டங்களின்படி, இணைப்பு கோரிய நாளில் இருந்து 15 நாட்களுக்குள் எவ்வித ஆவணங்களோ மற்றும் முன்கூட்டியே பணம் செலுத்துதல் ஆகியவை எதுவுமின்றி இணைப்பு வழங்கப்படும். இணைப்பு வழங்கிய பின், நுகர்வோர், சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய இணைப்புக் கட்டணம், உட்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணம் (ஏதேனும் இருப்பின்), சாலை வெட்டு கட்டணம், பொருட்கள் மற்றும் பணியாட்களின் கூலி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கான கட்டணம் (ஏதேனும் இருப்பின்), அத்தொகையை கணக்கிட்டு, பயனாளிகள் ஒரே தவணையிலோ அல்லது 10 தவணைகளில் வட்டியில்லாமல் ஐந்து வருடத்திற்குள் செலுத்துவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

5.8.2. அனைத்துக் கட்டடங்களுக்கும் கழிவுநீர் இணைப்பு

சென்னையிலுள்ள கூவம், அடையாறு, மற்றும் பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்க்க சென்னையிலுள்ள கழிவுநீர் இணைப்பு பெறாத அனைத்துக் கட்டடங்களுக்கும் சென்னைக் குடிநீர் வாரியமே தாமாக முன்வந்து எந்தவித ஆவணங்களுமின்றி கழிவுநீர் இணைப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 16]

மேற்படி கழிவுநீர் இணைப்புக்கான கட்டணத்தை பொது மக்கள் முழுமையாக ஒரே தவணையிலோ அல்லது 5 வருடத்தில் 10 தவணைகளாகவோ செலுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

5.8.3. சென்னை நதிகள் சீரமைப்புப் பணிகள்

தமிழ்நாடு அரசு நதிகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த உறுதி கொண்டு அதற்கான சீரமைப்புப் பணிகளை மேம்படுத்துவதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன், சென்னைக் குடிநீர் வாரியம் இணைந்து கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய் மற்றும் பிற சிறு கால்வாய்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கில் அதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து செயல்படுத்தி வருகிறது. கூவம் மற்றும் அடையாறு நதிகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் முறையே ரூ.186.19 கோடி மற்றும் ரூ.123.19 கோடி மதிப்பில் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்களில் ஒரு பகுதியாக கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல், இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய் மற்றும் தெற்கு பக்கிங்காம் கால்வாய்களில் நேரடியாக கலக்கும் கழிவுநீரைத் தடுத்தல், இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் குழாய்கள்/கழிவுநீர் உந்து நிலையங்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டத்திற்காக, தமிழக அரசு கொள்கை அளவில் ரூ.2,371 கோடி நிருவாக ஒப்புதல் அளித்து, முதற்கட்டமாக, இத்திட்டப் பணிகளை உடனடியாக செயல்படுத்த ரூ.1,001 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் 2020-ல் தொடங்கி 2023-ல் முடிவு பெற திட்டமிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

5.8.4. நகரமயமாக்கப்பட்ட பகுதிகளின் வறண்ட ஏரிகளை மீள் நிரப்ப கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு

சென்னை நகரின் குடிநீர்த் தேவையை நிலையான ஆதாரங்களின்மூலம் பூர்த்தி செய்யும் விதமாக நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட இரண்டு மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பெருங்குடி மற்றும் நெசப்பாக்கத்தில் நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாளொன்றுக்கு 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு சுழற்சி செய்து சென்னை நகரை சுற்றியுள்ள வறண்ட ஏரிகளை மீள் நிரப்ப விரிவான திட்ட அறிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (சென்னை) மற்றும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையுடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்விரிவான திட்ட அறிக்கை படிப்படியாக முடிக்கப்பட்டு, முதல் நிலையாக பெருங்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஏரிகளை மீள்நிரப்ப, பெருங்குடியில் மறுசுழற்சி செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிக்கப்படும். பிற நிலையங்கள் மற்றும் ஏரிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தொடர்ந்து தயாரிக்கப்படும்.

5.8.5. கழிவுநீர் ஊர்திகள்

புதிதாக பெருநகர சென்னையுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளின் கழிவுநீர் தொட்டியில் சேகரமாகும் கழிவுநீரை குறைந்த செலவில் அகற்றிட 50 கழிவுநீர் ஊர்திகள் கொள்முதல் செய்வதற்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன.

5.8.6. நிலத்தடி நீர் கண்காணிப்பு

சென்னையில் 200 இடங்களில் ஆன்லைன்மூலம் நிகழ்நேர நிலத்தடி நீர் கண்காணிப்பை பொது மக்கள் அறிந்துகொள்ளுதல், நகர அளவில் நிலத்தடி நீர் எடுப்பதற்கான கணக்கெடுப்பு/தணிக்கை மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு விவரங்கள்/தணிக்கை ஆகியவை மேற்கொள்ளப்படும்.

2020 மார்ச் 16]

5.8.7. சூரிய மின் உற்பத்தி

சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு சொந்தமான காலியான இடங்களில் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பகிர்மானத்தில் பசுமை ஆற்றலை பயன்படுத்தவும், மின் செலவை குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.8.8. புவிசார் தகவல் தொழில்நுட்பம்

சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளை புவிசார் தகவல் தொழில்நுட்பம் கொண்டு தொகுத்து, மேம்பட்ட மேலாண்மை மற்றும் பராமரிப்பு செய்யும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக முன்மொழிவு கோரிக்கை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.8.9. கழிவுநீரகற்றுப் பணியாளர் மறுவாழ்வு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீரகற்றுப் பணியாளர்களுக்கான மறுவாழ்வு மற்றும் மாற்றுத் திறன் பயிற்சி மற்றும் அவர்களது குழந்தைகளுக்காக, தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்காக பணியாளர்களின் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

5.8.10. குடிநீர் பரிசோதனை நிலையம் மேம்படுத்துதல்

தேசிய சான்றுரைக்கப்பட்ட நவீன குடிநீர் பரிசோதனை நிலையத்தினை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள சென்னைக் குடிநீர் வாரியத்தின் நீர் தர உத்தரவாத பிரிவின்கீழ் அமைப்பதற்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன.

5.9. நிதி நிலைமை

2019-2020 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவினமானது ரூ.1,397.46 கோடி ஆகும். வாரியத்தின் மொத்த வருமானம் 2019-2020 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி ரூ.1,197.94 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின்மூலம் ரூ.226.59 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின்மூலம்

ரூ.701.08 கோடியும், இதர வருவாய் ரூ.57.49 கோடியும் ஆகும். 2019-2020 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும், இயக்கம் & பராமரிப்பு செலவு மற்றும் இதர செலவினங்களுக்காகவும் குடிநீர் வாரியத்திற்கு ரூ.175 கோடி நிதியினை தமிழக அரசு மானியமாக வழங்கியது.

5.10. குறைத் தீர்ப்பு நடவடிக்கைகள்

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோரின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

5.10.1. 24x7 புகார்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், 24 மணி நேர குறைகள் களையும் பிரிவு, வாரத்தின் எல்லா நாட்களிலும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும் மற்றும் கண்காணிப்பும் நடைபெறுகிறது. இம்மையத்தில் நுகர்வோர், தங்களது புகார்களையும்/ குறைகளையும் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 45674567 மூலமாகவோ பதிவு செய்யலாம். தற்போதுள்ள தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 10-லிருந்து 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

புகார் பிரிவில் சராசரியாக ஒரு நாளைக்கு 310 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறைநிவர்த்தி அமைப்பு, பொது மக்களால் எளிதாக பயன்படுத்தும் விதத்தில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனியான நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு தலைமை அலுவலகத்தில் நுகர்வோர்களுக்கு சேவை செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

5.10.2. இணையதளம்மூலம் புகார்களைப் பெற்று தீர்வு காணுதல்

நுகர்வோர் தங்களின் புகார்களை, www.chennaimetrowater.tn.gov.in என்ற சென்னை குடிநீர் வாரியத்தின் இணையதளம் மூலமாகவும் பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களை, நிவர்த்தி செய்யும்பொருட்டு, சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைக்குள் தீர்வு காணப்படுகிறது.

5.10.3. "மெட்ரோ வாட்டர்" கைப்பேசி செயலி

'Metro Water' என்ற புதிய கைப்பேசி செயலி நுகர்வோர்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் பொது மக்கள் / நுகர்வோர் தங்களது குடிநீர் வழங்குதல் சம்பந்தமான புகார்களை, சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உடனுக்குடன் எந்த இடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் கைப்பேசி மூலமாக தெரிவிக்கும் வகையில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து "Metro Water" என தட்டச்சிட்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், பொது மக்கள் தங்கள் பெயர், கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்களை ஒரு முறை பதிவு செய்வதன்மூலம் குடிநீர் புகார் சம்பந்தமாக படங்கள்/ புகைப்படங்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் கைப்பேசி மூலமாகவே பதிவேற்றம் செய்து நிலைமையை தெரிவித்து கொள்ளலாம். குடிநீர் சம்பந்தப்பட்ட புகார்களை பதிவு செய்யும் போது கேட்கப்படும் விவரங்களை அளிக்கும்படி நுகர்வோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பின்னர் ஒரு பிரத்யேக புகார் பதிவு எண் உருவாக்கப்பட்டு அந்த எண் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். பொது மக்கள் தங்களது புகார் மீதான நடவடிக்கை விவரங்கள் மற்றும் அப்போதைய நிலை பற்றிய விவரங்களை செயலி மூலமாகவே அறிந்துகொள்ளலாம்.

5.10.4. திறந்தவெளி குறைதீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, திறந்தவெளி குறைதீர்ப்பு கூட்டங்கள் (Open House Meeting) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை வாரியத்தின் மூத்த அதிகாரிகள் தலைமையில்

[2020 மார்ச் 16

நடத்தப்படுகிறது. இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5.10.5. சென்னை சீர்மிகு நகரம்-குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் மேம்பாட்டுப் பணிகள்

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகம் இந்தியா முழுவதிலுமிருந்து 100 நகரங்களை சீர்மிகு நகரங்களாக மாற்றுவதற்காக தேர்ந்தெடுத்துள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரங்களில் சென்னை நகரமும் ஒன்றாகும். சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ், கீழ்க் கண்ட பணிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1) சென்னை மாநகரத்திலுள்ள வணிக வளாகங்கள் மற்றும் குடிநீர் அதிக அளவில் பயன்படுத்தும் வளாகங்களில் 12,708 AMR குடிநீர் அளவுமானிகள் பொருத்தும் பணிகளுக்காக ரூ.9.50 கோடி மதிப்பீட்டிற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

2) சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள குடிநீர் லாரிகளில் நீர் நிரப்பும் 41 நிலையங்களில் உள்ள 191 குடிநீர் நிரப்பும் கம்பங்களில் கட்டுப்பாட்டு கருவி பொருத்தி மிடுக்கு அட்டைகள் (SMART CARD) பயன்படுத்தி, வலைதளம்மூலம் கண்காணிக்கும் பணிக்காக ரூ.11.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன.

5.11. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG) ஒரு புதிய, உலகளாவிய இலக்குகள் ஆகும். இவை இலக்குகள், இலட்சியம் மற்றும் குறிகாட்டிகளின் தொகுப்பாகும், இது அடுத்த 15 ஆண்டுகளில் தங்கள் நிகழ்ச்சிநிரல்களையும் அரசியல் கொள்கைகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளைக்கொண்டு வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் 2015-ல்

2020 மார்ச் 16]
ஐ.நா. சபையின் நிலையான வளர்ச்சிக்கான உச்சி மாநாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG) 2030 நிகழ்ச்சிநிரலில், இந்தியாவுடன் பிற நாடுகளும் கையெழுத்திட்டன. இந்த இலக்குகள் முக்கிய தொகுப்பான மக்கள், தாவரங்கள், செழுமை, அமைதி மற்றும் கூட்டாண்மை ஆகியவைகளில் கவனம் செலுத்துகின்றன.

அதன் தற்போதைய பாதையில், பொருளாதார முன்னேற்றம் மற்றும் நிலைப்புத் தன்மையின் பல துறைகளில் எஸ்.டி.ஜி.களை செயல்படுத்துவதற்கு இந்தியா ஏற்கெனவே அதிக இலட்சியமுள்ள இலக்கை நிர்ணயித்துள்ளது. எஸ்.டி.ஜிகளை அடைவதற்கு அனைத்து சமூக மற்றும் பொருளாதார அளவுகளை எய்தும் வகையில் இந்த திட்டங்களை வடிவமைப்பதும், செயல்படுத்துவதும், மாநில அரசின் பங்காகும்.

5.11.1. நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான இலக்குகள் மற்றும் இலட்சியங்கள்

அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதற்கான உறுதி மற்றும் நிலையான மேலாண்மை இப்புவியில் உள்ள அனைவரும் பாதுகாப்பான மற்றும் மலிவு விலை குடிநீரை பெறுவது 2030 ஆம் ஆண்டிற்கான குறிக்கோள் ஆகும். உலகெங்கிலும் உள்ள சிலருக்கு சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரத்தை பெற்று பயனடைந்தும், இன்னும் சிலருக்கு கிடைக்காத சூழலே நிலவுகிறது. நீர் பற்றாக்குறை உலகெங்கிலும் 40 விழுக்காட்டிற்கும் அதிகமான மக்களை பாதிக்கிறது. மேலும் பருவநிலை மாற்றத்தின் விளைவாக அந்த எண்ணிக்கை இன்னும் உயரக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையிலேயே இது தொடர்ந்தால், 2050 ஆம் ஆண்டு வாக்கில் 4 பேரில் ஒருவர் மீண்டும் மீண்டும் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவார்கள். எனவே, இந்த நீடித்த நிலையான இலக்கை அடைய, சர்வதேச ஒத்துழைப்பு, ஈரமான பரப்புகளையும் நதிகளையும் பாதுகாத்தல், நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பங்களை பகிர்ந்துகொள்ளல் மற்றும் பிற உத்திகள்மூலம், ஒரு புதிய பாதைக்கு வழிவகுக்கும்.

[2020 மார்ச் 16

அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரம்					
குடிநீர் வழங்கல் (உள்ளாட்சி அமைப்புகள்)				சுகாதாரம் (உள்ளாட்சி அமைப்புகள்)	
ஆண்டு	பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டங்களின்கீழ் உள்ள மக்கள் தொகை (இலட்சத்தில்)	பயனுறும் மக்கள் தொகை சதவீதத்தில்	நாளொன்றுக்கு குடிநீர் நுகர்வு (லிட்டரில்) தனிநபர் நுகர்வு	தனிநபர் சுகாதாரம் (கழிவறை வசதி) உள்ள மக்கள் தொகை (இலட்சத்தில்)	பயனுறும் மக்கள் தொகை சதவீதத்தில்
2012-2013	47.52	70	122	48.86	72
2013-2014	58.35	85	111	50.42	73
2014-2015	58.86	85	83	50.76	73
2015-2016	59.33	84	82	51.13	72
2016-2017	59.80	84	116	51.46	72
2017-2018	61.29	84	89	53.24	73
2018-2019	70.82	96	92	66.70	91
2019-2020	72.66	97	94	67.84	91
திட்டமிடல்					
2020-2021	73.57	97	99	68.19	90
2021-2022	74.50	98	101	69.50	94

2020 மார்ச் 16]

2022-2023	77.22	100	104	74.35	96
2023-2024	78.03	100	109	75.11	96
2024-2025	78.86	100	139	78.86	100

[2020 மார்ச் 16

6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை மாநகராட்சி நீங்கலாக, தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்திட பிரத்யேக அமைப்பாக இயங்கும் பொருட்டு, 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் சட்டமன்றத்தில் ஒரு சட்டமுன்வடிவின்மூலம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களை தலைவராகவும், மேலாண்மை இயக்குநர் அவர்களை தலைமை நிருவாகியாகவும் மற்றும் இவர்களுக்கு துணை நிற்கும் தொழில்நுட்பம், நிதி மற்றும் நிருவாகப் பிரிவுகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு தலைமைப் பொறியாளரின்கீழ் செயல்பட்டு வருகிறது.

6.1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்

1. குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கான திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல்.

2. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.

3. வழங்கப்படும் நீரின் தரத்தை கண்காணித்தல் மற்றும் கண்காணிப்பு திட்டத்தை மேற்கொள்ளுதல்.

4. குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மைக்கான நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.

5. தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2020 மார்ச் 16]

6.2. குடிநீர் வழங்கல் திட்டம்

ஊரகக் குடியிருப்புகள் மற்றும் நகரங்களுக்கு புதிய குடிநீர்த் திட்டமோ அல்லது ஏற்கெனவே உள்ள திட்டங்களை மேம்படுத்தும் பணிகளோ, கிடைக்கும் நீராதாரத்தின் அளவு, பயன்பெறும் மக்கள் தொகை மற்றும் தேவைப்படும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தனிக் குடிநீர்த் திட்டங்களாகவும் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களாகவும் வடிவமைக்கப்படுகின்றன.

நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் பயனாளிகள் தனிப்பட்ட உள்ளாட்சி அமைப்பாக இருந்தால் அத்திட்டங்களின் பராமரிப்பு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமே ஒப்படைக்கப்படுகிறது. மாறாக பயனாளிகள் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளாக இருந்தால் அத்திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்கின்றது.

6.2.1. ஊரக குடிநீர் வழங்கல் திட்டம்

சென்ற ஆண்டு வரை, ஊரக குடிநீர் வழங்கல் திட்டங்கள் மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்துடன்கூடிய மாநில இணைப் பங்கு மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் ஆகிய நிதிகளைக் கொண்டு செயலாக்கப்பட்டு வந்தது. தேசிய ஊரக குடிநீர் வழங்கல் திட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில், ஊரக பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கல் அளவீடு நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர் என வரையறுக்கப்பட்டுள்ளது.

தற்போது மத்திய அரசு தேசிய ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தினை (NRDWP) ஒரு புதிய திட்டமாக 'ஜல் ஜீவன் மிஷன்' என்ற பெயரில் 2024-க்குள், ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் செயல்பாட்டு வீட்டுக் குழாய் இணைப்பை (FHTC) வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் நோக்கம், குடிநீர் சேவையை வீடுகள் வரையில் கொண்டு செல்வது; அதாவது போதுமான அளவில் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் தொடர்ந்தாற் போல் குடிநீர் வழங்குவதாகும்.

மேற்காணும் முனைப்பை தொடர்ந்து, மாநில அரசு, இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அளவு குடிநீரை வீட்டிணைப்பின்மூலம் வழங்கும் திட்டத்தினை மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

[2020 மார்ச் 16

பயனாளிகளுக்கான உட்கட்டமைப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், செயல்பாட்டு வீட்டுக் குழாய் இணைப்பு பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையும் கூட்டு முயற்சியுடன் செயல்படுத்த உள்ளன.

6.2.2. நகர்ப்புற தனிக் குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற தனிக் குடிநீர்த் திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தும் அமைப்பாக செயலாற்றி வருகிறது. மேற்காணும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு செயல்படுத்தப்படும் தனிக் குடிநீர்த் திட்டங்கள் முடிந்தவுடன் பராமரிப்புக்காக அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

இத்திட்டங்கள் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III (TNUDP-III), சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் (UIDSSMT), ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP), மாநில அரசின் குறைந்தபட்ச தேவை திட்டம் (MNP) மற்றும் மூலதன மானிய நிதி (CGF) ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயலாக்கப்பட்டு வருகின்றன.

2019-2020 நிதி ஆண்டில், திண்டிவனம் நகராட்சிக்கான தனிக் குடிநீர்த் திட்டம் 0.83 இலட்சம் மக்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.52.45 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், 2 மாநகராட்சிகள் மற்றும் 9 நகராட்சிகளில் உள்ள 20.18 இலட்சம் மக்கள் பயன்பெறும்பொருட்டு, ரூ.1,004.77 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு உச்சகால அளவான 231.02 மில்லியன் லிட்டர் (Ultimate stage) பாதுகாப்பான குடிநீர் வழங்கும் வகையில் 11 தனிக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இது தவிர குழித்துறை, திருத்தணி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய 3 நகராட்சிகள், தென்கரை பேரூராட்சி ஆகியவற்றிற்கான தனிக் குடிநீர்த் திட்டங்கள் 1.45 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.180.16 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	மாவட்டம்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
	2019-2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் - 1 எண்ணம்				
1.	விழுப்புரம்	திண்டிவனம் நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	52.45	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்ட மைப்பு வளர்ச்சி திட்டம்	0.83
		உப மொத்தம் - I	52.45		0.83
	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் - 11 எண்ணம்				
1.	திருநெல்வேலி	திருநெல்வேலி மாநகராட்சி மேம்பாட்டு குடிநீர்த்திட்டம்.	230.00	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி	6.88
2.	நாமக்கல்	நாமக்கல் நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	185.24	தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	1.84
3.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 3 விடுபட்ட பகுதிகள் (கவுண்டம் பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம்) மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	108.16	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி	3.59

வ. எண்	மாவட்டம்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன் பெறும் மக்கள் தொகை (இலட் சத்தில்)
4.	நீலகிரி	குன்னூர் நகராட்சி வெலிங்டன் இராணுவ நிலையம் மற்றும் பாஸ்டர் தொழில்நுட்ப நிலையம் மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	95.30	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி	0.59
5.	தூத்துக்குடி	கோவில்பட்டி நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	81.82	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்	1.40
6.	நாமக்கல்	திருச்செங்கோடு நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	81.22	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	1.50
7.	தேனி	போடிநாயக்கனூர் நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	76.15	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி	1.00
8.	திண்டுக்கல்	கொடைக்கானல் நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	46.31	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்	0.57
9.	கரூர்	இனாம் கரூர் நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	18.57	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி	1.45

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டம்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன் பெறும் மக்கள் தொகை (இலட் சத்தில்)
10.	மதுரை	ஆனையூர் நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	8.97	குறைந்த பட்ச தேவை திட்டம்	0.72
11.	மதுரை	உசிலம்பட்டி நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	73.03	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	0.64
		உப மொத்தம் - II	1004.77		20.18
	ஒப்பந்த நிலையில் உள்ளவை - 4 எண்ணம்				
1.	கன்னியாகுமரி	குழித்துறை நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	30.94	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	0.31
2.	திருவள்ளூர்	திருத்தணி நகராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	109.68	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் மூலதன மானிய நிதி	0.85
3.	தேனி	போடிநாயக்கனூர் நகராட்சி (முல்லை பெரியாறு) மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	30.00	மூலதன மானிய நிதி	---

வ. எண்	மாவட்டம்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன் பெறும் மக்கள் தொகை (இலட் சத்தில்)
4.	தேனி	தென்கரை பேரூராட்சி மேம்பாட்டு குடிநீர்த் திட்டம்.	9.54	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி நிதி மற்றும் மாநில பங்கு	0.29
		உப மொத்தம்-III	180.16		1.45
		ஆக மொத்தம்	1237.38		22.46

6.2.3. பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

100 கோடி ரூபாய்க்குமேல் திட்ட மதிப்பீடு கொண்ட திட்டங்கள் பெரியகூட்டுக்குடிநீர்த்திட்டங்களின்கீழ்வகைப்படுத்தப்படுகின்றன. இந்த வகை திட்டங்களில் பணி அளவு மற்றும் கால அளவின் காரணமாக, அதனை செயல்படுத்தி முடிக்க சில ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

திண்டுக்கல், கன்னியாகுமரி, திருச்சி, ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், நாமக்கல், சேலம், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 6 நகராட்சிகள் மற்றும் 34 பேரூராட்சிகள் மற்றும் 2,382 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.1,940.48 கோடி மதிப்பீட்டில் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டங்கள் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்ற இலக்கிடப்பட்டு, அவை முடிவுறும் தருவாயில் 29.84 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு உச்சகால அளவான 213.43 மில்லியன் லிட்டர் (Ultimate stage) பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படும்.

2020 மார்ச் 16]

இவை தவிர, விருதுநகர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2.60 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.444.71 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

மேற்காணும் திட்டங்கள் ஜல் ஜீவன் மிஷன் JJM (முந்தைய தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம்), மாநில அரசின் ஈடான பங்குத் தொகை (SMS), தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD), மாநில அரசின் குறைந்தபட்ச தேவை திட்டம் (MNP), உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு (ULB), உலக வங்கி (தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்), அம்ரூத் (AMRUT), ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM), மற்றும் ஜெர்மன் வங்கி நிதி உதவி (Kfw) ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயலாக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
செயலாக்கத்தில் உள்ள பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் -8 எண்ணம்				
1.	திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த கீரனூர் மற்றும் நெய்காரப்பட்டி பேரூராட்சிகள், 253 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	108.80	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி நிதி உதவி, மாநில அரசின் குறைந்த பட்ச தேவை திட்டம், ஜல் ஜீவன் மிஷன்	2.22

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
2.	திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம்.	543.20	உலக வங்கி (தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்), உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு, அம்ரூத்	6.20
3.	நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 669 ஊரக குடியிருப்புகள் மற்றும் ஆலம்பாளையம், படவீடு சங்ககிரி பேரூராட்சிகளுக்கான கூட்டு குடிநீர்த் திட்டம்.	399.46	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி, பேரூராட்சிகளின் மூலதன மானிய நிதி, ஊரக மூலதன மானிய நிதி	6.61

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
4.	கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அன்னூர், மூப்பேரிபாளையம் பேரூராட்சிகள், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி பேரூராட்சி, சூலூர் விமானபடைதளம், சூலூர் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 155 ஊரகக் குடியிருப்புகளுக்கான (Bulk quantity) கூட்டுக் குடிநீர்த் திட்டம் .	241.00	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி, பேரூராட்சிகளின் மூலதன மானிய நிதி, ஊரக மூலதன மானிய நிதி, வைப்புத் தொகை	1.26
5.	ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள் மற்றும் 547 வழியோர ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	224.00	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி நிதி உதவி, மாநில அரசின் குறைந்தபட்ச தேவை திட்டம், ஜல் ஜீவன் மிஷன்	5.47

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
6.	கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பத்மநாபபுரம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் அபிவிருத்தி திட்டம்.	174.00	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி, மாநில அரசின் குறைந்த பட்ச தேவை திட்டம், ஜெர்மன்வங்கி நிதி உதவி, ஜல் ஜீவன் மிஷன்	3.44
7.	திருச்சி மாவட்டம், முசிறி, தாத்தையங்கார்பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	140.22	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி நிதி உதவி, மாநில அரசின் குறைந்தபட்ச தேவை திட்டம், ஜல் ஜீவன் மிஷன்	1.68
8.	கன்னியாகுமரி மாவட்டம், அழகியபாண்டியபுரம், 8 பேரூராட்சிகள் மற்றும் 246 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	109.80	மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர்த் திட்டம், மாநில அரசின் ஈடான பங்குத் தொகை, குறைந்தபட்ச தேவை திட்டம் (80), உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு/ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம்	2.96
	உப மொத்தம்–I	1940.48		29.84

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
	ஒப்பந்த நிலையில் உள்ளவை - 1 எண்ணம்			
1	விருதுநகர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	444.71	ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம்/வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம்	2.60
	உப மொத்தம்–II	444.71		2.60
	ஆக மொத்தம்	2,385.19		32.44

6.2.4. இதர கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் (திட்ட மதிப்பீடு ரூ.100 கோடிக்குகீழ் உள்ளவை)

2019-2020 ஆம் நிதியாண்டில் சேலம், தேனி, திண்டுக்கல், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 250 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 0.97 இலட்சம் மக்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.59.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நாளொன்றுக்கு 5.38 மில்லியன் லிட்டர் அளவு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், திருப்பூர், தூத்துக்குடி, கரூர், திருநெல்வேலி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சார்ந்த 7 பேரூராட்சிகள் மற்றும் 2,894 ஊரக குடியிருப்புகளில் உள்ள 21.50 இலட்சம் மக்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.885.67 கோடி மதிப்பீட்டில் 23 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுறும் தருவாயில், நாளொன்றுக்கு உச்சகால அளவான 107.09 மில்லியன் லிட்டர் (Ultimate Stage) பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படும்.

இவை தவிர, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த 328 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.111.33 கோடி மதிப்பீட்டில் 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

மேற்காணும் திட்டங்கள் ஜல் ஜீவன் மிஷன் JJM (முந்தைய தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம் - NRDWP), குறைந்தபட்ச தேவைத் திட்டம் (MNP), தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD), தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி மாநில பங்கு, மாநில அரசின் இணை பங்கு (SMS), மூலதன மானிய நிதி (CGF), வைப்புத் தொகை (DEPOSIT) ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயலாக்கப்பட்டு வருகின்றன.

திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
	2019-2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் - 9 எண்ணம்			
1	நீலகிரி மாவட்டம், முள்ளிகூர், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளைச் சார்ந்த முள்ளிகூர் மற்றும் 54 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	25.85	குறைந்தபட்ச தேவைத் திட்டம்/ ஜல் ஜீவன் மிஷன்	0.31

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
2	சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், எடப்பாடி ஒன்றியங்களைச் சார்ந்த 51 ஊரகக் குடியிருப்புகளுக்கு பயன்பாட்டில் உள்ள 327 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்து தலைமை இடம், நீர் சுத்திகரிப்பு மற்றும் நீர்உந்து நிலையங்கள்மூலம் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்	9.50	குறைந்தபட்ச தேவைத் திட்டம்/ ஜல் ஜீவன் மிஷன்	0.10
3	ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம் பட்லூர் ஊராட்சிக்குட்பட்ட 30 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித்திட்டம்	6.21	குறைந்தபட்ச தேவைத் திட்டம்/ ஜல் ஜீவன் மிஷன்	0.10

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
4	ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், மாத்தூர் ஊராட்சிக்குட்பட்ட 28 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித்திட்டம்	5.52	குறைந்தபட்ச தேவைத் திட்டம்/ ஜல் ஜீவன் மிஷன்	0.07
5	ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், மைலம்பாடி ஊராட்சியிலுள்ள 54 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	5.25	குறைந்தபட்ச தேவைத் திட்டம் / ஜல் ஜீவன் மிஷன்	0.09
6	திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 20 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	3.62	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.04
7	தேனி மாவட்டம், தேனி ஒன்றியத்தைச் சார்ந்த அரண்மனைப்புதூர் மற்றும் 4 இதர குடியிருப்புகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	1.67	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.12
8	தேனி மாவட்டம், போடி ஒன்றியத்தைச் சார்ந்த மஞ்சநாயக்கன்பட்டி மற்றும் 2 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	0.98	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.05

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
9	தேனி மாவட்டம், போடி ஒன்றியத்தைச் சார்ந்த கோடங்கிப்பட்டி மற்றும் 3 ஊரக குடியிருப்பு களுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	0.93	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.09
	உப மொத்தம்-I	59.53		0.97
	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் - 23 எண்ணம்			
1	திருப்பூர் மாவட்டம், பல்லடம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 155 குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	99.24	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	2.94
2	தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டபிடாரம் (பகுதி), விளாத்திகுளம் (பகுதி) மற்றும் புதூர் (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 248 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	94.04	மாநில அரசின் இணை பங்கு / ஜல் ஜீவன் மிஷன்	1.50
3	திருப்பூர் மாவட்டம், 5 பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 318 குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	85.75	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	4.06

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
4	கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 274 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	81.41	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.86
5	கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	69.31	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.85
6	கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகைமலை ஒன்றியங்களைச் சார்ந்த 253 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	52.75	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.91
7	திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	49.95	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.64

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
8	திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி (பகுதி), பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	46.55	மாநில அரசின் இணைபங்கு/ ஜல் ஜீவன் மிஷன்	2.00
9	திருச்சி மாவட்டம், வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஒன்றியங்களில் உள்ள 135 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். (நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில்)	46.32	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.33
10	திருநெல்வேலி மாவட்டம், மானூர் (பகுதி) மற்றும் பாளையங்கோட்டை (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	32.40	மாநில அரசின் இணைபங்கு/ஜல் ஜீவன் மிஷன்	1.45

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
11	கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரளபள்ளி மற்றும் 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	31.82	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.41
12	திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	31.32	மாநில அரசின் இணைபங்கு/ஜல் ஜீவன் மிஷன்	1.85
13	திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்தை சார்ந்த ரெட்டியார்பட்டி மற்றும் 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	28.71	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ மாநில பங்கு/ஊரக மூலதன நிதி/ஜல் ஜீவன் மிஷன்	0.57
14	கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	28.24	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.63

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
15	திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 53 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	20.34	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.23
16	திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	17.74	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி / தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.20
17	தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் (பகுதி), ஸ்ரீவைகுண்டம் (பகுதி) மற்றும் தூத்துக்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 90 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	17.17	மாநில அரசின் இணைபங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.58
18	திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 84 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	12.77	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.42

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
19	திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 38 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	11.55	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி/ தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மாநில பங்கு/ஜல் ஜீவன் மிஷன்	0.19
20	கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 17 குடியிருப்புகள் மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியத்தைச் சார்ந்த 18 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	9.21	வைப்புத்தொகை	0.48
21	கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஒன்றியத்திலுள்ள நாகொண்டபள்ளி மற்றும் 27 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	8.10	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.20
22	தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழிற்சாலை வளாகத்தைச் சுற்றியுள்ள 8 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	6.40	வைப்புத்தொகை	0.08

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
23	கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தேவேரிபள்ளி மற்றும் 23 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	4.58	குறைந்தபட்ச தேவைத் திட்டம் /ஜல் ஜீவன் மிஷன்	0.12
	உப மொத்தம்-II	885.67		21.50
	ஒப்பந்த நிலையில் உள்ளவை - 3 எண்ணம்			
1	கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஒன்றியத்தை சார்ந்த என்னேகொள்ளு மற்றும் 122 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	31.00	குறைந்தபட்ச தேவைத் திட்டம்/ ஜல் ஜீவன் மிஷன்	0.54
2	கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒன்றியத்தை சார்ந்த வெலகலஹல்லி மற்றும் 39 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	9.90	குறைந்தபட்ச தேவைத் திட்டம்/ ஜல் ஜீவன் மிஷன்	0.12
3	திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஒன்றியத்தை சார்ந்த 165 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	70.43	தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி / மாநில பங்கு	1.34
	உப மொத்தம்-III	111.33		2.00
	ஆக மொத்தம்	1056.53		24.47

6.2.5. அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டங்கள்-(AMRUT Projects)

அம்ரூத் திட்டத்தின்கீழ், 9 குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 5 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், மூன்று கட்டங்களாக 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2020 ஆம் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

6.2.5.1. அம்ரூத் குடிநீர்த் திட்டங்கள்

2019-2020 ஆம் நிதியாண்டில், திருப்பத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த ஆம்பூர் நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1.53 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.50.90 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு, திருப்பூர், கிருஷ்ணகிரி, வேலூர், கோயம்புத்தூர், விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த 7 குடிநீர்த் திட்டங்கள் 55.31 இலட்சம் மக்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.1,910.88 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு உச்ச கால அளவான 219.64 மில்லியன் லிட்டர் (Ultimate Stage) குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம்-பில்லூர்-III, 32.79 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ. 740.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த மூன்று சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒரு சிப்பந்தத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இரண்டு சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன.

இத்திட்டங்கள், மத்திய அரசின் அம்ரூத் திட்ட நிதி உதவி மட்டுமல்லாது, இதர நிதி ஆதாரங்களான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உலக வங்கி (தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்), ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைக் கொண்டு செயலாக்கப்படுகின்றன.

2020 மார்ச் 16]

குடிநீர்த் திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
	2019-2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் – 1 எண்ணம்			
1.	திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	50.90	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	1.53
	உப மொத்தம் - I	50.90		1.53
	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் - 7 எண்ணம்			
1.	ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	484.45	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	9.05
2.	திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	250.00	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	19.50
3.	கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் (பகுதி- I)	87.91	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	2.29

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
4.	வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	234.93	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	9.20
5.	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்ட, 8 பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	409.33	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி கடன், உள்ளாட்சிப் பங்களிப்பு	9.22
6.	விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	192.83	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உலக வங்கி (தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்), திட்ட நிலைத் தன்மை நிதி, உள்ளாட்சிப் பங்களிப்பு	2.15

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
7.	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	251.43	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உலக வங்கி (தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்), உள்ளாட்சிப் பங்களிப்பு	3.90
	உப மொத்தம் - II	1910.88		55.31
	ஒப்பந்த நிலையில் உள்ளவை - 1 எண்ணம்			
1.	கோயம்புத்தூர் மாவட்டம், விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான (புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுடன்) குடிநீர் அபிவிருத்தித் திட்டம்-பில்லூர்-III	740.15	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	32.79
	உப மொத்தம்-III	740.15		32.79
	ஆக மொத்தம்	2701.93		89.63

[2020 மார்ச் 16

6.2.5.2. அம்ரூத் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

நாகப்பட்டினம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், விருதுநகர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களைச் சார்ந்த 5 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 9.82 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1,094.00 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 75.50 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் வகையில், பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

பாதாளச் சாக்கடைத் திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்			
1.	நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	33.51	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உள்ளாட்சிப் பங்களிப்பு	0.19
2.	இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	52.60	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), உள்ளாட்சிப் பங்களிப்பு	0.43
3.	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான (குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) பாதாளச் சாக்கடைத் திட்டம்	591.14	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஆசிய வளர்ச்சி வங்கி கடன், உள்ளாட்சிப் பங்களிப்பு	5.17

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்தம் மதிப்பீடு (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
4.	விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	251.20	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஆசிய வளர்ச்சி வங்கி கடன், உள்ளாட்சிப் பங்களிப்பு	2.20
5.	திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	165.55	அம்ரூத் (மத்திய (ம) மாநில பங்கு), ஆசிய வளர்ச்சி வங்கி கடன், உள்ளாட்சிப் பங்களிப்பு	1.83
	மொத்தம்	1,094.00		9.82

6.3 கூட்டுக் குடிநீர்த் திட்டம்-இயக்குதல் மற்றும் பராமரிப்பு

அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10-3-1994-ன்படி, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, 9 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 347 பேரூராட்சிகள், 48,948 ஊரகக்குடியிருப்புகள் மற்றும் 541 தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் 4.23 கோடி மக்களை பயனாளிகளாகக் கொண்ட 556 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படுகின்றன.

மேற்கண்ட 556 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 1,928 மில்லியன் லிட்டர் (எம்.எல்.டி.) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் வருமாறு:

[2020 மார்ச் 16

வ. எண்	பயனாளிகள்	பயனாளிகளின் எண்ணிக்கை	திட்டத்தில் வடிவமைக்கப் பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம். எல்.டி)	தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி)
1	மாநகராட்சிகள்	9	265	209
2	நகராட்சிகள்	66	268	210
3	பேரூராட்சிகள்	347	358	323
4	ஊரகக் குடியிருப்புகள்	48,948	1,107	1,072
5	தொழிற்சாலைகள்/ கல்வி நிறுவனங்கள்/ வணிக நிறுவனங்கள்	541	148	114
	மொத்தம்	49,911	2,146	1,928 (90 %)

- நீண்டகாலத்திற்கு முன் செயல்படுத்தப்பட்டு, வாரிய பராமரிப்பிலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைக்கும் பணிகளை மேற்கொண்டு அவற்றை மேலும் 15 ஆண்டுகளுக்கு முழுத்திறனுடன் செயல்படுத்தும் வகையில், 99 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 92 திட்டங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 திட்டங்களின் பணிகள் 2019-2020-ல் முடிக்கப்படும்.

- மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் 2017-2018 முதல் 2019-2020 வரை ஒப்புதல் அளிக்கப் பெற்று, கோடைக்கால குடிநீர் தட்டுப்பாட்டை போக்கும் வகையிலான 618 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவைக் கண்காணிக்கவும் மற்றும் குடிநீர் வீணாவதைக் குறைக்கவும், 26.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தானியங்கி குடிநீர் அளவு மதிப்பிடும் கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 16]

- கோடைக்காலங்களில் மின்தடை ஏற்படும் பட்சத்தில் அதனைச் சமாளிக்க வாரியத்தில் 365 டீசல் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

6.4. குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சென்னையில் நிறுவப்பட்டுள்ள மாநில அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடம், மத்திய அரசினால் மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் 31 மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் 56 உப கோட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த பரிசோதனைக் கூடங்களில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் மற்றும் ஊரக மற்றும் நகர்ப் பகுதிகளில் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளும் வசதிகள் உள்ளன. மாநில அளவிலான பரிசோதனைக் கூடம் NABL (National Accreditation Board for Testing and Calibration Laboratories) தர சான்று பெறப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் 1,58,385 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில் மாநில அரசின் நிதி உதவியுடன் தர பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் நிதியாண்டில் 1 இலட்சம் குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில், மாநில அரசின் நிதி உதவியுடன் தர பரிசோதனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ், 1.68 இலட்சம் குடிநீர் மாதிரிகள் 56 உப கோட்ட பரிசோதனைக் கூடங்களின்மூலம் தர பரிசோதனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர, 2020-2021-ல், களநீர் பரிசோதனைப் பெட்டிகளை பயன்படுத்தும் முறை பற்றி 12,525 கடைநிலை ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராம குடியிருப்பிலும் ஒரு நீர் ஆதார மாதிரி களநீர் பரிசோதனைப் பெட்டியின் மூலமாக பரிசோதனை செய்யவும் மற்றும் இப்பரிசோதனைகளை உறுதிப்படுத்தும் விதமாக 12,525 நீர் மாதிரிகளை மாவட்ட நீர் ஆய்வகங்களிலும், மாதந்தோறும் 250 நீர் ஆதார மாதிரிகளை

[2020 மார்ச் 16

சென்னை ஆய்வகத்திலும் சரிபார்க்கும் பணியை 2020-2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.5. நீர் புவியியல் செயல்பாடுகள்

குடிநீர் ஆதாரங்களை கண்டறிதல், நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு முறைகள்மூலம் நிலத்தடி நீராதாரம் செறிவூட்டப்படுவதை உறுதிசெய்தல் போன்ற பணிகள் மக்களுக்கு போதுமான மற்றும் தொடர்ச்சியான குடிநீர் வழங்கும் குறிக்கோளை எட்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

வாரியத்தால் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டங்களுக்கு நீராதாரம் கண்டறியவும் மற்றும் நீடித்த நீர் நிலைத்தன்மைப் பிரிவின்கீழ் நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கான இடம் தேர்வு செய்யவும், அறிவியல் முறைகளை கொண்ட தொலையுணர்வு நுட்பம் மற்றும் புவியியல் தகவல் முறைமை ஆகிய தொழில்நுட்பம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சக நிதி ஆதாரத்தின்மூலம் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஒன்றியங்களின் நிலத்தடி நீர்வளங்களை குறிக்கும் வரைபடங்கள் (மென் நகல் மற்றும் அச்சுநகல்) மற்றும் குடிநீர் தரம் சார்ந்த வரைபடங்கள் (மென் நகல்) உருவாக்கப்பட்டதுடன் அவை அனைத்து துறைகளின் கள பயன்பாட்டிற்காக பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிம அமைப்பு நிதியின்மூலம், நீராதார நிலைத்தன்மைக்கான நடவடிக்கைகளின்கீழ், அரியலூர் மாவட்டத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 3 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், விருதுநகர் மாவட்டத்தில் ரூ.74.14 இலட்சம் மதிப்பீட்டில் 7 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழக வரலாற்றில் முதன்முறையாக, அரசுத் துறையைச் சார்ந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்களும் தங்களது சம்பளத்திலிருந்து ஒரு பங்கினை அளித்து, அதனுடன் அரசு வங்கிகள், குறிப்பாக பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகியவற்றின் சமூகப் பொறுப்பு நிதியுதவி மற்றும் கிராம மக்களின் பங்களிப்புடன் தமிழகத்தில்

2020 மார்ச் 16]

முதன்முறையாக முன்மாதிரி திட்டமாக, மழைநீர் சேகரிப்பின் அவசியத்தினை உணர்ந்து, எதிர்வரும் காலங்களில் தண்ணீர் பிரச்சினை உருவாகாமல் இருப்பதற்கு, வேலூர் மாவட்டத்தில் சின்னப்பள்ளிக்குப்பம் மற்றும் அண்பூண்டி ஆகிய இரண்டு கிராமங்களை தத்தெடுத்து, மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பினை ரூ.33.00 இலட்சம் மதிப்பில் உருவாக்கியுள்ளனர்.

இந்த முன்மாதிரி திட்டத்தினைப் போல், தமிழ்நாட்டில் பணிபுரியும் அனைத்து அரசு ஊழியர்களும் எதிர்கால நீரின் தேவையை உணர்ந்து, மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டு, அவரவர்கள் பணிபுரியும் இடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கலாம்.

இதன்மூலம் சின்னப்பள்ளிக்குப்பம் கிராமத்தில் நீர்மட்டம் 32 அடி அளவில் உயர்ந்தும், அண்பூண்டி கிராமத்தில் நீர்மட்டம் 19 அடி அளவில் உயர்ந்தும் காணப்படுகிறது. மேலும், நிலத்தடி நீரின் கொள்ளளவு மற்றும் தரம் அதிகரிப்பதுடன், நுண்பொருளாதார வளர்ச்சி, சுற்றுப்புறத்தின் பசுமை நிலை மற்றும் சுகாதார மேம்பாடு போன்றவை அதிகரித்துள்ளது.

மேலும், இதன் அவசியத்தை உணர்ந்து, அனைத்து ஊடகங்களும், தொலைக்காட்சிகளும் இந்த முன்மாதிரி திட்டத்தினை வெகுவாகப் பாராட்டினர்.

நகர்ப்புறங்களில் வெவ்வேறு வகையான மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளை பயன்படுத்தி நிலையான நீர் பாதுகாப்பு உறுதி செய்யும் பொருட்டு ரூ.20 கோடி மதிப்பீட்டில், நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தை (SuWaSeM), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஒருங்கிணைப்பு முகமையாக இருந்து வழங்கும். இத்திட்டம் நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகிய துறைகள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் ஊருணி மேம்பாடு, மேற்கூரை மழைநீர் சேகரிப்பு, நீர் செறிவூட்டு குட்டை போன்ற

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்க ரூ.6.37 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் ஆதாரம், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, பள்ளி மற்றும் அங்கன்வாடி குடிநீர்த் திட்டம் ஆகிய குடிநீர் வாரிய சொத்துகளை IMIS இணையதளத்தில் புவி இடகுறிப்பு (Geo Tagging) ஏற்படுத்தும் பணி மார்ச் 2017 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 63,093 புள்ளிகள் இடக்குறிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 31-12-2019 வரை 43,830 புள்ளிகள் (நீராதாரம் மற்றும் வழங்கும் இடங்கள்) இடக்குறிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 19,263 புள்ளிகளுக்கு புவியிடக்குறிப்பு ஏற்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

6.6. பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்:

அரசின் முடிவின்படி முன்னுரிமை மற்றும் தேவையின் அடிப்படையில் மாவட்ட தலைநகரங்களுக்கும், மாவட்ட தலைநகரங்கள் அல்லாத பிற முக்கிய நகரங்களுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை படிப்படியாக செயல்படுத்தி வருகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில், அரக்கோணம், மேட்டூர், சிதம்பரம், சிவகங்கை நகராட்சிகள் மற்றும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் உள்ள 3.27 இலட்சம் மக்கள் பயன்பெறும்பொருட்டு ரூ.310.20 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 32.60 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதன்மூலம் மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் வகையில் 5 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருப்பத்தூர், நாமக்கல், சிவகங்கை, விருதுநகர், ஈரோடு, கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள், 7 நகராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகளில் உள்ள 14.42 இலட்சம் மக்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.1,010.54 கோடி மதிப்பீட்டில் 16 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், நாளொன்றுக்கு 107.38 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் வகையில்

2020 மார்ச் 16]

வடிவமைக்கப்பட்டு, திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இவை தவிர, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் தேனி மாவட்டத்தைச் சார்ந்த மேலசொக்கநாதபுரம் பேரூராட்சி ஆகியவற்றில் உள்ள 96,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.304.72 கோடி மதிப்பீட்டில், 2 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
	2019-2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் - 5 எண்ணம்			
1.	அரக்கோணம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	95.52	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்/ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	0.96
2.	மேட்டூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	73.09	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்/ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	0.63

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
3.	பழனிசெட்டிபட்டி பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	34.67	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்ட நிதி	0.28
4.	சிதம்பரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	75.62	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் /ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ ‘மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	0.78
5.	சிவகங்கை நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	31.30	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் -III/ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு/உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி	0.62
	உப மொத்தம்- I	310.20		3.27
	செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் - 16 எண்ணம்			
1.	தூத்துக்குடி மாநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	95.00	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் -III / ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி / உள்ளாட்சிப் பங்களிப்பு	3.00

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
2.	நாகர்கோவில் மாநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	76.04	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	1.81
3.	திருப்பத்தூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	104.01	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	1.15
4.	ராசிபுரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	55.42	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ உள்ளாட்சிப் பங்களிப்பு	0.69
5.	காரைக்குடி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	112.53	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி	1.76
6.	சாத்தூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	37.66	சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி உள்ளாட்சிப் பங்களிப்பு	0.40

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
7.	சத்தியமங்கலம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	54.26	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	0.54
8.	பொள்ளாச்சி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	109.62	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	1.08
9.	உளுந்தூர் பேட்டை பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	38.67	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/மூலதன மானிய நிதி	0.37
10.	மேட்டுப் பாளையம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	91.70	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/உள்ளாட்சிப் பங்களிப்பு	0.84
11.	பெருந்துறை பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	54.78	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	0.45
12.	திருப்போரூர் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	42.00	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதி/ மூலதன மானிய நிதி	0.63
13.	பொன்னேரி பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	54.78	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதி/ மூலதன மானிய நிதி	0.83

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	நிதி ஆதாரம்	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
14.	வல்லம் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	34.51	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ மூலதன மானிய நிதி	0.23
15.	மணச்சநல்லூர் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	30.11	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/ மூலதன மானிய நிதி	0.43
16.	எஸ்.கண்ணனூர் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	19.45	ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி/ தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதி/மூலதன மானிய நிதி/உள்ளாட்சிப் பங்களிப்பு	0.21
	உப மொத்தம்- II	1010.54		14.42
	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ள திட்டங்கள்-2 எண்ணம்			
1.	மேல சொக்கநாதபுரம் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்	41.72	மூலதன மானிய நிதி	0.26
2.	விழுப்புரம் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம்	263.00	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்/வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம்/ உள்ளாட்சி பங்கு	0.70
	உப மொத்தம்- III	304.72		0.96
	ஆக மொத்தம்	1,625.46		18.65

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6.7. ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

6.7.1. குடிநீர்த் திட்டங்கள்

2019-2020 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.5067.24 கோடி மொத்த மதிப்பீட்டில் 44.59 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 21 குடிநீர்த் திட்டங்களுக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய 21 குடிநீர்த் திட்டங்களில், 5 நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 2,558 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 17.54 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.1,468.26 கோடி மதிப்பீட்டிலான 14 திட்டங்களுக்கு அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள, 1 மாநகராட்சி, 4 நகராட்சிகள், 27 பேரூராட்சிகள் மற்றும் 4700 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 27.05 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.3,598.98 கோடி மதிப்பீட்டிலான 7 திட்டங்கள் நிருவாக ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலையில் உள்ளன.

மேற்கூறிய திட்டங்கள் தவிர, 6 நகராட்சிகள், 37 பேரூராட்சிகள் மற்றும் 14,425 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 78.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 14 குடிநீர்த் திட்டங்கள் தோராயமாக ரூ.11,788.85 கோடி திட்ட மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

6.7.2. பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் பேரூராட்சி இயக்குநரகம் ஆகிய துறைகள் முன்னுரிமை அடிப்படையில் நிர்ணயிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்துகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.2,714.05 கோடி மதிப்பீட்டில், 10.58 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 7 பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய 7 பாதாளச் சாக்கடைத் திட்டங்களில், 2 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியிலுள்ள 1.53 இலட்சம் மக்கள்

2020 மார்ச் 16]

பயன்பெறும் வகையில் ரூ.572.72 கோடியிலான 3 திட்டங்களுக்கு அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 மாநகராட்சிகள் மற்றும் 1 நகராட்சியிலுள்ள 9.05 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.2,153.33 கோடியிலான 4 திட்டங்கள் நிருவாக ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலையில் உள்ளன.

6.7.3. கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்:

கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகியவற்றில் நிலத்தடி நீர் உப்புத்தன்மை அடைந்து வருவதாலும், நிலத்தடி நீர் மற்றும் ஆற்று நீராதாரங்கள் பருவமழை பொய்த்த நிலையில் குறைந்து வருவதாலும் அம்மாவட்டங்கள் குடிநீர் பற்றாக்குறை பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. எனவே, இந்த மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு, அனைத்து காலங்களிலும் தேவையான அளவுக்கு குடிநீர் வழங்கல் அளவை மேம்படுத்தி நிரந்தரமாக குடிநீர் வழங்குவதற்கான ஒரே வழி கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதே ஆகும்.

தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தலா நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறனுடைய கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்கவும் மற்றும் உட்கட்டமைப்புகள் அமைத்து குடிநீரை பகிர்மானம் செய்வதற்கும் விரிவான திட்ட மதிப்பீடு ரூ.3,041 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அமையவுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 3.14 இலட்சம் மக்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 3.21 இலட்சம் மக்களும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் அமையவுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்மூலம் 7.33 இலட்சம் மக்களும் பயன்பெறுவர்.

இத்திட்டங்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB-Asian Infrastructure Investment Bank) நிதி உதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு நிதி ஆதாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

[2020 மார்ச் 16

6.8. ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

மின் ஆற்றல் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றலை பயன்படுத்துதல், நீர் மற்றும் ஆற்றல் தணிக்கை, வடிவமைப்பு உத்தி, நீர் மேலாண்மை போன்ற பல்வேறு நடவடிக்கைகள் ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

அதன் விவரங்கள் கீழ்வருமாறு:

6.8.1. கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் மின் ஆற்றல் மேலாண்மை மற்றும் சேமிப்பு:

- 5 குதிரை திறன் வரையிலான விசைப் பம்புகளின் செயல்பாட்டினை தானியக்கம் (Automation) செய்தல்
- மின் நுகர்விற்கான அதிகபட்ச தேவையினை கட்டுப்படுத்தும் உபகரணம் நிறுவுதல்
- நீர் உந்து குழாய்களில் உள்ள நீர் அழுத்தத்தினைப் பயன்படுத்தி குழாய்களை உள்ளிணைப்பு செய்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றுதல்

6.8.2. நீர் மின் உற்பத்தி:

- பிரதான குடிநீர்த் திட்டங்களின் நீர் உந்து குழாய்களில் கிடைக்கக் கூடிய நீரழுத்த ஆற்றலைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்தல்

6.8.3. சூரிய மின் நிலையங்கள் நிறுவுதல்

- 5 குதிரைத் திறன் வரையிலான விசைப் பம்புகளின் செயல்பாட்டிற்கு தேவையான மின் சக்தியினை பெற புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு சூரிய தகடுகளைக் கொண்ட சூரிய மின் நிலையங்கள் அமைத்தல்.

6.8.4. நீர் மற்றும் மின் ஆற்றல் தணிக்கை:

- வருவாய் அல்லாத நீரின் அளவினை மதிப்பீடு செய்து அதனை குறைத்தல்

- மின் ஆற்றல் நுகர்வை மதிப்பீடு செய்து அதனை குறைத்தல்

6.8.5. கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வடிவமைப்பு உத்திகளை சரிபார்த்தல்

6.8.6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் செயல்திறன் மதிப்பீடு.

6.8.7. நகர்ப்புற நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டங்களுக்கான உந்து நிலையங்களின் இயந்திர மற்றும் மின் வடிவமைப்பு பற்றிய கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

6.8.8. Water Gem, Sewer Gem மற்றும் Staad-pro போன்ற மேம்பட்ட மென்பொருட்களைப் பயன்படுத்தி திட்டங்களை வடிவமைத்தல்

6.8.9 சந்தையில் அவ்வப்பொழுது அறிமுகப்படுத்தப்படும் புதிய பொருட்கள் பற்றி, சம்பந்தப்பட்ட அரசு/ தனியார் நிறுவனங்கள் செயல்முறை விளக்கங்கள் தருவதற்கும் புதிய விலைப்பட்டியலில் இப்பொருட்களை சேர்ப்பதற்கும் துணைபுரிதல்.

6.9. தரக்கட்டுப்பாடு பரிசோதனைக் கூடங்கள்

கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் நான்கு கட்டுமான பொருள் தர சோதனை ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில், கோயம்புத்தூர் மற்றும் மதுரை சோதனை கூடங்களுக்கு NABL தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கட்டுமான பொருட்களின் கள உபயோகத்திற்கு முன்பாக அவை, இந்திய தரக்கட்டுப்பாடு பணியகம் குறிப்பிட்டுள்ள சோதனை செயல்முறைகளின்படி, தரம் மற்றும் இந்திய தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்யும் வகையில் பரிசோதிக்கப்படுகின்றன.

கட்டுமானப் பொருட்களை தக்க சோதனை உபகரணங்கள் கொண்ட பரிசோதனை கூடங்களில் தர சோதனை செய்வதன்மூலம், ஒவ்வொரு திட்டப் பணியின் தரம் உயர்ந்திட உதவுகிறது. மேலும்

[2020 மார்ச் 16

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தனியாரிடம் இருந்து வரப்பெற்ற பொருட்களும் சோதனை செய்யப்படுகின்றன.

2019-2020 ஆம் நிதியாண்டில், கட்டுமான பொருள்களின் 7,485 மாதிரிகள் மேற்கண்ட நான்கு சோதனைக் கூடங்களில் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

6.10. மேலாண்மை தகவல் அமைப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்டங்கள் குறித்த விவரங்கள், திட்ட மேலாண்மை, நிதி கணக்கீடு, மனித வள மேலாண்மை போன்றவற்றில் உள்ள தகவல் பரிமாற்றத்தை கையாள ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. அனைத்து குடிநீர்த் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் குறித்த பணி முன்னேற்றங்கள், பராமரிப்பிலுள்ள குடிநீர்த் திட்டங்கள், மழைநீர் சேகரிப்பு, நீர் செறிவூட்டும் தடுப்பணைகள் ஆகிய பணிகள் குறித்த விவரங்கள் ஒரே மென்பொருள் உதவியுடன் இணைத்து கணினி வழியாக உடனுக்குடன் பெறப்படுகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தலைமை நீரேற்று நிலையங்கள்மூலம் தினசரி வழங்கப்படும் நீரின் அளவுகள் பற்றிய விவரங்கள் கணினி வழியாக உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தற்போது பயன்பாட்டில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை எனப்படும் இணையம் (TWAD NEST), வளர்ந்துவரும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு தக்கவாறு மறு கட்டமைப்பு செய்யப்பட உள்ளது. மேலும், அதன் உபயோகத்திற்கேற்ப உள்ள வன்பொருட்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், திறன் உயர்த்தப்பட்டும் வருகிறது.

தொழில் முனைவோரின் அடிப்படை கட்டமைப்புக்கான தேவைகளை எளிமைபடுத்தும் விதமாக குடிநீர் வசதி பெறுவதற்கான விண்ணப்பத்தினை பதிவிடுவதற்கான மின் ஆளுமை இணையம் உருவாக்கப்பட்டுள்ளது.

6.11. தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு

சமூக அடிப்படையிலான திட்டங்களின் வெற்றியில் பயனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான தகவல் தொடர்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு (C.C.D.U)

என்பது நீர் மற்றும் சுகாதார ஆதரவு அமைப்பின் (W.S.S.O) ஒரு பகுதியாகும். இது தகவல், கல்வி மற்றும் தொடர்பு (I.E.C), மனித வள மேம்பாடு (H.R.D) போன்ற மென்பொருள் நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் பொறியியல் துறைக்கு ஆதரவாகச் செயல்படும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

6.11.1. தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு நடவடிக்கைகள்

6.11.1.1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) செயல்பாடுகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அத்திவரதர் விழா மற்றும் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் ஆகிய திருவிழா காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் பார்வையிடும் இடங்களில் விழிப்புணர்வு செய்திகள் எல்.ஈ.டி. திரைகள்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டன.

பள்ளிக் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு கள நீர் சோதனை பெட்டியைப் (FWTK) பயன்படுத்தி நீரின் தரத்தை சோதிக்க விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

6.11.1.2. மனிதவள மேம்பாட்டு (H.R.D) நடவடிக்கைகள்

குழாய்மூலம் குடிநீர் வழங்கல் திட்டங்களை (PWSS) திட்ட கண்காணிப்பு மற்றும் நிருவகித்தல் குறித்து அனைத்து கிராம நீர் வழங்கல் மற்றும் சுகாதார குழு (VWSC) உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

6.12. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு

“சுத்தமான குடிநீர் வழங்கலை எட்டுதல்” என்பது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கின்கீழ் (இலக்கு-6) உள்ள நீடித்த நிலைத்த குடிநீர் மற்றும் சுகாதார மேலாண்மையின் ஒரு முக்கிய காரணியாகும். இந்த சுத்தமான குடிநீர் வழங்கல் என்ற காரணியை அளவிட கீழ்க்கண்ட குறிகாட்டிகள் வகுக்கப்பட்டுள்ளன:

1. குழாய்மூலம் குடிநீர் பெறும் வசதி உடைய மக்கள் தொகை சதவிகிதம்

2. வீட்டு சுற்றுப்புறத்திற்குள் குடிநீர் இணைப்பு பெற்ற வீடுகளின் சதவிகிதம்

[2020 மார்ச் 16

தற்போது “ஜல் ஜீவன் மிஷன்” என்ற மத்திய அரசின் திட்டம், 2024-க்குள் அனைத்து ஊரக வீடுகளுக்கும் வீட்டிணைப்புமூலம் குடிநீர் வழங்குவதை இலக்காக கொண்டுள்ளது. எனவே இந்த இலக்கினை எட்டும் விதத்தில், வீட்டிணைப்பு பணியினை தற்போது மேற்கொண்டுவரும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையுடன் இணைந்து, ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 16]

7. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL), தனியார் துறை பங்களிப்புடன், ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி (ICICI Bank), எச்.டி.எப்.சி (HDFC) மற்றும் ஐ.எல் & எப்.எஸ் நிதி சேவைகள் நிறுவனம் (IL&FS) ஆகிய நிறுவனங்கள் இதன் மற்ற பங்குதாரர்கள் ஆகும். இதன் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ.2 கோடி. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ரூ.1 கோடியில், தமிழக அரசின் பங்கு ரூ.49 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனமானது, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF), குடிநீர் & சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மற்றும் இதர அரசு மானிய நிதிகளை நிருவகித்து வருகிறது. இந்நிறுவனம், நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரையிலான அனைத்துக்குமான முழு தீர்வையும் அளித்து வருகிறது. இதன் பிரதான பணிகளில், திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதனத் திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை அடங்கும். இந்நிறுவனம் தொடங்கப்பட்டது முதல், இன்று வரை ஆதாயம் ஈட்டி வருவதோடு, ஆதாயப் பங்குத் தொகையையும் தொடர்ந்து செலுத்தி வருகிறது.

7.1. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் தமிழ்நாடு அரசால் தனியார் துறை பங்களிப்புடன் ஒரு பொறுப்பாட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம் மற்றும் ஐ.எல்&எப்.எஸ் நிதி சேவைகள் நிறுவனம் ஆகியவை இந்நிதியத்தில் பங்களிப்பு செய்துள்ள தனியார் துறை நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள், இம்மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிலையான தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட மற்றும் நீடித்த நிலைத் தன்மையுடைய அமைப்புகளாக வளர்வதற்கும், அவை, தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புற சேவைகளை எளிதாக வழங்குவதற்கு ஏதுவாக செயல்படுவது ஆகும்.

[2020 மார்ச் 16

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் தொலைநோக்குப் பார்வையானது நகர்ப்புற உட்கட்டமைப்பு சொத்துகளை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின்மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு பங்களிப்பது ஆகும்.

7.1.1. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதன்மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.
- நகர்ப்புற வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிருவாகத்தை மேம்படுத்துதல்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, மற்றும் வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்த நிதியுதவி அளிக்கிறது.

இந்நிதியம், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனத்தால் (TNUITCL) நிருவகிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நிதியை கையாளும் நிதி மேலாளராக செயல்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மொத்த மூலதனமான ரூ.199.60 கோடியில், தமிழக அரசு ரூ. 142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, எச்.டி.எப்.சி. மற்றும் ஐ.எல்.&எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ரூ.56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன.

2020 மார்ச் 16]

7.2. வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்மூலம் மூன்று வெளி ஆதாரக் கடன்கள் நிருவகிக்கப்படுகின்றன, அவையாவன -ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதியுதவி-தமிழ்நாடு (SMIF-TN) திட்டம் (நிலை II-பகுதி-1 மற்றும் பகுதி-2), உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டுத் திட்டம் (TNUFIP) (நிலை I & நிலை II). மேற்சொன்ன மூன்று வெளி ஆதாரக் கடன்களின் மொத்த நிதி ரூ.12,537.06 கோடியாகும். அவற்றின் விவரம் பின்வருமாறு:

வெளி ஆதாரக் கடன்களின் அளவு

(ரூ.கோடியில்)

வ. எண்	உட்கூறுகள்	TNSUDP	SMIF-TN		TNUFIP		மொத்தம்
			நிலை II பகுதி 1	நிலை II பகுதி 2	TNUFIP நிலை I	TNUFIP நிலை II	
1	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன்	1,225.92	344.32	417.36	304.78	487.01	2,779.39
2	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம்	1,225.92	263.02	396.94	646.73	834.10	3,366.71
3	மாதிரி நகரங்களு-க்கான மானியம்	389.48	0	0	0	0	389.48
4	தொழில்நுட்ப உதவி மானியம்/செயல்திறன் சார்ந்த ஊக்கத் தொகை	344.80	0	22.39	148.02	120.89	636.10
5	கூடுதல் நிருவாக செலவு மற்றும் வரி	0	0	0	36.33	40.32	76.65

வ. எண்	உட்கூறுகள்	TNSUDP	SMIF-TN		TNUFIP		மொத்தம்
			நிலை II பகுதி 1	நிலை II பகுதி 2	TNUFIP நிலை I	TNUFIP நிலை II	
6	பங்கு பத்திரம், மற்ற மானியம் & நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு-களின் பங்கு	644.88	0	40.70	1,934.47	2,668.68	5,288.73
மொத்தம்		3,831.00	607.34	877.39	3,070.33	4,151.00	12,537.06

7.2.1. ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி-தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி -தமிழ்நாடு எனும் திட்டம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் இரண்டு நிலைகளைக் கொண்டது (நிலை 1 & நிலை 2). இத்திட்டத்தின் முதல் நிலை டிசம்பர் 2015-ல், நிறைவடைந்தது. இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளை (பகுதி 1 & பகுதி- 2) கொண்டது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு (இரண்டாம் நிலை-பகுதி-1) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.607.34 கோடி (80 மில்லியன் யூரோ) ஆகும். இதன் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2012-லிருந்து ஜூன் 2018 வரை ஆகும். துணைத் திட்டங்களின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு இத்திட்டத்தினை நிறைவேற்ற, இதன் செயல்பாட்டு கால அளவு 2020 ஆம் ஆண்டு ஜூன் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி -தமிழ்நாடு (இரண்டாம் நிலை-பகுதி 2) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ) ஆகும். இதில் நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக

2020 மார்ச் 16]

ரூ.814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ரூ.22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூலதனச் சந்தையிலிருந்து நகராட்சிகளுக்கு கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு ரூ.40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014 முதல் டிசம்பர் 2019 வரை ஆகும். துணைத் திட்டங்களின் முன்னேற்றத்தை கருத்தில்கொண்டு இத்திட்டத்தினை நிறைவேற்ற இதன் செயல்பாட்டு கால அளவினை 2021 ஆம் ஆண்டு டிசம்பர் வரை நீட்டிக்க கோரப்பட்டுள்ளது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி -தமிழ்நாடு திட்டத்தின், இரண்டாம் நிலை-பகுதி-1 மற்றும் பகுதி-2 திட்டங்களின்கீழ், 35 துணைத் திட்டப் பணிகளுக்காக ரூ.1,421.64 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7.1.2. உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பங்குபெறும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நகர்ப்புற சேவைகளை நீடித்த நிதி நிலையுடன் மேம்படுத்தல் மற்றும் மேம்பட்ட நகர்ப்புற மேலாண்மை நடைமுறைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புறங்களில் முன்னோடியாக செயல்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.3,831 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், உலக வங்கியின் நிதியுதவி ரூ.2,554 கோடி (400 மில்லியன் அமெரிக்க டாலர்). மாநில அரசின் பங்கு மற்றும் பிற ஆதாரங்கள் மூலமாக ரூ.1,277 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச் 2022 வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ், 14 துணை திட்டப் பணிகளுக்காக ரூ.2,474.33 கோடி வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

7.2.3. ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டுத் திட்டம் (TNUFIP)

தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP), ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் மூன்று நிலைகளை கொண்டது (நிலை-I, நிலை-II, நிலை-III). இந்த மூன்று நிலைகளுக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி 502 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழிலக தெருவழிச்சாலைகளில், முதன்மையாக குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் ஆகிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் திறன், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் முதல் நிலைக்கான திட்ட மொத்த மதிப்பீடு ரூ.3,070.33 கோடி (477.50 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,099.53 கோடி (171.00 மில்லியன் அமெரிக்க டாலர்). இதில் மாநில அரசின் பங்கு மற்றும் பிற ஆதாரங்கள் மூலமாக ரூ.1,970.80 கோடி (306.50 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நவம்பர் 2018 முதல் டிசம்பர் 2023 வரை ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலையின்கீழ், 9 துணை திட்டப் பணிகளுக்காக ரூ.951.51 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின், இரண்டாம் நிலைக்கான திட்ட மொத்த மதிப்பீடு ரூ.4,151 கோடி (593.00 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ரூ.1,442 கோடி (206 மில்லியன் அமெரிக்க டாலர்). இதில் மாநில அரசின் பங்கு மற்றும் பிற ஆதாரங்கள் ரூ.2,709 கோடி (387.00 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு டிசம்பர் 2019 முதல் ஜூன் 2026 வரை ஆகும். இத்திட்டத்தின்கீழ், 6 துணை திட்டப் பணிகளுக்காக ரூ.1,321.11 கோடி வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைக்கான கடன் ஒப்பந்தங்கள் 2-12-2019 அன்று கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்திற்கான நிருவாக அனுமதி அரசால் விரைவில் வழங்கப்பட உள்ளது.

2020 மார்ச் 16]

இத்திட்டத்தின் மூன்றாம் நிலைக்கான திட்ட மதிப்பீடு ஆசிய மேம்பாட்டு வங்கியால் (ADB) மேற்கொள்ளப்பட இருக்கிறது.

7.3. குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

தமிழ்நாடு அரசால், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டவும், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்
- கூட்டு நிதி அமைப்பின்கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்
- நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின்மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்
- குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய/மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்.

இதுவரை ரூ.302.30 கோடி நிதியை வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திர வெளியீட்டின் மூலமாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் பின்வருமாறு திரட்டியுள்ளது:

வ. எண்	விவரங்கள்	ரூ. கோடியில்
1	**9.20 சதவீதம்-15 ஆண்டுகள்-மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2002 ஆம் ஆண்டு 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	30.41

2	**7.25 சதவீதம்-10 ஆண்டுகள்-கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2008 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	6.70
3	**10.60 சதவீதம்-10 ஆண்டுகள்-மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2012 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	51.00
4	**7.50 சதவீதம்-10 ஆண்டுகள்-கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2010 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	83.19
5	**8.71 சதவீதம்-10 ஆண்டுகள்-மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2013 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	51.00
6	**8.25 சதவீதம்-12 ஆண்டுகள்-மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2017 ஆம் ஆண்டு 4 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு (நிலை 2 - பகுதி 2)வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	80.00
	மொத்தம்	302.30

2020 மார்ச் 16]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பத்திரங்களில் வ.எண் 1 முதல் 3 வரை உள்ள கடன் பத்திரங்கள் முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டுள்ளன.

7.4. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (Chennai Mega City Development Mission)

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்க தமிழ்நாடு அரசு, பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM) என்ற திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்திற்கான நிதி, ஒவ்வோர் ஆண்டும், அரசின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படும். தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் இத்திட்டத்திற்கான மைய முகவராக செயல்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த 2011-2012 முதல் 2015-2016 வரை ரூ.2,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த, 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளில் ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை, ரூ.5,577.04 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு மூலதன மானியமாக ரூ.3,499.63 கோடியும், தொழில்நுட்ப மானியமாக ரூ.7.90 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ரூ.2,391.59 கோடி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய திட்டங்களுக்கும், அதற்கான ஆலோசனை மற்றும் கட்டணங்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

நதிகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகரத்திற்குட்பட்ட கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், பிற சிறுகால்வாய்கள் மற்றும் சென்னை பெருநகரத்திற்குட்பட்ட நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், அதற்கு தேவையான திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் சீரமைப்புப் பணிகளை கண்காணித்தல் போன்ற அடிப்படை பணிகள்/செயல்பாடுகளை மேற்கொள்ள சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை, அரசு அறிவுறுத்தியுள்ளது. மேற்கண்ட இலக்குகளை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றி அனைத்துசார் துறைகளின் பங்களிப்புடன் எண்ணற்ற சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

8.1. அடையாறு கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு (58 ஏக்கர்)

358 ஏக்கர் பரப்பளவினை கொண்ட அடையாறு நதியின் முகத்துவாரம் மற்றும் உப்பங்கழி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியது. இதன் முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைந்துள்ள அடையாறு உப்பங்கழியினை சீரமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. அடையாறு உப்பங்கழி பகுதியில் தொடர்ந்து கழிவுநீர் விடப்பட்டதாலும், நகர திடக் கழிவுகள் மற்றும் கட்டடக் கழிவுகள் தொடர்ந்து கொட்டப்பட்டதாலும், உப்பங்கழியின் நீர் மற்றும் நிலத்தடி நீர் கடுமையாக மாசடைந்து, மீன்கள், ஊர்வன மற்றும் பறவைகள் ஆகியவற்றின் வாழ்விடங்கள் பாதிக்கப்பட்டது.

அடையாறு உப்பங்கழி முழுவதும் சீமைக்கருவேல மரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, கொசுக்கள் மற்றும் துர்நாற்றத்தால், அருகில் வசிப்பவர்கள் அப்பகுதியிலிருந்து விலகி இருந்தனர். அடையாறு உப்பங்கழி சீரமைப்பின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

2020 மார்ச் 16]

(i) கடல் ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்புப் பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ii) உள்ளூர் தாவரங்களான உலர் வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளை சார்ந்த தாவரங்கள், சதுப்பு நிலத் தாவரங்கள் மற்றும் அதன் வகையைச் சார்ந்த தாவரங்கள், கோரைப் புற்கள் நடப்பட்டுள்ளன.

(iii) சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியினை தொடர்புபடுத்தும் வகையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதற்காக, சுற்றுச்சூழல் கல்வித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 29-ஆம் தேதி வரை 1,164 பள்ளிகளைச் சேர்ந்த 97,525 மாணவர்கள் மற்றும் 4,703 ஆசிரியர்கள், சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்கு பெற்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்து விழிப்புணர்வு அடைந்துள்ளனர். ஆண்டுதோறும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடமிருந்து (TNUIFSL) சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதி பெறப்பட்டு, அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் கூடுதல் சுற்றுச்சூழல் கல்வி பயிற்சி வகுப்புகள் / நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு மேற்கொள்ளும் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உயிரினப் பாதுகாப்பு குறித்து பொது மக்கள் உணர்ந்திடும் வகையில், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை பிற்பகல் மற்றும் சனிக்கிழமைகளில் நாள் முழுவதும் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவைப் பார்வையிட ஆர்வமுள்ள பொது மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவினை, 2014 ஆம் ஆண்டு ஜூலை முதல், 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் தேதி வரை 16,399 நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். இச்சீரமைப்பினால் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்த கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்

வழிகாட்டு விதி முறைகளை ஒப்பிடுகையில், அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவின் நீரின் தரம் வகுப்பு 'D' பிரிவின்கீழ் உள்ளது. இதனால், மீன்கள் மற்றும் பிற உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் மேம்பட்டு பல்லுயிர் சீரமைப்பின் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

8.2. அடையாறு முகத்துவார சுற்றுச்சூழல் சீரமைப்பு (300 ஏக்கர்)

சீமைக் கருவேல மரங்கள், குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகள், கழிவுநீர் விடப்பட்டதனால், அடையாறு கழிமுக சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்ததன் விளைவாக, நீர்ப்பரப்பு பகுதி குறைந்து, கடல் நீர் ஓதத்தின் தொடர்பு குறைந்து பல்லுயிர் பெருக்கம் பெரிதும் பாதிப்படைந்ததை தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக அடையாறு உப்பங்கழி, முகத்துவாரம், சிறுதீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 300 ஏக்கர் பரப்பளவிலான பகுதிகளை சீரமைக்கும் பணிகள் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இரண்டாம் கட்ட சுற்றுச்சூழல் சீரமைப்பின்மூலம், அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியின் கரைகள் திடப்படுத்தப்பட்டு, நெகிழி மற்றும் கட்டடக் கழிவுகள் அகற்றப்பட்டு, உப்பங்கழியில் மிதக்கின்ற மக்காத பொருட்கள் மற்றும் சகதிகள் அப்புறப்படுத்தப்பட்டதால், கடல் ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்ப்பரப்பு பகுதி தற்போது அதிகரித்துள்ளது. மேலும், இப்பகுதியில் ஐம்பதாயிரத்திற்கும் மேலான சதுப்பு நிலத் தாவரங்கள், முப்பதாயிரத்திற்கும் மேலான பிராந்திய நிலவாழ் கடற்கரைத் தாவரங்கள் ஆகியவை நடப்பட்டதால் அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியில் பல்லுயிரிகளின் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியில் காணப்படும் பல்லுயிரிகள்

58 ஏக்கர்						358 ஏக்கர்
விலங்குகள்	2014-2015	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020
மெல்லுடலிகள்	6	6	8	8	8	8

2020 மார்ச் 16]

நண்டுகள்	9	9	9	13	13	13
தும்பிகள்	17	19	25	25	35	35
பட்டாம்பூச்சிகள்	56	60	73	73	80	82
மற்ற பூச்சியினங்கள்	-	-	-	52	55	55
மீன்கள்	10	6	10	10	12	14
இருவாழ்விகள்	10	10	10	10	10	7
ஊர்வன	19	19	19	19	19	19
பறவைகள்	97	99	103	105	120	123
பாலூட்டிகள்	15	16	16	16	16	16
மொத்தம்	239	244	273	331	368	372

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் மற்றும் அடையாறு நதி சீரமைப்பு திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவதுடன் நிலைத்த நீடித்த வளர்ச்சி இலக்கின் 10-வது அம்சத்தை இணைத்து, சென்னையில் ஓடும் நதிகள் மற்றும் நீர்வழித்தடங்களை மேம்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்கிறது.

8.3. ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்:

கூவம் நதி, திருவள்ளூர் மாவட்டம் கூவம் ஏரியில் தொடங்கி சுமார் 70 கிலோ மீட்டர் பயணித்து புனித ஜார்ஜ் கோட்டையின் தென் பகுதியிலுள்ள நேப்பியர் பாலத்தின் கீழ்நோக்கி சென்று இறுதியாக வங்கக்கடலை சென்றடைகிறது. பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான (32 கி.மீ.) கூவம் நதி பகுதிகளை சீரமைக்க, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக்கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டு

[2020 மார்ச் 16

சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் மேலும், நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டப் பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளன. சுமார் 60 துணைத் திட்டங்களைக் கொண்ட குறுகிய கால திட்டப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ரூ.604.77 கோடிக்கான நிருவாக அனுமதி வழங்கியுள்ளது.

இச்சீரமைப்புப் பணிகள், தொடர்புடைய சார் துறைகள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுப் பணித் துறையினரால் எல்லைகளை வரையறை செய்து எல்லை கல் நடுதல், தூர் வாருதல் மற்றும் சிறு கால்வாய் அமைத்தல், கரைகளை பலப்படுத்துதல், பெருநகர சென்னை மாநகராட்சியால் திடக் கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலி, மிதவை தடுப்பான் அமைத்தல் மற்றும் பூங்காக்கள் அமைத்தல், ஆற்றின் கரையோரங்களில் மிதிவண்டித்தடங்கள் மற்றும் நடைப்பாதைகள் ஏற்படுத்துதல், நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தால் திடக்கழிவு அகற்றல், ஆற்றின் கரையோரங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல் மற்றும் மரக்கன்றுகள் நடவு செய்தல், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, கூவம் ஆற்றின் கரையோரங்களில் வசித்த 11,856 குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டு, மறுவாழ்விற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல்வேறு துணைத் திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணித்து வருகிறது. திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமனம் செய்து, அதன்மூலம் அனைத்துப் பணிகளும் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தவிர, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சமுதாய கல்வி பணிகளை மேற்கொண்டு வருகிறது. கூவம் ஆற்றின் கரைகளில் பல்வேறு வகையான உள்ளூர் தாவரங்கள் மற்றும்

2020 மார்ச் 16]

சதுப்புநிலத் தாவரங்களை நடவு செய்வதற்கான பணிகள் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொடர் முன்னேற்ற நிலையில் உள்ளது.

இதுவரை ரூ.245.48 கோடி, பணி முடிக்கப்பட்டதன் அடிப்படையில், சார் துறைகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

8.4. அடையாறு நதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு தொடக்கம் முதல் முகத்துவாரம் வரை

நகரமயமாதலின் விளைவாக நீண்டகாலமாக அடையாறு நதியின் சுற்றுச்சூழல் மிகவும் மாசடைந்துள்ளது. கூடுவாஞ்சேரி அருகே உள்ள ஆதனூர் ஏரியில் அடையாறு நதி தொடங்கி, திருநீர்மலை அருகில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரிநீர் கலந்து சுமார் 42 கிலோ மீட்டர் தூரம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கிறது. இதன் முக்கியகூறுகள், கழிவுநீர் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக் கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும். அடையாறு நதியின் தொடக்கம் (ஆதனூர் ஏரி) முதல் முகத்துவாரம் வரை சீரமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசாணை (நிலை) எண் 72, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந-1), நாள் 12-7-2017-ன்படி, அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான 42 கிலோ மீட்டர் தூரத்தை ரூ.555.46 கோடி நிருவாக மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சீரமைப்புப் பணிகள், தொடர்புடைய சார் துறைகள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அடையாறு நதியின் கரையோரங்களில் வசித்த 4,398 குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டு, மறுவாழ்விற்கான திட்டங்களான கல்விக் கூடங்கள் அமைத்தல், மருத்துவ வசதி ஏற்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடல்சார் ஒழுங்குமுறை மண்டலத்திற்கு உட்பட்டுள்ள 13 துணைத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய கடல்சார் மண்டல ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 16

இதுவரை ரூ.42.31 கோடி, சார் துறைகளுக்கு பணி முடிக்கப்பட்டதன் அடிப்படையில் நிதி வழங்கப்பட்டுள்ளது.

8.5. நீர்நிலைகள் மற்றும் நீர்வழிகள் சீரமைப்பு-பாதுகாப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை

தமிழக அரசு 2020-2021 நிதிநிலை அறிக்கையில், பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக ரூ.5,439.76 கோடி செலவில், பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் வடிகால்களில் உள்ள மாசுபாட்டினை தடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட கோவளம் மற்றும் எண்ணூர் கழிமுகப் பகுதிகளை சீரமைப்பதற்காக, விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

9. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மேலும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டுபிட்கோ) கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ், 21-3-1990-ல் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. பல்வேறு திட்டங்களின்கீழ் குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்றுதல், மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் போன்ற நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தும்பொருட்டு டுபிட்கோ நிறுவனம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு துணை நிறுவனங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதி அளிக்கிறது.

சீர்மிகு நகரத் திட்டம் (Smart Cities Mission) மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation) ஆகிய மத்திய அரசின் முன்னோடித் திட்டங்களுக்கு டுபிட்கோ நிறுவனம் திட்ட இயக்குநரகமாக செயல்படுகிறது. மேலும், டுபிட்கோ நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தும் முகமையாகவும் உள்ளது.

1. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்-உட்கட்டமைப்பு மற்றும் நகர்ப்புற ஆளுமைக்கான திட்டம் (Jawaharlal Nehru National Urban Renewal Mission-Urban Infrastructure and Governance)
2. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns)
3. துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Satellite Towns)
4. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (Metropolitan Infrastructure Development Fund) மற்றும்
5. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission)

[2020 மார்ச் 16

மூலதன மானிய நிதி (Capital Grant Fund), இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&MGFF) ஆகியவற்றிற்கு நிதி மேலாளராகவும் டுபிட்கோ நிறுவனம் செயல்படுகிறது.

9.1. சீர்மிகு நகரத் திட்டம் (Smart Cities Mission)

ஜூன் 2015-ல் தொடங்கப்பட்ட சீர்மிகு நகரத் திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு இந்தியா முழுவதிலுமிருந்து 100 நகரங்களை சீர்மிகு நகரங்களாக மேம்படுத்த தேர்வு செய்தது. அதில் தமிழகத்திலிருந்து சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 நகரங்கள் அடங்கும். இந்திய அளவில் அதிக நகரங்களை இத்திட்டத்தின்கீழ் தமிழகம் பெற்றுள்ளது. சீர்மிகு நகரத்தின் நோக்கமானது, நகரங்களின் நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய முக்கிய அடிப்படை வசதிகள் மற்றும் குடிமக்களுக்கு தரமான வாழ்க்கை தரத்தை அளிப்பதுடன் சீர்மிகு தீர்வுகளை பயன்படுத்துவது ஆகும்.

சீர்மிகு நகரங்களின் திட்டங்களை செயல்படுத்த ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் வடிவத்தில் நகர அளவில் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (Special Purpose Vehicle) உருவாக்கப்பட்டது. சீர்மிகு நகரத் திட்டங்களை செயல்படுத்த 11 சீர்மிகு நகரங்களுக்கும் மத்திய மற்றும் மாநில அரசு தலா ரூ.500 கோடி வீதம் பங்களிக்கும்.

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

(ரூ. கோடியில்)

வ. எண்	நகரத்தின் பெயர்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு
1.	சென்னை	41	916.59
2.	கோயம்புத்தூர்	51	1,019.80
3.	மதுரை	14	969.38

வ. எண்	நகரத்தின் பெயர்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு
4.	தஞ்சாவூர்	48	951.68
5.	சேலம்	74	971.57
6.	வேலூர்	35	904.48
7.	திருப்பூர்	26	948.13
8.	திருநெல்வேலி	55	1,002.25
9.	தூத்துக்குடி	47	871.46
10.	திருச்சி	26	926.24
11.	ஈரோடு	23	948.21
	மொத்தம்	440	10,429.88

ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.10,429.88 கோடி மதிப்பிலான 440 திட்டங்களில், ரூ.416.89 கோடி மதிப்பிலான 86 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன, ரூ.6,781.21 கோடி மதிப்பிலான 229 திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. மற்ற திட்டங்கள் அனைத்தும் முன்னேற்ற நிலையில் உள்ளன.

9.2. அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

போதுமான குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மை, மழைநீர் வடிகால் வசதி, நகர போக்குவரத்து வசதிகள் அமைத்தல், பசுமை மற்றும் திறந்த வெளி பகுதிகள் ஏற்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்புகளை நிறுவுவதை உறுதிப்படுத்த ஜூன் 2015-ல் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் துவக்கப்பட்டது. மாநிலத்தில் அம்ரூத் திட்டத்தின்கீழ் 28 மாநகரங்கள்/நகரங்கள் (15 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி) ஆகியவை அம்ரூத் நகரங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	வ. எண்	உள்ளாட்சியின் பெயர்
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	16.	பல்லவபுரம் நகராட்சி
2.	கோயம்புத்தூர் மாநகராட்சி	17.	தாம்பரம் பெருநகராட்சி
3.	மதுரை மாநகராட்சி	18.	கடலூர் நகராட்சி
4.	திருச்சி மாநகராட்சி	19.	காஞ்சிபுரம் பெருநகராட்சி
5.	சேலம் மாநகராட்சி	20.	திருவண்ணாமலை நகராட்சி
6.	திருநெல்வேலி மாநகராட்சி	21.	கும்பகோணம் நகராட்சி
7.	திருப்பூர் மாநகராட்சி	22.	இராஜபாளையம் நகராட்சி
8.	தூத்துக்குடி மாநகராட்சி	23.	புதுக்கோட்டை நகராட்சி
9.	தஞ்சாவூர் மாநகராட்சி	24.	ஆம்பூர் நகராட்சி
10.	ஈரோடு மாநகராட்சி	25.	காரைக்குடி நகராட்சி
11.	வேலூர் மாநகராட்சி	26.	நாகப்பட்டினம் நகராட்சி
12.	திண்டுக்கல் மாநகராட்சி	27.	இராமேஸ்வரம் நகராட்சி
13.	நாகர்கோவில் மாநகராட்சி	28.	வேளாங்கண்ணி பேரூராட்சி
14.	ஓசூர் மாநகராட்சி		
15.	ஆவடி மாநகராட்சி		

2020 மார்ச் 16]

9.2.1. நிதிக்கூறு :

அம்ரூத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நகரங்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் மத்திய அரசு/ மாநில அரசு/உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு திட்டத்திற்கான பங்குகளின் சதவிகித வரையறை பின்வருமாறு:

வ. எண்	மக்கள் தொகை	மத்திய அரசின் பங்கு-மானியம்	மாநில அரசின் பங்கு-மானியம்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
(சதவிகிதத்தில்)				
1.	10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்	33.33	20	46.67
2.	10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்	50	20	30
3.	பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்)	50	20	30

அம்ரூத் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2020 ஆம் ஆண்டுகளுக்கான மாநில ஆண்டு செயல் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

[2020 மார்ச் 16

மாநில ஆண்டு செயல் திட்டம் I (2015-2016)

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	ஆம்பூர் நகராட்சி-குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	50.90
2.	கோயம்புத்தூர் மாநகராட்சி- விரிவாக்கப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் (துடியலூர், வெள்ளைக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காலப்பட்டி, குனியமுத்தூர் மற்றும் குறிச்சி)	395.41
3.	ஈரோடு மாநகராட்சி-குடிநீர் வழங்கல் திட்டம்	484.45
4.	ஓசூர் மாநகராட்சி-குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	87.91
5.	நாகர்கோவில் மாநகராட்சி-குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	223.44
6.	இராஜபாளையம் நகராட்சி-குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	180.05
7.	தஞ்சாவூர் மாநகராட்சி-குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	48.14
8.	திருப்பூர் மாநகராட்சி-விரிவாக்க பகுதிகளுக்கு குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	250.00
9.	வேலூர் மாநகராட்சி-குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	234.93
10.	சென்னை- நீராதாரத்தை மேம்படுத்துதல் (வேளச்சேரி, ஆலந்தூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மேடவாக்கம், கோவிளம்பாக்கம், நன்மங்கலம் மற்றும் மூவரசம்பேட்டை)	954.00
11.	வேளாங்கன்னி பேரூராட்சி- பாதாளச் சாக்கடைத் திட்டம்	23.32
12.	சென்னை மாநகராட்சி - 45 MLD TTRO Plant -கொடுங்கையூர்	223.91
13.	பல்லவபுரம் நகராட்சி-விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம்	25.37
14.	பூங்காக்கள்-98 எண்ணிக்கை (25 அம்ரூத் நகரங்கள்)	63.67
	மொத்தம்	3,245.50

2020 மார்ச் 16]

மாநில ஆண்டு செயல் திட்டம் II (2016-2017)

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	கோயம்புத்தூர் மாநகராட்சி-24 x 7 குடிநீர் வழங்கல்	506.04
2.	சென்னை - இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம் (உத்தண்டி, ஜல்லடம்பேட்டை, மாத்தூர், மடிப்பாக்கம் மற்றும் நீலாங்கரை)	184.11
3.	சென்னை - குடிநீர் வழங்கல் நீராதாரத்தை மேம்படுத்துதல்	125.89
4.	கும்பகோணம் நகராட்சி - குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல்	40.50
5.	கோயம்புத்தூர் மாநகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம்	442.00
6.	வேலூர் மாநகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம் - முதலாம் கட்டம்	248.26
7.	வேலூர் மாநகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம்- இரண்டாம் கட்டம்	343.69
8.	சென்னை - பாதாளச் சாக்கடைத் திட்டம் (மணலி, சின்ன சேக்காடு, காரம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம்)	223.00
9.	சென்னை - 45 MLD TTRO Plant, கோயம்பேடு	394.00
10.	கும்பகோணம் நகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம் - விடுபட்ட பகுதிகளுக்கு	59.84
11.	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம்- முதலாம் கட்டம்	344.00
12.	திருநெல்வேலி மாநகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம் - இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு	289.01
13.	திருநெல்வேலி மாநகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம் - இரண்டாம் கட்டம்	381.86

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
14.	இராமேஸ்வரம் நகராட்சி - பாதாளச் சாக்கடைத் திட்டம்	40.33
15.	25 அம்ரூத் நகரங்கள் - பூங்காக்கள் - (157 எண்ணிக்கை)	77.95
	மொத்தம்	3,700.48

மாநில ஆண்டு செயல் திட்டம் III (2017-2020)

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	கோயம்புத்தூர் மாநகராட்சி - பில்லூர்-III குடிநீர் வழங்கல் திட்டம்	649.30
2.	மதுரை மாநகராட்சி - குடிநீர் வழங்கல் திட்டம்	1,020.00
3.	திருப்பூர் மாநகராட்சி - குடிநீர் வழங்கல் நீராதாரத்தை மேம்படுத்துதல்	992.94
4.	சென்னை - குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் - வளசரவாக்கம்	67.74
5.	ஆம்பூர் நகராட்சி-பாதாளச் சாக்கடைத் திட்டம்	129.07
6.	இராஜபாளையம் நகராட்சி-பாதாளச் சாக்கடைத் திட்டம்	178.75
7.	திருப்பூர் மாநகராட்சி-பாதாளச் சாக்கடைத் திட்டம்	525.92
8.	சென்னை - பாதாளச் சாக்கடைத் திட்டம்	576.76
9.	திருச்சிராப்பள்ளி-பாதாளச் சாக்கடைத் திட்டம் -இரண்டாம் கட்டம்	264.12
10.	25 அம்ரூத் நகரங்கள் - பூங்காக்கள் (154 எண்ணிக்கை)	90.85
	மொத்தம்	4,495.45

2020 மார்ச் 16]

ரூ.11,441.43 கோடி மதிப்பீட்டில் 445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு இந்தியாவிலேயே அதிக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். ஒப்பளிக்கப்பட்ட 445 திட்டங்களில் ரூ.998.04 கோடி மதிப்பிலான 415 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சியுள்ள 30 திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டில் உள்ளன.

9.3. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (MIDF)

மத்திய அரசின் பெருநகரத் திட்டம், சென்னை பெருநகரப் பகுதியிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீடித்து நிலைக்கத்தக்க திட்டங்களுக்கு நிதி உதவியை வழங்குவதற்காக சுழற்சி நிதி ஒன்று உருவாக்குவதை நோக்கமாக கொண்டது. வழிகாட்டு நெறிமுறையின் அடிப்படையில் சுழற்சி நிதி பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

ரூ.4,342.65 கோடி மதிப்பீட்டில், 34 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கும் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் பங்களிப்பு தொகை ரூ.1,156.47 கோடியாகும். ஒப்புதல் வழங்கப்பட்ட 34 திட்டங்களில், 29 திட்டங்கள் ஏற்கெனவே நிறைவுற்றுள்ளன. மீதமுள்ள 5 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

9.4. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்-சுழற்சி நிதி (UIDSSMT - Revolving Fund)

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறை, நீடித்த நிலையான திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக, சுழற்சி நிதியை உருவாக்கப் பணிக்கிறது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறையின்படி சுழற்சி நிதி டுபிட்கோ நிறுவனத்தால்

[2020 மார்ச் 16

உருவாக்கப்பட்டு, 99 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் குறிப்பிட்டுள்ள திட்டங்களான வீடுகளுக்கு குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு அளித்தல் திட்டங்களுக்கு வட்டியில்லா கடன் அளிக்க பின்வருமாறு ஒப்புதல் வழங்கப்பட்டது:

(ரூ. கோடியில்)

வ. எண்	பகுதி	நகராட்சிகள்/ மாநகராட்சிகளின் எண்ணிக்கை	சுழற்சி நிதியில் ஒப்புதல் வழங்கப்பட்டவை
1.	குடிநீர் வழங்கல்	73	169.58
2.	பாதாளச் சாக்கடைத் திட்டம்	26	193.22
	மொத்தம்	99	362.80

இத்திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டில் உள்ளன.

9.5. டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் (TIFS)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் டுபிட்கோவினால் உருவாக்கப்பட்டது. கடனை திரும்ப செலுத்துவதற்கான அதிகபட்ச காலம் 10 வருடங்கள் ஆகும். இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேம நிதி, உபரி நிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும்.

9.6. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

9.6.1. கட்டம் 1 (நிதியாண்டு 2011-2016)

மாநில அரசின் முன்னோடித் திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கடந்த 5 ஆண்டு காலத்தில் அதாவது 2011-2012 முதல் 2015-2016 வரை செயல்படுத்தப்பட்டது. அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான

2020 மார்ச் 16]

சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், கழிவுநீர் அகற்றல், மழைநீர் வடிகால், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல், பூங்காக்கள் போன்ற திட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூ.10,773.22 கோடி (முழு நிதி/பகுதி நிதி) மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்ட 13,257 திட்டங்களில், 13,214 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. 43 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

9.6.2. கட்டம் 2 (2018-2019 நிதியாண்டு முதல்)

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கட்டம்-1-ன் வெற்றியை கருத்தில் கொண்டு, தமிழக அரசு 2018-2019 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கட்டம் 2-ஐ, வருடத்திற்கு ரூ.750 கோடி வீதம் ஒதுக்கீட்டுடன் மீண்டும் துவக்கியுள்ளது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் கட்டம்-2-ன்கீழ் (சென்னை நீங்கலாக) மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதி திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ரூ.கோடியில்)

வ. எண்	திட்டப் பணிகள்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பங்கு - 2018-2019	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பங்கு - 2019-2020
1	சாலை	1214	950.39	292.77	390.49
2	மழைநீர் வடிகால்	597	186.31	94.51	63.96
3	குடிநீர்	66	2024.43	225.45	335.53

[2020 மார்ச் 16

வ. எண்	திட்டப் பணிகள்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பங்கு - 2018-2019	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பங்கு - 2019-2020
4	பாதாள சாக்கடை	62	693.37	121.87	94.68
5	பூங்கா	3	9.50	-	8.53
6	சந்தை	1	1.40	-	1.12
7	சிறுபாலங்கள்	2	5.05	-	4.04
8	பேருந்து நிலையம்	4	12.84	-	5.38
9	தெரு விளக்குகள்	3	1.88	-	0.79
10	கழிவு நீரகற்றல்	11	31.17	11.00	20.17
11	திடக்கழிவு மேலாண்மை	1	8.57	-	7.71
12	மற்றவை	10	9.8	4.40	5.12
	மொத்தம்	1974	3934.71	750.00	937.51

ஒப்புதல் அளிக்கப்பட்ட 1,974 திட்டங்களில், 89 திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளன மற்றும் மீதமுள்ள 1,885 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

2020 மார்ச் 16]

9.7. அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மூலதன மானிய நிதி (Capital Grant Fund), இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&MGFF) தமிழக அரசால் உருவாக்கப்பட்டன. மேற்கண்ட திட்டங்களுக்கு நிதி மேலாளராக டுபிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசு ஒப்புதல் அளித்துள்ளபடி, 2019-2020 ஆம் நிதியாண்டில் மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.568.15 கோடியும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ரூ.229.77 கோடியும் விடுவிக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

1995 ஆம் வருடம் திருப்பூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, நீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசால், தமிழ்நாடு அரசு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் (TACID) மூலமாக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் (NTADCL) தொடங்கப்பட்டது. தொடக்கத்தில், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனமாக தொடங்கப்பட்டு பின்னர் ஜூன் 2002-ல் தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்தை (TWIC) ஒரு தோற்றுவிப்பாளராகக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டது. இந்த தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் நிறுவனத்தின் (IL&FS) 54% பங்குகளுடனும், தமிழ்நாடு அரசின் 46% பங்குகளுடனும் உருவாக்கப்பட்டது. இந்த சிறப்பு நோக்கு நிறுவனம் இந்தியாவிலேயே முதன்முதலாக பொது மற்றும் தனியார் கூட்டு பங்களிப்புடன் (PPP) கூடிய நீர் மற்றும் பாதாள சாக்கடை சேவைகளுக்கான திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

நாள் ஒன்றிற்கு 185 மில்லியன் லிட்டர் (MLD) மேலும் 250 MLD வரை உயர்த்தத்தக்க நீர் வழங்கு திட்டம் மற்றும் 15 மில்லியன் லிட்டர் (MLD) மேலும் 30 MLD வரை உயர்த்தத்தக்க கழிவுநீர் சுத்திகரிப்பு சேவைகளை அமலாக்கம் செய்வதற்கான சலுகை ஒப்பந்தம் ஒன்றினை தமிழ்நாடு அரசு, திருப்பூர் நகராட்சி (தற்போது மாநகராட்சி) மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் சேர்ந்து செய்துள்ளது. இத்திட்டம் 15 தனியார் நிறுவனங்கள்மூலம் பெறப்பட்ட அசல் சமபங்கு தொகை ரூ.322.70 கோடியும், 19 வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் தொகுப்பின்மூலம் மூத்த கடனாக பெறப்பட்ட தொகை ரூ.613.80 கோடியும் மற்றும் இரண்டாம் தர கடனாக பெறப்பட்ட தொகை ரூ.86.50 கோடி பங்களிப்புடன் சுமார் ரூ.1,023 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர்த் தேவையான சுமார் 38.957 MLD, 8 ஊராட்சிகள் மற்றும் 5 சார்பு ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 60 கிராமப்புற குடியிருப்புகளின் குடிநீர்த் தேவையான சுமார் 18.26 MLD இத்திட்டத்தின்மூலம் பூர்த்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதைத்தவிர, இத்திட்டம் திருப்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள பல்வேறு நூலாடை நிறுவனங்கள், சாயப்பட்டறை மற்றும் அதை சார்ந்த செயலாக்க தொழிற்சாலைகளின் தேவையையும் பூர்த்தி செய்கிறது. மேலும் இத்திட்டத்தின்மூலம் திருப்பூர் மாநகராட்சியின்

2020 மார்ச் 16]

பெரும்பாலான பகுதிகளில் 15 MLD திறனுள்ள பாதாள கழிவுநீர் அகற்றும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. தற்போது 15,246 பாதாள கழிவுநீர் இணைப்புகள்மூலம் பெறப்படும் சுமார் 8 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. மேலும், திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நகர்ப்புற ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் 31 சுகாதார வளாகங்கள்மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் 31-01-2011 நாளிட்ட ஆணைப்படி பல்வேறு சாய மற்றும் வெளுத்தல் பட்டறைகள்/ தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும், வீணாகும் தண்ணீரை மறுசுழற்சி செய்து உபயோகம் செய்வதற்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் கொண்டுவரப்பட்டதாலும், திருப்பூர் மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரின் அளவு பிப்ரவரி 2011 முதல் வெகுவாக குறைந்துவிட்டது. இதன் காரணமாக, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் தொழிலில் ஒரு சுணக்கத்தையும் அதன் காரணமாக வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை காலத்துடன் செலுத்துவதில் சிரமத்தையும் சந்திக்க நேரிட்டது. இந்த நிதிப் பற்றாக்குறை 2011-2012-ல் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின்மூலம் சமாளிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி கடனுதவி செய்த நிதி நிறுவனங்கள் கடனை மறுபரிசீலனை செய்து, கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தும், 15% கடன் தொகையினை சமபங்குகளாக மாற்றியும், மேலும் அரசாங்கம் கூடுதலாக நாள் ஒன்றிற்கு 100 MLD வரை குடிநீரை பொது மக்களின் வீட்டு உபயோகத்திற்காக இந்நிறுவனம்மூலம் வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் செய்யப்பட்டன. மேலும் அரசாங்கம் ரூ.150 கோடி சமபங்குகளை இத்திட்டத்தில் உள்முதலீடு செய்துள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு 56 மில்லியன் லிட்டர் குடிநீரை திருப்பூர் மாநகராட்சிக்கும் மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு 9 MLD குடிநீர் இந்நிறுவனத்தின்மூலம் கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் வணிகரீதியாக மேலும் வலுப்பெற தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் நீர் விநியோக அமைப்பினை விரிவாக்கம் செய்ய அனுமதி அளித்துள்ளது. அதன் பலனாக, இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலும், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை பகுதியிலும், வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்,

[2020 மார்ச் 16

மூன்று கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி பஞ்சாயத்து ஒன்றியப் பகுதிகளுக்குட்பட்ட 68 கிராம பஞ்சாயத்துகளைச் சார்ந்த 461 குடியிருப்புகளுக்கு கோணவாய்க்கால், கங்காபுரம், வாவிக்கடை, சரளை, பெருந்துறை, விஜயமங்கலம், பல்லக்கவுண்டம் பாளையம், செங்கப்பள்ளி, சர்கார்பெரியபாளையம், அக்ரஹாரப்பெரியபாளையம் ஆகிய இடங்களுக்கு குடிநீர் வழங்க திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளது. இதன்மூலம் 9 MLD குடிநீர் கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 65 MLD குடிநீர் கூடுதலாக திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் சுற்றுப்புற வழியோர கிராமங்களின் தேவைகளுக்காக இத்திட்டத்தின்மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்சமயம் விநியோகம் செய்யப்படும் 42 MLD தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

2015-2016 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. தமிழக அரசின் சமபங்கு முதலீடு, திருப்பூர் மாநகராட்சி மற்றும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளால் நாள் ஒன்றுக்கு 65 மில்லியன் லிட்டர் தண்ணீரை கூடுதலாக வாங்குவது, நிறுவனத்தின் சேவை பகுதியை விரிவுபடுத்தி திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்ட செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இந்நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. இதனால், இந்நிறுவனமானது தனது சேவையை திருப்பூர் மாவட்டம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்து தனது சேவையை தொடர்ந்து செய்து வருகிறது. மேலும், தமிழக அரசின் மேற்கண்ட உதவிகளின் பலனாக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் தனது மூத்த கடனாளர்களின் இரண்டு வருடக் கடன் தவணைகளை முன்கூட்டியே செலுத்த ஏதுவாகியது.

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதில் திருப்பூர் மாநகராட்சிக்கு, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் உதவி செய்துள்ளது. இந்த திட்ட அறிக்கை “அம்ரூத்” திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ள

2020 மார்ச் 16]

அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு தனது புதிய குடிநீர்த் திட்டத்திற்கான "கட்டுமானம், மேலாண்மை மற்றும் மேற்பார்வை" ஆலோசகராக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தை நியமித்துள்ளது.

IL&FS குழுமத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட நிதி நெருக்கடியின்பொருட்டு ஒரு புதிய இயக்குநர்கள் குழுவை மத்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைத்துள்ளது. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளுக்கு இதனால் எந்தவித பாதகமான சூழ்நிலையும் ஏற்படவில்லை. மேலும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் நிதி மற்றும் நிருவாகத்தை தனது சொந்த வளங்களின்மூலம் நடத்திக் கொண்டு இருப்பதால் "பச்சை" தரவரிசையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் சலுகை ஒப்பந்தத்தின்கீழ் தனது கடமைகளையும் திருப்பூர் மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கான சேவைகளையும் தொடர்ந்து செய்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

11. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் என்ற அமைப்பு தமிழ்நாடு அரசு மற்றும் உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவை (IL&FS) நிறுவனமும் இணைந்து, குடிநீர் துறையில் பொது மற்றும் தனியார் கூட்டாளித்துவத்தின்கீழ் முதன் முதலாக 2000 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தை (NTADCL) நிறுவுவதற்காக, நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ், ஒரு சிறப்பு நோக்க நிறுவனமாக அமைக்கப்பெற்றது. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகமானது, திருப்பூரில் ரூ.1,023 கோடி பெருமானத்தில் நாள் ஒன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் செயல் திட்டத்தை செயல்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தில், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் 28.72 விழுக்காடு மூலதன பங்களிப்பு செய்துள்ளது.

நகர்ப்புற குடிநீர் மற்றும் கழிவுநீர் நடைமுறைகள், கடல்நீரைக் குடிநீராக்குதல், தொழிற்சாலை கழிவுப்பொருள் மேலாண்மை, மறுசுழற்சி ஆகியவற்றில் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன், திட்டங்களை வரைவு செய்வது முதல் நடைமுறைப்படுத்துவது வரை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் ஆக்க செலவுகளைக் குறைக்கும் வகையில் வசதிகளை செய்து தருகிறது.

தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை செயலாளர் (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) பதவி சார் நிலையில் இந்த நிறுவனத்தின் தலைவராக உள்ளார். இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு சார்ந்த முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, சிறப்புச் செயலாளர், நிதித் துறை, சிறப்புச் செயலாளர், தொழில் துறை ஆகியோர் இயக்குநர்களாகவும் உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனத்தின் 4 நியமன இயக்குநர்களும், 4 சுயேச்சை இயக்குநர்களும் இந்த நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் பிரிவு 16(f)-ன்கீழ், இந்நிறுவனம் பங்கேற்கும் கலந்தாலோசனை மற்றும் நிதி சேவை கொள்முதலுக்கு, தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீடு எண் 333, நாள் 17-10-2017 வாயிலாக விலக்கு அளித்துள்ளது.

2020 மார்ச் 16]

இந்த நிறுவனமானது, பல்வேறு துறைகளில் தற்போது பின்வரும் செயல்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:

11.1. நகர்ப்புறக் குடிநீர்

1. தஞ்சாவூர் மாநகராட்சி-குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்ட மேலாண்மை முகமை.

2. தூத்துக்குடி மாநகராட்சி-விரிவான செயல்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை முகமை, ஒப்பந்தப்புள்ளி செய்முறை மேலாண்மை, சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய (STP) கட்டுமானப் பணிகளை கண்காணித்தல்.

3. கும்பகோணம் நகராட்சி-குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

4. மாவட்ட அளவீட்டு பகுதிகள் (District Metered Areas)-9 மாநகராட்சிகளில் அளவுமானியுடன் கூடிய பகிர்மானக் குழாய் பகுதி அடிப்படையில் குடிநீர் வழங்கலை நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

5. தூத்துக்குடி மாநகராட்சி-குடிநீர் வழங்கல் அமைப்பு மற்றும் வருவாய்சாரா குடிநீர் குறைத்தல் திட்டத்திற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

6. ஆவடி மாநகராட்சி-பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் மீதமுள்ள பகுதிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

7. எடப்பாடி நகராட்சி-குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

8. திருச்சி சீர்மிகு நகரம்-ஆசியா வளர்ச்சி வங்கி மற்றும் சீர்மிகு நகர திட்ட நிதி உதவிகளின்கீழ் குடிநீர் வழங்கல்

மேம்பாட்டுக்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

9. "இந்தியா மற்றும் ஜெர்மனியின் வருங்கால நகரங்களுக்கான திறன்மிகு மற்றும் நம்பகமான குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு வசதிகளுக்கான (Smart & Wise) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செயல்திட்டத்திற்காக," தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்துடன், ஜெர்மனியின் கயிசெரல்ஸ்லாடெரன் பல்கலைக்கழகம், ஜெர்மனியின் மெசர்ஸ். எஞ்சினீயரிங் ஆபீஸ்-ஷீர் (Scheer), ஜெர்மனியின் மெசர்ஸ். டான்ட்லர். காம், சென்னையின் ஐஐடி ஆகியவை அடங்கிய கூட்டமைப்புக்கு, இந்தோ ஜெர்மன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திடமிருந்து மானியம் வழங்கப்பட்டுள்ளது.

10. மேற்குறிப்பிட்டவை தவிர, நெம்மேலியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் தரக்கூடிய (எதிர்மறை சவ்வூடு பரவல்) கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்காகவும், அதிலிருந்து பெறப்படும் குடிநீரை அனுப்பும் குழாய்களுக்காகவும், மூன்றாம் நபர் ஆய்வு உள்ளிட்ட கட்டுமான மேலாண்மை மற்றும் மேற்பார்வைக்காகவும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடமிருந்து பெருமைமிகு ஆணையை, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

11.2. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள்

1. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்- இராமநாதபுரம் மாவட்டத்தில் குதிரைமொழியிலும், விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணத்திலும், நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

2. சிப்காட்-தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காட்டில் நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் (எதிர்மறை சவ்வூடு பரவல்) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை

தயாரிப்பதற்கும் மற்றும் கடலூரில் நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையையும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களையும் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

3. குஜராத் நீர் கட்டமைப்பு நிறுவனம்-குஜராத் மாநிலத்தின் பல்வேறு அமைவிடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

4. குஜராத் மாநிலம் தொழில் வளர்ச்சிக் கழகம்- குஜராத்தில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

5. தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம்- நாள் ஒன்றுக்கு 5 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

6. தேசிய கடல்வளத் துறைக் கழகம் (NIOT) வாயிலாக பாரதீப் துறைமுகத்துக்கு-நாள் ஒன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப் புள்ளி ஆவணத்தைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

7. தேசிய கடல்வளத் துறைக் கழகம் (NIOT) வாயிலாக காமராஜர் துறைமுகத்துக்கு - நாள் ஒன்றுக்கு 2 மில்லியன் லிட்டர் தரக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

11.3. ஆலைக் கழிவுநீர் மேலாண்மை மற்றும் தண்ணீர் மறுபயன்பாடு

1. திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்ப அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் - அருள்புரம், ராயபுரம், முருகம்பாளையம், சின்னக்கரை, காசிபாளையம், குன்னக்கல்பாளையம், கிழக்கு மற்றும் இதர தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் திரவ

[2020 மார்ச் 16

வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் அமைந்துள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

2. கான்பூர் ஜாஜ்மவு தோல் தொழிற்சாலையின் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - இந்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் தூய்மை கங்கை தேசிய அமைப்பின்கீழ், நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட பொறியாளராக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

3. பானிபட் ஜவுளித் தொழிற்பேட்டை-திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கள ஆய்வு, சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான செயல்திட்ட அறிக்கை ஆகியவை தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

4. தெலங்கானா மேடக் மாவட்டம்-இந்திரகரன் ஜவுளி பூங்காவில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக, சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணிக்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

5. ராஜஸ்தான் மாநிலம், பிதுஜா-பொதுவான எரிசோடா மீட்பு மாதிரி ஆலையை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் அதனை மேற்பார்வையிடுவதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

6. பெருந்துறை ஜவுளி ஆலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்-ரோகிணி ஜவுளி ஆலையின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை முகமையாகவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கி பராமரிக்கும் முகமையாகவும் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

7. சிப்காட்-ஒசூர்-ஒசூரில் உள்ள KPRO அணைக்கட்டு தண்ணீருக்கான எதிர்மறை சவ்வூடு பரவல்

ஆலைக்கான (TTRO) விரிவான திட்ட அறிக்கையையும், ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தையும் தயாரிக்கும்/அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

8. டிட்கோ-பெரம்பலூர் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக, இரண்டாம் நிலை உருவாகும் கழிவுநீர் மற்றும் திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த தண்ணீர் மறுபயன்பாடு அமைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக, சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்வதற்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும் திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் செயல்படுகிறது.

9. திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், ஏற்கெனவே உள்ள அனல் ஆவியாக்கிகளுக்குப் பதிலாக, சாத்தியமாகக்கூடிய உபயோகத்திற்காக, Fixed and Flow Capacitive Deionization Technology என்கிற தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்துடன், ஜெர்மனியின் RWT ஆச்சேன் பல்கலைக்கழகம், ஜெர்மனியின் யுரோபின்ஸ், சென்னையின் ஐஐடி ஆகியவை அடங்கிய கூட்டமைப்புக்கு, இந்தோ ஜெர்மன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திடமிருந்து மானியம் வழங்கப்பட்டுள்ளது.

10. “சமச்சீரான சுற்றுச்சூழல்-இணக்கமான தொழில் உற்பத்தி (SEIP) கட்டம் 2” என்கிற செயல்திட்டத்தின்கீழ், இந்தியாவில் கழிவுநீருக்குரிய மறு உபயோகம், மறுசுழற்சி மற்றும் திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் ஆகியவை உருவாக்குவதற்காக, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செயல்திட்டத்திற்காக, ஜெர்மனியின் Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (Giz) நிறுவனத்தால், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்துடன் ஜெர்மனியின் Adelphi Consult GmbH நிறுவனம் அமர்த்தப்பட்டுள்ளது. இதனை GIZ உடன் சுற்றுச்சூழல், வனத் துறை & பருவநிலை

[2020 மார்ச் 16

மாற்றத் துறை அமைச்சகமும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து வழங்கியுள்ளனர்.

11.4 இந்திய அரசின் ஒருங்கிணைந்த செயல்முறை வளர்ச்சி திட்டத்தின்கீழ் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்கள்

1. ஈரோடு மாவட்டத்தில் காடையம்பட்டி, ஸ்ரீபவானியில் திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை முகமை.

2. பெருந்துறை சிப்காட் பகுதியிலும் நாமக்கல் மாவட்ட பசுமை சுற்றுச்சூழல் சங்கத்திலும் உள்ள ஜவுளி சாயப்பட்டறைகளில் CRMS உடனான திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை முகமை.

3. நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் பசுமை காவேரி சாயப்பட்டறை கூடங்களிலும் பசுமை காவிரியிலும் உள்ள ஜவுளி சாயப்பட்டறைகளில் திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் ஜவுளி செயல்முறை பூங்கா அமைப்பதற்கான செயல்திட்ட மேலாண்மை முகமை.

4. விருதுநகர், காரியாப்பட்டி கிராமத்தில் திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பம் அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

11.5 நீராதாரங்களுக்குப் புத்துயிர் அளித்தல் மற்றும் ஆறுகள் மாசுபடுவதை தடுப்பதற்கான செயல்பாடுகள்

1. பெருநகர சென்னை மாநகராட்சி-பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள 60 நீராதாரங்களை புத்துயிர் அளித்தல் மற்றும் நீர்நிலைகள் மாசுபடுவதை தடுப்பதற்காக, விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

2020 மார்ச் 16]

2. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்-மதுரை மாநகரில் உள்ள வைகை ஆறு, மேட்டுப்பாளையத்தில் உள்ள பவானி ஆறு, ஸ்ரீரங்கம், குமாரபாளையம் & பள்ளிப்பாளையம் நகரங்களில் உள்ள காவேரி ஆறு ஆகிய நதிநீர் மாசுபடுவதை தடுப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

3. பேரூராட்சிகள் இயக்ககம்-தமிழ்நாட்டில் உள்ள 18 பேரூராட்சிகளில் உள்ள நதிநீர் மாசுபடுவதை தடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

4. பேரூராட்சிகள் இயக்ககம்-தமிழ்நாட்டில் அவிநாசி நகரத்தில் உள்ள நல்லாறு மாசுபடுவதை தடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

5. நகராட்சி நிருவாக ஆணையரகம்-தமிழ்நாட்டில் 9 நகராட்சிகளில் உள்ள ஆறுகளில் மாசுபடுவதை தடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான திட்ட மேலாண்மை கலந்தாலோசகர்.

11.6 கழிவுநீர் சுத்திகரித்தல் மற்றும் மறுபயன்பாடு செய்வதற்கான கொள்கை

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு அரசுக்காக, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் மூலமாக, கழிவுநீர் மறு பயன்பாட்டுக் கொள்கை தொடர்பான விவரங்களை ஆராய்ந்து அதனை வகுத்துள்ளது.

11.7 பல்வேறு நகர்ப்புற உள்ளூர் அமைப்புகள் சார்ந்த பொறியாளர்களுக்கு பயிற்சி

தமிழ்நாடு அரசு/நகராட்சி நிருவாக ஆணையரகம், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை பொறியாளர்களின் பணித்திறனை மேம்படுத்த பயிற்சியாளராக நியமித்ததை அடுத்து, பல்வேறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த 100 நகராட்சி/மாநகராட்சி பொறியாளர்களுக்கு, அவர்கள் பணித்திறனை மேம்படுத்த, உலக வங்கி நிதியுதவியுடன் இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலாவில் பயிற்சி அளிக்கப்பட்டது. உரிய தேர்வுகளுக்குப் பின்னர்,

பொறியாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அமைப்பின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

11.8 இந்திய அரசு

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், இந்திய அரசின் பின்வரும் பல்வேறு திட்டங்கள் உட்பட கூட்டாளராக பணியாற்றி வருகிறது:

- இந்தியாவில் ஜவுளி அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின், ஒருங்கிணைந்த செயல்முறை வளர்ச்சி திட்டத்திற்கு, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக செயல்படுகிறது.

- மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தின் தூய்மை கங்கை திட்டத்திற்கான தேசிய அமைப்புக்கு பல்வேறு தொழிற்பேட்டைகளில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான கலந்தாலோசகராக செயல்படுகிறது.

- துறைமுகங்களில் எதிர்மறை சவ்வூடு பரவல் வாயிலாக கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கலந்தாலோசனை சேவைப்பணிகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், தேசிய கடல்வளத் துறை கழகத்துடன் (NIOT) கூட்டு நிறுவனமாக செயல்படுகிறது.

- மத்திய அரசு, தங்கள் உட்சதார் அவிஷ்கார் யோஜனா திட்டத்தின்படி, அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தினை கண்காணிப்பு/மதிப்பீடு செய்வதற்காக, "கள நிபுணராக" தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை நியமித்துள்ளது.

- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம், "குடிநீர் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்" என்ற திட்டத்தின் கள வல்லுநர் குழுவில் ஓர் உறுப்பினராக, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை நியமித்துள்ளது.

11.9 சென்னை குடிநீர் பயன்பாட்டு நிறுவனத்தின் (CIWUCL) பங்குகளை விற்பனை செய்தல்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், சிப்காட் நிறுவனத்துடன் இணைந்து அமைக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் பயன்பாட்டு நிறுவனத்தின் சிறப்பு நோக்க நிறுவனத்தை (SPV) பயன்படுத்தி, தூத்துக்குடி மாவட்டத்தில் முள்ளக்காட்டில் நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த சிப்காட் முடிவு செய்துள்ளது.

இதன் காரணமாக, CIWUCL நிறுவனத்தில் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் வைத்துள்ள பங்குகளை சிப்காட்டிற்கு விற்பனை செய்ய தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தின் இயக்குநர் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு தேவையான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11.10 தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தின் விற்றுமுதல்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் கடந்த நிதியாண்டில் அடைந்த ரூ.46 கோடி விற்றுமுதலைவிட, 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.50 கோடிக்கு மேல் விற்றுமுதலை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் வரும் ஆண்டுகளில் அதிக அளவிலான இலக்குகளை அடையும் என்று நம்பிக்கை கொண்டுள்ளது.

11.11. தமிழ்நாடு அரசுக்கு செலுத்தப்பட்ட தொகை

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்றுள்ள கடன் தொகைக்குரிய வட்டிக்காக ரூ.16.50 கோடி தொகையை தமிழ்நாடு அரசுக்கு செலுத்தியுள்ளது.

11.12. சமூகப் பொறுப்புணர்வுப் பணிகள்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், தனது சமூகப் பொறுப்புணர்வுப் பணியின் பகுதியாக, மண்டலம் 9-ல் உள்ள சமூகத் தேவைகள் உள்ள ஆடவர்களுக்கான இல்லத்திற்காக, சென்னை பெருநகர மாநகராட்சிக்கு நிதி வழங்கியுள்ளது.

11.13. மனிதவள வலிமை

ஹைட்ராலிக்ஸ், செயல்முறை, திட்ட மேலாண்மை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய அம்சங்களில் ஆழமான அறிவாற்றல் மிகுந்த 400-க்கும் மேற்பட்ட திறமைவாய்ந்த பொறியாளர்கள் இந்த நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.

இணைப்பு II

(625 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

"தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும்தான் இந்த அரசினுடைய குறிக்கோள்"

- மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரித்தல், ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல், ஊரக வீட்டு வசதியினை அளித்தல் மற்றும் தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல் ஆகியவற்றின்மூலம் ஊரகப் பகுதிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அரசின் தலையாய நோக்கங்களாகும்.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, ஊரகப் பகுதிகளின் வளர்ச்சி இன்றியமையாததாகையால், இந்த அரசின் தலையாய முன்னுரிமைகளில் ஒன்றாக ஊரக வளர்ச்சி இடம் பெற்றுள்ளது. ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு கடந்த ஒன்பது ஆண்டுகளில் செலவிடப்பட்ட பெருமளவிலான நிதி மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களைப் போன்று இதற்குமுன் எப்போதும் தமிழகம் கண்டதில்லை.

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம் தமிழக அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றாகும். கிராமப்புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே இந்த வகையில்

2020 மார்ச் 16]

செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை மொத்தம் 3.80 இலட்சம் பசுமை வீடுகள் ரூ.7,620 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள வீடற்ற பழங்குடியினர் குடும்பங்கள் அனைவருக்கும் வீடு கட்டப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் 2020-2021 ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் தொடர்ச்சியான விதிமுறைகள்மூலம் ஊரக திறன்சாரா தொழிலாளர்களுக்கு சட்டபூர்வ உரிமைகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வழங்குகிறது. இத்திட்டம் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் அதிகபட்சமாக ஆண்டுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பு அளிக்கிறது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் 65 சதவிகிதத்திற்கும் மேலாக இயற்கை வள மேலாண்மைப் பணிகளுக்கான செலவினத்திற்கும், 60 சதவிகிதத்திற்கும் மேலாக வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த பணிகளுக்கும் செலவிடப்படுகிறது. தமிழ்நாட்டில், இயற்கை வள மேலாண்மைப் பணிகளின்கீழ் தடுப்பணை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், மண் வரப்பு மற்றும் கல் வரப்பு ஏற்படுத்துதல், கிணறு வெட்டுதல், மீள் நிரப்பு தண்டு மற்றும் மீள் நிரப்பு குழி அமைத்தல், தனி நபர் மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழி அமைத்தல் தொடர்ச்சியாக மற்றும் சீரான அகழிகள் அமைத்தல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு நிலத்தடி நீர் மீள் நிரப்பப்பட்டு அதன்மூலம் மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர் வளம் பாதுகாக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தியதன்மூலம், ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சியின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்கள் திறம்பட அடையப்பெறுகின்றன. ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதன்மூலம் ‘பசியின்மை’ மற்றும் ‘வறுமையின்மை’ போன்ற நோக்கங்கள் எய்தப்படுவதுடன், ஊரக ஏழை மக்களின் வாழ்வாதாரம் அளிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம ஊதியம் வழங்குவது மற்றும் ஊதியம் வழங்குவதில் எந்தவித

பாகுபாடும் இல்லாதது 'ஆண்-பெண்' சமத்துவத்தினை உறுதி செய்கிறது. மண் மற்றும் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகளான மண் வரப்பு கட்டுதல், தடுப்பணைகள் கட்டுதல், பாரம்பரிய நீராதார அமைப்புகளை புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல், பொது மற்றும் தனியார் நிலங்களில் வறட்சி காப்புப் பணிகள் மற்றும் மரங்கள் நடும் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற மழைநீர் சேகரிப்பு பணிகளின்மூலம் பருவநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான, ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பதற்கு ஊரகச் சாலைகள் இணைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நோக்கத்திற்காக இந்த அரசு, "மக்கள் தொகை 500-க்கும் அதிகமாக உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தார்ச் சாலைகள் அமைக்கப்படும் எனவும்", பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவகாலத்திலும் பயன்படக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. இதை உறுதிபடுத்தும் வகையில், ஊரகச் சாலைகள் பட்டியல் புதுப்பிக்கப்பட்டு அதன் புள்ளிவிவரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஊரகச் சாலைத் தொகுப்பு, இணையதளத்தில் சேர்க்கப்பட்டு அதன்மூலம் சாலை மேம்பாட்டிற்கு முறையாக திட்டமிடல், பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தல், தமிழ்நாடு ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்தியது, சாலைகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு ஊரகச் சாலை பராமரிப்புக் கொள்கையை வகுத்தது போன்ற பல்வேறு முயற்சிகளை இத்துறை எடுத்துள்ளது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு முழுமையான முறையில் உட்கட்டமைப்பு தேவைகளை வழங்குவதற்காக அம்மா-ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற சிறப்பு திட்டத்தையும் இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு ஒவ்வோர் ஆண்டிற்கும் ரூ.100 கோடியை ஒதுக்கியுள்ளது.

ஊரகப் பகுதிகளில் மேம்பட்ட சுகாதார வசதிகளை ஏற்படுத்த அரசு எண்ணற்ற முன்முயற்சிகளை எடுத்துள்ளது. முழுமையான சுகாதார நிலையை அடைவதில் காணப்படும் இடைவெளிகளை களைந்திட பல்வேறு உறுதியான முயற்சிகளும்

2020 மார்ச் 16]

மேற்கொள்ளப்பட்டுள்ளன. திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைவதற்கும், அதனை தக்கவைப்பதற்கும், சுகாதார ஊக்குநர்கள், பங்கேற்பாளர் துறைகளின் களப் பணியாளர்களுடன் இணைந்து மனமாற்றத்தினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். நேரடி தகவல் பரிமாற்றத்திற்கான வள ஆதாரங்கள் தயாரிக்கப்பட்டு, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. தன் சுத்தம் மற்றும் பாதுகாப்பான சுகாதார பழக்கவழக்கங்களை குழந்தைகளின் மனதில் பதியவைப்பதுடன் அவர்களுக்கு ஆரோக்கியமான கல்வி கற்கும் சூழலை உறுதி செய்யும் நோக்கில், சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தம் செய்யப்பட்டு முறையாகப் பராமரிக்கப்படுகின்றன. நிலையான திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை உறுதிபடுத்தும் நோக்கில் குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் அதனை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த "தூய்மைக் காவலர்கள்" ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த முன்முயற்சிகள் தமிழகத்திற்கு தேசிய அளவில் பல்வேறு பாராட்டுதல்களைப் பெற்றுத் தந்துள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிரின் சமூகப் பொருளாதார ஆற்றல் மேம்பாட்டிற்காக 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் நாள் நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் நல மேம்பாட்டிற்காக மட்டுமே துவங்கப்பட்ட இந்நிறுவனம் 35 ஆண்டுகளைக் கடந்து பல மாநில, மத்திய மற்றும் வெளியிலிருந்து உதவி பெறப்பட்ட திட்டங்களை சுயஉதவிக் குழுக்களை மையப்படுத்தி சமுதாயம் சார்ந்த முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருமித்த நோக்குடன் செயல்படுத்தி வருகிறது.

வறுமை என்பது பல பரிமாணங்களைக் கொண்ட பிரச்சினை ஆகும். எனவே, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு உத்திகளின்மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற குடும்பங்களின் வறுமையினை நீக்கி மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையான அமைதி, வளம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை தமிழ்நாட்டில் ஏற்படுத்த செயல்பட்டு வருகிறது.

இன்று, இந்நிறுவனம் அரசின் இரண்டு முதன்மையான வறுமை ஒழிப்புத் திட்டங்களான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு

மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாநிலத்தில் உள்ள 388 வட்டாரங்களில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அதன் துணைத் திட்டங்களான தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டம், கிராமிய தொழில் முனைவோர் திட்டம், பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவற்றின்மூலம் சமுதாயம் சார்ந்த பல்வேறு முன்னேற்ற அணுகுமுறையைக் கொண்டு ஊரகப் பகுதிகளில் மகளிரை ஆற்றல்படுத்தி வறுமையை குறைக்கும் இலக்கினைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. உலக வங்கியின் நிதி உதவி பெற்று, முன்னர் நடைமுறையில் இருந்த புதுவாழ்வுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏழை மக்களைக் கண்டறியும் மக்கள் நிலை ஆய்வே சமுதாயம் சார்ந்த முன்னேற்ற அணுகுமுறைக்கு அடித்தளமாக இருந்தது. இதன்மூலம் ஏழை, மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். சுயஉதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், உற்பத்தியாளர் குழுக்கள், உற்பத்தியாளர் பொருள்களின் சேகரிப்பு மற்றும் உற்பத்தியாளர் அமைப்பு போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, பாதுகாத்து, வளர்த்து அதன்மூலம் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே முக்கிய யுக்தியாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2014-2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசினால் துவங்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசுகள்மூலம் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அடித்தட்டு அளவில் வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கி அதன்மூலம் இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உறுதி செய்து அவர்களின் ஏழ்மை மற்றும் நலிவுற்ற தன்மையினைக் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் முடிவுற்றதைத் தொடர்ந்து, தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம் நடப்பு நிதி ஆண்டில் (2019-2020) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென

2020 மார்ச் 16]

ரூ.40.60 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஊரக ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் உயர்நிலை செயல்பாடுகளை இலக்காகக் கொண்ட இத்திட்டமானது கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் தலா 4 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வேலைக்கு செல்லும் மகளிர் தாங்கள் பணியாற்றும் நிறுவனங்கள், பணியிடங்கள் மற்றும் வங்கிகள் போன்றவற்றிற்கு எளிதில் செல்வதற்காக பெண்களுக்கு வசதியான மொபட் / ஸ்கூட்டர் போன்ற இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்கு உதவும் வண்ணம் மாநில அரசு மானியத்துடன்கூடிய சிறப்புத் திட்டமான அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களைச் சார்ந்த 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறுவர். தொலைதூரங்களில் மற்றும் மலைப் பகுதிகளில் வசிக்கும் மகளிர், மகளிரை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளி பெண்கள், 35 வயதிற்கு மேற்பட்ட மணமாகாத பெண்கள், ஆதி திராவிடர்/பழங்குடியினப் பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் பயனடைய தேவையான கல்வித் தகுதி முழுமையாகத் தளர்வு செய்யப்பட்டுள்ளது. இரு சக்கர வாகனத்தின் மதிப்பில் அதிகபட்சம் 50% தொகை அல்லது 25 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான வாகனம் வாங்கிட கூடுதல் மானியமாக ரூ.6,250 வழங்கப்படுகிறது.

தீன் தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின்கீழ், ஊரக ஏழைக் குடும்பங்களிலுள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, அவர்களுக்கு பல்வேறு நிறுவனங்களின்மூலம் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிராமிய தொழில் முனைவோர் திட்டங்களின்மூலம் விவசாயம் மற்றும் விவசாயம் சாரா பிரிவுகளில் தனிநபர் மற்றும் கூட்டுத் தொழில்களின் வாயிலாக பெண்களுக்கு உதவும் பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறுமையை ஒழிக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சியில் இத்திட்டங்கள் ஒன்றிணைந்தும், அரசின் பிற திட்டங்களுடன் இணைந்தும் தலையாய பணியாற்றி வருகின்றன.

[2020 மார்ச் 16

புதுவாழ்வுத் திட்டத்தின் தொடர்ச்சியாக உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்ட மற்றுமொரு திட்டம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP). இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டின் 120 வட்டாரங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்களை உருவாக்குதல், நிதி சேவைகள் அளித்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். இத்திட்டத்திற்கான பங்கீட்டுத் தொகை உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற விகிதாச்சார அடிப்படையில் ரூ.918.20 கோடி மதிப்பீட்டில் அமையும்.

தமிழ்நாடு தொடர்ந்து முதல் மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சீரிய தலைமையின்கீழ் இயங்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் தனது கடமைகளைத் தொடர்ந்து ஆற்றும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

2. ஊராட்சி நிருவாகம்

தன்னாட்சி அதிகாரம் பெற்ற சமுதாய அடிப்படையிலான கிராம குழுக்கள் என்கிற அமைப்பு நமது மாநிலத்தில் ஆதிகாலந்தொட்டே தொடர்ந்து இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதன் வரலாறு தமிழர்களின் வரலாறு போலவே பழமையானதும், பாரம்பரியம் மற்றும் நாகரிகத்துடன் தொன்றுதொட்டு தொடர்ந்து வருகிறது. சோழ சாம்ராஜ்யத்தின்போது கிராம சபைகள் இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகளை காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டவாச பெருமாள் கோயிலின் உத்திரமேரூர் கல்வெட்டுகள் கொண்டுள்ளன. அப்போது ஊர் மற்றும் சபா அல்லது மகாசபா என்ற இரண்டு அவைகள் இருந்தன. ஊர் கிராமத்தின் பொது அவையாக இருந்தது. கிராமங்கள் சுயாட்சி பெற்றிருந்தன. இக்கிராமங்களின் விவகாரங்களைக் கையாள நிருவாகக் குழு ஒன்று செயல்பட்டது. இந்நிருவாகக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று வருட காலம் ஆகும். இந்நிருவாகக் குழுவின் உறுப்பினர்கள் அக்கிராமத்தில் சொத்து வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இந்த அவைகளுக்கு போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் குறித்த விதிமுறைகளுடன்கூடிய இரகசிய குடவோலை முறைமூலம் தேர்தல்கள் நடத்தப்பெற்றன.

இந்திய அரசமைப்பின் பகுதி 4-ல் உள்ள சரத்து 40-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி அரசானது கிராம ஊராட்சிகளை அமைத்திட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வலியுறுத்தியுள்ளது. அரசானது அவ்வாறு அமைக்கப்பெறும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரத்தை வழங்கி அவை சுயாட்சி பெற்ற அமைப்புகளாக செயல்பட ஆவன செய்ய வேண்டும். மத்திய அரசால் அமைக்கப்பெற்ற பல்வந்த்ராய் மேத்தா குழு அதன் அறிக்கையை ஜனவரி 1957 ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. அதில் ஜனநாயக அதிகாரப் பரவலாக்கத்தை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தர சிபாரிசு செய்தது. அதனைத் தொடர்ந்து 1960-களிலிருந்து மாநிலம் முழுவதும் கிராம ஊராட்சிகள் உருவாக்கப்பட்டு நிருவாகத்தின் அடிப்படை அலகாக அமைந்து முக்கியத்துவம் பெற்றன.

மிகப் பழங்காலத்திலிருந்தே ஊராட்சி அமைப்புகள் நடைமுறையில் இருந்த போதிலும், இந்த அமைப்புகளில் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் பங்களிப்பு ஏதும் இல்லாமல் இருந்தது போன்ற பல்வேறு காரணங்களினால், இவ்வகையான அமைப்புகள்

மக்களின் பங்களிப்போடுகூடிய பலம் வாய்ந்த அமைப்புகளாகத் திகழவில்லை. 1960 ஆம் ஆண்டிலிருந்து ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளையும், அவற்றின் குறைபாடுகளையும், பலவீனங்களையும் கவனித்து அதன்மூலம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், ஊராட்சி அமைப்புகளை பலம் வாய்ந்த அமைப்புகளாக மாற்றும் வகையில் ஒருசில அடிப்படையான முக்கிய சரத்துகளை அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்ப்பது அவசியமானது. இதன் காரணமாகவே, 73-வது அரசியல் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு, 1993 ஏப்ரலில் இருந்து அமலுக்கு வந்தது. அதில் பகுதி IX சேர்க்கப்பட்டு ஊராட்சி அமைப்புகளுக்கு அரசமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு 22-4-1994 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பின்வரும் முக்கிய மாற்றங்களை கொண்டு வந்தது. அவையாவன:

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- 'ஊராட்சி' என்பது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளைக் குறிக்கும் பொதுவான சொல்லாகும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மறைமுகத் தேர்தல்களின்மூலம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கக்கூடியவை.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. தற்போது, அரசாணை எண் 60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை

நாள் 23-05-2016-ன்மூலம் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- மாநில அரசிடமிருந்து நிதியினை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் வகையில் மாவட்ட திட்டக் குழு அமைக்கப்பட்டது.

ஊராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதற்கு இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 243-G வழிவகை செய்கிறது. இதனடிப்படையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 11-வது அட்டவணையில் 29 இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

2.1. உள்ளாட்சித் தேர்தல்கள்

2.1.1. மாநிலத் தேர்தல் ஆணையம்

அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மக்களாட்சியை வலுப்படுத்தும் வகையில் சுதந்திரமான மற்றும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற அரசமைப்பு நிறுவனமாக 1994 ஆம் ஆண்டு, மாநிலத் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தல் நடத்துதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

2.1.2. மாநில மறுவரையறை ஆணையம்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 28-ன்படி, ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிவுற்ற பின்பும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்ய வேண்டும். தமிழ்நாடு மறுவரையறை சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 23, 2017) பிரிவு 12-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மறுவரையறை ஆணையம் கீழ்க்காணும் அலுவல் சார்ந்த உறுப்பினர்களை கொண்ட ஓர் அமைப்பாகும்:

(அ) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் இதன் தலைவர் ஆவார்.

(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்

(இ) நகராட்சி நிருவாக ஆணையர்

(ஈ) பேரூராட்சிகள் இயக்குநர்

(உ) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்

(ஊ) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயலர் இதன் உறுப்பினர் செயலர் ஆவார்.

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை வரைவுக் கருத்துருக்கள் மாவட்ட மறுவரையறை அலுவலர்கள்/மாவட்ட ஆட்சியர்களால் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை பெறும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இவ்வாறு பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து மறுவரையறை அலுவலர்களால் பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கருத்துகளை கேட்கும் வகையில் வேலூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஏழு இடங்களில் மண்டல அளவிலான கூட்ட அமர்வுகள் மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்டன. அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள், ஆலோசனைகள்

2020 மார்ச் 16]

மற்றும் கருத்துகள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு அதன்பின் வார்டு மறுவரையறை கருத்துகள் இறுதி செய்யப்பட்டன. டிசம்பர் 2018-ல் வார்டு மறுவரையறை தொடர்பான விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் 27 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்கள் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டுள்ளன.

2.1.3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 243D-ன்படி, ஊராட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும்.

2.1.4. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994)-ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களில், மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், உள்ளாட்சி நிருவாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும், மகளிரை அதிகாரப்படுத்தவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் என கருதினார். ஆகவே, மகளிருக்கான இட ஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995-ல் திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசாணை எண் 60, ஊரக

[2020 மார்ச் 16

வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள் 23-05-2016-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவி இடங்களில் மகளிருக்கான 50% இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

2.1.5. உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துதல்-2019

தமிழ்நாட்டில், ஏப்ரல் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர் 2001, அக்டோபர் 2006 மற்றும் அக்டோபர் 2011-ல் நடத்தப்பட்டன.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்படுகின்றன. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டில் மாநில அரசானது எல்லைப் பரப்புகளில் பெரிய மாவட்டமான வேலூர் மாவட்டத்தை வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை என மூன்று மாவட்டங்களாகவும், விழுப்புரம் மாவட்டத்தினை விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி என இரு மாவட்டங்களாகவும், அதனைப் போன்றே காஞ்சிபுரம் மாவட்டத்தினை காஞ்சிபுரம், செங்கல்பட்டு என இரண்டு மாவட்டங்களாகவும், திருநெல்வேலி மாவட்டத்தினை திருநெல்வேலி மற்றும் தென்காசி என இரண்டு மாவட்டங்களாகவும் பிரித்து உத்தரவிட்டது. இதன்படி, நான்கு பெரிய மாவட்டங்கள் ஒன்பது மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இதனால், மொத்த ஊரக மாவட்டங்களின் எண்ணிக்கை 31-லிருந்து 36 ஆக உயர்ந்துள்ளது.

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது 7-12-2019 அன்று 27 மாவட்டங்களுக்கு தேர்தல் அறிவிக்கை வெளியிட்டு ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி முடித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் விவரம் பின்வருமாறு:

2020 மார்ச் 16]

அட்டவணை 2.1

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு டிசம்பர் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல்கள் விவரம்

வ. எண்	பதவியிடம் குறித்த விவரம்	எண்ணிக்கை
1.	கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	76,746
2.	ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்	5,090
3.	மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	515
4.	கிராம ஊராட்சித் தலைவர்கள்	9,624
5.	ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்	314
6.	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	26
	மொத்தம்	92,315

அட்டவணை 2.2

ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் 2019—ல் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்

வ.எண்	பதவி இடங்கள்	மொத்த பதவியிடங்கள்	மகளிருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்	சதவீதம்	ஆதி திராவிடருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்	சதவீதம்	பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்	சதவீதம்
1.	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	27	14	51.85	7	25.99%	1	3.70
2.	ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்	314	157	50	76	24.20%	5	1.59
3.	கிராம ஊராட்சித் தலைவர்கள்	9,624	4,813	50.01	2,352	24.44%	144	1.50

வ.எண்	பதவி இடங்கள்	மொத்த பதவியிடங்கள்	மகளிருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்	சதவீதம்	ஆதி திராவிடருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்	சதவீதம்	பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்	சதவீதம்
4.	மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	615	264	51.26	121	23.50%	7	1.36
5.	ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்	5,090	2,626	51.59	1,155	22.69%	51	1
6.	கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	76,744	40,734	53.08	19,770	25.26%	861	1.12

மீதமுள்ள 9 மாவட்டங்களை பொறுத்தவரையில் மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, புதியதாக வார்டு மறுவரையறை பணிகள் மாநில மறுவரையறை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்கள் நடத்தப்படும்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

2.2. கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 36 ஊரக மாவட்டங்களில் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். தற்போது 2020 ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் கருவேப்பிலைபாளையம் என்கிற ஒரு புதிய கிராம ஊராட்சி புதியதாக உருவாக்கப்பட்டது.

2020 மார்ச் 16]

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விவரம் ஆகஸ்ட் 2014-ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட/ பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்

வ. எண்	மக்கள் தொகை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	500 மற்றும் அதற்குக் கீழ்	46
2.	501-1000	833
3.	1001-3000	6,822
4.	3001-5000	2,781
5.	5001-10000	1,753
6.	10,000-க்கு மேல்	290
	மொத்தம்	12,525

மாவட்ட வாரியாக ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.4.

மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

வ. எண்	மாவட்டம்	ஊரக மக்கள் தொகை	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
1.	காஞ்சிபுரம்	734580	253798
2.	செங்கல்பட்டு	1127209	400366
3.	திருவள்ளூர்	1585280	541823
4.	கடலூர்	1800133	635870

[2020 மார்ச் 16

வ. எண்	மாவட்டம்	ஊரக மக்கள் தொகை	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
5.	விழுப்புரம்	1722903	555125
6.	கள்ளக்குறிச்சி	1190057	435472
7.	வேலூர்	862476	247498
8.	இராணிப்பேட்டை	808534	218568
9.	திருப்பத்தூர்	811546	204412
10.	திருவண்ணாமலை	2039049	589140
11.	சேலம்	1957105	466879
12.	நாமக்கல்	1087895	303517
13.	தருமபுரி	1290530	274147
14.	கிருஷ்ணகிரி	1465743	241925
15.	ஈரோடு	1130722	235773
16.	திருப்பூர்	1139466	265486
17.	கோயம்புத்தூர்	1021359	233057
18.	நீலகிரி	310591	114213
19.	தஞ்சாவூர்	1667809	385756
20.	நாகப்பட்டினம்	1261288	463090
21.	திருவாரூர்	1006482	389679
22.	திருச்சிராப்பள்ளி	1471945	319628
23.	கரூர்	668360	159919
24.	பெரம்பலூர்	468017	152640
25.	அரியலூர்	671100	173716
26.	புதுக்கோட்டை	1341111	252397
27.	மதுரை	1300481	277390
28.	தேனி	575394	144966
29.	திண்டுக்கல்	1457412	338644
30.	இராமநாதபுரம்	1009270	214109

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டம்	ஊரக மக்கள் தொகை	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
31.	விருதுநகர்	1286543	316993
32.	சிவகங்கை	952610	188972
33.	திருநெல்வேலி	770260	157927
34.	தென்காசி	875249	204659
35.	தூத்துக்குடி	971273	250673
36.	கன்னியாகுமரி	646441	30439
	மொத்தம்	40486223	10638666

2.2.1. மாவட்ட வாரியான பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு 1,04,149.92 சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.5.

மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்

வ. எண்	மாவட்டம்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி.மீ)	ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ)
1.	காஞ்சிபுரம்	274	1440	5	1539.19	5.62
2.	செங்கல்பட்டு	359	2072	6	2312.56	6.44
3.	திருவள்ளூர்	526	3862	7	2859.84	5.44
4.	கடலூர்	683	2403	4	2942.24	4.31

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

வ. எண்	மாவட்டம்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி.மீ)	ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ)
5.	விழுப்புரம்	688	2371	3	3606.96	5.24
6.	கள்ளக்குறிச்சி	412	1116	3	2902.47	7.04
7.	வேலூர்	247	1894	8	1207.13	4.89
8.	இராணிப்பேட்டை	288	2260	8	1620.58	5.63
9.	திருப்பத்தூர்	208	1955	9	1194.59	5.74
10.	திருவண்ணாமலை	860	4267	5	4826.27	5.61
11.	சேலம்	385	5109	13	4561.41	11.85
12.	நாமக்கல்	322	2520	8	3119.43	9.69
13.	தருமபுரி	251	2835	11	4407.43	17.56
14.	கிருஷ்ணகிரி	333	3983	12	4965.73	14.91
15.	ஈரோடு	225	3199	14	2626.99	11.68
16.	திருப்பூர்	265	2455	9	4545.50	17.15
17.	கோயம்புத்தூர்	228	1200	5	2534.24	11.12
18.	நீலகிரி	35	1282	37	1170.39	33.44
19.	தஞ்சாவூர்	589	2260	4	3657.67	6.21
20.	நாகப்பட்டினம்	434	2054	5	2400.31	5.53
21.	திருவாரூர்	430	1704	4	2322.69	5.40
22-	திருச்சிராப்பள்ளி	404	2210	5	4028.00	9.97
23.	கரூர்	157	2179	14	2656.25	16.92
24.	பெரம்பலூர்	121	314	3	1609.54	13.30
25.	அரியலூர்	201	710	4	1710.17	8.51
26.	புதுக்கோட்டை	497	4062	8	4433.78	8.92
27.	மதுரை	420	1946	5	3183.18	7.58
28.	தேனி	130	607	5	1159.89	8.92
29.	திண்டுக்கல்	306	3083	10	4401.34	14.38
30.	இராமநாதபுரம்	429	2306	5	4116.19	9.59

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டம்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி.மீ)	ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ)
31.	விருதுநகர்	450	1760	4	3282.08	7.29
32.	சிவகங்கை	445	2723	6	3075.90	6.91
33.	திருநெல்வேலி	204	1075	5	2277.48	11.16
34.	தென்காசி	221	1028	5	2005.58	9.08
35.	தூத்துக்குடி	403	1761	4	4260.78	10.57
36.	கன்னியாகுமரி	95	1155	12	626.14	6.59
	மொத்தம்	12525	79160	6	104149.92	8.32

2.2.2. கிராம ஊராட்சிகளின் வருமான வரம்பு

மாநிலத்தில் மொத்தம் 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2019–2020 ஆம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 2.6

கிராம ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள்

வருமான வரம்பு	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
ரூ.10-20 இலட்சம்	6,440
ரூ.20-50 இலட்சம்	5,371
ரூ.50 இலட்சம் – 1கோடி	605
ரூ.1 கோடிக்கும் மேல்	109
மொத்தம்	12,525

[2020 மார்ச் 16

2.2.3. கிராம சபை

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும்,பொறுப்புகளும்கிராமசபைக்குவழங்கப்பட்டுள்ளன. இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 3-ன்கீழ்,

அ) கிராம சபையானது,

(i) கிராம திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

(ii) கிராம ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்

(ii-a) கிராம ஊராட்சியின் முந்தைய ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்

(iii) கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்.

(ஆ) அரசானது அறிவிக்கையின்மூலம் குறிப்பிட்ட சில பணிகளை கிராம சபைக்கு வழங்கலாம்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஓர் ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம். கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் கிராம சபைக்கான குறைவெண் வரம்பினை அரசு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது.

2020 மார்ச் 16]

அட்டவணை 2.7

கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு

வ. எண்	கிராம ஊராட்சியின் மக்கள் தொகை	கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு
1.	500 வரை	50
2,	501 முதல் 3,000 வரை	100
3.	3,001 முதல் 10,000 வரை	200
4.	10,000-க்கு மேல்	300

கிராம சபைக் கூட்ட நடவடிக்கைகளை முறையாகப் பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2.2.4. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110-ன்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

i) அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல். (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர).

ii) குடியிருப்புப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக் கழிவு மேலாண்மை செயல்பாடுகளின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

[2020 மார்ச் 16

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்.

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல், குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

2.2.5. விருப்புரிமைப் பணிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 111-ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) சந்தைகளை ஏற்படுத்தி பராமரித்தல்.

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் மற்றும் உடற் பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

2.2.6. குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர்த் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

அட்டவணை 2.8

பயன்பாட்டில் உள்ள குடிநீர்த் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்

வ.எண்	மாவட்டம்	கைப்பம்புகளின் எண்ணிக்கை	மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை	சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	காஞ்சிபுரம்	2346	2012	2053	9	38
2.	செங்கல்பட்டு	4123	2948	3628	11	28
3.	திருவள்ளூர்	4299	3717	2427	9	36
4.	கடலூர்	8621	4267	3359	12	60
5.	விழுப்புரம்	8253	3953	7909	3	17
6.	கள்ளக்குறிச்சி	6357	2192	4354	8	60
7.	வேலூர்	1856	2870	4956	8	21
8.	இராணிப்பேட்டை	2531	1884	3295	5	10
9.	திருப்பத்தூர்	2627	2365	4275	7	15
10.	திருவண்ணாமலை	11449	5115	8123	25	240
11.	சேலம்	5215	5624	4543	9	262
12.	நாமக்கல்	2643	4738	2342	12	298
13.	தருமபுரி	10869	4324	6125	8	66
14.	கிருஷ்ணகிரி	9022	4603	4733	18	93
15.	ஈரோடு	3970	4941	1670	41	197
16.	திருப்பூர்	2308	4663	1088	17	265
17.	கோயம்புத்தூர்	1160	2951	710	9	228
18.	நீலகிரி	19	1112	132	1	4
19	தஞ்சாவூர்	6389	5368	3194	6	90
20.	நாகப்பட்டினம்	20039	2072	2340	12	291
21.	திருவாரூர்	12901	2752	1413	4	96
22.	திருச்சிராப்பள்ளி	8797	4425	4965	25	327
23.	கரூர்	3372	2938	2978	12	92
24.	பெரம்பலூர்	3249	792	1160	4	96

வ.எண்	மாவட்டம்	கைப்பம்புகளின் எண்ணிக்கை	மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை	சிறு மின்விசைப்பம்புகளின் எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
25.	அரியலூர்	1167	1585	1462	7	168
26.	புதுக்கோட்டை	6233	4312	5712	46	208
27.	மதுரை	2761	3893	3899	7	182
28.	தேனி	561	913	1330	24	106
29.	திண்டுக்கல்	967	4811	3685	32	116
30.	இராமநாதபுரம்	788	1333	1248	52	429
31.	விருதுநகர்	10839	4936	6046	12	153
32.	சிவகங்கை	4229	3315	5963	34	138
33.	திருநெல்வேலி	2162	1883	2026	12	186
34.	தென்காசி	1735	1513	2375	14	202
35.	தூத்துக்குடி	10958	2349	2535	22	354
36.	கன்னியாகுமரி	221	1422	1760	13	44
	மொத்தம்	185036	114891	119813	550	5216

2.2.7. ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகளை எல்.இ.டி. விளக்குகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110-ன்படி ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமை த்தல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

கிராம ஊராட்சியின் வருவாயில் தோராயமாக 35 விழுக்காடு மின் உபயோகத்திற்காக செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திட அப்போதைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 3-9-2015 மற்றும் 29-8-2016 ஆகிய தேதிகளில் விதி 110-ன்படி தெரு குழல் விளக்குகள் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்வதற்கான அறிவிப்பினைச் செய்துள்ளார்கள்.

2020 மார்ச் 16]

குழல் விளக்குகளுக்கு மாற்றாக நிறுவப்படும் எல்.இ.டி. விளக்குகள் 5 ஆண்டு கால உத்திரவாதத்துடன் கூடியதாகும். ஊரக தெரு விளக்குகளின் செயல்பாட்டினைக் கண்காணித்திட, ஊராட்சியில் உள்ள அனைத்து கம்பங்களுக்கும் எண் இடப்பட்டுள்ளன. மாவட்ட குறியீடு, வட்டார குறியீடு, ஊராட்சி குறியீடு மற்றும் குக்கிராம குறியீடு ஆகியவை கம்பத்தில் இடப்பட்டுள்ளன. மாற்றம் செய்யப்பட்டுள்ள எல்.இ.டி. விளக்குகளின் பயன்பாட்டு நிலையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதுவரையில், ஊரகப் பகுதிகளில் சுமார் 20.79 இலட்சம் தெரு விளக்குகள் எல்.இ.டி தெரு விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. இத்திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரை ரூ.407.53 கோடி மின் கட்டணத்தில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

2.2.8. சுகாதாரம்-கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினை பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக வெளியேற்றுதல்.

iii) குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களைப் பராமரித்தல்.

v) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

vi) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மையைப் பேணவும் சுகாதாரத்தைப் பராமரிக்கவும் மொத்தம் 26,622 துப்புரவுப் பணியாளர்கள் பணியில்

ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள 66,130 தூய்மைக் காவலர்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த தூய்மைக் காவலர்களுக்கான மதிப்பூதியமானது மாநில அரசு நிதியிலிருந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

2.2.9. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள்

ஊரகப் பகுதிகளை சுத்தமாகப் பராமரித்து, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஊராட்சி அமைப்புகள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து செயல்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

i) அனைத்து வகையான தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள்மூலம் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு பொது மக்களிடையே தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

iii) அரசு மற்றும் தனியார் மருந்துவமனைகளில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளின் பட்டியலை தினந்தோறும் சுகாதாரத் துறையிடமிருந்து பெற்று, கள அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv) தீவிர கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில் மஸ்தூர்கள் ஈடுபடுத்தப்பட்டு வட்டார மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

2020 மார்ச் 16]

2.3. நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும்.

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன:

அ) வரி வருவாய்

ஆ) வரியில்லா வருவாய்

இ) மானியம்.

2.3.1. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வரி வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன:

i) வீட்டு வரி / சொத்து வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

i) வீடு / சொத்து வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172 மற்றும் அரசாணை எண் 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 13-12-1999-ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. 2008-2009 ஆம் ஆண்டு முதல் அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக 2019-2020 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வீட்டு வரி/ சொத்து வரி விவரம் பின்வருமாறு:

[2020 மார்ச் 16

அட்டவணை 2.9

2019-2020 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி சொத்து வரி விவரம்

வ. எண்	மாவட்டம்	வீட்டு வரி	சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி	மொத்தம்
		ரூபாய் கோடியில்		
1	காஞ்சிபுரம்	10.92	1.30	12.22
2	செங்கல்பட்டு	21.33	1.86	23.19
3	திருவள்ளூர்	19.24	2.45	21.69
4	கடலூர்	8.85	0.58	9.43
5	விழுப்புரம்	3.94	0.26	4.20
6	கள்ளக்குறிச்சி	3.11	0.22	3.33
7	வேலூர்	2.89	0.36	3.25
8	இராணிப்பேட்டை	2.32	0.21	2.53
9	திருப்பத்தூர்	1.34	0.96	2.30
10	திருவண்ணாமலை	6.65	0.72	7.37
11	சேலம்	7.52	2.07	9.59
12	நாமக்கல்	3.36	2.11	5.47
13	தருமபுரி	3.25	0.39	3.64
14	கிருஷ்ணகிரி	7.19	0.45	7.64
15	ஈரோடு	6.97	1.57	8.54
16	திருப்பூர்	8.37	0.53	8.90
17	கோயம்புத்தூர்	16.57	1.97	18.54
18	நீலகிரி	2.89	0.13	3.02
19	தஞ்சாவூர்	11.37	0.81	12.18

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டம்	வீட்டு வரி	சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்துவரி	மொத்தம்
20	நாகப்பட்டினம்	3.78	0.30	4.08
21	திருவாரூர்	2.79	0.18	2.97
22	திருச்சிராப்பள்ளி	6.98	1.01	7.99
23	கரூர்	4.31	0.64	4.95
24	பெரம்பலூர்	2.06	0.49	2.55
25	அரியலூர்	4.32	0.24	4.56
26	புதுக்கோட்டை	4.78	0.65	5.43
27	மதுரை	7.86	0.54	8.40
28	தேனி	2.56	0.21	2.77
29	திண்டுக்கல்	10.36	0.77	11.13
30	இராமநாதபுரம்	5.52	0.29	5.81
31	விருதுநகர்	8.38	0.62	9.00
32	சிவகங்கை	5.01	0.21	5.22
33	திருநெல்வேலி	3.84	1.04	4.88
34	தென்காசி	2.76	1.08	3.84
35	தூத்துக்குடி	6.22	0.23	6.45
36	கன்னியாகுமரி	4.12	0.59	4.71
மொத்தம்		233.73	28.04	261.77

ii) தொழில் வரி

கிராம ஊராட்சிகள், தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198 B-ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில்வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும். அதன்படி, 2019-2020 ஆம் ஆண்டில் தொழில் வரியாக ரூ.117.19 கோடி வசூலிக்கப்பட்டது.

[2020 மார்ச் 16

அட்டவணை 2.10

மாவட்ட வாரியான தொழில் வரி விவரம்-2019-2020

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	தொழில் வரி (ரூபாய் கோடியில்)
1	காஞ்சிபுரம்	15.78
2	செங்கல்பட்டு	10.67
3	திருவள்ளூர்	4.52
4	கடலூர்	3.35
5	விழுப்புரம்	3.77
6	கள்ளக்குறிச்சி	2.68
7	வேலூர்	2.34
8	இராணிப்பேட்டை	2.69
9	திருப்பத்தூர்	1.12
10	திருவண்ணாமலை	4.42
11	சேலம்	4.53
12	நாமக்கல்	3.05
13	தருமபுரி	2.05
14	கிருஷ்ணகிரி	3.13
15	ஈரோடு	3.25
16	திருப்பூர்	2.18
17	கோயம்புத்தூர்	6.54
18	நீலகிரி	0.52
19	தஞ்சாவூர்	2.67
20	நாகப்பட்டினம்	2.13
21	திருவாரூர்	1.73
22	திருச்சிராப்பள்ளி	4.12
23	கரூர்	1.93
24	பெரம்பலூர்	0.43

2020 மார்ச் 16]

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	தொழில் வரி (ரூபாய் கோடியில்)
25	அரியலூர்	2.35
26	புதுக்கோட்டை	2.54
27	மதுரை	3.18
28	தேனி	1.31
29	திண்டுக்கல்	2.88
30	இராமநாதபுரம்	3.26
31	விருதுநகர்	3.52
32	சிவகங்கை	2.63
33	திருநெல்வேலி	1.15
34	தென்காசி	1.08
35	தூத்துக்குடி	2.99
36	கன்னியாகுமாி	0.71
	மொத்தம்	117.19

iii) விளம்பர வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 172, 220 மற்றும் 242-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் உரிமை பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதிகள் 2009-ல் ஊரகப் பகுதிகளில் விளம்பரப் பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டிற்கான குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிருவாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

2.3.2. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன:

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம்மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xii) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019 ஆனது, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண் 43, நாள் 4-2-2019-ன்மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இவ்விதிகளின்படி உள்ளாட்சி அமைப்பின் செயல் தலைவர் அல்லது செயல்படுத்தும் அமைப்பின்மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள முகமை/நபர் கட்டட அனுமதி வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நபர் ஆவார்.

ii) அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் மனைகள் ஒழுங்குபடுத்துதல் விதிகள், 2017

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள்

2020 மார்ச் 16]

உருவாகி உள்ளன. இம்மனைப் பிரிவுகளில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் பெரும்பாலான மனைகளை ஏழைகள் மற்றும் விவரம் அறியாத மக்கள் வாங்கியுள்ளனர். எனவே, அரசானது இவ்வாறு அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளிலுள்ள மனைகளை ஒழுங்குமுறைப்படுத்திட வாய்ப்பு வழங்கி உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35, 1972) பிரிவு 113-ன்படி 20-10-2016-க்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் விற்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வீட்டு மனைகளை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971-க்கு விலக்களித்து மேற்படி, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் வீட்டு மனைகளை வரைமுறை செய்வதற்கு மேற்கண்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 122-ன்கீழ் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு அல்லது உட்பிரிவிலுள்ள தனி வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.

2. அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வரன்முறை செய்தல்.

இவ்வாறு, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு அல்லது உட்பிரிவில் உள்ள தனி மனைகளை நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்று வரன்முறை செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

iii) குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சி குடிநீர் கட்டணம் விதிக்கின்றது. தனிநபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக் கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2019-2020 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ.91.28 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

2.3.3. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரியிலிருந்து பெறப்படும் வருவாய் மாநில

அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

அதன்படி, 2019-2020 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.1053 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

i) மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.351 கோடி நிதி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்பட்டது. அவ்வாறு, கிராம ஊராட்சிகளுக்கு ரூ.234 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.117 கோடியும் வரையறுக்கப்படாத நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள மூன்றில் இரு பங்குதொகையான ரூ.702 கோடி ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3.4. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி என்பது மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயின் ஒரு பகுதியாகும். இத்திட்டக் கூறு நிதிக்கான ஒப்படைக்கப்பட்ட வருவாயில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப் பாலங்கள், இணைப்புச் சாலைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின்கீழ் ரூ.702 கோடி மதிப்பீட்டில் 2019-2020 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த கட்டடங்கள் கட்டுவதற்கு 2017-2018 ஆம் ஆண்டு 5 கட்டடங்கள் ரூ.32.81 கோடி மதிப்பீட்டிலும், 2018-2019 ஆம் ஆண்டு 6 கட்டடங்கள் ரூ.38.10 கோடி மதிப்பீட்டிலும் 2019-2020 ஆம் ஆண்டு 3 கட்டடங்கள் சுமார் ரூ.21 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியிலிருந்து கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.11

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள்

2017-2018	2018-2019	2019-2020
1. தேனி	1.காஞ்சிபுரம்	திருச்சிராப்பள்ளி
2. விழுப்புரம்	2.திருவள்ளூர்	திருநெல்வேலி
3. விருதுநகர்	3.திருவண்ணாமலை	கிருஷ்ணகிரி
4. நாகப்பட்டினம்	4. சிவகங்கை	
5. வேலூர்	5. மதுரை	
	6. திருவாரூர்	

2.4. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்

i) மாநில நிதிக் குழு மானியம்

73-வது அரசமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198-ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள்மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

4. ஊராட்சிகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

73-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்திற்குட்பட்டு தமிழ்நாடு அரசு ஆணை எண் 350, நிதித் துறை நாள் 23-4-1994-ன்மூலம் தமிழகத்தில் "முதல் மாநில நிதி ஆணையம்" ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதி ஆணையம் அமைத்த முதன்மை மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2.4.1. ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், 2017 முதல் 2022 வரையிலான காலத்திற்கான தனது பரிந்துரையை டிசம்பர் 2016-ல் அளித்தது. ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சட்டமன்றப் பேரவையில் 24-3-2017 அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின்மீது அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8:37:55 ஆகும்.

ஈ) 2017-2018 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக் குழு மானிய தொகை பகிர்வு கீழ்க்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

1.2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை	: 60%
2. பரப்பளவு	: 15%
3. ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை	: 15%
4. தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி	: 10%

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக “மூலதன மானிய நிதி” ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு தொகையினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசு ரூ.6,573 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக் குழு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

2.4.2. மூலதன மானிய நிதி

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களைச் செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி

[2020 மார்ச் 16

மற்றும் ஊராட்சித் துறை செயலாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித் துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலர் ஆகியோர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2.4.3. பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டுமொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினைக் கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு தொகை கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்குப் பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிப்பில் ஏற்படும் பற்றாக்குறையினை போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

2.4.4. மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணையம் கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் ஆகிய

2020 மார்ச் 16]

இரு மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மானியமாகும். 10 விழுக்காடு செயலாக்க மானியமாகும். 2015-2016 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டிற்கான உரிய பங்கு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.12

மத்திய நிதி ஆணைய மானிய விவரம்

(ரூபாய் கோடியில்)

மானியம்	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020	மொத்தம் (2015-2020)
அடிப்படை மானியம்	947.65	1312.19	1516.12	1753.87	2369.86	7899.69
செயலாக்க மானியம்	--	172.12	194.78	221.20	289.64	877.74
மொத்தம்	947.65	1484.31	1710.90	1975.07	2659.50	8777.43

i) 14-வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்

2018-2019 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானிய தொகையாக ரூ.1753.87 கோடியை கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசு விடுவித்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படைப் பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளவும், மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தவும் இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது.

ii) 14-வது மத்திய நிதிக் குழுவின் செயலாக்க மானியம்

14-வது மத்திய நிதிக் குழு, கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்க தேவையான விரிவான நடைமுறைகள்,

செயல்பாட்டு அளவுகோல்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ஊக்கத் தொகையின் அளவு ஆகியவற்றை பரிந்துரைத்துள்ளது.

2017-2018 ஆம் ஆண்டிற்கான செயலாக்க மானியம் பெறுவதற்கு கிராம ஊராட்சிகள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் சொந்த வருவாய் ஆதாரங்களை உயர்த்துதல். ஆனால், ஒரு ஊராட்சிக்கு வழங்கப்படும் செயலாக்க மானியமானது அவ்வூராட்சிக்கு விடுவிக்கப்படும் அடிப்படை மானியத்தில் 5 மடங்கு தொகைக்குமேல் இருக்கக்கூடாது.

14-வது மத்திய நிதிக் குழு செயலாக்க மானியத் தொகையை கிராம ஊராட்சிகள் பெறுவதற்குரிய வழிகாட்டி நெறிமுறை மற்றும் அளவுகோல் ஆகியன தமிழ்நாடு அரசு, அரசிதழ் (சிறப்பு) எண் 95, நாள் 28-2-2019-ல் அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.

2.4.5. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன் பிரிவு 240-ன்படி, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வோர் ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும். அதற்கிணங்க தமிழக அரசு, அரசாணை எண் 34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை, நாள் 2-3-2016-ல் பதினான்காவது நிதி ஆணைய மானியத்தை கிராம ஊராட்சி திட்டமிடல்மூலம் பயன்படுத்த விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

அடுத்த நிதியாண்டிற்கான கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக இந்திய அரசு மாநில அரசுடன் இணைந்து 2019 அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை மக்களிடம் திட்டமிடுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ஆவன செய்தது.

மத்திய அரசு மற்றும் தமிழக அரசால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி கிராம ஊராட்சி திட்டமிடல் செயல்முறை விரிவானதாகவும் மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும் இருக்க வேண்டும். மேலும், இது அரசமைப்புச் சட்டத்தின் பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 29 இனங்கள் தொடர்பான

2020 மார்ச் 16]

அனைத்துத் துறைகளின் திட்டங்களுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு திட்டமிட வேண்டும்.

மக்கள் திட்டமிடல் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் சமூக மற்றும் பொருளாதார மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய வள நபர்கள்மூலம் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மிஷன் அந்தியோதயா செயலிமூலம் உள்ளீடு செய்யப்பட்டது. இவர்கள் தொடர்புடைய துறைகள் மற்றும் கள அளவில் ஆய்ந்து தகவல்களைச் சேகரித்ததுடன் ஊராட்சிகளுக்கான தேவைகளை மதிப்பிட்டனர்.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபையில், கிராம ஊராட்சியின் அனைத்து வளர்ச்சித் தேவைகள் மற்றும் தற்போதைய பற்றாக்குறைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

மேலும், தொடர்புடைய துறையின் கள அளவிலான அலுவலர்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் அதற்கான நிதி பயன்பாடு மற்றும் அடுத்த ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட பணிகள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து கிராம சபையில் எடுத்துரைத்தனர். அவ்வாறு விவாதிக்கப்பட்டு கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்டு பொது ஆவணங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களாக கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டன.

2.5. ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின்மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

[2020 மார்ச் 16

அட்டவணை 2.13

கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை
10 மற்றும் அதற்கு குறைவாக	23
11 முதல் 20 வரை	80
21 முதல் 30 வரை	82
31 முதல் 40 வரை	83
41 முதல் 50 வரை	66
51 மற்றும் அதற்கு அதிகமாக	54
மொத்தம்	**388**

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.14

மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
1	காஞ்சிபுரம்	5	274	55	1539.19	121.47
2	செங்கல்பட்டு	8	359	45	2312.56	174.80
3	திருவள்ளூர்	14	526	38	2859.84	204.27
4	கடலூர்	14	683	49	2942.24	226.33
5	விழுப்புரம்	13	688	53	3606.96	201.20
6	கள்ளக்குறிச்சி	9	412	46	2902.47	94.68

2020 மார்ச் 16]

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
7	வேலூர்	7	247	35	1207.13	62.35
8	இராணிப்பேட்டை	7	288	41	1620.58	74.41
9	திருப்பத்தூர்	6	208	35	1194.59	64.36
10	திருவண்ணாமலை	18	860	48	4826.27	268.13
11	சேலம்	20	385	19	4561.41	228.07
12	நாமக்கல்	15	322	21	3119.43	207.96
13	தருமபுரி	10	251	25	4407.43	550.93
14	கிருஷ்ணகிரி	10	333	33	4965.73	496.57
15	ஈரோடு	14	225	16	2626.99	187.64
16	திருப்பூர்	13	265	20	4545.50	349.65
17	கோயம்புத்தூர்	12	228	19	2534.24	211.19
18	நீலகிரி	4	35	9	1170.39	292.60
19	தஞ்சாவூர்	14	589	42	3657.67	261.26
20	நாகப்பட்டினம்	11	434	39	2400.31	218.21
21	திருவாரூர்	10	430	43	2322.69	232.27
22	திருச்சிராப்பள்ளி	14	404	29	4028.00	287.71
23	கரூர்	8	157	20	2656.25	332.03
24	பெரம்பலூர்	4	121	30	1609.54	402.39
25	அரியலூர்	6	201	34	1710.17	285.03
26	புதுக்கோட்டை	13	497	38	4433.78	341.06
27	மதுரை	13	420	32	3183.18	244.86
28	தேனி	8	130	16	1159.89	144.99
29	திண்டுக்கல்	14	306	22	4401.34	314.38

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
30	இராமநாதபுரம்	11	429	39	4116.19	374.20
31	விருதுநகர்	11	450	41	3282.08	298.37
32	சிவகங்கை	12	445	37	3075.90	256.33
33	திருநெல்வேலி	9	204	23	2277.48	103.69
34	தென்காசி	10	221	22	2005.58	99.18
35	தூத்துக்குடி	12	403	34	4260.78	355.07
36	கன்னியாகுமரி	9	95	11	626.14	69.57
மொத்தம்		388	12,525	33	1,04,149.92	270.52

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிருவாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112-ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்.

2020 மார்ச் 16]

4. தொற்றுநோய் பரவாத வண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114-ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

2.5.1. நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.

2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட/பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் வருவாய் இனங்களாகும்.

3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்த பட்ச மானியம் ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகின்றன. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சமான மானியம் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2.5.2. ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினைக் கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை

[2020 மார்ச் 16

ரூ.206.23 கோடி செலவில் 99 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

2.5.3. நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துகளில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு:

அட்டவணை 2.15

மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்

வ. எண்	மாவட்டம்	சிறுபாசன ஏரிகள்	ஊரணிகள்/குளம் குட்டைகள்
1	காஞ்சிபுரம்	379	2079
2	செங்கல்பட்டு	642	2488
3	திருவள்ளூர்	657	3189
4	கடலூர்	219	2559
5	விழுப்புரம்	361	1814
6	கள்ளக்குறிச்சி	794	3299
7	வேலூர்	130	624
8	இராணிப்பேட்டை	202	1431
9	திருப்பத்தூர்	240	267
10	திருவண்ணாமலை	1277	4328
11	சேலம்	193	566
12	நாமக்கல்	128	596
13	தருமபுரி	546	504
14	கிருஷ்ணகிரி	1071	1301
15	ஈரோடு	22	623
16	திருப்பூர்	0	1101
17	கோயம்புத்தூர்	9	620
18	நீலகிரி	0	0

வ. எண்	மாவட்டம்	சிறுபாசன ஏரிகள்	ஊரணிகள்/குளம் குட்டைகள்
19	தஞ்சாவூர்	52	3470
20	நாகப்பட்டினம்	0	4620
21	திருவாரூர்	0	4164
22	திருச்சிராப்பள்ளி	1118	1798
23	கரூர்	107	832
24	பெரம்பலூர்	132	1219
25	அரியலூர்	471	1780
26	புதுக்கோட்டை	3976	5356
27	மதுரை	903	2287
28	தேனி	26	465
29	திண்டுக்கல்	1060	1529
30	இராமநாதபுரம்	932	3519
31	விருதுநகர்	719	2962
32	சிவகங்கை	4224	4430
33	திருநெல்வேலி	333	177
34	தென்காசி	409	479
35	தூத்துக்குடி	402	1498
36	கன்னியாகுமரி	211	197
	மொத்தம்	21,945	68,171

2.6. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24-ன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல்மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 5 வருவாய் மாவட்டங்களைத் தொடர்ந்து, ஏற்கெனவே உள்ள ஊராட்சி ஒன்றியங்களை மறு

[2020 மார்ச் 16

சீரமைத்த பின், அவற்றை உள்ளடக்கி செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய 5 புதிய மாவட்ட ஊராட்சிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்ட ஊராட்சிகள் எதிர்வரும் ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்குப்பின் செயல்பாட்டிற்கு வரும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஓர் அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்பந்தப்பட்ட துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக் குழுக்களை அமைக்கலாம்:

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சி, கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

2.6.1. செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிருவாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப் பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

2020 மார்ச் 16]

4. ஊரக வீட்டு வசதி, குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதி திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்

5. பெரிய அளவிலான குடிநீர்த் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

2.6.2. நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் எட்டு விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

2.6.3. மாவட்ட திட்டக் குழு

மாவட்ட திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74-வது இந்திய அரசமைப்புத் திருத்தச் சட்டம், 1992-ல் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்ட திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட திட்டக் குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்ட திட்டக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதி வரையிலான விவரங்களைப் பெறுதல்.

2. முன்னுரிமை தேவைகளைக் கண்டறிதல்.

3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

[2020 மார்ச் 16

4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்தயாரித்ததிட்டங்களைஒருங்கிணைத்துமாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். இவ்வாறு மாவட்டத் திட்டக் குழு தயாரிக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளைத் தவிர 5-வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதித் தொகுப்பில் 20 விழுக்காடு, மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். அவற்றில் 80% மூலதன மானிய நிதி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது மாவட்ட திட்டக் குழுவின் பொறுப்பாகும். மூலதன மானிய நிதியில் 80 விழுக்காடு நிதி, மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாகப் பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்படும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2.7. பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை ஊராட்சிகளின் சொந்த வருவாயிலிருந்தும் மத்திய மாநில அரசுகளிடம் இருந்து பெறப்படும் மானியங்களிலிருந்தும் மேற்கொண்டு வருகின்றன.

2020 மார்ச் 16]

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கென தமிழக அரசு திறம்பட்ட நிதி நிருவாக அமைப்பு மற்றும் நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வரவு-செலவுக் கணக்கு, கணக்கியல், புத்தக பராமரிப்பு, பரிவர்த்தனைகள் மற்றும் தணிக்கை போன்றவற்றிற்கென விரிவான வழிமுறைகளையும் வெளியிட்டுள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளில் நடைபெறும் பரிவர்த்தனைகள் மற்றும் செலவினங்களை நிகழ்நேரத்தில் கண்காணித்து செயல்திறன்மிக்க நிதி பயன்பாட்டை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து வங்கிக் கணக்குகள், வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் அனைத்து மானிய மற்றும் சொந்த வருவாய் கணக்குகள், பொது நிதி மேலாண்மை அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பொது நிதி மேலாண்மை அமைப்பு என்பது முழுமையான மின்னணு இயங்குதளத்தின்மூலம் நிதியானது அரசிடம் இருந்து பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளின்மூலம் உரிய பயனாளிகள், விற்பனையாளர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் வரை சென்றடைவதை முழுமையாக கண்காணிக்கும் அமைப்பாகும்.

பொது நிதி நிருவாக அமைப்பினைச் செம்மையாகச் செயல்படுத்திட அரசாணை எண் 104 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 26-7-2018 மற்றும் அரசாணை எண் 133, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 18-9-2018 அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

36 மாவட்ட ஊராட்சிகள், 388 வட்டார ஊராட்சிகள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகள் ஆகியவை தனித்தனி அலகுகளாக பொது நிதி மேலாண்மை அமைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2.7.1. பொது நிதி நிருவாக அமைப்பின் (PFMS) அனுகூலங்கள்

- நிதி பட்டுவாடா மற்றும் பயன்பாடு தொடர்பான நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்ளவும், பல்வேறு துறைகள், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கிடையே நிதி பரிவர்த்தனை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்கும் பொது நிதி நிருவாக அமைப்பு உதவி புரிகிறது.

[2020 மார்ச் 16

- திட்டச் செயலாக்க அமைப்புகளில் நிதி தேவையில்லாமல் ஆங்காங்கே தேக்கமடைவதை கண்டறியவும் உதவிகரமாக உள்ளது.
- பணப்பட்டுவாடாவில் ஏற்படும் தாமதத்தினையும், தேக்க நிலையினையும் இது பெருமளவு குறைக்கிறது.
- ஒட்டு மொத்த நிதி நிருவாக மேலாண்மையிலும், திட்ட செயலாக்கத்திலும் வெளிப்படைத் தன்மையினையும், உறுதியான முன்னேற்றத்தினையும் எட்டுவதற்கு உதவிகரமாக உள்ளது.
- தேவையற்ற பண விரயத்தினையும், போலியான பயனாளிகள் அகற்றப்படுவதையும் உறுதி செய்கிறது.

2.8. ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகளைத் தடை செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் 5-6-2018 அன்று ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் தயாரிப்பு, சேமித்தல், விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவை 1-1-2019 முதல் தடை செய்யப்படும் என்று ஒரு அறிவிப்பினை வெளியிட்டார்.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசானது சுற்றுப்புறம் (பாதுகாப்பு) திட்டம் 1986-ன்கீழ் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய (அனைத்து தடிமன்களும்) நெகிழிகள் 1-1-2019 முதல் தடை செய்யப்படும் என உத்தரவிட்டுள்ளது. இவ்வுத்தரவு 27-6-2018 அன்று தமிழ்நாடு அரசின் சிறப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டம் 13/2019 இயற்றப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 243 மற்றும் 244 ஆகியவை திருத்தம் செய்யப்பட்டு உப விதிகளை மீறுவோருக்கு அபராதம் விதிப்பதற்குரிய புதிய அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 244 (2-A)ன்படி, ஊராட்சிகள் இப்பொருள் தொடர்பாக உப விதிகளை உருவாக்கி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் விநியோகத்தினை தடை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 244 (1)-ன்படி, கிராம ஊராட்சியானது இப்பொருள் தொடர்பான உப விதிகளை உருவாக்கி அட்டவணை III-A-ல் குறிப்பிட்டுள்ளபடி அபராதம் விதித்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.16

பிரிவு 244 (2-A)-ன்கீழ் உப விதிகளை மீறினால் விதிக்கப்படும் அபராதத் தொகை அட்டவணை III-A

வ. எண்	குற்றங்கள்	முதல் முறை அபராதம் ரூ	இரண்டாம் முறை அபராதம் ரூ.	மூன்றாம் முறை அபராதம் ரூ.
1	ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் சேமிப்பு, எடுத்துச் செல்லுதல், விநியோகம் மற்றும் விற்பனை	25,000	50,000	1,00,000
2	வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட் போன்ற பெரிய வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம்.	10,000	15,000	25,000
3	மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம்.	1,000	2,000	5,000
4	சிறிய அளவிலான கடைகளில் பயன்பாடு விநியோகம்	100	200	500

ஊரகப் பகுதிகளில் மொத்தம் 42 நெகிழி தூளாக்கும் இயந்திரங்கள் உள்ளன. இவ்வாறு தூளாக்கப்பட்ட நெகிழி துகள்கள் தாருடன் கலந்து சுற்றுச்சூழலைப் பாதிக்காத ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 8,312 மெட்ரிக் டன் நெகிழித் துகள்கள், 13,985 கிலோ மீட்டர் நீளமுள்ள 7,764 எண்ணிக்கையிலான சாலைகளில் பயன்படுத்தப்பட்டன.

[2020 மார்ச் 16

ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியும் நெகிழி தடைகுறித்து இதுவரையில் சுமார் 12120 விழிப்புணர்வு முகாம்கள் ஊரகப் பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன. வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் கள அலுவலர்கள் ஆய்வு செய்து சுமார் 88.21 மெட்ரிக் டன் அளவிலான தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களை கைப்பற்றி விதி மீறுபவர்களுக்கு 31.12.2019 வரையிலான காலத்தில் ரூ.16.81 இலட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

2.9. தொழிற்சாலை கட்டடங்களுக்கான அனுமதி-குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் துறையின் ஒற்றைச் சாளர இணையதளம்மூலம் வழங்குதல்

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018 மற்றும் விதிகளின்கீழ் தொழிற்சாலை கட்டடங்களுக்கான அனுமதி வழங்குதல் தொடர்பான ஆய்வுக் குறிப்புகள் மற்றும் கேள்விகள் எழுப்புதல் ஆகியவற்றை குறிப்பிட்ட காலத்தில் ஒற்றைச் சாளர இணையத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கென, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையானது ஒற்றைச் சாளர இணைய வழி முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டு முதல் அனைத்து விண்ணப்பங்களும் இணைய வழிமூலம் மட்டுமே பெறப்படுகின்றன. இந்த இணையதளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்களின் கள ஆய்வுக் குறிப்புகளை பதிவேற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வணிக எளிதாக்குதல் விதிகள் 2018-ன்கீழ், 7 நாட்களுக்குள் வட்டார வளர்ச்சி அலுவலர் தமது ஆய்வுக் குறிப்புகளை ஒற்றைச் சாளர இணையத்தில் பதிவேற்ற வேண்டும். விண்ணப்பதாரர் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தால் கட்டண விவரங்கள் இணையத்தில் குறிப்பிடப்படும். தொழில் முனைவோர் உரிய கட்டணங்களை இணைய வழியே செலுத்திய பின்பு, 14 நாட்களுக்குள் தொழிற்சாலை கட்டட அனுமதி இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

2.10. அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு திட்டம்

ஊரகப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் செயல்படும் நிலையில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பினை அடுத்த ஐந்து ஆண்டுகளில் தரும் பொருட்டு மத்திய அரசு, மாநில அரசுகளுடன் இணைந்துஅனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு திட்டம் (ஜல்

2020 மார்ச் 16]

ஜீவன் மிஷன்) என்கிற திட்டத்தை துவங்கியுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் இணைப்புகளின்மூலம் குறிப்பிட்ட அளவிலான, குடிப்பதற்கு உகந்த குடிநீரினை சீராக வழங்குவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த முறையே மாநில, மாவட்ட மற்றும் கிராம ஊராட்சி அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. இத்திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் நிறைவேற்றப்படும்.

கிராம ஊராட்சி அளவில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ஊராட்சி அளவிலான குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுமூலம் கண்காணிக்கப்படும்.

2.11. பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழு

ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பும் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும், நிலையான பயன்பாட்டிற்கு வித்திடும் வகையிலும் பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002-ன் பிரிவு 41(1)-ன்படி, பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழுவினை அமைத்திட வேண்டும். பல்லுயிர் பெருக்க விதி, 2004-ன் சரத்து 22 மற்றும் பல்லுயிர் பெருக்க விதி, 2017-ன் சரத்து 20-ன்படி, பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழு அமைத்திடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த குழுவானது மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலும் அமைக்கப்பட வேண்டும்.

துணை விதி (1)-ன்படி, அமைக்கப்பட்ட பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழுவானது தலைவர் மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களுக்கு மிகாமல் உள்ள அமைப்பாக செயல்படும். இக்குழுவில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண் உறுப்பினர்களும், 18 சதவீதத்திற்கு குறையாமல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் தவிர, கிராம ஊராட்சித் தலைவர் இக்குழுவின் பதவி வழி உறுப்பினராக இருப்பார்.

2.12. விருதுகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறப்பான முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளது

2.12.1. மின் ஆளுமை ஊராட்சி விருது, 2019

மின் ஆளுமையில் சிறந்து விளங்கும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு மின் ஆளுமை விருதுகளை வழங்கி கௌரவப்படுத்துகிறது. மின் ஆளுமை ஊராட்சி என்பது, ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், வெளிப்படைத் தன்மையுடனும், பொறுப்புடன் கூடியதாகவும் அமைந்திடும் பொருட்டும், மேலும் அதிகார பரவலாக்கப்பட்ட சுய சார்பு ஆளுமையின் ஓர் அங்கமாக ஊராட்சி அமைப்புகளை மாற்றி அமைத்திடும் வகையிலான தேசிய மின் ஆளுமைக் கொள்கையின் தொலைநோக்குடன் கூடிய ஒரு திட்டமாகும். ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் தகவல் தொடர்பின் ஓர் அங்கமான மின் ஆளுமையின் பங்களிப்பினை சிறப்புற நடைமுறைப் படுத்தியமைக்காக அகில இந்திய அளவில் மின் ஆளுமை விருது பிரிவு IIA-ன்கீழ், தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2.12.2. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருதுகள்

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் நிருவாகத் திறனை மேம்படுத்த ஏதுவாக, மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருதினை மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்து வழங்கி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஊராட்சி நிருவாகத்தினை சிறப்புற நடத்திட்ட 1 மாவட்ட ஊராட்சி, 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 6 கிராம ஊராட்சிகளுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு இதுவரை 69 விருதுகளை மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது.

2.12.3. ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது

வலுவான கிராம சபையின்மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு இதுவரை 7 கௌரவ கிராம சபை விருதுகளை பெற்றுள்ளது. 2019 ஆம் ஆண்டில் இவ்விருது

2020 மார்ச் 16]

திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த இராவணபுரம் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.12.4. குழந்தை நேய கிராம ஊராட்சி விருது

குழந்தைகள் நலனை மனதில் கொண்டு அவ்வகையான திட்டங்களை சிறப்புற செயல்படுத்திய கிராம ஊராட்சிகளை கண்டறிந்து அவற்றை ஊக்கப்படுத்தி கௌரவிக்கும் வகையில் மத்திய அரசு 2019 ஆம் ஆண்டு முதல் குழந்தை நேய கிராம ஊராட்சி விருதினை வழங்கி வருகிறது. 2019 ஆம் ஆண்டில் இவ்விருதிற்கென தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பட்டீஸ்வரம் கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.

[2020 மார்ச் 16

3. மாநில அரசு திட்டங்கள்

3.1. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

திட்டத்தின் நோக்கம்

தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியான முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம், கிராமப்புறங்களில் வாழும் அனைத்து ஏழை மக்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் சூரிய மின் சக்தியுடன்கூடிய நிலையான வீடுகள் வழங்குவதற்காக, 2011 ஆம் ஆண்டில் தமிழக அரசால் துவக்கப்பட்டது. விலையில்லா வீடு வழங்கும் இத்திட்டத்தின்கீழ், 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூபாய் 5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இத்திட்டமானது பயனாளிகளின் நலன் கருதியே உள்ளதாலும் மற்றும் இதர குடியிருப்புத் திட்டங்களைக் காட்டிலும் அலகுத் தொகை கூடுதலாக உள்ளதாலும் தமிழக மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. ஆகையால், இத்திட்டமானது கிராமப்புற ஏழை மக்கள் பயன் பெறும் வகையில், அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் (ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின்சக்தி விளக்குகள் அமைப்பதற்கும்) மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2016-2017 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 20,000 வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது. கட்டுமானப் பணிகளுடன் சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிலேயே மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழுமையான நிதி உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது. இதில் ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.0.30 இலட்சம் சூரிய மின் சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 16]

- வீடு கட்டும் பணிகள் பயனாளிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.
- சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு வீடும் வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு அமைப்பையும் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின்சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகள் படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் தலா ஒரு விளக்கு வீதம் பொருத்தப்படும். ஒவ்வொரு பயனாளியும் தனது விருப்பத்திற்கு ஏற்ப, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்மூலம் மீட்டர் அளவீடுடன்கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பயனாளிகளால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளுக்கான பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறு நான்கு நிலைகளில் பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படுகிறது:

 1. அடித்தள நிலை
 2. ஜன்னல் மட்ட நிலை
 3. கூரை வேயப்பட்ட நிலை
 4. முடிவுற்ற நிலை

- பசுமை வீடுகள், பயனாளியின் தற்போது குடியிருப்பு அமைந்துள்ள மனையில் (ஏற்கெனவே உள்ள குடியிருப்பு அமைப்பினை அகற்றிவிட்டு) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதிகளில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான மனையில் கட்டப்படுகின்றன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

- ஒவ்வொரு பயனாளிக்கும், அலகுத் தொகையுடன் மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன்

[2020 மார்ச் 16

கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது. (90 x Rs.229 = Rs.20,610)

- மேலும், பயனாளிக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

- இவை தவிர, பயனாளிகளுக்கு மானிய விலையில் சிமென்ட் மூட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன. இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

பயனாளிகளின் தகுதிகள்

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பயனாளி கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

- சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஏழையாகவும் இருக்க வேண்டும்.

- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.

- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக்கூடாது.

- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.

- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப் பட்டா இருக்க வேண்டும்.

பயனாளிகளைத் தேர்வு செய்யும் முறை

- ஒவ்வொரு கிராம ஊராட்சியில் வாழும் ஏழை மக்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தமிழ்நாடு மாநில

2020 மார்ச் 16]

ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் அப்போதைய புது வாழ்வு திட்டம்மூலம் தேர்வு செய்யப்பட்ட நலிவுற்றவர்கள் பட்டியலில் (PIP) உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- தயார் செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்களில் அவர்களின் நலிவுற்ற நிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில், கிராம சபையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- பயனாளிகளின் பட்டியல் தயாரிக்கப்படும்போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட) குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்ட எச்.ஐ.வி./ எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டோர், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

- ஓராண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 20,000 பசுமை வீடுகளில், 29 விழுக்காடு அதாவது 5,800 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், 1 விழுக்காடு அதாவது 200 வீடுகள் பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 70 விழுக்காடு அதாவது 14,000 வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் (ஆதி திராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) ஒதுக்கீடு செய்யப்படும்.

- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 4 விழுக்காடு மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக அனைத்து பிரிவுகளிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்படும்.

[2020 மார்ச் 16

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின் சாதனைகள்

- 2011-2012 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை 3,40,000 பசுமை வீடுகள் ரூ.6780 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் ரூ.840 கோடி மதிப்பீட்டில் 40,000 பசுமை வீடுகள் எடுக்கப்பட்டு, இதுவரை 16,047 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

- மேலும், 2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் அனைத்து பழங்குடியினர் குடும்பங்களுக்கும் வீட்டு வசதியை வழங்கும் வகையில் அவர்களுக்கு 8,803 வீடுகள் உட்பட 20,000 பசுமைவீடுகள் ரூ.420 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். சூரிய மின் விளக்குகள் நிறுவுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.30,000 கட்டுமானச் செலவிற்கான தொகையுடன் இணைக்கப்பட்டு, ஒட்டுமொத்த கட்டுமானச் செலவு வீடொன்றுக்கு ரூ.2.10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில், அனைத்துத் தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்க, தூய்மையான சக்தியும் ஒரு இலக்காகும். சூரிய சக்தி நீடித்த நிலையான, புதுப்பிக்கத்தக்க, அனைத்துத் தரப்பு மக்களும் எளிதில் பெறத்தக்கது என்பதால், இது மரபு சார்ந்த மின்சார ஆதாரங்களின் பயன்பாட்டினை குறைக்க வழிவகை செய்கிறது. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் தூய்மையான சக்தியின் ஆதாரமாக செயல்படுவது மட்டுமல்லாமல், ஊரகப் பகுதிகளில் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவாறும், பசுமை ஆற்றலை ஊக்குவிப்பதாகவும் உள்ளது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றை அடைய, சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின் தொடர்ந்த செயலாக்கம் உதவி புரிகிறது.

2020 மார்ச் 16]

3.2. ஊரக உட்கட்டமைப்பு—சாலைகள்

ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் அடங்கிய ஊரகச் சாலைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 110 மற்றும் 112-ன்படி, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிப்பது, முறையே சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் கடமையாகும்.

ஊரகச் சாலைத் தொகுப்பு, கடந்த பத்து ஆண்டுகளில் வெகுவாக வளர்ச்சி அடைந்து கிட்டத்தட்ட 45% அதிகரித்துள்ளது. இந்தச் சாலைகள், ஊரக மக்களுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் சந்தைகள் போன்ற பல்வேறு சமூகப் பொருளாதார சேவைகளை வழங்குவதன் காரணமாக, ஊரக மக்களின் நாடித் துடிப்பாக விளங்குவதன் முக்கியத்துவத்தை அரசு வெகு காலமாக நன்கு அறிந்துள்ளது. எனவே, கீழ்க்கண்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது:

i) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் மேம்பாட்டிற்கான மாநில மற்றும் மத்திய திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீட்டை அதிகாித்தல்.

ii) ஊரகச் சாலைகளின் மேற்பரப்பின் அடிப்படையில் அவற்றினை மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுதல்.

iii) சாலை இணைப்பு வசதியில்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வசதி, வணிகச் சந்தைகள், வாரச் சந்தைகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் இணைப்புச் சாலைகள், பேருந்து செல்லும் சாலைகள் மற்றும் உள் இணைப்புச் சாலைகள் ஆகியவற்றினை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துதல்.

iv) ஊரகப் பகுதிகளில் விடுபட்ட ஊரகச் சாலைகள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளை ஊரகச் சாலைகள் தொகுப்பில் சேர்த்து ஊரகச் சாலைகளின் அடிப்படை விவரங்களை ஒருங்கிணைத்தல், மேலும் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு எண்ணெழுத்து இன வாரியான தனிச் சாலைக் குறியீடு (Road code)வழங்குதல்.

[2020 மார்ச் 16

v) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளாகத் (ODR) தரம் உயர்த்துதல்.

vi) பல்வேறு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாலைகள் அமைத்தல்.

ஊரகச் சாலைகளின் தொடர் வளர்ச்சி மற்றும் மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் விவரங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் தற்போதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 3.1

ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள்

வ. எண்	சாலையின் மேற்பரப்பின் வகை	ஊராட்சி ஒன்றியச் சாலைகள்	ஊராட்சி சாலைகள்	மொத்தம்
		நீளம் (கி.மீ)		
1.	தார்ச்சாலை	26,471	72,065	98,536
2.	சிமெண்ட் சாலை	308	3,313	3,621
3.	ஈரடுக்கு கப்பிச்சாலை	144	1,936	2,080
4.	ஓரடுக்கு கப்பிச்சாலை	365	8,417	8,782
5.	சரளைக்கல் சாலை	162	4,756	4,918
6.	மண் சாலை	994	29,619	30,613
	மொத்தம்	28,444	1,20,106	1,48,550

பேருந்து செல்லும் ஊரகச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளாகத் தரம் உயர்த்தும் அரசின் ஆணைக்கிணங்க, 4,822 கி.மீ. நீளம் கொண்ட ஊரகச் சாலைகள் நெடுஞ்சாலைத்

2020 மார்ச் 16]

துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாளது தேதி வரை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மொத்தம் 1.48 இலட்சம் கி.மீ. நீளம் உள்ளது. மேலும், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் முழுமையான தகவல்கள் tnrd.gov.in இணையத் தளத்தில் உள்ளன.

2011 ஆம் ஆண்டு முதல் ஊரகச் சாலைத் தொகுப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது பின்வருவனவற்றின் வாயிலாக புலப்படுகிறது:

அ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 6,000 கி.மீ. நீளம் கொண்ட ஓரடுக்கு கப்பிச் சாலைகள் உட்பட ஏறக்குறைய 46,000 கி.மீ. நீளம் கொண்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் புதியதாக ஊரகச் சாலைகள் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆ) 29,910 கி.மீ. நீளம் கொண்ட தார் இடப்படாத சாலைகள், தார்ச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இ) 42,254 கி.மீ. பழுதடைந்த தார்ச் சாலைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

ஈ) 18,109 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

உ) 1,885 கி.மீ. நீளம் கொண்ட சாலைகள் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி 14,216 கி.மீ. நீளம் கொண்ட சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஊ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் 1,358 உயர்மட்ட பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எ) 90,273 கி.மீ. நீள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த ரூ.20,153 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரகச் சாலைகள் மேம்பாட்டின் கூறுகள்

ஊரகச் சாலைகளின் மேம்பாடு பின்வரும் கூறுகளைக் கொண்டது:

[2020 மார்ச் 16

1. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்.
2. பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்.
3. தார்ச் சாலைகளைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்.

1. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்

தார் இடப்படாத சாலைகள், இணைப்பின் தன்மை, இணைக்கப்படும் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பல காரணிகளின் அடிப்படையில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், 29,910 கி.மீ. நீளமுள்ள தார் இடப்படாத சாலைகள் ரூ.7,025.38 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலைகளாக மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2. பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல்

வடிவமைப்பு காலம் முடிவுற்ற தார்ச் சாலைகளை தற்போதுள்ள போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வலுப்படுத்திட வேண்டிய தார்ச் சாலைகள் இந்த வகையின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், 42,254 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.11,164.84 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

3. தார்ச் சாலைகளைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்

சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு, 5 வருடங்கள் முடிவுற்றவுடன் அவற்றை காலமுறையில் புதுப்பிக்க எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், இத்துறையின்மூலம் 18,109 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகள் ரூ.1,962.52 கோடி மதிப்பீட்டில் இவ்வகையின்கீழ் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக தேவைப்படும் நிதி, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம், நபார்டு– ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், மாநில நிதிக் குழு மானியம்

2020 மார்ச் 16]

மற்றும் மத்திய நிதிக் குழு மானியம் மற்றும் இதர மாநிலத் திட்டங்கள் மூலமாகவும் பெறப்படுகின்றன.

பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள்

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் உள்ள பாலங்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவே கட்டப்பட்டு வந்தன. எனினும் கடந்த 9 ஆண்டுகளாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களின்கீழ் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 9 ஆண்டுகளில், இத்துறையின்மூலம் பல்வேறு மத்திய மற்றும் மாநிலத் திட்டங்களின்கீழ், 658 உயர்மட்டப் பாலங்கள் ரூ.955.60 கோடி மதிப்பீட்டிலும், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 700 சிறிய பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் ரூ.210.59 கோடி மதிப்பீட்டிலும் எடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,358 பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் ரூ.1,166.19 கோடி மதிப்பீட்டில் பின்வருமாறு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

அட்டவணை 3.2

2011-12 ஆம் ஆண்டு முதல் எடுத்துக்கொள்ளப்பட்ட பாலங்கள் மற்றும் தரைப் பாலங்களின் விவரங்கள்

வ. எண்	ஆண்டு	எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	மதிப்பு (ரூ. கோடியில்)
1	2011-2012	30	45.74
2	2012-2013	27	31.22
3	2013-2014	93	116.40
4	2014-2015	113	155.85
5	2015-2016	64	112.62
6	2016-2017	79	137.48
7	2017-2018	65	88.22
8	2018-2019	422	221.65
9	2019-2020	465	257.01
மொத்தம்		1,358	1,166.19

[2020 மார்ச் 16

3.3. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டின் பரந்த ஊரகச் சாலை தொகுப்பில் உள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கும் மற்றும் புதிய சாலைகள் அமைப்பதற்கும் இடையே சமநிலை இருக்கும் வகையில் உரிய அளவு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்காக இந்த அரசு, அனைத்து திட்டங்களையும் ஒன்றிணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒருங்கிணைந்த திட்டத்தினை 2015-2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

இத்திட்டம் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை ரூ.800 கோடி ஒதுக்கீட்டிலும், 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் ரூ.1,200 கோடி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

i) மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய போதிய நெகிழ்வுத் தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அளிக்கிறது.

ii) இத்திட்டம் மூன்று பிரிவுகளாகச் செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கெனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்கெனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளைப் புதுப்பித்து பராமரித்தல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

2020 மார்ச் 16]

அட்டவணை 3.3

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

வ. எண்	ஆண்டு	எண்ணிக்கை	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ.கோடியில்)
1	2015-2016	2,385	4,225.10	800
2	2016-2017	2,567	4,650.62	800
3	2017-2018	2,201	3,913.83	800
4	2018-2019	3,278	5,532.04	1,200
5	2019-2020	3,018	5,030.31	1,200
மொத்தம்		13,449	23,351.90	4,800

2020-2021 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.1,400 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

3.4. நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD – RIDF)

1995-1996 ஆம் ஆண்டு நபார்டு வங்கி, கிராமப் பகுதிகளில் மாநில அரசு, அரசுத் துறை நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு உட்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கும் பொருட்டு, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியை உருவாக்கியது. இந்த நிதியினை, பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும் மற்றும் தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளுக்காகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்படுத்துகிறது. பாலங்கள் அமைப்பது, நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மற்றுமொரு முக்கிய கூறாக விளங்குகிறது. இத்திட்டம் 80% நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் மாநில அரசின் முழுமையான நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 16

கடந்த 9 ஆண்டுகளில், 7,985.26 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் 317 பாலங்கள் என மொத்தம் ரூ.2,251.32 கோடி மதிப்பீட்டில் பணிகள் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ், கடந்த 9 ஆண்டுகளில், ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 3.4

கடந்த 9 ஆண்டுகளில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள்

(2011-2012 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை)

வ. எண்	ஆண்டு	எண்ணிக்கை	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ. கோடியில்)
1	2011-2012	958	2,598.65	451.77
2	2012-2013	381	1,000.46	198.07
3	2013-2014	185	367.63	100.00
4	2014-2015	615	1,183.03	339.61
5	2015-2016	232	369.92	160.20
6	2016-2017	297	510.31	229.00
7	2017-2018	549	993.17	316.32
8	2018-2019	421	738.25	255.82
9	2019-2020	262	223.84	200.53
	மொத்தம்	**3,900**	**7,985.26**	**2,251.32**

2020 மார்ச் 16]

3.5. சிறிய இணைப்புச் சாலைகள்

1 கி.மீ. நீளத்திற்கும் குறைவான சாலைகளை மேம்படுத்துதல்

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், நபார்டு—ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும், இத்திட்டங்களின்கீழ் 1 கி.மீ.-க்கும் குறைவான நீளம் கொண்ட சாலைகளை மேம்படுத்த வழிவகையில்லை. இச்சாலைகளும் முக்கிய இணைப்புச் சாலைகளாக விளங்குவதை கருத்திற்கொண்டு இந்த அரசு, இச்சாலைகளின் மேம்பாட்டிற்காக 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.225 கோடி நிதியினை மாநில நிதிக் குழு மானியத்தின் 20% மூலதன மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனடிப்படையில், 2018-2019 ஆம் ஆண்டில், 2,397 கி.மீ. நீளம் கொண்ட 1 கி.மீ.-க்கும் குறைவான நீளமுள்ள சிறிய இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்று 2019-2020 ஆம் ஆண்டிற்கு சிறிய இணைப்புச் சாலை மேம்பாட்டிற்காக மாநில நிதிக் குழு மானியத்தின் 20% மூலதன மானிய நிதி ரூ.262.94 கோடி மற்றும் மாவட்ட ஊராட்சிக்கான மாநில நிதிக் குழு மானிய நிதி ரூ.37.06 கோடி, ஆக மொத்தம் ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் 1,167 கி.மீ. நீளமுள்ள சிறிய இணைப்புச் சாலைகள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 9 ஆண்டுகளில், திட்ட வாரியாக எடுக்கப்பட்ட சாலைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

[2020 மார்ச் 16

அட்டவணை – 3.5

திட்ட வாரியாக கடந்த 9 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைகளின் விவரம்

(2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை)

வ. எண்	திட்டத்தின் பெயர்	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ.கோடி)
	மாநிலத் திட்டங்கள்		
1	தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	23,351.89	4,800.00
2	ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம்	3,581.27	1,028.24
3	தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்	9,723.97	1,487.54
4	20 % மாநில நிதிக்குழு மானிய நிதி (1 கி.மீ - க்கும் குறைவான சாலைகள்)	1,911.35	487.66
5	ஊரக உட்கட்டமைப்புத் திட்டம்	4,318.92	616.67
6	பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	1,399.28	300.00
7	மாநில நிதிக் குழு மானியம்	4,846.69	1,095.65
8	ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்	3,649.19	381.07
9	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	1,551.95	247.18
10	நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி	7,985.26	2,103.35

வ. எண்	திட்டத்தின் பெயர்	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ.கோடி)
11	சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி	429.87	37.50
12	இதர திட்டங்கள்	9,492.79	2,330.89
	குறுமொத்தம்	72,242.43	14,915.75
	மத்திய திட்டங்கள்		
13	பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்	7,849.79	3,883.81
14	பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	1,032.00	168.21
15	13-வது நிதிக் குழு மானியம்	6,573.13	622.00
16	14-வது மத்திய நிதிக் குழு மானியம்	2,575.61	562.97
	குறுமொத்தம்	18,030.53	5,236.99
	பெரு மொத்தம்	90,272.96	20,152.74

தரக்கட்டுப்பாடு

தரக்கட்டுப்பாடு என்பது செயல்படுத்தப்படும் பணிகளின் நோக்கம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றை உறுதிசெய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. ஊரக வளர்ச்சித் துறை, பல்வேறு மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின்கீழ் பல வகையான ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இப்பணிகளின் தரத்தினை உறுதிப்படுத்தும் வகையில், ஊரக வளர்ச்சித் துறை முறைப்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது.

1. ஊரக வளர்ச்சித் துறை, இரண்டடுக்கு தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை மாநில அளவில் பின்பற்றுகிறது.

2. தரக்கட்டுப்பாட்டு அமைப்பு, மாநில, மாவட்ட, உட்கோட்ட மற்றும் ஒன்றிய அளவிலான அலுவலர்களை உள்ளடக்கியதாகும். இவர்கள், துறையின் அனைத்து திட்டப் பணிகளிலும் தரத்தினை உறுதி செய்கிறார்கள்.

[2020 மார்ச் 16

3. மாவட்ட மற்றும் ஒன்றிய அளவிலான அலுவலர்களை உள்ளடக்கிய திட்டச் செயலாக்க அலகு (PIU) தரக்கட்டுப்பாட்டின் முதல் அடுக்காக செயல்படுகிறது. இவர்கள், பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம் மற்றும் வேலைத் திறனை, பணி நடைபெறும்போது பல்வேறு தரக்கட்டுப்பாட்டு சோதனைகளின்மூலம் உறுதிப்படுத்துகிறார்கள்.

4. இத்துறை, போதிய அனுபவமுள்ள ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களை, மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களாக (SQMs) (இரண்டாம் அடுக்கு) நியமித்துள்ளது. மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் பணிகளுக்கான மூன்றாந்தரப்பு ஆய்விற்காக, மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்கள், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் பணிகளை ஆய்வு செய்வார்கள். இரண்டாம் அடுக்கு தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை பலப்படுத்தும் வகையில் கூடுதலாக 28 மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் புதியதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

5. இதனுடன், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ், தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs), இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகளை ஆய்வு செய்ய மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள், இத்திட்டத்தின் மூன்றாம் அடுக்கு தரக்கட்டுப்பாட்டு அமைப்பாக செயல்படுகிறார்கள்.

6. தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQM) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQM) ஆகிய இருவரும் மாதந்தோறும் பணிகளை அதன் பல்வேறு நிலைகளில் தரம் மற்றும் வேலைத் திறனை ஆய்வு செய்வதுடன், கள அலுவலர்களுக்கு தரக்கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டுதல்களையும் வழங்குவார்கள். தேசிய மற்றும் மாநில தரக்கட்டுப்பாடு ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆய்வறிக்கையின்மீது திட்டச் செயலாக்க அலகால் (PIU) உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை (ATRs) சமர்ப்பிக்கப்படுகிறது.

7. இத்துறை, அனைத்து முக்கிய தரக்கட்டுப்பாட்டு உபகரணங்களை உள்ளடக்கிய மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தை நிறுவியுள்ளது. இதனுடன், மண்டல மற்றும் மாவட்ட அளவிலும் அனைத்து அடிப்படை தரக்கட்டுப்பாட்டு சோதனைகளுக்குத் தேவையான உபகரணங்களை உள்ளடக்கிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

8. புதுமையான முயற்சியாக, 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை, இத்துறை நிறுவியுள்ளது. இது, தொலைதூரப் பகுதிகளிலும், பணி தளத்தில் பணி நடைபெறும்பொழுதே தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

பயிற்சி

இத்துறை, கள அலுவலர்களின் திறனை மேம்படுத்தும் வகையிலும் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்துகொள்ளும் வகையிலும், அவர்களை பல்வேறு பயிற்சிகளுக்கு அனுப்புகிறது. இது மேலும், கள அளவில் பணியின் தரத்தினை உறுதிசெய்ய வழிவகை செய்கிறது.

2019-2020 ஆம் ஆண்டில், 1,067 பொறியாளர்களை மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் (SIRD), இந்திய நெடுஞ்சாலை பொறியாளர் கழகம் (IAHE), மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிறுவனம் (CRRI), இந்திய பொறியியல் பணியாளர்கள் கல்லூரி (ESCI) போன்ற மாநில மற்றும் தேசிய அளவிலான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சிகளில் பங்கேற்கச் செய்துள்ளது.

தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முயற்சிகள் (R&D Initiatives)

இந்த அரசு, பசுமையான மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் வகையிலும், வழக்கமான கட்டுமானப் பொருட்களைச் சார்ந்திருக்கும் நிலையை குறைக்கும் வகையிலும், தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முயற்சிகளை மேற்கொள்கிறது.

இதில், குளிர்கலவை, இரசாயனக் கலவைகள்மூலம் நிலைப்படுத்துதல், சிமென்ட், எரியூட்டப்பட்ட நிலக்கரி சாம்பல், தொழிற்சாலைகளின் கழிவுகளைக் கொண்டு சாலையினைப் பலப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்கள் அடங்கும். இந்த தொழில்நுட்பங்கள், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

[2020 மார்ச் 16

இதுவரை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

அட்டவணை—3.6

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்கள்—புதிய முயற்சிகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

வ. எண்	திட்டம்	புதிய தொழில் நுட்பத்தின் பெயர்	சாலையின் நீளம் (கி.மீ)	வேலையின் மதிப்பு (ரூ. கோடியில்)
1	பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்	நெகிழி கழிவு (ஈர முறை)	130.32	68.56
		குளிர்கலவை / மேற்பரப்பு சீரமைத்தல்	216.59	162.98
		உருளையை கொண்டு இறுக்கப்பட்ட கான்கிரீட் சாலை / சிமெண்ட் கான்கிரீட் பிளாக்	5.45	2.73
		தென்னை நார்/ சணல் ஜியோ டெக்ஸ்டைல்ஸ்	52.82	25.10
		சாலையினை பலப்படுத்துதல் (i)இரசாயனம்	574.89	376.77
		(ii) தொழிற்சாலை கழிவு	34.71	15.76
		(iii) சிமெண்ட்	99.71	47.73
		(iv) மண்	152.08	116.54
		குறுமொத்தம்	**1,266.57**	**816.17**

2020 மார்ச் 16]

வ. எண்	திட்டம்	புதிய தொழில் நுட்பத்தின் பெயர்	சாலையின் நீளம் (கி.மீ)	வேலையின் மதிப்பு (ரூ. கோடியில்)
2	தமிழ் நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	குளிர்கலவை	28.91	4.70
		நெகிழி கழிவு (ஈர முறை)	307.19	57.40
		சாலையினை பலப்படுத்துதல் (i) இரசாயனம்	198.50	59.26
		(ii) தொழிற்சாலை கழிவு	2.30	0.80
		(iii) மண்	37.75	10.65
		(iv) சிமென்ட்	44.11	12.64
	குறுமொத்தம்		**618.76**	**145.45**
	மொத்த தொகை		**1,885.33**	**961.62**

இந்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன்மூலம், இயற்கை வளங்களை அதிகமாக சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்பட்டு, பருவநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும் அரசின் உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

நெகிழிச் சாலைகள்

நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டில் இந்த அரசின்மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டு 35 நெகிழி கழிவு சேகரிப்பு மற்றும் செயலாக்க மையங்கள் அமைக்க மாநில அரசின்மூலம் நிதி ரூ.140 இலட்சம் வழங்கப்பட்டது. இவ்வாறு நெகிழி கழிவுகளைப் பயன்படுத்துவதன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுயஉதவிக் குழு மகளிருக்கான வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி, இத்துறையில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், இதர மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 16

இதன் விளைவாக, கடந்த 2011-2012 ஆம் ஆண்டு முதல், ஏறத்தாழ 14,216 கி.மீ நீளமுள்ள சாலைகள் நெகிழி கழிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரூ.2,384.40 கோடி செலவில் பல்வேறு திட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

சொத்து பராமரிப்பு மற்றும் மேலாண்மை

ஊரகப் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் இத்துறையின்மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது சாலைகள், பாலங்கள், கட்டடங்கள் மற்றும் இதர சேவைகளை உள்ளடக்கியதாகும். இச்சொத்துகளை நல்ல நிலையில் பராமரிப்பதைப் பொறுத்தே இச்சொத்துகளின் பயன்பாடு அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு, இத்துறையின்மூலம் ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக அதிகப்படியான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இச்சாலைகளின் பராமரிப்பினை உறுதிப்படுத்துவதற்காக "தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கை"யினை, மாநிலத்தின் அனைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பிற்காக அரசு வரையறுத்துள்ளது. சாலைகளின் தொடர் பராமரிப்பு, காலமுறை பராமரிப்பு, அவசரகால சீரமைப்பு ஆகியவற்றை மேற்கொள்ள இக்கொள்கையின்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்துறையினால் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்களின்மூலம் மேற்கொள்ளப்படும் பள்ளிக் கட்டடங்கள், அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், கழிவறைகள் போன்ற பணிகளுக்கு மாதிரி கட்டட வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை 32 மாதிரி கட்டட வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு மாநில திட்டங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியின் மூலம் இந்த கட்டடங்கள் பராமரிக்கப்படுகின்றன.

சொத்து பராமரிப்பு மற்றும் மேலாண்மையில் புவிசார் தகவல் அமைப்பின் (GIS) பயன்பாடு நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இத்துறையின்மூலம் பல்வேறு தகவல்களை புவிசார்ந்த தகவல்களாகவும் மற்றும் புவிசார் தகவல் அமைப்பின்மூலம் திட்டமிடுதல், பணிகளைத் தேர்வு செய்தல் மற்றும் சொத்துகளைப் பராமரித்தல் பணிகளை இலக்க முறையில் (Digitization)

2020 மார்ச் 16]

மேற்கொள்ளவும் புவிசார் தகவல் அமைப்புப் பிரிவு இயக்குநரகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறை, இடஞ்சார்ந்த தகவல்களான கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய எல்லைகள், ஊரகச் சாலைகள், நீர்நிலைகள், குக்கிராமங்கள் போன்றவற்றினை இலக்கமுறைப்படுத்தியதுடன், ஊரகச் சாலைகளுக்கு புவிசார் குறியீடுகள் எடுக்கப்படும் பணியையும் முடித்துள்ளது. மேலும், நீர்நிலைகளான சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் ஊருணிகளுக்கு புவிசார்குறியீடுகள் எடுக்கப்படும்.

PMGSY III திட்டத்திற்காக, முக்கிய வசதிகளான கல்வி, சுகாதாரம், சந்தை மற்றும் போக்குவரத்து வசதிகளை புவிசார் குறியீடு செய்ய அலைபேசி செயலி, இத்துறையின்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் PMGSY III திட்டத்திற்கு மாவட்ட ஊரகச் சாலைத் திட்டம் (DRRP) தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

MGNREGS திட்டத்தின்கீழ், செயற்கை நீர் செறிவூட்டும் அமைப்புகள் அமைக்க, சரியான இடங்களைத் தேர்வு செய்ய புவிசார் தகவல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் நிதியாண்டில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம், புவிசார் தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பணிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

மத்திய அரசு திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கம்மூலம் கட்டப்படும் தனிநபர் இல்லக் கழிப்பறை மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)மூலம் உருவாக்கப்படும் பணிகளுக்கு புவிசார் குறியீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று, மாநில அரசுத் திட்டங்கள்மூலம் செயல்படுத்தப்படும் பணிகளைபுவிசார் குறியீடுகள் செய்யவும் மற்றும் நிகழ்நேர கண்காணிப்பிற்கும், திட்டம் என்கிற அலைபேசி செயலி இத்துறையின்மூலம் உருவாக்கப்பட்டது. இச்செயலியின்மூலம் மாதிரி அடிப்படையில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் அம்மா-ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 16

3.6. அம்மா–ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்கும் நோக்கில் ஆதி திராவிடர் குடியிருப்புகளின் உட்கட்டமைப்பு தேவைகளை முழுமையான முறையில் பூர்த்தி செய்வதன்மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்ய அம்மா–ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடம் 50:50 அடிப்படையில் வழங்கப்பட்ட பற்றாக்குறையுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியில் இருந்து ரூ.100 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் நலத் துறையின் மாநில வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ரூ.100 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள், ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் சாலைகளை அமைத்தல், தெருக்களை மேம்படுத்துதல், சமுதாயக் கழிவறைகள், ஆதி திராவிடர் மயானம், மயானத்தில் காத்திருப்போர் கூடம், அணுகுசாலை, சுற்றுச்சுவர், அடிகுழாய் வசதி, LED விளக்குகள் பொருத்துதல், நடைபாதை அமைத்தல், அதிகமாக ஆதி திராவிடர் இளைஞர்கள் விளையாடக்கூடிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாடும் இடங்களுக்கு விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இத்திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்படுகிறது. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அமைந்துள்ள உட்கட்டமைப்புகளைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளையும் மேற்கொள்ள இத்திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்படுகிறது.

அம்மா-ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில், ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

2020 மார்ச் 16]

அட்டவணை-3.7

அம்மா-ஆதி திராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

வ.எண்	ஆண்டு	எண்ணிக்கை	மதிப்பு (ரூ. கோடியில்)
1	2018-19	1,952	100.00
2	2019-20	1,949	100.00
மொத்தம்		3,901	200.00

3.7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு தொகுதிக்கும் ஓராண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.2.50 கோடியிலிருந்து ரூ.3.00 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிருவாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.50 கோடியில் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமைப் பணிகளை எடுத்துச் செய்திட வேண்டும். மீதமுள்ள வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.50 கோடியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையிலும், தடைசெய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இல்லாத பணிகளை இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யலாம்.

[2020 மார்ச் 16

வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ.1.50 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்

1. பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.25 இலட்சம்

2019-2020 ஆம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி/ஊராட்சி ஒன்றியம்/அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.25 இலட்சத்தினை ஒரு சட்டமன்ற உறுப்பினரின் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்), குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட ரூ.20 இலட்சம்

பள்ளி மாணவ மாணவியருக்கு சுத்தமான மற்றும் சுகாதாரத்துடன்கூடிய குடிநீர் வழங்கும் பொருட்டு, 2019-2020 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி/ஊராட்சி ஒன்றியம்/அரசு பள்ளிகள் மட்டும்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் (Reverse Osmosis (RO) System) ஏற்படுத்திட குறைந்தபட்சம் ரூ.20 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

3. அங்கன்வாடி/சமையல் கூடம்/குழந்தை நேயக் கழிப்பறைகள் /அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி பணிகளுக்காக ரூ.20 இலட்சம்

ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் மற்றும் குழந்தை நேயக் கழிப்பறை கட்டுதல், அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்பு கொண்டு நவீனப்படுத்தும் பணிகள் ஆகியவற்றை எடுத்துச் செய்திட ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

2020 மார்ச் 16]

4. குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 30 இலட்சம்

குறிப்பாக கோடைக்காலத்தில் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீராதாரத்தினைப் பெருக்குவதற்கான, மின் விசை இறைப்பான், சிறு மின் விசை இறைப்பான், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு ஆழப்படுத்தும் பணிகள், புதிய கைப் பம்பு அமைத்தல், மோட்டார் திறன் உயர்த்துதல், திறந்த வெளி கிணறு அமைத்தல், ஏற்கெனவே உள்ள திறந்தவெளி கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் ரூ.30 இலட்சத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

5. இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.55 இலட்சம்

இதர வரையறுக்கப்பட்ட கூறு நிதியின்கீழ், சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ.55 இலட்சத்தில் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட பணிகளை தேர்வு செய்யலாம்:

அ) ஊரகப் பகுதிகளில்

1. ஊரகப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மானியத் தொகையினை பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்ச் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் இடுகின்ற பணிகளை மட்டும் மேற்கொள்ளல்)

4. தெருக்கள் மற்றும் பாதைகளில் சிமென்ட் கான்கிரீட் சாலைகள் / பேவர் பிளாக் அமைக்கும் பணிகள்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை

[2020 மார்ச் 16

மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவற்றிற்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்.

8. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்,

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச் சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால் இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

11. பொது விநியோக கடை கட்டடங்கள் கட்டுதல்.

12. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்

1. நகர்ப்புறப் பகுதிகளில் சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல் மற்றும் LED தெரு விளக்குகள் நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் மானியத் தொகையினைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்)

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்.

2020 மார்ச் 16]

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல். (தேவையின்அடிப்படையில்தார்ச்சாலையில்உள்ளபள்ளங்களை நிரப்பி தார் இடப்படும் பணி மட்டும் மேற்கொள்ளல்)

4. சிமென்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு அறைகள், கட்டடம் மற்றும் /அல்லது சுற்றுச் சுவர் கட்டிக்கொடுத்தல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவற்றிற்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்.

8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்.

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமென்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

10. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

12. பொது விநியோகக் கடை கட்டடங்கள் கட்டுதல்.

13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவு நீர் அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல்.

14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால் இப்பணிகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

[2020 மார்ச் 16

15. உடற்பயிற்சி / ஜிம்னாசியக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.50 கோடியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், "எதிர்மறையான பட்டியல்/தடை செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிகளைத்" தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின்கீழ் எடுத்துச் செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.1.50 கோடியில் இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்

1. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

விதிவிலக்கு

(i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல்

(ii) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர், சிமெண்ட் கான்கிரீட் தளம், தொழிலாளர் ஓய்வறை மற்றும் கழிவறை கட்டுதல்.

2. தனிநபர்/குடும்பப் பயனுக்காக சொத்துகளை உருவாக்குதல்

விதிவிலக்கு

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)-ன் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்

2020 மார்ச் 16]

3. அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்

விதிவிலக்கு

அரசுத் திட்டங்களின்கீழ் 31.12.2009 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு/தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்

4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

விதிவிலக்கு

(i) 2016-2017 ஆம் ஆண்டில் 15-வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14-வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு வரையில் கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை / இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், 2019-2020 ஆம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை (நிலை) எண் 95, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை, நாள் 18-8-2016-ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல்.

(ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(iii) அரசு ஆணை (1டி) எண் 405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள் 17-8-2010 மற்றும் அரசு கடித (1டி) எண் 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 31-12-2012-ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5 இலட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்.

(iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

(v) உடற்பயிற்சி/ஜிம்னாசியக் கூடத்தில் (physical fitness centre/ Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். இவை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

(vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

(vii) பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்/ காவல் கண்காணிப்பாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/பெருநகர சென்னை மாநகர காவல் ஆணையர் மூலம் உரிய கொள்முதல் விதிகளைப் பின்பற்றி கண்காணிப்பு (CCTV-Closed Circuit Television) கேமிராக்கள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை வாங்குதல்.

5. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்

6. அனைத்து வணிக நிறுவனங்கள்/அலகுகள் குறித்த பணிகள்

2020 மார்ச் 16]

7. மானியம் மற்றும் கடன் வழங்குதல் மற்றும் மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்

8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்

12. குட்டைகள், ஊருணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவற்றை தூர் வாருதல்

13. சரளை / கப்பி சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்)

14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

2019-2020 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கம்

2019-2020 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.705 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன:

அட்டவணை – 3.8

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

வ.எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை
1.	கட்டடங்கள்	1338
2.	சாலைகள்	1233

[2020 மார்ச் 16

வ.எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை
3.	குடிநீர் வழங்கல்	2353
4.	வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள்	636
5.	இதர பணிகள்	1523
மொத்தம்		7,083

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிற்கென வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, ரூ.705 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

3.8. தன்னிறைவுத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களிடையே பொது மக்கள் பங்கேற்பு மூலம் சுய-சார்பினை மேம்படுத்தும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டு முதல் அரசால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சுய-சார்பு மற்றும் சுய-உதவி மனப்பான்மையை ஊக்குவித்து மக்கள் தங்களது தேவையைதங்களின்பங்கேற்புடன்செயல்படுத்துவதற்கான திட்டமாகும். மக்களின் உணரப்பட்ட தேவைகள் இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகின்றன. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பொதுமக்கள் பங்களிப்பு

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

பணிகளைத் தேர்வு செய்தல்

1. ஒரு பணியினை எடுத்துச் செய்வதற்கான தேவை தனிநபர்களிடமிருந்தோ, குழுவினரிடமிருந்தோ, தனியார் அல்லது பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது சமூகத்திடமிருந்தோ எழலாம்.

2. முன்மொழியப்பட்ட பணிகளின் மொத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு

தொகையை வழங்க இசைவு தெரிவித்து விண்ணப்ப படிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளிக்கப்பட வேண்டும்.

3. மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்வார். முன்மொழியப்பட்ட பணிகளின் தேவை நிறைவு அளிக்கும்பட்சத்தில், திட்டப் பணியினைமேற்கொள்ள இருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.

4. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பணிகளைச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதியினை நிருவாக அனுமதி வழங்குவதற்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

6. உருவாக்கப்படும் சொத்துகள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின்கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துகளை உருவாக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு/ துறையின் ஒப்புதலை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

7. இத்திட்டத்தின்கீழ் குறைவாக நிதி இருக்கும்பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின், அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

8. சிறப்பு திட்டங்களுக்கான பங்களிப்பை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பொது அல்லது தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து பெறலாம்.

[2020 மார்ச் 16

பணிகளை நிறைவேற்றுதல்

சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பெரிய அளவில் மக்கள் பங்கேற்க ஏதுவாக பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ மேற்கண்ட பணியை தாமோ அல்லது வேறு முகவர்கள் மூலமாகவோ மேற்கொள்ள விரும்பினால் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்யும்போது எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இக்கோரிக்கையினை ஆய்வு செய்து பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு 50 சதவீதம் அல்லது அதற்குமேல் இருந்தால் பங்களித்தவரையோ, முகவரையோ அப்பணியை மேற்கொள்ள அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப் பணித் துறை மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்களை தூர்வாரும் பணியைப் பொறுத்தமட்டில் பொது மக்கள் பங்களிப்பு 50 சதவீதத்திற்கு அதிகமாக இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.

2011-2012 முதல் 2019-2020 வரையிலான திட்டச் செயல்பாடு

2011-2012 முதல் 2019-2020 வரை, மொத்தம் 13,181 சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க சொத்துகள் ரூ.887.10 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன.

திட்டச் செயலாக்கம் 2020-2021

தன்னிறைவுத் திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.9. மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்(RCSIDS)

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமானது ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு

2020 மார்ச் 16]

வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஆண்டுக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த அரசால் 2011-2012 முதல் 2016-2017 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் ரூ.100 கோடி ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அரசால் 2019-2020 ஆம் ஆண்டு முதல் மீள அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், சமையலறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வழங்குதல் போன்ற புதிய பணிகள் மற்றும் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய வகுப்பறைக் கட்டடப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இப்புதிய கட்டடங்கள் தட்டோடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படுகின்றன. புதிய பள்ளிக் கட்டடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்படுகின்றன. அவ்வாறு பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான இடம் இல்லாத நிலையில் ஏற்கெனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித் தன்மையை சரிபார்த்து அதன் மேல்தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படுகிறது.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய சமையல் அறைகளும் மற்றும் பழுதடைந்துள்ள சமையல் அறைகளை பழுது பார்க்கும்/புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ள கூடுதல் அறைகள்/ இருப்பு அறைகளையும் இத்திட்டத்தின்கீழ் அமைத்துக்கொள்ளலாம்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது நீக்கி சீரமைக்கப்படுகின்றன. தேவைப்படும் இடங்களில் குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சியின் குடிநீர் ஆதாரத்திலிருந்து தேவைக்கேற்ப புதிய குடிநீர் விநியோக இணைப்பு அல்லது ஒரு புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உணவருந்தும் கூடம் அமைக்கும் பணி முன்னோடியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியருக்குப் போதுமான கழிப்பிட வசதிகள் செய்து தருவதை இந்த அரசு உறுதிசெய்கிறது. பள்ளிகளில் மாணவிகளின் பயன்பாட்டிற்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படுகின்றன.

வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி செயற்பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர் ஆகியோர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி வட்டார அளவில் அமைக்கப்படும் குழுவானது மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளைத் தேர்வு செய்து இறுதி செய்யும். பள்ளிகளுக்குத் தேவைப்படும் சரியான உட்கட்டமைப்பு பணிகளின் விவரத்தை இக்குழுவானது ஒவ்வொரு பள்ளியையும் ஆய்வு செய்து அறிந்துகொள்ளும்.

3.10. சுகாதாரம்—முழு சுகாதார தமிழகம்

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமானது, அந்தப் பழக்கத்தை பின்பற்றும் தனிநபரின் உடல் நலத்தைப் பாதிப்பதோடு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த கிராம சமுதாயத்திற்கும் மாபெரும் தீங்கை விளைவிக்கக்கூடிய பழக்கமாகும். இதனால் மக்களின் நல்வாழ்வும் பாதிப்படைகின்றது. சமூக மற்றும் பொருளாதார குறியீடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு தொடர்ந்து சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ் "முழு சுகாதார தமிழகம்" என்ற நிலையை எய்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன் இறுதி நோக்கமானது, ஊரகப் பகுதிகளில் ஆரோக்கியமான மற்றும் வளமான சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை அடையவும் மற்றும் அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் தீவிர பங்கேற்பு மற்றும் அனைத்து பங்கேற்பாளர் துறைகளின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டு முயற்சி ஆகியவற்றால், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது.

"முழு சுகாதார தமிழகம்" என்கிற நிலையை அடைவதன்மூலம், ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஒன்றான "அனைவருக்கும் சுகாதாரம்"

2020 மார்ச் 16]

என்ற முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசின் முன்முயற்சிகள்

2001 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 2001-2004 வரையிலான காலத்தில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கட்டப்பட்டன. 2011-2012 ஆம் ஆண்டில் பயன்படுத்தாமல், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு, ஊரகப் பெண்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டது. இந்தச் சுகாதார வளாகங்களின்மீது தங்களுக்குள்ள உரிமை மற்றும் பொறுப்பை அவர்கள் உணர்ந்து வளாகங்களை முறையாக பராமரிக்கும் பொருட்டு, பயன்படுத்துவோர் பராமரிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள், இவ்வளாகங்களின் தினசரி பராமரிப்பை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள்மூலம் காலமுறை பராமரிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. முழுமையான சுகாதார நிலையினை வேகமாக அடையும் பொருட்டு, 2003 ஆம் ஆண்டு, தூய்மை கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2006 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம், 2011-2012 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரொக்க பரிசு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதை போன்று, 2012-2013 முதல் 2014-2015 ஆம் ஆண்டு வரை 1,199 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய பணிகளில் பங்கேற்கச் செய்தது ஆகிய முன்முயற்சிகள், முழுமையான சுகாதார நிலையை விரைவாக அடைய வழிவகுத்தது. தமிழகத்திலுள்ள அனைத்து 12,525 கிராம

ஊராட்சிகளிலும் திடக் கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில் "தூய்மைக் காவலர்கள்" ஈடுபடுத்தப்படுவதால், கிராமங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான நல்லதொரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட தேவையான அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிக்கப்படுவதுடன் அவை பயன்பாட்டில் உள்ளதையும் உறுதி செய்யப்படுகிறது. மாநில அரசின் இந்த அனைத்து முன்முயற்சிகளும் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கின்றன.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் சுகாதாரம் அடைந்த நிலை

தமிழ்நாட்டில் 2013 ஆம் ஆண்டு சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, 51.06 இலட்சம் குடும்பங்களில் கழிப்பறை வசதி இல்லை என கண்டறியப்பட்டது. மேற்படி அடிப்படை கணக்கெடுப்பிற்குப்பின் 2013-2014 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை சாதனை அளவாக 50.17 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாலும், 0.89 இலட்சம் குடும்பங்கள் சமுதாய கழிப்பறைகள் மற்றும் பகிர்வு கழிப்பறைகளை பயன்படுத்துவதன் அடிப்படையிலும், தமிழ்நாட்டின் சுகாதாரம் அடைந்த நிலை 45 விழுக்காட்டிலிருந்து 100 விழுக்காடாக உயர்ந்துள்ளது. சுகாதார அடிப்படை கணக்கெடுப்பின்படி, அனைத்து ஊரக மாவட்டங்களும் 100 விழுக்காடு சுகாதாரம் அடைந்த நிலையை எட்டியுள்ளது.

மத்திய அரசு, சுகாதாரம் அடைந்த நிலையை கணக்கிடும்போது, 2013 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அடிப்படை கணக்கெடுப்பின்படி, மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறை இணையதள ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின்படி (IMIS) கழிப்பறை இல்லாத வீடுகளின் எண்ணிக்கை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி 2013 ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கு பின் புதியதாக கட்டப்பட்ட வீடுகள் சேர்க்கப்படவில்லை. மேலும், 2013 ஆம் ஆண்டு அடிப்படைக் கணக்கெடுப்பின்படி பழுதடைந்த கழிப்பறைகளும் (Defunct toilets) கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேற்படி சுகாதார கணக்கெடுப்பின்போது கிராம ஊராட்சிகளில் 12.25 இலட்சம் கழிப்பறைகள் பழுதடைந்து உள்ளதாக கண்டறியப்பட்டன. இந்த பழுதடைந்த கழிப்பறைகள், முந்தைய சுகாதாரத் திட்டங்களில் கட்டப்பட்டவையாகும். மேற்படி

2020 மார்ச் 16]

குடும்பங்களுக்கு தற்போதுள்ள திட்டங்களின்கீழ் ஊக்கத் தொகை வழங்க வழிவகை இல்லை. எனவே, பயனாளியின் சொந்த நிதி, பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி, வங்கிக் கடன் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் உள் கடன் ஆகியவற்றின்மூலம் நிதியை திரட்டி, 11.80 இலட்சம் பழுதடைந்த கழிப்பறைகளை புதுப்பித்தல்/ மீளவும் கழிப்பறைகள் கட்டுதல் ஆகியவை சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகங்களின் நடவடிக்கைகள்மூலம் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இதைத் தவிர 'தூய்மை பாரத கோஷ்' நிதி மற்றும் உலக வங்கி உதவியுடன் வழங்கப்படும் செயல்திறன் அடிப்படையிலான ஊக்க மானியம் ஆகிய நிதிகளின்மூலம் சுமார் 45,000 பழுதடைந்த கழிப்பறைகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன.

மேலும், 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் 2013 ஆம் ஆண்டு சுகாதார கணக்கெடுப்பில் விடுபட்டுபோன கழிப்பறை அற்ற 6.08 இலட்சம் குடும்பங்களுக்கு, தூய்மை பாரத திட்டத்தின்கீழ் (ஊரகம்) கழிப்பறைகள் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், எவரும் கழிப்பறை வசதி இல்லாமல் விடுபட்டுப் போகவில்லை என்பதை உறுதி செய்ய கழிப்பறை கட்ட போதிய இட வசதி இல்லாத ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இதர குடியிருப்புகளிலும் சமூக சுகாதார வளாகங்கள் அமைக்க அரசு முழு கவனம் செலுத்தி வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை மற்றும் அதை சரிபார்த்தல்

வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை அடைந்தவுடன் கிராம சபைக் கூட்டத்தில் சுயமாக அறிவிப்பு செய்கின்றன. அதன்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை சுயமாக அறிவிப்பு செய்துள்ளன. இவை அனைத்து ஊரக மாவட்டங்களால் சரிபார்க்கப்பட்டு ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை இணையதள அமைப்பில் (IMIS) உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்காணும் நிலையினைத் தொடரவும் மற்றும் கட்டப்பட்ட கழிப்பறைகள் தொடர் பயன்பாட்டில் உள்ளதை உறுதி செய்திடவும், இரண்டாம் கட்டமாக, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை சரிபார்த்திட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

தனிப்பட்ட மூன்றாம் தரப்பு முகமைகள்மூலம் ஊரக சுகாதார கணக்கெடுப்பு

மத்திய அரசு, தேசிய வருடாந்திர ஊரக சுகாதார கணக்கெடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதன்படி, இந்த கணக்கெடுப்பு வருடத்திற்கு ஒருமுறை மூன்றாம் தரப்பு தனியார் முகமைகள்மூலம் கிராம ஊராட்சிகளின் (1) திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை குறைத்தல், (2) கிராமங்களில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைத்தல் மற்றும் (3) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தில் பயன்பெறும் ஊரக மக்கள் தொகை விழுக்காடு ஆகிய செயல்திறன் குறியீடுகளை அளவீடு செய்கிறது. ஒவ்வொரு கணக்கெடுப்பின் சுற்றிலும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் நிலை, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினைத் தக்க வைத்தல் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டங்கள் ஆகிய கூறுகளில் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இது தனிப்பட்ட சரிபார்ப்பு நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும் மூன்றாம் தரப்பு மாதிரி கணக்கெடுப்பு ஆகும். தேசிய வருடாந்திர ஊரக கணக்கெடுப்பின் முடிவுகளின்படி, மாநிலங்களுக்கு செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை, 100 சதவீத மானியமாக வழங்கப்படுகிறது.

தரமான சுகாதார உட்கட்டமைப்புகளை மதிப்பீடு செய்ய, மாநில அரசு மூன்றாம் நபர் சுகாதார ஆய்வை மாநில தர கண்காணிப்பாளர்கள் மூலமாகவும் அவ்வப்போது மேற்கொள்கிறது.

சுகாதாரம் குறித்து எடுக்கப்பட்ட பல்வேறு முன்முயற்சிகள்

(அ) திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதில் சமுதாய அமைப்புகளின் பங்கு

தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்படும் “பெண்கள் சுயஉதவிக் குழு அமைப்புகள்” மாபெரும் சமுதாய மூலதனமாகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின்கீழ் கிராம அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளிலும், சுகாதாரத்தை ஊக்குவிக்கவும் மற்றும் தன்சுத்தம் பேணவும் முழு அளவில் ஈடுபடுத்தப்படுகின்றனர். திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமங்களை உருவாக்குதல் மற்றும் அதனை தொடர்ந்து தக்க வைத்தலில் மக்களிடையே பெரிய

2020 மார்ச் 16]

அளவில் செல்வாக்கு உடையதாகத் திகழும் இந்த சமூகம் சார்ந்த அமைப்புகள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர் துறைகளை ஒருங்கிணைத்தல்

திறந்த வெளியில் மலம் கழிக்கும் தவறான பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சியிலும் மற்றும் மன வளர்ச்சியிலும் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அவர்களுக்கு இரத்த சோகை மற்றும் குடற்புழு தொற்று ஏற்படுவதற்கும் மூல காரணமாக அமைந்துள்ளது. எனவே, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமுடைய மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மிக முக்கியமானதாகும். அதன்மூலம் மட்டுமே திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைவதுடன், அவர்கள் தொடர்ந்து கழிப்பறை பயன்படுத்தும் பழக்கத்தை தக்க வைக்க இயலும். எனவே, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதன் மூலமாகவே இந்த நோக்கம் சாத்தியமாகும். மேற்படி வழியில், மாநில மற்றும் மாவட்ட அளவில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக் கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் புறநோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துச் சீட்டில் கழிப்பறை பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை செய்தல், பாடப் புத்தகங்களின் அட்டைகளில் சுகாதாரம் குறித்த தகவல்களை அச்சிடுதல், அங்கன்வாடி நிலையங்களுக்கு வரும் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே நேரடி தகவல் தொடர்புமூலம் சுகாதாரத்தை வலியுறுத்துதல் போன்ற மாநில அரசின் முன்னோடி முயற்சிகள், தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

(இ) ஊக்குவிப்பாளர்களின் பங்கு

சுயஉதவிக் குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட சுமார் 13,800 ஊக்குவிப்பாளர்களுக்கு சமூக அணுகுமுறை பயிற்சி மற்றும் சமூக அடிப்படையிலான கண்காணிப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள்மூலம் கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள்

[2020 மார்ச் 16

மேற்கொள்ளப்பட்டுள்ளன. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தக்க வைத்தலில் பயிற்சி அளிப்பதற்கு ஊக்குவிப்பாளர்களிலிருந்து கண்டறியப்பட்ட முதன்மை பயிற்றுநர்களுக்கு ஒட்டுமொத்த தூய்மையினை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் (ODF Plus) மாநில அளவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்காண் முதன்மைப் பயிற்றுநர்கள் மாவட்ட அளவில், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைப்பதற்கும், ஒட்டு மொத்த தூய்மையினை உறுதி செய்யும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை செயல்படுத்திடவும், சுகாதார ஊக்குநர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பிற துறைகளைச் சார்ந்த களப் பணியாளர்களான ஆசிரியர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர். மேற்காணும் பிற துறை களப் பணியாளர்களுடன் ஊக்குவிப்பாளர்கள் இணைந்து கழிப்பறை பயன்பாடு, மாத விடாய் கால சுகாதார மேலாண்மை, தன் சுத்தம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை போன்றவற்றின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஊக்குவிப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்க நிதி தவிர அவ்வப்போது மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் சிறப்பாகப் பணியாற்றும் ஊக்குவிப்பாளர்கள் கண்டறியப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. ஊக்குநர்கள் செய்யும் களப் பணிகளை நிகழ்நேர அடிப்படையில் அளவிடும் வகையில் சென்னையில் உள்ள தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டு களப் பணி நடவடிக்கைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

(ஈ) களப் பணியாளர்களின் திறனை வலுப்படுத்துதல்

மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் மற்றும் தங்களின் திறமைகளை வளர்த்துகொள்ள களப் பணியாளர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படும் திறன் வளர்ப்புப் பயிற்சி மிகவும் முக்கியமானதாகும். ஒட்டுமொத்த தூய்மையினை உறுதி செய்யும் பொருட்டு, தற்போதைய நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதற்கு விரிவான திறன் வளர்ச்சி பயிற்சியினை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதற்கென மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் சுகாதாரப் பிரிவின் ஒரு பகுதியாக ‘மாநில பயிற்சி மேலாண்மை அலகு’ என்ற சுகாதாரத்திற்கென பிரத்யேகமான

ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு, அங்கு நடத்தப்படும் அனைத்துப் பயிற்சிகளிலும், சுகாதாரம் குறித்த திறன் வளர்ப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதேபோன்ற அமைப்பு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களிலும் ஏற்படுத்தப்பட்டு, மண்டல அளவில் சுகாதாரத்திற்குத் தேவையான பயிற்சிகள் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வப்பொழுது மாநில/ மாவட்ட/வட்டார அளவில், அனைத்து ஊக்குவிப்பாளர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கும் ஒட்டுமொத்த தூய்மைக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(உ) கண்காணிப்பு

சுகாதார திட்டத்தின் ஒட்டுமொத்த கண்காணிக்கும் அலுவலர், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். தரமான முறையில் கழிப்பறை கட்டுவதையும், செயல்படும் கழிப்பறையின் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யவும், வட்டார மற்றும் மாவட்ட அளவிலான உயர்நிலை அலுவலர்களால் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஊ) சுகாதார கையேடு

ஒட்டு மொத்த தூய்மையினை உறுதி செய்யும் (ODF Plus) நடவடிக்கைகள் சார்ந்த விரிவான தகவல்கள் மற்றும் பல்வேறு சுகாதார செய்திகளுடன் சுகாதார கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. முதன்மை பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளில் இந்தக் கையேடு வள ஆதார ஆவணமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும், உடல்நலம் மற்றும் சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர்களின் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு இந்தக் கையேடு பயனுள்ளதாக அமைந்துள்ளது. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினைத் தக்க வைக்கவும் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் பயன்படுத்தப்பட்டுவரும் “சுகாதாரக் கையேடு” நீர், சுகாதாரம், ஊட்டச்சத்து, பொது சுகாதாரம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகிய இனங்களில் கூடுதல் விவரங்களுடன் மேலும் செறிவூட்டப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

(எ) ஒட்டு மொத்த தூய்மையை நோக்கி (ODF Plus)

ஒட்டு மொத்த தூய்மையினை உறுதி செய்யும் நடவடிக்கைகளில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினைத் தக்க வைத்தல், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மற்றும் மலக் கசடு மேலாண்மை ஆகியவை அடங்கும். கழிப்பறைப் பயன்பாட்டினை தொடர்ச்சியாக கண்காணிப்பதன் மூலமாகவும் நேரடி தகவல் பரிமாற்றம்மூலம் சுகாதாரத் தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதன் மூலமாகவும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. திடக் கழிவை பயனுள்ள வகையில் மேலாண்மை செய்யும் பொருட்டு, பொது மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே கழிவுகளைப் பிரித்தல், திடக் கழிவு மேலாண்மையில் மறுத்தல், குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி கோட்பாடுகளைக் கடைபிடித்தல், நெகிழிக்கு பதில் மாற்றுப் பொருளை பயன்படுத்துதல் மற்றும் அபாயகரமான கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் கையாளுதல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது முக்கியமானதாகும். கழிவுநீரை மேலாண்மை செய்வதற்கு தனிநபர் இல்ல மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழிகள் கட்டப்பட்டுள்ளன. மலக் கசடு மேலாண்மைக்காக, மலக் கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடும் பொருட்டு, சிறந்த தொழில்நுட்ப திட்டம் தயாரித்திட தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

(ஏ) சுகாதார நிலையை உயர்த்துவதில் மாணவர்களின் பங்கு

மாணவர்களிடையே தன் சுத்தம் மற்றும் பாதுகாப்பான சுகாதாரப் பழக்கத்தினை கற்பிக்கும் வகையில், பள்ளிகளில் ‘உடல் நலம் மற்றும் சுகாதாரக் குழுக்கள்’ உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், சுகாதாரம் தொடர்புடைய தலைப்புகளில் பேச்சுப் போட்டி, படம் வரைதல், கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது மாவட்ட/வட்டார/அளவிலான அலுவலர்கள் மூலமாக பரிசுகள் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 16]

சமூகத்தினிடையே மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதன்மூலம் சிறந்த மற்றும் தூய்மையான சுற்றுச் சூழலை உருவாக்கும் நோக்கில் கல்லூரி மாணவர்களுக்கு, சமூக ஈடுபாட்டுப் பயிற்சிகள்/ஊரக பயில்நிலை திட்டங்கள் (Rural Internship programme) நடத்தப்பட்டு வருகின்றன. இதில், கல்லூரி மாணவர்கள்/தேசிய நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வலர்கள், கிராம அளவில் சுகாதார ஊக்குவிப்பாளர்கள் மற்றும் இதர களப் பணியாளர்கள் ஆகியோர்களுடன் இணைந்து, சுகாதாரத்தை ஊக்குவிக்கவும், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளான குப்பைகள் உற்பத்தியாகும் இடத்திலேயே பிரித்தல், வீடுகளில் உரக்குழி அமைத்தல், கழிவு நீர் மேலாண்மைக்கு உறிஞ்சிக் குழிகள் அமைத்தல் போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ) ஊரக சுகாதார கொள்கை—ஒரு முன்னோக்கிய பாதை

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தொடர்ந்து தக்க வைத்திட பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும், திட மற்றும் திரவக் கழிவுகளை திறம்பட நிருவகிக்க முறையான செயல்பாட்டுத் திட்டத்தையும் உள்ளடக்கிய மாநில அரசால் கொண்டு வரப்பெற்ற “ஊரக சுகாதார கொள்கை”யின்மூலம் சுகாதாரத்தினை மேம்படுத்தி எழில்மிகு வகையில் ஊரகக் கிராமங்களைப் பராமரித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பாதுகாப்பான சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதன்மூலம் "முழு சுகாதார தமிழகம்" என்ற நிலையை அடைவதற்கு உதவுவதுடன், ஆரோக்கியமான, தூய்மையான மற்றும் பசுமையான சமுதாயத்தை உருவாக்கிட இந்தக் கொள்கை தெளிவான வழிகாட்டுதல்களை அளித்துள்ளது.

3.11. ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்

திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள்

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுடன்கூடிய திடக் கழிவு மேலாண்மைத் திட்ட அமைப்புகள் அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளிலும் முழுமையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. திடக் கழிவு மேலாண்மைத் திட்டச் செயல்பாடுகளில், தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு,

அவர்கள் வீடு வீடாக குப்பைகளைச் சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்திட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குப்பைகளைச் சேகரித்தல், பிரித்தல் மற்றும் பாதுகாப்பாக அப்புறப்படுத்துதலுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான குப்பைகளைப் பிரித்தல் மற்றும் சேமித்து வைப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பைத் தொட்டிகள், குப்பைகளைக் கொண்டு செல்ல மூன்று சக்கர மிதி வண்டிகள்/தள்ளு வண்டிகள் முதலியன வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடக் கழிவுகள் மக்கும்/மக்காத குப்பைகளாகப் பிரிக்கப்பட்ட பின்னர் அகற்றப்படுகின்றன. திடக் கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்காக ஒவ்வோர் ஆண்டும் ரூ.206.04 கோடி நிதி மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 66,130 தூய்மைக் காவலர்கள் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்மூலம் வெளி ஆதார முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளின் சிறப்பு தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக, கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளான மின்கலம் பொருத்தப்பட்ட தள்ளு வண்டிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் தங்களது கள ஆய்வின்போது திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவதை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிக்கின்றனர். தினந்தோறும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவது மற்றும் தூய்மைக் காவலர்களின் அன்றாட வருகை ஆகியவை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் இத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்கள்

நகர்ப்புறத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகளில் உற்பத்தியாகும் திடக் கழிவுகளை சிறந்த முறையில் கையாள வேண்டி, சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்களை அமைக்க தமிழக

2020 மார்ச் 16]

அரசால் ஆணை வெளியிடப்பட்டு உரிய வழிகாட்டி நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பெரிய கிராம ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சி/நகராட்சிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள சுமார் 300 கிராம ஊராட்சிகளில் மேற்குறிப்பிட்ட சிறிய அளவிலான உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம்

ஊரகப் பகுதிகளில், கழிவு நீரை திறம்பட மேலாண்மை செய்திடவும், வீடுகளில் உள்ள சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்தும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கைப் பம்பு போன்ற பொது இடங்களிலிருந்தும் வெளியேறும் கழிவுநீரை கையாளவும், திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளான தனிநபர் உறிஞ்சுக் குழிகள் மற்றும் சமுதாய உறிஞ்சிக் குழிகள் அமைக்கும் பணிகள் 2017-2018 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், இதுவரை 5.25 இலட்சம் தனிநபர் உறிஞ்சிக் குழிகள் மற்றும் 75,000 சமுதாய உறிஞ்சிக் குழிகள் ரூ.496.32 கோடி மதிப்பீட்டில் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் சாலைகள்/தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கழிவு நீர் தேங்குவது தடுக்கப்படுவதுடன் நீர் வாயிலாக நோய்கள் பரவுவது குறைக்கப்பட்டுள்ளது.

3.12. பள்ளிக் கழிப்பறைகள் பராமரித்தல், வகுப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மைப்படுத்துதல்

மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும் அவர்களது உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தைப் பேணுவதிலும் சுகாதார வசதிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரகப் பகுதிகளிலுள்ள 28,031 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் 6,916 அரசுப் பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்கு தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதை உறுதி செய்ய அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசுப் பள்ளிகளிலுள்ள பள்ளிக் கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி

[2020 மார்ச் 16

அளவிலான கூட்டமைப்பு அல்லது இதர தனியார் நிறுவனங்கள் மூலமாக வெளி ஆதாரம் (outsourcing) முறையில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கும், 2015-2016 முதல் 2018-2019 வரை மாநில அரசால் ரூ.202.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டு அரசு ரூ.64.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/ நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் பள்ளிக் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும், வகுப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தினைத் தூய்மைப்படுத்துவதற்கும் உத்தரவிட்டுள்ளது.

வெளி ஆதாரம்மூலம் ஈடுபடுத்தப்படும் துப்புரவு பணியாளர்கள் வழக்கமான சுத்தம் செய்யும் பணியோடு, கிராம ஊராட்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தூய்மைக் காவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ள மஸ்தூர்களைக் கொண்டு, 2 மாதத்திற்கு ஒரு முறை (அல்லது) காலாண்டு/ அரையாண்டு/வருடாந்திர தேர்வு விடுமுறைக்குப் பின்னர் மற்றும் பள்ளி திறக்கப்படும் முன்னர், பள்ளி வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை ஒட்டுமொத்தமாக சுத்தம் செய்திட வேண்டும். ஒட்டுமொத்த சுத்தப்படுத்தும் பணியினை மேலே குறிப்பிடப்பட்ட முன்னரே தீர்மானிக்கப்பட்ட நாட்களைத் தவிர, தேவையின் அடிப்படையிலும் ஒட்டு மொத்த சுத்தப்படுத்தும் பணியை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டும் இத்திட்டம் ரூ.64.26 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.13. தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்-குடிமராமத்து

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன ஏரிகள், குளங்கள்/ ஊருணிகள் போன்றவற்றை புனரமைக்கும் பொருட்டும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பொருட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் 20-7-2019 அன்று தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் குடிமராமத்து என்ற மக்கள் இயக்கத்தை 2019-2020 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்துள்ளார்.

2020 மார்ச் 16]

1. திட்டச் செயலாக்கம்

மேற்படி இயக்கத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 5,000 ஊராட்சி ஒன்றிய சிறுபாசன ஏரிகளும், கிராம ஊராட்சிகளில் உள்ள 25,000 குளங்கள்/ குட்டைகள் மற்றும் ஊருணிகள் போன்ற நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பொருட்டும் ரூ.1,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை நிலை எண் 96, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி-1)த் துறை, நாள் 26-7-2019 வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி நீர்நிலைகளை எந்திரங்கள்மூலம் தூர் வாரவும், கரைகளை பலப்படுத்தவும் மாநில அரசு நிதி ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நீர் நிலைகளில் உள்ள மதகுகள், கலங்குகள், நீராடு துறை (Bathing ghat), சிறு குளம் (baby pond), கழிமுகம் (inlet), புறமதகு (outlet) ஆகிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியில் ரூ.750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. திட்டக் கூறுகள்

அ. ஊரக நீர்நிலைகளான சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள் /குட்டைகள் ஊருணிகளை எந்திரங்கள்மூலம் தூர்வாருதல் மற்றும் கரைகளைப் பலப்படுத்துதல்

ஆ. மதகுகள், கலங்குகள், நீராடு துறை (Bathing ghat), சிறு குளம் (baby pond), கழிமுகம் (inlet), புறமதகு (outlet) போன்ற கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல்

2.1 சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள்

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசன ஏரிகள் மற்றும் கிராம ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் / குட்டைகள் மற்றும் ஊருணிகளை விரிவான முறையில் புனரமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்மூலம் குக்கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டினை களையவும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திடவும், சிறுபாசன ஏரிகளின் முழு கொள்ளளவினை மீட்கவும், நீர்நிலைகளில் அதிகப்படியாக வழிந்தோடும் நீரினைத் தடுத்திடவும், குடிநீர் மற்றும் விவசாயத்

[2020 மார்ச் 16

தேவைகளுக்கான நீரினை சேமித்து முறைப்படுத்தி தடையில்லா குடிநீர் விநியோகம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலம் கிராமப்புற விவசாயிகளின்நீண்டகாலகோரிக்கைகள்நிறைவேற்றப்பட்டுள்ளன.

3. 2019-2020 ஆம் ஆண்டின் திட்டச் செயலாக்கம்

2019 ஆம் ஆண்டின் பொதுப் பணித் துறையின் விலைப்புள்ளி பட்டியல் விகிதங்களின் அடிப்படையில் சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளில் தூர்வார/ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊரக நீர்நிலைகளின் எண்ணிக்கை, இடம், பரப்பளவு மற்றும் தொழில்நுட்ப விவரங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் நோக்குடன் ஊரக நீர்நிலைகளில் ஒரு விரிவான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒரு கைபேசி செயலி (RRWB version 1.6) கீழ்க்காணும் இனங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது:

- சிறுபாசன ஏரிகள், குளங்கள்/குட்டைகளைப் புனரமைக்க குடிமராமத்து திட்டச் செயலாக்கம் முதல் பணி முடிவுறும் தருவாய் வரை சீரிய முறையில் கண்காணிக்கவும்,
- சிறுபாசன ஏரிகள், ஊருணிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் போன்ற நீர் நிலைகளைத் தேர்வு செய்யவும்,
- விரிவான திட்ட அறிக்கை மற்றும் முன் அளவீடு ஆகியவற்றை கண்காணிக்கவும்
- நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, பணிகளின் தொடக்க நிலை மற்றும் முடிவுற்ற பணிகளின் அளவீடுகளை கண்காணிக்கவும்
- ஒன்றிய, உட்கோட்ட மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்ட விவரங்களை மதிப்பாய்வு செய்தல்.
- பணிகள் மற்றும் நிதி முன்னேற்றத்தை கண்காணிக்கும் பொருட்டும் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளிலுள்ள 208 சிறுபாசன ஏரிகள் மற்றும் 3,636 குளங்கள்/குட்டைகளையும் மேம்படுத்தவும்/புதுப்பிக்கவும் ஊராட்சி ஒன்றியம் மற்றும்

2020 மார்ச் 16]

மாவட்ட ஊராட்சிகளின் மாநில நிதி குழு மானியம் (SFC) ரூ.300 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதனால் மழைக் காலங்களில் கிராமப்புறங்களிலுள்ள நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்தி, நீர்ப்பாசனப் பகுதிகளை அதிகரித்து, கிராமப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

3.14. சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுத்திடும் வகையில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், 2003-2004 ஆம் ஆண்டு, சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கென சிறப்புத் திட்டமாக சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முறையே ரூ.700 இலட்சம் மற்றும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், 2017-2018 ஆம் ஆண்டு முதல் மேற்படி மாவட்டங்களில் தேவை மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிதியைப் பகிர்ந்தளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித்திட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 16

4. மத்திய அரசு திட்டங்கள்

4.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமானது ஊரக தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பினையும் மற்றும் வறுமை ஒழிப்புக்கு எதிராகவும், சட்டப்பூர்வ உரிமைகள் அளிக்கும் விதமாகவும் உள்ளது. இத்திட்டமானது, ஒவ்வொரு நிதியாண்டிலும், 36 ஊரக மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் திறன் சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓராண்டில் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க உறுதி செய்கிறது. ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவர்களுடைய அடிப்படை உரிமையான சமத்துவ உரிமை மற்றும் வேலை பெறும் உரிமையை அளிக்கும் விதமாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே “வேலை பெறும் உரிமையை” உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்க்குறிப்பிட்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன:

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துகளை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கான அடிப்படை வளத்தை வலுப்படுத்துதல்.

இ) சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்குவதை உறுதி செய்தல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறைகளை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் முதலில் இத்திட்டம் 6 ஊரக மாவட்டங்களில் 2-2-2006-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், படிப்படியாக மீதமுள்ள 25 ஊரக மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

2020 மார்ச் 16]

திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1) பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

(i) வேலை அட்டை பெறுவதற்கான (Job card) உரிமை

(ii) வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(iii) வேலையில்லாப் படி பெறுவதற்கான உரிமை

(iv) தேவையான பணிகளை தொகுத்து திட்டமிடும் உரிமை

(v) 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

(vi) பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை

(vii) அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

(viii) பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

(ix) காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீட்டு உரிமை

(x) குறித்த காலத்திற்குள் குறைகள்மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணி வாரம் என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுகிறது.

3) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக பணி வாய்ப்புகள் வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, அனைத்து தொகுப்புகளிலும் கூடுதலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I-ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஒரு வயது வந்த நபர்

1 மணி நேர உணவு இடைவேளையுடன்கூடிய 8 மணி நேர பணிக்கு பெறக்கூடியதற்கு (அதாவது 7 மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

5) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்புப் பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6) ஒப்பந்ததாரர்கள் அல்லது உடல் உழைப்பை அப்புறப்படுத்தும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை. எனினும், கீழ்க்காணும் பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தலாம்:

(அ) கிணறுகள் தோண்டுதல் மற்றும் ஆழப்படுத்துதல் பணிகள்

(ஆ) கிராம சாலைகள் அமைத்தலில் 15-லிருந்து 23 செ.மீ. வரை மண்கரை அமைக்க சரியான அளவில் அமைத்து நிலைப்படுத்துதல்

(இ) கிராம சாலைகள் அமைத்தலில் கிராவல்/முரம் 15-லிருந்து 20 செ.மீ. வரை சரியான விகிதத்தில் நிலைப்படுத்துதல் பணிகள்

(ஈ) சாலைகள் அமைக்கும் பணிகளில் சிமென்ட் கலவைகளை கலக்குதல் மற்றும் இணைப்புகள் உள்ள இடங்களில் சரியான அளவில் வெட்டி எடுத்தல்

(உ) சிமென்ட் கான்கிரீட் மேற்கூரை, தூண்கள், பீம்கள் மற்றும் மேற்கூரை போன்ற கட்டட கட்டுமானப் பணிகள்

(ஊ) உலர்சாம்பல் மற்றும் அழுத்தப்பட்டு நிலைப்படுத்தப்பட்ட செங்கற்கள் உற்பத்தி பணிகள்

(எ) காடு வளர்ப்பு பணிகளில் நிலத்தை துளைக்கும் இயந்திரங்களை ஈடுபடுத்துதல்

7) திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம்,

2020 மார்ச் 16]

திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியம், மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் பிரிக்கப்படுகிறது.

8) அனைத்து ஊராட்சிகள் மற்றும் முகமைகள்மூலம் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் மற்றும் பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.

9) அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கு பொதுப் பணித் துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

10) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பயனாளியும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளனர். ஒவ்வொரு 5 ஆண்டிற்கும் வேலை அட்டை புதுப்பிக்கப்படுகிறது. 1-4-2017-லிருந்து 5 வருடங்களுக்கு செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயல்படும் (active) தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

11) 2017-2018 ஆம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

12) அனைத்து ஊராட்சிகளிலும் மத்திய அரசால் பரிந்துரை செய்யப்பட்ட ஏழு சட்டப்பூர்வ பதிவேடுகளுடன் வேலை அடையாள அட்டைக்கான இருப்புப் பதிவேடும் கூடுதலாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

13) 2019-2020 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் 1-4-2019 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி ஒரு நாளுக்கு ரூ.229 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

14) அரசாணை (நிலை) எண் 25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி1) துறை நாள் 27-2-2014-ன்படி மகாத்மா காந்தி தேசிய

[2020 மார்ச் 16

ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர் முழு ஊதியம் பெற 37 கன அடி மண் வேலை செய்ய வேண்டும்.

15) பணித் தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும்பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

16) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன.

17) 7-11-2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் நேரடியாக திட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

18) கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.

19) கிராம சபை கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளைத் தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

20) வேலை நடைபெறும் அனைத்து பணித்தளங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன்கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படுகிறது.

21) குறைகளைத் தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) "1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

2020 மார்ச் 16]

அட்டவணை 4.1

மத்திய அரசின் 2019-2020 ஆம் ஆண்டு முக்கிய சுற்றறிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

வகைப்பாடு – அ	வகைப்பாடு – ஆ	வகைப்பாடு - இ	வகைப்பாடு - ஈ
இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப் பணிகள்	நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள்/ தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல்	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுயஉதவிக் குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்புகளை அமைத்தல்	ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்
• நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகளான நீர் தடுப்புச் சுவர், மண்அணைக்-கட்டுகள், நிறுத்த அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் கட்டுவதன்மூலம் நிலத்தடி நீரினை அதிகப்படுத்தலாம் மற்றும் மேம்படுத்தலாம். குடிநீர் ஆதார அமைப்பு உள்ளிட்ட நிலத்தடி நீரினை மேம்படுத்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. • நீர் வடிப்பகுதி மேலாண்மைப் பணிகளான சம உயர அகழி வெட்டுதல், படியடுக்குத் தளமேடையமைத்தல், சமமட்ட வரப்பு அமைத்தல், வலைப்பின்னல் தடுப்பணை, வலைகம்பி அமைப்புகள்/ நீர்ப்பாசன மேலாண்மை போன்ற சிறப்பான பணிகள்.	• கிணறுகள் தோண்டுதல், பண்ணைக் குட்டைகள் மற்றும் இதர நீராதாரப் பணிகள்மூலம் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன்மூலம் பத்தி எண் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளின் நிலங்களை மேம்படுத்துதல் • தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல். • வகைபாடு 1 பத்தி எண் 5-ல் குறிப்பிட்டுள்ள பயனாளிகளின் தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்	• வேளாண்மை உற்பத்தியினை பெருக்கும் வகையில் நாடா மற்றும் மண்புழு போன்ற உயிர் உரங்கள் தயாரிக்கும் அலகுகள் அமைத்தல் மற்றும் வேளாண் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு சேமிப்பு கூடங்கள் அமைத்தல். • சுயஉதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல்.	• உணவு தானிய சேமிப்பு கிடங்கு அமைத்தல் • சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல் • விளையாட்டு மைதானம் அமைத்தல் • பேரழிவினை தடுக்கும் ஆயத்தப் பணிகள் மற்றும் சாலைகளை சீரமைத்தல் • வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு பணிகள் உள்ளிட்ட பொது உட்கட்டமைப்பு பணிகள் • கிராம ஊராட்சி அலுவலகங்களுகான அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் • மகளிர் சுயஉதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல் • புயல் நிவாரணக் கூடங்கள்

வகைப்பாடு – அ	வகைப்பாடு – ஆ	வகைப்பாடு - இ	வகைப்பாடு - ஈ
இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப் பணிகள்	நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள்/ தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல்	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுயஉதவிக் குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்புகளை அமைத்தல்	ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்
• மிக நுண்ணிய மற்றும் சிறு நீர்ப்பாசனப் பணிகள் மற்றும் பாசனக் கால்வாய்கள் உருவாக்குதல் புனரமைத்தல் மற்றும் பராமரித்தல். • பாரம்பரிய நீராதாரங்களான பாசன குளங்கள், இதர நீர்நிலைகள் போன்றவற்றை தூர் வாருதல் மற்றும் படிக்கட்டு கிணறுகளை பாதுகாத்தல் • காடு வளர்ப்பு, மரம் நடுதல் மற்றும் வனப் பகுதி, சாலையோரங்கள், கால்வாய் வரப்புகள், குளங்களின் ஓரங்கள் மற்றும் ஆற்றுப்படுகைகளில் பத்தி எண் 5-ல் இடம் பெற்றுள்ள குடும்பங்களுக்கு பயன்படுத்துதல் உரிமையுடன் பழ மரக் கன்றுகள் நடுதல் போன்ற தோட்ட வளர்ப்பு.	• நீடித்து நிலைத்து வளர்கிற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற புல்களை வளர்த்து மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல் • மூங்கில், இரப்பர் மற்றும் தென்னை மர வளர்ப்பு. • மாட்டுக் கொட்டகை ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, அமைத்தல், கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்து கால்நடைகளை பாதுகாக்க உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல். • மீன் உலர் களம், சேமிப்பு வசதிகள், பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் போன்ற மீன்வளர்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மீன்வளர்ப்புக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் • உயிர் உரங்கள் (நாடாப், மண்புழு உரங்கள்) தயாரித்தல்		• அங்கன்வாடி மைய கட்டடங்கள் • கிராம சந்தை மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல் • சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொண்டு தயாரித்தல். • இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல்.

2020 மார்ச் 16]

வகைப்பாடு – அ	வகைப்பாடு – ஆ	வகைப்பாடு - இ	வகைப்பாடு - ஈ
இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப் பணிகள்	நலிவுற்ற இனத்திற்கான பொதுச் சொத்துக்கள்/ தனி நபர் சொத்துக்களை உருவாக்குதல்	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுயஉதவிக் குழுக்களுக்கான பொது உட்கட்டமைப்புகளை அமைத்தல்	ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்
• நீடித்து நிலைத்து வளர்கின்ற புல்களான ஸ்டைலோ மற்றும் வெட்டிவேர் போன்ற மேய்ச்சல் நிலத்தினை மேம்படுத்துதல் • மூங்கில், இரப்பர், மற்றும் தென்னை மர வளர்ப்பு. • பொது இடங்களில் நில மேம்பாட்டுப் பணிகள்	• மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டுவதற்கான திறன்சாரா செலவினத்தினை மேற்கொள்ளல் • மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகளில் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்		

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியினை ஏற்படுத்துதல் (Sustainable Development Goals)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்களின்மூலம், 'ஐக்கிய நாடு சபையின் நிலைத்த வளர்ச்சி'-யின் நான்கு இலக்குகளான 'பசியின்மை', 'வறுமையின்மை', 'பருவநிலை மாற்றம்' மற்றும் 'ஆண், பெண் சமத்துவம்' போன்றவற்றை அடைய வழிவகை செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஆண் மற்றும் பெண் அவர்கள் செய்த பணி அளவீடுகளுக்கு ஏற்ப சம ஊதியம் வழங்கப்படுகிறது.

நீடித்த வளர்ச்சியின் முதல் மற்றும் முக்கிய இலக்கான வறுமை இன்மையை அடைய ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஊரகப் பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதன்மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி பசியினை போக்க உதவுகிறது.

[2020 மார்ச் 16

தனி நபர் மற்றும் பொது நிலங்களில் மரங்கள் நடுதல்மூலம் காலநிலை மாறுபாடு மற்றும் அதன் நிகழ்வுகளில் இருந்து நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், பெருமளவு மரம் வளர்ப்புத் திட்டத்தின்மூலம் 71 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பூங்காக்கள், பொது இடங்கள் மற்றும் சாலையின் இரு ஓரங்களிலும் மரங்கள் நடுவதன்மூலம் கார்பன் வரவு (carbon credit) அதிகரிக்கப்படுகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகள், சிறுபாசன குளம், குட்டை, கால்வாய்கள், ஊருணிகள் மற்றும் பிற நீராதாரங்கள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்வதன்மூலம் நிலத்தடி நீர் நிலையாக தக்கவைக்கப்பட்டு, காலநிலை மாறுபாட்டினை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை வள மேலாண்மைப் பணிகளான தடுப்பணைகள் கட்டுதல், அகழிகள் அமைத்தல், நிலமேம்பாட்டுப் பணிகள், பாரம்பரிய நீராதாரங்களை பாதுகாத்தல் போன்ற வகைபாடு 'அ' பிரிவில் உள்ள பணிகள் மொத்த செலவினத்தில் 65 சதவிகிதத்துக்கு குறையாமல், ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ள சிறப்பு முயற்சிகள் கால நிர்ணய வேலை அளவீடு

- பலவகையான வேலைகளுக்கு உரிய கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion Study) மேற்கொள்ளப்பட்டு, திருத்திய ஊரக விலைப்புள்ளி பட்டியலின்படி, பல்வேறு பணிகளுக்கு செய்ய வேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

ஊரகப் பகுதிகள் இணைப்பு (Rural Connectivity)

- தமிழகத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு பகுதிகளில் உள்ள சுகாதாரம், கல்வி, வேலை, சந்தை மையங்கள் மற்றும் இதர சேவைகளை ஊரகப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெறத்தக்க வகையிலான இணைப்பினை ஏற்படுத்தும் பொருட்டு ஓரடுக்கு மெட்டல் சாலைகள் அமைக்கும் (WBMGR-II) பணிகள் ஊரக இணைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் நிதியாண்டில்,

2020 மார்ச் 16]

2000 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி அமைக்கப்படும் ஓரடுக்கு சாலைகள் மத்திய, மாநில அரசுகளால் செயற்படுத்தப்படும் இதர திட்டங்களின் வாயிலாக தார்ச் சாலைகளாக மாற்றப்படுகின்றன.

உறிஞ்சுக் குழி (Soak Pit)

- ஊரகப் பகுதிகளில், கழிவு நீரை மிகச் சிறப்பாக மேலாண்மை செய்திடவும், குடியிருப்பு பகுதிகளில் திரவக் கழிவுகள் புகுவதை தடுத்திடவும், கழிவு/சாக்கடை நீரை ஒவ்வொரு வீட்டிலும் மேலாண்மை செய்திடல் மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு வீட்டிலும்/தொகுப்புகளிலும் உறிஞ்சுக் குழி அமைப்பதினால், தெருக்களில் கழிவு நீர் ஓடுவது தடுக்கப்படுவதுடன் நீர் சேமிப்பு அமைப்பாகவும் செயல்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 25,000 சமுதாய உறிஞ்சுக் குழிகள் மற்றும் 1,75,000 தனி நபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர நீர் கழிவு மேலாண்மையின்கீழ், தொகுப்புகள் அளவில் 100 கிடைமட்ட வடிகட்டி அமைக்கும் பணிகளும் மற்றும் 400 செங்குத்து வடிகட்டி அமைக்கும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடங்களுக்கு சுற்றுச் சுவர்/வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டுதல் (Compound Wall)

- பள்ளி மாணவர்களை வெளி நபர்களிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்திடவும், பள்ளி சொத்துகளை அழிவிலிருந்தும், வெள்ள அபாயங்களிலிருந்தும் பாதுகாத்திடவும், மாணவர்கள் கல்வி கற்று வளர்ந்திட பாதுகாப்பான சுற்றுச்சூழலை ஏற்படுத்தும்பொருட்டும், ஊரகப் பகுதிகளில் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்களுக்கு சுற்றுசுவர்/வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்து தர திட்டமிட்டு, 2019-2020 ஆம் ஆண்டில் 250 கி.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர்/வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 16

தடுப்பணைகள் கட்டுதல்(Check Dam)

- நிலத்தடி நீரினை அதிகரிக்கும் விதமாக அரசு பண்ணைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள குளங்கள், ஊருணிகள் மற்றும் குட்டைகளை தூர்வாருதல் போன்ற பணிகளை செய்து வருகிறது. எனவே, மழை நீரினை சேமிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் அளவை மீள்நிரப்புவதற்கும் 2019-2020 ஆம் ஆண்டில் இயற்கை வள மேலாண்மைப் பணிகளின் ஒரு பகுதியாக 10,000 தடுப்பணைகள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- பாறை, சிமென்ட், கான்கிரீட் மற்றும் கம்பிவலைத்தடுப்பணை கட்டும் பணிகளை மேற்கொண்டு வாய்க்கால் வழியாக ஓடும் நீரோடைகளில் தண்ணீர் சேமித்து வைக்கப்படுகின்றன. வாய்க்கால், கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்படும் இந்த சிறிய தடுப்பணைகளானது மழைக்காலங்களில் ஓடும் நீரினை தடுத்து நிலத்தடி நீரினை செறிவூட்டச் செய்யும்.

2019-2020 ஆம் ஆண்டின் சிறப்பு முயற்சிகள்

மாணவ, மாணவியருக்கு பள்ளிக் கழிப்பறை கட்டுதல்

- பள்ளி என்பது குழந்தைகளுக்கு அறிவாற்றல், சிந்திக்கும் திறன் மற்றும் சமூக எண்ணங்களை உருவாக்கும் இடமாகும். சிறந்த பள்ளிக் குழந்தைகளுக்கு சுகாதாரம் மிக முக்கியமான காரணியாகும். சுகாதாரத்தினை நிலைநிறுத்துவதற்கு ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் பள்ளிக் கழிப்பறை இருப்பது ஓர் அடிப்படை உட்கட்டமைப்பாகும். சில பள்ளிகளில் பயிலும் பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் தேவையான கழிப்பறைகளின் எண்ணிக்கைகள் இருப்பது இல்லை. எனவே, ஊரகப் பகுதிகளில் அவசியம் மற்றும் தேவைப்படும் இடங்களில் கூடுதலாக பள்ளிக் கழிப்பறைகள் கட்டப்பட வேண்டும். ஊரகப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு ஆரம்ப பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளில் 400 கழிப்பறைகள் மாணவர்களுக்கும் மற்றும் 600 கழிப்பறைகள் மாணவிகளுக்கும் தனித்தனியாக

2020 மார்ச் 16]

மொத்தம் 1,000 பள்ளிக் கழிப்பறைகள் 2019-2020 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் அம்மா விளையாட்டு மையம் அமைத்தல்

- மாநிலத்தில் உள்ள ஊரக இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவித்து அதன் வழியாக உடல் வலிமையுடன் மனதினை வலிமைப்படுத்தவும் மற்றும் நட்புடனான போட்டிகளை வளர்க்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கியுள்ளது. இதனால் இளைஞர்களின் ஆளுமை திறனில் நேர்மறையான ஒரு தாக்கம் ஏற்படுத்தப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை பிறத் துறையுடன் ஒருங்கிணைத்து கைப்பந்து திடல், கபடி திடல் மற்றும் மட்டைப்பந்து அல்லது பூப்பந்து திடல் ஆகிய மூன்று திடல்களையும் கொண்ட 12,524 அம்மா விளையாட்டு மையம் 2019-2020-ல் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

உலர்களம் அமைத்தல்

- அரிசி, மக்கா சோளம், தானியங்கள் மற்றும் பிற சிறுதானியங்கள் போன்ற விவசாய உணவு பொருட்கள் அறுவடை செய்யும்பொழுது வைக்கோல் மற்றும் உமி போன்ற பொருட்கள் கலந்திருக்கும். அறுவடை செய்யப்பட்ட பிறகு உணவு தானியங்கள், வைக்கோல் போன்ற பொருட்களிலிருந்து கதிரடித்தல்மூலம் பிரிக்கப்படும். பொதுவாக, விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள திறந்த வெளி தரைப் பகுதியில் இக்கதிரடித்தல் பணியினை விவசாயிகள் மேற்கொள்வர். இதன்மூலம் விவசாய நிலங்களில் உள்ள சிறிய கற்கள் உணவு பொருட்களுடன் கலப்பதற்கு வாய்ப்புள்ளது. மேலும், விவசாயிகள், விளை பொருட்களுக்கு அதிக விலை பெறும்பொருட்டு உலரவும் வைப்பர். ஆனால், விவசாய நிலத்தின் ஈரப்பதத்தினாலும், கற்களினாலும் விளை பொருட்களின் தரம் குறைவதோடு அதற்கான விலையும் குறைகிறது. எனவே, கதிரடிப்பதற்கும் மற்றும் விளை பொருட்களை உலர வைப்பதற்கும் உலர்களம் மிகவும் பயனுள்ளதாகும். ஊரகப் பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள ஊராட்சி புறம்போக்கு பகுதிகளில் கட்டப்படும் உயர்ந்த சிமெண்ட்,

கான்கிரீட் தளங்களே உலர்களங்களாகும். 2019-2020 ஆம் ஆண்டில் 100 உலர் களங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

பேவர் பிளாக் சாலைகள்

- பேவர் பிளாக் சாலைகள் என்பது அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற ஊரக இணைப்புச் சாலைகளில் ஒன்றாகும். இச்சாலைகள் மழை காலங்களில் ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதுகாப்பாக செல்ல ஏற்றதாகும். 2019-2020 ஆம் ஆண்டில் 300 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் பதிக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

குறு பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் (குறுக்கு வடிகால் கட்டமைப்புகள்)

- ஊரகப் பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படா வண்ணம், சாலையின் ஒருபுறமிருந்து மற்றொருபுறம் வெள்ள நீர் மற்றும் ஓடை நீரைக் கடத்திட குறு பாலங்கள், சிறு பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் போன்ற வடிகால் கட்டமைப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 700 குறு பாலங்கள், 250 சிறிய பாலங்கள் மற்றும் 100 தரைப் பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நீர் பாதுகாப்பு மற்றும் பருவநிலையினை அதற்கேற்றவாறு பொருத்தமாக்கிக் கொள்ளுதல் (WASCA)

· மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை ஒருங்கிணைத்து அறிவியல் திட்டமிடல் மற்றும் நீர் சார்ந்த பணிகளை புதிய தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்துதல் ஆகியவைமூலம் நீர் பாதுகாப்பு மேலாண்மை செய்யப்படுகிறது. மத்திய ஊரக அமைச்சகம் மற்றும் GIZ நிறுவனம் இணைந்து ஊரகப் பகுதிகளில், நீர் பாதுகாப்பு மற்றும் பருவநிலையினை அதற்கேற்றவாறு பொருத்தமாக்கிக் கொள்ளுதல் (WASCA) என்ற இருதரப்பு திட்டத்தினை, ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2022 வரை செயற்படுத்த உள்ளது. இத்திட்டம் இந்திய அரசு மற்றும் ஜெர்மன் அரசு என்ற இரண்டு அரசாங்கத்தாலும் அனுமதிக்கப்பட்டு, இந்தியாவில் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் மற்றும்

தமிழ்நாடு போன்ற 4 மாநிலங்கள் மாதிரி மாநிலங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- திட்டமிடல் மற்றும் நிதி வழிமுறை, ஒரு மாநிலத்திற்கு 2 மாவட்டங்களில் நீர் மேலாண்மை நடவடிக்கைகளை நிரூபித்தல் மற்றும் பலப்படுத்துதல் மற்றும் தனியார் துறை/CSR பங்கேற்பு போன்ற முக்கிய நோக்கத்துடன் செயற்படுத்தப்படும். தமிழ்நாட்டில், முழுமையான ஆய்வு அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு மேலாண்மை மையம் (CCCDM) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிவியல் சார்ந்த காரணிகள்மூலம் ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் இத்திட்டத்தினை செயல்படுத்த மாதிரி மாவட்டங்களாக தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. உப்பு நீர் ஊடுருவுதல் மற்றும் கடலோர மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் அதிக பருவநிலை ஆபத்துடையதும் மற்றும் மிகவும் பின்தங்கிய காரணிகளால் திருவண்ணாமலை மாவட்டம் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, சுற்றுப்புற சூழல் துறை, வனத் துறை, நீர் வளத் துறை, மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் வளத் துறை மையம் மற்றும் நீர் ஆய்வு நிறுவனம் (தரமணி), தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் துறை, தமிழ்நாடு நீர் வடிப்பகுதி மேலாண்மை, தோட்டக்கலை பணி, மீன் வளத் துறை, நபார்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், நீலகிரியில் அமைந்துள்ள மத்திய மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு மேலாண்மை மையம் (CCCDM), மாநில தொலை உணர்திறன் மையம் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் மத்திய நிலத்தடி நீர் மையம் போன்றவற்றுடன் ஒருங்கிணைத்து நீர் பாதுகாப்பு மற்றும் பருவநிலையினை அதற்கேற்றவாறு பொருத்தமாக்கிக்கொள்ளுதல் (WASCA) திட்டத்தினை செயல்படுத்தவிருக்கிறது.

[2020 மார்ச் 16

உன்னதி திட்டம்

- உன்னதி திட்டம் என்பது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தி, அதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினையும் மற்றும் தற்பொழுது அவர்கள் பெற்று வரும் பகுதி நேர வேலையினை முழு நேர வேலையாக மாற்றுவதற்கும் மற்றும் அவர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சார்ந்திருப்பதை குறைக்கவும் வழிவகை செய்கிறது.

- இத்திட்டம் தேவைப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அல்லது ஊதிய வேலைவாய்ப்பிற்கான திறனை அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துகிறது. சென்ற வருடத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 100 நாட்கள் வேலை செய்து முடிக்கப்பட்ட குடும்பங்களில் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள நபர்களுக்கு உன்னதி திட்டத்தின்கீழ் பயிற்சி வழங்கப்படும்.

- தீன் தயால் உபாத்யாயா, கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம் மற்றும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் ஊதிய வேலைவாய்ப்பிற்கான பயிற்சியையும் மற்றும் கிரிஷி விஞ்ஞான் கேந்திராக்கள்மூலம் சுய வேலைவாய்ப்பு பயிற்சியினையும் அளிக்கிறது. ஒரு நபர் ஒரு பயிற்சியினை மட்டுமே பெற முடியும். ஒரு நாளுக்கு ரூ.199 என உதவித் தொகையும் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 100 நாட்கள் வேலைவாய்ப்பினையும் பெற முடியும். இத்திட்டம் 36 ஊரக மாவட்டங்களிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார மையம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்மூலம் மத்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 100 சதவிகிதம் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

தொகுப்புகளை மேம்படுத்தும் திட்டம் (Cluster Facilitation Project)

- தொகுப்புகளை மேம்படுத்தும் திட்டம் என்பது முன்னேற விழையும் மாவட்டங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட

2020 மார்ச் 16]

இடங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புவியியல் தகவல் அமைப்பு திட்டமிடல்மூலம் பலமுனை உத்திகள் மற்றும் திறன்களைக் கொண்டு உயர்த்துவதாகும். தொகுப்பு மேம்படுத்தும் திட்டத்தினை சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்துதலுக்காக, குடிமை சமூக அமைப்புகள் (Civil Society Organisation) அல்லது குழுவிற்கான அலுவலர்கள் மனிதவள முகவர் நிறுவனங்கள் (HR Agencies) மூலம் நியமனம் செய்யப்படுவதன்மூலம் செயற்படுத்தப்படும். தமிழ்நாட்டில் 2 ஊராட்சி ஒன்றியங்கள் வீதம் 2 முன்னேற விளையும் மாவட்டங்கள் இராமநாதபுரம், விருதுநகர் ஆகியவற்றிலிருந்தும், பின்தங்கிய 1 ஊராட்சி ஒன்றியம் சிவகங்கை மாவட்டத்திலிருந்தும் என 5 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இத்திட்டம் 1-4-2020 முதல் 31-3-2023 வரை 3 வருடம் செயல்படுத்தப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தினை செயற்படுத்துவதில் மிகக் குறைவான அளவு செயல்திறன் (மனிதசக்தி நாட்கள் உருவாக்குதல், குறித்த நேரத்திற்குள் ஊதியம் அளித்தல் போன்ற பிற), அதிகளவில் ஆதி திராவிடர் மக்கள் தொகையினை கொண்டிருத்தல், பழங்குடியினர் வாழும் பகுதியினை கொண்டிருத்தல், மிகக் குறைந்த அளவு இணைப்புச் சாலைகளை பெற்றிருத்தல், நீர்ப் பாதுகாப்பு மேலாண்மைக்கான ஊராட்சி ஒன்றியங்கள் (மிக குறைந்த அளவு நீர் மற்றும் குறைந்த நீர் அளவு உள்ள பகுதிகள்) போன்ற காரணிகள்மூலம் வட்டாரங்கள் தேர்வு செய்யப்படும். தொகுப்புகளை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்துவதற்கான செலவினம், அலுவலர்கள் மற்றும் உட்கட்டமைப்பு செலவினம் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மத்திய அரசுமூலம் முழுமையாக விடுவிக்கப்படும்.

சாதனைகள்

- 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 22.80 கோடி மனித சக்தி நாட்கள், ரூ.5,242.55 கோடி மொத்த செலவினத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதல்

- 2019-2020 ஆம் நிதியாண்டில் 99.64 சதவிகிதம் ஊதியத் தொகை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை T+8-னை நிலை I ஆகவும் மற்றும் T+9-T+15-னை நிலை II ஆகவும் மாற்றியுள்ளது.

சிறந்த ஆளுமை முயற்சிகள்

மத்திய அரசின் அறிவுரைகளின்படி, மாவட்ட அளவில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ), அனைத்து உதவி இயக்குநர்கள்/ மண்டல அலுவலர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு சிறந்த ஆளுமை முயற்சிகள், வேலை அடையாள அட்டையினை புதுப்பித்தல், ஊராட்சி அளவில் 7 கட்டாய பதிவேடுகள் பராமரித்தல், பணிக்கோப்பு மற்றும் குடிமக்கள் தகவல் பலகை அமைத்தல் போன்ற சிறந்த ஆளுமை முயற்சிகள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதேநேரத்தில், மாநில அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, மாவட்ட அளவில் சிறந்த ஆளுமை முயற்சிகள் செயல்படுத்தப்படுவது கண்காணிக்கப்பட்டு மேற்பார்வையும் செய்யப்பட்டு வருகிறது.

வங்கிகள்மூலம் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல்/ மின்னணு நிதி மேலாண்மைமூலம் ஊதியம் வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பயனாளிகளுக்கு, 7-11-2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத் தொகை வரவு வைக்கப்படுகிறது.

இதைப்போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 1-4-2017 முதல் நிருவாகச் செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-PFMS) மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 மார்ச் 16]

மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) முறையை செயல்படுத்துதல்

- மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) நவம்பர் 2017 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளுடன் ஆதார் எண்களை இணைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது வங்கிக் கணக்கில் ஆதார் எண் அடிப்படையில் ஊதியம் வழங்கும் முறையில் (Aadhaar Based Payment System) ஊதியத்தினை ஈடு செய்வதற்காக தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகின்றன. ஆதார் எண்களை இணைப்பதன்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தகவல் தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் விரைவாகவும், வெளிப்படையாகவும் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படுகின்றது.

இதுவரை 2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் உள்ள 88.64 இலட்சம் செயல்பாட்டு தொழிலாளர்களில், 87.10 இலட்சம் (98%) தொழிலாளர்களின் ஆதார் எண்கள் இணைக்கப்பட்டு, ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhaar Based Payment System) ஊதியம் 75.49 இலட்சம் (85.16%) பயனாளிகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சொத்துகளுக்கு புவிக் குறியிடுதல் (Geo tagging)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், புவிக் குறியிடுதல் (Geo tagging) என்பது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சொத்துகள், புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்களை ஆய்வு செய்வதற்கு உதவுகின்றன. இதன்மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துகளை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Indian Space Research Organisation) ஓர் அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம் (National Remote Sensing Corporation) மூலம் 'புவன்' என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மத்திய ஊரக வளர்ச்சித்

துறை அமைச்சகத்தின் NREGASoft என்ற இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களை 'புவன்' மென்பொருள்மூலம் அறியலாம். NREGASoft மற்றும் புவன் மென்பொருளின் தனித்துவ சிறப்புகளை ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு 'ஜியோ நரேகா' (Geo MGNREGA) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

திட்டம் துவங்கப்பட்டது முதல் உருவாக்கப்பட்ட சொத்துகளில் 26,17,993 சொத்துக்கள் 6-3-2020 வரை புவிக்குறியீடு செய்யப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் செயலாக்கத்தில் மாநிலம் மற்றும் மாவட்டங்கள் பெற்ற தேசிய அளவிலான விருதுகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை 2018-2019 ஆம் நிதியாண்டில் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 19-12-2019 அன்று, சி. சுப்ரமணியன் ஹால், பூசா மையம், புதுடில்லியில் தேசிய அளவிலான விருது வழங்கும் விழா நடத்தப்பட்டது. அதில், தமிழ்நாட்டிற்கு தேசிய அளவிலான 2 மாநில விருதுகள், 4 மாவட்ட விருதுகள், 1 ஊராட்சி ஒன்றிய விருது மற்றும் 1 கிராம ஊராட்சி விருது ஆகியவை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டன.

மாநில விருது	மாவட்ட விருது	சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கான விருது	கிராம ஊராட்சிக்கான விருது
❖ பணிகளை முடித்ததில் சிறந்த செயல்பாடு -முதலிடம் ❖ இயற்கை வள மேலாண்மைப் பணிகளை செயல்படுத்துவதில் சிறந்த செயல்பாடு–முதலிடம்	❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்தியமை--வேலூர் ❖ குறித்த காலத்திற்குள் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதலில் சிறப்பான செயல்பாடு -திருச்சிராப்பள்ளி–முதலிடம் v பணிகள் முடித்தலில் சிறப்பான செயல்பாடு--கரூர்–இரண்டாமிடம் v சிறந்த நீர் தேக்கி வைக்கும் கட்டமைப்பினை உருவாக்கியமை--வேலூர்- இரண்டாமிடம்	❖ குறித்த காலத்திற்குள் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதலில் சிறப்பான செயல்பாடு-புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம்-முதலாமிடம்	❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்தியது-செலுகை கிராம ஊராட்சி, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்

2020 மார்ச் 16]

2020-2021 ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் மதிப்பீடு செயலாக்க முயற்சிகள்

மனித சக்தி நாட்கள் மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் தயாரிக்கப்பட்டு கிராம சபையினால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான மனித சக்தி நாட்கள் மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கிராம சபை மற்றும் சிறப்பு கிராம சபைக் கூட்டம் முறையே 2-10-2019 மற்றும் 25-10-2019 அன்று நடத்தப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகம் தொழிலாளர் வரவு-செலவுத் திட்டத்திற்கான கூட்டத்தினை 13-3-2020 அன்று நடத்தியுள்ளது.

சமூக தணிக்கை

வரையறை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கையானது, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின்மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

நோக்கம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை செம்மையாகச் செயல்படுத்துவதை உறுதி செய்யும்பொருட்டு, மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி ஊராட்சிகளிலுள்ள

கிராம சபைகளால் சமூக தணிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் வழிவகை செய்கிறது.

பணியமைப்பு மற்றும் நிருவாகம்

அரசாணை (நிலை) எண் 125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS.1) துறை, நாள் 21-12-2012-ன்படி தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கி துணை விதிகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் ஜனவரி 9, 2013 ஆம் தேதியன்று தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS.1) துறை, நாள் 27-7-2012-ன்படி, தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் 2013 ஆம் வருடம் உருவாக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி, ஓர் இயக்குநர், இரண்டு இணை இயக்குநர்கள், ஓர் உதவி இயக்குநர், மாவட்ட வள அலுவலர் மற்றும் வட்டார வள அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

மேலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (CGS.1) துறை, நாள் 27-7-2012-ன்படி, 44 மாவட்ட வள அலுவலர்கள், 31 உதவிபுரியும் அலுவலர்கள் மற்றும் 770 வட்டார வள அலுவலர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது. சமூக தணிக்கை நிகழ்வுகளை கண்காணித்தல் அதன் முடிவுகள் மற்றும் அவற்றின் மீதான சிறப்பு அறிக்கையை மாநில சமூக தணிக்கை சங்க இயக்குநருக்கு அனுப்புதல் ஆகியவை மாவட்ட வள அலுவலரின் பணிகளாகும்.

சமூக தணிக்கை வருடாந்திர நாட்காட்டியின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை பணியினை கிராம ஊராட்சி வள அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சமூக தணிக்கை மேற்கொள்வது, சமூக தணிக்கை அறிக்கையினை கிராம சபை முன்பாக சமர்ப்பித்து, உரியவாறு கிராம சபையின் ஒப்புதல் பெறுவது ஆகியவை வட்டார வள அலுவலர்களின் பணியாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் குறைந்தபட்சம் 25 நாட்கள் பணிபுரிந்த மற்றும் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களிலிருந்து 24,831 மகளிர்களை தேர்வு செய்து அவர்களுக்கு கிராம ஊராட்சி

வள அலுவலர்களுக்கான 4 நாட்கள் பயிற்சி, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கையேட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தின் திட்டச் செயலாக்கப் பகுதியானது அனைத்து ஊரகப் பகுதிகளை உள்ளடக்கிய 36 மாவட்டங்கள், 388 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகளைக் கொண்டதாகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவட்டார் வட்டாரத்திற்கு உட்பட்ட "பாலமோர்" என்ற கிராம ஊராட்சியைத் தவிர ஏனைய அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சமூக தணிக்கைப் பணி செயல்படுத்தப்படுகிறது. பாலமோர் கிராம ஊராட்சியானது முழுவதும் இரப்பர் தோட்டங்களால் சூழப்பட்டுள்ளதால், இக்கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

சமூக தணிக்கை நிகழ்வுகள்

சமூக தணிக்கை நிகழ்வுகளானது பின்வருமாறு 5 நாட்கள் மேற்கொள்ளப்படுகிறது.

நாள் – 1	(அ) வட்டார அளவிலான திட்டச் செயலாக்கத்தினர், கிராம ஊராட்சி அளவில் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆகியோர்களுடன், கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்துதல். (காலையில்) (ஆ) கிராம ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை சரிபார்த்தல். (இ) சமூக தணிக்கை குறித்து, குடியிருப்பு வாரியாக மக்களிடையே விழிப்புணர்வு கூட்டம் நடத்துதல். (மாலையில்)
நாள் - 2	தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட பயனாளிகளின் வசிப்பிடம் வாரியாக பயனாளிகளை தனித் தனியாக சந்தித்து கலந்துரையாடல் செய்தல், வேலை அட்டையினை தொடர்புடைய ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து கையொப்பம் பெறுதல், பயனாளிகளிடம் கோரிக்கை மனுக்களைப் பெறுதல்.

நாள் - 3	கள ஆய்வு மற்றும் பணிகளை கள அளவீடு மேற்கொள்ளுதல்.
நாள் - 4	சமூகத் தணிக்கை அறிக்கை தயார் செய்தல்.
நாள் - 5	சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்துதல்.

2019-2020 ஆம் ஆண்டின் சமூக தணிக்கை செயல்பாடுகள்

2019-2020 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 12,523 கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை நிறைவு பெற்றுள்ளது. மேலும், நிலுவையிலிருந்த 2,188 கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை பணி முடிக்கப்பட்டது.

2019-2020 ஆம் ஆண்டில் 24 மாவட்ட வள அலுவலர்களும் 580 வட்டார வள அலுவலர்களும் சமூக தணிக்கை பணியில் ஈடுபடுத்தபட்டனர். 2019-2020 ஆம் ஆண்டிற்கான சமூக தணிக்கை அறிக்கைகள் தொகுக்கப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (www.nrega.nic.in)

சமூக தணிக்கையின் தாக்கம்

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. மேலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவமும் அறியப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்

2020-2021 ஆம் நிதியாண்டில் 12,523 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ள விரிவான கால அட்டவணை தயார்

2020 மார்ச் 16]

செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சமூக தணிக்கை கால அட்டவணை அச்சடித்து தயார் செய்த பின்னர் அதன் நகல்கள் அனைத்து மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை), ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், இந்திய அரசு, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், புதுடில்லி மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் & பஞ்சாயத்து ராஜ் (ஹைதராபாத்) ஆகியோர்களுக்கு அனுப்பப்படும்.

மத்திய அரசு வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தேசிய சமூக பாதுகாப்பு உதவித் திட்டங்கள் (NSAP), பாரத பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY-G) மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களை 2020-2021 ஆம் வருடத்தில் சமூக தணிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

4.2. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

மத்திய அரசின் பங்களிப்பு திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், 2016-2017 ஆம் ஆண்டு முதல் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை வீடுகளில் மற்றும் மிகப் பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய நிலையான வீடு கட்டிக் கொடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ன் அடிப்படையில் கிராம சபைமூலம் பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்)கீழ் மொத்த ஒதுக்கீட்டில் 60 விழுக்காடு ஆதி திராவிடர்கள்/ பழங்குடியினர் வகுப்பினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையின வகுப்பினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட இரு இனங்களில் 5 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு வீட்டின் கட்டடப் பரப்பளவு 269 சதுர அடி ஆகும்.

[2020 மார்ச் 16

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1.20 இலட்சம் என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு 60:40 என்ற விகிதத்தில் உள்ளது (மத்திய அரசு ரூ.72,000 மற்றும் மாநில அரசு ரூ.48,000). தமிழக அரசு, கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக, அலகுத் தொகையைவிட ரூ.50,000 கூடுதல் நிதியாக மாநில நிதியிலிருந்து வழங்குகிறது. எனவே, தமிழ்நாட்டில் ஒரு வீட்டின் மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும்.

அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது. (90 x ரூ.229 = ரூ.20,610)

மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

இவை தவிர, பயனாளிகளுக்கு மானிய விலையில் சிமெண்ட் மூட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது. இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

2015-2016 ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட (ஊரகம்) செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகியவை ‘ஆவாஸ்சாப்ட்’ மற்றும் ‘ஆவாஸ்ஆப்’ மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரண்டு தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் இத்திட்டத்தினை ஒவ்வொரு நிலையிலும் செயல்படுத்துவதற்கான பயனுள்ள கண்காணிப்பு தொழில்நுட்பத்தை வழங்குகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்)கீழ் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ன் அடிப்படையில் கிராம

2020 மார்ச் 16]

சபைமூலம், பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர். ஆனால், பல தகுதி வாய்ந்த பயனாளிகள் சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ல் விடுபட்டுள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது. தகுதியுள்ள விடுபட்ட பயனாளிகளை சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ல் சேர்த்திட மத்திய அரசின் அறிவுரைப்படி, மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, 9.11 இலட்சம் தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு, பயனாளிகளின் பெயர் மற்றும் விவரங்கள் "ஆவாஸ்ப்ளஸ்" மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் பயனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்து, பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்க்கவும்/நீக்கவும் மற்றும் தீர்வு செய்யவும் ஒரு குறை தீர்க்கும் அமைப்பாக மேல்முறையீட்டுக் குழு மாவட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 2016-2017 முதல் 2019-2020 வரை 5,27,552 வீடுகள், ரூ.5,170.01 கோடி மாநில அரசின் பங்குத் தொகையுடன் மொத்தம் ரூ.8,968.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

4.3. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

1993 ஆம் ஆண்டு மத்திய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்கான நிதியை 2011-2012 ஆம் ஆண்டு முதல் ரூ.2 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டில், இத்திட்டச் செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிருவாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப்பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில்

குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர்வாருதல் போன்ற அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.290 கோடி ஒதுக்கீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை - 4.2

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2019-2020 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

வ. எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை
1.	கட்டடங்கள்	155
2.	சாலைகள்	209
3.	குடிநீர் வழங்கல்	143
4.	வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள்	276
5.	இதர பணிகள்	732
	மொத்தம்	1515

4.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்குஅனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையில் சாலை இணைப்பு வசதியினை ஏற்படுத்தித் தரும் நோக்குடன், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் வழிவகுக்கிறது.

இத்திட்டம் மத்திய அரசால் 100% நிதி பங்களிப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் 2015-2016 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் 60% மத்திய அரசு நிதி மற்றும் 40% மாநில அரசு நிதி என்ற நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

2020 மார்ச் 16]

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I-ன்கீழ், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால், 2000-2001-லிருந்து 2018-2019 வரை, 16,321 கி.மீ. நீளமுள்ள 7,678 கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்தவும், 98 பாலங்கள் அமைக்கவும் மொத்தம் ரூ.4,846 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.723.64 கோடியும் அடங்கும்.

அட்டவணை-4.3

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I-ன்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

வ.எண்	பகுதி	வருடம்			
			எண்ணிக்கை	**நீளம் (கி.மீ.)**	**மதிப்பு (ரூ. கோடியில்)**
1.	I	2000-2001	862	1,442.12	152.91
2.	II	2001-2002	444	795.09	114.27
3.	III	2003-2004	491	1,096.40	159.07
4.	IV	2004-2005	393	778.31	111.35
5.	V	2005-2006	365	799.59	170.84
6.	VI	2006-2007	810	2,049.02	459.82
7.	VII	2007-2008	1,581	3,010.32	853.72
8.	VIII	2012-2013	1,338	3,089.06	1,125.85
9.	IX	2014-2015	401	940.47	352.97
10.	X	2016-2017	589	1,321.81	718.47
11.	XI	2018-2019	502	998.57	626.41
		மொத்தம்	**7,776**	**16,320.76**	**4,845.68**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ன்கீழ், ஊரக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்குச் செல்லும் பிரதான சாலைகளை மேம்படுத்துவதன்மூலம், ஊரகச்சாலை தொகுப்பினை வலுப்படுத்தும் பொருட்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு 2,940 கி.மீ. நீளமுள்ள 860 சாலைப் பணிகள் மற்றும் 34 பாலங்கள் ஆகியவற்றிற்காக ரூ.1,434 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.620.33 கோடியும் அடங்கும்.

அட்டவணை 4.4

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ன்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

வ. எண்	வருடம்	எண்ணிக்கை	நீளம் (கி.மீ.)	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	2017-2018	790	2,653.58	1,240.94
2.	2018-2019	104	286.84	192.80
	மொத்தம்	894	2,940.42	1,433.74

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II-ன் இலக்கினை அடைந்ததன்மூலம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III-ற்கு, தமிழ்நாடு தகுதி பெற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III-ன் நோக்கமானது குக்கிராமங்களிலிருந்து சந்தை, உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றை இணைக்கும் பிரதான சாலை மற்றும் முக்கிய ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதே ஆகும். பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III-ன்கீழ் தமிழ்நாட்டிற்கு, 7,375 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் செயல் திறனுக்கான ஊக்கத் தொகை

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் வருடாந்திர இலக்குகளை அடைவதன் அடிப்படையில், செயல்திறனுக்கான ஊக்கத் தொகையினை மத்திய அரசு 2016-2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது.

2020 மார்ச் 16]

தமிழ்நாட்டிற்கு, 2016-2017, 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டிற்கு முறையே ரூ.55.58 கோடி, ரூ.45.32 கோடி மற்றும் ரூ.30.14 கோடி நிதி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியானது, 5 ஆண்டு கால தொடர் பராமரிப்பு முடிவு பெற்ற 2,168 கி.மீ. நீளமுள்ள பிரதம மந்திரி கிராம சாலைகளின் கால முறை பராமரிப்புப் பணிக்காக பயன்படுத்தப்படுகிறது. இப்பணிகளுக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.87.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-4.5

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் செயல்திறன் ஊக்கத் தொகை விவரம்

வ. எண்	வருடம்	ஊக்கத் தொகை மதிப்பு (ரூ.கோடியில்)			எடுக்கப்பட்ட பணிகள்	
		மத்திய அரசு	மாநில அரசு	மொத்தம்	சாலைகள் எண்ணிக்கை	நீளம் (கி.மீ.)
1.	2016-2017	55.58	37.05	92.63	561	959
2.	2017-2018	45.32	30.21	75.53	442	730
3.	2018-2019	30.14	20.09	50.23	270	479
	மொத்தம்	131.04	87.35	218.39	1,273	2,168

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் ஊரகச் சாலைகளை மின்னணு முறையில் பராமரித்தல் (இமார்க்)

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் பெருவாரியான முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள சாலைகளை தகுந்த முறையில் பராமரிப்பது மிகவும் இன்றியமையாதது. இதன் பொருட்டு, சாலைகளின் பராமரிப்பினை கண்காணிக்க இமார்க் (eMARG) எனப்படும் வலைய இணைய முகப்பானது, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சாலைகளின் செயல்பாட்டின் அடிப்படையில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட சாலைகளைப் பராமரிக்க இமார்க் வழிவகுக்கிறது.

[2020 மார்ச் 16

இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்கள்

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 2000 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பொழுது, தமிழ்நாட்டில் 500-க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத 2,402 குக்கிராமங்கள் இருந்தன. இவற்றில் 2,386 குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் மற்றும் இதர மாநில திட்டங்களின்மூலம் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில், வனத் துறை அனுமதி பெற வேண்டிய நிலம் மற்றும் பட்டா நிலப் பிரச்சினை உள்ள 16 இணைக்கப்படாத குக்கிராமங்கள் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் முன்மொழியப்படவில்லை.

அனைத்து குக்கிராமங்களுக்கும், 100% இணைப்பு வசதியினை உறுதி செய்யும் விதத்தில், 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கும் சாலை இணைப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகளுடன் இதுவரை இணைக்கப்படாத 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 16 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 2018-2019 ஆம் ஆண்டில் சாலை இணைப்புகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், இதுவரை 9 குக்கிராமங்களுக்கு இதர மாநில திட்டங்களின்மூலம் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 7 குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க வனத் துறையின் அனுமதியினை பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.5. தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்)

தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" பகுதி–I, 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் மத்திய அரசால் தொடங்கப்பட்டு, சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டது. இவ்வியக்கம் தற்போது பகுதி–II ஆக நீட்டிக்கப்பட்டு, ஒட்டுமொத்த தூய்மையினை (ODF Plus) உறுதி செய்யும் நடவடிக்கைகளான திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற

2020 மார்ச் 16]

நிலையினை தக்க வைத்தல், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை போன்றவை மேற்கொள்ளப்படும்.

திட்டத்தின் நோக்கங்கள்

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றம் அடையச் செய்தல்.

ஆ) சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வுமூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கிடையே ஆர்வத்தை தூண்டி, சுகாதார வசதிகள் மற்றும் நிலையான சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்திடச் செய்தல்.

இ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்த அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை முறைகளை சமூகத்தால் நிருவகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்:

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூகத்தால் நிருவகிக்கப்படும் சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கத் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

(அ) தனிநபர் இல்லக் கழிப்பறை

முழுமையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தகுதியுடைய குடும்பங்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

[2020 மார்ச் 16

(ஆ) சமூகத்தால் நிருவகிக்கப்படும் சுகாதார வளாகங்கள்

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூகத்தால் நிருவகிக்கப்படும் சுகாதார வளாகங்கள், கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படுகிறது. பகுதி–II-ல் சமூகத்தால் நிருவகிக்கப்படும் ஒவ்வொரு சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி உதவி ரூ.3 இலட்சம் ஆகும்.

(இ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

திட மற்றும் திரவக் கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி-II-ன்கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டச் செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் தனிநபர் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

விருதுகள் மற்றும் அங்கீகாரம்

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) ஒரு கழிப்பறை கட்டும் திட்டமாக மட்டுமே அல்லாமல் சமுதாயத்தின் பெரும் பங்கேற்புடன்கூடிய மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைந்ததைத் தொடர்ந்து கிராமங்களின் தூய்மை நிலை மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை மதிப்பீடு செய்ய 2019 ஆம் ஆண்டில் மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தால் தனியார் அமைப்பின்மூலம் மேற்கொள்ளப்பட்ட "ஊரக தூய்மை கணக்கெடுப்பு-2019"-ல் இது பிரதிபலித்துள்ளது. 2-10-2019 நாளன்று, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற "தூய்மை பாரத" நிகழ்ச்சியில், தமிழகத்திற்கு 'ஒட்டுமொத்த சிறந்த மாநிலம்' என்ற விருது மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது.

4.6. தேசிய ரூர்பன் மிஷன்

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக ஏற்படுத்த "தேசிய ரூர்பன் மிஷன்" திட்டம் மத்திய அரசால் 16-9-2015 அன்று துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு

2020 மார்ச் 16]

வசதிகளை உருவாக்கி சரியான திட்ட வடிவமைப்புடன்கூடிய "ரூர்பன் தொகுப்பினை" உருவாக்குவதாகும்.

ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்

தேசிய ரூர்பன் மிஷன் வழிகாட்டுதலின்படி "ரூர்பன் தொகுப்பு" என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் 25,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின்படி பழங்குடியினர் தொகுப்பு மற்றும் பழங்குடியினர் அல்லாத தொகுப்பு என இரண்டு பிரிவுகளில் ரூர்பன் தொகுப்புகள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை தேர்வு செய்ய புதுடெல்லி, மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் கீழ்க்கண்ட அளவுகோலின்படி ரூர்பன் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன:

காரணிகள்	முக்கியத்துவம்
• 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி • நிலங்களின் மதிப்பு உயர்வு • 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு • மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம்	80 சதவீதம்
• பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின்கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம் • தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் செயல்பாடு	20 சதவீதம்

அதன்படி மத்திய அரசு மூன்று கட்டங்களாக கீழ்க்கண்ட 11 தொகுப்புகளை (Cluster) உருவாக்கிட அனுமதி வழங்கியுள்ளது:

வ.எ.	மாவட்டத்தின் பெயர்	தொகுப்பின் பெயர்	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
நிலை–I (2016-2019)			
1.	திருவள்ளூர்	குத்தம்பாக்கம்	11
2.	சிவகங்கை	வாணியன்குடி	7

[2020 மார்ச் 16

வ.எ.	மாவட்டத்தின் பெயர்	தொகுப்பின் பெயர்	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
3.	திருப்பூர்	வேலாயுதம்பாளையம்	6
4.	கோயம்புத்தூர்	மதுக்கரை	9
5.	திருநெல்வேலி	சுத்தமல்லி	14
		மொத்தம்	47
நிலை–II (2017-2020)			
1.	காஞ்சிபுரம்	சிங்கபெருமாள் கோவில்	7
2.	மதுரை	கோவில் பாப்பாக்குடி	16
3.	தஞ்சாவூர்	திருமலை சமுத்திரம்	9
		மொத்தம்	32
நிலை–III (2018-2021)			
1.	கன்னியாகுமாி	சடையமங்கலம்	5
2.	தேனி	சீலயம்பட்டி	7
3.	கிருஷ்ணகிாி	அலசபள்ளி பட்ரவபள்ளி	7
		மொத்தம்	19

நிதி செயல்பாடு

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதி, மாநில மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின்மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட இடைநிரவல் நிரப்பு நிதியினை மத்திய அரசு வழங்குகிறது. இடைநிரவல் நிரப்பு நிதி திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்பிற்கும் வழங்கப்படுகிறது.

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்திற்கான இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) பகிர்வானது மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

அட்டவணை – 4.6

தேசிய ரூர்பன் மிஷன் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடைநிரவல் நிரப்பு நிதி

(ரூபாய் கோடியில்)

வ. எ.	நிலை	திட்ட காலம்	தொகுப்புகளின் எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு
1.	நிலை –I	2016-2019	5	150.00
2.	நிலை –II	2017-2020	3	90.00
3.	நிலை - III	**2018-2021**	**3**	**90.00**
மொத்தம்			**11**	330.00

மத்திய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் இடைநிரவல் நிரப்பு நிதியின்மூலம் பொருளாதார மேம்பாட்டுடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப் பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெரு விளக்கு, சாலை வசதிகள், போக்குவரத்து, சமையல் எரிவாயு இணைப்பு, கணினி எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணிக்க ரூர்பன் சாஃப்ட் (Rurban Soft) என்ற இணையதள வசதி மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டம் (ICAP), விரிவான செயல்திட்ட அறிக்கைகள் (DPR) ஆகியன ரூர்பன் சாஃப்ட் இணையதளத்தில் பதியப்படுகின்றன.

மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கிணங்க, ரூர்பன் சாஃப்ட்-ல் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) செலவினத் தொகுப்பு முறையைப் பயன்படுத்தி நிதிச் செலவினம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2020 மார்ச் 16

4.7. தேசிய கிராம சுயாட்சி திட்டம்(RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிருவாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் இந்திய அரசானது சீரமைத்த தேசிய கிராம சுயாட்சி திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மேலும், மக்கள் பங்கேற்புடன்கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாகப் பயன்படுத்தி நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030-க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

நோக்கங்கள்

- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய ஊராட்சி நிறுவனங்களின் நிருவாகத் திறனை மேம்படுத்துதல்
- அனைவரையும் உள்ளடக்கிய உள்ளாட்சி நிருவாகத்தை அளித்திடவும், உள்ளூர் வளங்களை தேவையான அளவு பயன்படுத்தி மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்
- கூடுதல் வருவாய் ஆதாரங்களை திரட்டும்வண்ணம் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்
- ஊராட்சி நிருவாகத்தில் மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்பட கிராம சபைகளை வலுப்படுத்துதல்
- ஊராட்சிகளின் திறன் மேம்பாடு மற்றும் அதனை வழி நடத்துவதற்காக கல்வி மற்றும் சீர்மிகு நிறுவனங்களை பயன்படுத்துதல்
- ஊராட்சி நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்
- நிருவாகத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் வகையில் ஊராட்சிகளில் மின் ஆளுமை மற்றும் இதர தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்

2020 மார்ச் 16]

- திறம்பட செயல்படும் ஊராட்சிகளை அடையாளம் கண்டு ஊக்குவித்தல்.

நிதிமுறை

தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RGSA) மத்திய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிருவாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப்பிரிவு, ஊராட்சி கட்டடம் மற்றும் சமுதாயக்கூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல் கல்வி மற்றும் தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை (5%) ஆகியவற்றிற்கு நிதி அளிக்கிறது.

மேலும், 2019-2020 ஆண்டு வருடாந்திர செயல்திட்டத்திற்கு தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் பல்வேறு பயிற்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு மத்திய அரசு ரூ.190.37 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

4.8. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11-10-2014-ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்டச் செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப் பகுதிகளில், 3000 முதல் 5000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே

[2020 மார்ச் 16

அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின்/கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியைப் பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில், சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016-க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024-க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமைச் செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி 2) துறை, நாள் 13-2-2015-ன்படி அமைக்கப்பட்டு திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள்/மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய

மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

4.9. புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டம் (NNBOMP)

புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதிகளில் இயற்கைக் கழிவுகளைத் திறம்பட பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்வதே ஆகும்.

இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு வகுத்துள்ள முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

i) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளாக உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.

ii) ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

iii) கிராமப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன்கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.

iv) மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம்மூலம் (திட, திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல் அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல்/உயிர் செரிமானக் குழம்பினை செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.

v) திட்டக் குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.

இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 16

அட்டவணை – 4.7

மானியக் கூறுகள் விவரம்

வ. எண்	பிரிவுகள்	தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின்கீழ் சமையல் எரிவாயு கலன்கள் (NNBOMP) அமைப்பதற்கான மானிய விவரம் (ரூபாயில்)				
		1 கன அடி	2-6 கன அடி	8-10 கன அடி	15 கன அடி	20-25 கன அடி
1.	பொது பிரிவு	7,500	12,000	16,000	20,000	25,000
2.	ஆதி திராவிடர் / பழங்குடியினர்	10,000	13,000	18,000	21,000	28,000
3.	கால்நடை கழிவுகள் மற்றும் தனிநபர் வீடுகளில் உள்ள கழிவறைகளுடன்கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம்--ரூ.1600/-				இல்லை	இல்லை
4.	பணி கட்டணம் (Turn key Cost)	ஒரு கலனுக்கு ரூ.2,500/- வீதம்				

2019-2020 ஆம் நிதி ஆண்டில் 1000 கரிமவாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

5. பணியமைப்பு

5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது மாநில நிருவாகத்தில், மத்திய மற்றும் மாநில அரசு நிதிகளின்மூலம் ஊரக உட்கட்டமைப்பு உருவாக்குதல், அடிப்படை வசதிகள் பராமரிப்பு, இணைப்புச் சாலைகள், சுகாதாரம், வீட்டு வசதி, வாழ்வாதாரம் உருவாக்குதல் மற்றும் ஊராட்சி நிருவாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புடைய முக்கியமான துறையாக விளங்குகிறது. மத்திய நிதி உதவியுடன்கூடிய மாநில நிதித் திட்டங்கள் உள்ளிட்ட இத்தகைய பணிகள் இத்துறையின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களால் திட்டமிட்டு, செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

அட்டவணை 5.1

வகைவாரியான பணியாளர்கள் விவரம்

அரசுப் பணியாளர்கள் அரசிதழ் பதிவு பெற்றவர்கள்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர்	18	ரூ.123400-216300 (நிலை 29)
2.	இணை இயக்குநர்	86	ரூ.61900-196700 (நிலை 26)
3.	உதவி இயக்குநர்	393	ரூ.56100-177500 (நிலை 22)
4.	வட்டார வளர்ச்சி அலுவலர்	1061	ரூ.37700-119500 (நிலை 20)
மொத்தம்		**1558**	

[2020 மார்ச் 16

புதிய மாவட்டங்கள் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் உருவாக்குதல்

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பதவியின் பெயர்	உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	இணை இயக்குநர்	10	ரூ.61900-196700 (நிலை 26)
2.	உதவி இயக்குநர்	40	ரூ.56100-177500 (நிலை 22)
3.	வட்டார வளர்ச்சி அலுவலர்	30	ரூ.37700-119500 (நிலை 20)
	மொத்தம்	80	

தருமபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் புதியதாக உருவாக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பதவியின் பெயர்	உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	வட்டார வளர்ச்சி அலுவலர்	6	ரூ.37700-119500 (நிலை 20)
	மொத்தம்	6	

அரசு போதுமான அளவிலான பணியிடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அலுவலர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்ளிட்ட பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளது.

2020 மார்ச் 16]

- இத்துறையில் 18 கூடுதல் இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 3 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் இணை இயக்குநர் நிலையில் 84 இணை இயக்குநர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 7 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் உதவி இயக்குநர் நிலையில் 402 உதவி இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

5.2. பொறியியல் பணியமைப்பு

ஊரக உட்கட்டமைப்பு, பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பணியமைப்பில் தொழில்நுட்ப பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அட்டவணை 5.2.

வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	கண்காணிப்பு பொறியாளர்	3	ரூ..123100-215900 (நிலை 28)
2.	செயற்பொறியாளர்	43	ரூ.61900-196700 (நிலை 26)
3.	உதவி செயற்பொறியாளர்	177	ரூ.59300-187700 (நிலை 25)
4.	உதவிப் பொறியாளர்	930	ரூ.56100-177500 (நிலை 22)
5.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	31	ரூ.37700-119500 (நிலை 20)
6.	இளநிலைப் பொறியாளர்	317	ரூ.35900 – 113500 (நிலை 13)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
7.	பணிமேற்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர்	2587	ரூ.35400 – 112400 (நிலை 11)
8.	சாலை ஆய்வாளர்	**1145**	**ரூ.19500-62000 (நிலை 8)**
மொத்தம்		**5233**	

புதிய மாவட்டங்கள் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் உருவாக்குதல்

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பதவியின் பெயர்	உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	செயற்பொறியாளர்	5	ரூ.61900-196700 (நிலை 26)
2.	உதவி செயற்பொறியாளர்	20	ரூ.59300-187700 (நிலை 25)
3.	உதவிப் பொறியாளர்	21	ரூ.56100-177500 (நிலை 22)
4.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	5	ரூ.37700-119500 (நிலை 20)
5.	பணிமேற்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர்	**21**	**ரூ.35400 – 112400 (நிலை 11)**
மொத்தம்		**72**	

2020 மார்ச் 16]

தருமபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் புதியதாக உருவாக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

வ. எண்	**பதவியின் பெயர்**	**உருவாக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை**	**ஊதிய விகிதம்**
1.	உதவிப் பொறியாளர்	9	ரூ.56100-177500 (நிலை 22)
2.	பணிமேற்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில் அலுவலர்	13	ரூ.35400 – 112400 (நிலை 11)
3.	சாலை ஆய்வாளர்	4	ரூ.19500-62000 (நிலை 8)
	மொத்தம்	28	

- இத்துறையில் 46 செயற்பொறியாளர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 8 செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- இத்துறையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் 189 உதவி செயற்பொறியாளர்களும், அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 14 உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- இத்துறையில் 946 உதவிப் பொறியாளர்களும், 317 இளநிலைப் பொறியாளர்களும், 34 முதுநிலை வரை தொழில் அலுவலர்களும், 2,605 பணி மேற்பார்வையாளர்கள்/ இளநிலை வரை தொழில் அலுவலர்களும் 1,147 சாலை ஆய்வாளர்கள் உள்ளனர். இத்துறையில் உள்ள 946 உதவிப் பொறியாளர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 11 உதவிப் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதேபோல், 317 இளநிலைப் பொறியாளர்களில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 6 இளநிலைப் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

[2020 மார்ச் 16

5.3. முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநில திட்டக் குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னைப் பெருநகர வளர்ச்சிக் கழகம் (CMDA), சிப்காட் (SIPCOT) பேரூராட்சிகள் இயக்ககம், தேசிய ஊரக நலவாழ்வு சங்கம் (NRHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD assisted PTSLP), இந்து சமய அறநிலையத் துறை (HR&CE), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம் போன்ற துறைகளில் மாற்றுப்பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன்மூலம் பெறப்படும் அனுபவங்களைக் கொண்டு தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், பொது மக்களுக்கு சேவை புரிந்திடவும் உறுதுணையாக உள்ளது.

5.4. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடிப்படை விதிகள், தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகளுக்குட்பட்டு வரும் பணியாளர்களின் பணியமைப்பு, அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் விவரம் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதியக்கட்டு விகிதம் ஆகியவை கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன:

2020 மார்ச் 16]

அட்டவணை 5.3

அரசிதழ் பதிவுபெறா பணியாளர்களின் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய நிலை
	(அ) அரசுப் பணியாளர்கள்		
1.	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	3926	ரூ.36900-116600
2.	உதவியாளர்	5522	ரூ.20600-65500
3.	இளநிலை உதவியாளர்	3110	ரூ.19500-62000
4.	சுருக்கெழுத்து தட்டச்சர்	178	ரூ.20600-65500
5.	தட்டச்சர்	1033	ரூ.19500-62000
6.	ஓட்டுநர்	880	ரூ.19500-62000
7.	பதிவுரு எழுத்தர்	131	ரூ.15900-50400
8.	அலுவலக உதவியாளர்	691	ரூ.15700-50000
9.	இரவுக் காவலர்	121	ரூ.15700-50000
10.	மசால்ஜி	14	ரூ.15700-50000
	உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்		
	(ஆ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் விவரம்		
1.	ஓட்டுநர்	770	ரூ.19500-62000
2.	பதிவுரு எழுத்தர்	387	ரூ.15900-50400
3.	அலுவலக உதவியாளர்	1521	ரூ.15700-50000
4.	இரவுக் காவலர்	377	ரூ.15700-50000
5.	மசால்ஜி	9	ரூ.15700-50000
	(இ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்		
1.	ஊராட்சி செயலர்	12525	ரூ.15900-50400
2.	துப்புரவு பணியாளர்		
	சிறப்பு காலமுறை ஊதியம்	26404	ரூ.4100-12500
3.	மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்	40419	ரூ.2600/- தொகுப்பு ஊதியம்

புதிய மாவட்டங்கள் மற்றும் புதிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியிடங்கள் உருவாக்குதல்

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

[2020 மார்ச் 16

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய நிலை
(அ) அரசுப் பணியாளர்கள்			
1.	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	30	ரூ.36900-116600
2.	உதவியாளர்	122	ரூ.20600-65500
3.	இளநிலை உதவியாளர்	72	ரூ.19500-62000
4.	சுருக்கெழுத்து தட்டச்சர்	20	ரூ.20600-65500
5.	தட்டச்சர்	35	ரூ.19500-62000
6.	ஓட்டுநர்	55	ரூ.19500-62000
7.	பதிவுரு எழுத்தர்	21	ரூ.15900-50400
8.	அலுவலக உதவியாளர்	75	ரூ.15700-50000
9.	இரவுக் காவலர்	14	ரூ.15700-50000
	கூடுதல்	444	

தருமபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியம் புதியதாக உருவாக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய நிலை
(அ) அரசுப் பணியாளர்கள்			
1.	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	22	ரூ.36900-116600
2.	உதவியாளர்	26	ரூ.20600-65500
3.	இளநிலை உதவியாளர்	14	ரூ.19500-62000
4.	தட்டச்சர்	5	ரூ.19500-62000
5.	ஓட்டுநர்	9	ரூ.19500-62000
6.	பதிவுரு எழுத்தர்	3	ரூ.15900-50400
7.	அலுவலக உதவியாளர்	12	ரூ.15700-50000
8.	இரவுக் காவலர்	3	ரூ.15700-50000
	கூடுதல்	94	

2020 மார்ச் 16]

1) காலிப் பணியிடங்களை நிரப்புதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில், 205 உதவியாளர்கள், 475 இளநிலை உதவியாளர்கள், 226 தட்டச்சர்கள் மற்றும் 60 சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம் தேர்ந்தெடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படை பணியிட நிலைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களைப் பொறுத்தவரையில், வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் பத்திரிகை அறிவிப்புமூலம் நேரடியாக நிரப்பப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர்/இரவுக் காவலராக பணியாற்றிய 27 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின் கீழும், 78 ஊராட்சி செயலர்கள் 20% இட ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவற்றுடன் 2019-2020 ஆம் ஆண்டில், 287 தட்டச்சர்கள்/ இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் ஆகவும், 332 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 167 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிநிலை உயர்த்தப்பட்டுள்ளனர்.

2) ஊராட்சி செயலர் பணியிடங்களுக்கு நியமனம் செய்தல்

தமிழக அரசின் வேலைவாய்ப்புகளில் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு முறை முதன்முறையாக ஊராட்சி செயலர் பணியிடங்களுக்கும் பின்பற்றப்பட்டு 2019 ஆம் ஆண்டில் 786 ஊராட்சி செயலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதன் பின்னர் ஏற்பட்ட 494 காலி பணியிடங்களையும் இட ஒதுக்கீடு அடிப்படையில் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3) கருணை அடிப்படை பணி நியமனம்

பணியிடைக் காலமான அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளித்திடும் வண்ணம் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டம் 2016-2017 ஆம் ஆண்டு முதல் பணியிடைக்காலமான ஊராட்சி செயலர்களின் வாரிசுதாரர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து பணியிடைக்காலமான அரசு

ஊழியர்கள் மற்றும் ஊராட்சி செயலர்களின் தகுதி வாய்ந்த வாரிசுதாரர்கள் 104 நபர்களுக்கு, 2019-2020 ஆம் நிதியாண்டில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

4) கிராம ஊராட்சி செயலர்களுக்கு காலமுறை ஊதியத்தில் ஊதியம் வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அடித்தள நிருவாகத் திறனை வலுப்படுத்தும் பொருட்டு, கிராம ஊராட்சி செயலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.2500-5000 + ரூ.500 தர ஊதியம் என்ற விகிதத்திலிருந்து 0ரூ.15900-50400 என்ற விகிதத்தில் உயர்த்தி வழங்கிட அரசாணை (நிலை) எண் 171, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5) துறை, நாள் 30-11-2018-ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

5) கிராம ஊராட்சிப் பணியாளர்களுக்கான சலுகைகள்

கிராம ஊராட்சி செயலர்களின் நலன் கருதி கூடுதல் பொறுப்புபடி, அறுதியிட்ட பயணப்படி, பெண் ஊராட்சி செயலாளர்களுக்கு 270 நாட்களாக மகப்பேறு விடுப்பு நீட்டிப்பு, சிறப்பு ஓய்வூதியம், ஓய்வூதிய ஒட்டுமொத்த தொகை மற்றும் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்பாக 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பல்வேறு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில், 1-10-2010 தேதியில் மூன்று ஆண்டுகள் பணிமுடித்து தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 9,896 துப்புரவுப் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோன்று தற்போது கிராம ஊராட்சிகளில் மூன்று ஆண்டுகள் பணி முடித்த தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 16,508 துப்புரவுப் பணியாளர்களுக்கும் சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

12,524 கிராம ஊராட்சிகளில் 40,419 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தொகுப்பூதியமாக ரூ.2600/- பெற்று பகுதி நேரமாக பணிபுரிந்து வருகின்றனர். அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு ஒவ்வொரு முறை வழங்கப்படும் பொழுதும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கும் தற்காலிக உயர்வாக ரூ.100/- உயர்த்தப்படுகிறது.

2020 மார்ச் 16]

சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் ஓய்வுபெறும் பொழுது ரூ.2,000/- சிறப்பு ஓய்வூதியமாகவும், ரூ.50,000/- ஓய்வூதிய ஒட்டுமொத்தத் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

6) அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய நிலை பணியிடங்களின் அலுவலக ரீதியான முன்னேற்றத்திற்கு தேவையான அலுவலக நடைமுறை சார்ந்த அறிவு மற்றும் ஆற்றல் ஆகியவற்றை அளிப்பதில் அடிப்படைப் பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பயிற்சியானது இவர்களது நுழைவுப் பணியிடமான இளநிலை உதவியாளர்/உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்திட தேவையான தகுதி பெற வேண்டிய பயிற்சியாகும். 2019-20 ஆம் ஆண்டில் 2,478 பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

6. திறன் மேம்பாடு

6.1. திறன் மேம்பாடு

ஓர் அரசு துறையோ அல்லது நிறுவனமோ தனது பணியாளர்களை வடிவமைக்கப்பட்ட முறையில் பயிற்றுவிப்பதற்கு வலுவான பயிற்சி கொள்கை அவசியமானது. திறன் மேம்பாடு பயிற்சி பணியாளர்களுக்கு தேவையான திறனை மேம்படுத்த உதவுகிறது. இது பணியாளர்களின் அடிப்படை அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளிப்பதன்மூலம் அவர்களை உயர் நிலைக்குக் கொண்டு செல்கிறது. இப்பயிற்சிகளில் செய்யப்படும் முதலீடானது, பணியாளர்களின் அணுகுமுறையில் மாற்றம், தன்னம்பிக்கை மற்றும் அறிவாற்றலை மேம்படுத்தி அரசு திட்டங்களை முறைப்படி செயல்படுத்த பயன்படுகிறது. செயல்திறனை மேம்படுத்துவதன்மூலம் பல்வேறு அரசு நலத் திட்டங்களை திறமையாகச் செயல்படுத்துவதினால் பொது மக்களின் நலன் பெருமளவு உறுதி செய்யப்படுகிறது.

ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி ஆணையரகம் திறன் மேம்பாடு பயிற்சிக்கு என பிரத்யேகமாக செயல்படுகிறது. பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிறுவனங்களின்மூலம் பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 16]

அட்டவணை – 6.1

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்

வ. எண்	மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்	அமைந்துள்ள மாவட்டம்	எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்	துவங்கப் பட்ட ஆண்டு
1.	ச.வி.நகரம்	திருவண்ணாமலை	காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர்,கடலூர் , திருவண்ணாமலை (5 மாவட்டங்கள்)	1956
2.	கிருஷ்ணகிரி அணை	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தருமபுரி, வேலூர் (5 மாவட்டங்கள்)	1958
3.	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (6 மாவட்டங்கள்)	1954
4.	பவானிசாகர்	ஈரோடு	ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்)	1972
5.	தே.கல்லுப்பட்டி	மதுரை	மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (7 மாவட்டங்கள்)	1948

6.1.1. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற

துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

6.1.2. பயிற்சிகள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிருவாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள், சுகாதாரம், திடக் கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, ஆளுமை வளர்ச்சி, சமூக தணிக்கை, கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), மின் ஆளுமை, தகவல் அறியும் உரிமைச் சட்டம், பணமில்லா பரிவர்த்தனை, வாழ்வாதாரம் போன்ற பொருட்கள் குறித்து பயிற்சி மற்றும் கணினி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள் போன்ற கட்டமைப்புப் பணிகள் தரமான முறையில் மேற்கொள்ள தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

6.1.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின்கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிருவகிக்கப்படுகின்றன.

6.1.4. நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ரூ.7.09 கோடி நிதி 2019-2020 ஆம் ஆண்டு வழங்கியுள்ளது. மத்திய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும் அவ்வப்போது பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும், இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு தொடரா செலவினத்தின்கீழ் நிதியினை வழங்குகிறது.

2020 மார்ச் 16]

அட்டவணை 6.2

2019-2020 ஆம் ஆண்டில் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சி விவரங்கள் (31.1.2020 வரையிலான)

(பொது, கணினி மற்றும் சிறப்புப் பயிற்சிகள்)

வ. எண்	பயிற்சியின் பெயர்	அணிகள்	பயிற்சியாளர்கள்
1.	ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கான பொது பயிற்சி	237	4882
2.	கணினி பயிற்சி	169	3699
3.	சிறப்புப் பயிற்சி	41	2059
4.	நிருவாகம், நீர் மேலாண்மை, உடல் நலம் மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி	21	412
5.	ஊரக வளர்ச்சி தணிக்கை அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி (கிராம தணிக்கை அலுவலர்கள்)	7	232
6.	தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தணிக்கை பயிற்சி	5	77
7.	ஊரக பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பது குறித்த ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பயிற்சி	14	440
8.	ஊரக பகுதிகளில் சாலைகள் மற்றும் கட்டடங்கள் அமைப்பது குறித்து அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி	11	278
9.	தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் சட்ட மேலாண்மை குறித்த பயிற்சி	9	306
10.	ஊர்நல அலுவலர் (மகளிர்) சமூக நலம்- பயிற்சி	1	35
11.	பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை பயிற்சி	4	148
12.	பணமில்லா பரிவர்த்தனை பயிற்சி	6	180
13.	சுகாதாரம் சமுதாய மேம்பாட்டில் அணுகுமுறை பயிற்சி	6	112
14.	தகவல் தொழில்நுட்ப பயிற்சி	101	4001

வ. எண்	பயிற்சியின் பெயர்	அணிகள்	பயிற்சியாளர்கள்
15.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்ககம்-தீன தயாள் அந்தியோதயா யோஜனா/ தேசிய நகர்புற வாழ்வாதார இயக்ககம்/ ஒருங்கிணைந்த பயிற்சி பட்டறை	7	476
16.	நரிக்குறவர்களுக்கான திறன் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி	3	90
17.	நீர்மேலாண்மை குறித்த வட்டார அளவிலான அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்	17	217
18.	ஊராட்சிகள் சொந்தமாக வருவாய் ஈட்டுதல் குறித்து ஊராட்சி செயலருக்கான பயிற்சி	6	175
19.	சுகாதாரம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் பயிற்றுநர்களுக்கான பயிற்சி	6	112
20.	நீலகிரி மாவட்ட மலைவாழ் பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி	5	187
21.	அழகுகலை பயிற்சி (Beautician)	1	35
22.	பொது நிதி மேலாண்மை/ஊரக மின்னணு தொகுப்பு பயிற்சி	2	28
23.	உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு போதைபொருள் தடுப்பு குறித்து 1 நாள் விழிப்புணர்வு பயிற்சி	1	40
	மொத்தம்	680	18221

2019-2020 ஆம் ஆண்டில், ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில், 18,221 நபர்களுக்கு 680 அணிகளில் பலவகையான பயிற்சிகள் மேற்கூறிய அட்டவணைப்படி வழங்கப்பட்டுள்ளன.

6.1.5. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் சிறப்பு செயல்பாடுகள்

அ) வெளி நிறுவனங்கள்மூலம் மதிப்பீடு—புதிய முயற்சி

கடந்த 2019-2020 ஆம் ஆண்டு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் பயிற்சி திட்டங்கள் வெளி நிறுவனங்கள்மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது. இது தொடர்பாக வெளி நிறுவனங்களான பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

2020 மார்ச் 16]

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், உட்பட அனைத்து நிறுவனங்களும் தங்களுடைய அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

அட்டவணை 6.3

வெளி நபர் மதிப்பீடு செய்யும் தலைப்புகள் விவரம்

வ எண்	மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்	பொருள்	மதிப்பீடு செய்யும் வெளி நபர் விவரம்
1.	ச.வி.நகரம்	கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம்	ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் நல மேம்பாட்டு நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம்
2.	பவானிசாகர்	கணினி பயற்சி	பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மாவட்டம்
3.	பட்டுக்கோட்டை	மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்	அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
4.	தே.கல்லுப்பட்டி	பொது பயிற்சி	மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மாவட்டம்
5.	கிருஷ்ணகிரி அணை	சுகாதாரம்	பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மாவட்டம்

ஆ) ஆராய்ச்சிப் பணிகள்

2019-2020 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்து கொள்வதற்காக பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டனர்.

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி நுட்பங்களை அறிந்து கொண்டு பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வல்லுநர்களைக் கொண்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பல்வேறு சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

[2020 மார்ச் 16

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன விரிவுரையாளர்கள் தங்களுடைய ஆராய்ச்சிப் பணிகளுக்கான திட்டங்களை சமர்ப்பித்து அதற்கு நியமிக்கப்பட்ட குழுவும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அட்டவணை 6.4

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சி தலைப்புகளின் விவரம்

வ.எண்	மண்டல ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தின் பெயர்	ஆராய்ச்சி தலைப்புகளின் பெயர்
1.	ச.வி.நகரம்	ஊரகப் பகுதிகளில் நடைமுறையில் உள்ள சொத்து வரி முறை மற்றும் செயலாக்கம் குறித்த ஆய்வு
2.	பவானிசாகர்	கிராம ஊராட்சிகளின் வாியில்லா வருவாயினை பெருக்குதல் குறித்த விளக்கமான ஆய்வு
3.	பட்டுக்கோட்டை	ஊரகப் பகுதிகளில் குடிநீர் விநியோகத்தில் எழும் பிரச்சனைகள் குறித்த ஆய்வு
4.	கிருஷ்ணகிரி	ஊரகப் பகுதிகளில் மின்னணு சேவை பயன்பாடு மற்றும் விழிப்புணர்வு குறித்த ஆய்வு
5.	தே.கல்லுப்பட்டி	கடலோர பகுதிகளில் அமைந்துள்ள கிராம ஊராட்சிகளின் குடிநீரின் தரம் குறித்த ஆய்வு

இ) பவானிசாகர், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் சாண எரிவாயு கலன் அமைத்தல்

சாண எரிவாயு கலன் பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உணவு, காய்கறி மற்றும் சமையலறை கழிவுகளைக் கொண்டு கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் அமைக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. மேலும், இதுபோன்ற சாண எரிவாயு கலன் இதர மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

ஈ) கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் விவசாயம் சார்ந்த சூழல் சுற்றுலா

கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் விவசாயம் மற்றும் தோட்டக்கலை உற்பத்தி செய்ய தேவையான சாகுபடிக்குரிய நிலம் உள்ளது. மேலும், இந்நிறுவனம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சூழலில் அமைந்துள்ளது. மேலும், இது பண்ணை விவசாயம், இயற்கை வழி விவசாயம், பண்ணை சார்ந்த வணிகம் மற்றும் சுற்றுலா ஆகிய அம்சங்களைக் கொண்டது. விவசாயம் சார்ந்த சூழல் சுற்றுலா சமீபகாலமாக பிரசித்திப் பெற்று திகழ்கிறது. வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது விவசாய பண்ணைக்குச் சென்று இயற்கை வழி விவசாயம், தோட்டக்கலை, நீர் சேமிப்பு யுக்திகள், விவசாயம் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றில் நேரில் அனுபவபூர்வமாக கற்றறிதல், ஈடுபடுதல் மற்றும் வருவாய் ஈட்டுதல் ஆகும். இது இளைய தலைமுறை அதிகம் பயன்பெற உதவும்.

எனவே, கிருஷ்ணகிரி மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் வேளாண்மை சார்ந்த சூழல் சுற்றுலா மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து ரூ.56.61 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

உ) நீலகிரி மாவட்டவாழ் பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி

நீலகிரி மாவட்டத்தில் 187 பழங்குடியினருக்கு உடல் நலம், சுகாதாரம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் ஒரு சிறப்புப் பயிற்சி பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் டிசம்பர் மாதம் 2019 இல் அளிக்கப்பட்டது.

ஊ) திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் பின்தங்கி உள்ள 35 ஊரக பெண்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் அழகுகலை திறன்பயிற்சி (40 நாட்கள்) 18-11-2019 முதல் 20-1-2020 வரை சத்திய விஜய நகர மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தினால் அளிக்கப்பட்டது. மேலும், கிராமப்புற வாழ் பெண்களுக்கு இந்த அழகுகலை திறன் மேம்பாட்டுப் பயிற்சி இரண்டாவது அணி உடனடியாக துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

எ) சமூக நலத் துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

சமூக நலத் துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்மூலம் அளிக்கப்பட்டது. குழந்தை நலம், மகளிர் நலம், பெண்களுக்கான சட்டங்கள், முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம், திருநங்கைகள் நலம் போன்ற தலைப்புகளில் 175 மகளிர் ஊர் நல அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

6.2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

பல்வேறு திறன் மேம்பாடு பயிற்சிகளை மேற்கொள்ள, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தினை, தமிழக அரசு மாநில அளவிலான தலைமைப் பயிற்சி நிறுவனமாக அமைத்துள்ளது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

தலைமைப் பயிற்சி நிறுவனம் என்ற வகையில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களுக்கு உறைவிடப் பயிற்சி மற்றும் வெளிவளாக பயிற்சி வாயிலாக திறன் மேம்பாடு மற்றும் இதர பயிற்சிகள் அளிக்கிறது.

6.2.1. குறிக்கோள்

பயிற்சிகள்மூலம் பயிற்சியாளர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவது, மேலும் குடிமக்களை மையப்படுத்தும் அணுகுமுறை குறித்த நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன்மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை அவற்றின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயல்படுத்துவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், பல்வேறு பயிற்சிகளுக்குத் தேவையான பயிற்சி பாட திட்டங்களையும் உருவாக்குகிறது.

6.2.2. பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன்கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை,

2020 மார்ச் 16]

மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளைக் கடைப்பிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில்(Cascading Model) பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகரில் உள்ள அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும், மாவட்ட நிருவாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளி வளாக பயிற்சிகளை நடத்துகிறது.

6.2.3. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில மற்றும் மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்காக பின்வரும் விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது:

- மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது.
- பயிற்சி தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளான பயிலரங்கு கூடங்கள், விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வோர் ஆண்டும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 100 சதவிகித நிதி உதவி வழங்குகிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி பல்வேறு தலைப்புகளில் வழங்க மத்திய ஊராட்சிகள் அமைச்சகம் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் நிதி உதவி வழங்குகிறது.

6.2.4. 2019-2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் விவரம்

இந்நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் தெரிவித்துள்ளபடி 1,01,916 ஊரக வளர்ச்சி

[2020 மார்ச் 16

மற்றும் ஊராட்சி துறை அலுவலர்கள், ஊராட்சி அமைப்பின் களப்பணியாளர்கள், பிற துறை பணியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு பயிற்சிகள் அளித்துள்ளது:

அட்டவணை 6.5

மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் வழங்கப்பட்ட பயிற்சி விவரம்-2019-2020

வ.எண்	திட்டம்	சாதனை	
		அணிகள்	எண்ணிக்கை
1.	நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்/ சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பயிற்சி / கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம்/ பொது நிதி மேலாண்மை அமைப்பு பயிற்சி/ தொழில்நுட்ப பயிற்சி	92	2,919
2.	சுயஉதவிக் குழு அலுவலக பொறுப்பாளர்கள்/ஊராட்சி கூட்டமைப்பு/ கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான ஒருங்கிணைந்த வலைதளப்பயிற்சி	1847	73,850
3.	சுயஉதவிக் குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/ஊராட்சி நிறுவனங்களுக்கு வாழ்வாதார பயிற்சி	43	850
4.	கிராம ஊராட்சி தலைவர் மற்றும் துணை தலைவர்களுக்கு சிறப்பு பயிற்சி	76	19,173
5.	தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத்-வெளி பயிற்சி	03	289
6.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பற்றிய மூன்று மாத கால சான்றிதழ் படிப்பு	12	793
7.	ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை பயிற்சி	32	2,628
8.	பிற துறையினரால் நடத்தப்பட்ட பயிற்சிகள்	06	513
9.	இதர பயிற்சிகள்	31	901
	மொத்தம்	2142	1,01,916

6.2.5. தேசிய விருதுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு 2018-2019 ஆம் ஆண்டிற்காக பாராட்டத்தக்க வகையில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சிகள் நடத்தியமைக்கும், அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் பங்கு பெற்றமைக்காகவும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.

2020 மார்ச் 16]

இம்மாநிலம், 2018-2019 ஆம் ஆண்டில் சமவெளி பகுதியில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சிகள் நடத்தியமைக்கு முதல்நிலையும் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் பங்கு பெற்றமைக்கு இரண்டாம் நிலையும் பெற்று, இந்திய அரசினால் இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

6.2.6. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை வலுப்படுத்துதல்.

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட அணுகுமுறைகளின் காரணத்தால் அதன் திறன் மேம்பாடு நடவடிக்கைகளையும் வலுப்படுத்தும் வகையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் ஏழு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

1. ஊராட்சி நிருவாக மையம்/மாநில ஊரக வள மையம்.
2. ஊரக வளர்ச்சி திட்டச் செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரக தொழில் நிறுவனங்கள் மேம்பாடு மையம்
4. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம்
5. தகவல் தொடர்பு தொழில்நுட்ப மையம்
6. பருவ நிலை மாற்றம் மற்றும் இயற்கை வள மேலாண்மை மையம்
7. ஒருங்கிணைப்பு, தொடர்பு மற்றும் புதிய முயற்சிகள் மையம்.

6.2.7. வளாக மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாட்டுக்கான முதன்மை மேம்பாட்டுத் திட்டம்

ஒரு முழுமையான மற்றும் நீடித்த வளர்ச்சியைப் பெறுவதற்காக, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் வளாக மேம்பாட்டிற்கான ஒரு பெருந்திட்டத்தைத் தயாரித்துள்ளது.

[2020 மார்ச் 16

இப்பெருந்திட்டத்தில் மாதிரி சாலைகள், பாதைகள், விளையாட்டு வளாகம், நீர்வள மேலாண்மை, திரவ மற்றும் திடக்கழிவு மேலாண்மை, மூலிகைத்தோட்டம், கலை நிகழ்ச்சி கூடம், மலர் தோட்டம், குளம், மாதிரி கிராமம் ஆகியவற்றின் எதிர்கால கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கு இந்நிறுவன வளாகத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.2.8. ஆராய்ச்சி நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் கடலோர பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சிகளில் வசிக்கும் ஊரக சமுதாயத்தில் தீவிர பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கண்டறிவதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர கீழ்க்காணும் இனங்களிலும் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தால் ஆராய்ச்சிப் படிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அ) தமிழ்நாட்டின் ஊரக பகுதியில் உள்ள உள்ளூர் சமுதாயம், தீவிர பருவநிலை மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவும், மட்டுப்படுத்தவும் மேற்கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள், குறிப்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணிகள் பற்றிய விரிவான ஆராய்ச்சி.

ஆ) கிராம ஊராட்சிகளின் தணிக்கை நடைமுறைகள் மற்றும் செயல்பாடு குறித்து ஆய்வு.

இ) நகர பகுதிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலிப்பதில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தல்.

6.2.9. இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம்-மதராஸ், சென்னை காந்தி கிராமம் ஊரக நிறுவனம், திண்டுக்கல், குஜராத் ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மதராஸ் சமூக பணிகள் பள்ளி, சென்னை ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனத்தால் 2019-2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, வெளியீடு, ஊரக வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம்

பெற்றிட இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும், தங்களுடைய மாணவர்களுக்கும் பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்த ஆய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

6.2.10. தொழில்நுட்ப அலுவலர் பயிற்சி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளித்திட மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் தொழில்நுட்பப் பயிற்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இதுவரை 155 பல்வேறு நிலையில் உள்ள பொறியாளர்களுக்கு புதுடில்லியில் உள்ள தேசிய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தில் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6.2.11. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இதர பயிற்சிகள்

அ) பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)

பொது நிதி மேலாண்மை அமைப்பை (PFMS) செயல்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 20,339 அலுவலர்களுக்கு 514 பிரிவுகளாக மாநில ஊராட்சி நிறுவனம் மற்றும் இதர மாவட்ட மையங்களில் ரூ.3.80 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆ) பல்லுயிர் பெருக்கம் தொடர்பான பயிற்சிகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தமிழ்நாடு பல்லுயிர் வாரியம், புதுடில்லியில் உள்ள GIZ, நிறுவனத்துடன் இணைந்து பல்லுயிர் பெருக்கம் தொடர்பான பயிற்றுனர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இ) கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம்

அரசாணை எண் 34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா-I) துறை, நாள் 2-3-2016-ன்படி கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் தயாரித்தல் குறித்து முதன்மை மற்றும் இரண்டாம் கட்ட பங்கேற்பாளர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி வழங்க மாநில

[2020 மார்ச் 16

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கபட்டுள்ளது. நேர்முக/வெளிவளாகப் பயிற்சிமூலம் 1,37,000 நபர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் பயிற்சி வழங்கியுள்ளது.

ஈ) புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி

புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அடிப்படைப் பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக மிகப்பெரிய திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு மாநில அளவிலான முதன்மை பயிற்றுனர்கள், மண்டல அளவிலான வள அலுலர்கள், மாவட்ட வள அலுவலர்கள் மற்றும் சார் கோட்ட வள அலுவலர்கள் உள்ளிட்ட நான்கு நிலை பயிற்சியாளர்கள் கண்டறியப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட பயிற்சியாளர்கள் தேர்வு செய்யபட்ட ஆறு வகையான பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவார்கள்.

திறமை வாய்ந்த செயல்பாடு மற்றும் விதிகளுக்கு உட்பட்ட நிருவாகத்திற்கு ஏதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு பயன்படும் வகையில் ஊராட்சி பொது நிருவாகம் திட்டங்கள் செயல்பாடு நிதி நிருவாகம், மின் ஆளுமை ஆகிய பல்வேறு தலைப்புகளில் 15 கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள், பட்டியல் இன மற்றும் பழங்குடியின பிரதிநிதிகள் திறன்பட செயல்படும் வகையில் சிறப்புப் பயிற்சி திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உ) தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளூரைடு தீவிரத்தினை குறைக்கும் திட்டம் (HWS& FMP)

தமிழக அரசு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நடுவம் என்ற நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் மற்றும் புளூரைடு தீவிரத்தினை குறைத்திடும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை

2020 மார்ச் 16]

ரூ.276.64 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மேற்கொள்ளும்.

ஊ) அண்ணா மேலாண்மை நிறுவனத்துடனான பயிற்சி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு புதுமையான தலைப்புகளில் பயிற்சி அளிப்பதற்கென ரூ.36.00 இலட்சம் அண்ணா மேலாண்மை நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 28 அணிகளில் 840 அலுவலர்கள் பயிற்சி பெறுவார்கள்.

எ) சான்றிதழ் வகுப்பு

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஊராட்சி நிருவாகம் மற்றும் ஊரகவளர்ச்சி குறித்து மூன்று மாதகாலசான்றிதழ்வகுப்புநடத்துகிறது. இவ்வகுப்பு டிசம்பர் 2018-ல் துவக்கப்பட்டது. தற்போது மூன்று அணிகளில் நடத்தப்பட்டு 793 நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

6.2.12. மாநில ஊராட்சி வள மையம் (SPRC)

ஊராட்சி அமைப்புகளின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் தனி கவனம் செலுத்தும் பொருட்டு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் மாநில ஊராட்சி வள மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி நிருவாகிகளின் திறனை விரைந்து மேம்படுத்துதல், ஊராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி பற்றிய அறிவை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களுக்கு வழங்குதல், ஊராட்சி நிருவாகத்தின் மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல் போன்றவை இந்நிலையத்தின் முதன்மை பொறுப்புகளாகும்.

6.2.13. ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்குத் தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA)கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிருவாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப்

[2020 மார்ச் 16

பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

6.3. செயலாக்கம் 2020-2021

2020-2021 ஆம் ஆண்டில், மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின்மூலம் சுமார் 1,53,620 நபர்களுக்கு 3840 அணிகளில் பல்வேறு பயிற்சிகளை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது அனைத்து திட்டங்களையும் நீண்ட காலத்திற்கு திறம்பட செயலாக்க பயனளிக்கும்.

எல்லா பயிற்சி நிறுவனங்களும் தங்கள் திறமைகளை வலுப்படுத்தவும், பலவீனங்களை பலவீனப்படுத்தவும் முயற்சி செய்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத் திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்.

ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்ற பிரிவினர் ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்குக் கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில், நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்.

- மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிரின் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாட்டிற்காகவும், பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டங்களின்மூலம் மகளிரைக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு போன்றவற்றில் உயரச் செய்து அவர்களை சமூகத்தில் சமத்துவம் மிக்கவர்களாக, தற்சார்பு கொண்டவர்களாக, தன்னம்பிக்கை மிக்கவர்களாக உருவாக்குவதற்கும் தமிழக அரசினால் 1983 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் ஏழை, எளிய மகளிரையெல்லாம் ஒன்றுபடுத்தி சுயஉதவிக் குழுக்களாக மாற்றி அச்சுயஉதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்தி, மகளிரின் ஆற்றலை மேம்படுத்தி சுயஉதவிக் குழுக்கள் இயக்கத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஒரு மாபெரும் சக்தியாக உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தொடர் முயற்சிகளின் விளைவாகவும், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டச் செயல்பாடுகளின் காரணமாகவும் தமிழ்நாட்டில் உள்ள ஏழை மக்களின் நடைமுறை வாழ்வில் பெரும் மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளான (Sustainable Development

Goals) வறுமையின்மை மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றை அடைவதற்கு இந்நிறுவனம் பெரும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நான்கு முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

i. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

ii. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

நகர்ப்புற ஏழை மக்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

iii. தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம்

இத்திட்டமானது 2019 ஆம் ஆண்டு முதல் 5 மாவட்டங்களில் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாசாரத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

iv. அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

உழைக்கும் மகளிருக்கு அவர்களின் பணியிடங்களுக்கு எளிதில் சென்று வர ஏதுவாக மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் துவக்கத்தில் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் சுயஉதவிக் குழுக்களை அமைத்து மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தியது. இத்திட்டம் முதலில் தருமபுரி மாவட்டத்திலும் அதனை தொடர்ந்து சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக தமிழ்நாடு அரசு அனைத்து மாவட்டங்களுக்கும்

2020 மார்ச் 16]

'மகளிர் திட்டம்' என்ற பெயரில் மகளிரின் முன்னேற்றத்திற்காக இத்திட்டத்தை படிப்படியாக செயல்படுத்தியது.

சமூக பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக் கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுயஉதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்த இத்திட்டத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் யாவும் மகளிர் திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவங்களேயாகும்.

7.1.1. சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தையும், அவர்களுக்குள்ளேயே உள்கடன் வழங்குதலையும், ஒன்று கூடி ஒற்றுமையாகவும் மற்றும் ஜனநாயக ரீதியாகவும் முடிவெடுக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதும் சுயஉதவிக் குழுக்களின் நோக்கங்களாகும். மகளிரின் பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டு சுயஉதவிக் குழுக்கள் முறையான கூட்டம் நடத்துதல், சேமித்தல், உள்கடன் வழங்குதல், கடன் திரும்ப செலுத்துதல், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல் ஆகிய பஞ்ச சூத்திரங்களை கடைப்பிடித்து சிறப்புடன் செயல்பட பயிற்சி வழங்கப்படுகிறது.

அட்டவணை 7.1

சுயஉதவிக் குழுக்கள் பற்றிய விவரம்

1.	சுயஉதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை	6.96 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	103.32 இலட்சம்
2.	ஊரகப் பகுதி சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை	4.67 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	69.28 இலட்சம்

3.	நகர்ப்புற பகுதி சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை	2.29 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	34.04 இலட்சம்
4.	மொத்த சேமிப்பு	8,921 கோடி ரூபாய்
5.	ஆதார நிதி பெற்ற சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை	5.98 இலட்சம்
6.	சுயஉதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு (2011-2020)	65,930 கோடி ரூபாய்

7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012-2013 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோரே இலக்கு மக்கள் ஆவர்.

7.2.1. முக்கிய அம்சங்கள்:

- மிகவும் ஏழைகள், ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரிடத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுயஉதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ஊரகப் பகுதிகளில் ஏழை மக்களின் வளர்ச்சிக்காக சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- சமூக மேம்பாட்டிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகளின்மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்.
- சுயஉதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்துதலை எளிதாக்குதல்.
- சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

2020 மார்ச் 16]

- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாடு பயிற்சி அளித்தல்.
- அரசுத் துறைகள்மூலம் கிடைக்கப்பெறும் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

7.2.2. செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ்நாட்டின் 36 மாவட்டங்களில் 388 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது அவற்றுள் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் செயல்படும் 120 வட்டாரங்களும் மற்றும் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படும் (NRETP) 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களும் அடங்கும்.

அட்டவணை 7.2

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தற்போது செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விவரம்

வ. எண்	திட்டம்	மாவட்டங்கள்	வட்டாரங்கள்	ஊராட்சிகள்
1.	முதற்கட்டம்	20	60	2250
2.	இரண்டாம் கட்டம்	32	110	3391
3.	மூன்றாம் கட்டம்	26	98	2472
4.	நான்காம் கட்டம் (புதுவாழ்வுத் திட்ட வட்டாரங்கள்)	**31**	**120**	**4174**
கூட்டுத்தொகை		**36**	**388**	**12,287**
5	**சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்** (PTSLP)	-	-	238
மொத்தம்		36	388	12,525

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

முதற் கட்டம்:- 2012-2013 ஆம் ஆண்டு முதல் 60 வட்டாரங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் 2,250 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழும், 73 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டாம் கட்டம்:– 2013-2014 ஆம் ஆண்டு முதல் 27 மாவட்டங்களிலுள்ள (தற்போது 32 மாவட்டங்கள்) 110 வட்டாரங்களைச் சார்ந்த 3,491 கிராம ஊராட்சிகளில் 3,391 கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும், எஞ்சியுள்ள 100 கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலமும் பயன்பெற்று வருகின்றன.

மூன்றாம் கட்டம்:– 2014-2015 ஆம் ஆண்டு முதல் மூன்றாம் கட்டமாக 98 வட்டாரங்களில் உள்ள 2,536 கிராம ஊராட்சிகளில் 2,471 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள 65 கிராம ஊராட்சிகளில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நான்காம் கட்டம் (ஜூலை 2017 முதல்):– தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் முந்தைய 26 மாவட்டங்களில் (தற்போது 31 மாவட்டங்கள்) 120 வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. தற்போது இவை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


7.2.3. உயர்நிலைக் குழு அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை அவர்களின் தலைமையில் உயர் நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், தலைமை செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை

2020 மார்ச் 16]

இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தினைச் செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தனி நிருவாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

7.2.4. திட்டச் செயல்பாடுகளின் வரிசை



7.3. திட்டச் செயல்பாடுகள்

ஒவ்வொரு ஊராட்சியிலும் திட்டத்தின் செயல்பாடுகள் விரிவான முறையில் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்படுகின்றன:

7.3.1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு

கலை நிகழ்ச்சிகள், தெரு நாடகங்கள், பேரணி, ரத ஊர்வலம் போன்றவற்றின் மூலமும் சுவர் ஓவியங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமங்களிலுள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

7.3.2. சுயஉதவிக் குழுக்கள் விவரக் கணக்கெடுப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் செயலாற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம

ஊராட்சிகளிலும்,சுயஉதவிக்குழுக்களின்புள்ளிவிவரக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ள குழுக்கள், செயல்படாத மற்றும் கலைந்த குழுக்கள் போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. செயல்பாட்டில் இல்லாத சுயஉதவிக் குழுக்களை திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலமாக, மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

7.3.3. மக்கள் நிலை ஆய்வு

2013-2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை பல்வேறு கட்டங்களாக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரைக் கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன்கூடிய மக்கள் நிலை ஆய்வு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய மக்கள் பங்கேற்புடன்கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் பிற யுக்திகளான நடைப்பயணம், சமூக வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு குழுக்களில் சரிபார்க்கும் முறை போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின்மூலம் தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியல் அனைத்து குக்கிராமங்களிலும் உள்ள முக்கியமான இடங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, சேர்த்தல் மற்றும் விடுதல் ஏதேனும் இருப்பின், அவற்றையும் பெற்று, இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது.

இத்தகைய மக்கள் நிலை ஆய்வு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு இப்பட்டியலே அடிப்படையாக உள்ளது.

7.3.4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஏழைகள், மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் போன்ற இலக்கு மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு சங்கமாகும். 11 முதல் 19 உறுப்பினர்களை கொண்ட இச்சங்கம், இலக்கு மக்களைக்

2020 மார்ச் 16]

கண்டறிந்து, அவர்களுக்குத் தனி நபர் கடன் வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீட்கவும், அவர்களின் நலிவுநிலையைக் குறைக்கவும் உதவுகின்றது. இச்சங்கத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் அலுவல் சாரா மரபுவழி தலைவராக செயல்படுவார்.

இதுவரை 12,734 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (பழங்குடியினருக்கான 472 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட) திட்டச் செயலாக்கப் பகுதிகளான 388 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

7.3.5. சமூகத் தணிக்கைக் குழு ஏற்படுத்துதல்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், சமூகத் தணிக்கைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கைக் குழுவில் 5 முதல் 7 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை சமூகத் தணிக்கைக் குழு கண்காணித்து, கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கின்றது.

7.3.6. புதிய சுயஉதவிக் குழுக்கள்

மக்கள் நிலை ஆய்வின்மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தகப் பராமரிப்புப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பஞ்சசூத்திரங்களைக் கடைப்பிடித்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பல்வேறு உதவிகளைப் பெற்று பொருளாதார முன்னேற்றம் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 11,264 சுயஉதவிக் குழுக்கள் (புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட குழுக்கள் சேர்த்து) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

சுயஉதவிக் குழுக்கள் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக, குழுக்களை தரமதிப்பீடு செய்து, ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக் கடன் போன்ற நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

7.3.7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

ஊராட்சியில் செயல்படும் அனைத்து சுயஉதவிக் குழுக்களும் ஜனநாயக முறையில் ஒன்றாக இணைந்து செயல்படவும், சுயஉதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தும் வகையில், பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திடவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு பெற்ற அமைப்புகளாகும்.

இப்பதிவுச் சட்டம் 1975-ன் விதி எண் 25 மற்றும் 42-ன் படி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்த அமைப்பானது, ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம மக்களுக்கும் இடையே மிக முக்கியமான இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

- மக்கள் நிலை ஆய்வின்மூலம் கண்டறியப்பட்ட தகுதிவாய்ந்த மகளிரைக் கொண்டு சுயஉதவிக் குழுக்களை அமைத்தல்.
- தேவையான நிதியினை பெற்று வழங்குதல்மூலம் சுயஉதவிக் குழுக்களை வலிமைப்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்.
- திட்டம் சார்ந்த தகவல்கள் சுயஉதவிக் குழுக்களிடம் சென்றடைய செய்தல்.
- சுயஉதவிக் குழுக்களின் கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், தணிக்கை செய்தல், குழுக்களை தரம் பிரித்தல் மற்றும் கடன் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்தல்.
- வங்கிகளிலிருந்து நேரிடையாக கடன் பெற்று, சுயஉதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியிலான கடன் அளிப்பதன்மூலம் இடைநிலை நிதி நிறுவனமாக செயல்படுதல்.
- அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மகளிரின் வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாடு தொடர்பான சமூகப்

2020 மார்ச் 16]

பிரச்சினைகள், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் பாலின பிரச்சினைகள் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

துணைக் குழுக்கள்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, கிராம வளர்ச்சி மற்றும் குழு உறுப்பினர்களின் நலனுக்காக பல்வேறு செயல் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும்பொருட்டு, கீழ்க்காணும் துணைக் குழுக்களை அமைத்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

- குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல் துணைக் குழு
- கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்பு துணைக் குழு
- வாழ்வாதார துணைக் குழு
- சமூக மேம்பாட்டிற்கான துணைக் குழு

மொத்தம் 388 வட்டாரங்களில், 12,358 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், 166 வாழ்வாதார துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.3

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் விவரம்

வ. எண்	திட்டம்	வட்டாரங்கள்	கிராம ஊராட்சிகள்	ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு	வாழ்வாதார துணைக் குழுக்கள் *	மொத்தம்
1.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் முந்தைய புதுவாழ்வு திட்டம்	388	12,287	12,120	166	12,286
2.	சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	-	238	238	-	238
மொத்தம்		388	12,525	12,358	166	12,524

*10-க்கும் குறைவான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உடைய கிராம ஊராட்சிகளில் வாழ்வாதாரத் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துணைக் குழுக்கள் அவ்வூராட்சிகளில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பாக செயல்படுகிறது.

7.3.8. வட்டார அளவிலான கூட்டமைப்பு

தமிழ்நாட்டில், 385 வட்டாரங்களில் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. வட்டாரத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை முதன்மையாகக் கொண்டு வட்டார அளவிலான கூட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

வட்டார அளவிலான கூட்டமைப்பின் பணிகள்

- வங்கிக் கடன் இணைப்பைப் பெறுவதில் சுயஉதவிக் குழுக்களின் திறனை மேம்பாடு அடையச் செய்தல்.
- வங்கிக் கடனை குறித்த காலத்தில் திருப்பி செலுத்துவதை உறுதி செய்தல்.
- நிலையான வருமானம் தரத்தக்க இலாபகரமான வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளைக் கண்டறிதல்.
- சமூக உள்ளாக்கத்தை உறுதி செய்தல் மற்றும் பாலின சமத்துவம், மகளிருக்கான பல்வேறு அரசு நலத் திட்டங்களில் உள்ள உரிமைகள் மற்றும் உதவிகளை பெற வழிவகை செய்தல்.
- திட்டம் குறித்த பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை சமூக வள பயிற்றுநர், சமூக வல்லுநர்கள்மூலம் அளிக்கும் பயிற்சி நிறுவனமாக வட்டார அளவில் செயல்படுதல்.

7.3.9. சுயஉதவிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்

அ. சுயஉதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி

மூன்று மாதம் முடிவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் நிதி வழங்கப்படுகிறது. இந்த ஆதார நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

2019-2020 ஆம் ஆண்டில் தகுதியான 5,745 சுயஉதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.15,000/- வீதம் மொத்தம் 8.62 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

ஆ. சமுதாய முதலீட்டு நிதி

சுயஉதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக இத்திட்டத்தின்கீழ் கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும். சமுதாய முதலீட்டு நிதியானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு, அவற்றின்மூலம் தகுதியான சுயஉதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுயஉதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000/- வீதம் ஆண்டிற்கு 9 சதவீத வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. சமுதாய முதலீட்டு நிதி வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புமூலம் குறைந்தபட்சம் 50 சதவீதம் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனாக விடுவிக்கப்படுகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, 100 சதவீதம் கடன் திருப்பம், முறையான பயன்பாடு மற்றும் சமுதாய முதலீட்டு நிதியினை சுழற்சி முறையில் அனைத்துக் குழுக்களும் பெறுவதை உறுதி செய்யும் பணியினை மேற்கொள்ளும்.

2019-2020 ஆம் ஆண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கான சமுதாய முதலீட்டு நிதி ரூ.50,000 வீதம் 15,238 சுயஉதவிக் குழுக்களுக்கு மொத்தம் 76.19 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இ. நலிவுநிலைக் குறைப்பு நிதி

மக்கள் நிலை ஆய்வின்போது மாற்றுத் திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை தனி நபர் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்றோருக்கான நிதியானது மாற்றுத் திறனாளிகளின் உணவுப் பாதுகாப்புக்கும், வாழ்வாதார செயல்பாடுகளுக்கும், உடல் நலக் குறைவு அல்லது எதிர்பாரா மருத்துவ செலவிற்கும் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது. நலிவுநிலைக் குறைப்பு நிதி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின்மூலம் தனிநபர் கடனாக வழங்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 14.60 கோடி ரூபாய் நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக 5,839 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு ரூ.10,000/- முதல் ரூ.25,000/- வரை வழங்கப்பட்டுள்ளது.

7.4. திறன் மேம்பாடு

7.4.1. பணியாளர்களுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்களுக்கு அவசியத் தேவையாக வாழ்வாதார இயக்கம் குறித்து பல்வேறு கூறுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வியக்கத்தின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை இயக்கப் பணியாளர்கள் அறிந்துகொள்ளவும் அவற்றை சீரான முறையில் செயல்படுத்தவும் இயக்கம் குறித்த கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:

1. தூண்டல் பயிற்சி - I (நிறுவனக் கட்டமைப்பு)
2. தூண்டல் பயிற்சி - II
3. கருப்பொருள் சார்ந்த பயிற்சி

7.4.2. சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு சமுதாயம் சார்ந்த அமைப்புகளே அடிப்படையாக விளங்குகின்றன. ஏழை மக்களின் அமைப்புகளான சுயஉதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், மக்கள் கற்றல் மையம் (மகமை) போன்றவை தங்கள் உறுப்பினர்களுக்கு சிறந்த சேவைகள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை தொடர்ந்து மேற்கொள்கின்றன. பொதுவாக இப்பயிற்சிகளின் முக்கிய நோக்கமாக சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நிருவாகமும் நிதி மேலாண்மையும் திகழ்கின்றன. திறன் வளர்ப்பிலுள்ள கீழ்க்கண்ட அனைத்து நிலை பயிற்சிகளும் இவ்வமைப்புகளுக்கு அளிக்கப்படுகின்றன:

- புதிதாக அமைக்கப்பட்ட சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிருவாகிகளுக்கு நிருவாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.

2020 மார்ச் 16]

- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடுகள் விளக்கப் பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்கள் மற்றும் சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் நிருவாகிகள் பயிற்சி

7.4.3. முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும்சமுதாய வளப் பயிற்றுநர்கள் தொகுப்பை உருவாக்குதல்

எந்த ஒரு சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கும், சமூக மூலதனம் என்பது ஒரு மிகப்பெரிய அம்சமாகும். சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப திட்டத்தினை உறுதிப்படுத்திட, வளப் பயிற்றுநர்கள் பல்வேறு நிலைகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதில் மிகச்சிறந்த செயல்திறன் படைத்த வளப் பயிற்றுநர்கள் அடையாளம் காணப்பட்டு, முதன்மைப் பயிற்றுநர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மைப் பயிற்றுநர்கள் பிற வளப் பயிற்றுநர்களுக்கு திட்டம் சார்ந்த கருப்பொருட்களை விளக்கும் பயிற்சியாளர்களாக செயல்படுகின்றனர். இவர்களிடம் பயிற்சி பெற்ற வளப் பயிற்றுநர்கள் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு பயிற்றுநர்களாக செயல்படுகின்றனர்.

இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட பயிற்றுநர்கள், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் பயிற்சிகள் அளித்திடும் வல்லுநர்கள் ஆவர். இப்பயிற்றுநர்களை உருவாக்கிடும் முனைப்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சீரிய முறையில் செயல்பட்டு, திட்டம் சார்ந்த பயிற்சிகள் பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்கிறது. பயிற்சிகளின்மூலம் உருவாக்கப்பட்ட பல்வேறு சமுதாய பயிற்றுநர்கள் விபரம் பின்வருமாறு.

- சமுதாய சுயஉதவிக் குழு பயிற்றுநர்கள் (CSTs) பணி – சமுதாய சுயஉதவிக் குழு பயிற்றுநர்கள் சுயஉதவிக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் அக்குழுக்களின் செயல்பாடு குறித்த தொடர் கண்காணிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திட கண்டறியப்படுகின்றனர். இவர்கள் அடிப்படையில் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஆவர். கிராம அளவில் துடிப்புடன் செயல்படும் சுயஉதவிக் குழுவில் இருந்து சிறப்பாகச் செயல்படும் உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, அவ்வுறுப்பினர்கள் தொடர் பயிற்சிகளுக்கு

[2020 மார்ச் 16

உட்படுத்தப்பட்டு, திறன் மேம்பாடு பெற்று சுயஉதவிக் குழுக்களின் கண்காணிப்பு மற்றும் அக்குழுக்களுக்கான தேவை சார்ந்த நிகழ்வுகளில் உதவி புரிகின்றனர். சுயஉதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாட்டையும் அவர்களின் பஞ்ச சூத்திரத்தைக் கடைப்பிடிப்பதையும் மேற்பார்வையிடுதல் இவர்களின் முக்கிய பணியாகும். இவர்கள் சுமார் 10 முதல் 15 குழுக்களை கண்காணித்து வருகின்றனர்.

- சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர்கள் (CDFs)–ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் ஒருவர் என்ற முறையில் சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு சமுதாயம் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மேலாண்மைக்கு பணியமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கண்டறிந்து, நிறுவனம் சார்ந்த தேவையான மறுவாழ்வு பயிற்சிகளை வழங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு அரசுத் துறை சார்ந்த சேவைகளை ஒருங்கிணைத்து உதவிகள் பெற்றுத் தந்திட வழிவகை செய்வர்.

- சமுதாய வளப் பயிற்றுநர்கள்-வேலைவாய்ப்பு (CRP-Jobs) -இளைஞர்களுக்கான பல்வேறு திறன் சார்ந்த பயிற்சிகளை செவ்வனே செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இப்பயிற்சிகளை வழங்குவதற்காக கிராமங்கள்தோறும் இளைஞர்களை திரட்டுவதற்கு சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வளப் பயிற்றுநர்கள் கிராம அளவில் தகுதியுடைய இளைஞர்களைத் தேர்வு செய்வதோடு அவர்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை திரட்டி நிருவகிக்கிறார்கள். அந்த தகவல்களின் அடிப்படையில் தகுதியான இளைஞர்களை அவர்கள் விருப்பப்படும் தொழில் சார்ந்த பயிற்சி பெற வழிவகை செய்வதோடு அவர்களின் முன்னேற்றத்தையும் கண்காணிக்கின்றனர்.

- சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் (CBCs)-சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பை ஏற்படுத்தி செயல்படுத்திட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் தொகுப்புகளில் (Clusters) தொகுப்பு ஒன்றுக்கு

2 நபர்கள் வீதம் சிறப்பாகச் செயல்படும் குழுக்களின் உறுப்பினர்கள் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு தங்கள் பணியினை திறம்பட செய்திடும் விதமாக வங்கி இணைப்பு, நிதி உள்ளாக்கம் மற்றும் நிதி தகவல்கள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகளின்மூலம் இச்சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பை ஏற்படுத்துவதுடன், சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் காப்பீடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். அத்துடன் நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் மின்னணு பணப் பரிவர்த்தனை குறித்த கூட்டங்கள் நடத்தி அதன்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

7.4.4. வங்கியாளர்களுக்கான பயிற்சி

சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு பெற்றுத் தருவது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். சுயஉதவிக் குழுக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் வருவாய் பெருக்கத்திற்கு கடன் இணைப்பு சரியான வட்டி விகிதத்தில் தேவைப்படுகிறது. வங்கிக் கடன் அளிப்பதில் வங்கி மேலாளர்கள்/அலுவலர்கள் பணியானது மிக முக்கியம் வாய்ந்ததாகும். எனவே சுயஉதவிக் குழு இயக்கம், வறுமை ஒழிப்பில் அதன் பங்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூறுகள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் இதர திட்டங்கள் பற்றி வங்கி அலுவலர்கள் அறிந்திருத்தல் அவசியமாகிறது. இந்த நோக்கத்திற்காக சுயஉதவிக் குழு–வங்கி இணைப்பு, நிதிக் கல்வி, நிதி உள்ளாக்கம், மின்னணு பரிவர்த்தனை அறிவு போன்ற பல தலைப்புகளில் விளக்கப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு திறன்மிக்கவளப்பயிற்றுநர்கள்கொண்டகுழுஏற்படுத்தப்பட்டுள்ளது.

7.4.5. 2019-20ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- 3,902 புதிய சுயஉதவிக்குழுக்களின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்கு 1,951 தொகுப்புகளில் (தொகுப்பிற்கு 30 உறுப்பினர்கள்) பயிற்சிகள் வழங்கப்பட்டன.

[2020 மார்ச் 16

- சுயஉதவிக் குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவதற்காக 10,607 சமுதாய சுயஉதவிக் குழு பயிற்றுநர்களுக்கு கணக்கு பராமரிப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

- 7,842 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள 39,210 உறுப்பினர்களுக்கு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிருவாகம் மற்றும் நிதி ஆளுமை பயிற்சி வழங்கப்பட்டது.

- 400 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு நிதி உள்ளாக்கத்தை வலிமைப்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டது.

- 8,013 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் கணக்கு புத்தக பராமரிப்பாளர்களுக்கு கணக்கு புத்தக பராமரிப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

- வட்டார அளவிலான கூட்டமைப்பின் 1,432 பிரதிநிதிகளுக்கும் மற்றும் 1,565 வட்டார அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கும் வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிருவாகம் மற்றும் நிதி ஆளுமை பயிற்சி வழங்கப்பட்டது.

7.5. தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்புடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் இத்திட்டமானது மாநில அரசின் வாயிலாக 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. "ஊரக ஏழை இளைஞர்களைப் பொருளாதார ரீதியாக சுதந்திரம் உடையவர்களாகவும் மற்றும் உலகளவில் பொருத்தமான தொழிலாளர் சக்தியாகவும் மாற்றுவதே" இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட ஊரக ஏழை இளைஞர்களுக்கு தொடர்ச்சியான மாத வருமானம் அல்லது மாநில அரசின் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்திற்கு மேலான மாத வருமானத்துடன்கூடிய வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தின் சிறப்பம்சங்கள்:

- ஊரகப் பகுதியின் ஏழைக் குடும்பங்களில் உள்ள 18 முதல் 35 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள் (நலிவடைந்த பிரிவினரான பழங்குடியினர், விதவைகள், கைவிடபட்ட பெண்கள், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு வயது வரம்பு 45 ஆகும்).

- நிரந்தர பதிவெண் பெற்ற, வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சியில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்கள்/தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் திட்டச் செயலாக்க முகமையாக விண்ணப்பிக்கவும், பயிற்சி வழங்கவும் தகுதியானவர்களாக அனுமதிக்கப்படுகின்றனர்.

- சமூகத்தில் பின்தங்கிய பிரிவினர்களான தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 62%, பழங்குடியினர் 3%, சிறுபான்மையினர் 16%, மாற்றுத் திறனாளிகள் 3% மற்றும் பெண்கள் 33% (அனைத்து பிரிவுகளிலும் சேர்த்து) ஆகியோரை கட்டாய ஒதுக்கீடுமூலம் சமூக உள்ளாக்கத்தின்கீழ் சேர்ப்பது இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.

- பயிற்சி பெற்ற 70% இளைஞர்களுக்கு கட்டாயப் பணியமர்வு.

- தொழில் பயிற்சி பிரிவு, திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பு சந்தையின் தேவைக்கேற்ப பயிற்சி காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.

- உண்டி உறைவிடப் பயிற்சியாகவும், உண்டி உறைவிடம் அல்லாத பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது.

- இளைஞர்களைப் பயிற்சிக்காக ஒன்று திரட்டுவதும் சமுதாய அடிப்படையிலான கண்காணிப்பும் களப் பணியாளர்களான சமுதாய வளப் பயிற்றுநர் வேலைவாய்ப்பு மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள்-திறன்மூலம் (CRP Jobs, BC skills) எளிதாக்கப்பட்டுள்ளது.

- பயிற்சியானது தொழில் சார்ந்த திறன்கள் மற்றும் தொழில் சாரா திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு, மென் திறன்கள் மற்றும் பணியிடப் பயிற்சி (OJT) ஆகியவற்றிற்கான பாடத் திட்டத்தை உள்ளடக்கியதாகும்.

[2020 மார்ச் 16

- பயிற்சியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மதிப்பீடு மற்றும் சான்றிதழ்கள் அரசு நிறுவனங்களான தேசிய தொழிற் பயிற்சி குழு (NCVT) மற்றும் திறன் பிரிவு குழுவின்மூலம் (SSC) வழங்கப்படுகிறது.
- குறைந்தபட்ச மாத வருமானம் ரூ.6000/- அல்லது மாநிலத்தில் பகுதித் திறன்வாய்ந்த இளைஞர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல் பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு பணியமர்வின்போது வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. இருப்பினும் தமிழ்நாட்டின் DDU-GKY திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு குறைந்தபட்சம் மாத ஊதியம் ரூ.8,000/- பெற்றுத் தர வலியுறுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டம் பணியமர்வுக்கு பின்பான உதவித் தொகை, பணி முன்னேற்றம் மற்றும் இடம்பெயர்வு ஆதரவு மையம் ஆகிய வசதிகளோடு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பணியமர்வுக்கு வழிவகை செய்கிறது.
- பணியமர்வுக்கு பின் ஓராண்டு தொடர் கண்காணிப்பு செய்யப்படுகிறது.
- இளைஞர்களைத் திரட்டும் நிகழ்வில் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

அட்டவணை 7.4

தொழில்வாரியான திறன் பயிற்சி சாதனை விவரம் (2012-2013 முதல் 31-1-2020 வரை)

வ. எண்	தொழில் பிரிவு	பயிற்சி பெற்றவர்கள்
1.	தொழிற்சாலைகள்	4,203
2.	தகவல் தொழில்நுட்பம்	14,868
3.	உடைகள் மற்றும் ஆயத்த ஆடைகள்	10,040
4.	சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்	3,483
5.	கட்டுமானம்	1,221
6.	ஆட்டோமொபைல்	4,353

2020 மார்ச் 16]

வ. எண்	தொழில் பிரிவு	பயிற்சி பெற்றவர்கள்
7.	அழகுக்கலை பயிற்சி	1,236
8.	தீ மற்றும் பாதுகாப்பு	458
9.	சுகாதாரம்	2,904
10.	சில்லரை வணிகம்	2,535
11.	தோல் பொருட்கள்	720
12.	ஓட்டுநர் பயிற்சி	2,110
13.	ஆட்டோமோடிவ்	760
14.	மின்னணுவியல்	632
15.	மூலதனப் பொருட்கள்	541
16.	தளவாடங்கள்	647
17.	வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு	484
	மொத்தம்	51,195

2016-2017 ஆம் ஆண்டு முதல், அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட திட்ட ஒப்புதல் குழுமூலம் இளைஞர்களுக்கு பயிற்சியுடன்கூடிய வேலைவாய்ப்பு திட்டங்கள் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த திட்டச் செயலாக்க முகமைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் 2016 முதல் 2019 வரையிலான இலக்காக 44,416 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இதுவரை 102 பயிற்சி நிறுவனங்களுக்கு திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2019 முதல் 2022 வரையிலான காலத்திற்கு மொத்தம் 84,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க 1,026.50 கோடி ரூபாய் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7.5.1. தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்

i. தொலைபேசி அழைப்பு மையம் (Dial a Job)

மாநில இயக்க மேலாண்மை அலகானது இத்திட்டத்திற்கு சரியான பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைக்கும் பொருட்டு Dial a

Job எனும் அழைப்பு மையத்தை அமைத்து செயல்படுத்தி வருகிறது. இவ்வழைப்பு மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அழைப்பாளர்களுக்கு

- திட்ட விவரம் (DDU-GKY).
- மாவட்டங்களில் அமைந்துள்ள பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வழங்கப்படும் பயிற்சிகள் விவரம்.
- மாவட்ட அலுவலகம் மற்றும் பயிற்சி நிறுவனங்களின் தொடர்பு விவரங்கள்.
- ஊரக இளைஞர்களுக்கு ஆலோசனை –போன்ற தகவல்களை வழங்கி வருகிறது.

ii. பயிற்சி அட்டவணை

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய திட்டத்தை சிறந்த முறையில் கண்காணிக்க முதன் முறையாக பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி அட்டவணை இத்திட்டத்தின்கீழ் செயல்படும் அனைத்து பயிற்சி நிறுவனங்களின் இலக்குகளைப் பற்றிய விவரங்களை வழங்குகிறது. மாவட்ட அளவிலுள்ள அணிகள் செயல் திட்டம் தயாரிக்கவும், இளைஞர்களை பயிற்சிக்கு ஒன்று திரட்டவும் இப்பயிற்சி அட்டவணை பயனுள்ளதாக உள்ளது.

7.5.2. திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலி (கௌசல் பஞ்சி)

18 முதல் 35 வயதிற்குட்பட்ட கிராமப்புற இளைஞர்களின் திறன் விபரங்களை சேகரித்து பதிவு செய்திட மத்திய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகம் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலியை (கௌசல் பஞ்சி) துவக்கியுள்ளது. திட்டச் செயலாக்க முகமைகள் இச்செயலிமூலம் பயிற்சியாளர்களின் திறன் தேவைகளை பதிவு செய்வதில் பங்களிக்க முடியும்.

ஓர் இளைஞர் ஏற்கெனவே உள்ள சமூக பொருளாதார சாதிவாரியான கணக்கெடுப்பின் (SECC) விவரங்களை பயன்படுத்தியோ அல்லது புதிய விண்ணப்பதாரராகவோ விவரங்களை உள்ளிடுவதன்மூலம் தன்னை பதிவு செய்யலாம்.

2020 மார்ச் 16]

31-1-2020 வரை இச்செயலி மூலமாக 4,47,030 இளைஞர்களின் விவரங்களை பதிவு செய்து தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

7.5.3. ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

கிராமப்புற இளைஞர்களிடையே வேலையின்மையைக் குறைக்கும் நோக்கத்தோடு கனரா வங்கி மற்றும் சிண்டிகேட் வங்கியால் ஊரக வளர்ச்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு பயிற்சி (RUDSETI) நிறுவனங்கள் பெங்களூரு, மதுரை போன்ற நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஊரகப்பகுதிகளில் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கிராமப்புற இளைஞர்களை தொழில்முனைவோராக உருவாக்கிட பல்வேறு வங்கிகள்மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETI) தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் பயற்சி பெறும் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள இளைஞர்களுக்கான பயிற்சி செலவினத்தையும் பயிற்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பிற்கான நிதி உதவியையும் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் வழங்குகிறது. மாநில அரசுகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பாரத சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) போன்ற மேம்பாட்டு நிறுவனங்களும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் (RSETIs) பயிற்சித் திட்டங்களுக்கு நிதி உதவிகளை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் 30 ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

பயிற்சி பெற்ற பயனாளிகள் அனைவரும் சுய வேலைவாய்ப்பு மேற்கொள்ளவும், அதற்கான வங்கிக்கடன் உதவி பெற வழிகாட்டவும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், DDU-GKY திட்டத்தின் மூலமாக ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான இளைஞர்களைப் பயிற்சிக்காக ஒன்று திரட்டுவதிலும், அதற்கான நிதி விடுவிப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மாநில அளவில் மேற்கொள்வதிலும் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

[2020 மார்ச் 16

அட்டவணை 7.5

RSETI பயிற்சி மற்றும் பயன்பெற்றோர் விவரம்–2019-2020

வ. எண்	வங்கியின் பெயர்	RSETI பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை	பயிற்சி பெற்றவர்கள்	பயன் பெற்றவர்கள்	சுய வேலைவாய்ப்பு		ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்பு
					வங்கி கடன்	சுய நிதி	
1.	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	11	9,704	4,207	1,718	2,489	169
2.	இந்தியன் வங்கி	10	5,453	2,888	742	2,146	274
3.	கனரா வங்கி	6	3,329	3,136	771	2,365	432
4.	பாரத ஸ்டேட் வங்கி	2	1,178	819	248	571	58
5.	RUDSETI (**மதுரை**)	1	**643**	**384**	**180**	**204**	**79**
மொத்தம்		**30**	**20,307**	**11,434**	**3,659**	**7,775**	**1,012**

7.5.4. உன்னத்தி திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005 ஆனது கிராமப்புற குடும்பங்களின் நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாக கொண்டதாகும். ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள தகுதியான ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலைவாய்ப்பினை அளிக்க இச்சட்டம் உறுதி செய்கிறது.

இதன் மேம்படுத்தப்பட்ட வடிவமாக மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பயனாளிகளுக்கு திறன் சார்ந்த பயிற்சி வழங்கும் உன்னத்தி திட்டத்தினை உருவாக்கி உள்ளது.

திட்டத்தின் நோக்கம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பயனாளிகளுடைய திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது

உன்னத்தி திட்டத்தின் நோக்கமாகும். இதனால் அவர்கள் பகுதி நேர வேலைவாய்ப்பிலிருந்து முழு நேர வேலைவாய்ப்பிற்கு மாறுவதற்கு ஏதுவாகவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

7.6. நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன்

7.6.1. சுயஉதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு

சுயஉதவிக் குழு-வங்கிக் கடன் இணைப்பு திட்டத்தின்மூலம் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை மக்களை சென்றடைந்து அவர்களுக்கு "கடன் பெறும் உரிமை" உள்ளது என்பதை உறுதித் செய்துள்ளது. இந்த கடன் பெறும் உரிமை, வங்கிகளை சுலபமாக அணுகுதல் மட்டும் அல்லாமல் போதுமான கடன் அளவு, உரிய நேரத்தில் மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைப்பதை உறுதித் செய்கிறது. வங்கிக் கடன் இணைப்பு எண்ணற்ற குடும்பங்கள் கடன் சுமையிலிருந்து மீளவும், வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களை தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தைப் பெருக்கி குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ளவும் மற்றும் வறுமையின் மீளாச் சுழற்சியிலிருந்து விடுபடவும் உதவிகரமாக உள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெறவும் மற்றும் வங்கிகளுடன் வலுவான நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டு பொருளாதார தொழில்கள் தொடங்கி நடத்திடவும், அதிக அளவு கடன்கள் தொடர்ச்சியாக பெறவும் சுயஉதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வட்டி மானியம் சுயஉதவிக் குழுக்களின் கடன் சுமையை மேலும் குறைக்க உதவுவதன்மூலம் நமது மாநிலத்தில் பெண்களுக்கு பொருளாதார அதிகாரம் கிடைக்கப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2018-2019 ஆம் ஆண்டில், 2,95,612 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 11,448.99 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கியதன்மூலம் வங்கிக் கடன் இணைப்பு இலக்கான 11,000 கோடி ரூபாய்க்கு மேல் எய்தி சாதனை செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனை, நமது மாநிலத்தில் மகளிர் சுயஉதவிக் குழு வங்கிக் கடன்

இணைப்பு திட்டத்தின்கீழ், முதல்முதலாக எப்போதும் கண்டறியாத உயரிய சாதனையாகும்.

நமது மாநிலத்தில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் வருமானம் ஈட்டக்கூடிய, நீடித்த தன்மையுடைய தொழில்களை தொடங்கி குடும்ப வருமானத்தை உயர்த்திக் கொண்டு வறுமையிலிருந்து வெளிவர, ஒவ்வொரு சுயஉதவிக் குழுவின் சராசரி வங்கிக் கடனுதவி அளவு 6.00 இலட்சம் ரூபாய் இருக்க வேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும்.

2019-2020 ஆம் ஆண்டின் இலக்கான 12,500 கோடி ரூபாய்களில், 29-2-2020 வரை 3,03,703 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 13,300.64 கோடி ரூபாய் கடன்கள் கொடுக்கப்பட்டு கடந்த ஆண்டின் சாதனையை முறியடித்து புதிய சாதனை எய்தப்பட்டுள்ளது. மேலும், சுயஉதவிக் குழுக்களின் சராசரி கடன் அளவு 3.87 இலட்சம் ரூபாய் இருந்து 4.37 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் பொதுத் துறை வங்கிகள், தனியார் வங்கிகள், கிராமப்புற வங்கிகள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (DCCB/PACCs) மூலமாக நமது மாநிலத்தில் கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் 65,929.61 கோடி ரூபாய் வங்கிக் கடன் தொகை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், 80 சதவீத கடன் தொகையை வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களைத் தொடங்கி, குடும்ப வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் குறிக்கோளாகும்.

7.6.2 வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வங்கிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் போதிய அளவு தொடர்ந்து கடன்கள் வழங்கிட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட ஆறு வங்கிகளுடன் இதுவரையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

அட்டவணை 7.6

வ. எண்	வங்கியின் பெயர்	புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த நாள்
1.	ஐ டி பி ஐ வங்கி (IDBI Bank)	7-9-2017
2.	ஐசி ஐசி ஐ வங்கி (ICICI Bank)	7-9-2017
3.	பேங்க் ஆப் பரோடா (BOB)	25-7-2018
4.	பாரத ஸ்டேட் வங்கி (SBI)	25-1-2019
5.	யூகோ வங்கி (UCO)	6-11-2019
6.	தமிழ்நாடு கிராம வங்கி (TGB)	9-12-2019

புரிந்துணர்வு ஒப்பந்தம் கீழ்க்கண்ட முக்கிய கூறுகளை உள்ளடக்கியது

1. மத்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவுறுத்தலின்படி வங்கிக் கிளைகள் சுயஉதவிக் குழுக்களுக்கு காலதாமதமின்றி, போதுமான அளவு கடன்கள், தொடர்ந்து மறுகடன்கள் மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்க வேண்டும்.

2. பூனாவில் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான இந்திய பயிற்சி நிறுவனம் (Indian Institute of Banking and Finance–IIBF, Pune) மூலம் வங்கி வணிக தொடர்பாளர்களுக்கான (BC-Sakhi) பயிற்சி பெறப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களை வங்கிகள் நேரிடையாகவோ அல்லது வங்கியின் பெரு நிறுவன வணிக தொடர்பாளர்கள் (Corporate BC) மூலமாகவோ நியமிக்க வேண்டும்.

3. வங்கிகள், IIBF மூலமாக பயிற்சி பெற்ற மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களை, வணிக வசதிகள் வழங்கும் (Business Facilitators) தொடர்பாளர்களாக நியமித்து, வங்கி சார்பாக பொது மக்களிடமிருந்து சேமிப்பு, கடன் திரட்டுதல் மற்றும் நிலுவை கடன்களை வசூலிக்கும் முகவர்களை நியமித்து அதற்குரிய ஊக்கத் தொகை வழங்க வேண்டும்.

[2020 மார்ச் 16

மேற்கண்ட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்ட பிறகு, சுயஉதவிக் குழுக்களுக்கான கடன் உதவி வழங்கியது கணிசமாக அதிகரித்துள்ளது.

7.6.3 தமிழ்நாடு கிராம வங்கி

தமிழகத்தில் சேலம் மாநகரைத் தலைமை இடமாகக் கொண்டு வட தமிழகத்தின் 15 மாவட்டங்களை உள்ளடக்கி இந்தியன் வங்கியின் ஆதரவுடன் செயல்பட்டு வந்த பல்லவன் கிராம வங்கி மற்றும் விருதுநகரை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தின் தென் பகுதியில் 16 மாவட்டங்களில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆதரவுடன் செயல்பட்டு வந்த பாண்டியன் கிராம வங்கி ஆகிய இரண்டு ஊரக வங்கிகள் இந்திய அரசின் நிதி சேவைத் துறை (Department of Financial Services-GoI) ஆணைப்படி ஒருங்கிணைந்த (Amalgamation) "தமிழ்நாடு கிராம வங்கியாக" 1-4-2019 முதல் சேலம் மாநகரில் இந்தியன் வங்கி ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு கிராம வங்கியின் இயக்குநர் குழுமத்தின் (Board of Directors) 9 இயக்குநர்களில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்/ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம் ஆகியோர் இயக்குநர்களாகவும் தமிழக அரசின் பிரதிநிதிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு கிராம வங்கியும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் செயல்படுவதால், சுயஉதவிக் குழுக்கள் வங்கிக் கடன்மூலம் முழுமையான நிதி உள்ளாக்கம் (Deepening Financial Inclusion) அடையவும், சுயஉதவிக் குழுக்கள் சிறு தொழில் நிறுவனம் (Enterprises) துவங்க நிதி பெறுவதற்கும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

7.6.4. சுயஉதவிக் குழு கடன்களுக்கான ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்படி சுயஉதவிக் குழுக்கள், அவர்களின் தேவையின் அடிப்படையில், தவணைக் கடன்கள் (Term Loan) அல்லது ரொக்கக் கடன் (Cash Credit Limit-CCL) அல்லது இரண்டு வகை கடன்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2020 மார்ச் 16]

ரொக்கக் கடன் (Cash Credit Limit-CCL)

ரொக்கக் கடன் திட்டத்தின் கடன் உதவி பெற தகுதி பெற்ற சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் குறைந்தபட்சம் 5.00 இலட்சம் ரூபாய் கடன் தொகையை 5 ஆண்டு காலத்திற்கு கடன் தொகையாக வழங்கிடவும் ஆண்டு வாரியான பணம் எடுக்கும் கடன் அளவு (Drawing Power) முறையை பின்பற்றவும் வேண்டும் என்று வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழுக்களின் கடன் திருப்பிச் செலுத்துதல் திறனைப் பொறுத்து ஆண்டு வாரியாக இத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

7.6.5. சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் குழு (CBRM)

வங்கிகள், சமுதாயத்தினரை வங்கியின் செயல்பாட்டில் இணைத்துக் கொண்டு கடன்களை முறையாகத் திரும்ப செலுத்துவதற்கும், வாராக் கடன்களை வசூல் செய்து கொடுத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும் மற்றும் வங்கிகளுக்கும் உதவிகரமாக இருப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டதே சமுதாய பங்கேற்புடன் கடன் வசூலிக்கும் குழுவாகும்.

வங்கிகள் போதுமான கடன் அளவு கொடுப்பதற்கும், அதனைத் திறம்பட கண்காணிப்பதற்கும், கடன் தவணை தொகைகளை திரும்ப செலுத்துவதையும் மற்றும் வாராக் கடன்களை வசூலிப்பதற்கும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் ஒவ்வொரு வங்கி கிளைகளிலும் இக்குழு துவக்கப்படுகிறது. இக்குழு, வங்கிக் கடன் இணைப்பு பற்றிய பிரச்சினைகளை அவ்வப்போது கூட்டங்கள் நடத்தி ஆராய்ந்து தீர்வு காணும்.

7.6.6 சுயஉதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்

நிதி உள்ளாக்கக் குழுவின் எதிர்பார்ப்பின்படி, ஏழை எளிய மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஏழ்மையிலிருந்து வெளிவர, மத்திய அரசின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் 2013-2014 ஆம் ஆண்டில், சுயஉதவிக் குழுக்கள் பெறும் மொத்த வங்கிக் கடன்களில் ரூ.3 இலட்சம் வரையிலான கடன்களுக்கு "வட்டி மானியத் திட்டத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வட்டி மானியத் திட்டம் தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர்,

[2020 மார்ச் 16

திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு நேரடியாகவே செயல்படுத்துகிறது. மீதமுள்ள மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்மூலம் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது. கடன் தவணைத் தொகையை தொடர்ச்சியாக காலம் தவறாமல் மற்றும் தவணை தவறாமல் திரும்ப செலுத்தும் சுயஉதவிக் குழுக்கள் வட்டி மானியம் பெற தகுதி பெறும்.

இதுவரையில், 3,56,006 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, பொதுத் துறை வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள்மூலம் கிடைத்த கடன்களை முறையாக திருப்பிச் செலுத்தி வருவதால், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்மூலம் 59.91 கோடி ரூபாய் வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் இதுவரை மட்டும் 18.73 கோடி ரூபாய் வட்டி மானியம் 1,32,352 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2020-2021 ஆம் ஆண்டில், 20 கோடி ரூபாய் வட்டி மானியம் வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

7.6.7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு போதுமான அளவு வங்கிக் கடன்கள் கிடைக்கப் பெறாத போது அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நிறுவனத்தில் கடன் பெறுவதை தடுக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகள்மூலம் கடன்கள் பெற்று சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்க பெருங்கடன் திட்டம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ரூ.10.00 இலட்சம் முதல் 1.50 கோடி ரூபாய் அல்லது அதற்கும்மேல் வங்கிகளில் பெருங்கடனாக பெற்று கூட்டமைப்பில் உள்ள குழுக்களின் அதிகபட்ச கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. கடந்த 9 ஆண்டுகளில் 765 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 176.88 கோடி ரூபாய் கடன் பெற்று மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட பெருங்கடன் இலக்கு 150.00 கோடி ரூபாயில், 94 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 48.74 கோடி ரூபாய் பெருங்கடன் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

7.7. வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஏழை மக்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வாழ்வாதார வாய்ப்புகள் தேவை என்பதை அங்கீகரிக்கிறது. ஊரக ஏழை மக்களின் தற்போதைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சமாகும். ஊரகப் பகுதிகளில் 70%-க்கும் மேலான மக்கள் வேளாண்மையை சார்ந்த ஒரு விவசாயியாகவோ அல்லது விவசாயக் கூலியாகவோ வாழ்கின்றனர். இது தவிர, கால்நடை வளர்ப்பும் ஊரக மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகத் திகழ்கிறது.

வேளாண் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளின் முக்கிய நோக்கங்கள்:

- ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் இரண்டு வேளாண் சார்ந்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
- இரண்டு ஆண்டுகள் தொடர் ஆதரவின்மூலம் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மேல் கூடுதலாக வருமானம் கிடைப்பதை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் ஒவ்வொரு குடும்பத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் தொடர்ந்து வருமானம் கிடைக்கச் செய்தல்.
- வேளாண்மை, மரம் நீங்கலான வனம் சார்ந்த பொருள் தயாரித்தல் மற்றும் கால்நடை சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களை, சமூக மூலதனமாக உருவாக்கி, விரிவாக்க பணிகளை மேற்கொள்ளச் செய்தல்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, மேற்கண்ட குறிக்கோள்களை எய்திட முழு முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

வாழ்வாதார நடவடிக்கைகளை வட்டாரங்களுக்கு விரிவாக்குவதில் முன்னேற்றம்

வாழ்வாதார நடவடிக்கைகள், முதன் முதலாக "பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்" (மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா) கீழ் 2015-2016 ஆண்டு முதல் துவங்கப்பட்டது. இத்திட்டமானது

வேளாண்மையில் மகளிர் விவசாயிகளின் பங்கினை உணர்ந்து கொள்ளவும், அவர்களின் திறன் மேம்பாட்டிற்கும், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறை செயல்பாடுகளின்மூலம் அவர்களின் வருமானத்தை பெருக்கவும்கூடிய ஒருமித்த முயற்சியாகும். தமிழ்நாட்டில் பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமானது 24.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 14 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 2016-2017 ஆம் ஆண்டு முதல் வாழ்வாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஆண்டு செயல் திட்டத்தின்கீழ் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆண்டு வாரியாக வாழ்வாதார நடவடிக்கைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதற்கான திட்ட முன்னேற்ற விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 7.7

வட்டாரங்களின் தேர்வு விவரங்கள்

வ. எண்	வருடம்	மாவட்டங்களின் எண்ணிக்கை	வட்டாரங்களின் எண்ணிக்கை	பெண் விவசாயிகளின் எண்ணிக்கை
	பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்			
1.	முதல் கட்டம்	3	10	16,800
2.	இரண்டாவது கட்டம்	2	4	12,000
	மொத்தம்	4	14	28,800
	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்			
3.	2016-2017	14	7	38,400
4.	2017-2018	9	15	28,950
5.	2018-2019	9	29	47,150
6.	2019-2020	30	65	2,71,370
	மொத்தம்	30	116	3,85,870

2020-2021 ஆம் ஆண்டில் புதிதாக 29 வட்டாரங்களில் உள்ள 97,900 பெண் விவசாயிகள் பயன்பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2020 மார்ச் 16]

7.7.1. வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான செயல்பாட்டு உத்திகள்

பண்ணை சார்ந்த வாழ்வாதார உத்திகளை செயல்படுத்துவதன் முக்கிய நோக்கம், நீடித்த நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், உள்ளூரிலேயே கிடைக்கும் இடுபொருட்களை பயன்படுத்துதல், வேளாண் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளை குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை ஆகும். இதன்மூலம் ஒரு கிராமப்புற குடும்பத்தின் நிகர வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், குறைந்த செலவிலான, நீடித்த நிலைத்த இயற்கை வேளாண் சாகுபடி முறைகளான, இயற்கை முறை பயிர் பாதுகாப்பு முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை உள்ளிட்ட சாகுபடி முறைகள், காலநிலை மாற்றங்களுக்கேற்ற வழிமுறைகள், மண்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை, நீர்வளப் பாதுகாப்பு, பல்வகை பயிர்களின் சாகுபடியினை மேற்கொள்ளுதல் மற்றும் பாரம்பரிய இரகங்களை பரவலாக்கம் செய்வதன்மூலம் தகுந்த வேளாண் சூழலை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி வளர்ப்பு முதலான கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ளது. விவசாயம் சார்ந்த வாழ்வாதாரத்தில் கால்நடை வளர்ப்பையும் ஒரு அங்கமாக இணைத்து, சமூக மூலதனத்தை உருவாக்கி, கால்நடை வளர்ப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு சேவைகளை நேரிடையாக சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒவ்வொரு கிராம அளவிலும் குடும்ப அளவிலும் செயலாக்கப்படவுள்ள வாழ்வாதார உத்திகள் கீழ்வருமாறு:

அ. குடும்ப அளவில்

- குடும்ப உறுப்பினர்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும், நிரந்தரமான வருமானத்திற்கும் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் அமைத்தல்.

[2020 மார்ச் 16

- விதை நேர்த்திக்காக பீஜாமிர்தத்தையும், மண் வளத்தை மேம்படுத்துவதற்காக கஞ்சீவாமிர்தத்தையும் தயாரித்து பயன்படுத்துதல்.
- மண்புழு உரம், "நாடெப்" தொட்டிகள், ஒட்டும் பொறி, ஆகியவற்றின் உபயோகத்தை ஊக்குவிக்குதல்.
- மண்ணின் ஈரப்பதத்தைக் காக்க நிலப்போர்வை முறையை பயன்படுத்துதல்.
- திருந்திய நெல் சாகுபடி, நிலையான கரும்பு சாகுபடி, அசோலா உற்பத்தி, பொறிப் பயிர் வளர்ப்பு, வரப்பில் சாகுபடி போன்ற முன்னேற்ற நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

ஆ. ஊராட்சி அளவில்

- இயற்கை வழி பூச்சிக்கொல்லிகளின் விற்பனையகம்
- பண்ணை இயந்திர வாடகை மையம்
- பண்ணை விவசாய பள்ளிகள்
- சமுதாய வளப் பயிற்றுநர்கள்
- விதை வங்கி
- ஊராட்சி அளவிலான துணைக் குழுக்கள்
- உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி வேளாண்மை சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் சிறந்த அனுபவமுள்ள நபர்களை, வேளாண்மைக்கு ஒருவர் மற்றும் கால்நடைக்கு ஒருவர் என சமுதாய வளப் பயிற்றுநர்களாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக வாழ்வாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், வாழ்வாதாரத் திட்டம் கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சிறு மற்றும் குறு விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். அதிலும் நலிவுற்ற,

2020 மார்ச் 16]

கைவிடப்பட்ட மற்றும் பெண்களை குடும்பத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளாக தேர்வு செய்வதில் முன்னுரிமை பெறுவர்.

- அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயனாளிகளை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனங்களாக உருவாக்குதல்.
- பண்ணை விவசாயப் பள்ளிகள்மூலம் நீடித்த நிலைத்த இயற்கை சாகுபடி முறைகள், தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் நவீன சாகுபடி முறைகளைக் கற்றுத் தருதல்.
- திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து அவர்களை தற்சார்பு மிக்கவர்களாக மாற்றுதல்.
- சமுதாய மூலதனத்தை உருவாக்கிடவும், புதிய பகுதிகளில் வாழ்வாதாரத் திட்டத்தை விரிவுபடுத்திட சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்.
- வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பினை ஒருங்கிணைத்து மக்களின் முழுமையான வாழ்வாதாரத் தேவையைப் பூர்த்தி செய்தல்.

7.7.2. முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள்

தனிநபர் விவசாயிகள் தங்கள் தடைகளைக் கடந்து வரவும், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விலையினை தாங்களே நிர்ணயம் செய்யும் திறனை மேம்படுத்தவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது கூட்டு அணுகுமுறையினை ஊக்கப்படுத்திட விவசாயிகளை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குகிறது. வேளாண் மற்றும் கால்நடை தொழிலில் ஈடுபட்டு விளைப்பொருட்களை சந்தைப்படுத்தி வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர், விவசாயிகள் குழுவாக ஒருங்கிணைக்கப்பட்டு "உற்பத்தியாளர் குழு" உருவாக்கப்படுகிறது.

இந்த உற்பத்தியாளர் குழுக்கள் சாகுபடி செய்யும் பிரதான பயிருக்கேற்ப, அவர்களுக்கு, நீடித்த நிலையான சாகுபடி முறைகளான நுண்ணீர்ப் பாசனம், இயற்கைப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிருவாகம் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் செயல்

விளக்கங்கள், சம்பந்தப்பட்ட வேளாண்மை மற்றும் கால்நடைத் துறை மூலமாக ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் 3,850 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு 1,01,019 மகளிர் விவசாயிகள் இணைந்துள்ளனர். உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள், தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் மற்றும் பிற உள்ளீடுகளை கூட்டாக கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டலுக்காக விளைப்பொருட்களை ஒன்றிணைத்தல் போன்ற கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுவார்கள்.

இத்திட்டத்தின் வேளாண் சார்ந்த செயல்பாடுகள் 2020-2021 ஆம் ஆண்டில், மேலும் 979 கிராம ஊராட்சிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு ஒரு இலட்சம் பயனாளிகளை இந்த திட்டத்தில் இணைக்கவும், கூடுதலாக 850 உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் உற்பத்தியாளர் குழுவுக்கும் தொழில் மூலதனமாக 1.50 இலட்சம் ரூபாய் வரை கடனாக வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த செயல்பாடுகளுக்குத் தேவையான இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு எடுத்தல், உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்தல், சந்தைப்படுத்துதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுவார்கள். இது தவிர, ஒவ்வோர் உற்பத்தியாளர் குழுவும் தங்களது விளைப்பொருட்களை தூய்மைப்படுத்துதல், தரம் பிரித்தல், பொருட்களை எளிதில் எடுத்துச் செல்ல ஏதுவாக பிளாஸ்டிக் கிரேட்டுகள் மற்றும் பிற கருவிகள், பாதுகாப்பான சேமிப்பு மற்றும் போக்குவரத்துக்கான உபகரணங்கள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.50,000/- வரையிலும் கடனாக பெறலாம்.

7.7.3. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

தற்போதுள்ள போட்டி நிறைந்த சந்தை சூழலில் நிலைத்து நீடித்து வெற்றி பெறவும், மதிப்புத் தொடரில் உள்ள வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றை திறம்பட தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவும் ஏதுவாக உழவர் உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படவுள்ளன. இந்த உற்பத்தியாளர் நிறுவனங்கள் கம்பெனி/கூட்டுறவுச் சங்க சட்டம் அல்லது ஏதேனும் உரிய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும். இத்தகைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உயரிய சேவைகள் வழங்கும்

விதமாக, சுத்திகரிப்பு, அறுவடை பின்செய் நேர்த்தி, தேவைப்படும் இடுபொருள் வாங்கி வழங்குதல், சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் மற்றும் இதர பிற சேவைகளையும் வழங்கி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிட உதவிடும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் வரும் ஆண்டுகளில் 10 முதல் 20 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

7.7.4. வாடகை இயந்திர மையம்

வாடகை இயந்திர மையம் என்பது பல்வேறு பயிர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை ஒரே இடத்தில் கிடைக்கச் செய்து விவசாயப் பணிகளுக்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட நியாயமான வாடகைக்கு கொடுப்பது ஆகும். தேவைப்படும் நபர், அதற்குரிய கட்டணத்தை செலுத்தி தேவைப்படும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய வாடகை இயந்திர மையத்துக்குத் தேவையான கருவிகள் மற்றும் இயந்திரங்களை, அந்தந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்ற பயிர், இயந்திரங்களின் தேவை, அவற்றின் விலை, நிருவகிக்கும் திறன் போன்றவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். வாடகை இயந்திர மையம் சிறந்த முறையில், வருடம் முழுவதும் இயங்குவதற்கு ஏதுவாக அந்தந்த பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்ற பயிர்களுக்கு ஏற்ற கருவிகள், இயந்திரங்கள் மற்றும் அக்கருவிகளை இயக்கிடத் தேவையான நபர்களையும் மிகவும் கவனத்துடன் தேர்வு செய்வது அவசியமாகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் ஒரு மையத்திற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் 251 வாடகை இயந்திர மையங்கள் உருவாக்க ஆணை பெறப்பட்டு துறை மானியம் 80%, திட்ட நிதி 15%, பயனாளிகள் பங்களிப்பு 5% என்ற விகிதத்தில், ஒவ்வொரு வாடகை இயந்திர மையமும் உருவாக்கப்பட உள்ளது. மாவட்ட வாரியாக, வாடகை இயந்திர மையங்களை 5% பங்களிப்புடன் நடத்த ஆர்வமுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்புகளுக்கு இயந்திரங்கள் தேர்வு செய்வது தொடர்பாக பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாடகை இயந்திர மையங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் பாரமரிக்கப்படும். தேர்வு செய்யப்படும் இயந்திரங்களை இயக்குவதற்கு, ஆர்வமும் திறமையும் கொண்ட சுயஉதவிக் குழு பெண்கள் கொண்ட தொழிலாளர் படை

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 16

உருவாக்கப்பட்டு அதன்மூலம் பல்வேறு பயிர்களுக்கு தேவையான சேவைகள் வாடகை அடிப்படையில் வழங்கப்படும்.

வாடகை இயந்திர மையத்தின் குறிக்கோள்கள்:

- மகளிர் குழுக்களுக்கு வாடகை இயந்திர மையம் அமைப்பதற்கான வாய்ப்புகளை வழங்கி அதன்மூலம் வருவாயை அதிகரிக்க செய்தல்.
- பயிர்களுக்கேற்றவாறு மகளிர் கையாளக்கூடிய கருவிகள் மற்றும் இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதன்மூலம் வேளாண் மகளிரின் வேலைப் பளுவினைக் குறைத்தல்.
- பண்ணை இயந்திரமயமாக்கத்தினை சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் விரிவுப்படுத்துதல்.

7.7.5. பண்ணை விவசாயப் பள்ளிகள்

வேளாண் தொழிலில் விவசாயிகளை தீவிரமாக ஈடுபடுத்துவதற்கும் பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதற்கும் "பண்ணை விவசாயப் பள்ளிகள்" தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. பண்ணை விவசாயப் பள்ளிகள், விவசாயிகள் பங்கேற்பு முறைமூலம், வேளாண்மை சார்ந்த பிரச்சினைகளை குழுவாக ஆராய்ந்து முழுமையாக சோதித்துப் பார்த்துக் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பினை உருவாக்குகிறது. இந்த பண்ணை விவசாய பள்ளியில், ஒவ்வொரு பயிருக்கும் அந்த பயிரின் பருவகாலம் முடியும் வரை விவசாயிகள் குழுவாக வாரம் ஒரு முறை ஒரு மேற்பார்வையாளரின் தலைமையில் ஒருங்கிணைந்து, கலந்துரையாடி தங்களின் சந்தேகங்களை தீர்த்துக்கொண்டு, அந்த பயிருக்குரிய தொழில்நுட்பங்களை 8 முதல் 12 வாரங்களில் கற்றுக்கொள்வார்கள்.

பண்ணை விவசாயப் பள்ளிகள், 'கேட்டறிதலைவிட செய்து அறிதலே திறமையை வளர்க்கும்' என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த பள்ளிகளில் விவசாயிகள் தாங்களாகவே முன் வந்து விவசாய நடைமுறைகளை செய்து பார்த்து முடிவெடுக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். பண்ணை விவசாயப் பள்ளியில் விவசாயம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பை மட்டும் கற்றுக்கொடுக்காமல் நீர் மேலாண்மை, குடும்ப வாழ்வாதார

2020 மார்ச் 16]

பாதுகாப்பு போன்றவற்றையும் கற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், வேளாண் சார்ந்த வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு 20 பண்ணை விவசாயப் பள்ளிகள் வீதம் (விவசாயம் சார்ந்த பள்ளிகள் 10 மற்றும் கால்நடை சார்ந்த பள்ளிகள் 10) மொத்தம் 2,320 பண்ணை விவசாயப் பள்ளிகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

7.7.6 ஊட்டச்சத்து தோட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், கிராமப்புற மக்களிடையே குறிப்பாக ஏழை, எளிய மக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சிறப்பு முயற்சியாக ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு, ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கத் தேவையான விதைகள் மற்றும் நாற்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. பயனாளிகள் தங்கள் வீட்டின் பின்புறம் அல்லது வீட்டின் மாடிப்பகுதியில் அல்லது அவர்களுக்குரிய வேறு எந்த இடத்திலும் ஊட்டச்சத்து தோட்டத்தை அமைக்கலாம். காய்கறிகள் தவிர பப்பாளி, முருங்கை, எலுமிச்சை, கறிவேப்பிலை, மணத்தக்காளி, மா, கொய்யா, வாழை போன்றவைகளும் ஊட்டச்சத்து தோட்டத்தின்கீழ் வளர்க்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டில், கூடுதலாக இரண்டு இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.7.7. இயற்கை வேளாண் கிராம தொகுப்புகளை ஏற்படுத்துதல்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண் சாகுபடியில் நீடித்த நிலையான இயற்கை சாகுபடி முறைகளையும், முன்னோடியான கால்நடை பாரமரிப்பு முறைகள், மரம் நீங்கலான வனப்பொருட்களை சேகரித்தல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றின்மூலம் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தினை வலுப்படுத்தி வருகிறது.

விவசாயிகளை மேலும், மேம்பட்ட பொருளாதார நிலைக்கு முன்னேற்றுவதற்கு இயற்கை வேளாண்மை சான்று பெறுவதும், சந்தைப்படுத்துதலில் இலாபகரமான விலை பெறவும் வழிவகை செய்ய வேண்டும்.

இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் கீழ்க்கண்ட நன்கு வரையறுக்கப்பட்ட திட்டச் செயலாக்க நடவடிக்கைகள்மூலம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன:

- இயற்கை விவசாயம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைக் கொண்ட அருகருகாமையில் உள்ள தொகுப்பு கிராமங்களை தேர்வு செய்வது.
- திட்டத்தை செயல்படுத்த திறமையான அலுவலர்களை நியமிப்பது.
- தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனையுடன் திட்டச் செயல்பாடு.
- ஆர்வமுள்ள மகளிர் விவசாயிகளை தேர்வு செய்வது
- பயிற்றுநர்கள் தேர்வு (சமுதாய வளப் பயிற்றுநர்கள் மற்றும் முதன்மை பயிற்சியாளர்கள்).
- அங்ககச் சான்றிதழ் (Organic Certification) வழங்கும் நடைமுறை
- இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், சமுதாய வளப்பயிற்றுநர்கள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.
- மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆலோசனைகளை உரிய அமைப்புகள் மற்றும் சார்புடைய துறைகளிலிருந்து பெறுவது மற்றும் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள பாரம்பரிய இயற்கை வேளாண் திட்டத்தில் இணைந்து செயல்படுதல்.

2018-2019 ஆம் ஆண்டில், இயற்கை வேளாண் கிராம தொகுப்புகளை ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் 2,000 விவசாயிகளை உள்ளடக்கி 20 இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் அமைக்கப்பட்டன. இத்தொகுப்பின்கீழ் இணைந்த விவசாயிகளை ஆங்காங்கே உள்ளூர் தொகுப்பு குழுக்களாக உருவாக்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2019-2020

2020 மார்ச் 16]

ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 2,000 விவசாயிகளை உள்ளடக்கி 20 இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து விவசாயிகளையும் உள்ளூர் தொகுப்பு குழுக்களாக உருவாக்கி பயிற்சி அளித்து அங்ககச் சான்றிதழ் பெறவும் பணிகள் நடைபெற்று வருகிறது. இயற்கை வேளாண் கிராம தொகுப்புகள் உருவாக்கும் முயற்சி வெற்றிகரமாக நடைபெறுவதின் அடிப்படையில், 2020-2021 ஆம் ஆண்டில் மேலும் 100 இயற்கை வேளாண் கிராம தொகுப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

7.7.8. கிராமிய தொழில்முனைவோர் திட்டம்

கிராமிய தொழில்முனைவோர் திட்டம் என்பது பண்ணை சாரா வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் துணைத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் சிறிய தொழில்களை துவங்க ஊக்குவிக்கப்பட்டு அதன்மூலம் வறுமையையும், வேலையில்லா சூழ்நிலையையும் குறைத்து கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் 2014-2015 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் 60:40 என்ற பங்களிப்பு அடிப்படையில் நிதி வழங்குகின்றன.

இந்தத் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள்:

- கிராமப்புற ஏழை மக்கள் தொழில் துவங்க உதவி செய்து, தொழில் நிலைபெறும் வரை தேவையான வழிகாட்டுதல் தந்து அவர்களை வறுமையிலிருந்து மீட்டு வருவது.

- புதிய தொழில்கள் தொடங்கத் தேவையான கடன்வசதி, திறன் வளர்த்தல், கண்டுணர்வு பயணங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அத்தொழில் துவங்கிய முதல் ஆறு மாதங்களுக்குத் தேவையான ஆதரவை சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அவற்றின் கூட்டமைப்புமூலம் கிடைக்க வழிவகுத்தல்.

- "தொழில் மேம்பாட்டுக்கான சமுதாய பயிற்றுநர்" என்ற சமூக மூலதனத்தை உருவாக்கி அவர்கள்மூலம் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கிடச் செய்தல்.

[2020 மார்ச் 16

- தொழில்முனைவோரின் திறமைகளை வளர்த்தல்.

தமிழகத்தில் திருப்போரூர் (செங்கல்பட்டு மாவட்டம்) மற்றும் உளுந்தூர்பேட்டை (கள்ளக் குறிச்சி மாவட்டம்) ஆகிய இரண்டு ஒன்றியங்களில் 10.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 3,096 குறுந்தொழில்கள் துவங்கி வெற்றிகரமாக நடத்திட மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

பயிற்சி பெற்ற தொழில் மேம்பாட்டு சமுதாய வளப் பயிற்றுநர்கள், கிராமப்புறங்களில் இலாபமும், வேலைவாய்ப்பும் ஈட்டித்தரக்கூடிய சேவை, உற்பத்தி மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் தொழில் வாய்ப்புகளை கண்டறிய உதவுவார்கள். சுயஉதவிக் குழு உறுப்பினர்களால், தேர்வு செய்யப்பட்ட தொழிலில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் மற்றும் அடிப்படை அறிவை வைத்து அவர்களுக்குத் தேவையான வணிகத் திட்டத்தை தொழில் மேம்பாட்டுக்கான சமுதாய வளப் பயிற்றுநர்மூலம் தயாரித்து வழங்கப்படும். பயன்பெற்ற தொழில்முனைவோர்களுக்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வழங்கிடும்.

தொழில் திட்டம் ஒப்புதல் ஆனபிறகு, அத்தொழில் துவங்குவதற்குத் தேவையான நிதியை, சமுதாய முதலீட்டு நிதி அல்லது சமுதாய தொழில் நிதி மூலமும் மற்றும் வங்கியுடன் இணைக்கப்பட்ட நிதித் திட்டங்கள் மூலமும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

7.7.9. தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் பண்ணை சாரா நிறுவனங்களை ஊக்குவித்தல்

கிராமிய தொழில்முனைவோர் திட்டம் மட்டுமல்லாமல் கூடுதலாக, தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் மற்றும் மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழும் பண்ணைசாரா தொழில் நிறுவனங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஓரிட வசதி (One stop facility) மூலம் தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்முனைவோருக்கு தேவையான உதவியளிக்கும் திறன் கொண்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான சமுதாய வளப் பயிற்றுநர்கள் ஆகியோர்களை உள்ளடக்கியதாக ஓரிட வசதி விளங்கும். தொழில்முனைவோர்களுக்கு சாத்தியமான

2020 மார்ச் 16]

தொழில் வாய்ப்புகளை அடையாளம் காணவும், வணிகத் திட்டத்தை தயாரிக்கவும், சமூக நிறுவன நிதி அல்லது வங்கிக் கடனை பெற்றுத்தரவும் ஆவன செய்யப்படும். ஓரிட வசதி போலவே "இன்குபேட்டர்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அப்பகுதிகளில் அதிக அளவில் உருவாக வாய்ப்புள்ள தொழில் நிறுவனங்கள் இந்நிறுவனத்தின்மூலம் உருவாக்கப்படும்.

2020-2021 ஆம் ஆண்டில் ஓரிட வசதி, இன்குபேட்டர் மற்றும் தொகுப்புகளின்மூலம் 3,000 பண்ணைசாரா தொழில் நிறுவனங்களை உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.7.10. சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

அ. கண்காட்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை கண்காட்சிகள் மற்றும் வணிக வளாகங்கள்மூலம் சந்தைப்படுத்திட தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது. இக்கண்காட்சிகள் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு கூடுதல் விற்பனை வாய்ப்புகளையும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கைவினைப் பொருட்கள், செயற்கை அணிகலன்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறுதானியங்கள் போன்ற மகளிர் சுயஉதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பொருட்களை விளம்பரப்படுத்தி, சந்தைப்படுத்திடவும் ஒவ்வோர் ஆண்டும் ‘மகளிர் மேளா’ என்ற பெயரில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும், மொத்த கொள்முதல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றின் திறனை வளர்ப்பதற்கும், இக்கண்காட்சிகள் உதவுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் நவராத்திரி கண்காட்சி மாநில அளவில் நடத்தப்பட்டதில் 130 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பங்கேற்று 68.25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயனடைந்தனர்.

சாராஸ் (Sale of Articles of Rural Artisans Society) என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகின்ற ஊரக கைவினைஞர்கள்

உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உற்பத்தி செய்த சிறந்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 11 மாநிலங்களில் நடைபெற்ற சாராஸ் கண்காட்சிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த 319 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கலந்துகொண்டு 86.00 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் இயற்கை விவசாயம் செய்யும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் விளைபொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக இயற்கை வேளாண் பொருட்களின் விற்பனை கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இதனால் இயற்கை விவசாயம் செய்யும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு இக்கண்காட்சி பயனுள்ளதாக அமைகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 9 விற்பனை கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 45.00 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விளைப்பொருட்களை விற்பனை செய்து மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பயன் அடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 2020-2021 ஆம் ஆண்டில் 12 இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனை கண்காட்சிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. மாநில/மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்

தேசிய, மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் அளவில் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திடவும், மாவட்ட அளவில் உள்ள விற்பனை வளாகங்கள் மற்றும் விற்பனை அங்காடிகளை மேலாண்மை செய்தும் வருகின்றன. மாவட்ட அளவில் உள்ள வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 16]

இ. கல்லூரிச் சந்தைகள்

மகளிர் சுயஉதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு கல்லூரிச் சந்தைகள் மிக முக்கியமான சந்தை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளது. இச்சந்தைகள் சுயஉதவிக் குழுக்களுக்கு நல்ல வருவாய் ஈட்டித் தருவதோடு மட்டுமின்றி சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு தற்போதைய சந்தை தேவை நிலவரங்களை அறிந்துகொள்வதற்கும் உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தி தருகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் 26 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டன. இந்த கல்லூரிச் சந்தைகளின்மூலம் 682 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பங்கு கொண்டு 82.78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து பயன் அடைந்துள்ளனர்.

ஈ. மதி அங்காடி (Mathi KIOSK)

மதி அங்காடிகள் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சிறப்பு ஏற்பாடாகும். நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா தலங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் இதர மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 137 மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான மூலிகைப் பொருட்கள், அலங்கார சணல் பொருட்கள், கைவினைப் பொருட்கள், சிறுதானியங்கள், செயற்கை நகைகள் மற்றும் கைவினை பொம்மைகள் போன்ற பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டும் விற்பனை செய்யப்பட்டும் வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் மட்டும் மதி அங்காடிகள்மூலம் 192.40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

உ. சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள சானிடரி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 54 சுயஉதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கூட்டமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையால் செயல்படுத்தப்படும் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்குத் தேவைப்படும் பெல்ட் வகை சானிடரி

நாப்கின்களை உரிய நேரத்திலும், தரமானதாகவும் தயாரித்து மாவட்ட சுகாதார மையங்களுக்கு வழங்கி வருகிறது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அரசாணை எண் 458, நாள் 8-12-2017-ன்படி, 2018-2019 ஆம் ஆண்டிற்கு 7.56 கோடி ரூபாய் மதிப்பிலான 36 இலட்சம் பெல்ட் வகை சானிடரி நாப்கின் பாக்கெட்டுகளை விநியோகம் செய்வதற்கான ஆணை பெறப்பட்டு மகளிர் சுயஉதவிக் குழுக்கள்மூலம் நாப்கின்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

2019-2020 ஆம் ஆண்டிற்கு 54 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் 32 மாவட்ட சுகாதார மையங்களுக்கு 43.75 இலட்சம் சுகாதார நாப்கின் பாக்கெட்டுகள் 9.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விநியோகம் செய்ய ஆணை பெறப்பட்டு சுகாதார நாப்கின் உற்பத்தி செய்யும் மகளிர் சுயஉதவி குழுக்களால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஊ. தொழில்முனைவோரை முறைப்படுத்துதல்

உற்பத்தி, வணிகம், சேவை போன்ற தொழில் நடவடிக்கைகளில் நீண்ட காலமாக சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஈடுபட்டு இருந்தாலும், அத்தொழிலை மேலும் நல்லமுறையில் விரிவுபடுத்தி செய்வதற்குத் தேவையான தொழில்முனைவோர் சான்று (Udhyog Aadhar), நிரந்தரக் கணக்கு எண் (PAN), உணவுக்கான தரச் சான்று உரிமம் (FSSAI) மற்றும் சரக்கு சேவை வரி உரிமம் (GST) போன்றவை பெறப்படாமல் உள்ளனர்.

மேற்கூறிய சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றால், மகளிர் சுயஉதவிக் குழு தொழில்முனைவோருக்கு அரசு மானியம், கொள்முதல் செய்வதில் முன்னுரிமை, வங்கியிலிருந்து நிதி பெறுதல் மற்றும் இதர சலுகைகளைப் பெறுவதற்கு எளிதாக அமையும். இத்தகைய பயன்களை சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பெறுவதற்கு ஒரு செயல் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, மேற்கண்ட உரிமம் மற்றும் சான்றிதழ்களைப் பெறுவதற்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 9,000 சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

எ. வணிக முத்திரை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயல்படும் அனைத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும்

2020 மார்ச் 16]

பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக 'மதி' என்ற பெயரில் மாநில அளவில் வணிக முத்திரை வடிவமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மாவட்ட அளவிலும் தனித்தனியே அந்தந்த மாவட்டத்திற்கென தனி வணிக முத்திரைகளும் பெறப்பட்டு வருகிறது.

தர அடிப்படையிலும், விற்பனை அடிப்படையிலும், மேலும் உற்பத்தி முறைமைகளை நிலைத்த முறையில் கடைப்பிடிக்கும் அடிப்படையிலும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான வணிக முத்திரை பெற தகுதி பெற்றவை என சுயஉதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்குத் தேர்வு செய்யப்படும் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

7.8. சமூக உள்ளாக்கம் மற்றும் சமுதாய வளர்ச்சி

நலிவுற்றோர் குறிப்பாக ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளிகள், மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்கள், நிலமற்றோர், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஆதிப் பழங்குடியினர், மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தொலைதூர மற்றும் தனித்த கிராமப் பகுதிகளில் வாழும் நலிவுற்றோர் குடும்பங்களை மக்கள் நிலை ஆய்வின்மூலம் அடையாளம் கண்டு சமூக உள்ளாக்கத்தின்கீழ் கொண்டுவர தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

அ. சமூக உள்ளாக்கத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோரை மேம்படுத்துதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் சமூக உள்ளாக்க உத்தியின் வாயிலாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரை மேம்படுத்த, 2020-2021 ஆம் நிதி ஆண்டில் 9 மாவட்டங்களில் 1,163 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 29 ஊராட்சி ஒன்றியங்களில் 777.83 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன் ஒரு பகுதியாக சமூக மாற்றுத் திறனாளி ஒருங்கிணைப்பாளர்கள்மூலம் மாற்றுத் திறனாளிகள் மற்றும்

[2020 மார்ச் 16

நலிவுற்றோர்களின் தேவையினை அறிந்து அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் திறன்பெற்ற வட்டார அளவிலான மாற்றுத்திறன் குறைப்பு மற்றும் மறுவாழ்வு வசதி செய்யும் நிறுவனங்களுடன் (BDMRFA–Block Disability Mitigation and Rehabilitation Facilitating Agencies) ஒருங்கிணைந்து செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிதல், அவர்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருதல், தேவையின் அடிப்படையில் புனர்வாழ்வினை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகள், முதியோர்கள் மற்றும் இதர நலிவுற்றோரைக் கொண்டு சிறப்புக் குழுக்கள் அமைத்து அதன்மூலம் அவர்களது இடர்களைக் களைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆ. சமுதாயம் சார்ந்த மனநலத் திட்டம்-மனம் இனிது

தனிமனித முன்னேற்றம் மற்றும் இதர வளர்ச்சிக்கு குறிப்பாக பெண்களுக்கு-மனநலமும் நலவாழ்வும் மிகவும் இன்றியமையாததாகும். இதற்கென மனம் இனிது என்ற பெயருடன் சமுதாயம் சார்ந்த மனநலத் திட்டத்தினை 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அறிமுகப்படுத்தி செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது. இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சிகளில் மனநல ஆலோசகர்களை நியமித்து நலவாழ்வுத் துறை, தேசிய நலவாழ்வு இயக்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற சார்பு நிறுவனங்களின் உதவியோடு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மனநலமும் நலவாழ்வும் பற்றி விளக்கிக் கூறுவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சமூக வல்லுநர்களை பயிற்றுவிக்க மனம் இனிது திட்டப் பயிற்சி புத்தகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31-10-2019 அன்று வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 7 முதற்கட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 35 நபர்களுக்கு (மாவட்டத்திற்கு 5 வீதம்) மனநலம் குறித்த பயிற்றுநர்கள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டிற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கு மனச்சிதைவு ஆராய்ச்சி மையம், சென்னை உடன் (Schizophrenia Research Foundation – SCARF) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில்

2020 மார்ச் 16]

802.47 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின்மூலம் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்:

- கிராம ஊராட்சிகளில் உள்ள சமுதாய வளப் பயிற்றுநர்களை பயிற்சிக்கு பின்னர் மனநல ஆலோசகர்களாக உருவாக்குதல்.
- மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிவதற்கான முகாம் நடத்துதல்.
- மனநல ஆலோசகர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்.
- கிராம ஊராட்சியில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுயஉதவிக் குழுக்கள், மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்றவைகளுக்கு மனநலமும் நலவாழ்வும் பற்றி எடுத்துரைத்தல்.

இத்திட்டமானது 22 மாவட்டங்களில் உள்ள 22 வட்டாரங்களில் 735 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

தொடர் செயல்பாடுகள்

மேற்கண்ட பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு, அதன் தொடர்ச்சியாக பயிற்சி பெற்ற சமுதாய வளப் பயிற்றுநர்களை மனநல ஆலோசகர்களைக் கொண்டு தேவையான குடும்ப ஆலோசனை வழங்குதல், பாதிப்பிற்குள்ளானவர்கள் தங்களை தாங்களே நிருவகித்துக்கொள்ள உதவி செய்தல், மருத்துவ நடவடிக்கையைத் தொடர்தல் மற்றும் சமூகம் சார்ந்த ஆதரவினை ஏற்படுத்துதல் முதலிய திட்ட பயன்பாடுகளை உறுதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மனநல பாதிப்பிலிருந்து மீண்டவர்களை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (MGNREGS) இணைப்பதோடு அவர்களுக்கு வாழ்வாதாரம்/தொழில் சார்ந்த பயிற்சிகளும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்பொருட்டு, மனநல பாதிப்புக்கு உள்ளானவர்கள் தங்களுக்குள்ள பிரச்சினைகளை உடனடியாக தெரிவிப்பதற்கும் அதனடிப்படையில் அவர்களை சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்து தீர்வு காண்பதற்கும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் உறுதுணையாக இருக்கும்.

இ. உணவு, ஊட்டச்சத்து, உடல்நலம் தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணும் திட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உணவு, ஊட்டச்சத்து, உடல்நலம், தன்சுத்தம் மற்றும் சுகாதாரம்

[2020 மார்ச் 16

தொடர்பான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அதில் உள்ள பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளைக் கண்டறிய இத்திட்டத்தின்மூலம் வழிவகை செய்துள்ளது. பெரும்பாலான நலவாழ்வு மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள் சமுதாய மக்களின் மூலமாகவே செயல்படுத்தப்பட்டு வருவதால் சமுதாய அமைப்புகளுக்கு உதவிசெய்ய தீர்மானித்துள்ளது. மேலும், இத்திட்டத்தினை நலவாழ்வுத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறை, கல்வித் துறை மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், துவக்கத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் முன் மாதிரி (Model) ஊட்டச்சத்து மையம் உருவாக்கப்பட உள்ளது. அதன்மூலம் தனிக்கவனம் செலுத்தி குழந்தைகளுக்கு ஏற்படும் வளர்ச்சியின்மை, உடல் மெலிவு மற்றும் உடல் எடைக் குறைவு போன்ற குறைபாடுகளுடன் பிறப்பதை குறைக்க முடியும். மேலும், திட்டம் செயல்படுத்தப்பட உள்ள 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள அனைத்து மகளிர் குழுக்களுக்கும் இதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இத்திட்டமானது நடப்பாண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் கோயம்புத்தூர், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 104 ஊராட்சிகளிலும், தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும் சேலம் மற்றும் கடலூர் மாவட்டங்களின் 83 ஊராட்சிகளிலும் 356.35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

ஈ. பாலின வேறுபாடுகளைக் களைதல்

பொருளாதார வளர்ச்சி மேம்பட்டு வரும் இக்காலகட்டத்தில் சமூகத்தில் நிலவும் பாலின அடிப்படையிலான வேறுபாடுகளைக் களைவது அவசியமாகும். மேலும், குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் அடிப்படையிலான இடர்பாடுகளிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காக்க வேண்டியது அவசியமாகும். இவற்றை கவனத்தில் கொண்டு 2020-2021 ஆம் ஆண்டு முதல் சமூக பாலின வேறுபாடுகளை களைவதற்கான பல்வேறு செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தி தேசிய ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட உள்ளது.

2020 மார்ச் 16]

இதன் முதற்கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் தருமபுரி, இராமநாதபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 6 ஊராட்சிகளிலும் தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும். கடலூர் மாவட்டத்தில் 2 ஊராட்சிகளிலும் 82.02 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2020-2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

உ. கிராம ஊராட்சிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு, அக்கிராம ஊராட்சிக்கும் சுயஉதவிக் குழுக்களை உள்ளடக்கிய சமுதாயம் சார்ந்தஅமைப்புகளுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் கிராம ஊராட்சி அளவில் மேற்கொள்ளப்படவுள்ளன:

- கிராம ஊராட்சிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு திட்டங்களை விரிவுபடுத்துதல்.

- நலிவுத்தன்மை குறைப்புத் திட்டம் (Vulnerability Reduction Plan) தயார் செய்து அதனை கிராம ஊராட்சியின் வறுமை குறைப்புத் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல்.

- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட உருவாக்கத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை பங்கேற்கச் செய்தல்.

- கிராம சபைக் கூட்டங்களில் சுயஉதவிக் குழுக்களை அதிக அளவில் பங்கேற்கச் செய்தல்.

- அரசின் முன்னோடித் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

இத்திட்டமானது 2020-2021 ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், நாகப்பட்டினம், இராமநாதபுரம், நீலகிரி, சேலம், திருவாரூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர்) 1,356 கிராம ஊராட்சிகளில் 89.64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

[2020 மார்ச் 16

7.9. மேலாண்மை தகவல் அமைப்பு (MIS)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் சமூக, பொருளாதார தகவல்கள் குறிப்பாக அவர்களின் நிதிப் பரிவர்த்தனை மற்றும் நிருவாகம் தொடர்பான விவரங்கள் திட்டச் செயல்பாட்டிற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் உதவியாக மிகப்பெரிய அளவில் மேலாண்மை செய்கிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டம் சார்ந்த செயல்பாடுகள், செயலாக்க யுக்திகள் மற்றும் துல்லியமான முடிவுகள் அதன் நிகழ்நேர (real time) மேலாண்மை தகவல் அமைப்பை சார்ந்தே உள்ளது.

இ-மதியானது (eMathi) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாக உள்ளது. இது சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நடைமுறை மின்னணு பரிவர்த்தனை மற்றும் நிருவாகம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான இணையதளமாகும். மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சமுதாயம் சார்ந்த அமைப்புகள் தங்களையும் திட்டத்தையும் சிறப்பாக நிருவகிக்கவும் அதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய முடிவெடுப்பதற்கான ஆதரவு அமைப்பாகவும் இ-மதி செயல்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இ-மதி இணையதளம் மற்றும் தகவல் தளம் மேம்படுத்தப்பட்டு சுயஉதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கூட்டங்கள், சேமிப்பு, கடன், கடனை திரும்ப செலுத்துதல் மற்றும் கணக்கு புத்தகங்கள் பராமரிப்பு போன்ற நடைமுறை விவரங்களைச் சேகரித்து நிகழ்நேர தகவல்கள் வழங்கி வருகிறது.

இ-மதி மட்டுமின்றி 2019-2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகள்:

- tnatws.org–அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்திற்கான மேலாண்மை தகவல் அமைப்பு.
- eCRP.in–சமுதாய வள பயிற்றுநர்களுக்கான விவரங்கள் அடங்கிய இணையதளம்.
- சுகாதார நாப்கின் கூட்டமைப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான கைபேசி செயலி.

2020 மார்ச் 16]

- இ-மதி செயலி – சமுதாய மின்வானொலி மற்றும் மின்வழி கற்றல் தளத்திற்கான கைபேசி செயலி.

7.10. தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணையாக ஏழைகளின் வாழ்வு மேம்படும் வகையில் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு 2018-2019 ஆம் ஆண்டுடன் முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 2019-2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு நிதியானது மத்திய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

இத்திட்டமானது பகுதி/வட்டார கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்பு கூட்டு வளர்ச்சியினை ஊக்குவித்தல், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா துறையில் தனி நபர் மற்றும் கூட்டுத் தொழில் செய்தல், ஊரக தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் நிதிசார்பு சேவைகளை மேம்படுத்துதல் போன்ற உயர்மட்ட செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும். மேலும், பண்ணை சார்ந்த வாழ்வாதாரமானது உற்பத்திக் குழுக்கள் மற்றும் உற்பத்தி சார்ந்த நிறுவனங்களை வலுப்படுத்துதல், இயற்கை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு தொகுப்பு கிராமங்களை உருவாக்குதல், மதிப்புக் கூட்டுதலுக்கான செயல்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக அமையும். மேற்கண்ட வாழ்வாதார செயல்பாடுகளோடு முன்மாதிரி பகுதி அளவிலான கூட்டமைப்புகளால் மேற்கொள்ளப்படும் உணவு, ஊட்டச்சத்து, உடல் நலம் மற்றும் சமூகப் பாலினம் போன்ற சமூக வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகள் ஒருங்கிணைப்பு செய்யப்படவுள்ளது.

முன்மாதிரி வட்டார/பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் நிதி உள்ளாக்க உத்திகள், காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள், உற்பத்திக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் நிறுவனங்களை நிறுவுதல் போன்றவற்றிற்கும் இடையே நெருங்கிய உறவினை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் அடிப்படையாக அமைகிறது.

இத்திட்டமானது முன்னோட்டமாக, மாநிலத்தில் கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில்

[2020 மார்ச் 16

தலா 4 வட்டாரங்கள் என மொத்தம் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட வட்டாரங்கள் கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது:

- இரண்டு வருடங்களுக்கும் மேலாக சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்பு செயல்பாட்டில் இருத்தல்.
- 50 சதவீதத்திற்கும் மேலான குழுக்கள் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதோடு அக்கூட்டமைப்பின் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கியிருத்தல்.
- பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத வாழ்வாதார நடவடிக்கைகள் செயல்பாட்டில் இருத்தல்.
- பலதரப்பட்ட துறைகளில் சிறந்து விளங்கும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேவையான அளவில் ஈடுபட்டிருத்தல்.

2020-2021 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென மத்திய அரசின் பங்குத் தொகையாக (60%) 18.07 கோடி ரூபாயும், மாநில அரசின் பங்குத் தொகையான (40%) 12.05 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 30.12 கோடி ரூபாய் நிதியாண்டு செயல் திட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

7.10.1. முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

தேசிய ஊரக வாழ்வாதாரப் பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின்கீழ், ஐந்து மாவட்டங்களின் இருபது வட்டாரங்களில் உள்ள 729 ஊராட்சிகளில் இருந்து 50 சதவீதம் ஊராட்சிகளான 365 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் / பகுதி அளவிலான கூட்டமைப்புகள் 3 கட்டங்களில் கீழ்க்கண்டவாறு உருவாக்கப்படும்:

அட்டவணை 7.8

கட்டங்கள்	வட்டாரங்கள்	ஊராட்சிகள்	உத்தேச காலம்
I	5	80	ஏப்ரல் 2019 – மார்ச் 2020
II	7	122	ஏப்ரல் 2020 – மார்ச் 2021
III	8	163	ஏப்ரல் 2021 – மார்ச் 2022

2020 மார்ச் 16]

7.10.2. மின்னணு நிதி சேவை (Digital Finance)

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வங்கிகளில் கடன்பெற்று திரும்ப செலுத்திய விவரங்களை பரிவர்த்தனை அடிப்படையிலான மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலம் தொகுத்து அவற்றை வங்கிக் கணக்குகளுடன் இணைக்கச் செய்வது இந்த திட்டத்தின் நோக்கமாகும். இவ்வாறு தொகுக்கப்பட்ட கடன் தகவல்கள், அடுத்தகட்ட அதிக அளவிலான கடன் இணைப்பு பெறுவதற்கு இந்திய கடன் தகவல் மையம் (CIBIL) மற்றும் ஹைமார்க் நிறுவனங்களின் (Hi-Mark) மதிப்பீட்டை உடனே அறிந்துகொள்ள உறுதுணையாக இருக்கும்.

7.11. தீன் தயாள் அந்தியோதயா யோஜனா—தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)

மத்திய அரசின்கீழ் உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டங்களுக்கான அமைச்சகம், ஏற்கெனவே செயல்படுத்தி வந்த சுவர்ண ஜெயந்தி சகரி ரோஜ்கர் யோஜனா (SJSRY) திட்டத்தினை 2014-2015 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுடன் தீன் தயாள் அந்தியோதயா யோஜனா–தேசிய நகர்ப்புற வாழ்வதார இயக்கம் (DAY–NULM) என்ற புதிய திட்டமாக மாற்றியமைத்தது. இத்திட்டத்தின் குறிக்கோள், நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமையையும், நலிவு நிலையையும் குறைத்து சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன்கூடிய வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுத்து, அதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும்.

மேலும், நகர்ப்புற உறைவிடமற்றோர்க்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல், நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், நிதி அமைப்புகள்மூலம் கடன் வசதி ஏற்படுத்துதல், சமூக பாதுகாப்பு அளித்தல் மற்றும் திறன் வளர்ப்புமூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுதல் போன்றவற்றை இந்த இயக்கம் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கூறுகள்

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு(SM&ID)
2. சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)
3. வேலைவாய்ப்புடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)
4. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T)
5. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (SUSV)
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
7. புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (I&SP)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வதார இயக்கம் 2014 முதல் 2016 வரை நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக மாவட்ட தலைநகரங்கள் மற்றும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்கள் உட்பட 40 நகரங்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்பட்டது.

அரசு ஆணை எண் 62 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M.A.2) நாள் 4-3-2016-ன்படி நகராட்சி நிருவாக ஆணையரகத்தின்கீழ் இயங்கி வந்த மேற்படி திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயல்படும்படி உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட அரசு ஆணையின் படி நான்கு முக்கிய கூறுகளான, சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID), திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T), வேலைவாய்ப்புடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P), சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)ஆகியன 2016-2017ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசாணை எண் 114 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M.A.2) நாள் 27-10-017-ன்படி புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (I&SP) என்ற திட்டக்கூறு மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மீதமுள்ள இரண்டு கூறுகளான நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (SUSV), நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH) ஆகியன நகராட்சி நிருவாக ஆணையரகத்தாலேயே தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சிகளின்மூலம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இதன் தொடர்பான வியாபார குழுக்கள் உருவாக்குதல், அதனைக் கண்காணித்தல் உட்பட வழக்கமான நடைமுறைகள் மற்றும் தெருவோர வியாபார திட்டங்களைத் தயாரித்தல் ஆகியனவும் நகர்ப்புற உள்ளாட்சிகளின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளித்தல், நிதி ஆதாரங்களுக்கு வழி காட்டும் வகையில் வங்கி சேவையைப் பெற உதவுதல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியவை தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.11.1 சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

அ. சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல் மற்றும் ஆதார நிதி வழங்குதல்

2016-2017 முதல் 2018-2019 வரை 34,461 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 34.46 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 10,635 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதில் 10,000 சுயஉதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஆ. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆதார நிதி வழங்குதல்

2016-2017 முதல் 2018-2019 வரை 644 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 443 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு 304 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக 1.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இ. நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்

2016-2017 முதல் 2018-2019 வரை 42 நகர அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் 5 நகர அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஈ. நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்

2016-17 முதல் 2018-19 வரை 12 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் உருவாக்கப்பட்டு 1.20 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் 10

முன்மாதிரி நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் உட்பட 39 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உ. வேலைவாய்ப்புடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம் (EST&P)

2016-2017 முதல் 2017-2018 வரை பல்வேறு பிரிவுகளின்கீழ் 22,083 இளைஞர்கள் 33.12 கோடி ரூபாய் நிதி உதவியுடன் திறன் வளர்ப்புப் பயிற்சி முடித்துள்ளார்கள். 2018-2019 ஆம் ஆண்டிற்கு 18.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் 5,939 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஊ. தனி நபர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP - I)

2016-2017 முதல் 2018-2019 வரை 145.43 கோடி ரூபாய் வங்கிக் கடன் மூலமாக 24,284 தனிநபர் சுய வேலைவாய்ப்பு பயனீட்டாளர்கள் பயனடைந்துள்ளார்கள். 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,247 தெருவோர வியாபாரிகள் உட்பட 7,460 தனி நபர்களுக்கு 38.94 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

எ. குழு சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP-G)

2016-2017 முதல் 2018-2019 வரை வங்கிக் கடன் மூலமாக இதுவரை 440.18 கோடி ரூபாய் நிதி உதவியின் மூலம் 15,953 குழுக்கள் பயனடைந்துள்ளார்கள். 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 200 தெருவோர வியாபாரிகளுக்கான ஒத்த தொழிலார்வ குழுக்கள் உட்பட 4,759 குழுக்களுக்கு வங்கிக் கடனாக 175.04 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஏ. சுய வேலைவாய்ப்புத் திட்டம் (வங்கி இணைப்பு) (SEP - BL)

2016-2017 முதல் 2018-2019 வரை 828.79 கோடி ரூபாய் வங்கிக் கடன் நிதி உதவி பெற்று 21,420 சுயஉதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளார்கள். 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 7,880 சுயஉதவிக் குழுக்களுக்கு 293.26 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

7.11.2. தேவைக்கேற்ற கடன் மற்றும் வட்டி மானியம் பெறுவதற்கான வலைதளம் (PAiSA Portal)

2016-2017 முதல் 2018-2019 வரை 3.01 கோடி ரூபாய் வட்டி மானியமாக இவ்வலைத் தளம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் பயனாளிகளுக்கு 7.41 கோடி ரூபாய் வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

7.11.3. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (SUSV)

664 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இதுவரை 1,21,098 தெருவோர வியாபாரிகள் கணக்கெடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2,247 தெருவோர வியாபாரிகள் தனிநபர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 12.20 கோடி ரூபாய் வங்கிக் கடன் மூலமாக பயனடைந்துள்ளார்கள். தெருவோர வியாபாரிகளின் ஒத்த தொழிலார்வக் குழுக்களுக்கு 2.19 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கு மொத்தம் இரண்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 31.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,595 தெருவோர வியாபாரிகள் பயன்பெறும் வகையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.11.4. நகர்ப்புற வீடற்றோர்க்கு உறைவிடம் (SUH)

இந்த உட்கூறின்கீழ் இதுவரை 242 உறைவிட அலகுகள் (153 வழக்கமான உறைவிடங்கள் மற்றும் 89 சிறப்பு உறைவிடங்கள், இதில் மனநிலை பாதிக்கப்பட்டோருக்கும், மன நோயாளிகளுக்கும் திருநங்கையர்களுக்கும் மற்றும் மருத்துவமனை உறைவிடங்கள் ஆகியவை உள்ளடக்கியதாகும்) 5 திட்ட அனுமதிக் குழு கூட்டங்கள்மூலம் அனுமதிக்கப்பட்டது. இதன் மதிப்பீட்டு தொகை 101.33 கோடி ரூபாய் ஆகும். இதில் 161 உறைவிடங்கள் முடிக்கப்பட்டு அதில் 12,073 பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள பணிகள் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 12 புதிய உறைவிடங்கள் 4.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 108 உறைவிடங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புக்காக 5.37 கோடி ரூபாய் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

7.12. சிறந்த சமுதாயம் சார்ந்த அமைப்புகள் (சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்) மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

சுயஉதவிக் குழுக்களுக்கிடையே சிறந்த நிருவாகம் மற்றும் சமூக விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுகள் சிறப்பாகச் செயல்படுபவர்களை பெருமைப்படுத்துவதுடன், மற்றவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு வழங்கப்படுகின்றன. மாநில அளவில் சிறப்பாகச் செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சுயஉதவிக் குழுக்களுக்கும், மாவட்ட அளவில் சிறப்பாகச் செயல்படும் ஓர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் 3 சுயஉதவிக் குழுக்களுக்கும், வட்டார அளவில் சிறப்பாகச் செயல்படும் ஒரு சுயஉதவிக் குழுவிற்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

மேலும், சுயஉதவிக் குழு இயக்கத்திற்கு முழு ஆதரவு நல்கி அவற்றின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் வங்கிகளின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் விதமாக விருதுகள் வழங்கப்படுகின்றன.

7.13. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் ஓர் அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள டி.என்.வி.ஆர்.சி-யின் முக்கிய நோக்கங்களாவன:

(அ) திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் மாநில/மாவட்ட/வட்டார அளவிலான முதன்மைப் பயிற்றுநர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி வழங்குதல், (ஆ) திட்டத்திற்கான பயிற்சி உபகரணங்கள்/கையேடுகள், விளக்க அட்டைகள் மற்றும் பயிற்சி சார்ந்த பிற புத்தகங்கள் உருவாக்குதல்,

(இ) பல்வேறு சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல், (ஈ) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்பு எனும் பெரும் பணியில் செயல்படுத்திய பல்வேறு உத்திகள், முன் முயற்சிகள், பெற்ற படிப்பினைகள் மற்றும் திட்டத்தின் நன்கு சிறந்த விளைவுகள் ஆகியவற்றைத் தொகுத்து ஓர் அறிவுசார் களஞ்சியமாக விளங்குதல் மற்றும் (உ) அரசு சாரா அமைப்புகளுடன் வளர்ச்சி தொடர்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்.

தேசிய நலவாழ்வு குழுமம் (NHM) மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் மக்கள் தொகை அடிப்படையிலான தொற்றா நோய்கள் (NCD) கண்டறியும் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, டி.என்.வி.ஆர்.சி மூலமாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 30 மாவட்டங்களில் உள்ள 85 வட்டாரங்கள் மற்றும் 2 மாநகராட்சிகளில் (கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி) 1,902 சமுதாய வளப் பயிற்றுநர்களைக் (சுகாதாரம்) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள்மூலம் உருவாக்கிய சமூக மூலதனம் என்னும் பெரும் சக்தியின் விளைவாகவும் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களை இந்நிறுவனம் தொடர்ந்து வலுப்படுத்தி வந்ததுமே இத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றி வருவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

டி.என்.வி.ஆர்.சி-யின் மற்றொரு முன்முயற்சியாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்/தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் பயன்களை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் நாவலூர், பெரும்பாக்கம், கூடப்பாக்கம் மற்றும் அகில இந்திய வானொலி நிலப் (AIR Land) பகுதிகளில் மறுகுடியமர்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நோக்கமானது, அவர்கள் இயல்பு நிலையினை அடைந்திடவும், மறுகுடியமர்த்தப்பட்டதன்மூலம் ஏற்பட்ட சிரமங்களிலிருந்து மீளும் திறனைப்பெற்றிடவும் இக்குடியிருப்புவாசிகளை நல்வழிப்படுத்துவது ஆகும்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் நாள் டி.என்.வி.ஆர்.சி-யினை தேசிய வள மையமாக (NRO) அங்கீகரித்தது. இம்மையமானது, பிற மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுக்கு,

[2020 மார்ச் 16

மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான செயல்பாடுகள், முதியோர் பாதுகாப்பு, பண்ணை மற்றும் பண்ணைசாரா வாழ்வாதாரம், நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் உயர்நிலைக் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் போன்ற பணிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

7.14. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்

பெண்களுக்கான மிகவும் தேவையான பயனுள்ள செய்திகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விவரங்களைத் தெரிவிக்கும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனமாக செயல்பட ஒரு மாத இதழ் தேவைப்பட்டது. அதன் விளைவாக, முற்றம் சங்கம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975-ன் 27-வது பிரிவின்கீழ் தோற்றுவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின்கீழ் முற்றம் மாத இதழ் மாதந்தோறும் நன்முறையில் வெளியிடப்பட்டு வருகிறது. முதலில் முற்றம் மாத இதழ் 10,000 பிரதிகளுடன் வெளியிடப்பட்டது. தற்போது, முற்றம் மாத இதழ், நவீனப்படுத்தப்பட்டு தமிழகம் முழுவதும் சந்தா செலுத்திய 77,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அனுப்பப்பட்டு, அதன்மூலம் 17 இலட்சம் உறுப்பினர்களைச் சென்றடைகிறது. முற்றம் மாத இதழ், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தொடர்பான பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகிறது.

மகளிர் முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் மற்றும் மகளிருக்கான அனைத்து திட்டங்கள் தொடர்பான விவரங்களை சேகரித்து, அதை அனைத்துத் தரப்பினருக்கும் தொடர்ச்சியாக சென்றடையும் விதமாக முற்றம் இதழில் பதிவிட்டு வெளியிடச் செய்வதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும். முற்றம் மாத இதழில், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்கள் அறிந்துகொள்ள தேவையான மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உன்னத வெற்றிக் கதைகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் சாதனைகள் மற்றும் மகளிர் முன்னேற்றத்திற்காக, நன்மைக்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு துறைகளின் திட்டங்கள், நுகர்வோர்

2020 மார்ச் 16]

பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான உரிமைகள், பெண் கல்வி, பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள், வறுமை ஒழிப்பு செயல்பாடுகள், சேமிப்பின் முக்கியத்துவம், பெண் தொழில் முனைவோர் முன்னேற்ற செயல்பாடுகள், கூட்டுத் தொழில் நடவடிக்கைகள், இயற்கை வேளாண்மை, உடல் நலம் மற்றும் கைதேர்ந்த மருத்துவக் குறிப்புகள் குறித்த விழிப்புணர்வு, உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், பாலின சமத்துவம், தன்சுத்தம் குறித்த ஆலோசனைகள், மாற்றுத் திறனாளிகளின் செயல்பாடுகள் மற்றும் மனநலம் சார்ந்த பயிற்சிகள் போன்ற தகவல்கள் இடம் பெற்று மிளிர்கின்றன.

7.15. உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

இத்திட்டம் மாநில அரசின் நிதியில் 2017-2018 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் ஒரு சிறப்புத் திட்டமாகும். உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும், பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிரால் எளிதில் பயன்படுத்தும் வகையில் இவ்வாகனங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படி கியர் இல்லாத அல்லது ஆட்டோ கியர் உடைய இரு சக்கர வாகனங்கள் மட்டுமே இத்திட்டத்தின்மூலம் வாங்க முடியும்.

இத்திட்டத்தின்கீழ் தகுதி பெறும் பயனாளிகள்

தன்னுடைய ஊதியமே குடும்பத்தின் பிரதான வருமானம் என்ற நிலையில் வாழ்வாதார செயல்பாட்டிற்காக/ஊதிய வேலைவாய்ப்புக்காக தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொலைதூரத்திற்குச் சென்று பணிபுரியும் பெண்களே திட்டத்தின் முக்கியப் பயனாளிகள் ஆவர். மேலும், கீழ்க்காணும் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் தகுதியுடையவராவர்:

1. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புச் சாரா பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழிலாளர்கள்.
2. கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் மகளிர்.
3. சுய தொழில் மற்றும் சிறு தொழில் செய்யும் பெண்கள்.
4. அரசாங்க நிதி உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு திட்டங்கள்/சமூகம் சார்ந்த

நிறுவனங்கள்-ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், மாவட்ட மக்கள் கற்றல் மையம் (மகமை)-ஆகியவற்றில் பணிபுரியும் மகளிர், தொகுப்பூதியம், தினக்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெறும் மகளிர்.

5. வங்கி தொடர்பாளர்கள் / வங்கி வழி நடத்துநர்கள் மற்றும் சுகாதார (ASHA) பணியாளர்கள்.

மேற்கண்ட பிரிவுகளின்கீழ் பணியாற்றும் பெண்கள் மட்டுமல்லாது இத்திட்டப் பயனானது அதிக அளவிலான உழைக்கும் பெண்கள் பயனடையும் வகையில் அரசாணை எண் 179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்: 29-11-2019-ன்படி கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது:

1. அதிகபட்ச வயது 40-ல் இருந்து 45 ஆக உயர்வு.
2. கல்வித் தகுதி தேவையில்லை.
3. அரசு துறைகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் பெண்களும் தகுதி உடையவர்கள் ஆவர்.

இத்திட்டத்திற்காக 2017-2018 ஆம் ஆண்டு முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் தலா 252.50 கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனாளிகள் 125cc-க்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கிக்கொள்ள அதிகபட்ச மானியமாக, வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு மேற்கண்ட மானியத் தொகைக்கு கூடுதலாக ரூ.6,250 சேர்த்து மொத்தம் ரூ.31,250 மானியமாக வழங்கப்படுகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 252.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் பயனாளிகள் பயனடைய உள்ளனர். நாளது வரை 2,07,823 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அதற்காக 468.75 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.16. இணையவழிக் கற்றல் மற்றும் சமுதாய மின் வானொலி

தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான வெற்றிக்கதைகள்,

வழிகாட்டு ஆலோசனைகள், அறிவுரைச் செய்திகள், எண்ணங்கள் பரிமாற்றம், முக்கிய தகவல்கள் போன்ற விவரங்கள் அடங்கிய மின்கற்றல் தளம் (e–Learning platform) ஒன்று உருவாக்கப்பட்டு, அவற்றை மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கைபேசி வாயிலாக அறிந்துகொள்ளவும், கற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. துவக்கத்தில், இந்த இணையவழிக் கற்றல் நடைமுறையில் உள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விவரங்களை மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள உறுதுணையாக இருக்கும். பிறகு இதுவே எதிர்காலத்தில் தகுதியான வளப் பயிற்றுநர்களை இணையதளம் வாயிலாக உரிய தேர்வுகள் நடத்தி தேர்ந்தெடுக்க, மின் சான்றிதழ் திட்டத்துடன் இணைக்கப்படும். அதன்மூலம் இக்கற்றல் முறை முக்கியமான பயிற்சி வழிமுறையாக மாறி பிற சமூக ஊடகங்களுடன் இணைந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிக நேரத்தையும், நிதியையும் சேமிக்கும் தளமாக விளங்கும். சமுதாய மின் வானொலி மற்றும் இணையவழிக் கற்றல் பாடங்கள் உருவாக்கும் பணி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 6-3-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

சுயஉதவிக் குழுக்களின் ஆளுமை, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம், திறன் வளர்ப்பு பயிற்சி, தொழில் மேம்பாடு, சந்தைப்படுத்துதல், தூய்மை இந்தியா இயக்கம், ஊராட்சி அமைப்புகள் – சமுதாயம் சார்ந்த அமைப்புகள் கூட்டாண்மை, ஊட்டச்சத்து இயக்கம் போன்றவற்றிற்காக இணையவழிக் கற்றல் பாடங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இணையவழிக் கற்றலுக்கான இப்பாடங்களுடன் எதிர்காலத்தில் சுயஉதவிக் குழு மகளிரின் முழுமையான வளர்ச்சியினை இலக்காக கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த செய்திகளுடன் சமுதாய வானொலியும் விரைவில் செயல்படவுள்ளது.

65 முக்கிய தலைப்புகள் கொண்ட காட்சிப்படங்கள் (Videos) மற்றும் 40 முக்கிய நிகழ்வுகள் அடங்கிய கேட்புரைகள் (Audio) ஆகியவற்றை உருவாக்கத்திட்டமிட்டு, இதுவரை 28 காட்சிப்படங்கள், 27 கேட்புரைகள் இணையவழிக் கற்றல் பாடங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவை கைபேசி செயலி வாயிலாக மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 16

8. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

8.1. முன்னுரை

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) ஊரகப் பகுதிகளில் தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின்மூலம் ஊரக சமுதாயத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் வளத்தினை உருவாக்கி பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு தனித்துவம் மிக்க இத்திட்டமானது, புதுமையான உத்திகளின் வாயிலாக வறுமை ஒழிப்பு எனும் நிலையினையும் தாண்டி ஒரு வளமான ஊரக சமுதாயத்தை உருவாக்கும் உயர் நிலை நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நிறைவு பெற்ற தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் (2005-2017), தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (2012-2013 முதல் 2018-2019 வரை) மற்றும் நடைபெற்று வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (2012-2013 முதல்) ஆகிய திட்டங்களின் வாயிலாக ஏற்படுத்தப்பட்ட பல்வேறு முதலீடுகள் மற்றும் சமுதாய அமைப்புகளின் மூலதனங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

8.2. திட்டத்தின் நோக்கங்கள்

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

8.3. திட்ட செயலாக்கப் பகுதி

இத்திட்டமானது முதலில் 26 மாவட்டங்களில் (தற்போது மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பின்பு 30 மாவட்டங்களில்) 120 வட்டாரங்களில் 3,994 ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக 6 வருடங்களில் செயல்படுத்தப்படுகிறது.

2020 மார்ச் 16]

8.4. நிதிப் பங்கீடு

இத்திட்டத்திற்கான மதிப்பீடு நிதி ரூ.918.20 கோடி (142.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும். இத்திட்ட நிதியானது உலக வங்கிக்கும் தமிழக அரசிற்கும் இடையே 70:30 என்ற நிதி விகிதத்தில் அமைந்துள்ளது. இதில் உலக வங்கி கடனுதவி ரூ.642.74 கோடி (100 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் தமிழக அரசின் பங்களிப்பு ரூ.275.46 கோடி (42.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும்.

8.5. திட்டப் பயனாளிகள்

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துகள், வளங்கள் மற்றும் திறன்களை கொண்ட சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்கள்–குறிப்பாக பெண்கள், ஆதி திராவிடர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களே இத்திட்டத்தின் முக்கியமான இலக்கு ஆவர். இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளை சேர்ந்த உற்பத்தியாளர்கள் குழு/கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர் பயனாளிகள் ஆவர்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஊரகத் தொழில்களை வளர்க்கவும் மேம்படுத்தவும் நுண், குறு, சிறு தொழில் முனைவோர்கள் (தனி நபர் மற்றும் குழுக்கள்), உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சமுதாய திறன் பள்ளிகள் மற்றும் பண்ணைப் பள்ளிகள்மூலம் திறன் வளர்ப்புக்கும் ஆதரவு தரும்.

8.6. திட்டத்தின் முதன்மைக் கூறுகள்

இத்திட்டம் கீழ்க்கண்ட நான்கு முதன்மைக் கூறுகளை உள்ளடக்கியதாகும்:

1. ஊரகத் தொழில் முனைவுக்கு (Rural Enterprise) ஏற்ற சூழல் மேம்பாடு
2. தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்
3. திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்
4. திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு

[2020 மார்ச் 16

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு, பெண்கள் (பாலின சமத்துவம்), தகவல், தொடர்பு மற்றும் தொழில்நுட்பம், கூடுகை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை இத்திட்டத்தில் அனைத்து கூறுகளுடனும் முழுமையாக இணைந்து செயல்படும்.

8.6.1.ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு

இத்திட்டக்கூறின் முக்கிய நோக்கம் ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற ஏதுவான சூழல்களை உருவாக்குதல் ஆகும். மாவட்ட பகுப்பாய்வு, மதிப்பு தொடர் ஆய்வு, மக்கள் பங்கேற்புடன்கூடிய வளர்ச்சி திட்டம் மற்றும் ஓரிட வசதி ஆகியவை இதில் அடங்கும்.

மக்கள் பங்கேற்புடன்கூடிய சாத்திய கூறுகள் மிக்க தொழில்வகைகளைக் கண்டறிதல், ஊரகத் தொழில்களை மேம்படுத்துதல் (குழு மற்றும் தனிநபர்), ஏற்கெனவே உள்ள ஊரக தொழில்களை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் மதிப்பு தொடர்வளர்ச்சி வாய்ப்புகளைக் கண்டறிதல், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்களின் நிலைத்த தன்மையை உருவாக்குவதற்காக சிறந்த வழிமுறைகளை தெரிவித்தல் ஆகியவற்றை இக்கூறு கொண்டுள்ளது.

இத்திட்டக்கூறின்கீழ் மகளிரால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பசுமை சார்ந்த நிறுவனங்கள் வளர்ச்சி பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

அ. மாவட்ட பகுப்பாய்வு

உள்ளூர் சூழலில் தொழில் மேம்பாட்டிற்கான முக்கிய துறைகள்/பிரிவுகள், துணைப் பிரிவுகள் மற்றும் உற்பத்தி பொருட்களை கண்டறிந்து முன்னுரிமைப்படுத்துவதே மாவட்ட பகுப்பாய்வின் முக்கிய நோக்கமாகும். மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை என்பது பங்குதாரர்களின் ஆலோசனைகள் மற்றும் இரண்டாம் நிலை தகவல்கள் அடங்கிய ஆய்வு அறிக்கை ஆகும். இவ்வறிக்கை ஒரு மாவட்டத்தில் குறிப்பிட்ட துறைகளில், துணை பிரிவுகளில் மற்றும் உற்பத்தி பொருட்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றை கண்டறிந்து ஆழமான மதிப்பீடு செய்து அதற்கு அடுத்த நிலையான மதிப்புத் தொடர் அணுகுமுறைக்கு ஆய்வு செய்ய உதவிகரமாக உள்ளது.

2020 மார்ச் 16]

தொழில் வளர்ச்சிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மாவட்ட பகுப்பாய்வு அறிக்கைகளுக்கு திட்டம் செயல்படுத்தப்படும் 26 துவக்க மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஆ. மதிப்புத் தொடர் ஆய்வு

ஏற்கெனவே மாவட்ட பகுப்பாய்வுமூலம் கண்டறியப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்ட உற்பத்தி பொருட்கள், பல்வேறு துறைகளின் துணை பிரிவுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அலசி, அதில் உள்ள வாய்ப்புகள், சவால்கள் மற்றும் ஆபத்துகள் ஆகியவற்றை ஆழமாக புரிந்துகொண்டு பெண்கள், மலைவாழ் மக்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர்க்கு முக்கியத்துவம் தந்து, தொழில் மேம்பாட்டிற்கான உத்திகளை உருவாக்க இந்த மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வு, சந்தை வாய்ப்புகளையும் அதில் ஏற்படும் தடைகளையும் அறிந்துகொள்ளவும் தொழில் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க திட்டத்தின் உதவிகள் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் உதவிகரமாக இருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் சிறு தானிய உற்பத்தி, ஊரக தொழில் மற்றும் பணிகளுக்கான வாய்ப்புகள் குறித்த மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இ. மக்கள் பங்கேற்புடன்கூடிய வளர்ச்சித் திட்டம்

மக்கள் பங்கேற்புடன்கூடிய வளர்ச்சித் திட்டம் என்பது உள்ளூர் மக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் ஆகியோருடன் கலந்து ஆலோசனை செய்து ஊரக சமுதாயத்தின் நிலைத்த வளர்ச்சிக்காகவும், தொழில் மேம்பாட்டிற்காகவும் கிராம ஊராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் தொழில் வளர்ச்சியினை உள்ளடக்கிய முதலீட்டுத் திட்டங்களை தயார் செய்யும் ஒரு வழிமுறையாகும்.

இந்த நோக்கத்திற்காக வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, தோட்டக் கலை, மீன் வளம், சிறு தொழில்கள், பாரம்பரிய கைத்தொழில்கள், சுற்றுலா போன்ற துறைகளில் உள்ள ஊரக வள விவரங்களின் படிவங்கள் அடங்கிய ஒரு கைபேசி செயலி இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கைபேசி செயலியின்மூலம் முதற்கட்டமாக 38 வட்டாரங்களில் உள்ள

1393 ஊராட்சிகளில் 3 சமுதாய வல்லுநர்கள், சுயஉதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றில் இருந்து தலா ஒரு பிரதிநிதி மற்றும் 1 கிராம தொழில் முனைவோர் ஆகிய 7 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவின்மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணி 2020 ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு பெறும். மாநில திட்ட மேலாண்மை அலகு இப்பணிகளை மாவட்ட மற்றும் வட்டார அலகுகளின்மூலம் கண்காணித்து வருகிறது.

எஞ்சிய 82 வட்டாரங்களில் உள்ள 2,601 கிராம ஊராட்சிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட ஆய்வு ஜூலை மாதம் 2020-க்குள் நிறைவு பெறும்.

ஈ. ஓரிட வசதி

ஓரிட வசதி என்பது தொழில் வளர்ச்சிக்காகவும், பல்வேறு வசதிகளுக்காகவும் இரண்டு வட்டாரங்களுக்கு ஒரு மையம் என ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலம் ஊரக தொழில் முனைவோர் தங்கள் வளர்ச்சிக்கான தொழில் துவங்கும் சிந்தனை, நோக்கங்கள், தொழில் திட்டம் தயார் செய்தல் மற்றும் அதனை ஆய்வு செய்தல், தொழில் துவங்க ஆரம்ப நிலை ஆதரவு, தேவையான நிதியினை பெறுதல், தொழில் நுட்பம், திறன் வளர்ப்பு, சட்டம் மற்றும் விதிமுறைகள், சந்தை குறித்த தகவல்கள், கடன் இணைப்புகள் போன்றவற்றை அறிந்துகொள்வதற்கு உதவுகின்ற ஒரு தொழில் வசதி மையம் ஆகும்.

8.6.2.தொழில்முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்

இக்கூறின்கீழ் ஊரகப் பகுதிகளில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதியினை பெற்றுத்தர இணை மானிய நிதி திட்டத்தின் (Matching Grant Program) மூலமும் பிற நிதி நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் வழிவகை செய்யப்படும்.

அ. இணை மானிய நிதி திட்டம்

புதிதாக துவங்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்காக, நிதி நிறுவனங்களில் இருந்து தேவைக்கேற்ப நிதி பெறுவதில் உள்ள வழங்கல் மற்றும் தேவையின் இடைவெளியை போக்கி போதிய நிதி பெற வழிவகை செய்வதே இக்கூறின் நோக்கமாகும். இணை மானிய திட்டத்தின்கீழ் முதல் தலைமுறை தொழில் முனைவுகள், மகளிரால்

2020 மார்ச் 16]

நடத்தப்படும் தொழில்கள், தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் மற்றும் நிதி பெறுவதில் இடர்பாடுள்ள தொழில்கள் ஆகியவற்றிற்கு நிதி ஆதாரத்தை ஏற்படுத்துதல் முக்கிய நோக்கமாகும்.

இணை மானிய நிதி திட்டமானது, கடன் பெற்றவர்கள் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்கப்படுத்திடவும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொழில்களுக்கான கடன் தொகையினை விரைவாக வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணை மானிய நிதி திட்டத்தில், தொழில்களுக்கு கடன் வழங்கும் வங்கிக்கு (Participating Financial Institution) கடன் தொகையில் 30% நிதி இத்திட்டத்தின்மூலம் விடுவிக்கப்பட்டு வங்கி இருப்பில் வைக்கப்படும். கடன் பெற்ற தனிநபர் மற்றும் குழுக்கள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% திட்ட நிதியினை வங்கிக் கடனுக்கு ஈடாக செலுத்தி எஞ்சிய கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு பெறலாம். இதன்மூலம் தொழில் மேம்பாட்டிற்காக கடன் பெற்றவர்கள் தொழிலில் முழு கவனம் செலுத்தி இலாபகரமாக நடத்தவும் கடனை முழுமையாக திருப்பி செலுத்தவும் வழிவகை செய்யப்படுகிறது. இணை மானிய திட்டத்தைச் செயல்படுத்தவும் கண்காணிக்கவும் மாநில திட்ட மேலாண்மை அலகிற்கு உதவிகரமாக ஒரு செயலாக்க அமைப்பு (Transaction Manager) இருக்கும்.

ஆ. புதுமை சார்ந்த முன்னோடித் திட்டங்கள்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் புதுமை சார்ந்த சில முன்னோடித் திட்டங்களை குறிப்பாக (அ) ஊரக கைவினைஞர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக நெசவுத் தொழில், மண்பாண்டங்கள், உலோகத் தொழில்கள், சிற்பத் தொழில்கள், நுண் கலைகள் போன்றவற்றிலும், (ஆ) உணவுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் குறிப்பாக-உள்ளூர் மற்றும் பாரம்பரிய உணவுகளை பிரபலபடுத்துவதற்காக ஒரு வேளாண் உணவு தொகுப்பு மையம் அமைப்பதிலும், (இ) சூரிய சக்தி சார்ந்த தொழில்கள் மற்றும் பெண்களுடைய மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் எளிதில் மக்குகின்ற சானிட்டரி நாப்கின்கள் தயார் செய்யும் தொழில்கள் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமைத் தொழில்களிலும் புதுமையான முறைகளைப் புகுத்தி செயல்படும்.

[2020 மார்ச் 16

6.8.3. திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்

இக்கூறின் நோக்கங்கள்

1. நிலையான ஊதியம் மற்றும் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
2. அதிக மதிப்புள்ள விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொருத்தமான திறன்களை ஊக்குவித்தல்.
3. சந்தை வாய்ப்புகளுக்கு உகந்த திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடுமூலம் தொழில் முனைவோர்களை உருவாக்குதல்.

இந்த துணைக் கூறு சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாய பண்ணைப் பள்ளிகள்மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும்.

அ. சமுதாயத் திறன் பள்ளிகள்

ஊரகப் பகுதிகளில் நெசவுத் தொழில், உலோகப் பணிகள், ஓவியம் தீட்டுதல், மண்பாண்டங்கள், கூடை மற்றும் பாய் முடைதல் போன்ற சில பாரம்பரிய திறன்களுக்கு அதிகத் தேவை உள்ளதால் அதில் கிராம அளவில் பல ஆண்டுகளாக சிறந்த அனுபவமுள்ள கைதேர்ந்த நபர்கள் இருப்பர். இத்திட்டத்தின் வாயிலாக அத்தகைய அனுபவமுள்ள உள்ள நபர்களைக் கண்டறிந்து அவர்களைப் பயிற்றுநர்களாகப் பயன்படுத்தி ஆர்வமுள்ள உள்ளூர் மக்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் பண்டைய கலைகளை புதுப்பிக்கவும், தொழில் மேம்பாட்டை உறுதிப்படுத்தவும் தேவையான குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளை உருவாக்கி சமுதாயத் திறன் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

இதைப் போன்று இரண்டு/நான்கு சக்கர வாகனப் பராமரிப்பு, வீட்டு உபயோக பொருட்கள் பராமரிப்பு, கட்டுமானப் பணி, குழாய் சரிசெய்தல், வெல்டிங், மின் பணி, கைபேசி பழுது நீக்கம், கணினி தொடர்பான பணிகள் போன்ற தொழில்களுக்கு சமுதாயத் திறன் பள்ளிகள்மூலம் உரிய பயிற்றுநர்கள் கண்டறியப்பட்டு சமுதாய உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு ஊரகத் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தப்படும். பொதுவாக சமுதாயத் திறன் பள்ளிமூலம் பயிற்சி வழங்கும் அனுபவ நபர்கள் பயிற்றுநர்கள் என்று அழைக்கப்படுவர்.

2020 மார்ச் 16]

ஆ. சமுதாய பண்ணைப் பள்ளிகள்

சமுதாய பண்ணைப் பள்ளிகள் என்பது வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துணைத் துறைகளில் சுயதொழிலுக்கான தொழில்நுட்ப சேவை வழங்கும் நிபுணர்களை (Sparks) உருவாக்கி, அவர்கள்மூலம் கிராம அளவில் சமுதாய உறுப்பினர்களிடையே திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல் ஆகும்.

சமுதாய பண்ணைப் பள்ளிகள் விவசாயம் சார்ந்த தொழிலில் உள்ள திறன் இடைவெளிகளை கண்டறிந்து, அதன் தீர்வுகளுக்கு தேவையான தொழில்நுட்ப அனுபவ அறிவை வழங்க உரிய நிபுணர்கள்/பயிற்றுநர்கள்மூலம் தொழில்நுட்பப் பயிற்சியினை சமுதாய உறுப்பினர்களுக்கு வழங்கும். இந்த சமுதாய பண்ணைப் பள்ளிகள் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் ஊக்குவிக்கப்படும்தனிநபர்மற்றும்குழுதொழில்முனைவோர்களுடன் இணைந்து செயல்படும்.

இ. தொழில் நிபுணர்கள் (Sparks)

தொழில் நிபுணர் என்பவர் ஊரகப் பகுதிகளில் வேளாண் சார்ந்த ஒரு குறிப்பிட்ட தொழிலில் அறிவு, திறன், ஈடுபாடு மற்றும் சிறந்த அனுபவம் கொண்ட ஒரு பயிற்சியாளர் ஆவார். அவர் தனது சமுதாய உறுப்பினர்கள் இடையே குறிப்பிட்ட அத்தொழிலில் நிபுணத்துவம் மிக்கவராக மதிக்கப்படுவார். தொழில் நிபுணர்கள் தங்களுடைய தொழில் சார்ந்த அறிவுத் திறனை சமுதாய உறுப்பினர்களுடன் கிராம அல்லது வட்டார அளவில் பகிர்ந்துகொள்வதிலும் பயிற்சி அளிப்பதிலும் அதிக ஈடுபாட்டுடன் இருப்பர்.

இத்திட்டம் அத்தகைய தொழில் நிபுணர்களை அடையாளம் கண்டு சமுதாய பண்ணைப் பள்ளிகள்மூலம் மற்ற சமுதாய உறுப்பினர்களுக்கு வழிகாட்டி, கற்பித்து, பயிற்சி அளித்து, ஆதரவு அளித்து தொடர் சேவைகள் வழங்க வழிவகை செய்யும்.

8.6.4. திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு

இக்கூறின் நோக்கமானது இந்தத் திட்டத்திற்கு தேவையான சேவைகளை வழங்குதல், மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை மேம்படுத்துதல், நிதி மேலாண்மையினை விரைவாக நிறைவேற்றும் செயல்முறையினை உருவாக்குதல், கொள்முதல்

மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சமூக, சுற்றுசூழல், பழங்குடியினரின் சமூகப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு, தொழில்நுட்பத்தை ஏற்படுத்தி சிறப்பான முறையில் திட்டத்தை செயல்படுத்துதல் ஆகும்.

அ. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு என்பது திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகளோ அல்லது திட்ட இலக்கில் இருந்து விலகலோ இருப்பின் அதனை கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் சரி செய்ய திட்ட மேலாளர்களுக்கு உதவி செய்யவும் திட்டச் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விவரங்களை தயார் செய்வதற்கும் தொடர்ந்து இயங்கும் ஒரு செயல்முறையாகும். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு திட்டச் செயலாக்கத்தின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து உண்மையான, எளிதில் புரிந்துகொள்ளத்தக்க தகவல்களை உடனுக்குடன் வழங்கும்.

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வின் நோக்கங்கள்:

1. தகவல் தொகுப்பு மற்றும் விபரங்களை கொண்டு அடிப்படை புள்ளிவிவரம், இடைநிலை மதிப்பீட்டு ஆய்வு ஆகியவற்றின்மூலம் திட்டத்தின் தாக்கங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்தல்.

2. இலக்கிற்கு எதிரான செயல்திறன் மற்றும் நிதித் திறன் சாதனைகள்மூலம் திட்டக் கண்காணிப்பு மேற்கொள்ளுதல்.

3. கருப்பொருள் சார்ந்த ஆய்வுகள் மற்றும் தனிநபர் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.

4. மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்கான மேலாண்மைத் தகவல் சேவையினை திட்டத்திற்காக வடிவமைப்பதில் முழு உதவி புரிதல்.

ஆ. மின்னணு தகவல் மேடை உருவாக்குதல்

தகவல், தொடர்பு மற்றும் தொழில் நுட்பம் என்பது திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து உடனடிக் கண்காணிப்பு மேற்கொள்ளவும் திட்டம் செவ்வனே செயல்படவும் ஒரு மின்னணு தகவல் மேடையை உருவாக்குவதில் திட்டத்தின் தவிர்க்க இயலாத ஒரு பகுதியாக அமைந்துள்ளது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் இதற்கான ஒரு

மென்பொருள் செயலியை உருவாக்குவதிலும், வடிவமைப்பதிலும் செயல்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த செயலி, திட்டத்தின் தகவல் மேலாண்மை முறையினை நிலைப்படுத்தவும், வலுப்படுத்தவும் மேலும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் குறித்த அனைத்து தகவல்களுக்கான களஞ்சியமாக இருக்கவும் உதவும்.

8.7. நிறுவன அமைப்பு

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க சங்கம்தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975-ன்கீழ் 7-7-2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இச்சங்கம் திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாடுகளை நிருவகிக்கிறது. மாநில திட்டச் செயலாக்க அலகிற்கு வழிகாட்டவும், கொள்கை முடிவெடுக்கவும் மற்றும் ஒத்துழைப்பு நல்கவும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கச் சங்கத்தின் பொதுக் குழு மற்றும் செயற்குழு முக்கிய அமைப்புகளாகத் திகழும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட ஊரகப் புத்தாக்க சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு திட்டத்தின் செயல்பாட்டிற்கு வழிகாட்டவும் துணை நிற்கவும் உதவி புரிகின்றன. மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான திட்ட மேலாண்மை அலகுகள்மூலம் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8.7.1. மாநில திட்ட மேலாண்மை அலகு

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தும் மாநில திட்ட மேலாண்மை அலகின் தலைமைச் செயல் அலுவலராக இந்திய ஆட்சிப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். மாநிலக் குழுவில் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் துணையுடன் திட்டச் செயல்பாடுகளை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகள் தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.7.2 மாவட்ட திட்ட மேலாண்மை அலகு

இத்திட்டம் 30 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட போதிலும், தற்போது 24 மாவட்ட திட்ட மேலாண்மை அலகுகளைக் கொண்டு (தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் முறையே மதுரை, திருச்சி மாவட்டங்களுடன் இணைந்து செயல்படுகின்றன)

[2020 மார்ச் 16

செயல்பட்டு வருகின்றது. மாவட்ட செயல் அலுவலர் தலைமையில் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பணி முன்னேற்றம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட செயல் அலுவலருக்கு திட்டச் செயலாக்கத்தில் உறுதுணையாக நான்கு செயல் அலுவலர்கள் உள்ளனர்.

8.7.3. வட்டார அலகு

இந்த செயலாக்க அலகானது 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் வட்டார அணித் தலைவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. திட்டச் செயல்பாட்டில் வட்டார அணித் தலைவருக்கு உறுதுணையாக மூன்று திட்டச் செயலர்கள் உள்ளனர்.

8.8. திட்டப் பணியாளர்கள் தேர்வு மற்றும் பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31-10-2019 அன்று 525 ஒப்பந்த பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஊரகப் புத்தாக்க திட்டத்தின் பல்வேறு நிலை பணிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது.

இப்பணியாளர்களுக்கு திட்டத்தின் நோக்கங்கள், கூறுகள், நிருவாகம், பணியாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் போன்றவற்றை புரிந்துகொள்வதற்காக மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையத்திலும் அண்ணா மேலாண்மை நிறுவனத்திலும் 7 முதல் 15 நாட்களுக்கு ஆழ்நிலை பயிற்சி வழங்கப்பட்டது.

8.9. செலவினம்

இத்திட்டத்தின்கீழ் ஜனவரி 31, 2020 வரை ரூ.17.33 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8.10. 2020-21 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் ரூ.163.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

9. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

கடந்த டிசம்பர் 2004 ஆம் ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பேரழிவிற்குப்பின், நிவாரணம் மற்றும் மறு வாழ்வுப் பணிகள் உடனடியாக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்டகாலத் தீர்வாக, மாற்று மற்றும் நிலைத்த வாழ்வாதாரங்கள் ஏற்படுத்தித் தர முடிவு செய்யப்பட்டது. இதற்காக, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன்கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயலாக்கம் பெற்றது. இத்திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட கடலோரச் சமுதாய மக்களின் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான கூட்டு வள மையங்கள்மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மாவட்ட அளவிலான மீனவ கூட்டமைப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன. சமுதாய மக்களின் திறனை வளர்ப்பதும் மற்றும் அவர்களின் திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை நிலைப்படுத்துவதும் ஆகும்.

சுய வேலைவாய்ப்பு, பேரிடர் மேலாண்மை ஆகியவற்றில் சமுதாய மக்களின் திறனை மேம்படுத்துதல்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதில் இத்திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

1. குறிக்கோள்:-

- தற்சார்புடைய கடலோர சமுதாயத்தை கட்டமைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைத்த தன்மையுடையதாக்குதல் மற்றும் அதிர்ச்சிகளை தாக்குப்பிடித்தல்

2. நோக்கம்:-

- சமுதாய மக்கள் மற்றும் பிற பொருத்தமான நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நுண் தொழில்கள் மற்றும் கடலோர வள மேலாண்மை அமைப்புகளை நிருவகிக்க, ஏதுவான நிறுவனங்களை ஏற்படுத்துதல்.

3. திட்டம் - ஒரு பார்வை:-

	பகுதி – 1	பகுதி – 2
திட்ட காலம்	11 ஆண்டுகள் (2008 –2019)	4 ஆண்டுகள் (2016 – 2020)
திட்ட மதிப்பீடு	ரூ.283.69 கோடி	ரூ.279.49 கோடி
செயல்படும் மாவட்டங்கள்	**1. திருவள்ளூர்** **2. காஞ்சிபுரம்** **3. விழுப்புரம்** **4. கடலூர்** **5. நாகப்பட்டினம்** **6. கன்னியாகுமரி**	**1. தஞ்சாவூர்** **2. திருவாரூர்** **3. புதுக்கோட்டை** **4. இராமநாதபுரம்** **5. திருநெல்வேலி** **6. தூத்துக்குடி**
திட்டப்பகுதி	24 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 109 ஊராட்சிகள்	36 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 129 ஊராட்சிகள்
பயனடைவோர்	1.55 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர்	1.20 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6.12 இலட்சம் பேர்

4. திட்டப் பயனாளிகள்:-

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள், அதாவது:-

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம்:- சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள் இதர,
- இத்திட்டத்தில் மொத்தம் 2,21,587 குடும்பங்களை உள்ளடக்கியுள்ளது

2020 மார்ச் 16]

5. உத்தி

வாழ்வாதார மேம்பாட்டுக்கான உத்தி கீழ்க்கண்ட நான்கு உந்து தளங்களைக் கொண்டது:

1) சமுதாய நிறுவனங்களை கட்டியெழுப்பி, அவற்றை ஆதரித்தல்

2) நுண் நிதி மற்றும் இதர நிதிச் சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்தல்

3) இலக்கு குடும்பங்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தல்

4) நிலைத்த, பெரிய அளவிலான நிறுவனங்களை வளர்த்தெடுத்தல் மற்றும் தொலைதூர சந்தைகளை அணுகுதல், சமுதாய அளவிலான திட்டமிடல், வள மேலாண்மை, பாதுகாப்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு, சமுதாய கட்டமைப்புகளை மேம்படுத்த வழிவகுத்தல் மற்றும் பேரழிவுகளின் தாக்கத்தைக் குறைத்தல் ஆகியவை ஆகும்.

இத்திட்டம் பெண்களை முக்கிய இலக்காக கொண்டு, தற்போதைய மீன் சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், புது வாழ்வாதாரத் திட்டங்கள் குறிப்பாக கால்நடை வளர்ப்பு, வேளாண்மை மற்றும் வேளாண் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உதவுகிறது. பெரும்பான்மையான சுயஉதவிக் குழுக்கள்/கூட்டுப் பொறுப்புக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பெண்கள் ஆவர். அவர்கள் திட்டத்தின் உதவியுடன் குறுந்தொழில் அதிபர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அதாவது வேலை தேடுபவர்கள் தேவை வழங்குபவர்களாக மாறுகிறார்கள்.

6. திட்டச் செயல்பாடு

திட்டச் செயல்பாடுகளை மேற்பார்வையிட மூன்று குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. மாநில அளவில், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில்,

[2020 மார்ச் 16

இத்திட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/திட்ட இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்/செயலராகக் கொண்ட திட்ட வழிகாட்டுக் குழு.

2. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்டச் செயல்பாடு ஆலோசனைக் குழு.

3. கிராம அளவில், ஊராட்சித் துறை நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த இதர நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம கூட்டு வள ஆலோசனைக் குழு.

திட்ட வழிகாட்டுக் குழு


தலைவர்	**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
உறுப்பினர் செயலர்	**கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**
உறுப்பினர்கள் :	
அரசு முதன்மை செயலாளர், நிதித் துறை	
முதன்மை செயலாளர் / ஆணையர், வருவாய் நிருவாகம்	
இயக்குநர், மீன்வளத் துறை	
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை	
திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்	
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்	
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்	

மாவட்ட செயலாக்க அலகு - பகுதி-2

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 16]

7. திட்டக் கூறுகள்:-



இத்திட்டத்தின் மூன்று உட்கூறுகளின்கீழ் பல திட்டச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

1) கடலோர வள ஆதார மேலாண்மை

2) தொழில் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்

3) திட்ட மேலாண்மை போன்றவை ஆகும்.

9.1 திட்டக் கூறு-1: கடலோர வள ஆதார மேலாண்மை

1. சமுதாய ஆதரவு

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் துணையுடன் திட்டப் பகுதிகளில் 64 கூட்டு வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கூட்டு வள மையம் தோராயமாக 1 முதல் 8 கடலோர ஊராட்சிகளைக் கொண்டது. இத்திட்டச் செயல்பாட்டிற்கு அடித்தளத்தில் கூட்டு வள மையங்கள் துணையாக உள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், ஒரு குழு ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்டச்

செயலாக்குநர் (Cluster Facilitator), ஒரு வியாபார ஊக்குநர் (Business Promoter) மற்றும் ஒரு கூடுதல் வியாபார ஊக்குநர் (Addtiional Business Promoter) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மீனவர்களின் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு சமுதாயம் வலுப்படுத்தப்படுகின்றது. 120 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் 2 மீனவர்களின் கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் ரூ.10.15 கோடி மதிப்பில் கட்டித் தரப்பட்டுள்ளன.

மேலும், ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் 1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டடம் மற்றும் 2 மீனவர் சங்கக் கூட்டமைப்பு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் மார்ச் 2020-க்குள் முடிவடைந்து விடும்.

2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்

திட்டப் பகுதிகளில் தொடர்புடைய மற்றும் பயனுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலே இதன் நோக்கமாகும். திட்டமிடல், சொத்துகளை ஏற்படுத்த அவற்றுக்கு பங்களித்தல், அமைத்தல், பராமரித்தல் ஆகியவற்றில் முழுச் சமுதாய ஈடுபாடு இதன் தனித்துவமான அம்சமாகும். வள ஆதார வரைபட முறைமூலம், சமுதாய மக்களின் கட்டமைப்பு தேவைகள், நுண்திட்டங்கள்மூலம் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன. வாழ்வாதாரம் தொடர்பான கட்டமைப்புகளான 140 மீன் வலை பின்னும் தளங்கள், 76 மீன் உலர் கலங்கள், 7 குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் மற்றும் 633 இதர பணிகளான இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் குழாய்கள் நீட்டிப்பு போன்ற 856 பணிகள் ரூ. 44.05 கோடி செலவில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூ.8.33 கோடி மதிப்பீட்டில் 54 மீன் வலை பின்னும் கூடங்கள், 18 மீன் உலர் தளங்கள் மற்றும் 3 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் மார்ச் 2020-க்குள் முடிவடைந்து விடும்.

சுற்றுப்புற சூழல் தொடர்பான பிரச்சினைகள், பாலின வேறுபாடு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்வு செய்யும் நோக்கில் நுண்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

2020 மார்ச் 16]

3. மீன் வள மேலாண்மை

மீன்பிடி நடவடிக்கைகளில் இயந்திரமயமாக்கல் மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகளில் உள்ள தொந்தரவுகள் காரணமாக மீன் வளம் குறைந்து வருவது அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகளில் சில. குறைந்து வரும் மீன் வள ஆதாரங்களை அதிகரிக்க, 12 திட்ட மாவட்டங்களில் கடலுக்கடியில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்க திட்டமிடப்பட்டது. மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் (CMFRI) உதவியுடன் ரூ.3.08 கோடி செலவில் 18 செயற்கை பவளப் பாறைகள் பகுதி–1, ஆறு மாவட்டங்களில்நிறுவப்பட்டுபயன்பாட்டில்உள்ளன.மீனவர்களுக்கு பல வகையான மீன்கள் அதிக எண்ணிக்கையில் கிடைப்பதனால், செயற்கை பவளப் பாறைகளின் தாக்கம் மிகவும் சாதகமாக உள்ளது. நண்டு கொழுப்பேற்றுதல், கடற்பாசி உற்பத்தி மற்றும் சேகரித்தல் போன்ற பிற செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து கடலோர ஊராட்சிகளிலும், அறிவியல் கண்ணோட்டத்துடன்கூடிய நிலைத்த மீன் வள ஆதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு கால்நடை வளர்ப்புத் துறை, பால் பண்ணை மற்றும் மீன் வளத் துறை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டில், பகுதி–2 உள்ள ஆறு மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் 48 இடங்களில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் ஒத்துழைப்புடன் மார்ச் 2020-க்குள் நிறுவப்பட்டு விடும்.

9.2 திட்டக் கூறு-2: தொழில் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்

1. சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் உதவி

திட்டப் பகுதிகளில் உள்ள சுயஉதவிக் குழுக்கள் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டுத் தரம் அறியப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட சுயஉதவிக் குழுக்களைக் கொண்டு குடியிருப்பு அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த தன்மையை உறுதி செய்யும் வகையில், அவை பல்வேறு வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக உயர்நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களை கண்காணித்து கடன் திரும்பச் செலுத்த உதவும் பணிக்கு கடன் தொகையில் 2 சதவீதம் கமிஷன் பெற்று வருகின்றனர். அதில், 1% கடன் தொகை விடுவிக்கும் போதும், 1% சதவீதம் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கடன் தொகை மீள செலுத்தப்பட்ட பின்பும் வழங்கப்படுகிறது. இந்த முயற்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நீடித்த தன்மையுடன் தொடர்ந்து செயல்பட வழிவகுக்கிறது.

2018-2019 ஆம் ஆண்டு வரை 5,215 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.354.94 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டில், 2000 சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் ரூ.60.00 கோடி கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 31-12-2019 வரை, 358 சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகளின்மூலம் ரூ.21.38 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் திறமைகளை வங்கியாளர்கள் நேரடியாக அறிந்துகொள்வதால், உரிய நேரத்தில் குழுக்களுக்கு கடன் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது, நமது திட்டத்தில் நிதி பங்குதாரர்களாக கீழ்க்கண்ட வங்கிகள் உள்ளன:

1. நாபின்ஸ்
2. தமிழ்நாடு கிராம வங்கி (இந்தியன் வங்கியின் ஆதரவுடன் செயல்படும் மண்டல ஊரக வங்கி)
3. இந்தியன் வங்கி
4. ஐசிஐசிஐ வங்கி (இரண்டு மாவட்டங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கி வருகின்றன).

பகுதி–1: ஏற்கெனவே செயல்பட்டு வரும் ஆறு மாவட்டங்களில் உள்ள 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் 107 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்பட்டு, 31-12-2019 வரை, ரூ.2.46 கோடி கமிஷன் ஈட்டியுள்ளனர்.

பகுதி–2: கூடுதல் மாவட்டங்களில் 127 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில், 124 ஊராட்சி அளவிலான

2020 மார்ச் 16]

கூட்டமைப்புகள் இந்தியன் வங்கி, நாபின்ஸ் மற்றும் தமிழ்நாடு கிராம வங்கிகளில் வியாபார மேம்பாட்டு முகவர்களாக செயல்பட்டு வருகின்றனர். மீதமுள்ள 3 கூட்டமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. 31-12-2019 வரை ரூ.68.87 இலட்சம் கமிஷன் ஈட்டியுள்ளனர்.

2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு

துயர் குறைப்பு நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பராமரிக்கின்றன. இயற்கை பேரழிவால் பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு துயர் குறைப்பு நிதியிலிருந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகின்றது. இந்நிதிக்கு 4/5 பங்கு திட்டப் பங்களிப்பாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்களிப்பாகவும் உள்ளது. தனிநபர் கடனாக ரூ.1000/- முதல் 7500/- வரையும், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10,000/- வரையும் 6 சதவீத வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது.

துயர் குறைப்பு நிதியின் பயன்பாட்டு விவரம்

வருடம்	பயன் பெற்றோரின் எண்ணிக்கை	தொகை (ரூ. இலட்சத்தில்)
2010-2011	1875	62.86
2011-2012	1667	68.46
2012-2013	3391	151.48
2013-2014	3870	205.92
2014-2015	6582	324.28
2015-2016	6731	343.51
2016-2017	4376	276.58
2017 - 2018	3437	219.93
2018 - 2019	2940	205.15
2019 - 2020	5467	441.52
மொத்தம்	40336	2299.69

சுயஉதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்பு குழுக்கள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு உயிர், தனிநபர்

விபத்து, கால்நடை மற்றும் சொத்துகள் ஆகிய காப்பீடு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு வழங்கும்பொருட்டு சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம்

கடற்கரையை இறங்கு தளமாகக் கொண்ட தோணி, வள்ளம், சிறு படகுகள் மற்றும் வெளி பொருத்து இயந்திரத்துடன்கூடிய (அ) அல்லாத கட்டுமரம், இழை வலுவூட்டும் நெகிழி படகுகள் போன்றவற்றை பயன்படுத்தும் சிறு / குறு மீனவர்களுக்கு பொதுவாக, பாதுகாப்பு மற்றும் தொலைதொடர்பு உபகரண வசதிகள் கிடையாது. இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தனி விபத்துக்களால், சிறு / குறு படகுகளின் சேதம் (ம) இழப்பு, உபகரணங்கள் மற்றும் மீன்பிடித் துணைக் கருவிகளுக்கு ஏற்படும் சேதம் ஆகியவை மீன்பிடி தொழிலில் உள்ள முக்கிய இடர்பாடுகள் ஆகும்.

காப்பீட்டு நிறுவனங்கள், சிறு/குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீட்டினை மீன்பிடி கப்பல்களுக்கான காப்பீட்டுடன் ஒப்பிட்டு ஆண்டு பிரீமியமாக 4 சதவீத தொகையை நிர்ணயித்துள்ளனர். இந்த அதிகப்படியான பிரீமியத் தொகையை செலுத்தி காப்பீடு செய்ய ஏழை மீனவர்களால் இயலாது. இதனை கருத்தில் கொண்டு, சமுதாயம் சார்ந்த நிறுவனமாக சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் உருவாக்கப்பட்டு, சிறு/குறு அளவிலான மீனவர்கள் எளிதில் அணுகி குறைந்த செலவில் பயன்பெறும் வகையில் சிறு/ குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு செயலாக்கத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் மாவட்ட அளவிலான மீன் விற்பனை சங்கங்களின் சம்மேளனங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீடு திட்டத்தை செயல்படுத்திட, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம் நிறுவனம், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகியோருடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- பேரழிவுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனமும் தனி விபத்துகளுக்கு சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கமும் இழப்பீடு வழங்கும்.
- 1 சதவீத பிரீமிய தொகை மட்டுமே பெறப்படுகின்றது.
- அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் இழப்பீடு தொகை வழங்கப்படுகின்றது.

வருடாந்திட வாரியாக சிறு/குறு மீன்பிடி உடைமைகளுக்கான காப்பீட்டில் இணைந்துள்ள விவரங்கள்

வ.எண்	வருடம்	மீன்பிடி உடைமைக் காப்பீடு மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை
1.	2017-2018	5914
2.	2018–2019	7538
3.	2019–2020	7798
மொத்தம்		21250

இதுவரை 15 நபர்களுக்கு தனி நபர் விபத்துக்களுக்கான இழப்பீடு தொகை ரூ.5.08 இலட்சம் சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மீன்பிடி உடைமைகளின் இடர்பாட்டிற்கான பரஸ்பர சகாய சங்கம்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கஜா புயலில் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 189 நபர்களுக்கு ரூ.27.59 இலட்சம் இழப்பீடு தொகை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

3. நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி

திட்டப் பகுதிகளில் சமையலறைக் கழிவுகளிலிருந்து சமையல் எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் புதுமையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் அப்பகுதிகளில் உள்ள

கழிவுகள் திறம்பட உபயோகப்படுத்தப்படுவதால், சுற்றுப்புற சுகாதாரம் பாதுகாக்கப்படுவதோடு எரிவாயு உற்பத்திக்கும் வழிவகுக்கின்றது.

- ஒரு கலனின் மதிப்பீடு தொகை ... ரூ.23,400
 - o திட்ட மானியம் ... ரூ.12,500
 - o பயனாளி பங்களிப்பு ... ரூ.8000
 - o கடன் தொகை ... ரூ.2900

 மொத்தம் ... ரூ.23,400

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் 137 சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் பயிற்சி நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. சுயஉதவிக் குழுக்களுக்கான ஆதரவு

சுயஉதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, வலுவற்ற சுயஉதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கு திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் நிருவாகிகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பட்டறிவு பயணம் அழைத்து செல்லப்படுகின்றனர். இந்நடவடிக்கைகளுடன், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகள் போன்ற அறிவுசார் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அன்றாட கணக்குகளை மேலாண்மை செய்ய டேலி மென்பொருள் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலும் புத்தக பராமரிப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு குழுக்கடன் தவிர வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கான கடன் வழங்கப்படுகிறது.

5. மீன் விற்பனை சங்கங்கள்

தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பின் (SIFFS) உதவியுடன் 118 மீன் விற்பனை சங்கங்கள்

உருவாக்கப்பட்டுள்ளன. கந்து வட்டிக்காரர்கள் மற்றும் வியாபாரிகளின் கடன் தொல்லையிலிருந்து மீன் விற்பனை சங்க உறுப்பினர்களை மீட்பதற்கும், மீனவர்களின் வறுமையை ஒழிக்கவும், மீன் விற்பனை சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ.15,000/- முதல் ரூ.70,000/- வரை கடன் மீட்பு நிதி வழங்கப்படுகின்றது. அனைத்து மீன் விற்பனை சங்கங்களுக்கும் தேவையான அத்தியாவசிய கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. திருவள்ளூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளும், விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை ஒருங்கிணைத்து விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மண்டல அளவிலான கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மூன்றும், மூன்று படகு கட்டும் தளங்களும் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாளுவதற்காக நான்கு மீன் ஏலக் கூடங்கள் மற்றும் நான்கு மீன் கொள்முதல் நிலையங்கள் ரூ.282 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 75 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டடங்கள் ரூ.4.49 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர, மீனவ மகளிருக்கு வலை பின்னுதல், மகளிர் மீன் வியாபாரிகளுக்கு கூட்டுப் பொறுப்புக் குழு உருவாக்குதல் ஆகிய வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீன் விற்பனை செய்யும் மகளிரை இணைத்து 1858 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 9018 உறுப்பினர்களை கந்துவட்டிகாரர்களின் கடன் நெருக்கடியில் இருந்து மீட்க ரூ.11.61 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் கடன் திருப்பம் 99%-க்கு மேல் இருப்பது பாராட்டத்தக்க வகையில் உள்ளது. எனவே, இத்திட்டத்திற்கு தேசிய அளவிலான ஸ்கோச் தங்க விருது ஏழை மீன் விற்பனை செய்யும் மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தப்பட்ட வகையில் நடவடிக்கை மேற்கொண்டதற்காக சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2019–2020 ஆம் ஆண்டில், 22 மீன் விற்பனை சங்கக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மார்ச் 2020-க்குள் கட்டடப் பணிகள் முடிக்கப்படும்.

6. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி

தற்போதுள்ள வாழ்வாதாரத்தை மேலும் நிலைப்படுத்த விருப்பமுள்ள மகளிருக்கும் மாற்று வாழ்வாதாரம் ஏற்படுத்துவதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இந்நோக்கத்தை எய்திட வாழ்வாதாரத் திறன் அளித்தல் மிகவும் முக்கியமானது ஆகும். இத்திட்டத்தின் மூலமாக தேவைக்கேற்ப 19,000 மகளிருக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுதல், விற்பனை மேம்பாடு மற்றும் பொருள் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றை இப்பயிற்சிகள் மகளிருக்கு கற்றுக் கொடுத்துள்ளன. மகளிருக்கு சுகாதாரமான முறையில் மீன் உருவாக்குதல், முயல் வளர்ப்பு பனை ஓலை பொருட்கள் தயாரித்தல், தையல், ஸ்கிரீன் பிரிண்டிங் மற்றும் பல்வேறு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2019–2020 ஆம் ஆண்டில், சுமார் 1647 மகளிருக்கு ரூ.183 இலட்சம் மதிப்பீட்டில் கோழி வளர்ப்பு, கடல் சிப்பியிலான கைவினைப் பொருட்கள் தயாரித்தல், பனை ஓலை பொருட்கள் தயாரித்தல், தையல் போன்றவற்றிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

7. நுண் தொழில் மேம்பாடு (Micro Enterprise)

நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் திட்ட மேலாண்மை அலகு உடன்பாடு ஏற்படுத்தி, பால் விற்பனை, முருங்கைக்காய், மல்லிகை மற்றும் மாம்பழம் சாகுபடி போன்ற உட்பிரிவுத் தொழில்கள், தொழில் தொகுப்புகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கோழி வளர்ப்பு, காய்கறி, காளான் வளர்ப்பு, கருவாடு உற்பத்தி, கயிறு தயாரித்தல், மலர்த் தோட்டம், பொம்மை செய்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், அழகுக் கலை நிலையம், புடவை வண்ணம் தீட்டுதல் மற்றும் இதர தொழில்களை ஊக்குவிக்க திறன் பயிற்சியுடன் கடன் உதவி வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31-12-2019 வரை, ரூ.87.01 கோடி செலவில், 4,280 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் பல்வேறு நுண்தொழில்கள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

2019–2020 ஆம் ஆண்டில், புதிதாக 2,000 கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கி, ரூ.50 கோடி வாழ்வாதாரக் கடன் வழங்க திட்டமிடப்பட்டு, தற்போது, 668 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வங்கிகள்மூலம் ரூ.12.84 கோடி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

8. வாழ்க்கை கல்வி பயிற்சி

திட்டப் பகுதிகளில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை பல பிரிவுகளில் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி 5216 இளைஞர்களுக்கு ரூ.473.11 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

9.3 சிறப்பு முயற்சிகள்

திட்டப் பகுதிக்கு பொருத்தமான பண்ணை சார்ந்த திட்ட உதவிகள், தகுந்த வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுகின்றன. அனுபவமுள்ள தொண்டு நிறுவனங்கள்மூலம் பயனாளிகளின் தேவையை கருத்தில் கொண்டு இவை ஒருங்கிணைக்கப்படுகின்றன.

பண்ணை சார்ந்த தொழில்களின் அம்சங்கள்:

- குழு உருவாக்கம் மற்றும் அவற்றின் பயிற்சி, நகர்வு மற்றும் நடவடிக்கைகள்
- தொழில்நுட்ப உதவி வழங்குதல்
- தற்போதுள்ள அரசு திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்
- வங்கி இணைப்புமூலம் கடன் உதவி வழங்குதல்
- சந்தைப்படுத்த உதவி புரிதல்
- உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை உறுதிப்படுத்துதல்
- திட்ட நடவடிக்கைகளில் நிலைத்த தன்மைக்கு வகை செய்தல்

பகுதி–1 : மாவட்டங்களிலுள்ள திட்டங்கள்

1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் மா, காய்கறிகள் மற்றும் மூலிகை சாகுபடி போன்ற பண்ணை சார்ந்த திட்டங்களை மேம்படுத்துதல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடலோர பகுதியிலுள்ள 12 ஊராட்சிகளிலுள்ள 3 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் 2,850

விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் மா / காய்கறி / மூலிகை சாகுபடி போன்ற பண்ணை சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 190 துவக்க நிலை உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவை திருமறைக்காடு விவசாயிகள் கூட்டமைப்பாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் சாகுபடி மற்றும் குழு நடவடிக்கைகள் தவிர கொள்முதல் மையங்கள் மற்றும் விற்பனை மையத்திற்காக சுழல் நிதியாக ரூ.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு விற்பனைமூலம் நல்ல வருமானம் பெறுவதற்கு இம்மையங்கள் உதவுகின்றன. தொண்டு நிறுவனமான கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மா திட்டத்தை மேம்படுத்துதல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மா செயல்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டபோது, மாக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை நிறுவ திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு, நாகை ஆர்கானிக் விவசாயிகள் தயாரிப்பாளர்கள் நிறுவனம் (NOFPCL) என்ற பெயரில் தயாரிப்பாளர்கள் நிறுவனமாக மேம்படுத்தி அதன்மூலம் மாக்கூழ் உற்பத்தி நிறுவனத்தை செயல்படுத்த முன்மொழிந்தது.

அதனடிப்படையில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன்கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.1044.14 இலட்சம் (திட்டப் பங்கீடு-ரூ.866.74 இலட்சம் மற்றும் பயனாளிகள் பங்கீடு-ரூ.177.40 இலட்சம்) மதிப்பீட்டில் மாக்கூழ் தயாரிக்கும் நிறுவனம் நிறுவப்பட்டு, மாக்கூழ் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மா விவசாயிகளின் உற்பத்தியின் மதிப்பை அதிகரிக்கச் செய்வதற்கும், அதிக விலையை பெற வாய்ப்பளிப்பதற்கும் மாக்கூழ் உற்பத்தி நிறுவனம் உதவுகிறது. இதன்மூலம் மா விவசாயிகள் நீண்டகாலத்திற்கு ஒரு நிலைத்த வாழ்வாதாரத்தினை பெற்றிடும் வகையில் அமைந்துள்ளது.

2. கை கொடுக்கும் கை (Hand in Hand) நிறுவனத்தின் உதவியுடன் கடலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை மேம்படுத்துதல்

கடலூர் மாவட்டத்தில் 9 கடலோர கிராமங்களில் வசிக்கும் 400 மகளிரைக் கொண்ட தொகுப்பின்கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டு

2020 மார்ச் 16]

பொறுப்புக் குழுக்களுக்கு தமிழ்நாடு கிராம வங்கிமூலம் கடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து உறுப்பினர்கள் உள்ளடக்கிய பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இதன்மூலம் பால் விற்பனை மற்றும் தீவனம் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாட்டுத் தீவனம் மற்றும் கறவை மாடுகள் வாங்குவதற்காக கூட்டமைப்பிற்கு சுழல் நிதியாக ரூ.15.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கை கொடுக்கும் கை (Hand in Hand) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

பகுதி—2 மாவட்டங்களிலுள்ள திட்டங்கள்

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் மற்றும் திணை போன்ற சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் உள்ள நெல் மற்றும் சிறு தானியங்களை பயிரிடும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், நெல் மற்றும் சிறு தானியங்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்மூலம் இத்திட்டம் கடலோரப் பகுதிகளிலுள்ள 12 ஊராட்சிகளை உள்ளடக்கிய 1,000 விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், உற்பத்தியாளர் நிறுவனமாக ஒருங்கிணைத்து விவசாயத்தில் நிலைத்த தன்மையை அடைவதற்கு கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின்மூலம் ரூ.60.04 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் மல்லிகை சாகுபடி மற்றும் மலர் விற்பனை செய்தல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 கடலோர ஊராட்சிகளிலுள்ள மல்லிகை சாகுபடி செய்யும் 400 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சாகுபடி திறன் மற்றும் விற்பனை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு மல்லிகை அடுக்கு நாற்றங்காலை அதிகரிப்பது, தாய் தாவர சாகுபடி மற்றும் மல்லிகை சாகுபடியை அதிகரித்து மல்லிகை பூ மற்றும் பதியன்கள் விற்பனைமூலம் நல்ல இலாபம் பெற வழிவகை செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனமான சிவகங்கை பல்நோக்கு சமூக சேவை சங்கத்தின்மூலம் செயல்முறை ஆதரவு வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2019–2020 ஆம் ஆண்டில், கூடுதலாக 100 பயனாளிகள் இணைக்கப்பட்டு ரூ.12.00 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டது.

3. ஆடு வளர்ப்புத் திட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஆடு வளர்ப்பில் குறைந்தபட்ச இறப்பு விகிதம், மேம்பட்ட ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம்மூலம் எளிய முறையிலான தொழில்நுட்பங்கள் உதவியுடன் பெண்கள், ஆடு வளர்ப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் 14 கடலோர ஊராட்சிகளிலிருந்து சுமார் 500 மகளிர் பயன்பெறும் வகையில் 42 சமூக கால்நடை தொண்டர்கள் மேற்கண்ட நோக்கங்கள் நிறைவேற்ற உதவுவதற்காக பணிபுரிகின்றனர். இத்திட்டம் நிலையான விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கை (SEVA) தொண்டு நிறுவனத்தின்மூலம் 2019–2020 ஆம் ஆண்டில், கூடுதலாக 1,000 மகளிர் பயன்பெறும் வகையில், ரூ.12.80 இலட்சம் ஒதுக்கீடு செய்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தஞ்சாவூர், திருவாரூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும், ஆடு வளர்ப்பு பணி மேற்கொள்வதற்கு 2,000 மகளிர் பயன்பெறும் வகையில், ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் முருங்கை சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல்

முருங்கை சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்காக திருநெல்வேலி மாவட்டத்தில் 11 கடலோர ஊராட்சிகளில் முருங்கை சாகுபடி, முருங்கைக்கீரை மற்றும் ஏற்றுமதி செய்வதற்காக முருங்கை எண்ணெய் உற்பத்தி போன்றவற்றில் ஈடுபடுத்த 800 மகளிரை தேர்வு செய்து முருங்கை சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்காக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஸ்டெல்லா மேரிஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடிஸ் (SMIDS) தொண்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டு, ரூ.38.59 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 200 மகளிரை இணைத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து பண்ணை சார்ந்த திட்டங்களும் வங்கிமூலம் கடன் உதவி செய்ய திட்டமிடப்பட்டு குழு ஒருங்கிணைப்புடன் செயல்படுவதற்கு முறையான பயிற்சி மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

2020 மார்ச் 16]

5. பனை மரம் ஏறும் கருவி அறிமுகப்படுத்துதல்

- பெண்களுக்கான பனை ஏறும் பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு மேலும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக பனை மரம் ஏறும் கருவி சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- 25 பெண்களுக்கு பனை மரம் ஏறுவதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

6. தொகுப்பு நடவடிக்கைகள் உருவாக்குதல்

கூட்டுப் பொறுப்பு குழுக்கள் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அவற்றை மேலும் வலுவடையச் செய்யவும், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும் ஒன்று அல்லது இரண்டு தொழில் தொகுப்புகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரே தொழில் செய்யக்கூடிய பல கூட்டுப் பொறுப்பு குழுக்களை கூட்டு வள மையத்தின்மூலம் தங்களுக்கு தேவையான இடுபொருளிலிருந்து சந்தைப்படுத்துதல் வரை கிடைக்கும் வள ஆதாரங்களின் அடிப்படையில் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் இதன் முக்கிய அம்சமாகும்.

இதை முன்னிறுத்தி, பின்வரும் வழிகளில் செயல்படுவது கூட்டு வள மைய தொழில் தொகுப்புகளின் நோக்கமாகும்:

1. கூட்டு வள மையத்தில் செயல்படும் கூட்டுப் பொறுப்பு குழுக்களின் தொழில்களை பற்றி அறிந்துகொள்ளுதல்

2. கூட்டுப் பொறுப்பு குழுக்களின் வலிமையை ஆய்ந்து அதனுடைய செயல்பாட்டைக் கண்டறிதல்

3. கூட்டுப் பொறுப்பு குழுக்களின் செயல்பாட்டில் இருக்கும் குறைபாடுகளை கண்டறிந்து அதனை நீக்கி வலுவடைய செய்தல்

4. கூட்டுப் பொறுப்பு குழுக்களை முன்னேறுவதற்கான அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைப்பதன்மூலம் பெற வழி வகுத்தல்

[2020 மார்ச் 16

9.4 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

திட்டச்செயல்பாடுகளைஉன்னிப்பாககண்காணிக்கும்வகையில் எளிய வகையிலான டேலி மென்பொருள் (Tally Software) அனைத்து நிலைகளிலும் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இணையதளம் வாயிலாக திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது. மாதாந்திர ஆய்வுக் கூட்டம்மூலம் மாவட்டம் மற்றும் கள அளவில் அனைத்து செயல்பாடுகளின் இலக்கு மற்றும் தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஆண்டு திட்ட பலன் (outcome) குறித்து மூன்றாம் தரப்பினர்மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. திட்டச் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு மாநில அளவில் திட்ட வழிகாட்டு குழுவும், தேசிய அளவில் முத்தரப்பு நிதி செலவு குறித்த ஆய்வுக் கூட்டமும் நடத்தப்படுகின்றன.

9.5 முடிவுரை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் கடலோர சமுதாய வாழ்வாதாரத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இலக்கு குடும்பங்களின் வருமான வரம்பு கணிசமாக உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு நிலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர் இத்திட்டச் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளது என சான்றளித்துள்ளனர்.

திட்டச் செயலாக்கத்தில் அனைத்து நிலைகளிலும் சமுதாயப் பங்களிப்பை நிலை நிறுத்தியது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். வியாபார மேம்பாட்டு முகவர்கள் மற்றும் பண்ணை சாரா நடவடிக்கைகள்மூலம் சமுதாயம் சார்ந்த அமைப்பான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலைத்த தன்மைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்கள் நிதி சேவைகளை இலகுவாகப் பெறும் நிலைக்கு ஏற்றம் பெற்றுள்ளனர். வெற்றிகரமான மாற்று சுய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீனவர்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டதால், அவர்களுடைய உற்பத்திக்கு உகந்த விலை உறுதி செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட மீன்பிடி நடைமுறைகளை தொடர்தல், ஏழை மற்றும் மிகவும் ஏழை மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களில் நிதி நிறுவனங்களில் ஆர்வமின்மை போன்ற சவால்களை இத்திட்டம் சிறப்பான முறையில் கடந்துள்ளது.

2020 மார்ச் 16]

9.6 திட்ட நிதி ஒதுக்கீடு

நிறுவன வாரியாக

வ. எண்	நிறுவனம்	தொகை (ரூ.கோடியில்)	
		பகுதி - I	பகுதி - II
1.	பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம்	132.32	142.15
2.	தமிழக அரசு	12.00	16.08
3.	வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள்	100.61	94.32
4.	பயனாளிகளின் பங்களிப்பு	38.76	26.94
	மொத்த தொகை	283.69	279.49

9.7 மொத்த செலவினப் பட்டியல்

அ. ஏற்கெனவே செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் (திட்டம் முடிவு 30-9-2019)

(ரூபாய் இலட்சத்தில்)

திட்டக் கூறு எண்	திட்டக் கூறு	திட்ட மதிப்பீடு தொகை	திட்ட இடை நிலை அறிக்கை	2007 முதல் 31.03.2019 வரை மேற்கொள் ளப்பட்ட செலவினம்	2019-2020 (01.4.2019 முதல் 30.09.2019 வரை)		30.09.2019 வரை உள்ள மொத்த செலவினம்
					வருடாந்திர பணித் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு	மேற்கொள் ளப்பட்ட செலவினம்	
I.	கடலோர வள ஆதார மேலாண்மை	3851	5632	6154.78	76.00	91.02	6245.80
II.	ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள	983	1398	1527.10	0	0	1527.10
III.	வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி	6631	9399	6476.51	261.82	196.76	6673.27
IV.	சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை	180	242	235.51	0	0	235.51
V.	திட்ட மேலாண்மை	1592	2256	**4058.16**	**186.00**	**125.65**	**4183.81**
மொத்தம்		**13237**	**18927**	**18452.06**	**523.82**	**413.43**	**18865.49**

[2020 மார்ச் 16

ஆ. விரிவுப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள்

1. திட்டக் கூறு வாரியாக

(ரூபாய் இலட்சத்தில்)

திட்டக் கூறு எண்	திட்டக் கூறு	திட்ட மதிப்பீடு தொகை	2017 முதல் 2019 வரை		2019-2020 (1-4-2019 – 31-12-2019)		31-12-2019 வரை மேற்கொள்ளப் பட்ட மொத்த செலவினம்
			நிதி விடுவிப்பு	**31-3-2019 வரை மேற்கொள்ளப் பட்ட செலவினம்**	**வருடாந்திர பணித் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு**	**மேற்கொள் ளப்பட்ட செலவினம்**	
I.	கடலோர வள ஆதார மேலாண்மை	6104.46	3768.67	2170.81	4433.71	1143.31	3314.12
II.	தொழில் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்	7455.15	3709.00	1550.39	3118.83	701.37	2251.76
III.	திட்ட மேலாண்மை	**2262.90**	**927.10**	**914.81**	**1086.52**	**468.04**	**1382.85**
மொத்தம்		**15822.51**	**8404.77**	**4636.01**	**8639.06**	**2312.72**	**6948.73**

2. பிரிவு வாரியாக

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	வகை	திட்ட மதிப்பீடு தொகை	2017-2019		**2019-2020 (1-4-2019 – 31.12-2019**		**31.12.2019 வரை மேற்கொள்ளப் பட்ட மொத்த செலவினம்**
			நிதி விடுவிப்பு	**31.03.2019 வரை மேற்கொள்ளப் பட்ட செலவினம்**	வருடாந்திர பணி திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு	மேற்கொள்ள ப்பட்ட செலவினம்	
I.	பணிகள்	4421.09	3040.90	961.09	2045.00	615.80	1576.89
II.	மானியம்	3592.00	2790.05	1245.37	3724.00	416.04	1661.41
III.	உபகரணங்கள் மற்றும் பொருட்கள்	312.02	174.57	238.64	102.24	75.03	313.67
IV.	ஆலோசனை கட்டணம்	2024.70	841.75	523.29	1179.59	535.04	1058.33
V.	சரக்கு, சேவை மற்றும் உள்ளீடு	3656.07	794.94	909.95	837.79	258.01	1167.96
VI.	சம்பளம் மற்றும் படிகள்	**1816.63**	**762.56**	**757.67**	**750.44**	**412.80**	**1170.47**
மொத்தம்		**15822.51**	**8404.77**	**4636.01**	**8639.06**	**2312.72**	**6948.73**

2020 மார்ச் 16]

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்மூலம் கடலோரப் பகுதிகளில் உள்ள பாதிக்கப்படக்கூடிய தன்மையைக் கருத்தில் கொண்டு, எதிர்த்தெறிதல் மற்றும் தகவமைப்புடன்கூடிய சுய அமைப்புகளை இணைத்தல் வழியே தற்சார்புடன் கூடிய சுயஉதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், மீன் விற்பனை சங்கங்கள் மற்றும் இதர மக்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. வாழ்வாதார நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அல்லது அவற்றுக்கு புறம்பே ஏற்படுத்தப்படுகின்றன. கடலோரப் பகுதிகளின் யதார்த்த நிலை மற்றும் வெற்றிக்கு உகந்த பார்வையுடன் இப்பகுதி சமூக, சுற்றுச்சூழல் அமைப்புகளின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் ஒரு பெரும் வளர்ச்சியை சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது மற்றும் சமுதாய மக்களின் வருமானத்தை பெருக்கும் பொருட்டு, வலை பின்னும் தளம், மீன் ஏலக் கூடம், மீன் கொள்முதல் நிலையம் போன்ற கட்டமைப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. திட்டப் பகுதிகளிலுள்ள குடும்பங்களின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. மக்களின் விழிப்புணர்வு ஒரு புதிய அளவுகோலை எட்டியுள்ளது. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் ஆய்வுக் குழுவினர், இத்திட்டம் திருப்திகரமாகச் செயல்படுவதாகவும், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பாகச் செயல்படும் திட்டங்களில் இது முதன்மையான திட்டமாக இருப்பதாகவும் பாராட்டியுள்ளனர்.

வருமான உயர்வு, வாழ்க்கைத் தரம், ஊட்டச்சத்து நிலை, ஏழை மீனவர்களின் பொருளாதாரம் உள்பட குறிப்பாக மீன் விற்பனை செய்யும் ஏழை மகளிர், கடற்சிப்பிமூலம் கைவினை பொருட்கள் தயாரிக்கும் பணியாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் போன்றவர்கள் வெற்றிகரமாக செயல்படும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் கடலோர மக்களின் தரம் உயர்த்தப்பட்டு, அவர்களது வாழ்வில் பேரிடர் மற்றும் இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்ளும் வகையில் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 16

10. வரவு-செலவுத் திட்டம் 2020-2021

2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.21,585.633 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.19,679.255 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.1,906.227 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.0.150 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

11. முடிவுரை

ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மத்திய மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை திறம்படவும் சிறப்பாகவும் விரைவாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயல்படுத்தி வருகின்றது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உதவி மற்றும் பங்கேற்பின்றி ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பலன்களை அடைய இயலாது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளை சிறப்பாகச் செயல்படுத்திட ஏதுவாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு போதுமான அதிகாரங்களும் மற்றும் பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் உள்ள வீடற்ற மக்களின் குடியிருப்புத் தேவைகளை பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டங்களின்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 25 வருடங்களுக்கு முன் பல்வேறு அரசு திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட பழுதடைந்த ஏழை மக்களின் வீடுகளை பழுது நீக்கம் செய்வதற்கான வீடுகள் பழுது நீக்கம் திட்டம் ஒரு சிறப்பான முயற்சியாகும். இதன்மூலம் ஏழை எளிய மக்களுக்கு கன மழை, புயல் மற்றும் இதர இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்தும் வகையிலும், ஆதி திராவிடர்/பழங்குடியின மக்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோர் நேரடியாக பயன்பெறும் வகையிலும், நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் உட்பட பணிகளின் வகைகளை விரிவுபடுத்தி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் செயலாக்கத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம், இயற்கை வள மேம்பாடு மற்றும் குடிமராமத்து பணிகளான மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் மீள்நிரப்பும் பணிகளை புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருவதன்மூலம் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த அரசு, ஊரகச் சாலை இணைப்பு வசதியினை மேம்படுத்துவதற்காக, விரிவான ஊரகச் சாலைகள்

[2020 மார்ச் 16

உட்கட்டமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. ஊரகச் சாலைகளின் இணைப்பு, ஊரக மக்களின் வளர்ச்சியில் நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இதன் காரணமாக, இந்த அரசு, தமிழ்நாட்டிலுள்ள ஊரகச் சாலைத் தொகுப்பின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் மற்றும் இதர மாநில மற்றும் மத்திய திட்டங்களின்கீழ் ஊரகச் சாலை மேம்பாட்டிற்காக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுபோன்ற விரிவான திட்டங்களின்மூலம், ஊரகப் பகுதிகளின் நீடித்த நிலையான வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது.

இந்த அரசானது, ஊரகப் பகுதிகளில் மேம்பட்ட சுகாதார வசதிகளை உறுதி செய்து அதன்மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கி "முழு சுகாதார தமிழகம்" என்ற முழுமையான நிலையை அடைவதில் தொடர்ந்து முழுக்கவனம் செலுத்தி வருகிறது. தன் சுத்தம், பாதுகாப்பான சுகாதாரம், மாதவிடாய் கால மேலாண்மை, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை குறித்த முக்கிய தகவல்களை நேரடி தகவல் பரிமாற்றத்தின்மூலம் கிராமப்புற மக்களிடையே திறம்பட தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளில் அனைத்து களப் பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த நோக்கத்திற்காக தொடர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பல்வேறு பங்கேற்பாளர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தின் சுகாதார கொள்கையில் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் திறம்பட மேற்கொள்ளப்படும்.

முந்தைய தமிழ்நாடு புது வாழ்வுத் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஊரக ஏழைகளுக்கும் ஊரக மகளிருக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இதைப்போலவே, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டமானது நகர்ப்புறப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்த வழிவகை செய்கிறது. ஆற்றல் மேம்பாடு, திறன் வளர்ப்பு மற்றும் நிதியுதவி ஆகியவற்றின்மூலம் பெண்களை சுய சார்பு உள்ளவர்களாக ஆக்குதலே அரசின் நோக்கமாகும். இனிவரும் ஆண்டுகளில் நிலைத்த நீடித்த ஊரக தொழில்களையும் ஊரக

2020 மார்ச் 16]

வேலைவாய்ப்பினையும் உருவாக்கி மேம்படுத்தும் நோக்கமே ஊரக வளர்ச்சியின் முதன்மைச் செயல்பாடாக இருக்கும். தமிழ்நாட்டில் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அனைவரும் காணும் வண்ணம் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் அரசின் முயற்சியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை அதிக அளவில் ஈடுபடுத்தி அரசு அவர்களை வழிநடத்தும்.

அனைத்து நிலைகளிலும் நாட்டிலேயே சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக தமிழகம் தொடர்ந்து விளங்கிட மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை உறுதியுடன் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

(625 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முன்னுரை:

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்க மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்கு திட்டம் 2023-ஐ வெளியிட்டார்கள். அதற்கேற்ப, தமிழ்நாடு சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து இந்தியாவின் மிகவும் வளர்ச்சியடைந்த மாநிலமாகத் திகழ்கிறது.

இந்திய அரசின் மத்திய பணியாளர், பொது குறைகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் 2019-ல் வெளியிட்ட நல்லாட்சிக் குறியீட்டின்படி, இந்தியாவின் 18 பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

மேலும், இந்திய அரசு வெளியிட்டுள்ள, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals-SDG) 2019, பொது விவகாரக் குறியீடு (Public Affairs Index – PAI) 2019, எளிய வாழ்க்கைக் குறியீடு (Ease of Living Index–ELI) 2018 மற்றும் இந்திய புத்தாக்கக் குறியீடு (India Innovation Index–III) 2018 போன்ற முக்கியமான சமூகப் பொருளாதார மேம்பாட்டு குறியீடுகளில் தமிழ்நாடு தேசிய அளவில் இரண்டாம்/மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு, பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை வலுவாக திட்டமிட்டும், திறம்பட கண்காணித்தும், விரைவாக செயல்படுத்தியும் தனித்துவமான சாதனையை எட்டியுள்ளது.

அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதை கண்காணிப்பதற்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் 2011 மே மாதம் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை உருவாக்கப்பட்டது. திட்டங்களைக் கண்காணிப்பதன்

2020 மார்ச் 16]

முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, அரசு இத்துறைக்கென தனி அமைச்சரை நியமித்தது.

பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், இத்துறையால், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வளர்ச்சியில் உயர்நிலை அடைய, அரசின் முதன்மைத் திட்டங்களான ஏழைகளுக்கு கறவைப் பசு வழங்குதல், வறிய நிலையில் உள்ள ஏழை மக்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்குதல், கிராமப்புற வீடில்லா ஏழைகளுக்கு பசுமை வீடுகள் வழங்குதல், திருமண உதவித் தொகையுடன்கூடிய திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம் விலையில்லா தங்க நாணயம் வழங்குதல், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் மற்றும் அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின்மூலம் பணிபுரியும் மகளிருக்கு மானியத்துடன்கூடிய இரு சக்கர வாகனங்கள் வழங்குதல், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் மற்றும் ஊரக புழக்கடை கோழி வழங்கல் திட்டம் ஆகிய திட்டங்கள் தொடர்புடைய துறைகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் முன்னேற்றத்தினை திறம்பட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணித்து வருகிறது.

2. துறையின் முக்கிய செயல்பாடுகள்:

2.1 சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

- அரசின் "கண்காணிப்பு அமைப்பாக" செயல்படுகிறது.
- சட்டமன்றப் பேரவை மற்றும் முக்கிய அரசு விழாக்களில் அறிவிக்கப்படும் அறிவிப்புகளின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல்.
- அரசின் முதன்மைத் திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை (Targeted Population) சென்றடைவதை உறுதிசெய்திட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.
- மாவட்டங்களில் கள ஆய்வுகள் மேற்கொண்டும், மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களின் செயலாக்கம் பயன்

[2020 மார்ச் 16

அளிக்கின்றவகையில் விரைவாகச் செயல்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

- செயல்படுத்தப்படும் திட்டங்களின் தரம் மற்றும் அளவு போன்றவற்றைக் குறித்து அரசுக்குத் தேவையான செயற்குறிப்புகள் மற்றும் தீர்வுகளுக்கான ஆலோசனைகளை பரிந்துரைத்தல்.

- மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களால், மாவட்டங்களில் செயல்படும் திட்டங்கள் குறித்த கள ஆய்வுகள் மற்றும் ஆய்வுக் கூட்டங்களின்போது தயாரிக்கப்படும் அறிக்கைகளைத் தொகுத்து அவற்றை முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு தலைமைச் செயலாளர்மூலம் அறிக்கையாக சமர்ப்பித்தல்.

- முதன்மைத் திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை (Targeted Population) சென்றடைவதை உறுதி செய்வதற்காக தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து, திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளில் தேவைப்படும் மாறுதல்களை மேற்கொள்ளப் பரிந்துரைத்தல்.

- பொருளாதார, சமுதாய மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, திட்டங்களை மறுசீரமைத்திட பகுப்பாய்வு மேற்கொண்டு திட்ட நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன்மூலம் அரசுத் துறைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.

- துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்துதல்.

- அரசுக்குத் தேவையான சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.

அரசின் முதன்மைத் திட்டங்களை திறம்பட செயல்படுத்திட தனித்துவமான கண்காணிப்பு அமைப்பினை தலைமைச் செயலகத்தில் அரசு உருவாக்கியுள்ளது. பல்வேறு துறை சார்ந்த அறிவிப்புகளின் செயலாக்கத்தின் முன்னேற்றத்தை இத்துறை கண்காணித்து வருகிறது.

2020 மார்ச் 16]

2.2 பல்வேறு முதன்மைத் திட்டங்களின் செயல்பாடுகளையும் அறிவிப்புகளையும் கண்காணிக்க பல்துறை நிபுணத்துவம் தேவைப்படுவதால், இத்துறை அலுவலர்கள் பொருளியல் (ம) புள்ளியியல் துறை, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை போன்ற துறைகளிலிருந்து பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

3. கண்காணிப்பு:

முதன்மைத் திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களுக்கு (Targeted Population) சென்றடைவதை உறுதி செய்வதில் கண்காணிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் மற்றும் அனைத்து அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவதை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிக்கின்றது.

3.1 கண்காணிப்பு முறைகள்:

அரசின் பல்வேறு திட்டங்களின் செயலாக்க நிலை தொடர்பான விவரங்களை துறைகளிடமிருந்து பெற்று பதிவு செய்து, அத்திட்டப் பணிகளின் செயலாக்கம் மற்றும் நிதிச் செலவினம் ஆகியவற்றின் நிலைகள் குறித்த விவரங்களை உரியகால இடைவெளிகளில் அரசுக்கு இத்துறை வழங்கி வருகின்றது.

அரசின் திட்டங்கள், திட்டமிட்டப்படி செயல்படுத்தப்படுவதை அறிவதற்கு கண்காணிப்பு உதவுகிறது.

கள அளவில் இடர்பாடுகள் ஏற்படுமாயின், அதனை கண்டறிந்து திட்டம் செயல்படுத்தப்படும் காலகட்டத்திலேயே தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு பரிந்துரை செய்வதினால், திட்டங்களின் குறிக்கோள்கள் உரிய காலத்தில் அடைந்திட கண்காணிப்பு உதவுகிறது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பல்வேறு துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிலையினைக் கண்காணிப்பதுடன், அரசின் முதன்மைத் திட்டங்களின்மீது சிறப்புக் கவனம் செலுத்தி, அவை நடைமுறைப்படுத்தப்படுவதையும் கண்காணிக்கின்றது.

[2020 மார்ச் 16

3.2 உடன்நிகழ் (Online) கண்காணிப்பு அமைப்பு:

மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு புதுமையான நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்துறை, சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிலை குறித்த தகவலை, உரிய தகவல் தொழில்நுட்பங்களின்மூலம் பதிவு செய்திடும் வகையில் தலைமைச் செயலகத்தில் உள்வலைய (Intranet) உடன்நிகழ் (Online) அமைப்பினை உருவாக்கி உள்ளது.

3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட இயங்கமைவுகள் (Mechanisms):

செயல்திறன்மிக்க கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு பின்வரும் இயங்கமைவுகளை (Mechanisms) சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஏற்படுத்தியுள்ளது.

(அ) அறிவிப்புகளைக் கண்காணித்தல்:

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா, புதிய மாவட்டங்கள் தொடக்க விழாக்கள் மற்றும் இதர அரசு விழாக்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயல்பாட்டினைக் கண்காணிக்கும் பொறுப்பு இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்க நிலை குறித்த முன்னேற்ற விவரங்கள் தொடர்புடைய துறைகளிடமிருந்து இத்துறையால் சேகரிக்கப்படுகின்றன. முதன்மைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கை வாரந்தோறும், அறிவிப்புகளின் முன்னேற்ற அறிக்கை மாதம் இருமுறையும் முதலமைச்சர் அவர்களின்

அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்படும் அனைத்துத் துறைச் செயலாளர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்திற்கு தேவையான ஆய்வு அறிக்கைகளை இத்துறை தொகுத்து வழங்குகிறது.

அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட துறையினர் உடன் நிகழ்வு முறையில் இத்துறைக்கு வழங்கிட ஏதுவாக தனியாக சேவையக கணினி (Server Computer) நிறுவப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள், அறிவிப்புகளின் தற்போதைய நிலையினை பதிவு செய்வதற்கு ஏதுவாக, வலைப் பக்கங்கள் (Web Pages) இத்துறையால் வடிவமைத்து உருவாக்கப்பட்டு, தலைமைச் செயலக உள் வலையதளத்தில் (Intranet) நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஒரு சிறப்பு கண்காணிப்பு பகுப்பாய்வு மென்பொருளும் வடிவமைத்து உருவாக்கப்பட்டு உள்ளது.

தலைமைச் செயலகத் துறைகளின்கீழ் இயங்கும் துறைத் தலைவர்களை ஒருங்கிணைத்து அறிவிப்புகளின் தற்போதைய நிலையினை பதிவிட, அரசின் அனைத்துத் துறைகளிலும் தொடர்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு துறைகளிடமிருந்து உடன்நிகழ் (Online) மூலம் பெறப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலையினை வகைப்படுத்தி, தொகுப்பு அறிக்கையாக இத்துறையால் தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாதம் இருமுறை சமர்ப்பிக்கப்படுகின்றது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் தயாரிக்கப்படும் அறிக்கைகள், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்தல் / அளவிடுதல் / நடைமுறையில் உள்ள திட்டங்களில் மாற்றங்களைச் செய்தல் / புதிய திட்டங்களைத் துவங்குதல் ஆகியவற்றில் முடிவுகளை மேற்கொள்ள தேவையான தகவல்களை அளிக்கிறது.

(ஆ) முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பின்வரும் திட்டங்களின் செயலாக்கத்தினைக் கண்காணித்து வருகின்றது:

1. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

[2020 மார்ச் 16

2. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்

3. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

4. அம்மா இரு சக்கர வாகன திட்டம்

5. திருமண நிதியுதவித் திட்டங்கள்

6. கறவை மாடுகள்/ வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் / ஊரக புழக்கடை கோழி வழங்கல் திட்டம்

7. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

8. மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

1. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

ஏழை கர்ப்பிணித் தாய்மார்களின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதே டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், ஐந்து தவணைகளில் ரூ.18,000/- மதிப்புள்ள நிதி மற்றும் பொருளுதவி வழங்கப்படுகிறது.

2. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், கிராமப்புற ஏழை மக்களின் வீட்டு வசதித் தேவையையும் சூரிய மின்சக்திகொண்ட வீட்டு விளக்கு அமைப்பையும் பூர்த்திசெய்து அதன்மூலம் பசுமை ஆற்றலை ஊக்குவிப்பதும் "அனைவருக்கும் வீட்டுவசதி" செய்வதற்கான முன்னோடித் திட்டமாகும்.

3. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

மாணாக்கர்களுக்கு கணினி இயக்க திறன்களைப் பெறுவதற்கும், புதிய தொழில்நுட்பத் திறனை வளர்த்துக்கொள்வதற்கும், கணினி சார்ந்த வேலைவாய்ப்புகளில் போட்டியிட்டு வெற்றியடைவதற்கும் உதவுவதே இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

2020 மார்ச் 16]

4. அம்மா இரு சக்கர வாகன திட்டம்

உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன், அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும் பணியிடங்கள் வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்றுவர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

5. திருமண நிதியுதவித் திட்டங்கள்

சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு திருமாங்கல்யம் செய்ய இத்திட்டம் உதவுகிறது. திருமண செலவினங்களுக்கான நிதி உதவியுடன் திருமாங்கல்யத்திற்காக 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

6. கறவை மாடுகள்/ வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள்/ ஊரக புழக்கடை கோழி வழங்கும் திட்டம்

கறவை மாடுகள்/ வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள்/ ஊரக புழக்கடை கோழி ஆகியவை கிராமப்புற ஏழைகளுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை வழங்கவும் வருமானத்தை அதிகரிக்கவும் விநியோகிக்கப்படுகின்றன.

7. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு அரசால் 11-1-2012 முதல் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8. மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

மேல்நிலைக் கல்வியில் சேருவதை ஊக்குவிப்பதற்காக அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பகுதி உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வருமான வரம்பின்றி மிதிவண்டிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற மேற்கண்ட திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணிக்கும் பணி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெறப்பட்டு,

[2020 மார்ச் 16

தொகுக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வறிக்கைகள் அரசின் ஆய்வுக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

(இ) உயர்நிலை கண்காணிப்புக் குழு:

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:

வ. எண்	அலுவலரின் பதவி	நிலை
1	அரசு தலைமைச் செயலாளர்	தலைவர்
2	அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை	உறுப்பினர்
3	அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை	உறுப்பினர்-செயலர்
4	தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள்	உறுப்பினர்கள்

இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் குறித்த விவரங்கள் விவாதிக்கப்படுவதுடன், செயலாக்கத்தில் பிரச்சினைகள் ஏதேனும் இருப்பின் அதற்கான தீர்வுகள் குறித்தும் முடிவு செய்யப்படுகின்றது. தேவைப்படும்பொழுது கூட்டப்படும் உயர்நிலைக் கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் சிறப்புத் திட்டங்களை விரிவாக விவாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அதன் தற்போதைய நிலை, செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்தப்படுவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்கள், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்களின் கருத்துக்களின் அடிப்படையில் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் முதன்மைத் திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள் மேன்மைப்படுத்தப்படுகின்றன.

2020 மார்ச் 16]

(ஈ) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் மாவட்ட ஆட்சியரால் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தொடர்பு அலுவலர்கள், தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதுடன், திட்டங்கள் குறித்த தகவல்களைப் பெற்று, தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்வகையில் மாவட்டங்களில் “தொடர்பு அலுவலர்களாக” செயல்பட்டு வருகின்றனர். இத்துறையின் அலுவலர்கள், கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட தொடர்பு அலுவலர்கள் ஆய்வுப் பணிக்குத் தேவையான விவரங்களை வழங்குகின்றனர்.

(உ) கள ஆய்வுகள்:

மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

3.4. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/ முதன்மைச் செயலாளர்கள்/ கூடுதல் தலைமைச் செயலாளர்களை மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரைவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், இடையூறுகளுக்கான தீர்வுகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

கண்காணிப்பு அலுவலர்கள் பின்வரும் 13 துறைகளின் முக்கிய திட்டங்களை ஆய்வு மேற்கொள்கின்றனர்:

மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் வேளாண்மைத் துறையின்கீழ் பயிர் பரப்பாய்வு, நுண்ணீர் பாசனம் உள்ளடக்கிய

[2020 மார்ச் 16

6 திட்டங்கள், கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத் துறையில் விலையில்லா கறவைப் பசு/ ஆடுகள், கோழி வளர்ப்பு மேம்பாடு உள்ளடக்கிய 9 திட்டங்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் பொது விநியோகத் திட்டம் உள்ளடக்கிய 4 திட்டங்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் ஒருங்கிணைந்த முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் ஆகிய 2 திட்டங்களையும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் அனைவருக்கும் வீடு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில எடுப்பு உள்ளிட்ட 3 திட்டங்களையும் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

மேலும், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் தகவல் தொழில்நுட்பவியல் துறையின்கீழ் மின்னணு ஆளுமைத் திட்டம் (e-Governance), நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் நகர்ப்புறங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம், திடப் பொருள் மேலாண்மைத் திட்டம் ஆகிய 2 திட்டங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் புதிய தொழிற்பேட்டைகள், சிட்கோவிற்கான நில வங்கி உள்ளடக்கிய 4 திட்டங்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ் பட்டா பெயர் மாற்றம், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் உள்ளடக்கிய 7 திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் உள்ளடக்கிய 4 திட்டங்கள், பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கல்வி உரிமைச் சட்டம், விலையில்லா பாடப் புத்தகம்/ குறிப்பேடு வழங்கல் உள்ளடக்கிய 10 திட்டங்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் திருமண நிதியுதவித் திட்டம் உள்ளடக்கிய 3 திட்டங்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின்கீழ் மடிக்கணினி வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களை ஆய்வு மேற்கொள்கின்றனர். மொத்தத்தில், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களால் 13 துறைகளின்கீழ் 57 வகையான திட்டங்களுக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள், துறைகளுக்கிடையேயான பிரச்சினைகளைக் களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு மட்டுமல்லாமல், நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின்

வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசளவில் மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைக்கின்றனர். திட்டங்களில் கவனிக்கப்பட வேண்டிய இனங்கள், முக்கியமான கருத்துகள், எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாற்றங்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகளை கண்காணிப்பு அலுவலர்கள் அரசுக்கு அளிக்கின்றனர். மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, தலைமைச் செயலாளர் வழியாக முதலமைச்சர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் திட்டங்கள்:

அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன் பின்வரும் இரண்டு முதன்மைத் திட்டங்களை நேரடியாகச் செயல்படுத்தும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு வழங்கப்பட்டன:

1. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்
2. மகளிருக்கு விலையில்லா மின்விசிறி/ மின்காந்த அடுப்பு, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல்

மகளிருக்கு விலையில்லா மின்விசிறி/ மின்காந்த அடுப்பு, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டது.

4.1. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

மாநிலத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்காக உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை கணிசமான அளவில் அதிகரிப்பது தொலைநோக்குத் திட்டம் 2023-ன் குறிக்கோளாகும். தமிழகம், உயர் கல்வியில் தேசிய மொத்த சேர்க்கை விகிதமான 25.8-ஐவிட வியக்கத்தக்க அளவில் இருமடங்கு சேர்க்கை அதாவது 48.6 விகிதத்துடன் முன்னேறிய மாநிலமாக விளங்குகிறது.

தமிழ்நாடு, ஏற்கெனவே தேசிய மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப (ஐ.டி) நிறுவனங்களைத் தொடங்குவதற்கு சாதகமான

[2020 மார்ச் 16

இடமாக உருவெடுத்து, மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. மடிக்கணினியை விலைக்கு வாங்க இயலாத பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு வலுவான தகவல்தொழில்நுட்ப அறிவுத்திறன் பெற ஆயத்தப்படுத்திடல் வேண்டும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளின் தற்போதைய வளர்ச்சிக்கு ஈடுசெய்யும் விதமாக விலையில்லா மடிக்கணினிகளை மாணாக்கர்களுக்கு வழங்குவதை முக்கியமென அரசு கருதியது.

வசதி படைத்தோர் மற்றும் வசதியற்றோர் இடையில் பாகுபாடு இல்லாமல் தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியைக் குறைப்பதற்கும், தகவல் தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதற்கும், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினியை வழங்கும் உன்னதமான திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம், மாநில அரசு அணுகல், பங்கேற்பு மற்றும் அடைதல் ஆகிய மூன்று முக்கிய கல்விக் கொள்கைகளை அடைய வழிவகுத்துள்ளது.

சிறந்த கணினி திறன்களைப் பெறுவதற்கு வசதியாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்துவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் 3-6-2011 அன்று சட்டமன்றப் பேரவை உரையில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார். "இந்த அரசு மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தும். மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் செப்டம்பர் 15, 2011 முதல் துவக்கப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் அனைத்து மாணாக்கர்களுக்கும் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்".

தகவல் தொழில்நுட்பத்தின் சமீபத்திய நுட்பங்களை மாணாக்கர்கள், அறிந்து புதுப்பித்து, போட்டி நிறைந்த கணினிசார்ந்த வேலைவாய்ப்புச் சந்தையில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு வழி அமைப்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில்

2020 மார்ச் 16]

பயின்ற மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

2013-2014 ஆம் ஆண்டிலிருந்து, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்கள், இத்திட்டத்தின்கீழ் பயன்அடைகின்றனர்.

மாணாக்கர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவதற்கும், கல்வி கற்கும் திறனை மேம்படுத்துவதற்காக மாற்றியமைக்கப்பட்ட பாடத் திட்டத்திலுள்ள கியூ.ஆர் குறியீடுகள்மூலம் ஒலி மற்றும் ஒளி காட்சிகள், வினா வங்கிகள் மற்றும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் போன்றவற்றுடன் தொடர்பு ஏற்படுத்திட பள்ளியில் பயிலும்போதே மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. எனவே, 2018-2019 ஆம் கல்வியாண்டிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு மாணாக்கர்களுக்கு பதிலாக பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கிட அரசு முடிவெடுத்து, அதன் அடிப்படையில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதனால், மாணாக்கர்கள் மேல்நிலை கல்வி முதலாண்டு முதற்கொண்டே ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்படி மடிக்கணினியை பயன்படுத்த முடிகிறது.

ஆண்டு வாரியாக / கல்வி நிறுவனங்கள் வாரியாக மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்:

ஆண்டு	பள்ளிகள்	கலை/ அறிவியல் கல்லூரிகள்	பொறியியல் கல்லூரிகள்	பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்
2011-2012	12 ஆம் வகுப்பு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு	இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு
2012-2013	12 ஆம் வகுப்பு	மூன்றாம் ஆண்டு	இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு

ஆண்டு	பள்ளிகள்	கலை/ அறிவியல் கல்லூரிகள்	பொறியியல் கல்லூரிகள்	பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்
2013-2014 முதல் 2017-2018 வரை	12 ஆம் வகுப்பு	-	-	முதலாம் ஆண்டு
2018-2019	11 ஆம் வகுப்பு (ம) 12 ஆம் வகுப்பு	-	-	முதலாம் ஆண்டு
2019-2020 ஆண்டு முதல்	11 ஆம் வகுப்பு	-	-	முதலாம் ஆண்டு

இத்திட்டமானது, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படுகிறது. பள்ளிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் கல்லூரி ஆகிய இயக்குநரகங்கள்மூலம் ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும், மாணாக்கர்களுக்கு வழங்குவதற்குத் தேவைப்படும் மடிக்கணினிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. இயக்குநரகங்கள் வழங்கிய தேவைப் பட்டியலின் அடிப்படையில், மடிக்கணினிகள் கொள்முதல் செய்கின்ற பணி தமிழ்நாடு மின்னணுக் கழகத்திடம் (எல்காட்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாணவ சமுதாயத்தின் பயன்பாட்டினைக் கருத்தில்கொண்டு மடிக்கணினிகளுக்கான விவரக் குறிப்பீடுகளை (Specification) தமிழ்நாடு மின்னணுக் கழகம் (எல்காட்) இறுதி செய்கிறது. தமிழ்நாடு வெளிப்படைத் தன்மை ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 விதிகள் 2000-ன்படி போட்டி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, வெளிப்படையான முறையில் தமிழ்நாடு மின்னணுக் கழகத்தால் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்கான நிருவாக ஒப்புதல் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் வழங்கப்படுகிறது. இதற்குத் தேவையான நிதி தமிழ்நாடு மின்னணுக் கழகத்திற்கு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் மாநில திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 16]

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக 2011-2012 மற்றும் 2012-2013 ஆகிய ஆண்டுகளிலும் 2013-2014 ஆம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற மடிக்கணினிகள் "Windows 10 Pro" தேசிய கல்வி பதிப்பு மற்றும் மேம்பட்ட கணினி பயன்பாடு வளர்ச்சி மையத்தின் BOSS / LINUX ஆகிய இரட்டை தொடக்க வசதி உடையதாகும். ஆங்கிலம் மற்றும் தமிழ் எழுத்துக்களுடன் நாணயக் குறியீட்டுடன்கூடிய தரமான விசைப்பலகையும் ஒருங்கிணைந்த தொடுதளம்(Touch Pad) வழங்கப்படுகிறது. வைரஸ் எதிர்ப்பு மென்பொருளுடனும், தமிழ் இணையக் கழகத்திலிருந்து பெறப்பட்ட விசைப்பலகை இடைமுகப்புடன்கூடிய தமிழ் எழுத்துரு மற்றும் கல்வித் துறையிலிருந்து பெறப்பட்ட பாடக் கல்வியின் உள்ளடக்கங்கள் வழங்கப்படுகின்றன. பார்வைத்திறன் அற்ற மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும்வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மின்வடம், மின்ஏற்றி மற்றும் பயனர் கையேடு ஆகியவையும் வழங்கப்படுகின்றன. மடிக்கணினியின் பாதுகாப்பிற்காக முதுகுபையும் (Back Pack) வழங்கப்படுகிறது. மடிக்கணினி வழங்கும் திட்டம் வாயிலாக, பரவுத்தாள் (Spread Sheet), விளக்கக்காட்சி (Power Point Presentation) மற்றும் சொற்செயலி (Word Processor) ஆகிய தொழில்நுட்பத் திறன்களை, மாணாக்கர்கள் பெறவும், ஆர்வமுடன் கற்கவும் வழிகோலுகிறது.

மின்கலன் உட்பட மடிக்கணினிகளுக்கு ஓராண்டு பொறுப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதையும் பராமரிப்பினையும் உறுதிசெய்திட, அனைத்து மாவட்டங்களிலும் மடிக்கணினி வழங்கும் நிறுவனங்களால் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, அவ்வசதி குறித்த தகவல்கள் மாணாக்கர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணாக்கர்கள், கணினியின் பலவித பயன்களை அறிந்து பயன்படுத்த முடிகிறது. மாணாக்கர்கள் மின்னணு இதழ், மின்னணு சஞ்சிகைகள், காணொளிப் பயிற்சி ஆகியவற்றை அணுகுவதற்கும், பயன்படுத்துவதற்கும், இத்திட்டம் உதவிகரமாக உள்ளது. மேலும், மாணாக்கர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்தியும் உலகளாவிய நூலகங்களை அணுகியும், தங்கள்

[2020 மார்ச் 16

திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கும், தகவல் தொழில்நுட்பத் தரத்தினை உயர்த்திக்கொள்வதற்கும் மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் பெரும் வெற்றியுடன் செயல்படுத்தப்படுகிறது. குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், குறிப்பாக உடன்பிறந்தோர் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்துகொள்வதற்கும், இயக்குவதற்கும் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வளர்ச்சியானது எதிர்கால தலைமுறையினர் கணினி தொழில்நுட்ப கல்வியறிவிற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ளவும், கணினி தொழில்நுட்ப உலகின் அபரிமிதமான வாய்ப்புகள் வாயிலாக சிறந்து விளங்கவும் வழிவகை செய்கிறது. குடும்பத்தின் இளம் தலைமுறையினர் இதன்மீது கொண்டுள்ள ஆர்வம், சமூகத்தில் நிகழவிருக்கும் ஒரு மாற்றத்தின் அறிகுறியினை இத்திட்டம் வெளிக்கொணர்கிறது. மொத்தத்தில், மாணாக்கர்கள் மடிக்கணினியை ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், ஏற்றமிகு எதிர்காலத்திற்கான சாளரமாகவும், சமூக நிலையை மேம்படுத்துவதற்கான ஏணியாகவும் கருதுகின்றனர்.

இந்தத் திட்டம், மாணாக்கர்களின் திறன்மதிப்பை கூடுதலாக்கி, அவர்களின் படைப்புத் திறனை உயர்த்திடும் தூண்டுகோலாய் திகழ்கிறது. காலப்போக்கில் இத்திட்டத்தின்மூலம் ஏற்படும் மாற்றமானது, மாணவ சமுதாயத்தின் நிறைவான வெற்றியின் அடையாளமாகத் திகழும்.

தேசிய அளவில், மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தை 2011-2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்ற ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை ரூ.7,257.61 கோடி மதிப்பில் 51.67 இலட்சம் (பிப்ரவரி 2020 வரை) விலையில்லா மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.949.30 கோடி மதிப்பீட்டில் சுமார் 5 இலட்சம் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 16]

4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி/மின்காந்த அடுப்பு, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைமூலம் விலையில்லா மின்விசிறி / மின்காந்த அடுப்பு, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது, மகளிருக்கு சிரமமான அன்றாட வீட்டு வேலைகளை எளிதாக்கிட உரிய சாதனங்கள் அளிப்பதாகும். 1.75 கோடி மகளிருக்கு இச்சாதனங்கள் ரூ.7,686.21 கோடியில் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை வழங்கி இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP)

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு சென்றடைவதைக் கண்காணிக்க, 'நிறுவன வளத் திட்டமிடல்' என்ற உயரிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை மென்பொருள், நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் ஒருங்கே நிருவகிக்க உதவுகின்றது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கியதாகும். இம்மென்பொருள் மடிக்கணினிகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வழங்குநர்களிடமிருந்து வாங்குவது முதற்கொண்டு மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல் வரையிலான பின்வரும் பணிகளை தன்னகத்தே கொண்டுள்ளது:

- ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விவரங்களை பதிவுசெய்தல்
- மடிக்கணினி வழங்குநரின் விவரங்களைப் பதிவு செய்தல்
- மடிக்கணினிகளை வழங்குநர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்
- வழங்கப்பட்ட மடிக்கணினிகளை மூன்றாம் நபர் ஆய்வு செய்த விவரங்களைப் பதிவிடுதல்
- கல்வி நிறுவனங்களின் விவரங்களைப் பதிவு செய்தல்

[2020 மார்ச் 16

- கல்வி தகவல் மேலாண்மை எண்ணின் (EMIS) அடிப்படையில் மாணாக்கர்களின் மடிக்கணினி தேவை விவரங்களைப் பதிவு செய்தல்
- மாணாக்கர்களின் தேவைப் பட்டியலை உருவாக்குதல்
- வழங்குநர்களுக்கான கல்வி நிறுவனங்களை ஒதுக்கீடு செய்தல்
- வழங்குதல் மற்றும் விநியோகம்
- கல்வி நிறுவனங்களில் களஆய்வு
- பயனாளிகளின் விவரங்களைப் பதிவிடுதல்
- மாணாக்கர்களின் பெயர் விவரங்களோடு அவர்களுக்கு வழங்கப்பட்ட மடிக்கணினி விவரங்களை இணைத்தல்
- மடிக்கணினி வழங்குநர்களுக்கு பணத் தீர்வு செய்த விவரங்களைப் பதிவிடுதல்
- வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள மடிக்கணினிகளை மாவட்ட தலைமையகத்தில் ஒப்படைக்கும் விவரங்களைப் பதிவுசெய்தல்
- மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை மறுஒதுக்கீடு செய்தல்
- அறிக்கைகள் உருவாக்கம்

இந்நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், விலையில்லா மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு வழங்குவதை கண்காணிக்க பெரிதும் உதவுகிறது.

5. முடிவுரை:

பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசின் “கண்காணிப்பு அமைப்பாக” செயல்படுவதுடன், மாணாக்கர்களுக்கு 2011-2012 ஆம் ஆண்டு முதல் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினையும் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

2020 மார்ச் 16]

தமிழக அரசின் முதன்மைத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சீரியமுறையில் கண்காணிப்பதால், திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை (Targeted Population) உரிய காலத்தில் சென்றடைவதை உறுதி செய்கிறது. மேலும், இத்துறை ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதற்கு ஏதுவாக, துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்துகிறது.


மாநிலத்தின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு, கால்நடை பராமரிப்பு, வேளாண்மை, எரிசக்தி, கல்வி, நல்வாழ்வு, ஊரக வளர்ச்சி, தொழில், சமூகநலம் போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் திறம்பட செயல்படுவதை கண்காணிப்பதே இத்துறையின் சிறப்பு அம்சமாகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாணவர்களுக்கு மடிக்


மாவட்ட வாரியாக மடிக்கணினி பெற்று பயன

(2011–12 முதல் 2019–20 வ




மாவ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS


கணினி வழங்குதல்
டைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை
ரை) – 51.67 இலட்சம்
135571
154857
174130
174575
174964
180867
181203
185185
195182
219831
225473
247994
251770
256922
259034
309282
310027
திருப்பூர்
கன்னியாகுமரி
தஞ்சாவூர்
விருதுநகர்
திருவள்ளூர்
தூத்துக்குடி
திருவண்ணாமலை
திருச்சிராப்பள்ளி
கடலூர்
கோயம்புத்தூர்
திருநெல்வேலி
விழுப்புரம்
மதுரை
காஞ்சிபுரம்
சேலம்
சென்னை
வேலூர்
ட்டங்கள்

மாணவர்களுக்கு மடிக்


பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை (20



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கணினி வழங்குதல்


011–12 முதல் 2019–20 வரை)– 51.67 இலட்சம்



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


கண்காணிப்பு செய
விவரங்களை பகுப்பாய்தல்
விவரங்கள் சேகரித்தல்
விவரங்கள் செயலாக்க
மற்றும் தொகுத்தல்
மேம்படுத்துதல் / மாற்றங்கள்

[2020 மார்ச் 16


ல்முறை – விளக்கப்படம்
அறிக்கைகள் தயாரித்தல்
கண்காணிப்புக் குழு
கள ஆய்வுகள்
கொள்கை இடையீடு
பரிந்துரைகள்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.